(இ-ள) மெயமமேறகணதுளிபனிபப=தமது திருமேனியின்மேல கண ணீாத திவலைகள சிநதுமபடி, வேறு எஙகும் பாாதது அழுவாா=(தநதையாரி ழிாததுறையையும) வேறிடஙகளையுமபாாததழும ஆளுடையபிளளையாா ; தம மேலைசசாாபு உணாநதோ=சிவபிரானிடததுததமககுப பணடுளள தொடாச சியைககருதியோ, சாருமபிளளைமைதானோ=அவரிடததுளளபிளளைமைததன மையாலோ(இவவிரணடனுள ஒன்றைககாரணமாகக கூறுதறகுயாமறியோம எனறபடி), செமமேனிவெணணீறறுா திருததோணிசசிகரமபாாதது=சிவநத திருமேனியில வெளளியவிபூதியைபபரவப பூசியசிவபிரானுா எழுந்தருளி ய திருததோணியெனனு மாலயததின சிகரததைநோக்கி ; அமமே அபபா எனறு எனறு அழைததருளி அழுதருள=அமமே அபபாவெனப பலமுறை கூறியழைததது அழுதருள—எ-று.

பிளளையாரிடதது மேலைசசாாபான வுணாசசியும அபபொழுதின்கண உளளனவாய பிளளைததனமையும உணமையின அவா திருததோணிசசிகர மபாாதது அமமே அபபாவென்று அழைதது அழுதறகுககாரணம இவவிரண டனையுங கூறல கெளரவதோடததிற கிடமாதலின ஐயபபாறபடுததி அதிச யிததாராயிறறு. உலகவழககிறசிறுவாகள அமமேயபபா என்று அழைதத லபோல அழைததாரெனறமையால பிளளைமையும திருததோணிச சிகரமபா ாதது அழைததமையாலமேலைசசாாபும தோனறுமேனும பிளளைமைகாரியகா ரியனமையின ஆணடுமேலைசசாாபானே அவவாறழைததாரெனபது குறிபபு.

அஙகிலையிற றிருததோணி வீறறிருநதா ரருணோககான
முனனிலைமைத திருததொணடு முனனியவாக கருள்புரிவான்
பொனமலைவல லியுநதாமும பொருவிடைமே லெழுநதருளிச
சென்னியிளம பிறைதிகழச செழுமபொயகை மருஙகணைநதாா.

(இ-ள்.) அஙகிலையில திருத்தோணிவீறறிருநதார்=அப்பொழுது திருத் தோணியில (ஒபபின்றி) எழுநதருளியிருநத சிவபிரானுா; அருள்நோக்கால்= தமது திருவருடபார்வையால ; முன்னிலைமைத் திருததொணடுமுன்னியவர்

க்கு=பண்டுள்ள திருத்தொண்டினிலைமையைக் கருதியழாநின்ற பிள்ளையார்க்கு, (முன்னிலைமைத் திருத்தொண்டுமுன்னி அவர்க்கு=அவரது பழையதிருத்தொண்டின் நிலைமையைக்கருதி அப்பிள்ளையார்க்கு எனினுமமையும்) அருள்புரிவான்=அருள்செய்யும்பொருட்டு, பொன்மலைவல்லியுந்தாமும்பொருவிடைமேல் எழுந்தருளி=இமயமலைமன்னன் புத்திரியாகிய உமாதேவியுந்தாமும் போர்செய்தற்குரிய இடபவாகனத்தின்மேலெழுந்தருளி, சென்னி இளம்பிறை திகழச்செழும் பொய்கைமருங்கு அணைந்தார்=திருமுடியின்கண் இளமையானசந்திரகலை பிரகாசிக்கச்செழுமைதங்கிய வாவிக்கரையில் எழுந்தருளினார்—எ-று. (கூச)

திருமறைநூல் வேதியாக்குந் தேவியாக்குந் தாங்கொடுத்த
பெருகுவர நினைந்தோதான் றம்பெருமைக் கழல்பேணு
மொருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
வருமறையா ளுடையவளை யளித்தருள வருள்செய்வார்.

(இ-ள்.) திருமறைநூல் வேதியாக்கும் தேவியாக்கும் தாங்கொடுத்த பெருகும்வரம் நினைந்தோ=அழகியவேதங்களையுணர்ந்த சிவபாத இருதயர்க்கும் அவர்மனைவியராகிய பகவதியார்க்கும் தாமருளிய மிக்கவரத்தைத் திருவுளங்கொண்டோ, தம்பெருமைக்கழல்பேணும் ஒருநெறியில் வருஞானங்கொடுப்பதனுக்கு=தமது பெருமைபொருந்திய திருவடிகளைத்தியானிக்கும் (கேவலசகலங்களின் புறப்படும் மயக்கவிகற்பங்களாகிய பலவுணர்வின்றி) ஏகாக்கிரமானசித்த நிரோதத்திறமென்றும் ஒருமைப்பட்டசிவஞானத்தை அவர்க்குக்கொடுத்தருளும்பொருட்டு, உடனிருந்தஅருமறையாளுடையவளை=தமது வாமபாகத்திருந்த வேதரூபியான அருந்தன்மையையுடைய பெரியநாயகியாரை, அளித்தருள அருள்செய்வார்=கொடுத்தருளும்படி யருளிச்செய்வார்—எ-று.

ஓதுவார் கலிவலிகெட்ப் பதிகம்பாடும்படி பிள்ளையார்க்குச் சிவபிரான் கொடுத்த பெரிய வரத்தினின்றும் பிரித்தலின் ஓகாரம் பிரிநிலை. அவ்வரமுன்னிலைமைத் திருத்தொண்டென்பதினாலும் பெறப்படும் எனவே சிவபிரானார் முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியருளுங்காரணத்துக்குச் சிவபாதஇருதயர் பகவதியார் இவ்விருவருக்கும் கொடுத்தவரமும் சககாரியாதலின் அதனையுமுடன் கூறுவார் பெருகுவர நினைந்தோ என்றார். (கூரு)

அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை
யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன.

(இ-ள்.) அருட்கருணை எழுகின்ற திருவுள்ளத் திறையவர்=பேரருளும் பெருங்கருணையுமாகிய இவ்விரண்டும் உதித்தற்கிடமாகிய திருவுள்ளத்தை



சீகாழி.



சிவபெருமான்பிராட்டியாரை ஆளுடையபிள்ளையாருக்குத்
திருமுலைப்பாலூட்டஅருளியது

யுடைய சிவபிரானார்; அழுகின்றபிள்ளையார்தமைநோக்கி=அழாநின்றபிள்ளையாரைப்பார்த்து (இவ்வாக்கு) அருள்செய்யுங்கருத்தால்; எவ்வுலகுந்தொழுகின்றமலைக்கொடியைப் பார்த்தருளி=எல்லாவுலகங்களுந்தொழாநின்ற உமாதேவியைக்கடைக்கணித்தருளி, துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்தூட்டென்ன=(பரஞானமும் அபரஞானமுமாகிய) இரண்டுதிருமுலைகளும் பொழியாநின்ற திருமுலைப்பாலென்னும் அமுதைப் பொற்கிண்ணத்திற் கறந்து ஊட்டாநிற்பையென்றுசொல்ல—எ-று. தாம்-அசை. (௬௬)

ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
சீரிணங்கு சிவபெருமா னருளுதலு முடனணைந்து
வாரிணங்கு திருமுலைப்பொன் வள்ளத்துக் கறந்தருளி.

(இ-ள்) ஆரணமும் உலகேழும் ஈன்றருளி=வேதங்களையும் ஏழுலகங்களையும் படைத்தருளி, அனைத்தினுக்குங் காரணமாய் வளம்பெருகுங்கருணைதிருவடிவான சீரிணங்கு சிவபெருமான் அருளுதலும்=எப்பொருள்கட்குங்காரணமாய மேன்மைபொருந்திய கருணையே திருவுருவான சிறப்பு விளங்கும் உமாதேவியார் சிவபெருமான் (பாலடிசிலூட்டென்ன) அருளிச்செய்யவும், சென்றணைந்தவர் இணங்குதிருமுலைப்பொன் வள்ளத்துக்கறந்தருளி=(அவரைக்கிட்டிக்) கச்சோடியைந்த திருமுலைகளினின்றும் பொன்வள்ளத்தில் திருமுலைப்பாலைக்கறந்தருளி—எ-று (௬௭)

எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
யுண்ணடிசி லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலையங் கழுகைதீர்த் தங்கணரு ளருள்புரிந்தார்.

(இ-ள்) உமை அம்மை எண்ணரிய சிவஞானத்து இன்னமுதங்குழைத்தருளி=பெரியநாயகியார் அளவிடற்கரிய சிவஞானத்தோடு திருமுலைப்பாலைக் கூட்டியருளி, எதிர்நோக்குங்கண்மலர் நீர்துடைத்தருளிக்கையிற்பொற்கிண்ணம் அளித்து=தம்மையெதிரே நோக்கும்பிள்ளையாரது கண்ணீரைத்துடைத்து அவர்கையில்பொற்கிண்ணத்தைக்கொடுத்து, அடிசில் உண்என ஊட்ட=அப்பாலடிசிலை நீ யுண்பாயென வூட்டியருள, அங்கணரும் அங்கு அண்ணலை அழுகைதீர்த்து அருள்புரிந்தார்=சிவபெருமான் அவ்விடத்து ஆளுடையபிள்ளையாரது அழுகையை நீக்கிக்கிருபைசெய்தார்—எ-று.

அழுகின்றபிள்ளையாரென்பது முதல் இம்மூன்றுங்குளகம். (௬௮)

யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா
ராவதனா லாளுடைய பிள்ளையா ராயகில
தேவர்க்கு முனிவர்க்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார்.

(இ-ள்.) யாவர்க்குந் தந்தைதாய் எனும் அவர் இப்படி அளித்தார் = எல்லார்க்குந் தந்தைதாயரென்று சொல்லப்படும் அவர்கள் இவ்வண்ணம் திருமுலைப்பாலூட்டியருளிச் சிவஞானத்தை விளக்கியருளினார்; ஆதலால் ஆளுடைப்பிள்ளையாராய = அக்காரணத்தால் ஆளுடையபிள்ளையாரென்னுந் திருநாமத்தையுடையவராய், அகிலதேவர்க்கு முனிவர்க்கும் தெரிவரிய பொருளாகும் = எல்லாத்தேவர்கட்கு முனிவர்கட்கும் உணர்தற்கரிய மெய்ப்பொருளாகிய, தாவில் தனிச் சிவஞான சம்பந்தராயினார் = எக்காலத்துங் கெடுதலில்லாத ஒப்பற்ற சிவத்தையுணரும் ஞானத்தோடு சம்பந்தமுடையரென்னுங் காரணத்தால் திருஞானசம்பந்தரென்னுந் திருநாமத்தை யுடையவராயினார்—எ-று.

பிள்ளையார்க்குச் சிவபிரானும் பிராட்டியாரும் ஆளுதலுடைமையின் ஆளுடையபிள்ளையாரென்றும் சிவத்தையுணருந் திருவருள் ஞானத்தோடு சம்பந்த முடைமையின் சிவஞானசம்பந்தரென்றும் காரணப்பெயர் ஆயினவாறு காண்க.

சுத்தமாயையுடன் கூடிய மூலப்பகுதியை யதிட்டிக்கும் சத்திரூபத்தாலும் ஆசசத்தியையபேதமாய நடத்தும் புருஷரூபத்தாலும் சரம் அசரம் எனனும் ஆன்மகோடிகளை யுதிப்பித்தலின் யாவர்க்குந் தந்தைதாயென்றார்.

யாவர்க்குமென்றது உயர்வுபற்றிய வழக்கெனக். எனவே விலங்குபுள்தாவரங்களுங் கொள்ளப்படும்.

எல்லாத்தேவர்கட்கும் தம்முலகினபமேயன்றி சிவஞானமுடையரல்லரென்பார் அகிலதேவர்க்கென்றும், முனிவரில் சிவஞானமுடையாரை நீக்குதற்கு விசேஷணமின்றிப் பொதுப்படக்கூறினார். (௬௯)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்.

(இ-ள்) தவமுதல்வர் சம்பந்தர் = (வைதிகத்துஞ் சைவத்துங் கூறும் சன்மார்க்கமான தவங்களை நிறுத்துதலால்) அத்தவங்கட்கு முதல்வராய ஆளுடையபிள்ளையார், சிவன் அடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் = சிவபிரானது திருவடியொன்றினையேயுணர்ந்து தெளிந்து சிந்திக்கும் செல்வமிக்க சிவஞானத்தையும்; பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம் = பிறப்பையும் இறப்பையும் மீண்டுவாராமல் நீங்கும்படிசெய்யுங் குணத்தோடுகூடிய அபரஞானத்தையும், உவமையிலாக்கலைஞானம் = ஒப்பில்லாத அறுபத்துநான்காகிய கலைஞானத்தையும், உணர்வரியமெய்ஞ்ஞானம் = எவைகளையுணர்ந்தாலன்றி வேதநூற்பொருளை யுணர்தற்குரிய சொல்லின்பாகுபாடுகளையும் பொருளின்பாகுபாடுகளையும் உணர்தலியலாவோ அவ் வியாகரணமும் தருக்கமீமாம்சையுமாகிய கருவிநூல்களின் ஞானத்தையும்; அந்நிலையில் உணர்ந்தார் = திருமுலைப்பாலுண்டருளிய அக்கணத்தே அறிந்தருளினார்—எ-று. தாம்-அசை.

சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகு சிவஞான மென்றதனால் ஏது திருஷ்டாந்தங்களாலன்றி ஒருங்கிய சுத்தமனத்தால் பொதுவியல்பென்னுந் தடத்த இலக்கணமொழித்துச் சிறப்பியல்போராது மெய்யுணர்ச்சிவாயிலாய் முதல்வன் திருவடியொன்றினையே சிந்திக்கும் பரஞானமென்பது பெறப்படும். பரஞானமெனினும் அபரோட்சஞானமெனினு மொக்கும். பரமென்பது உத்கிருஷ்டஞானமென்று பொருள். அது அவ்வாறாதல் "ஏதுக்களானு மெடுத்தமொழியானு மிக்குச் சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன ஆய சோதி," என்றும் "ஒருநெறியமனம்வைத்துணர் ஞானசம்பந்தனென்னும்" கூறிய திருக்கடைக்காப்பானும் "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும் பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாதநாளெல்லாம் பிறவாநாளே" என்றும் "தெள்ளித்தேறித் தெளிந்து தித்திப்பதோருள்ளத் தேறலமுதவொளிவெளி" யென்றும் கூறியதேவாரத்தானுங் காண்க. ஏகாரம் பசுபாசஞானங்களை விலக்குதலின் பிரிநிலைப்பொருளது.

பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானமென்றதனால், மேற்கூறிய பரஞானமென்னும் அபரோட்ச சாட்சாத்காரத்திற்கு வேறாய அதற்கு நேரேசாதனமாய அபரஞானமென்பது பெறப்படும். அபரஞானமெனினும் பரோட்சஞானமெனினுமொக்கும். அபரமென்பது பரத்துக்கு வேறாயதென்று பொருள். பவமென்றது ஈண்டு ஜென்னத்தின் மேற்று. மரணம், உபலட்சணம். குருமுன்னிலையில் வழிபட்டுக்கேட்கும் அவ்வபரஞானமென்னும் பரோட்சஞானம் பவமதனையறமாற்றலாவது புத்திக்கண்ணவாய பாவங்களையுஞ் சம்சயங்களையும் போக்கி ஏதுதிருஷ்டாந்தங்களால் உணரப்படும் மெய்யுணர்ச்சியால் மேல் சுத்தபுவன போகாந்தத்தின் பின்னாவது ஜன்மாந்தரத்திலாவது தன்னை பதிகரித்தவன் பிழைப்பட்டாது நற்குலத்துஞ்சுபித்துப் பரஞானங்கொடுத்தல் இதனால், அபரஞானம் பரஞானத்திற்கு நேரேசாதனமாதல் பெறப்படும். அதயவாறாதல், "கல்லாநெஞ்சினில்லானீசன் சொல்லாதாரோடல்லோமாமே" என்னுந்திருக்கடைக்காப்பானும் "கற்றீண்டுமெய்ப் பொருள் கண்டார்" என்னுந் திருக்குறளானுமுணர்க. அவ்வபரஞானம் புண்ணியலோகத்தைக் கொடுத்து ஞானத்தைப்பயக்குமென்பது "மேவாது தபசி யெவர் மேலாயபதங்கட் கிட்டிய புண்ணியராதாகி யின்பமினிதினுகாந்தா ரருளார் லிந்தப்பாரமேல் நாட்டிய நற்குலத்தினில் வந்தவதரித்துக் குருவால் ஞானநிட்டையடைந்தடைவார் நாதனடியே" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுமுணர்க.

உவமையிலாக்கலைஞானமென்றதனால் ஓர் சித்திக்கெட்டா அணிமாதி யெண்சித்திக்கும் அறுபத்துநான்கென்னும் பாகுபாடுகளையுணர்த்தும் கலைஞானங்களறுபத்துநான்கென்பதுபெறப்படும். கலைஞானம் அவ்வாதல் "அருமறையாகமமங்க மருங்கலைநூல்" என்னுஞ் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுமுணர்க. அது இம்மைக்கண் பயப்பனவாகிய வியாதிநீக்கம் ஆரோக்கியமுதலிய பயன்களைக்கொடுத்தலின் உவமையிலாவென விசேடிக்கப்பட்டது.

உணர்வரிய மெய்ஞ்ஞானமென்றதனால் முதனூற்பொருளையுணர்தற்கு இன்றியமையாக் கருவியாகிய சத்தநூல் அருத்தநூல்களென்பது பெறப்படும். மெய்யை விளக்குதற்குச் சாதனமாய ஞானத்தைமெய்ஞ்ஞானமென்றது உபசாரம். சுடுபாறையிற்கிடத்தல், தலைபறித்தல், சீவரம்போர்த்து உண்டிசுருக்கல் முதலிய புறச்சமயர்களது போலித்தவங்களைமாற்றுதற்கு வேதங்களுக்குடன்பாடான யாகம் சிவபூசை சிவபத்திமுதலிய முத்திநெறியாகிய தவங்களையும் விபூதிருத்திராட்சங்களாகிய தவவேடங்களையும் நிலைப்படுத்துதலின் தவமுதல்வரென்றார்.

சிவஞானமான அபரோட்சம் சிறந்தமையின்முன்னும், அதற்குப்பரோட்சசாதனமாதலின் அதன்பின்னும், கலைஞானம் ஆயுள் ஆரோக்கியங்களோடு யோகாங்கங்களையுமுணர்த்தி ஞானங்கட்குச்சாதனமாய்நிற்றலின் அதன்பின்னும், இவ்வைதிகசைவநூலாகிய முதனூற்பொருளை யுணர்தற்கும் கருவிநூல்களாதலின் சத்தார்த்தநூல்கள் அதன்பின்னுமாக எதிர்நிரனிறையாய சாதனசாத்தியமுறைப்படிவைத்தமைகாண்க

இதற்குச் சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகு சிவஞானமாகிய உணர்வரியமெய்ஞ்ஞானம் பரஞானமென்றும், பவமதனையறமாற்றும்பாங்கினிலோங்கிய ஞானமாகிய உவமையிலாக்கலைஞானம் அபரஞானமெனினுமாம். (௭)

எப்பொருளு மாக்குவா னீசனே யெனுமுணர்வு
மப்பொருடா னாளுடையா னடியார்க ளெனுமறிவு
மிப்படியா லிதுவன்றித் தமக்கிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார்

(இ-ள்.) எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனுமுணர்வும் = (அச்சிவஞானம்பெற்றுழி சித்துப்பொருளுஞ் சடப்பொருளுமாகிய உலகப்பொருள்) எல்லாவற்றையுஞ் சிருட்டித்துத் திதித்துச் சங்கரித்துத் திரோபவித்து அநுக்கிரகிப்பவன் (சர்வைசுவரியசம்பன்னன்) சிவபெருமானே யென்னுமுணர்வும், அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்களெனுமறிவும் = அவ்வுணர்ச்சிவழி (அச்சிவபெருமானைக்கண்டு வழிபடுதற்குரியவிடம்) ஆளுடையானது திருமேனியும் அவனடியாரது திருமேனியுமாமென்னுமுணர்வும், இப்படியால் = சாதகர்க்கு உபாசிக்கும்பொருளும் உபாசிக்குமிடமும் அதிஷ்டிக்கும்பொருளும் அதிஷ்டிக்குமிடமுமாகிய சம்பந்தங்கொண்டு மெய்யுணர்ச்சிவழிக் கொள்ளுதலால், இதுவன்றி = இவ்வாறன்றி, துப்புரவு இல்லார்தம் இசைவு கொண்டு இயலும் துணிவு துகளாகச்சூழ்ந்தெழுந்தார் = தமக்கோர் நன்னெறியாகிய பிரயோசனமில்லாத சமணர் பௌத்தர்கள்கொண்ட வுணர்வாகிய ஞானம்குற்றமுடையதென யோசித்து நிராகரித்து மேற்கூறியவற்றைமேற்கொண்டார்—என்றவாறு.

ஆக்குவான் என்றதனால் திதிமுதலிய உபலக்கணம்.

எபபொருளுமாககுவானெனறதனுல சிததுஞசடமுமாகிய பொருளகளை பஞசகநதச சாரபிறரேன்றுவனவென்னும பெளததாகொளகையும், ஐம்பூத ஙகாரணமாயச சிலபொருளதோறறும உலகுநித்தியமாமெனனும சைனர் கொளகையும, பிரகிருதியும விகிருதியுமாய ஒனறறகொனறுகாரணமாயஇரு பதது நான்காநததநுவமாய பிரகிருதியில உலகநதானே தோறறுமென்னும நிரீஸவரசாஙகியாமதமும, பொருநதாதனவாம எனபார் விணைமுதலதோனற எபபொருளுமாககுவானெனருா.

இலலசறகுததோறறங கூடுதலபொருநதாமையின சததிருபத்தால உள ளனவாய சொலலுமபொருளுமாய சடபபிரபஞசததை மாயையினினறு மு திபபிகதமாறுபோல உளபொருளாய அனுதியேகேவலபபடடு நிறகும ஆன மாககளுககு உடலகரணஙகளைககூட்டி யுணாவுதொழிலகளைக கொடுததலே சிருட்டியெனபபடும

சிருட்டியாதி ஐநதொழிலகள சடததுககுமூனறும, சிததுககு ஐநதுமா மெனல் ஏறறபெறறியாற பெறபபடும

விணைமுதலஉ ணடெனபாா மாததும புருடவிசேடனே யீசுவரனென்னு ம சேசுரசாஙகியரையும, நாராயணனே விணைமுதலெனனும பாஞசராததிரிக ளையும, மறுததறகு ஈசனேயெனறுஙகூறினா

ஏகாரம பிறரலலா என பிறிதினியைபுநீககியது. இதனைவடநூலாா அ னியயோக வியாவசசேதமெனபா

அவவாறுநிசசயிதத வுணாவுவழிபபட்டாலனறிப பயனபடாமையின அ பபொருளாக வழிபடுதறகுரியவிடம ஆளுடையானது திருமேனியும அடியா ாகளுடைய திருமேனியும ஆமெனபாா அபபொருடான ஆளுடையானடியாா களொனறு மறியுமெனருா.

சூழநதெழுதல அவவுணாவை மேறகொணடொழுகுதல (எக)

சீாமறையோா சிவபாத விருதயருஞ சிறுபொழுதி
னீாமருவித தாஞசெயயு நியமஙகண முடிததேறிப
பேருணாவிற பொலிகினற பிளளையாா தமைநோககி
யாாளிதத பாலடிசி லுணடதுநீ யெனவெகுளா.

(இ-ள) சீாமறையோா சிவபாத இருதயரும=சிறபபுமிகக வேதியராகி யசிவபாத இருதயரும, சிறுபொழுதில நீாமருவிததாமசெயயும நியமஙகள முடிததேறி=பிளளையாரது பிரிவால காலநீட்டியாது காலையில ஸநானஞசெ யதுதாமமுடிககுஞ (சநதியாவநதனமசெபம சூரிய நமஸகாரமுதலிய) நியம ஙகளை முடிததுககரையேறி, பேருணாவிறபொலிகினறபிளளையாா தமைநோ ககி=(பிளளைததனமையுறிவொழிநது) பேரறிவால விளஙகுகினற ஆளுடை யபிளளையாரைபபாாதது, நீ உணடது ஆா அளிதத பால அடிசில எனவெகு ளா=நீயுணடது ஆரளிததபாலடிசிலெனறு கோபிதது—எ-று

திருவருள்ஞானம் விளங்குதலால் பேருணர்விற்பொலிகின்ற பிள்ளையா ரென்றார்.

திருமுலைப்பால் கடைவாயின்வழியொழுகுதலால் ஆரளித்தபாலடிசிலெ னவுங்கூறினார் (௭௨)

எச்சின்மயங் கிடவுனக்கீ திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக் காலெடுத்தே
யச்சிறிய பெருந்தகையா ரானந்தக் கண்டுளிப்பெய்
துச்சியினி லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி.

(இ-ள்) எச்சில்மயங்கிட உனக்கீது இட்டாரைக்காட்டென்று= (அன்னியரது) உச்சிட்டங்கலக்க உனக்கு இப்பாலூட்டினாரைக்காட்டுவையென்று, கைச்சிறிய தொருமாறுகொண்டு ஓச்ச அச்சிறியபெருந்தகையார் கால் எடுத்து=தமதுகையில் சிறியதாகிய வொருகோலைக்கொண்டு ஓங்க அந்தச்சிறுவ ராகிய (அளப்பரிய) பெருந்தகைமையையுடைய பிள்ளையார் திருவடியைப் புடைபெயர்த்து (அவ்வோச்சுதல் தந்திருமேனியிற்படாதுநின்றருளி), ஆன ந்தக்கண்டுளிபெய்து=கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம்பொழிந்து, உச்சி யின்மேல் எடுத்தருளும் ஒருதிருக்கைவிரல்சுட்டி=தமது திருமுடியின்மேல் (சிவபெருமானைச் சுட்டிக்காட்டுநிமித்தம்) எடுத்த வலத்திருக்கை விரலாற் சுட்டி—எ-று.

ஏனையவருண்டதாற்பால் உண்ணில் உச்சிட்டமயங்குமாதலால் எச்சில் மயங்கிடவெனவும், தந்தையார் ஓச்சு மாறுதந்திருமேனியிற்படின் அவர்க்கு விசனத்தையுங் குற்றத்தையும் விளைக்குமாதலின் காலெடுத்தெனவுங்கூறினார்.

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப் பாவையுட
னெண்ணிறைந்த கருணையினா னின்றானை யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால்

(இ-ள்.) விண்ணிறைந்த பெருகு ஒளியால் விளங்குமழவிடைமேலே= ஆகாயத்தில் நிறைந்த மிக்கவொளியோடுவிளங்காநின்ற இளமைபொருந்திய இடபத்தின்மேலே, பண்ணிறைந்த அருமறைகள்பணிந்தேத்த=இசையோடு நிறைந்த அரியநான்குவேதங்களுந் துதித்துவாழ்த்த, பாவையுடன் எண்ணி றைந்த கருணையினால் நின்றானை எதிர்காட்டி=உமாதேவியாரோடு அளவிடற் கரிய பெருங்கருணையோடு எழுந்தருளிநின்றசிவபிரானை யெதிரேகாண்பித்து உண்ணிறைந்துபொழிந்து எழுந்த உயர்ஞானத்திருமொழியால்=தமது திரு வுள்ளத்தில் நிறைந்துதேக்கிட்டு வழிந்தெழுந்த திருவருள்ஞானம் நிறைந்த தமது திருவாக்கினால்—எ-று.

சிவபாதவிருதயர பிளளையாரைககோபிக்க அவர சிவ
பிரானைச சுட்டிக்காட்டியது

உணணிறைநது பொழிநதெழுதலாவது தேனுணடுமிழ்வானறிறமபோல
சிவானநதானுபவம தமமுளளமநிரமபுஙகால் அதனேடுகலநதெழுதல. (எச)

எலலேயிலா மறைமுதனமெய் யுடனெடுதத வெழுதுமறை
மலலனெடுந தமிழாலிம மாநிலததோாக குரைசிறபபப
பலலுயிருங களிகூரத தமபாடல் பரமாபாற
செலலுமுறை பெறுவதறகுத திருசசெவியைச சிறபபிததது.

(இ-ள) எலலேயிலாமறைமுதல=அளவுபடாத வேதததின்முதலாய பி ரணவததை, மெயயுடன எடுதத எழுதுமறை=தகர மெயயெழுததோடு முத லிறசோதது எடுதது எழுதுமவேதமாகிய, மலலலநெடுநதமிழால = வளப பநதருகினற மிககதமிழமொழியினல, மாநிலததோாககு உரைசிறபப=பெரி ய நிலவுலகததவாககு வேதபபொருள சிறநதுவிளஙகவும, பலலுயிருஙகளி கூரததமபாடல=பலஅனமகோடிகளுங கேடடுககளிபபடைய தமதுதிருப் பாடல, பரமாபாறசெலலுமுறைபெறுவதற்கு=சிவபிரானுடைய திருச்செ விககுப பொருநதுமமுறைமையைபபெறுதறகு, திருசசெவியைசசிறபபிதது =திருசசெவியினைசசிறபபிததுககூறி—எ-று

வேதமூலமாகியபிரணவம மஙகளகுணமநிறைநத சிவபரமான்மாவினது வாசகமாதலின இதுவுமவேதமேயெனறுதோனற அதனைமுதலிலவைததுதத கரமுமமஙகளத தனமையையுடைய கணமாதலின் உடனசோககபபடடது. எழுதுமறையெனபது எழுதாமறைககு வேறுதலதோனற எனக. வேததகி ல சிவபெருமானையே பரமபொருளெனக கூறுநதுணிபொருள இததமிழவே தததால தெளிவுபடததோனறுதலின மாநிலததோர்ககுரை சிறபபவெனறும, தேவாமக்களையனறி விலஙகுபுளமுதலியனவும மரஙகளும இசைததனமை கேடடுஉருகுதலைசசெயதலினபலலுயிருஙகளி கூரததமபாடலெனறா. (எரு)

செமமைபெற வெடுததகிருத தோடுடைய செவியனெனு
மெயமமைமொழித திருபபதிகம பிரமபுர மேவினுா
தமமையடை யாளஙக ளுடனசாறறித் தாதையாாக
கெமமையிது செயதபிரா னிவனனறே யெனவிசைததாா.

(இ-ள.) செமமைபெற எடுதத திருததோடுடைய செவியனெனும மெ யமைமொழிததிருபபதிகம=அழகாக (உலகததாா உயயுமபொருடடு) எடுதத ருளியதோடுடைய செவியனெனும மஙகளமொழியோடுகூடிய திருபபதிகத தில, பிரமபுரமமேவினுா தமமை அடையாளஙகளுடன்சாததி=சீகாழியிலெ ழுநதருளிய சிவபிரானை (வேறறுததேவாபால செல்லாத சிறபபியலபெனனு ந தடததலடசணமாகிய அவரதியலபை விடையேறுதலமுதலிய) அடையா ளஙகளால எடுததுககாடடியருளி ; தாதையாாககுஎமமை இதுசெயதபிரான் இவன அனறே எனவிசைததாா=தமது தநதையாராகியசிவபாத இதயருககு இவவாறுதிருமுலைபபால ஊடடுவிததுததிருவருள ஞானததைபபாலித்த சி வபெருமான் இவனெனறு கூறியருளினா்—எ-று.

அன்று அசை. சீரமறையோரொன்றதுமுதல இதுகாறுங்குளகம். விடையேறுதல முதலிய, பதிகத்திற போந்தவாறுகாணக. அதிலசுடலையெனபது மகாசமமாரகாலத்தை. அக்காலத்திற பிரபஞசங்கள தகிக்கப்படும். பூதி பொடியெனப்படும் (எசு)

திருப்பிரமபுரம - பண - நட்டபாடை.

திருச்சிற்றமபலம.

தோடுடையசெவி யனவிடையேறியோா தூவெணமதிசூடிக
காடுடையசுட லைப்பொடிபபூசியென னுளளங்கவாகளவ
னேடுடையமல ரானமுனநாட பணிநதேத்தவருளசெய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெமமா னிவனனறே (க)

முறறலாமையிள நாகமோடேன முளைக்கொமபவைபூணடு
வறறலோடுகல னுபபலிதோநதென னுளளங்கவாகளவன
கறறலகேட்டலுடை யாாபெரியாாகழல கையாறறொழுதேத்தப
பெறறமூாநதபிர மாபுரமேவிய பெமமானிவனனறே. (உ)

நீாபாநதசிமிா புனசடைமேலோா நிலாவெணமதிசூடி
ஏாபாநதவின வெளவளைசோரவென னுளளங்கவாகளவ
னூாபாநதவுல கினமுதலாகிய வோாரூரிதுவெனனப
போபாநதபிர மாபுரமேவிய பெமமானிவனனறே (ந)

விணமகிழநதமதி லெயததுமனறி விளங்குதலையோட்டி
லுணமகிழநதுபலி தேரியவநதென னுளளங்கவாகளவன
மணமகிழநதவா வமமலாககொனறை மலிநதவாைமாாபிற
பெணமகிழநதபிர மாபுரமேவிய பெமமானிவனனறே (ச)

ஒருமைபெணமையுடையனசடையனவிடையூருமிவனெனன
வருமையாகவுரை செயயவமாநதென னுளளங்கவாகளவன
கருமைபெறறகடல்கொளளமிதநததோா காலமிதுவெனனப
பெருமைபெறறபிர மாபுரமேவிய பெமமானிவனனறே. (ரு)

மறைகலநதவொலி பாட்லொடாடல ராகிமழுவேநதி
யிறைகலநதவின வெளவளைசோரவென னுளளங்கவாகளவன
கறைகலநதகடி யாாபொழிலநீடுயா சோலைககதிாசிநதப
பிறைகலநதபிர மாபுரமேவிய பெமமானிவனனறே. (சா)

சடைமுயஙகுபுன லனனலன்னெரி வீசிசசதிாவெயதி
யுடைமுயஙகுமர வோடுழிதநதென னுளளங்கவாகளவன்
கடல்முயஙகுகழி சூழ்குளிாகானல பொனனஞசிறகனனம
பெடைமுயஙகுபிர மாபுரமேவிய பெமமானிவனன்றே. (எ).

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
வுயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
றுயரிலங்குமுல கிற்பலவூழிக டோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (அ)

தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமரையானு
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளிர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (௯)

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
வொத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயமிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. (௰)

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன்றன்னை
யொருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தனுரை செய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தலெளிதாமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர்-பிரமபுரீசர்-தேவியார்-திருநிலைநாயகியம்மை
திருத்தோணியில் வீற்றிருப்பவர் தோணியப்பர்.

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
வெண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார்.

(இ-ள்) மண்ணுலகில்வாழ்வார்கள்பிழைத்தாலும்=நிலவுலகினகண் வாழுமவர்கள் தவறுசெய்யினும், வந்தடையிற் கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளுமெனக்காட்ட= (தமது திருவடியை) வந்தடைவரேல் சிவபிரான் தமது மிக்ககிருபையால் அவர்களையாண்டுகொள்ளுமெனபதைத்தெரிவிக்க, எண்ணமிலாவல்லரக்கன் எடுத்துமுறிந்து இசைபாட= (சிவபிரானது மானமியத்தை) மதியாவலிய இராவணன் திருக்கைலையையெடுத்துத் (தனதுவலிகெட்டு) இருபதுதோளுமநெரிந்து (தன்தவறுகருதி அச்சிவபிரானை) சாமகீதத்தால் பாடுதல்செய்ய; அண்ணல் அவற்கு அருள்புரிந்த ஆக்கப்பாடு அருள்செய்தார்=சிவபிரான் அவ்விராவணனுக்குக் கிருபைசெய்த கிருபாமிகுதியையும் (எட்டாம்பாட்டில்) அருள்செய்தார்—எ-று. (௪௭)

தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனு
மிழிவாகு மகருவிலங்கும பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படி விரித்தார்.

(இ-ள்) தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்= (எவ்வகைமேம்பாட்டாருள்ளும்) தம்மைவழிபடுமவர்க்கே சிவபிரான் திருவருள்செய்வதெனக்கருதி அவரைவணங்காராய், வழுவானமனத்தாலே மாலாயமாலயனும்=தவறுபட்டமனத்தினாலேமயக்கமடைந்த மாலும் பிரமனும், இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை விழுவார்கள்=இழிந்த பன்றியும் அன்னமுமாய (அச்சிவபிரானது திருவடியையுந் திருமுடியையுந் தேடி) கண்டறியாமல் செருக்கொழிந்தவர்கள், அஞ்செழுத்துந்துதித்துய்ந்த படிவிரித்தார்=திருவஞ்செழுத்தினைத்துதித்து ஈடேறியவகையினையும்(ஒன்பதாம்பாட்டில்) கூறியருளினார்—எ-று

மேல்மண்ணுலகில்வாழ்வாரிற்பிழைத்தார்க்குஇராவணனைக்காட்டுதலின் விண்ணுலகில்வாழ்வாரிற்பிழைத்தார்க்கு அரிபிரமரைக்காட்டியவாறு (எஅ)

வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதனெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமணகையர் புத்தர்வழி பழியாக்கு
மேதமே யெனமொழிந்தா ரெங்கள்பிரான் சம்பந்தர்.

(இ-ள்) எங்கள் பிரான்சம்பந்தர் வேதகாரணராய வெண்பிறைசேர் செய்யசடை=எமது தலைவரான ஆளுடையபிள்ளையார் வேதங்களாலெடுத்தோது முதற்பொருளாயவெள்ளிய பிறைசேர்ந்த சிவந்தசடைமுடியையுடைய, நாதனெறியறிந்து உய்யார்தம்மிலே=சிவபிரானால் விதிக்கும் நன்னெறியாகிய (வைதிகசைவமார்க்கங்களை) யறிந்து அவ்வழிநடந்து (இம்மைமறுமைவீடென்னும் புருடார்த்தங்களைப்பெற்று) உய்யாத புறச்சமயிகளுள், நலங்கொள்ளும்போதமிலாச் சமணகையர்புத்தர்வழிபழியாக்கும்=(வேதநெறியை ஒருவாற்றானுமுடன்படும்) விவேகமில்லாத சமணர் புத்தர் தமநூலிற் கூறுமார்க்கங்கள் குற்றத்தைவிளைக்குமாதலின், ஏதமேயெனமொழிந்தார்= அவைகள் குற்றமுடையனவேயாமென்று (பத்தாம்பாட்டில்) அருளிச்செய்தார்—எ-று.

வேதத்திற்கூறுங் காரணவாசகங்கள் சிவபிரானையே பிரமமாகக்கருதித்தலின் வேதகாரணராயவென்றும், புறச்சமயிகளுள் வேதமார்க்கங்கொண்டும் சிவபிரானை வழிபடாதாருள்ளு மிக விழிந்தவராதலின், நலங்கொள்ளும் போதமிலாச்சமணகையர்புத்தரென்றார் (எகூ)

திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளையா ரெதிர்தொழுது நின்றருள
வருட்கருணைத் திருவாள னருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார்.

(இ-ள்) இருக்குமொழிப்பிள்ளையார் திருப்பதிகநிறைவித்துத் திருக்கடைக்காப்புச்சாத்தி=வேதப்பொருளைத்தமது பதிகங்களில் அமைத்துப்பாடியருளிய ஆளுடையபிள்ளையார் (மேற்கூறியவாறு திருவடையாளங்களுடன் சிவபெருமானியல்பையும் அவர்பேரருளையும் புறமும் புறப்புறமுமாகிய பாஞ்சராத்திரிசமணர்புத்தர் முதலியோரது இழிவையுங்காட்டித் தோடுடையசெவியனென்று தாமமுதலிலெடுத்த) திருப்பதிகத்தை நிறைவித்துப்பதிகத்தினிறுதியில் திருக்கடைக்காப்புக்கூறி, எதிர்தொழுது நின்றருள=சிவபிரான் திருமுன்வணங்கிநிற்க, அருட்கருணைத்திருவாளன் அருள்கண்டு=பெருங்கருணைசீமானாகிய சிவபிரானது திருவருளின்பெருமையைநோக்கி, அமரர் எலாம்பெருக்கவிசும்பினில் ஆர்த்துப்பிரசமலர் மழைபொழிந்தார்=தேவர்களியாவரும் ஆகாயத்தில் மிகவும் ஆரவாரித்துத் தேன்சிந்தும் புட்பவருடத்தைப்பொழிந்தார்கள்—எ-று. (௮௰)

வந்தெழுமங் கலமான வானதுந் துபிமுழக்கும்
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கு
மிந்திரனே முதற்றேவ ரெடுத்தேத்து மிசைமுழக்கு
மந்தமில்பல் கணநாத ரரவெனுமோ சையினடங்க.

(இ-ள்) வந்தெழுமங்கலமான வானதுந்துபிமுழக்கும்=வானின்கணின்றெழாநின்ற மங்கலகரமான தேவதுந்துபியின் முழக்கொலியும், கந்தருவர் கின்னரர்கள்கான ஒலிக்கடன்முழக்கும்=தேவச்சாதியரான கந்தருவர்களுங் கின்னரர்களும் செய்கின்றகானத்தினொலியாகிய கடலினொலியும், இந்திரனேமுதல்தேவர் எடுத்தேத்தும் இசைமுழக்கும்=இந்திரன்முதலியதேவர்கள் வாழ்த்தெடுத்துத்துதிக்கும் ஒலியின்முழக்கமும் (ஆகியவ்வொலிகள்), அந்தமில் பல்கணநாதர் அரவெனும் ஓசையின் அடங்க=அளவில்லாத பல்சிவகணநாதர்கள் அரவென்றுதுதிக்கும் ஓசையுள்ளடங்கி வியாப்பியமாகவும்—எ-று. (௮௧)

வேறு.

மறைகள்கி ளர்ந்தொலி வளர்மு ழங்கிட வானோர்தந்
நிறைமுடி யுந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடையநி றைந்திட வோவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவரொ லுங்கடல் புடைசூழ.

(இ-ள்.) மறைகள்கிளர்ந்து ஒலிவளர்முழங்கிட=நான்குவேதங்களும் ஒலிக்குவளரும்படி யாரவாரிக்கவும், வானோர்தம்நிறைமுடி உந்திய மணி

நிரைசிந்திட=தேவர்களது மணிநிறைந்தகிரீடம் ஒன்றோடொன்று உரோஞ்ச அம்முடிகளினின்றும் சிந்திய இரத்தினங்கள் வரிசையாகச்சிதறலால்; நீள்வானத்து உறையெனவந்து உலகடைய நிறைந்திட=அகன்றமேகத்தின் கணின்றும் நீர்த்துளிகள் சிதறினாற்போல பூமியில்வந்து முழுமையுநிறையவும், ஓவாமெய்ப்பொறை பெருகுந்தவமுனிவர் எனுங்கடல்புடைசூழ=தம்மினின்றும் நீங்காதமெய்ம்மையும் பொறுமையும் மிக்க தவத்தையுடைய முனிவரென்னுங்கடல்பக்கத்திற்சூழவும்—எ-று. (௮௨)

அணைவுற வந்தெழு மறிவுதொ டங்கின வடியார்பா
லிணையில்ப வங்கிளர் கடல்கள்இ கந்திட இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொடணைந்தனர் சுருதிதொ டர்ந்த பெருந்தோணி

(இ-ள்) அணைவுறவந்தெழும் அறிவுதொடங்கின அடியார்பால்=தமது திருவடியை அடையுங்காரணமாய (மலபரிபாகத்தால்) தோன்றி எழாநின்ற (மோட்ச இச்சையைவிளைக்கும் சத்திநிபாதமெனனும்) உணர்வு உதித்த அடியார்களிடத்து, இணையில்பவங்கிளர்கடல்கள் இகந்திட=ஒப்பில்லாதபிறவிகளென்னும் பெரியகடலைக்கடக்கும்படி, இருதாளின்புணைஅருள் அங்கணர்=தமதுதிருவடிகளென்னும் இன்பத்தைச்செய்யும் மரக்கலத்தையருளும் காருண்ணியரான சிவபெருமான், பொருவிடைதங்கிய புணர்பாகத்துணையொடு அணைந்தனர்=போர்செய்யும் இடபவாகனத்தின்மேல் தமது இடப்பாகம் நீங்காது எழுந்தருளியபெரியநாயகியாரோடும் எழுந்தருளினர், சுருதிதொடர்ந்தபெருந்தோணி=வேதங்கள் நீங்காதிருக்கின்ற பெரியதிருத்தோணியென்னும் ஆலயத்தில்—எ-று. (௮௩)

அண்ணல ணைந்தமை கண்டுதொ டர்ந்தெழு மன்பாலே
மண்மிசை நின்றம றைச்சிறு போதக மன்னாருங்
கண்வழி சென்றக ருத்துவி டாதுக லந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார்.

(இ-ள்.) அண்ணல் அணைந்தமைகண்டு தொடர்ந்தெழும் அன்பாலே=சிவபிரானார் (திருத்தோணியில்) எழுந்தருளினமைகண்டு (தம்மிடத்தவரை நீங்காது) தொடர்ந்து உதிக்கும்பேரன்பினாலே; மண்மிசைநின்ற மறைச்சிறுபோதகம் அன்னாரும்=பூமியின்கணிற்கின்ற வேதவுணர்ச்சியின்மிக்க சிறியயானைக்கன்றையொத்த ஆளுடையபிள்ளையாரும்; கண்வழிசென்ற கருத்து விடாது கலந்தேக=கண்ணாகிய பொறிவழியே (சிவபிரானைவிடையீர்த்துச்) சென்ற தமது எண்ணம் நீங்காது (அவரோடுடனாய) கலந்துபின்செல்ல, புண்ணியர் நண்ணிய பூமலிகோயிலின் உள்புக்கார்=புண்ணிய சொரூபியாகிய சிவபிரானார் எழுந்தருளிய பொலிவுமிக்க கோயிலினுட்சென்றருளினார்—எ-று.

புறநூலுணர்ச்சியுள்ளாரைக் கண்டஞ்சத்தக்க மெய்ந்நூலுணர்ச்சியின் மிக்காராதலின் மறைச்சிறுபோதகமன்றோ என உவமித்தார். கண்பொறியும் சிவபிரான் புலனுமாதலின், கண்வழிச்சென்றகருத்தெனவும், வேதாகமங்களில்விதிக்கும் அறங்களைத்திருமேனியாகவுடைமையின்புண்ணியமெனவுங்கூறினர்.

கண்முதலியனபொறியெனவும் அவற்றாலுணருமுருவமுதலியன புலமெனவும்படும். அது "பொறிப்புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்து நினைப்பவர்நெஞ்சுளே" என்னுந்திருக்குறுந்தொகையானுமுணர்க.

ஈறிலபெ ருந்தவ முன்செய்து தாதையெ னப்பெற்றார்
மாறுவி ழுந்தம லர்க்கைகு வித்தும கிழ்ந்தாடி
வேறுவி ளைந்தவெ ருட்சிவி யப்புவி ருப்போடுங்
கூறும ருந்தமி ழின்பொரு ளானகு றிப்போர்வார்.

(இ-ள்) ஈறிலபெருந்தவமுன்செய்துதாதையெனப்பெற்றார் = முடிவில்லாததவத்தைத் தாமுன்னேசெய்து அதனால் ஆளுடையபிள்ளையார்க்கு இப்பிறப்பில் தந்தையாரென்றுசொல்லும் பேற்றினையடைந்த சிவபாத இருதயர், மாறுவிழுந்தமலர்க்கைகுவித்து மகிழ்ந்தாடி = ஓச்சவெடுத்த மாற்றானது தானேநழுவிய தாமரைமலர்போன்றகைகளைச் சிரசின்மேற்குவித்துத் தம்மையறியாதெழுமகிழ்ச்சிகாரணமாகக்கூத்தாடி, வேறுவிளைந்தவெருட்சி வியப்புவிருப்போடும் = தனித்தனியுண்டாய அச்சம் அதிசயம் உவகை ஆகியவிவைகளோடும், கூறும் அருந்தமிழின்பொருளான குறிப்போர்வார் = பிள்ளையார் அருளிய அரிய திருநெறித்தமிழின்பொருளாய அதிநுட்பங்களையோர்பவராய்—எ-று.

வெருட்சி, வியப்பு, விருப்புகள், ஒன்றுபோயவழி, அதன்பின்மற்றொன்று உதித்தலின், வேறுவிளைந்த வெருட்சிவியப்புவிருப்பொடுமென்றார்.

அருள்வழிப்பட்டுநிற்கும் ஆளுடையபிள்ளையாரைத் தம்வழிப்பட்டவராய்க்கருதி அவர்க்கு உணவூட்டுநிமித்தம் மாற்றோச்சுதலாகிய பிழையின்பொருட்டு அச்சமும், இதுகாறுமியாண்டும் யாவரிடத்தும் நிகழாத நிகழ்ச்சியாகிய தெய்வத்தன்மை கருதி வியப்பும், புறச்சமயங்கள்பாழ்படவேண்டுமென்று தாம்கருதிச்செய்த தவப்பயன்காரணமாக சிவபிரானது திருவருள் இவ்வாறுகூட்டிற்றேயென விருப்பும், அவரிடத்து நிகழ்ந்தனவென்க. (௮௫)

தாணுவி னைத்தனி கண்டுதொ டர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனுங் கழந்தன கண்டுள்ளார்
தோணிபு ரத்திறை தன்னரு ளாற்று ணிந்தார்வம்
பேணும னத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார்.

(இ-ள்.) தாணுவினைத்தனிகண்டுதொடர்ந்தவர்தம்மைப்போல் = தோணியப்பரை இடபவாகனத்திற் பெரியநாயகியாரோடுந் தான்தனியேகண்டு தரிசித்து அவர்பின்தொடர்ந்துசென்ற அவ்வாளுடைய பிள்ளையாரைப்போல்;

காணுதல்பெறறிலரேனும நிகழநதனகண்டுளளார்=தாம் அத்தோணியபபரை க்கண்டு தரிசித்திலராயினும் அஙகுநிகழநத அறபுததததைக்கணடவராயினா, (அதனாலவர்) தோணிபுரதது இறைதன அருளாதலதுணிநது=இஙஙிகழசசி தோணிபுரதது இறைவரது அருளாதலையூகிததுணாநது; ஆர்வமபெணுமனந தொடு முன்புகுகாதலாபினசெனறா=அனபுமிககமனததோடு முனனேசென ற ஆளுடையபிள்ளையாா பின்போயினர்—எ-று.

தாதையெனபபெறறா ஓாவாராயககணடுளளாரெனககூடடுக. (௮௬)

அபபொழு தஙகண ணைநதது கணடவ ரலலாதாா
முபபுரி நூனமறை யோாகளு ரோமமு கிழபபெயதி
யிபபடி யொபபதொா ரறபுத மெஙகுள தென்றெனறே
துபபுறழ வேணியா கோயிலின வாயதலபு றஞ்சூழ.

(இ-ள) அபபொழுது அஙகண அணைநதது கணடவரலலாதாா = அச சமயததில அவவிடததில நிகழநததெயவீகநிகழசசியைப பாாததவாகளும (அஙஙனமபாராது) கேடடவாகளுமாகிய, முபபுரிநூலமறையோாகள உரோ மம் முகிழபபெயதி=முபபுரிநூலையணிநத பிராமணாகள உரோமாஞசிதமு டையராய, இபபடி ஒபபதொா அறபுதம எஙகுளது எனறுஎனறு=இதை யொதத ஆசசரியம எவவிடதது உளளதெனறு, துபபுறழ வேணியாகோயி லினவாயதல புறஞ்சூழ=பவழமபோலசசிவநத சடாமுடியையுடைய சிவபி ரானது கோயிலவாயிலினபுறததில சூழநதுநிறக—எ-று (௮௭)

பொஙகொளி மாலவிடை மீதுபு குநதணி பொறறோணித
தஙகியி ருநதபெ ருநதிரு வாழவுத லைபபடடே
யிஙகெனை யாளுடை யானுமை யோடுமி ருநதானென
றஙகெதிா நினறுபு கனறனா ஞானத தமுதுணடாா.

(இ-ள) ஞானத்தமுதுணடாா = ஞானபோனகமசெயத ஆளுடையபி ளளையாா, பொஙகு ஒளிமாலவிடைமீதுபுகுநது = விளஙகுஙகிரணததையு டைய பெரியஇடபததினமேல(முன)காடசிகொடுததருளி அணிபொனதோ ணி தஙகியிருநத பெருநதிருவாழவுதலைபபடடே=அழகியதோணியினகண (பின்) எழுநதருளியிருநத பெரியஞானசசெலவரான சிவபிரானையடைநது, இஙகு எனையாளுடையான உமையோடுமிருநதானெனறு=இவ்விடதது என னையாளுநதனமையையுடைய சிவபெருமான உமாதேவியாரோடும எழுநதரு ளி இருநதாரெனறு, அஙகெதிாநின்றுபுகனறனா=அவவிடததுத திருமுன் னிலையிலநினறு (தமமைபபுறஞ்சூழநது நிறகுநதாதையாாமுதலியோாகேட குமபடி) அருளிசசெயதனா—எ-று.

புறஞ்சூழப புகுநதிருநத வாழவைத தலைபபட்டுப் புகன்றனரெனக் கூடடுக. (௮௮)

இன்னிசை யேழுமி சைந்தசெ ழுந்தமி ழீசர்க்கே
சொன்முறை பாடுதொ ழும்பருள் பெற்றதொ டக்கோடும்
பன்மறை வேதியர் காணவி ருப்பொடு பாலறாவும்
பொன்மணி வாயினர் கோயிலி னின்றுபு றப்பட்டார்.

(இ-ள்.) இன் இசை ஏழும் இசைந்த செழுந்தமிழ் ஈசர்க்கே=இனிய குரல் முதலிய இசையேழும் பொருந்திய தீந்தமிழைச் சிவபெருமானுக்கே; சொன்முறை பாடும் தொழும்பு அருள் பெற்ற தொடக்கோடும்=அச்சிவபிரானது குணங்களோடு சின்னத்தையும் அவரது கிருபையியல்பையும் சமணபுத்தரது இழிவையும் அமைத்துப் பாடித் திருக்கடைக்காப்பு அருளியபடியே பாடுகின்ற தொண்டாகிய அருளைத் தாம்பெற்ற இயல்போடும்; பன்மறை வேதியர் காண=பலவேதங்களையுணர்ந்த பிராமணர் காணும்படி, விருப்பொடு பாலறாவும் பொன்மணி வாயினர்=விருப்புடன் திருமுலைப்பால் கமழும் அழகிய மாணிக்கம்போல சிவந்த திருவாயினையுடைய ஆளுடையபிள்ளையார், கோயிலினின்று புறப்பட்டார்=திருக்கோயிலினின்று புறமெழுந்தருளினார்—எ-று.

இராகமும் தாளமும் ஒத்தபண் ஏழிசையாலமைதலின் இன்னிசையேழுமிசைந்த வென்றார். ஏழிசையால் இராகமேயன்றித் தாளமுமமையுமெனச் சங்கீதநூலார் கூறுவர். (௮௧)

பேணிய வற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலி னேரெய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணிபு ரத்தவர் தாமெதிர் கொண்டு துதிக்கின்றார்.

(இ-ள்.) பேணிய அற்புத நீடு அருள் பெற்ற பிரான் முன்னே=யாவராலும் விரும்பத்தக்க ஆச்சரியமிக்க சிவபிரானது திருவருளைப்பெற்ற ஆளுடையபிள்ளையார் திருமுன்னே, நீள் நிலையில் திகழ் கோபுரவாயிலின் நேர் எய்தி=(அவர் கோயிலினின்று மெழுந்தருளுங்கால்) உயர்ந்த நிலைகளால் விளங்கும் கோபுரவாயிலின் முன்னே சென்று; வாள் நிலவின் திகழ் வேணியர் தொண்டர்கள்=ஒளியையுடைய சந்திரகலையால் விளங்கும் சடாமகுடத்தையுடைய சிவபெருமான் அடியாராய, வாழ்வு எய்தும் தோணிபுரத்தவர் தாம்=வாழ்வடைந்த தோணிபுரத்தின்கணுள்ளார் யாவரும், எதிர்கொண்டு துதிக்கின்றார்=ஆளுடையபிள்ளையாரை எதிர்கொண்டு துதிக்கின்றார்கள்—எ-று.

தாம்-அசை யெனினுமமையும். (௮௨)

வேறு.

காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே யதனிடை யமுதே யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாத
னேழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனையென்பார்.

(இ-ள்) காழியர்தவமே கவுணியர்தனமே=சீகாழியில் உள்ளவர்கள் செய்த தவப்பயனே, கவுணியகோத்திரத்தார் பெற்ற பெருஞ்செல்வமே; கலைஞானத்தாழியகடலே, அதனிடையமுதே=வேதமுதலிய கலைஞானங்களின் மிக்க வுணர்ச்சிக்கு ஆழ்ந்தசமுத்திரமே, அச்சமுத்திரத்தின்கண் (சாரூபமாய்த்திரட்டியெடுத்த) அமுதமே, இம்மண்மிசை அடியார்முன்வாழ வந்து=இந்நிலவுலகத்தின்கண் அடியார்கள் முற்பட்டுவாழ எழுந்தருளி; வானோர்தனிநாதன் ஏழிசைமொழியாள்தன் திருவருள்பெற்றனையென்பார்=ஒப்பற்றதேவாதிபரான சிவபிரானதும், ஏழிசைபோல இனியவார்த்தையுடைய உமாதேவியாரதும், ஆகியதிருவருளை நீபெற்றாயென்று துதிப்பார்—எ-று. (௩௧)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியி னொளியே வெளியேவந்
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினையென்பார்.

(இ-ள்.) மறைவளர்திருவே வைதிகநிலையே வளர்ஞானப்பொறையணிமுகிலே=வேதமாகமம் வளர்தற்குரியபெருஞ்செல்வமே, அவ்வேதமாகமம்நின்று நிலவுமோரிடமே, குறையாதுவளருமஞானமாகிய சூல்கொண்டமேகமே; புகலியர்புகலே=சீகாழிப்பதியிலுள்ளோர்க்குப் புகலிடமே, பொருபொன்னித்துறைபெறுமணியே=கரையோடுதிரைபொராநின்ற காவிரியின்துறைபெற்ற ஓர்முத்தமே, சுருதியின் ஒளி இறையவன் உமையாளுடன் வெளிவந்து அருள்தர எய்தினையென்பார்=சுருதிமுடிவின்கண் விளங்கும்பேரொளியாகிய சிவபிரான் உமாதேவியாருடன் திருமேனிகொண்டெழுந்தருளி அருளைச்செய்ய நீ திருவவதாரஞ்செய்தனையென்று துதிப்பார்—எ-று. (௩௨)

புண்ணிய முதலே புனைமணி யரைநா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரோ கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனையென்பார்.

(இ-ள்.) புண்ணியமுதலே புனைமணி அரைநாணொடுபோதும் கண்ணிறைகதிரே=புண்ணியத்துக்குமுதல்வரே, மணிகள்வேய்ந்த அரைநாணொடுவராநின்ற கட்புலனுக்குநிறைந்தவிளஞ்சூரியனே, கலைவளர்மதியே = கலைவளராநின்ற இளந்திங்களே, கவின்மேவும் பண்ணியல்கதியே=செவிக்கு இனிமையைத்தரும் பண்களாநடக்கின்ற மந்தமுதலியகதியே, பருவமது ஒருமூவருடத்தே=ஒருமூன்றுவருடப்பருவத்தில், எண்ணியபொருளாயநின்றவர் அருள்பெற்றனையென்பார்=மேலோர்கருதும் மெய்ப்பொருளாயநின்ற சிவபெருமானது திருவருளை நீபெற்றாயென்றுசொல்லுவார்—எ-று. (௩௩)

வேறு.

என்றினைய பலகூறி யிருக்குமொழி யந்தணரு மேனை யோரு,
நின்றுதுதி செய்தவர்தா ணீண்முடிக்கண் மேலேந்தி நிரந்த போது,

சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந் தெய்வ ஞானக், கன்றினைமுன் புகவெடுத்துப் பியலின்மேற் கொண்டுகளி கூர்ந்து செல்ல.

(இ-ள்.) என்று இனைய பலகூறி இருக்குமொழி அந்தணரும் ஏனையோரும்=என்று இவ்வாறான பலதுதிகளைச்சொல்லி வேதத்தையுணர்ந்த பிராமணரும் ஏனையஅடியார்களும், நின்றுதுதிசெய்து=நின்றுதோத்திரங்கூறி; அவர்தாள் நீண்முடிகண்மேலேந்தி நிரந்தபோது=அவரதுதிருவடிகளை யுயர்ந்த சிரசின்மேல்சூடிச்சூழ்ந்துநின்றகாலத்து; சென்று அணைந்ததாதையார் சிவபாத இருதயர்தாம் = பிள்ளையார்பின்சென்றுவந்த தாதையாராகிய சிவபாதஇருதயர்; தெய்வஞானக்கன்றினைமுன்புகவெடுத்து=தெய்வத்தன்மையான ஞானபோதகத்தை முன்சென்றெடுத்து; பியலின்மேற்கொண்டு களிகூர்ந்துசெல்ல=தோளின்மேல்வைத்துத் தாங்கிக்கொண்டு களிப்படைந்துசெல்ல.

போதகம்-யானைக்கன்று தாம்-அசை. (௧௪)

மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழா மருங்கு சூழ்ந்து, தாமறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந் தன்மை யாலே, பூமறுகு சிவானந்தப் பெருக்காறு போதவதன் மீது பொங்கு, காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்கு பெருங் காட்சித் தாகும்.

(இ-ள்) மாமறையோர்குழாத்தினுடன்=பெருமைபொருந்திய வேதங்களையுணர்ந்த பிராமணருடன், மல்குதிருத்தொண்டர்குழாம் மருங்குசூழ்ந்து=நிறைந்த ஏனையதிருத்தொண்டர்குழாம் அருகிற்சூழ்ந்து, தாம்அறுவை உத்தரீயம்=தாங்கள் உடையின்மேற்சுற்றிய ஆடையினையும் உத்தரீயங்களையும், தனிவிசும்பில் எறிந்து ஆர்க்கும் தன்மையாலே=ஒப்பில்லாத ஆகாயத்தின்கண்வீசி ஆரவாரிக்குந்தன்மையால்; பூமறுகு சிவானந்தப் பெருக்காறு போத=பொலிவுபொருந்திய சீகாழிவீதியானது சிவானந்தமென்னும் பெருக்கையுடைய ஆறுபெருகுங்கால், அதன்மீது பொங்கும் = அவ்வாற்றின்மீதுதிக்கும், காமர்நுரைக்குமிழ்எழுந்து இழிவனபோல விளங்குபெரும் காட்சித்தாகும்=அழகியநுரைகளோடுகூடிய குமிழிகளெழுந்துபின்கீழ்ப்பட்டு அடங்குவனபோலவிளங்குகின்றபெரிய தோற்றத்தையுடைத்தாம்—எ-று.

உத்தரியமென்றது குறுக்கல்விகாரம். (௧௫)

நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமே னெருங்கி யங்கண், மாடுநிறை மடவார்கண் மங்கலமா மொழிகளால் வாழ்த்தி வாசத், தோடுமலி நறுமலருஞ் சுண்ணமுமவெண் பொரியினொடுந் தூவி நிறப்பார், கோடுபயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயருங் கொள்கைத் தாக.

(இ-ள்.) நீடுதிருக்கழுமலத்து நிலத்தேவர்மாளிகைமேல்=செல்வமிக்க சீகாழியின்கணுள்ள பிராமணர்களது திருமாளிகையின்கண்; நெருங்கி அங்

கணமாடுநிறைமடவார்கள்=நெருங்கி அவ்விடத்துப்பக்கங்களில்நிறைந்த பார்ப்பனப்பெண்கள்; மங்கலமாமொழிகளால்வாழ்த்தி=மங்கலத்தன்மையான வாழ்த்தொலிகளால்வாழ்த்தி, வாசத்தோடுமலிநறுமலரும் சுண்ணமும்வெண்பொரியினொடுந்தூவிநிற்பார்=வாசனைபொருந்திய இதழ்கள் நிறைந்த நல்ல பூக்களையும் வாசனைப்பொடியையும் வெள்ளியபொரியுடன்தூவுவார், கோடுயர்வெங்குலவரைமேல் மின்குலங்கள்புடைபெயருங்கொள்கைத்தாக=கொடுமுடிகளையுடைய (இமயாசலமுதலிய) குலமலைகளின்மீது மின்னற்கூட்டங்கள் புடைபெயர்ந்து செல்லுந்தோற்றம்போல—எ-று.

மடவார்கள் கொள்கைத்தாகவாழ்த்தித்தூவிநிற்பாரெனக்கூட்டுக. (௧௬)

மங்கலதூ ரியந்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார் மருங்கு
வேதிப், பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுநிரைப்பார்
போற்றி செய்வார், ரங்கவர்கண் மனத்தெழுந்த வதிசயமும் பெருவி
ருப்புமன்பும் பொங்கத், தங்குதிரு மலிவீதிச் சணைபைநகர் வலஞ்
செய்து சாருங் காலை.

(இ-ள்.) தங்குதிருமலிவீதிச் சணைபைநகர்வலஞ்செய்து சாருங்காலை=நிலைபெற்ற செல்வமிகுந்த வீதியையுடைய சீகாழிநகரத்தைப் பிரதட்சணஞ்செய்துவரும்பொழுது, அங்கவர்கள்மனத்து எழுந்த அதிசயமும் பெருவிருப்பும் அன்பும்பொங்க = அந்நகரத்தி லிருக்கின்றவர்கள் தமதுமனத்தின்கண் தோற்றியவியப்பும் பெரியவிருப்பமும் அன்பும் அதிகரிக்க, மங்கலதூரியந் துவைப்பார் மறைச்சாமம்பாடுவார் = மங்கலவாத்தியங்களை ஒலிப்பாராயும் சாமவேதத்தைப் பாடுவாராயும், மருங்குவேதிப் பொங்குமணிவிளக்கெடுத்துப் பூரணகும்பமும் நிரைப்பார் போற்றிசெய்வார்= வேதிகையின் மருங்கு, பொலிவு பொருந்திய இரத்தினவிளக்குகளை ஏந்திப்பூரணகும்பங்களை நிரைப்பாராயும் துதிசெய்வாராயும்—எ-று.

அங்கவர்பொங்க எனக்கூட்டுக. (௧௭)

தந்திருமா ளிகையினகண் ணெழுந்தருளிப் புகும்பொழுது சங்க
நாதம், மந்தரதுந் துபிமுதலா வளவிலபெரு கொலிதழைப்ப வணைந்
து புக்கார், சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த
துணைவி யாகும், பைந்தொடியா டிருமுலையின் பாலறு மதுரமொழி
ப் பவள வாயார்.

(இ-ள்.) சுந்தரப்பொன்தோணிமிசை இருந்தபிரானுடன் = அழகிய பொற்றோணியில் எழுந்தருளியிருந்த சிவபிரானுடன்; அணைந்ததுணைவியாகும்பைந்தொடியாள் திருமுலையின்பாலறுமதுரமொழிப்பவளவாயார், எழுந்தருளியிருந்ததலைவியாகும் உமாதேவியாரது திருமுலைப்பாலகமழும் மதுரமொழியோடுகூடிய பவளம்போலும் திருவாயையுடைய ஆளுடையபிள்ளையார், தந்திருமாளிகையின்கண் எழுந்தருளிப்புகும்பொழுது சங்கநாதம் அந்தரது

நதுபிமுதலா அளவில்பெருகொலிதழைப்ப அணைந்துபுக்கார்=தமது திருமாளிகையின்கண் எழுந்தருளிப்போங்கால சங்கொலியும் தேவதுந்துபிமுதலிய அளவில்லாத வாத்தியங்களின்பேரொலியும் உண்டாகச்சென்றருளினார்—எ-று.

சுந்தரப்பொன் தோணிமிசை இருந்தபிரான் உடன் அணைந்த துணைவியாகும் பைந்தொடியாள் திருமுலையின் பாலறுமதுரமொழிப்பவளவாயர் சண்பைநகாவலஞ்செய்து சாருங்கால், அங்கவர்கள்துவைப்பாராயும், பாடுவாராயும் நிரைப்பாராயும், போற்றிசெய்வாராயும் மனத்தெழுந்த அதிசயமும் பெருவிருப்பமும் அன்புமபொங்கத் தந்திருமாளிகையின்கண் எழுந்தருளிப் புகும்பொழுது பெருகொளிதழைப்ப அணைந்துபுக்கார் எனக்கூட்டுக.

மேலைச்செய்யுள் முதலிவ்விரண்டுங் குளகம். (௯௮)

தூமணிமா ளிகையினக ணமர்ந்தருளி யன்றிரவு தொல்லைநாத, மாமறைக டிரண்டபெருந் திருத்தோணி மன்னிவீற் றிருந்தாசெய்ய, கார்மருசே வடிக்கமலங் கருத்திலுற விடையறுக காதல்கொண்டு, நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர்கோயில்.

(இ-ள்) தூமணிமாளிகையின்கண் அமர்ந்தருளி=பரிசுத்தமான இரத்தினங்களழுத்திய திருமாளிகையிலெழுந்தருளி, அன்று இரவு தொல்லைநாத மாமறைகள் திரண்ட பெருந்திருத்தோணி மன்னிவீற்றிருந்தார் செய்யகாமருசேவடிக்கமலம்=அந்நாளிரவில் பழமையான பதவாக்கியமென்னும் ஒலிவடிவான அளவில்லாதவேதங்கள் ஓருருவான பெரியதிருத்தோணியில் நிலைபெற்று வீற்றிருந்தருளும் சிவபிரானது சிவந்த அழகியதிருவடித்தாமரைகள், கருத்திலுற இடையறுககாதல்கொண்டு நாமநெடுங்கதிர் உதிப்ப=தமது உள்ளத்தின்கண் நிலைபெறும்படி நீங்காதவிருப்பங்கொண்டு புகழ்பெற்ற மிக்ககிரணத்தையுடைய சூரியன் உதிக்குங்கால், நண்ணினார் திருத்தோணிநம்பர்கோயில்=திருத்தோணியென்னும் ஆலயத்திலெழுந்தருளிய பிரமபுரீசரது திருக்கோயிலைப்பிள்ளையார் அடைந்தார்—எ-று.

கருத்திலுற அன்றிரவு அமர்ந்தருளிக்கதிருதிப்பக்காதல்கொண்டு பிள்ளையார் நம்பர்கோயில் நண்ணினாரெனக்கூட்டுக. (௯௯)

காதலுட னணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற் றிருந்த தங்க, டாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந் தமபால வந்து, போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையுமுன் வணங்கிப்போற்றி, மேதகைய வருள்பெற்றுத் திருக்கோலக் காவிறைஞ்ச விருப்பிற் சென்றார்.

(இ-ள்.) காதலுடன் அணைந்து திருக்கழுமலத்துக்கலந்து வீற்றிருந்த தங்கள் தாதையாரையும்=விருப்பத்துடன் அத்திருக்கோயிலுட் சென்றருளிச் சீகாழியின்கணிங்காது எழுந்தருளி இருந்த தமதுதந்தையாராகிய தோணி

யப்பனாயும்; தம்பால்வெளியேவந்து தாங்கரியமெய்ஞ்ஞானம் போதமுலைசுரந்து அளித்த புண்ணியத்தாயாரையும்=தம்மிடத்துத்திருமேனிதாங்கி வெளிப்பட்டு தரித்தற்கரிய சிவஞானந்தமக்காம்படி திருமுலைப்பாலைச்சுரந்து அளித்தருளிய புண்ணியரூபியாகிய பெரியநாயகியாரையும்; முன்வணங்கிப் போற்றி=அவரதுதிருமுன் நமஸ்கரித்துத்துதித்து; மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக்கா இறைஞ்சவிருப்பிற் சென்றார்=மேன்மையான அவரது திருவருளைப்பெற்றுத் திருக்கோலக்காவென்னுந் தலத்தைத்தரிசிக்க விருப்பத்தோடு மெழுந்தருளினார்—எ-று.

தாங்கரிய என்றது அடங்காமைமேற்று ஞானத்தாலாயவின்பமேன்மேற் கிளைக்குங்கால் அதனையடைந்த உயிருணர்வு அதனுவழித்தன்றித் தன்வழித்தாய நில்லாமையின். போதமெய்ஞ்ஞானம் முலைசுரந்தெனக்கூட்டி மெய்ஞ்ஞானபோதத்தைத் திருமுலைசுரந்தளித்தவெனக் கூறினுமமையும். (௰)

பெருக்கோலிட் டலைபிறக்குங் காவிரிநீர் பிரசமலர் தரளஞ்சிந்த, வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித், திருக்கோலக் காவெய்தித் தேவர்பிரான் கோயில்வலஞ் செய்து முன்னின், றிருக்கோலிட் டறிவரிய திருப்பாத மேத்துவதற் கெடுத்துக்கொள்வார்.

(இ-ள்.) பெருக்கு ஓலிட்டு அலைபிறங்கும் காவிரிநீர்பிரசமலர் தரளஞ்சிந்தி=பெருகுதலுடன் ஆரவாரஞ்செய்து திரைகளையெறியுங் காவிரிநீரானது தேன்பொருந்தியமலர்களையு முத்துக்களையுமொருபாற்சிதற, வரிக்கோலவண்டாட மாதரார்குடைந்தாடுமணிநீர்வாவித் திருக்கோலக்கா எய்தி=இசைபொருந்திய அழகியவண்டுகள் சூழ்ந்தொலிக்கப் பெண்கள் நீரிற்படிந்து முழுகும் அழகிய நீர்வாவிகளையுடைய திருக்கோலக்காவென்னுந்தலத்தையடைந்து; தேவர்பிரான் கோயில்வலஞ்செய்து முன்னின்று=தேவாதிபரான சிவபிரானது கோயிலைவலமாகவந்து திருமுன்னின்று, இருக்கோலிட்டு அறிவரிய திருப்பாதம் ஏத்துவதற்கு எடுத்துக்கொண்டார்=வேதங்கள் ஒலிட்டுத் தாம்பலவாறு துதித்தும் சிறப்பியல்பை ஒருவாற்றானன்றி முற்ற இலக்கணவகையாற் கூறவறியாத திருவடித்தாமரைகளைத் துதிப்பதற்குத் தொடங்கியருள்பவராய்—எ-று. (௰௧)

மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை வேணிமீது, பைந்நிறைந்த வரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித் தருளுவானை, மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வாளைகள்பாய வென்னும் வாக்காற், கைந்நிறைந்த வொத்தறுத்துக் கலைப்பதிகங் கவுணியர்கோன் பாடுங்காலை.

(இ-ள்.) மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை=மெய்ம்மைநிறைந்த செம்பொருளையுடையவேதங்களில் அதிகரித்தபொருளை,



பரமசிவம் திருக்கோலக்காவில் பிள்ளையாருக்குப் பொற்றாளம்
அருள, தேவியார் ஓசைதந்தருளியது

வேணிமீதுபைநிறைந்த அரவுடனே பசுங்குழவித்திங்கள்பரித்தருளுவானை = சடைமுடியின்மேல் படத்தையுடையபாம்புடனே பசிய இளம்பிறையையுந் தரித்தவனை ; மைநிறைந்தமிடறுளானை = ஆலாகலத்தால் கருமையடைந்தகண்டத்தையுடையவனை ; மடையில்வாளைகள் பாயவென்னும்வாக்கால் = மடையில் வாளைபாயவென்னும் பதிகமுதலோடு ; கைநிறைந்த ஒத்தறுத்துக் கலைப்பதிகங்கவுணியர்கோன் பாடுங்கால் = ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரங்களால் நிறைவான (பண்ணிறைந்த) தாளமாத்திரையின் காலத்தைவரையறுத்து வேதமுதலியகலைகளின் பொருளையுடைய திருப்பதிகத்தை அருளிச் செய்யுமிடத்து—எ-று (௱௨)

திருக்கோலக்கா-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீ
ழுடையுங் கொண்ட வுருவமென்கொலோ (௧)

பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவுகோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
யுண்டா னஞ்சை யுலக முய்யவே. (௨)

பூண்நற் பொறிகொ ளரவம் புன்சடைக்
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. (௩)

தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
விழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. (௪)

மயிலார் சாயன் மாதோர் பாகமா
வெயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. (௫)

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
மடிகள் பாத மடைந்து வாழ்மினே. (௬)

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளாற்
றொழலார் பக்கற் றுயர மில்லையே. (எ)

எறியார் கடல்சூ ழிலங்கைக்கோன் றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்தியின்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைக ணீங்குமே. (அ)

நாற்ற மலர்மே லயனு நாகத்தி
லாற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
வேற்றான்பாதந் தேத்தி வாழ்மினே (கூ)

பெற்றமாசு பிறக்குஞ் சமணரு
முற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்கா
பற்றிப் பரவப் பறையும் பாவமே. (ய)

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையா
ருலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே (கக)

திருச்சிற்றம்பலம்

கையதனு லொத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணைகூர்ந்த
செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியசெம் பொற்றாளங்க
ளையரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வளவாலொத்த
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தவன்றே.

(இ-ள்) கையதனால் ஒத்தறுத்துப்பாடுதலும்=தமது திருக்கரங்களினா
ல் தாளத்தைவரையறுத்து (ஆளுடையபிள்ளையார்) பாடாநிற்கவும், கண்ட
ருளிக்கருணைகூர்ந்த=அதனைக்கண்டருளி அவரிடத்துக்கிருபைவைத்த, செ
ய்யசடைவானவர்தம்=சிவந்த சடையையுடைய சிவபிரானது, அஞ்செழுத
தும் எழுதியசெம்பொற்றாளங்கள்=திரு அஞ்செழுத்தையுமெழுதிய செம்
பொன்னாலாகிய தாளங்கள், ஐயரவர் திருவருளால் எடுத்தபாடலுக்கிசைந்
த அளவால் ஒத்த=அச்சிவபிரானது திருவருளினாலதொடங்கிய திருப்பதிக
ங்களுக்குப் பண்ணுக்கிசைந்த முறைமையால் தாளமவரையறுக்க; வையம்
எலாம் உய்யவருமறைச்சிறுவர்கைத்தலத்துவந்த=உலகங்களெல்லாம் உய்யு
ம்பொருட்டு அவதரித்த பிராமணகுலச்சிறுவராகிய ஆளுடையபிள்ளையாரது
திருக்கரத்திலவந்தன—எ-று.

நற்செம்பொற்றாளம் வந்தது என்னும் பாடம். வாசகத்தோடுவாச்சியத் திற்குரிய இயைபுதோன்றச் செய்யசடைவாணர் தம் அஞ்செழுத்தென்றார்.

காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு, வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி மனங்களிப்ப மதுரவாயில், லேழிசையுந் தழைத்தோங்க வின்னிசைவண் டமிழ்ப்பதிக மெய்த்தப்பாடிக், தாழுமணிக் குழையார்முன் றக்கதிருக் கடைக்காப்புச் சாத்தி னின்றார்.

(இ-ள்) காழிவரும்பெருந்தகையார் கையில்வரும் திருத்தாளக்கருவி கண்டு=சீகாழியில் அவதரித்த ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரத்தில்வந்த திருத்தாளமாகிய கருவியைக்கண்டு; வாழியதந்திருமுடிமேல்கொண்டருளி=வாழ்வடைந்த தமது திருமுடியின்மேற்சூடியருளி; மனங்களிப்ப மதுரவாயில் ஏழிசையுந்தழைத்தோங்க=தமது மனங்களிப்படையும்படி மதுரமான திருவாயில் நின்றும் ஏழிசைகளுமவழுவின்றி நிரம்பியோங்க; இன்னிசைவண்டமிழ்ப்பதிகம் மெய்த்தப்பாடி=இனிய இசையையுடைய வளமநிறைந்த தமிழ்ப்பதிகத்தைப் பொருந்தப்பாடியருளி, தாழுமணிக்குழையார்முன் தக்க திருக்கடைக்காப்புச்சாத்தி நின்றார்=தொங்குகின்ற அழகியகுண்டலத்தையுடைய சிவபிரானார் திருமுன்னேபொருந்திய திருக்கடைக்காப்புச் சாத்தி நின்றருளினார்—எ-று.

மாத்திரையை வரையறுத்தல் தாளம். அதுகருவிக்குமானமையிற் திருத்தாளக்கருவியென்றார்.

திருக்கடைக்காப்பாவது திருப்பதிகங்களினிறுதியில் தமது திருப்பெயரால் அமைத்தருளிய திருப்பாடல். (௱௪)

உம்பருலகதிசயிப்ப வோங்கியநாதத்தளவி னுண்மை நோக்கித், தும்புருநாரதர்முதலாஞ் சுருதியிசைத் துறையுள்ளோர் துதித்து மண்மேல், வம்பலர்மா மழைபொழிந்தார் மறைவாழ வந்தருளு மதலையாரும், தம்பெருமா னருள்போற்றி மீண்டருளிச் சண்பைநகர் சாரச் செல்வார்.

(இ-ள்.) உம்பர் உலகு அதிசயிப்ப ஓங்கியநாதத்தளவின் உண்மைநோக்கி=விண்ணுலகினகண் உள்ளார் வியக்க உயர்ந்தபதிகவிசையின் அளவினது உண்மையைப்பார்த்து; தும்புருநாரதர் முதலாம்சுருதி இசைத்துறையுள்ளோர்துதித்து=தும்புரு நாரதர்முதலிய சுதியோடுகூடிய இசைநூலில்வல்லவர்கள் ஆளுடைய பிள்ளையாரைவாழ்த்தி; மண்மேல்வம்பலர்மாமழை பொழிந்தார்=நிலவுலகின்மேல் வாசனைபொருந்திய பூமழையைப்பொழிந்தார்கள், மறைவாழவந்தருளுமதலையாரும்=வேதங்கள்வாழ அவதரித்த ஆளுடையபிள்ளையாரும்; தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச்சண்பைநகர்சாரச்செல்வார்=திருக்கோலக்காவிலெழுந்தருளிய சத்தபுரியீசனாரது தி

த்து திருக்கோலக்காவினின்று மீண்டருளிச் சீகாழிநகரத்தையடையும்படி யெழுந்தருளபவராய—எ-று.

உண்மை என்பது மந்தம், மத்திமம், தாரமுதலியவற்றினசாதித்தனமை.

செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத் துடனடந்து செல்லும் போது, தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேற் றரித்துக் கொள்ள, அங்கவர்தந் தோளின்மிசை யெழுந்தருளி யணைந்தார்சூழ்ந் தமரரேத்துந், திங்களணிமணிமாடத் திருத்தோணி புரத்தோணிச் சிகரக்கோயில்.

(இ-ள்.) செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத்துட னடந்துசெல்லும்போது=சிவந்த தாமரைமலரையொத்த திருக்கரத்திலேந்திய திருத்தாளத் துட னடந்தெழுந்தருளுங்கால், தங்கள்குலத்தாதையார் தரியாதுதோளின் மேல் தரித்துக்கொள்ள=தங்கள் குலத்துக்குரிய தந்தையராகிய சிவபாத இத யா பிள்ளையார் பூமியிலெழுந்தருளுவதைச் சகிக்காது தமது திருத்தோளின் மேல் தாங்கிக்கொண்டுசெல்ல, அங்கவர்தம் தோளின்மிசை எழுந்தருளி அ ணைந்தார்=அச்சிவபாத இதயரது திருத்தோளிலெழுந்தருளி அடைந்தருளி னார்; சூழ்ந்து அமரர் ஏத்தும் திங்கள் அணிமணிமாடத் திருத்தோணி புரத் தோணிச் சிகரக்கோயில்=வலஞ்செய்து தேவர்கள் துதிக்குஞ் சந்திரன் தவ ழும் அழகியமணிகளையுடைய மாடங்களநெருங்கிய சீகாழியில் திருத்தோணி யென்னுஞ் சிகரத்தையுடைய கோயிலை—எ-று.

மறைவாழவந்தருளும் மதலையார்செல்வாராயக் கோயிலை யணைந்தாரெ னக்கூட்டுக. (௬௬)

திருப்பெருகு பெருங்கோயில் சூழ்வலங் கொண்டருளித் திரு முன்னின்றே, யருட்பெருகு திருப்பதிக மெடுத்தோதுங் கடையாக்கி யவற்று ளொன்று, விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதற், பொருத்தமுற வருள்பெற்றுப் போற்றி யெடுத் தருளினார் பூவார்கொன்றை.

(இ-ள்.) திருப்பெருகு பெருங்கோயில் சூழ்வலங்கொண்டருளி=செல் வமிக்க பெரியதிருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்தருளி, திருமுன்னின்று அருட்பெருகு திருப்பதிகம் எடுத்தோதுங்கடையாக்கி=சிவபிரானது சந்நிதி யில்நின்று திருவருள்நிறைந்த திருப்பதிகமெட்டையுங் ஒரு கட்டளையாக்கி; அவற்றுள் ஒன்று விருப்புறுபொன் திருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதல்பொருத்தமுற அருள்பெற்று=அவவெட்டுள் ஒன்றை விருப்பமி க்கபொன்னுலகைய திருத்தோணியிலெழுந்தருளிய சிவபிரானைப்பாட அடை கின்ற விருப்பினது பொருத்தமாக உண்டாக அவரது திருவருளைப்பெற்று; போற்றி எடுத்தருளினார் பூவார்கொன்றை=துதித்துப் பூவார்கொன்றையெ ன முதலில் அடியெடுத்துப் பாடியருளினார்—எ-று.

அருட்பெருகு திருப்பதிகமெட்டொரு கட்டளையாக்கி என்றது தக்கரா கத்துக்குரிய கட்டளை ஏழனுள் திருக்கோலக்காவிலருளிய பதிகமொன்று நீக் கிப்பூவார்கொன்றை முதல ஒருவிகற்பமான செய்யுளையுடைய திருப்பதிக மெட்டினை ஓர் கட்டளையாக்கி என்றறிக. (௭௭)

எடுத்ததிருப் பதிகத்தி னிசைதிருத்தா ளத்தினொ லிசையவொத்தி யடுத்தநடை பெறப்பாடி யாவமுற வணங்கிப்போந் தலைநீர்ப்பொ ன்னி, மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ மழவிளங்கோ லத்துக்காட்சி கொடுத்தருளி வைகினார் குறைவிலாநிறைஞானக் கொண்டலார்தாம்.

இ-ள்.) குறைவு இலா நிறை ஞானக்கொண்டலார்=குறைபாடின்றி நிறைந்த ஞானமுகிலாகிய ஆளுடையபிள்ளையார்; எடுத்ததிருப்பதிகத்தின் இசை திருத்தாளத்தினொலி இசைய ஒத்தி=தரமபாட எடுத்தருளிய திருப்பதி கத்தின் ஓசையைத்திருத்தாளக்கருவியினொலி பொருந்தவளையறுத்து; அடுத்த நடைபெறப்பாடி=பொருந்திய அப்பதிகத்துக்கிசைந்த பண்பொருந்தும்படி பாடியருளி, ஆர்வமுறவணங்கிப்போந்து=அன்போடுவணங்கிப்போய்; அ லைநீர்ப்பொன்னி மடுத்தவயல்பூந்தராயவர்வாழ=திரைகளையுடைய நீர்மிக்க காவிரியைத்தன்னுட்கொண்ட வயலையுடைய சீகாழிப்பதியின்கண் உள்ளார் வாழும்படி; மழவிளங்கோலத்துக் காட்சிகொடுத்தருளிவைகினார்=இளம்ப ருவத் திருக்கோலத்திற்கியைந்த காட்சிகொடுத்துத் திருமாளிகையிலெழுந் தருளினார்—எ-று. (௭௮)

சீகாழி - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்.

பூவார் கொன்றைப் புரிபுன் சடையீச
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே.
காரார் வயல்சூழ் காழிக்கோன் றனைச்
சீரார் ஞான சம்பந்தன் சொன்ன
பாரார் புகழப் பாடல் வல்லவ
ரார்ரா வானத் தினிதா யிருப்பரே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம்-திருத்தாளச்சதி-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்றவும்பரப்பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ், சிந்தித்தேவந்திப்பச்சிலம் பின் மங்கை தன்னொடுஞ் சேர்வார்நாணு ணீள்கயிலைத் திகழ்தரு பதி

சசெதலாஞ், சந்தித்தே யிந்தப்பாச சனஙகணினறுதஙகணற ருமே காஞ வாழவாரத தகவுசெய தவனதிடங, கநததகா லெண்டிககுங கமழுநதிலஙகு சந்தனக் காடாாபூவாா சீாமேவுங கழுமல வளஙகோ.

கஞசததே னுண்டிடடே களிததுவண்டு செண்பகக காவேதே வேபோாருங கழுமல நகரிறைமையத, தஞசததாா சணபைககோன சமைதத நறக லைசதுறை தாமேபோலவாா தேனோாா தமிழவிா கன மொழிக, ளெஞசததே வெனறிககே யிமைத்திசைத்தமைததகொண டேழேயேழே நாலேழுன றியலிசை யிசையியலவா, வஞசததே வி னறிககே மனஙகொளப பயிறறுவோா மாாவேசோவாள வானோசீா மதிநுதன் மடவரலே.

திருசசிறறமபலம.

அநநிலையி லாளுடைய பிளளையாா தமைமுனன மளிததநதா யாா, முனனுதிகக முபனறதவத திருநனனி பளளிமுதன மறையோ ரெலலா, மனனுபெரு மகிழசசியுடன மஙகலதூ ரியநதுவைபப ம றைகளோதிக், கனனிமதிற சண்பைநகா வநதணைநது கவுணியாகோ ன் கழலிறைஞ்சுநதாா.

(இ-ள்.) கழுமலக்கோன்=சீகாழித்தலைவராகிய அவ்வாளுடைய பிள்ளையார், செய்யசடையார் திருவேட்களஞ்சென்று=சிவந்த சடையையுடைய பாசுபதேசுவரரது திருவேட்களமென்னுந் தலத்தையடைந்து, கைதொழுது சொற்பதிகம்பாடி=கைகூப்பிவணங்கிச் சொல்நிறைந்த திருப்பதிகம் பாடியருளி, வைகியருளுமிடம் அங்காக=தாம் இருந்தருளுமிடம் அத்தலமாகக் கொண்டு, மன்றுடைய ஐயன் திருக்கூத்துக்கும்பிட்டு அணைவுறுநாள்=கனக சபையில் ஆனந்ததாண்டவம்புரிந்தருளும் நடேசப்பெருமானது திருநடனத்தை நாடோறும்வணங்கி வருநாளில்—எ-று (கசுசு)

திருவேட்களம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்

அந்தமு மாதியு மாகியவண்ண லாரழ லங்கை யமர்ந்திலங்க, மந்த முழவ மியம்ப மலைமகள் காண நின்றாடிச், சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதி யம்மய லேததும்ப, வெந்தவெண் ணீறுமெய் பூசும்வேட்கள நன்ன கரே

விண்ணியன் மாடம் விளங்கொளி வீதி வெண்கொடி யெங்கும் விரிந்திலங்க, நண்ணிய சீர்வா காழி நற்றமிழ் ஞான சம்பந்தன், பெண்ணின லாளொரு பாக மமர்ந்து பேணிய வேட்கள மேன்மொழிந்த, பண்ணியல் பாடல்வல் லார்கள் பழியொடு பாவ மிலாரே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - பாசுபதேசுவரர். தேவியார்-நல்லநாயகியம்மை

கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி வினைகொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
யம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார்.

(இ-ள்.) கைம்மான்மறியார் கழிப்பாலையுள்ளணைந்து=திருக்கரத்திலமான்கன்றையேந்திய பாலவண்ணநாதர் எழுந்தருளிய திருக்கழிப்பாலை யென்னுந் தலத்தையடைந்தருளி; மெய்ம்மாலை சொற்பதிகம்பாடி=மெய்நிறைந்த சொல்லானாய திருப்பதிகமாலையைத் திருவாய்மலர்ந்தருளி, வினைகொன்றை

ச்செம்மாலை வேணித்திருவுச்சி மேவியுறை அம்மானைக்கும்பிட்டு அருந்தமி ழ்ப்பாடினார்=வாசனைபொருந்திய கொன்றைமலராலாகியமாலையைச்சிவந்த சடைமுடியிற் றரித்த திருநெல்வாயிலில் திருவுச்சியென்னும் ஆலயத்தி லெழுந்தருளிய உச்சேசரைத்தொழுது அரிய திருப்பதிகத்தையும் பாடி யருளினார்—எ-று. (கசஎ)

திருக்கழிப்பாலை-பண்-இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

புனலா டியபுன் சடையா யரணம்
மனலா கவிழித் தவனே யழகார்
கனலா டலினாய் கழிப்பா லையுளா
யுனவார் கழல்கை தொழுதுள் குதுமே.

கழியார் பதிகா வலனைப் புகலிப்
பழியா மறைஞா னசம்பந் தன்சொல்
வழிபா டிவைகொண் டடிவாழ்த் தவலார்
கெழியா ரிமையோ ரொடுகே டிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பால்வண்ணநாதர் தேவியார்-வேதநாயகி.

திருப்பதிகம்—அ

பாடும் பதிகமிசை யாழ்ப்பா ணரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை யந்தணர்கண் ணீண்மன்று
ளாடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார்.

(இ-ள்) பாடும்பதிக விசையாழ்ப்பாணரும் பயிற்றிநாடுஞ்சிறப்பெய்த= தாம் அருளிச்செய்கின்ற திருப்பதிகங்களி னிசையைத் திருநீலகண்ட யாழ்ப் பாணரும் யாழினிடத்துச் சேர்த்துவாசித்து யாவராலும் அதிகத்தக்க சிறப்பினையடைய, நாளுநடம்போற்றுவார்=நாடோறுந் திருநடனத்தைத் துதிக்குங்கருத்துடைய பிள்ளையார், நீடுந்திருத்தில்லை அந்தணர்கள்=செல்வ மிகுந்த தில்லைவாழந்தணர்கள், நீண்மன்றுளாடுங் கழற்கணுக்கராம்பேறு அதி சயிப்பார்=உயர்ந்தகனகசபையின்கண் ஆடியருளும் குஞ்சிதபாதத்திற்குத் தி ருவணுக்கராயிருக்கும் பேற்றினைத் திருவுளத்திற்கருதி அதிசயமடைவாராயி னார்—எ-று. (கசஅ)

ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுந்நினைந்தே
யோங்கி யெழுங்காத லொழியாத வுள்ளத்தார்
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண்.

(இ-ள்.) ஆங்கவர்தஞ் சீலத்தன்மையும் நினைந்து = அங்கு வசிக்கும் அத்தில்லைவாழந்தணர்களது ஒழுக்கமிகுதியையுங் கருதி, ஓங்கியெழுங்காதல் ஒழியாதவுள்ளத்தார் = மிக்கெழுகின்ற பெருவிருப்பானது நீங்காதவுள்ளத்தை யுடைய ஆளுடையபிள்ளையார்; தேன்கமழுஞ்சோலைத் திருவேட்களங்கடந்து = தேனானது கமழ்கின்றசோலையினையுடைய திருவேட்களத்தினின்றும் நீங்கி, பூங்கிடங்குசூழ் புலியூர்ப்புக்கணையும் போழ்தின்கண் = மலர்கணிறைந்த அகழ்சூழ்ந்தசிதம்பரத்தை அடைந்தருளுங்காலத்து—எ-று (கசுக)

அண்டத் திறைவ ரருளா லணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களுந்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார்

(இ-ள்.) அண்டத்திறைவர் அருளால் அணிதில்லை முண்டத் திருநீற்றுமூவாயிரவர்களும் = அண்டங்களுக்கெல்லாம் முதல்வராகிய சிவபிரானாரது திருவருளினால் அழகிய தில்லையின்கண் வாழுந் திருநீற்றுப் புண்டரமணிந்த தில்லைவாழந்தணர்கள் யாவரும், தொண்டத்தகைமைக்கணநாதராய்த்தோன்றக்கண்டு = தொண்டின் தன்மைபூண்டொழுகுஞ் சிவகணநாதராயக் காணவ தனைப்பார்த்தருளி, அப்பரிசு பெரும்பாணர்க்குங்காட்டினார் = அவர் அத்தன் மையாதலைத் திருநீலகண்ட பெரும்பாணர்க்குங் காட்டியருளினார்—எ-று.

செல்வம் பிறிவறியாத் தில்லைவா ழந்தணருஞ்
செல்லையில்சீர்ச் சண்பை யிளவே றெழுந்தருளி
யொல்லை யிறைஞ்சாமுன் றாமு முடனிறைஞ்சி
மல்ல லணிவீதி மருங்கணைய வந்தார்கள்.

(இ-ள்.) செல்வம்பிறிவறியாத் தில்லைவாழந்தணரும் = திருவருட்செல்வத்தினின்றும் நீங்காத தில்லைமூவாயிரவர்களும், எல்லையில்சீர்ச் சண்பையி ளவேறு எழுந்தருளி = அளவுபடாத சிறப்பினையுடைய சீகாழியில் அவதரித்த இளஞ்சிங்கம்போலும் ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளி, ஒல்லையிறைஞ்சா முன்தாமும் உடனிறைஞ்சி = விரைந்து வணங்குதற்குமுன் தாங்களுமுட னேவணங்கி, மல்லல் அணிவீதிமருங்கு அணையவந்தார்கள் = வளப்பமிக்க அழகிய திருவீதியின்கண் பிள்ளையாரது இருமருங்குஞ்சூழவந்தார்கள்—எ-று.

பொங்கி யெழுங்காதல் புலன்கப் பூசுரர்தஞ்
சிங்க மனையார் திருமுடியின் மேற்குவித்துப்
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்குஞ்
செங்கையொடுஞ் சென்று திருவாயி லுட்புக்கார்.

(இ-ள்.) பொங்கியெழுங்காதல் புலன்கப் பூசுரர்தம் சிங்கமனையார் = மிக்கெழுகின்ற விருப்பமே தம்மைச் சிவபிரானை அடைவிக்கும் வாயிலாகப் பிராமணர்குலத்துக்குத் தலைமையான சிங்கத்தையொத்த ஆளுடையபிள்ளை

யார்; திருமுடியின்மேற்குவித்தப பங்கயத்தின் செவ்விபழித்து வனப்பு ஒங்கும=தமது திருமுடியின்மேற் குவிக்கப்பட்டுத தாமரையினது பொலிவை இகழ்ந்து அழகுவாய்ந்த, செங்கையொடுஞ்சென்று திருவாயில் உட்புக்கார்=திருக்கரங்களோடு மெழுந்தருளித் திருக்கோபுரத்தின் திருவாயிலினுள்ளே புகுந்தருளினார்—எ-று. (கஎஉ)

ஒன்றிய சிந்தை யுருக வுயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு குடமிட்டு
மன்று ணிறைந்தாடு மாணிக்கக் கூத்தரெதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுப்படிக்கீழ்

(இ-ள்) ஒன்றியசிந்தையுருக உயர்மேருக்குன்று அனைய பேரம்பல மருங்கு குமபிட்டு=ஒருப்பட்ட தமது திருவுள்ளம் உருகும்படி உயர்ந்த மேருமலையையொத்த பேரம்பலத்தினை வணங்கி, மன்றுள்நிறைந்தாடு மாணிக்கக்கூத்த ரெதிர்சென்றணைந்து=கனகசபையினகண்ணே நிறைந்து ஆடியருளிய மாணிக்கம்போன்ற நடேசப்பெருமானது திருமுன்னே சென்றருளி; தாழ்ந்தார் திருக்களிற்றுப்படிக்கீழ்=திருக்களிற்றுப்படிக்கீழேவிழுந்து பணிந்தருளினார்—எ-று (கஎ௩)

வேறு

ஆடி னாயநறு நெய்யொடு பாற்றயி ரெனறெடுத்த தாவத்தாற்
பாடி னார்பின்னு மப்பதி கத்தினிற் பரவிய பாடலொன்றில்
னீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக் கண்டவந் நிலையெல்லாங்
கூடு மாறுகோத் தவர்தொழு தேத்துசிற் றம்பல மெனக்கூறி.

(இ-ள்) ஆடினாய நறுநெய்யொடு பாற்றயிர் எனறெடுத்து ஆவத்தாற் பாடினார்=ஆடினாய நறுநெய்யொடு பாற்றயிரென அடியெடுத்து அன்போடு திருப்பதிகத்தைப்பாடியருளினார், பின்னும் பதிகத்தினில் பரவியபாடல் ஒன்றில்=பின்னும் அத்திருப்பதிகத்திலுள்ள கட்டளையிட்டருளிய மூன்றாவதுபாசுரத்தில், நீடுவாழ் தில்லைநானமறையோர்தமைக்கண்டவந்நிலையெல்லாம் கூடுமாறு கோத்து=செல்வமிக்கதில்லைமூவாயிர மறையவர்களைச் சிவகணநாதராகத்தாம் பார்த்தருளிய அவ்வடையாளங்களையெல்லாம் (நீலத்தாற் கரியமிடற்றார், நல்லநெற்றிமேலுற்ற கண்ணினார், பற்றுசூலத்தார், சுடலைப்பொடிநீறணிவார், வார்சடையார்) எனப்பொருந்துமாறு சேர்த்து, அவர் தொழுதேத்து சிற்றம்பலமெனக்கூறி=அச் சீலமுடையார்கள் வணங்கித்துதிக்கும் சிற்றம்பலமெனத் திருவாய்மலர்ந்தருளி—எ-று. (கஎ௪)

திருக்கோயில்-பண-காந்தாரபஞ்சமம

திருச்சிற்றம்பலம்.

ஆடி னாயநறு நெய்யொடு பாற்றயி ரந்தணர்பிரியா தசிற்றம்பல நாடி னாயிட மாநறுங் கொன்றை நயந்தவனே, பாடினாயமறையோடு, பல கீதமும் பலசடைப்பனி காலகதிர் வெண்டிங்கள், சூடினாயருளாய சுருங்க வெம தொல்வினையே

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR MADRAS-600 090

நாறு பூமபொழி னண்ணிய காழியு ளுன்மறைவலல ஞானசம் பந்தன், ஊறுமினறமி ழாலுயாந தாருறை திலலைதனனு, ளேறு தொல புக ழேந்து சிற றமபலததீச னையிசை யாறசொனன பத திவை, கூறு மாறுவல லாருயாந தாரொடுங கூடுவரே.

திருசசிறறமபலம

இனன தனமையி லினனிசைப பதிகமுந திருககடைக காப பேதநி, மனனு மானநத வெளளததிற றிளைததெதிா வநதுமுன னினறுடும, பின்னு வாாசடைக கூததாபே ரருளபெறப பிரியாத விடைபெறறுப, பொனனி னமபலஞ சூழநதுதாழந தெழுநது போந தணைநதனா புறமுனறில.

(இ-ள்) இன்னதனமையில இனனிசைபபதிகமும திருககடைககாபபே தநி=இததனமையால இனிய இசையையுடைய திருபபதிகததையும அதிலதி ருககடைககாபபையுமபாடியருளி, மனனுமஆனநதவெளளததிறறிளைதது எதி ாவநது முனநினறுடும=நிலைபெறற பேரானநத வெளளததிலபடிநது தமது திருககண காணவநது எதிரேநினறு ஆனநதநிருததஞ செயதருளும, பின னுவாாசடைககூததாபோ அருளபெறப பிரியாத விடைபெறறு=பினனிய நீ ணடசடாமகுடததையுடைய நடேசபபெருமானது மிககதிருவருளைபபெறற காரணத்தால அவரினினறும பிரியாத விடைபெறறு, பொனனின் அமப லஞ்சூழநது தாழநது எழுநதுபோநது அணைநதனாபுறமுனறில=கனகசபை யைப பிரதடசணஞ் செயது வணஙகியெழுநது திருமுனறிலின பககலில அ டைநதருளினா—எ-று (கஎடு)

அபபு றததிடை வணஙகியங கருளுட னணிமணித திருவாயில பொறபு றநதொழு தெழுநதுடனபோதரப போறறியபுகழபபாணா, நறப தநதொழு தடியனேன பதிமுத னதிநிவாக கரைமேய, வொப பிருனஙகள பணிநதிட வேணடுமென றுரைசெய வதுநோவாா.

(இ-ள) அபபுறத்திடைவணஙகி அஙகு அருளுடனஅணிமணிததிருவா யில பொறபுறத தொழு தெழுநதுடன போதா=அவவிடதது நினறு வணங கி அஙகே சிவபெருமான திருவருளோடும அழகிய மணிகளிழைதத திருவ ணுககன திருவாயிலை நனகுக வணஙகியெழுநது திருநீலகணட யாழபபாண ருடன கோயிலுள புறமபே யெழுநதருள, போறறிய புகழபபாணா நறபத ந்தொழுது=தமமை விருமபிய புகழையுடைய திருநீலகணட யாழபபாணா ஆருடைய பிளளையாாது நனமைமிகக திருவடிகளைவணஙகி; அடியனேன பதிமுதல நதிநிவாககரைமேய=அடியேனது ஜனன ஆூராகிய திருவெருககத தமபுலியூா முதலாகநிவாவென்னும நதியினகரையிறபொருநதிய; ஒபபிலதா னஙகள பணிநதிடவேண்டுமெனறு உரைசெய அதுநேர்வாா = ஒப்பிலலாத

திருப்பதிகளை வணங்கவேண்டுமென்று விண்ணப்பிக்க அதற்கு உடன்பட்ட ஆளுடையபிள்ளையார்—எ-று.

இக்காலத்து நிவாவென்பது வடவெள்ளாறென்று வழங்கும். (கஎசு)

பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக் குடதிசைமிசைப் போந்து, தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந் தவமுனி வருஞ் செல்லச், செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணரு ருடன்சேர, மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன் வரவந்தார்.

(இ-ள்) பொங்குதெண்டிரைப்புனிதநீர் நிவாக்கரைக் குடதிசைமிசைப் போந்து=பொங்குகின்ற தெளிய அலைகளோடுகூடிய பரிசுத்தமான நீரையுடைய நிவாவென்னு நதியின் கரையின்மேற்றிசையில் எழுந்தருளி, தங்குந்தையார் உடன் பரிசனங்களும் தவமுனிவரும் செல்ல=தம்மைவிட்டு நீங்காத தந்தையாராகிய சிவபாத இதயரோடு அடியார் திருக்கூட்டமும் தவத்தையுடைய முனிவர் கூட்டமுஞ் சூழ்ந்துவாராநிற்க, செங்கையாழ் திருநீலகண்டப்பெரும்பாணர் உடன்சேர=சிவந்த கையில் யாழேந்திய திருநீலகண்ட யாழ்ப்பாணரோடுகூட, மங்கையார்புகழ் மதங்கசூளாமணியாருடன் வர=பெண்கள்புகழும் மதங்கசூளாமணியாரு முடன்வர, வந்தார்=எழுந்தருளிவந்தார்—எ-று

அது நோவார், எழுந்தருளிவந்தாரெனக்கூட்டுக. (கஎஎ)

இருந்த டங்களும் பழனமுங் கடந்துபோ யெருக்கத்தம் புலியூரின், மருங்கு சென்றுற நீலகண் டப்பெரும் பாணனார் வணங்கிக், கார், நெருங்கு சோலைசூ ழிப்பதி யடியனேன் பதியென நெடிதின்புற், றருங்க லைச்சிறு மழவிளங் களிறனா ரங்கணைந் தருள்செய்வார்.

(இ-ள்) இருந்தடங்களும் பழனமுங்கடந்து போய் எருக்கத்தம்புலியூரின்மருங்குசென்றுற=பெரியவாவிகளையும் வயல்களையுங் கடந்து போய்த் திருஎருக்கத்தம்புலியூரின் பக்கலிற்சென்றருள, நீலகண்டப்பெரும்பாணனார் வணங்கி=திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரைவணங்கி, கார்நெருங்கு சோலைசூழிப்பதியடியனேன்பதியென=மேகம்நெருங்கியசோலைசூழ்ந்த இத் தலம் அடியேனுக்கு ஜன்னஸ்தலமென்றுகூற, நெடிதின்புற்று அருங்கலைச் சிறுமழவிளங்களிறனார்=மிகமகிழ்ச்சி கூர்ந்து அரியவேதமுதலிய கலைகளில் வல்லசிறிய இளங்களிற்றினை யொத்த பிள்ளையார், அங்கணைந்து அருள்செய்வார்=அத்தலத்தை அடைந்தருளி (திருநீலகண்ட யாழ்ப்பாணரை நோக்கி) அருளிச்செய்வாராயினார்—எ-று. (கஎஅ)

ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவின்மா தவமுன்பு, செய்த வாறெனச் சிறப்புரைத் தருளியச் செழும்பதி யிடங்கொண்ட, மைகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பா, ருய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகமங் கிசையுட னுரைசெய்தார்.

(இ-ள்.) ஐயர் நீர் அவதரித்திட இப்பதி அளவில மாதவமுன்புசெயத வாறெனச் சிறப்புரைததருளி=ஐயரே நீர் திரு அவதாரஞ்செயய இததிருபப தி அளவிலலாத பெரிய தவததை முனபு செயதவகைமை நன்கிருநததென அவரால் அததலததிற காஞ்சிறப பினைககூறியருளி, அசசெழுமபதி இடங கொணடமை கொளகணடா தஙகோயிலினுடபுகரு=அநதச செழுமையானதி ருபபதியை இடமாகக கொணடருளிய கரியகணடததை யுடைய சிவபிரான து திருககோயிலி னுளளேபுகுநது, வலஙகொணடு வணஙகிபபாருயய வநத வா செழுநதமிழப பதிக மஙகு இசையுடன் உரைசெயதாா=பிரதடசணஞ செயது வணஙகி உலகஙகளெலலா மீடேற அவதரிதத பிளளையாா வளபபமி கக திருபபதிகததை இசையுடன அருளிசசெயதாா—எ-று. (களக)

திருஎருககததமபுலியூா-பண்-குறிஞசி.

திருசசிறறமபலம

படையாா தருபூதப பகடா ருரிபபோாவை
யுடையா னுமையோடு முடனு யிடுகஙகைச
சடையா னெருககததம புலியூாத தகுகோயில
விடையா னடியேதத மேவா வினைதானே

எரா ரெருககததம புலியூ ருறைவானைச
சீராா திகழகாழித திருவாா சமபநதன
ஆரா வருநதமிழ மாலையிவை வலலாா
பாரா ரவரேதபப பதிவா னுறைவாரே

திருசசிறறமபலம

சுவாமிபெயா - நீலகணடநாயகா. தேவியாா - நீலமலாககணணமமை.

திருபபதிகம—௪

அஙகு நின்றெழுந தருளிமற றவருட னமபொனமா மலைவலலி, பஙகாதாமினி துறையுநற பதிபல பரிவொடும பணிநதேததித, துஙக வணடமிழத தொடைமலாபாடிப போயநதொலலை வெஙகுருவேந தா, செஙக ணேறறவா திருமுது குனறினைத தொழுதுசென றணை கினறாா.

(இ-ள்) அஙகு நின்றெழுநதருளி மறறவருடன அமபொனமாமலை வ ல்லிபஙகர்தாம=அத்தலததினினறுமெழுநதருளித திருநீலகணடயாழப்பாண ரோடு இமயமலையின் புததிரியாகிய உமாதேவியை யிடபபாகததிலுளள சிவ பிரானாா; இனிதுறையும நறபதி பல பரிவொடும பணிநதேததி=எழுநதருளி ய திருஎருககததமபுலியூருககுத தெனகிழககிலுளள கூடலையாறறூாமுதலிய ஸதலஙகளை அனபுடனே வணஙகித துதிதது, துஙகவணடமிழத தொடை மலா பாடிப்போய=வணமை பொருநதிய மேலாகிய தமிழச்சொன மலரால

தொடுத்த பதிகமாலையையவ்விடங்களிற் பாடிச்சென்று; தொலைவில்வெங் குருவேந்தர் = பழைய சீகாழிக்குத்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார், செங்கணேற்றவர் திருமுதுகுன்றினைச் சென்று எதிர் அணைகின்றார் = சிவந்த கண்ணையுடைய இடபத்தை வாகனமாகக் கொண்ட பழமலைநாத ரெழுந்தருளிய விருத்தாசலத்தைக் குறித்துச் சென்று அங்கெழுந்தருளுகின்றாராய் — எ-று.

மொய்கொண்மாமணி கொழித்துமுத்தாறுசூழ் முதுகுன்றை யடைவோமென, றெய்துசொன்மலர் மாலைவண்பதிகத்தை யிசை யொடும்புனைந்தேத்திச், செய்தவத்திரு முனிவருந் தேவருந் திசை யெலாநெருங்கப்புக, கையர்சேவடி பணியுமப் பொருப்பினி லாதர வுடன்சென்றார்.

(இ-ள்) மொய்கொள்மாமணி கொழித்துமுத்தாறுசூழ் முதுகுன்றை யடைவோமென்று = கூட்டமான பெரியமுத்துக்களைக் கொழித்து மணிமுத்தா நதிசூழும் திருமுதுகுன்றை யடைவோமென்று, எய்து சொன்மலர்மாலை வண்பதிகத்தை இசையொடும் புனைந்து = ஏத்தியபொருளமைந்த சொன்மலரா லாகிய வளம்பொருந்திய பதிகமாலையை யிசையுடனே பாடித்துதித்து; செய்தவத் திருமுனிவரும் தேவருந் திசையெலாம் நெருங்கப்புக = செய்யுந் தவத்தையுடைய அழகிய முனிவர்களுந் தேவர்களுமெல்லாத் திசைகளிலும் நெருங்கப்புகுந்து, ஐயர் சேவடிபணியும் அப்பொருப்பினில் ஆதரவுடன் சென்றார் = பழமலைநாதரது திருவடிகளை வணங்கும் அத்திருமுதுகுன்றினில் விருப்பத்துடன் சென்றருளினார் — எ-று.

வெங்குருவேந்தர் அணைகின்றாராய்ச் சென்றாரென முடிக்க.

முதுமை = பழமை. முதுகுன்றென்றது பிரளயத்தும் அழியாதிருக்குங் குன்றெனப்போதரும். இதனை — "மூடுகொண்மூடும் வெள்ளத்துயர்ந்தது முதுகுன்றே" என்னுந் திருக்கடைக் காப்பானுணர்க. (கஅக)

திருமுதுகுன்றம் - பண் - நாட்டபாஷை.

திருச்சிற்றம்பலம்.

மத்தா வரைநிறுவிக் கடல்கடைந்த விடமுண்ட
தொத்தார் தருமணிநீண் முடிச்சுடர்வண் ணனதிடமாங்
கொத்தார் மலர்குளிர்சந் தகிலொளிர்குங் குமங்கொண்டு
முத்தா றுவந்தடிவீழ் தருமுதுகுன் றடைவோமே.

தழையார் வடவியவீ தனிற்றவமே புரிசைவ
னிழையா ரிடைமடவா ளொடுமினிதா வுறையிடமா
மழைவா னிடைமுழவவ் வெழில்வளைவா ளுகிரெரிகண்
முழைவா ளரிகுமிறும் முயர்முதுகுன் றடைவோமே.

முகில்சேர் தருமுதுகுன் றுடையானை மிகுதொல்சீர்
புகலியர்கோ மறைஞான சம்பந்த னுரைசெய்த
நிகரில்லன தமிழ்மாலை யிசையோடு மிவைபத்தும்
பகரும்மடி யவர்கட் கிடர்பாவ மடையாவே.

திருச்சிற்றம்பலம்

வானநாயகர் திருமுதுகுன்றினை வழிபட் டலங்கொள்வார்
தூநறுந்தமிழ்ச் சொல்லிருக்குக்குறட் டுணைமலர் மொழிந்தேத்தி
ஞானபோனகர் நம்பர்தங்கோயிலை நண்ணியங் குள்புக்குத்
தேனலம்புதண் கொன்றையார் சேவடி திளைத்த வன்பொடு தாழ்ந்தார்.

(இ-ள்) வானநாயகர் திருமுதுகுன்றினை வழிபட்டலங் கொள்வார் ஞானபோனகர்=விண்ணுலகத்தார்க்கு இறைவராகிய பழமலைநாதரது திருமுதுகுன்றத்தை வழிபட்டு வலங்கொள்ளுதல் காரணமாய பிரதட்சணஞ் செய்வாராகிய ஆளுடைய பிள்ளையார், தூநறுந்தமிழ்ச்சொல் இருக்குக்குறள்துணைமலர் மொழிந்தேத்தி=புனிதமாகிய நல்ல தமிழ்ச்சொல்லாலாகிய திரு இருக்குக்குறளென்னும் அளவொத்த பதிகமாலையைத் திருவாய் மலர்ந்து துதித்து, நம்பர் தம் கோயிலை நண்ணி அங்கு உள்புக்கு=பழமலை நாதரெழுந்தருளிய ஆலயத்தினுள்ளே சென்றருளி, தேன் அலம்பு தண் கொன்றையார் சேவடி திளைத்த இன்பொடு தாழ்ந்தார்=தேனைத் ததும்புகின்ற குளிர்ந்த கொன்றைப் பூமாலையை யணிந்த பழமலைநாதரது சிவந்த திருவடிக்கீழ்க் கலந்த பேரானந்தத்தோடு பணிந்தருளினார்—எ-று.

வானநாயகர், இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயராதலின், விசேடம் பற்றி அவர்க்குத் தலைவரென்பது படநின்றது மண்ணுலகத்தாரை விலக்கி யதன்று. (கஅஉ)

திருமுதுகுன்றம்-திருவிருக்குக்குறள்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

நின்றுமலர் தூவி யின்றுமுதுகுன்றை
நன்றுமேத்துவீர்க் கென்றுமின்பமே.

நின்றுமுதுகுன்றை நன்றுசம்பந்தன்
ஒன்றுமுரைவல்லா ரென்றுமுயர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

தாழ்ந்தெழுந்துமுன் முரசதிர்ந்தெழுமெனுந் தண்டமிழ்த் தொடைசாத்தி, வாழ்ந்துபோந்தங்கண் வளம்பதியதனிடை வைகுவார்மணிவெற்புச், சூழ்ந்ததண்புனல் சுலவுமுத்தாற்றுத் தொடுத்தசொற்றொடைமாலை, வீழ்ந்தகாதலாற் பலமுறைவிளம்பியே மேவினார்சில நாள்கள்

(இ-ள்) முன் தாழ்ந்து எழுந்து முரசதிர்ந்து எழுமெனும்தண்டமிழ்த் தொடைசாத்தி=திருமுன்னே பணிந்தெழுந்து முரசதிர்ந்து எழுமெனு முதலினையுடைய திருமுக்காலென்னும் தண்ணிய தமிழ்ப்பதிகமாலையைத் திருவடியில் சாத்தி; வாழ்ந்து போந்து அங்கண் வளம்பதியத் னிடைவைகுவார்=பேரானந்த வாழ்வடைந்து ஆலயத்தி னின்றும் புறம்பே யெழுந்தருளி அழகிய இடத்தையுடைய வளம்பொருந்திய திருமுதுகுன்றின்கண் எழுந்தருளி யிருக்கும் ஆளுடைய பிள்ளையார், மணிவெற்புச் சூழ்ந்த தண் புனல் சுலவுமுத்தா றுடுத்தொடுத்த சொற்றொடைமாலைபல=அழகிய திருமுதுகுன்றினை வளைந்த குளிர்ந்த நீரானது அலைவீசுகின்ற திருமணி முத்தாந்தியோடு சேர்த்துப் பாடியருளிய சொல்லாலாய பதிகமாலைகள் பலவற்றை; வீழ்ந்தகாதலால் பலமுறை விளம்பியே சிலநாள்கள் மேவினார்=தமதுள்ளத்தில் உண்டாய விருப்பத்தினால் பலமுறையுந் திருவாய் மலர்ந்து சிலநாள் அங்கமர்ந்தருளினார்—எ-று.

மத்தாவென்னும் பதிமுதலிய பதிகங்க ளெல்லாவற்றினுங் கூறிய முத்தாறெனனும் விசேடண மடங்கப்பலமுறையென்றார் (௧௮௫)

திருமுதுகுன்றம் - திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

முரசதிர்ந்தெழுதரு முதுகுன்றமேவிய
பரசமாபடையுடையீரே
பரசமாபடையுடை யீருமைப்பரவுவா
ரரசாகவுலகிலாவாரே.

முடியசோலைசூழ் முதுகுன்றத்தீசனை
நாடியஞானசம்பந்தன
பாடியஞானசெந்தமிழ்
பாடியவவர்பழியிலரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-பழமலைநாதர். தேவியார்-பெரியநாயகியம்மை.

திருப்பதிகம்.—௧௧.

ஆங்குநாதனைப் பணிந்துபெண்ணாகட மணைந்தரு மறையோசை
யோங்குதூங்கானை மாடத்துளமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதிப்
பாங்கணைந்துமுன் வலங்கொண்டுபணிவுறுப் பாவுசொற்றமிழ்மாலை
தீங்குநீங்குவீர் தொழுமின்களெனுமிசைப் பதிகமுந்தெரிவித்தார்.

(இ-ள்.) ஆங்கு நாதனைப்பணிந்து பெண்ணாகடம் அணைந்து=அத்தலத்தில் பழமலைநாதனை வணங்கிப் பெண்ணாகடமெனனும் திருப்பதியைச்சேர்ந்

து; அருமறையோசை ஓங்கு தூங்கானைமாடத்துள் அமர்கின்ற ஒருதனிப்பரஞ்சோதி பாங்கணைந்து=அரியவேதங்களின் ஓசைமிக்க திருத்தூங்கானைமாடமென்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய ஒப்பில்லாத சுடர்க்கொழுந்தீசரது பக்கத்திலடைந்தருளி; வலங்கொண்டு முன்பணிவுற்று=பிரதட்சணஞ்செய்து திருமுன்னே வணங்கி, நீங்கு நீங்குவீர் தொழுமின்களென்னும்=குற்றம் நீங்குவீர் தொழுங்கள் என்னும் (இறுதியோடு) பரவுசொற்றமிழ்மாலை இசைப்பதிகமுந் தெரிவித்தார்=துதிக்கும் தமிழ்ச்சொல்லாலாய இசையோடு கூடிய பதிகமாலையையும் அருளிச்செய்தார்—எ-று. (௧௮௪)

திருத்தூங்கானைமாடம்-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடுங்கும்பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாயவாழ்க்கை யொழியத்தவ, மடங்குமிடங்கருதி நின்றீரெல்லா மடிகளடிநிழற்கீழாளா மவண்ணங், கிடங்குமதிலுஞ்சூ லாவியெங்குங் கெழுமனைகடோறு மறையினொலி, தொடங்குங்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானைமாடந் தொழுமின்களே.

மண்ணார்முழவதிரு மாடவீதி வயற்காழிஞானசம் பந்தனல்ல, பெண்ணாகடத்துப் பெருங்கோயில் பிறையுரிஞ்சுந்தூங்கானை மாடமேயான், கண்ணார்கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணர்க்கற்றாருங் கேட்டாரும்போய், விண்ணாருலகத்து மேவிவாழும் விதியதுவேயாகும் வினையுமாயுமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சுடர்க்கொழுந்தீசர். தேவியார்-கடந்தைநாயகியம்மை

திருப்பதிகம்—௨.

கருவரைப்பிற புகாதவர் கைதொழு
மொருவனைத்தொழு துள்ள முவந்துபோய்ப்
பெருவரத்தினிற் பெற்றவர் தம்முடன்
றிருவரத்துறை சேர்துமென் றேகுவார்.

(இ-ள்.) கருவரைப்பிற் புகாதவர் கைதொழும்=பிறப்பாகிய எல்லைக்கண் அணுகாத அடியார்கள் வணங்கும், ஒருவனைத்தொழுது உள்ளமுவந்துபோய்=ஒப்பில்லாத சுடர்க்கொழுந்தீசரைவணங்கி மனமகிழ்ந்து அங்குநின்றெழுந்தருளி, பெருவரத்தினிற் பெற்றவர் தம்முடன்=மிக்கதவப் பயனால் தம்மைப்பெற்ற சிவபாத இதயரோடும், திருவரத்துறை சேர்துமென் றேகுவார்= (நிவாக்கரையிலிருக்கின்ற) திருநெல்வாயில் அரத்துறையை அடைவோமென்று எழுந்தருளுவாராயினார். (௧௮௫)

முநதைநாளகளோ ரோவொரு காலமுது
தநதையாரபியன மேலிருப் பார்தவிாந
தநதணுள ரவாரு கேசெலச
சிநதைசெயவிருப போடுமுன செனறனர்.

(இ-ள்.) முநதைநாளகள ஒரோரொருகால முதுதநதையார் பியன்மேல்இருபபாா=முன்னுடகளில ஒவவொருநாள தமது முதியதநதையாராகிய சிவபாத இதயரது திருததோணமேல எழுநதருளிச செலவாராகிய பிளளையார்; தவிாநது அரதணுளா அவ ரருகேசெல=அவவா றிருததலை நீஙகி வேதியர்கள் தம அருகேசூழநதுவர, சிநதைசெய விருபபொடு முனசென்றனா=திருவரததுறையைத தரிசிககவேணடுமெனறு கருதிய விருபபததுடன அவாகளுககுமுனனே எழுநதருளினா—எ-று. (கஅசு)

ஆதியாாதம ரததுறை நோககியே
காதலாலணை வாாகடி தேகிடத
தாதையாரும பரிவுறச சமபநதா
பாததாமரை நொநதனபைபபய

(இ-ள.) ஆதியாாதம அரததுறை நோககியே=முதறகாரணராகிய சிவபிரானது திருவாததுறையை நோககி, காதலால அணைவாா கடிதேகிட=விருபபததோடு அணையுங கருததுடையராய விரைநது எழுநதருள; தாதையாரும பரிவுற=சிவபாத இதயரும திருவடிகள நிலததில தீணடல பொருதுவருநத, சமபநதா பாததாமரை நொநதன பைபபய=ஆளுடைய பிளளையாரது திருவடித தாமரைகள சிறிது சிறிது வருததமடைநதன—எ-று. (கஅஎ)

மறையனைததது மொருவடி வாமென
நிறைமதிபபிளளை நீணிலஞ சோநதெனத
துறையலைககஙகை சூடு மாததுறை
யிறைவரைததொழு வானவிரைநதேகினா

(இ-ள) மறையனைததது மொருவடிவாமென=வேதங்க ளெலலாந திரணடு ஒருதிருவுருககொணடு வநதாறபோலவும; நிறைமதிபபிளளை நீணிலஞ் சோநதென=நிறைநதகலைகளோடுகூடிய இளஞசநதிரன நீணட நிலவுலகின்கண சோநததுபோலவும; துறையலைககஙகைசூடுமஅரத்துறைஇறைவரை=துறையினகண அலைகளை வீசுங கஙகாநதியைசசூடிய அரததுறை நாதரை; தொழுவான விரைந தேகினா=தொழும பொருடடு விரைநது எழுநதருளினா—எ-று. (கஅஅ)

பாசமறறில ராயினும பாரிசை
யாசைசஙகரற் காயின தனமையாற
றேசுமிகக திருவுரு வானவ
ரீசனைததொழு தேதொழு தேகினா.

(இ-ள்.) பாரமிசைப பாசமறறிலராயினும் = உலகினகண (அறம்பொருள் இன்பங்களாகிய) பறறுபபிறிதொனறில ராயினும் ; ஆசைசஙகாறகாயின தன்மையால=சிவபிரானிடதது ஆசையாகிய பறறுஒனறு உணடாய தனமையால ; தேசுமிகக திருவுருவானவா=ஒளிமிகக திருவுருவததையுடைய ஆளுடைய பிளளையாா , ஈசனைத்தொழுதே தொழுதேகினா—சிவபெருமானை இடைவிடாமல வணஙகிககொண டெழுநதருளினா—எ-று.

அடிக்கு நீங்காமைமேறறு. அது வழிவருத்தததின சலியாமையை விளககியது. எனவே, ஆககஙகேடுகளினுஞ சலியாது நிலைபெறறோஙகிய பிளளையாரது பததிமையைப புலப்படுததினாராயிறறு. (௧௮௯)

இநதமாநிலத தினனிரு ணீஙகிட
வநதவைதிக மாமணி யானவா
சிநதையாரமு தாகிய செஞசடைத
தநதையாாகழ றாழநதெழுநதேகினா

(இ-ள்) இநதமாநிலததின இருளநீஙகிட=இநதநிலவுலகினகணுளள மானிடாது அஞஞானவிருள நீஙகுமபடி , வநதவைதிக மாமணியானவா=அவதரிததவைதிக சூளாமணியாகிய ஆளுடைய பிளளையாா , சிநதை ஆரமுதாகிய செஞசடைத தநதையாா கழலதாழநதெழுநதேகினா=தமதுளளததினகண நிறைநத அமுதமாகிய சிவநத சடையையுடைய சிவபிரானது திருவடிகளை வணஙகிககொணடு எழுநதருளினா—எ-று (௧௯௰)

மாறனபாடி யெனுமபதி வநதுற
வாறுசெலவருத தததினசைவினால
வேறுசெலபவா வெயதுறப பிளளையா
ரேறுமஞசெழுத தோதியங கெயதிட.

(இ-ள்.) மாறன்பாடி எனுமபதிவநதுற=அபபொழுது மாறனபாடியெனனும பதியினைவநதடைய,ஆறுசெல வருததததின அசைவினால=அஙகுவழியிறசெலலும் வருதததகினாலாய தளாசசியினால ,வேறுசெலபவாவெயதுற=தமமோடுசூழநது வருமதிருககூட்டஙகளு மிளைபபடைய , பிளளையாாஏறும அஞசெழுததுஓதி அஙகுஎயதிட=அதனால ஆளுடைய பிளளையாரு மேமபட்ட திருஅஞசெழுததையோதி யருளி அஙகே சென்றருள—எ-று. (௧௯௧)

உயயவநதசம பநத ருடனவநதாாக
கெயதுவெமமை யிளைபபஞசி னனபோலக
கைகளாயிரம வாஙகிக காந்துபோய
வெயயவனசெனறு மேலகடல வீழநதனன்.

(இ-ள்.) உயயவநதசமபநதன உடன்வநதார்ககு=உலகததா ருயயுமபொருட்டு அவதரிதத ஆளுடைய பிளளையாருடன வநததிருககூட்டததாாக்கு ; எய்துமவெமமை இளைபபஞசினனபோல=தனதுகிரணஉஷணததாலாய

இளம்பிறையைக்கண்டு பயந்தவனைப்போலக் கைகள் ஆயிரம் வாங்கிக்கரந்து போய=ஆயிரங்கைகளையுஞ் சுருக்கிமறைந்துபோய் ; வெய்யவன் சென்று மேல்கடல் வீழ்ந்தனன்=சூரியன்மேல் கடலிற்சென்று வீழ்ந்தான்—எ-று. ()

அற்றைநாளிர வப்பதி யின்னிடைச்
சுற்றுநீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்றமூர்ந்தபி ரான்கழல் பேணுவார்
வெற்றிமாதவத் தோருடன் மேவினார்.

(இ-ள்) அற்றைநாளிரவப் பதியினனிடை=அந்நாளிரவில் அம்மாறன்பாடி யென்னுந் தலத்தினிடத்தில் ; சுற்றுநீடிய தொண்டர்கள் போற்றிட=தம்மைச்சூழ்ந்து நெருங்கியிருக்கின்ற திருத்தொண்டர் சூழ்ந்துகளைத்துதிக்க ; பெற்றமூர்ந்தபிரான் கழல்பேணுவார்=இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபிரானது திருவடியை வழிபாடுசெய்யும் ஆளுடைய பிள்ளையார் , வெற்றி மாதவத்தோருடன் மேவினார்=வெற்றிபொருந்திய தவமுனிவருடன் எழுந்தருளியிருந்தார்—எ-று. (கககூ)

இந்நிலைக்க ணெழில்வளர் பூந்தராய்
மன்னனார்தம் வழிவருத் தந்தினை
யன்னமாடுந் துறைநீ ரரத்துறைச்
சென்னியாற்றார் திருவுள்ளஞ் செய்தனர்

(இ-ள்.) இந்நிலைக்கண் எழில்வளர் பூந்தராய் மன்னனார்தம்வழிவருத்தந்தினை=இவ்வாறு நிகழுங்கால் அழகின்மிக்க சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையாரது வழிநடந்த வருத்தத்தை, அன்னமாடுந் துறைநீர் அரத்துறை=அன்னங்கள் குடைந்தாடும் நிவாநதியின் நீர்த்துறை சூழ்ந்த திருநெல்வாயில் அரத்துறையி லெழுந்தருளிய , சென்னியாற்றார் திருவுள்ளஞ்செய்தனர்=சிரசின்கண் கங்காநதியைத்தரித்த அரத்துறை நாதர் தமது திருவுளத்திற்கொண்டருளினார்—எ-று. (கககச)

ஏறுதற்குச் சிவிகை யிடக்குடை
கூறியூதக் குலவுபொற் சின்னங்கள்
மாறின்முத்தின் படியினான் மன்னிய
நீறுவந்த நிமல ரருளுவார்.

(இ-ள்) ஏறுதற்குச்சிவிகை இடக்குடை=எழுந்தருளுதற்கு முத்துச்சிவிகையும் பிடித்தருள முத்துக்குடையும் , கூறியூதக்குலவு பொற் சின்னங்கள்=தமது திருநாமத்தை யாவருமறியக்கூறி ஊதுதற்குவிளங்குகின்றபொன்னாலாய திருச்சின்னங்களும் , மாறின்முத்தின்படியினால் மன்னியநீறுவந்த நிமலர் அருளுவார்=ஒன்றற்கொன்று மாறுபடாதமுத்தின் வகையினாலாகியவைகளை விபூதியை யுவந்த திருவரத்துறைநாதர் அருளுவாராய்—எ-று.

நீடுவாழ்பதி யாகுநெல் வாயிலின்
மாடமாமனை தோறு மறையோர்க்குக்
கூடுகங்குற் கனவிற் குலமறை
தேடுசேவடி தோன்றமுன் சென்றுபின்

(இ-ள்.) நீடுவாழ்பதியாகும் நெல்வாயிலின் மாடமாமனை தோறுமறையோர்க்கு=தோன்றுதொட்டு மறையோர்வாழும் பதியாகிய திருவரத்துறையில் மேன்மாடங்களோடுகூடிய மாளிகைமனைகள் தோறுமுள்ள பிராமணர்களுக்கு; கங்குல்கூடு கனவிற்குல மறைதேடு சேவடிதோன்ற முன்சென்று பின்=அன்றிரவில் உண்டாகும் சொற்பன வவத்தையில் ஞானத்வேதங்களுந் தேடுகின்ற தமது சிவந்த திருவடிகள்காணவர அவர்முன்சென்று பின்பு—()

ஞானசம்பந்த னம்பா லணைகின்றா
னானமுத்தின் சிவிகை மணிக்குடை
யானசின்னங்க ணம்பாற்கொண் டருங்கலைக்
கோனவன்பா லணைந்து கொடுமென

(இ-ள்) ஞானசம்பந்தன்நம்பால்அணைகின்றான்=திருஞானசம்பந்தன் நம்மிடத்துவருகின்றான், மானமுத்தின் சிவிகை மணிக்குடையான சின்னங்கள் நம்பாற்கொண்டு=பெரியமுத்துச் சிவிகையையும் முத்துக்குடையையும் முத்துச் சின்னத்தையும் நம் ஆலயத்தினின்றெடுத்துக்கொண்டு, அருங்கலைக் கோனவன்பால் அணைந்துகொடுமென=அரிய (வேதமுதலிய) கலைஞானங்கட்கு அதிபனாகிய அத்திருஞான சம்பந்தனிடத்துக் கொடுமென்று—எ-று

நம்பாலென்றது=ஆலயத்திற்கானமையின் இலக்கணையென்க (ககூஎ)

அந்தணாளர்க் குரைத்தவப் போழ்தினில்
வந்துகூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தையோடுஞ் செழுநீ ரரத்துறை
யிந்துசேகரர் கோயில்வந் தெய்தினார்.

அந்தணாளர்க்குரைத்தஅப்போழ்தினில்=அம்மறையவர்களுக்குச்சிவபிரான் திருவாய் மலர்ந்தருளிய சமயத்தில் அவரெல்லாம்; வந்துகூடிமகிழ்ந்தற்புதமுறுஞ்சிந்தையோடும்=ஒருங்குதிரண்டுமகிழ்ச்சியடைந்து அதிசயமிக்க மனதோடும், செழுநீர் அரத்துறை இந்து சேகரர் கோயில்வந்தெய்தினார்= செழுமைமிக்க நீர்வளம் பொருந்திய திருவரத்துறையி லெழுந்தருளியசந்திரசேகரராகிய திருவரத்துறை நாதரது திருக்கோயிலை வந்தடைந்தார்கள் —எ-று. (ககூஅ)

ஆங்குமற்ற வருளடி யாருட
னோங்குகோயிலுள் ளார்க்குமுண் டாயிட
வீங்கிதென்ன வதிசய மென்பவர்
தாங்களம்மறை யோர்க்குமுன் சாற்றினார்

அங்கு மறறவருள அடியாருடன ஒஙகுகோயில உளளார்க்கு முண்டா யிட=அசசொறபன ரூபமான திருவருள அஙகிருககும் அடியாருடன் திருக் கோயிலில உளள அகத்தொண்டாகளுககும் உண்டாக ; ஈங்கிதனன வதிச யமெனபவா தாங்கள அமமறையோாககு முன்சாறறினா=இவவிடத்து இ து, கணடறியாத அதிசயமென்று கூறுமவாகளாய அவாகளும அங்குவநது கூடியபிராமணாகளுககு முனனே தெரிவித்தாாகள்—எ-று.

ாணடு அகததொணடா எனபது ஆதிசைவரை எனக. (ககூக)

சாலமிககவி யபபுறு தனமையின
பாலராதலும பளளி யெழுசசியின
காலமெயதிடக காதல வழிபபடுஞ
சீலமிககாா திருககாபபு நீககினாா.

(இ-ள) சாலமிகக வியபபுறு தனமையின பாலராதலும=இவவாறு அஙகுசோநத யாவருமமிககசிறநத அதிசயமுறறதனமையின பதுதியாராத லும, பளளியெழுசசியினகாலம எயதிட=திருபபளளி யெழுசசிக குரிய வைகறைக காலமவர, காதலவழிபபடுஞ சீலமிககாாதிருககாப்புநீககினாா= பததிவழிபபட்ட நலலொழுககமிகக அவவநதணாகள திருவாயிலின திருக காபபினைநீககினாாகள—எ-று. (உா)

திஙகணீாமைச செழுநதிரள முததினற
றுஙகவெணகுடை தூய சிவிகையும
பொஙகவூதும பொருவருஞ சினனமு
மஙகணாா ரருளினற கணடனா.

(இ-ள) திங்கள நீாமைசசெழுநதிரள முததினல=சநதிரன்போலும தணணியவொளியமைநதசெழுமைபொருநதியதிரணடமுத்தினலாகிய;துஙக வெணகுடைதூயசிவிகையும=உயாநதவெளளியதிருககுடையும்பரிசுத்தமான முததுசசிவிகையும் ; பொஙகவூதும் பொருவருஞ் சினனமும=பொலிவோடு துகினற ஒபபிலலாத திருசசினனமும ; அஙகண நாதா அருளினல் கண்ட னா=சிவபிரானது திருவருளினல உணடாயிருந தனமையை அவவிடத்து அ வாகளகண்டாாகள—எ-று. (உாக)

கணடபின்னவா கைதலை மேறகுவித
தெண்டிசைக்கும் விளககிவை யாமெனத்
தொண்டரோடு மறையவா சூழ்ந்தெழுந
தண்டர்நாடு மறிவுற வார்த்தனர்.

(இ-ள.) கண்டபின் அவாகைதலைமேற்குவித்து=அவ்வாறுகண்டபினபு அவ்வந்தணர்களதமதுகைகளைத் தலையின்மேறகூபபி ; எண்டிசைககும் விளக் கிவையாமென=எடடுத்திக்குகளுககும் இவைவிளக்காமென்றுதுதிக்க ; தொ

ண்டரோடு மறையவர் சூழ்ந்தெழுந்து=அடியார்களோடும்மற்ற பிராமணர்க
ளும் ஒருங்குதிரண்டெழுந்து; அண்டர்நாடும் அறிவுறவார்த்தனர்=மண்ணு
லகன்றித்தேவருலகமும் அறியும்படி ஆரவாரித்தார்கள்—எ-று. (௨௱௨)

சங்குதுந்துபி தாரை பேரிமுதற்
பொங்குபல்லிய நாதம் பொலிந்தெழ
வங்கணன்ற ருளாலவை கொண்டுடன்
பொங்குகாத லெதிர்கொளப் போதுவார்

(இ-ள்) சங்குதுந்துபி தாரை பேரிமுதல்பொங்குபல்லியநாதம்பொலிந்
தெழ=சங்கமும் துந்துபியும்தாரையும்பேரிகையுமுதலியசிறந்தபலவகைவாத்
தியங்களினோசை அதிகரித்து எழாநிற்க, அங்கணன் அருளால் அவைகொ
ண்டு உடன்=சிவபிரானது திருவருளால் அவைகளை யுடன்கொண்டு, பொங்
கு காதல் எதிர்கொளப் போதுவார்=அதிகரித்த விருப்பத்தோடு பிள்ளையா
ரை எதிர்கொள்ளும்படி போகின்றவராய்—எ-று.

பொங்குகாதல் எதிர்கொள என்றுங் கால் தாமணுகி யெதிர் கொள்ளு
முன் தமதுகாதல் விரைந்து எதிர் கொள்ள என்னு மமையும். இது அவாநுசி
வுநேச மிகுதியைப் புலப்படுத்தியது. (௨௱௩)

மாசில்வாய்மைநெல் வாயின் மறையவ
ராசில்சீர்ச்சண்பை யாண்டகை யார்க்கெதிர்
தேசுடைச்சிவி கைமுத லாயின
வீசரின்னரு ளாற்றாங்கி யேகினார்

(இ-ள்) மாசில்வாய்மைநெல்வாயின்மறையவர்=குற்றமற்றமெய்ப்பத்
தியையுடையநெல்வாயில்அரத்துறையில்வசிக்கும்அந்தணர்கள், ஆசில்சீர்ச்சண்
பை ஆண்டகையார்க்கெதிர்=குற்றமற்ற சிறப்பினையுடைய சீகாழியில் அவ
தரித்த ஆளுடைய பிள்ளையார்க்கெதிராக, தேசுடைச் சிவிகை முதலாயின=
பிரகாசத்தை யுடைய முத்துச் சிவிகை முதலாயினவற்றை, ஈசர் இன்னரு
ளால் தாங்கியேகினார்=சிவபிரானது இனிய திருவருளால் எடுத்துக்கொண்டு
சென்றார்கள்—எ-று.

போதுவாராய் நெல்வாயில் மறையவர் ஏகினாரெனக் கூட்டுக. (௨௱௪)

இத்தலையிவ ரின்னண மேகினா
ரத்தலைச்சண்பை நாதர்க்கு மவ்விரா
முத்தநற்சிவி கைமுத லாயின
வுய்த்தளிக்கும் படிமுன் னுணர்த்துவார்.

(இ-ள்.) இத்தலை இவர் இன்னணம் ஏகினார்=இவ்விடத்துப்பிராமணர் முத
லியநெல்வாயிலின் கணுள்ள அடியார்கள் இவ்வாறுசென்றார்கள், அத்தலைச்
சண்பை நாதர்க்கும் அவ்விரா=மாறன் பாடியாகிய அவ்விடத்தில் எழுந்தரு

ளிய சீகாழித்தலைவராகிய பிள்ளையாரக்கும் அவ்விராப்போதில்;முத்தாற சிவிகை முதலாயின=நல்லதிருமுத்துச்சிவிகை முதலாயினவற்றை ; உயத்து அளிக்கும் படிமுன் உணாததவார்=ஏறிச்செலுத்தும் வண்ணம் அவர்க்கு முன் அறிவிப்பவராய—எ-று.　　(உ௱௫)

அள்ளனீாவயல் சூழு மாததுறை
வளளலாாா மகிழநதளிககு மவை
கொளளலாகுஙகொண் டுயததலசெய வாயென
வுள்ளவாறருள செயய வுணாநதபின.

(இ-ள) அளளல நீாவயலசூழுமஅரததுறைவளளலாா=சேறுபொருநதியநீாவளமிககவயலசூழநத திருவரததுறையிலெழுநதருளிய வளளலாகிய திருவரததுறைநாதா, நாமமகிழநது அளிககுமஅவைகொளளலாகும=நாமஉளமகிழநது கொடுககு மவைகளை கைககொளளுதல பொருநதும (அதனால) ; கொணடு உயததலசெயவாயென உளளவாறு அருளசெயய உணாநதபின=அவைகளை அங்கீகரிததுககொணடு சிவிகையை யேறிசசெலுததுவா யெனறு திருவரததுறையில அருளியவகையை யுளளவணணம அருளிச்செயயபபிள்ளையாா துயிலநீஙகிந திருககண விழிததபின்பு—எ-று.

உணாதது வாராகிய அரததுறைவளளல அருளசெயயனெககூட்டுக (உ௱௬)

சண்பையாளியாா தாஙகண்ட மெயயருட
பண்புதநதையாா தமமுடன் பாஙகமா
தொண்டருககருள் செயது தொழாமுனம
விண்புலபபட வீஙகிரு ணீஙகவும.

(இ-ள.) சணபை யாளியாா தாஙகணட மெயயருடபணபு=சீகாழியில அவதரிதத ஆளுடைய பிளளையாா தாம அன்று கணடதிருவருளாகிய பணபினை ; தநதையாா தமமுடன பாஙகமா தொணடருககருள செயது தொழா முனம்=தநதையாருடனபககததிறசூழநத அடியாாகளுககும அருளிச்செயது திருவருளை வணங்குமுனனமே ; விணபுலபபட வீஙகுஇருளநீஙகவும்=ஆகாயம்தன்களுககுப புலபபட அதிகரித்த இருளானது நீங்கவும்—எ-று.

ஆகாயம கட்புலனுகா வெனபாரை மறுத்து ஆகாயத்திறபருந்துதோன்றுகிறது என்னும நியாயத்தால புலப்படுமென்பார் விண்புலபபட வென்றா இருள ஒளியினது அபாவமென்றும் ஓாபொருளென்றும கூறுவாருமுளா.

மாலையாயம புலாவுறும வைகறை
வேலைசெயவினை முற்றிவெண் ணீற்றணி
கோலமேனிய ராயகளை மலாகுவித
தேலவஞ்செழுத தோதி யெழுநதனா.

(இ-ள்) மாலையாமம் புலாவுறும் வைகறைவேலை=மாலைப் பொழுதோடு கூடிய இராக்காலம் நீங்கும் விடியற்காலத்தில், செய்வினைமுற்றி வெண்ணீறணி கோலமேனியராய கைம்மலர்குவித்து=சந்தியாவந்தன மல்லாத ஸ்நானமுதலிய நித்தியகடன்கள் முடித்து வெள்ளிய விபூதிதரித்த அழகிய திருமேனியை யுடையவராய்க் கரகமலங்கள் கூப்பி, ஏல அஞ்செழுத்து ஓதியெழுந்தனர்=பொருந்த (திருவரத்துறையைக்கருதிச்) செல்லும்படிக்குத் திருவஞ்செழுத்தை உச்சரித்துக்கொண்டெழுந்தருளினார்—எ-று.

பிள்ளையார்க்குக்காலத்து உபநயன மின்மையிற் சந்தியாவந்தனம் விலக்கப்பட்டது. (உாஅ)

போதஞானப் புகலிப் புனிதரைச்
சீதமுத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல்செய்பவன் போலக் கருங்கடன்
மீதுதேரினவந் தெய்தினன் வெய்யவன்

(இ-ள்.) போதஞானப் புகலிப்புனிதரை=உண்மை ஞானத்தையுடைய சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையாரை, சீதமுத்தின் சிவிகைமே லேற்றிடக்காதல் செய்பவன்போல=குளிர்ந்த முத்துச் சிவிகையின்மே லேற்ற விருப்ப முற்றவன்போல, கருங்கடன் மீது தேரினவந் தெய்தினன் வெய்யவன்=கரியகடலி னிடத்துப் பொற்றேரின்மேல் சூரியனுதித்தான்—எ-று. ()

ஆயபோழ்தி னரவெனு மார்ப்பு ன்
றூயமுத்தின் சிவிகை சுடர்க்குடை
மேயசின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேயவந்தணர் தாமெதிர் தோன்றினார்.

(இ-ள.) ஆயபோழ்தினரவெனும் ஆர்ப்புடன்=அதுசமயத்து அரவென்னும் ஓசையோடு; தூயமுத்தின் சிவிகை சுடர்க்குடை மேயசின்னங்கள் கொண்டு=களங்கமில்லாத முத்துச் சிவிகையையும் ஒளியையுடைய குடையையும் பொருந்திய் திருச்சின்னங்களையும் எடுத்துக்கொண்டு, மெய்யன்பரோடேய வந்தணர் தாமெதிர் தோன்றினார்=மெய்ப்பத்தியையுடைய அடியார்களோடு பொருந்த அந்தத்திருவரத்துறையிலுள்ள வாழும் பிராமணர்களும் பிள்ளையார் சந்நிதியில் வந்தார்கள்—எ-று. (உாய)

வந்துதோன்றிய வந்தணர் மாதவர்
கந்தவார்பொழிற் காழிநன் னாடர்முன்
னந்தமிலசீ ராத்துறை யாதியார்
தந்தபேரரு டாங்குவீ ரென்றனர்.

(இ-ள்.) வந்து தோன்றிய அந்தணர் மாதவர்=வந்து பிள்ளையாரது திருமுன்னே தோன்றிய பிராமணர்களும் தவத்தையுடைய அடியார்களும்;



ந

கந்தவார் பொழிற்காழி நன்னாடர்முன்=வாசனையுடைய நீண்டசோலைகள் சூழ்ந்த சீகாழியென்னும் நல்ல திருநாட்டையுடைய பிள்ளையார் திருமுன் னின்று, அந்த மிலசீரரத்துறை யாதியார் தந்தபோ அருள் தாங்குவீர் என்ற னர்=அளவில்லாத சிறப்பினையுடைய அரத்துறைநாதர் தந்தருளிய பெரிய திருவருளாகிய இவைகளைக் கைக்கொள்வீரென்று வணங்கிக்கூறினர்—எ-று.

காரியத்தைக்காரணமாக உபசரித்துப்பேரருளென்றார். (௨௧௧)

என்றுதங்களுக்கீச ரருள்செய்த
தொன்றுமங்கொழி யாமையுரைத்துமுன்
னின்றுபோற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்றுளாரரு ளென்று வணங்கினார்.

(இ-ள்.) என்று தங்களுக்கீசரருள் செய்தது=இவ்வாறு தங்களுக்குத் திருவரத்துறை நாதர் அருளிச்செய்தது, ஒன்றுமங் கொழியாமை யுரைத்து முன்னின்று போற்றித்தொழுதிட= ஒன்றையும் பிள்ளையாரிடத்து ஒழியாது கூறித்திருமுன்னின்று துதித்துவணங்க, நேர்ந்தது மன்றுளார் அருளென்று வணங்கினார்=இவ்வாறு நிகழ்ந்தது நடேசப்பெருமானது திருவருளேயென்று பிள்ளையார் பணிந்தருளினார்—எ-று.

நேர்ந்ததென்றதனால், சிவபிரான் சொப்பனம் நிகழ்த்தியதும் யானமுதலியன அளித்ததும் குறிப்பித்ததுணர்க. (௨௧௨)

எந்தையீச் னெனவெடுத் திவ்வருள்
வந்தவாறுமற் றிவ்வண மோவென்று
சிந்தைசெய்யுந் திருப்பதி கத்திசை
புந்தியாரப் புகன்றெதிர் போற்றுவார்.

(இ-ள்) எந்தை யீசனெனஎடுத்து=எந்தையீசனென அடியெடுத்து; இவ்வருள் வந்தவாறுமற்று இவ்வணமோவென்று=இவ்வருள் வந்தவழி இத் திருவருள் வந்தவாறு (வழிவருத்தத்தில் சிவபிரானைச் சிந்தித்துவந்த) வண் ணமோவென்று, சிந்தைசெய்யும் திருப்பதிகத்து=தாம் கருதிய பொருளையு டைய திருப்பதிகத்தின் கண், இசைபுந்தியாரப் புகன்றெதிர் போற்றுவார்= இசையோடு திருவுளம் பொருந்தத் திருவாய் மலர்ந்தருளி ஆலயத்தின் எதிரே நின்று துதிக்கும் ஆளுடைய பிள்ளையார்—எ-று. (௨௧௩)

மெய்ம்மைபோற்றி விடாத விருப்பினற்
றம்மையுன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மைநித்தில யானச் சிறப்பரு
ளெம்மைபாலுவப் பானின் றளித்ததே.

(இ-ள்.) மெய்ம்மைபோற்றி விடாதவிருப்பினால்=உண்மையை யோம்பி நீங்காதபத்தியினால், தம்மையுன்னும்பரிசுதந்தாள்பவர்=தம்மையெண்ணக்காத்

தும் இடைவிடாது சிந்திக்கும் பெருமபேறுன பரிசினை எமக்குத் தந்து ஆளு ஞ்சிவபிரானுல , செம்மை நிததில யானசசிறப்பருள=அழகிய முத்துச்சிவி கையாகிய சிறப்பினை யருளுந திருவருள்; எம்மை யாளுவபபா னின்றளித தது=எமமையாளாக உவக்கும்பொருட்டு இனறு அளிககபபட்டது—எ-று.

எமமை யாட்கொளளும் பொருட்டு நிததிலயானச சிறபபருள அளிதத தெனக கூட்டுக. அளிததுதெனச செயயபபடு பொருளை வினைமுதலாகவைத து அதனமேல வினைமுதலவினை ஏறறபபட்டது. (உகச)

திருநெலவாயில - திருஅரததுறை- பண-பியநதைககாநதாரம

திருசசிறறமபலம.

எந்தையீசனெம்பெருமா னேறமாகடவு ளெனறேததிச
சிநதைசெயபவாககலலால் செனறுகைகூடுவ தனறுற
கநதமாமலருநதிக கமபுனனிவாமலகு கரைமே
லநதண்சோலைநெலவாயி லாததுறையடிகடம மருளே.

ஈரவாாசடைதனமே விளமபிறையணிநதவெமபெருமான
சீருஞ்செலவமுமேததாச சிததாகடொழசசெலவநனறுல
வாரிமாமலருநதி வருபுனனிவாமலகுகரைமே
லாருஞ்சோலைநெலவாயி லாததுறையடிகடமமருளே.

பிணிகலநதபுனசடைமேற பிறையணிசிவனெனபபேணிப
பணிகலநதுசெயயாத பாவிகடொழசசெலவதனறுன
மணிகலநதுபொனனுநதி வருபுனனிவாமலகுகரைமே
லணிகலநதநெலவாயி லாததுறையடிகடமமருளே.

துன்னவாடையொனறுடுததுத தூயவெணணீறறினாகி
யுனனினைபவாககலலா லொன்றுஙகைகூடுவதனறுற
பொன்னுமாமணியுநதிப பொருபுனனிவாமலகுகரைமே
லன்னமாருநெலவாயி லாததுறையடிகடமமருளே.

வெருகுரிஞசுவெஙகாட்டி லாடியவிமலனெனறுளகி
யுருகினைபவாககலலா லொனறுஙகைகூடுவதனறுன
முருகுரிஞசுபூஞ்சோலை மொயமமலாசுமநதிழிநிவாவந
தருகுரிஞ்சுநெலவாயி லாததுறையடிகடமபருளே

உரவுநீரசசடைககரநத வொருவனென்றுளகுளிாநதேததிப
பரவினைபவாககலலாற பரிநதுகைகூடுவதனறுற
குரவநீடியாசோலைக குளிாபுனனிவாமலகுகரைமே
லரவமாருநெலவாயி லாததுறையடிகடமமருளே.

நீலமாமணிமிடற்று நீறணிசிவனெனப்பேணுஞ்
சீலமாந்தர்கட்கல்லாற் சென்றுகைகூடுவதன்றாற்
கோலமாமலருந்திக் குளிர்புனனிவாமலக்கரைமே
லாலுஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

செழுந்தண்மாலவரையெடுத்த செருவலியிராவணனலற
வழுந்தவூன்றியவிரலான் போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக் குளிர்புனனிவாமலக்கரைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

நுணங்குநூலயன்மாலு மிருவருநோக்கரியானை
வணங்கிநைபவர்க்கல்லால் வந்துகைகூடுவதன்றா
மணங்கமழ்ந்துபொன்னுந்தி வருபுனனிவாமலக்கரைமே
லணங்குஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

சாக்கியப்படுவாருஞ் சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்பட்டிலாப் பாவிகடொழச்செல்வதன்றாற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப் பொருபுனனிவாமலக்கரைமே
லாக்குஞ்சோலைநெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

கறையினார்பொழில்சூழ்ந்த காழியுண்ஞானசம்பந்த
னறையுமப்பூம்புனல்பரந்த வரத்துறையடிகடம்மருளை
முறைமையாற்சொன்னபாடன் மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப் பாட்டிவைபத்தும்வல்லார்க்கே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அரத்துறைநாதர் தேவியார்-ஆனந்தநாயகியம்மை.

பொடியணிந்த புராண னரத்துறை
யடிகடம்மரு ளேயிது வாமெனப்
படியிலாதசொன் மாலைகள் பாடியே
நெடிதுபோற்றிப் பதிக நிரப்பினார்

(இ-ள்.) பொடியணிந்த புராணனரத்துறை யடிகடம்மருளே யிதுவா மென=விபூதியணிந்த திருமேனியையுடைய பழையோனாகிய திருவரத்துறை யிலெழுந்தருளிய இறைவன திருவருள் (சிந்தை செய்பவர்க்கன்றி கைகூடுத லில தென்னும்) இத்தன்மையதேயாமென்று, படியிலாத சொன்மாலைகள் பாடி=ஒப்பில்லாத செந்தமிழச் சொல்லாலாகிய செய்யுண்மாலை களைப்பாடியருளி; நெடிதுபோற்றிப் பதிகம் நிரப்பினார்=அச்செய்யுள்கள் தோறும் அப்

யொருளமைத்துத் துதித்துத் திருக்கடைக் காப்பையும் அருளிப்பதிகத்தை நிரப்பினார்—எ-று.

போற்றுவார் எந்தை யீசனென்னெடுத்து அடிக்கடம் அருளிறுவாமெனப் பாடிப் போற்றிய பதிகத்தை நிரப்பினாரென்முடிக்க. (௨௧௫)

சோதிமுத்தின் சிவிகைசூழ வந்துபார்
மீதுதாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றாதியாரரு ளாதலி னஞ்செழுத்
தோதியேறினா ருய்ய வுலகெலாம்

(இ-ள். சோதிமுத்தின் சிவிகைசூழவந்து=ஒளிபொருந்திய முத்தாலாய சிவிகையினைப்பிரதட்சணஞ்செய்து, பார்மீது தாழ்ந்து=பூமியின்மேல் திருமேனிதோயப்பணிந்து, வெண்ணீற்றொளிபோற்றி நின்று=வெள்ளிய விபூதியின் ஒளிபோன்ற வொளியினுடைய முத்துச்சிவிகையின் ஒளியைத்துதித்துநின்று, ஆதியாரருளாதலி னஞ்செழுத் தோதியேறினா ருய்யவுலகெலாம்= அத்திருமுத்தின் சிவிகை ஆதித்துறைநாதர் திருவருள் வடிவாதலால் திருவஞ்செழுத்தை யோதியருளி எல்லாவுலகமும் ஈடேற அதில் எழுந்தருளினார்—எ-று.

பிள்ளையார் சூழவந்து தாழ்ந்து போற்றி நின்று அஞ்செழுத்தோதி ஏறினாரென்முடிக்க.

“உலகெலாம்” என்று இறைவனெடுத்த மங்கலமொழியாதலின் முதற்கணணும், “நிலவி உலகெலாம்” என இறுதிக்கணணும், வைத்தவாறுபோல, இடையிலும், “உய்ய உலகெலாம்” என்வைத்தா ரென்றல் ஆன்றோர் வழக்கு. (௨௧௬)

வேறு

தொண்டரார்த்தனர் சுருதிகளார்த்தன தொல்லை
யண்டரார்த்தன ரகிலமுமார்ப்புட னெய்தக்
கொண்டலார்த்தன முழவமுமார்த்தன குழுமி
வண்டருப்பொலி மலர்மழைபார்த்தது வானம்

(இ-ள்) தொண்டரார்த்தனர்=அடியார்கள் அரவென ஆரவாரித்தனர், சுருதிகளார்த்தன=வேதங்கள் ஆரவாரித்தன, தொல்லையண்டரார்த்தனர்=பழையவிண்ணுலகின் கண்வாழும் தேவர்களும் ஆரவாரித்தனர், அகிலமுமார்ப்புட னெய்தக்கொண்டலார்த்தன=எல்லாப்பொருள்களுமஆரவாரத்தாலாய ஒலியைப்பொருந்தும்படி மேகங்களும் ஆரவாரித்தன; குழுமிமுழவமுமார்த்தன=நெருங்கித் தேவதுந்துபியும் ஆரவாரித்தன; வண்டருப்பொலிமலர் மழையார்த்ததுவானம்=வண்டுகளாரவாரங்காத பொலிவையுடைய பூமழையும் வானத்தின்கண் ஆரவாரித்தது—எ-று.



ஜகதீசனளிதத - சிவிகைமீதாரேகணிதது திருவாததுளாஆலயததினசெலலல்

எல்லாப்பொருளும் ஆர்ப்புடனெய்தலாவது, மேகத்தொலி பேரொலியாதலின், அது கம்பமுண்டாக, மூர்த்தப்பொருளோடியைதலாம்; ஒலியானது விபுகுணம், அது மூர்த்தகுணம் அமூர்த்தகுணம் என இருவகையாதலின்.

வளையுமார்த்தன வயிர்களுமார்த்தன மறையின்
கிளையுமார்த்தன கிளைஞருமார்த்தனர் கெழுவுங்
களைகணாய்த்தநேர் கருணையினார்த்தனர் முத்து
விளையுமாக்கதிர் வெண்குடையார்த்தது மிசையே.

(இ-ள்) வளையுமார்த்தன=சங்குகளும் ஒலித்தன, வயிர்களுமார்த்தன=கொம்புகளும் ஒலித்தன, மறையின் கிளையுமார்த்தன=வேதங்களின் சாகைகளும் ஆரவாரித்தன, கிளைஞருமார்த்தனர்=உறவினர்களாகிய வேதியர்களும் ஆரவாரித்தனர், கெழுவுங்களைகணாய்த்தநேர் கருணையினார்த்தனர்=ஆன்மாக்களிடங்கூடி உயிர்க்குயிராய் நின்ற சிவபிரானது கிருபையினால், முத்து விளையுமாக்கதிர் வெண்குடை யார்த்தது மிசையே=முத்தினாலாகிய பெரியகிரணத்தையுடைய வெள்ளிய குடையும் மேலே (கவிக்கப்பட்டு) ஆரவாரித்தது—எ-று.

கருணையினார்த்தனர் என்புழி ஆர்த்தல் = கட்டுதல் என்று இயைபினால் பிணித்தல் மேற்று. ஏர்=அசைநிலை. களைகணார்த்து என்பது, களைகணாத்த தெனவிகாரமாயிற்று. (௨௧௮)

பல்குவெண்கதிர்ப் பத்திசேர்நித்திலச் சிவிகை
புல்குநீற்றொளி யுடன்பொலிபுகலிகா வலனா
ரல்குவெள்வளை யலைத்தெழுமணிநிரைத் தரங்க
மல்குபாற்கடல் வளர்மதியுதித்தென வந்தார்.

(இ-ள்) பல்குவெண்கதிர்ப் பத்திசேர்நித்திலச்சிவிகை=நிறைந்த வெள்ளிய கிரணத்தையுடைய முத்துக்களின் பத்திசேர்ந்த சிவிகையில், புல்கு நீற்றொளியுடன் பொலிபுகலி காவலனார்=நீங்காத திருநீற்றொளியோடு விளங்கும் சீகாழிக்குத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார், அல்குவெள்வளை யலைத்தெழுமணிநிரைத் தரங்கமல்கு=பொருந்திய வெள்ளிய சங்குகளை அலைத்தெழாநின்ற அழகிய வரிசையான அலைகள் நிறைந்த; பாற்கடல் வளர்மதியுதித்தெனவந்தார்=பாற்கடலில் வளர்கின்ற இளம்பிறை உதித்தாற்போல எழுந்தருளி வந்தார்—எ-று. (௨௧௯)

நீடுதொண்டர்கண் மறையவரனையோர் நெருங்கி
மாடுகொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேற் குவித்தே
யாடுகின்றன ரயர்ந்தன ரளவிலா னந்தங்
கூடுகின்றகண் பொழிபுனல்வெள்ளத்திற் குளித்தார்.

(இ-ள்.) நீடுதொண்டர்களுமறையவரேனையோர் நெருங்கி = பத்தியிற் சிறந்த அடியார்களும் வேதியர்களும் அவர் ஒழிந்த ஏனையோரும் இடமின்றி நெருங்கி (அத்திருப்பொலிவைநோக்கி), மாடுகொண் டெழுமகிழ்ச்சியின் மலர்க்கை மேற்குவித்தே = தமது (மனத்தினிடத்து) இடம்கொண்டு நிகழாநின்ற மகிழ்ச்சியினால் மலர்போலும் கைகளைச்சிரசின்மேற்கூப்பி, ஆடுகின்றனரா யார்த்தன ரளவிலானந்தம் = ஆனந்தக்கூத்து ஆடுகின்றவராயும் அதனால் பரவசம் அடைந்தவராயும் அளவுபடாத ஆனந்தத்தால், கூடுகின்ற கண்பொழி புனல் வெள்ளத்திற் குளித்தார் = கண்களினின்றும் பொழியும் ஆனந்தபாஷ்பமாகிய வெள்ளத்தில் மூழ்கினார்—எ-று. (௨௨௰)

செய்யபொன்புனை வெண்டாளத்தணி சிறக்கச்
சைவமாமறைத் தலைவர்பாற்பெறுந்தனிக் காளம்
வையமேழுடன் மறைகளுநிறைதவத் தோரு
முய்யஞானசம் பந்தன்வந்தானென வூத

(இ-ள்.) செய்யபொன்புனை வெண்டாளத் தணிசிறக்க = சிவந்தபொன்னால் வனைந்து வெள்ளியமுத்துக்களினால் அழகுபெற, சைவமாமறைத் தலைவர்பாற் பெறுந்தனிக்காளம் = பெரிய சைவவைதிகங்களுக்குத் தலைவராகிய அரத்துறை நாதரிடத்துப் பெற்ற ஒப்பில்லாத திருமுத்துக் காளமானது, வையமேழுடன் மறைகளு நிறைதவத்தோரும் உய்ய = ஏழுலகங்களோடு வேதங்களும் நிறைந்த தவத்தினரும் ஈடேற, ஞானசம்பந்தன் வந்தானென வூத = திருஞானசம்பந்தப் பிள்ளையார் வந்தா ரென்று திருமுன் ஊதா நிற்பவும்—எ-று. (௨௨௧)

சுற்றுமாமறைச் சுருதியின்பெருகொலி நடுவே
தெற்றினார்புர மெரித்தவர் தருதிருச் சின்ன
முற்றுமானவள் ஞானமேமுலைசுரந் தூட்டப்
பெற்றபாலறு வாயன்வந்தானெனப் பிடிக்க

(இ-ள்) சுற்றுமாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே = பிள்ளையாரைச் சூழ்ந்தபெரிய வேதங்களின் மிக்க ஆரவாரத்தினிடையே, தெற்றினார் புர மெரித்தவர் தருதிருச்சின்னம் = மாறுபட்டபகைவரது திரிபுரங்களைப் புன்னகை செய்து எரித்த அரத்துறைநாதர் தந்தருளிய திருச்சின்னம், முற்றுமானவள் ஞானமே முலைசுரந் தூட்டப்பெற்ற = (சித்தும்செடமுமாயபொருள்) முழுவதும் நிறைந்தவளாகிய உமாதேவியார் ஞானத்தையே திருமுலைசுரந்து உண்பிக்கப்பெற்ற, பாலறுவாயன் வந்தானெனப்பிடிக்க = பாலமணம் விட்டு நீங்காத திருவாயர் எழுந்தருளினாரென்று ஊதவும்—எ-று. (௨௨௨)

புணர்ந்தமெய்த்தவக் குழாத்தொடும்போதுவார் முன்னே
யிணைந்தநித்திலத் திலங்கொளிநலங்கிளர் தாரை
யணைந்தமாமறை முற்றகலையகிலமு மோதத்
துணர்ந்தமுத்தமிழ் விரகன்வந்தானென் றூத.

(இ-ள்.) புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார்முன்னே=தம்மோடு உடன்சென்ற மெய்த் தவத்தையுடைய அடியார் கூட்டங்களுடன் எழுந்தருளும் பிள்ளையார் திருமுன்; இணைந்த நித்தி லத்திலங்கொளி நலங்கிளர்தாரை=தம்முள் மாறுபடாத முத்துக்களால் விளங்கும் ஒளியின்நலமிக்க முத்தின்தாரை, அணைந்தமாமறை முதற்கலை யகிலமும் ஓதாதுணர்ந்த=தம்மையடையப் பெரிய வேதமுதலிய எல்லாநூல்களையுமோதாது உணர்ந்த, முத்தமிழ் விரகன்வந்தா னென்றூத=முத்தமிழ் விரகன்வந்தானென்று ஒலியாநிற்பவும்—எ-று.

முன்னர் நூலாசிரியர், பொங்கலூதும் பொருவருஞ்சின்னமும் அங்கணூதரருளின்ற கண்டனர் என்றதனால் ஈண்டு - காளம், தாரை, என்பன பரியாயங்களாய முத்தின் சின்ன மொன்றனையே குறித்ததெனின் —

ஞானசம்பந்தன், பாலறாவாயன், முத்தமிழ் விரகன், எனும் மூன்றுதிருநாமங்களையும் ஒருங்கு கூறிச்சின்னம் பிடிக்கவென முடித்தலைமையும், அவ்வாறு கூறாது அந்நாமங்களை மூன்றையு முறையே விதந்து கூறிச்சைவ மாமறைத்தலைவர் பாற் பெறுந்தனிக்காள மூதவெனவும், தெற்றினார் புரமெரித்தவர் தருதிருச்சின்னம் பிடிக்கவெனவும், நலங்கிளர் தாரையூதவெனவும், வெவ்வேறு செய்யுட் கூறுதலானும் பின்னும் சின்னம், தனிக்காளம், தாரை, சிரபுரத்தாண்டகை வந்தானென்னுந் தகைமைவிளம்ப ஏற்ற திருப்பெயர் சாற்ற வெனக் கூறுதலானும், மூன்றுமே பெற்றனவென்பது, கருத்தாகக் கூறினொன்பது கொள்ளக்கிடத்தலின், அதுபொருந்தாதெனக். (௨௰௯)

தெருளுமெய்க்கலை விளங்கவும்பாருளோர் சிந்தை
யிருளுநீங்கவு மெழுதுசொன்மறையளிப் பவர்தாம்
பொருளுஞானமும் போகமும்போற்றியென் பார்க்க
கருளுமங்கணர் திருவரத்துறையைவந் தணைந்தார்.

(இ-ள்.) தெருளுமெய்க் கலைவிளங்கவும் பாருளோர்சிந்தையிருளுநீங்கவும்=தெளிவடையச்செய்யும் மெய்ந்நூல்களாகிய வேதாகமநூல்கள் உலகின்கண் நிலைபெறவும் அதனால் உலகின்கண் உள்ளாரது மனத்திருளாகிய அஞ்ஞானம் நீங்கவும், எழுதுசொன்மறை யளிப்பவர்தாம்=எழுதுமத்தமிழ்ச்சொல்லானாய வேதத்தை அருளித்தருளும் பிள்ளையார், பொருளும் ஞானமும் போகமும் போற்றியென்பார்க்கருளும்=பொருளினையும் ஞானத்தினையும் போகத்தினையும் இம்மைக்கண் துதிக்கும் அடியார்களுக்குக்கொடுக்கும், அங்கணர் திருவரத்துறையை வந்தணைந்தார்=காருண்ணியத்தை யுடைய சிவபெருமானது திருவரத்துறையைவந்து அடைந்தருளினார்—எ-று.

இருளுமென்ற உம்மையால் கன்மமாயைகளுங்கொள்க.

அடியார்க்கு மறுமையென்னும் புண்ணிய வுலகடையும் இசையின்மையின் இம்மைக்கண்ணே ஞானமும் போகமும் சிவபெருமானருளவரென

கூறப்பட்டது. அவ்வாறுதல் பிள்ளையார் முதலியோரது சரித்திரத்தில் ஞானமளித்தலும் பொருளளித்தலும் சிவிகைமுதலிய போகமளித்தலும் போந்தவாறுணர்க. (௨௨௪)

வந்துகோபுர மணிநெடுவாயில்சேய்த் தாகச்
சந்தரித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தையார்வமு மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
வந்திணண்மதி யணிந்தவர்கோயிலுள் ளடைந்தார்

(இ-ள்.) கோபுரமணி நெடுவாயில் சேய்த்தாகவந்து=திருக்கோபுரத்தினது மணிகள் அழுத்திய நெடிய திருவாயிலுக்குச் சிறிது தூரத்தே வந்தருளி, சந்தரித்திலச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தெழுந்து=அழகுள்ள முத்துச்சிவிகையினின்றும் பூமியிலிழிந்தருளி அத்தூலலிங்கமாகிய கோபுரத்தை வணங்கி யெழுந்து, சிந்தையார்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன்செல்ல=திருவுளத்தில் சிவநேசமும் அதனால் மகிழ்ச்சியும் அதிகரித்து முன்செல்ல, அந்திணண்மதி யணிந்தவர்கோயிலுள் ளடைந்தார்=அந்திப்போதில் தோன்றும் இளம்பிறையை யணிந்த இறைவரது திருக்கோயிலுள்ளாரும் அடைந்தருளினார்—எ-று. (௨௨௫)

மன்னுகோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னியிற்கரங் குவித்துவீழ்ந்தன்பொடு திளைப்பா
ரென்னையும்பொரு ளாகவின்னருள்புரிந் தருளும்
பொன்னடித்தலத் தாமரைபோற்றியென் றெழுந்தார்

(இ-ள்) மன்னுகோயிலை வலங்கொண்டு திருமுன்புவந்து=நிலைபெற்ற திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்து ஸ்வாமி சந்நிதியில்வந்து, சென்னியிற் கரங்குவித்து வீழ்ந் தன்பொடு திளைப்பார்=தமது சிரத்தில் திருக்கரங்களைக் கூப்பி நிலத்தில் வீழ்ந்து அன்பில் மூழ்கியபிள்ளையார், என்னையும்பொருளாக வின்னருள் புரிந்தருளும்=அடியேனையும் ஒருபொருளாகக் கருதி இனிய திருவருளைச்செய்தருளும், பொன்னடித் தலத்தாமரைபோற்றியென் றெழுந்தார்=பொன்போலும் திருவடித்தாமரைமலர்களுக்கு நமஸ்காரமென்று எழுந்தார்—எ-று (௨௨௬)

வேறு.

சூடினார்கர கமலங்கள்சொரிந்திழி கண்ணீ
ராடினார்திரு மேனியில்ரத்துறை விரும்பி
நீடினார்திரு வருட்பெருங் கருணையே நிகழ்ப்
பாடினார்திருப் பதிகமேழிசையொடும் பயில.

(இ-ள்.) சூடினார் கரகமலங்கள்=கரங்களாகிய தாமரைமலர்களை மேற்கூப்பி, திருமேனியிற் சொரிந்திழிகண்ணீராடினார்=தமது திருமேனிமுழுதும்

கணைகளினின்றும் (இடைவிடாது) சிந்தும் ஆனந்தபாஷ்பவெள்ளத்தில் மூழ்கினார்; அரத்துறைவிரும்பி நீடினார் திருவருட்பெருங் கருணையே நிகழ=திருவரத்துறையை விரும்பி நிலைபெற்று எழுந்தருளிய சிவபிரானது திருவருளாகிய பெருங்கருணையையேபொருந்தும்படி, பாடினார்திருப்பதிகமேழிசையொடும்பயில=குரல்முதலிய ஏழிசைகளும் அமைந்த திருப்பதிகம் பாடியருளினார்—எ-று. (உஉஎ)

இசைவிளங்கிட வியல்பினிற்பாடிநின் றேத்தி
மிசைவிளங்குநீர் வேணியாரருளினால் மீண்டு
திசைவிளங்கிடத் திருவருள்பெற்றவர் சிலநா
ளசைவில்சீர்த்தொண்டர் தம்முடனப்பதி யமர்ந்தார்.

(இ-ள்) இசைவிளங்கிட வியல்பினிற்பாடி நின்றேத்தி=ஏழிசைகளும் விளங்கமுறைப்படித் திருப்பதிகத்தைப் பாடிநின்று துதித்து, மிசைவிளங்குநீர் வேணியா ரருளினால் மீண்டு=வானத்தின்கண் விளங்கிய கங்கையை யணிந்த சடாமகுடத்தையுடைய அரத்துறைநாதர் திருவருளினால் ஆலயத்தினின்றும் மீண்டு, திசைவிளங்கிடத் திருவருள் பெற்றவர்=எத்திசையிலுள்ளோருஞ் சிவஞானத்தால் விளங்கும்படித் திருவருளைப்பெற்ற பிள்ளையார்; அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன் சிலநாள் அப்பதியமர்ந்தார்=சலியாத பத்திச்சிறப்பினையுடைய அடியாரோடு அரத்துறையென்னுந் திருப்பதியில் சிலநாள் வீற்றிருந்தருளினார்—எ-று.

அசைவில் சீர்த்தொண்டர் என்பது=ஆக்கம் கேடுகளான்வரும் துன்பவின்பங்களில் வசப்படாமை

"பூதமைந்து நிலையிற் கலங்கினும் மாதொர்பாகர் மலர்த்தாள் மறப்பிலார்" என்றதனாலுமுணர்க. (உஉஅ)

தேவர்தம்பிரான் றிருவரத்துறையினி லிறைஞ்சி
மேவுநாள்களில் விமலனார்நெல்வெண்ணெய் முதலாத்
தாவிலன்பர்க டம்முடன் றொழுதுபின் சண்பைக்
காவலாரருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார்.

(இ-ள்) தேவர்தம்பிரான் றிருவரத்துறையினி லிறைஞ்சி=தேவர்பெருமானாகிய பரமசிவத்தின் திருவரத்துறையை வணங்கி, மேவுநாட்களில் விமலனார் நெல்வெண்ணெய்முதலா=அமர்ந்தருளியிருந்தகாலத்தில் வெண்ணெய்ப்பரது திருநெல்வெண்ணெய்முதலியதிருப்பதிகளை, தாவிலன்பர்கள் தம்முடன் றொழுது=புனிதராகிய அடியார்களுடன் வணங்கி விடைகொண்டு, பின்சண்பைக் காவலாரருள் பெற்றுடன் கலந்து மீண்டணைந்தார்=பின்பு சீகாழிப்பிள்ளையார் திருஅருள்பெற்றுத் திருக்கூட்டத்தோடு சேர்ந்துமீளவும் அரத்துறையை அடைந்தருளினார்—எ-று. (உஉ௯)

விளங்குவேணுபுரத்திருத்தோணி வீற்றிருந்த
களங்கொள்கண்டர்தங் காதலியாருடன் கூட
வுளங்கொள்ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட வுருகி
வளங்கொள்பூம்புனற் புகலிமேற்செல்மனம் வைத்தார்.

(இ-ள்.) விளங்குவேணு புரத்திருத் தோணிவீற்றிருந்த களங்கொள்கண்டர் = செல்வங்களால் விளங்காநின்ற சீகாழியில் திருத்தோணி யென்னும் ஆலயத்தில் எழுந்தருளிய விஷத்தைத்தரித்த கண்டத்தையுடைய தோணியப்பர், தங்காதலி யாருடன்கூட = தமதுபிராட்டியாராகிய பெரியநாயகியாரோடு, உளங்கொள்ளப் புகுந்துணர்வினில்வெளிப்பட = தமது திருவுள்ளத்தில் பொருந்தும்படி எழுந்தருளி அறிவின்கண் விளங்க, உருகி வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செல்மனம் வைத்தார் = அதனால் மனம் உருகிப்பல வளங்கள் பொருந்திய பொருளினை யுடைய நீர்மிக்க சீகாழிக்குச் செல்லத்திருவுள்ளங் கொண்டார்—எ-று. (௨௯௰)

அண்ணலார்திரு வரத்துறையடிகளை வணங்கி
நண்ணுபேரரு ளால்விடைகொண்டுபோய் நடங்கொண்
டுண்ணிறைந்தபூங் கழலினையுச்சிமேற் கொண்டே
வெண்ணிலாமலர் நித்திலச்சிவிகைமேற் கொண்டார்

(இ-ள்) அண்ணலார் திருவரத்துறை யடிகளைவணங்கி = பெருமையிற் சிறந்த அரத்துறை நாதனைவணங்கி, நண்ணுபேரருளால் விடைகொண்டு போய் நடங்கொண்டு = நிலைபெற்ற அவரது பெரிய திருவருளால்விடைபெற்றுக்கொண்டு மீண்டு ஆனந்தக் கூத்தாடி, உண்ணிறைந்த பூங்கழலினை உச்சிமேற்கொண்டு = தமது திருவுள்ள முழுதும் நிறைந்த பொலிவினையுடைய திருவடிகளைச் சிரசின்மேற்கொண்டு, வெண்ணிலாமலர் நித்திலச்சிவிகை மேற்கொண்டார் = வெள்ளியகிரணம் விரிந்த திருமுத்துச்சிவிகையின்மேற்கொண்டருளினார்—எ-று.

எவ்வயிற் பெயரும் வெளிப்படத்தோன்றி அவ்வயின் நிலையல் செவ்விதென்ப என்றதனால் இச்செய்யுள்கள் தோன்றா எழுவாயுடையன இவ்வாறு வந்துழி யெல்லாம் கொள்க. (௨௯௧)

சிவிகைமுத்தினிற் பெருகொளிதிசையெலாம் விரிக்கக்
கவிகைவெண்மதிக் குளிரொளிகதிர்செய்வான் கலப்பக்
குவிகைமேற்கொண்டு மறையவர்குணலையிட் டார்ப்பப்
புவிகைமாறின்றிப் போற்றவந்தருளினார் போந்தார்

(இ-ள்) சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் விரிக்க = திருமுத்துச் சிவிகையின் முத்துக்களாலாய பெருகிய ஒளியானது திக்குகள்தோறும் விரியா நிற்கவும்; கவிகைவெண் மதிக்குளிரொளி கதிர்செய்வான்கலப்ப = முத்துக் குடையாகிய வெள்ளிய சந்திரனது குளிர்ந்த ஒளியானது சூரிய

கிரணத்தால் விளங்குகின்ற ஆகாயத்தில் பரவவும், குவிகைமேற் கொண்டு மறையவர் குணலையிட்டார்=குவித்த கைகளை உச்சிமேற்கொண்டு பிராமணர்கள் குணலையிட்டுக் கூத்தாடவும், புவிகை மாறின்றிப் போற்ற வந்தருளினர் போந்தார்=இவ்வுலகத்தாரால் யாதொருகைம்மாறான பலனையும் அடையாமல் அவரை இரட்சிக்கஎழுந்தருளிய ஆளுடையபிள்ளையார் போந்தருளினர்—எ-று.

குணலை என்பது மகிழ்ச்சியின் மிகுதியால் வாயினின்றும் வெளிப்படும் ஓர் ஒலி. (உ௬௨)

மறைமுழங்கின தழங்கின வண்டமிழ் வயிரின்
குறைநரன்றன முரன்றன வளைக்குலங் காளம்
முறையியம்பின வியம்பல வொலித்தன முரசப்
பொறைகறங்கின பிறங்கின போற்றிசெய் யரவம்

(இ-ள்) மறைமுழங்கின தழங்கின வண்டமிழ்=வேதங்கள் ஆரவாரித்தன வண்மையையுடைய திருநெறித்தமிழ் வேதமும் ஒலித்தன, வயிரின்குறை நரன்றன=ஊது கொம்புக ளொலித்தன, முரன்றன வளைக்குலங்காளம்=சங்குகளும் காளங்களும் ஒலித்தன, முறையியம்பின வியம்பலவொலித்தன=முறையாக உள்ளனவாகிய பலவாத்தியங்களும் ஒலித்தன, முரசப்பொறை கறங்கின=கொட்டுகின்ற முரசமாகிய பெரியவாத்தியங்களும் ஒலித்தன, பிறங்கின போற்றி செய்யரவம்=அரவென்று துதிசெய்கின்ற ஓசைகள் ஒலித்தன—எ-று.

பொறையென்பது மலை பொறை போன்றிருத்தலிற் பொறையென்றார்.

உடையபிள்ளையார் வருமெல்லையுள்ளவப் பதியோர்
புடையிரண்டினுங் கொடியொடுபூந்துகில் விதானம்
நடைசெய்காவணந் தோரணம்பூகநற் கதலி
மிடையுமாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார்.

வழுவில் சீர்த்திருப் பூவனூர் வணங்கிவந் தணைந்து

(இ-ள். பழுதில்சீர்த்திருப்பருதி நன்னியமும்பணிந்து=குற்றமற்றசிறப்புவாய்ந்த திருப்பருதிநியமமென்னுந் திருப்பதியைவணங்கி, அங்கு எழுதுமாமறையாம் பதிகத்திசைபோற்றி=அத்திருப்பதியில் எழுதும் பெரியவேதமாகிய திருப்பதிகத்தை இசையோடுபாடியருளி, முழுதுமானவர் கோயில்கள்வணங்கி=எப்பொருளுந்தாமாய் அதுவதுவாய் வியாபித்துநிற்குஞ் சிவபிரானெழுந்தருளிய திருக்கோயில்கள் பலவற்றையும்வணங்கி, முறைமை வழுவில் சீர்த்திருப்பூவனூர் வணங்கிவந்தணைந்து=சாஸ்திரிய அறநெறியில் வழுவில்லாத சிறப்பினையுடையார்வாழும் திருப்பூவனூரைத்தொழுது அங்கு வந்தடைந்தருளி—எ-று. (கஎரு)

திருப்பருதிநியமம்-பண்-பழம்பஞ்சுரம்

திருச்சிற்றம்பலம்

விண்கொண்ட தூ மதிசூடி நீடுவிரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண்ணீறு பூசிப்பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலொடேர் கவர்ந்தகள்வர்க் கிடம்போலும்
பண்கொண்டு வண்டினம்பாடி யாடும்பருதி நியமமே

பையரவம் விரிகாந்தள் விம்முபருதி நியமத்துத்
தையலோர் பாகமாந் தவனைத் தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலைபுனைந்த பத்தும்பரவிப் புகழ்ந்தேத்த
வையுற வில்லைப்பிறப் பறுத்தல்வலம் யடையாவே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-பருதியப்பர் தேவியார்-மங்களநாயகியம்மை

பொங்கு காதலிற் போற்றியங் கருளுடன்போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவுமுன் பணிந்தே
யெங்கு மன்பர்க ளேத்தொலி யெடுக்கவந் தணைந்தார்
அங்கணர்க்கி டமாகிய பழம்பதி யாவூர்

(இ-ள்) பொங்குகாதலிற்போற்றியங்கருளுடன்போந்து=மிக்கவிருப்புடன்றுதித்து அத்திருப்பதியினின்றும் திருவருளோடுசென்றருளி, பங்கயத்தடம்பணைப் பதிபலவுமுன்பணிந்து=தாமரைமலர்கள்பொருந்திய பொய்கைகளையும் வயல்களையுமுடைய பலதிருப்பதிகளையும் முன்னே வணங்கி,

எங்குமன்பாக வேத்தொலியெடுக்க = எவ்விடத்தும் அடியார்கள் வாழ்த்தொலி எடுக்க; அங்கணர்க்கிடமாகியபழம்பதியாரூர்வந்தணைந்தார் = பசுபதீச்சரமெழுந்தருளிய பழையதிருப்பதியாகிய திருவாரூரை வந்தடைந்தருளினார் — எ-று.

பணிவார் வந்தணைந்தா ரெனக்கூட்டுக (௯௭௯)

பணியு மப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை யுள்புக்கு வழிபடும் விருப்பினால் வணங்கித்
தணிவில் காதலிற் றண்டமிழ் மாலைகள் சாத்தி
யணிவி ளங்கிய திருநல்லூர் மீண்டும்வந் தணைந்தார்.

(இ-ள்.) பணியுமப்பதிப் பசுபதீச்சரத் தினிதிருந்த = யாவரும் வணங்கும் அவ்வாரூர்ப்பசுபதீச்சரத்து இனிதாகவீற்றிருந்த, மணியையுள்புக்குவழிபடும் விருப்பினால் வணங்கி = தேவசிகாமணியாகிய பசுபதிநாதரைத் திருக்கோயிலினுட்சென்று வழிபடுதற்குரிய விருப்போடுவணங்கி; தணிவில்காதலிற்றண்டமிழ்மாலைகள்சாத்தி = அடங்காதவிருப்போடு குளிர்ந்த திருப்பதிகமாலைகளைச்சாத்தி, அணிவிளங்கிய திருநல்லூர்மீண்டும் வந்தணைந்தார் = அழகால்விளங்கிய திருநல்லூரென்னுந் திருப்பதியை மீளவும் வந்தடைந்தருளினார் — எ-று. (௯௮௦)

திரு ஆவூர் - பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புண்ணியர்பூதியர் பூதநாதர் புடைபடுவார்தம் மனத்தார்திங்கட்
கண்ணியரென்றென்று காதலாளர் கைதொழுதேத்த விருந்தவூராம்
விண்ணுயர்மாளிகை மாடவீதி விரைகமழ்சோலை சுலாவியெங்கும்
பண்ணியல்பாட லறாதவாவூர்ப் பசுபதியீச்சர மாடுநாவே

எண்டிசையாரும் வணங்கியேத்து மெம்பெருமானை யெழில்கொளாவூர்ப், பண்டுரியார்சிலர் தொண்டர்போற்றும் பசுபதியீச்சரத் தாதிதன்மேற், கண்டல்கண்மிண்டிய கானற்காழிக் கவுணியன் ஞானசம்பந்தன்சொன்ன, கொண்டினிதாவிசை பாடியாடிக் கூடுமவருடையார்கள்வானே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பசுபதீசர் தேவியார்-மங்களநாயகியம்மை.

மறைவி ளங்குமப் பதியினின் மணிகண்டர் பொற்றா
ணிறையு மன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைய ணிந்தவ ரருள்பெறப் பிரசமென் மலர்வண்
டறைந றும்பொழிற் றிருவலஞ் சுழியில்வந் தடைந்தார்.

(இ-ள்.) மறைவிளங்கு மப்பதியினின் மணிகண்டர்பொற்றாள்=வேதங்கள் நிலைபெற்றுவிளங்கும் அத்திருப்பதியினின் கண்ணெழுந்தருளிய நீலகண்டராகிய பெரிய பாண்டவேசரது அழகியதிருவடிகளை; நிறையுமன்பொடு வணங்கியேநிகழ்பவர்=நிறைந்த அன்போடுவணங்கி அங்குநின்று எழுந்தருளும் பிள்ளையார், நிலவும் பிறையணிந்தவரருள்பெற=விளங்கும் இளம்பிறையையணிந்த சிவபெருமானது திருவருளைப்பெறும்பொருட்டு, பிரசமென்மலர்வண்டறை நறும்பொழிற் றிருவலஞ்சுழியில் வந்தடைந்தார்=தேன்பொருந்திய மெல்லியமலர்களிடத்து வண்டுகள் கீதம்பாடுகின்ற நல்லவாசனை பொருந்திய சோலைசூழ்ந்த திருவலஞ்சுழியென்னுந் திருப்பதியில் வந்தடைந்தருளினார்—எ-று. (௩௭௮)

மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரு மன்பர்கண் முத்தமிழ் விரகர்தம் முன்வந்
தெதிர்கொள் போழ்தினி லிழிந்தவ ரெதிர்செல மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார்.

(இ-ள்.) மதிபுனைந்தவர் வலஞ்சுழிமருவுமாதவத்துமுதிருமன்பர்கள்=மூன்றாம்பிறையைத்தரித்த கற்பகத்தீசரெழுந்தருளிய திருவலஞ்சுழியென்னுந் திருப்பதியில்வசிக்கும் பெரியதவத்தால் மேம்பட்ட அடியார்கள், முத்தமிழ்விரகர்தம்முன்வந்தெதிர்கொள்போழ்தினில்=முத்தமிழ் விரகராகியபிள்ளையார் திருமுன்வந்து எதிர்கொள்ளும்போழ்தில், இழிந்தவரெதிர்செல=அத்திருமுத்துச் சிவிகையினின்றும் இறங்கிப்பிள்ளையார் எதிர்சென்றருள, மதியைக்கதிர்செய் வெண்முகிற்குழாம்புடை சூழ்ந்தெனக்கலந்தார்=சந்திரனைப்பிரகாசிக்கின்ற வெள்ளியமேகக்கூட்டங்கள் பக்கத்திற்சூழ்ந்தாற்போல எதிர்கொண்ட அடியார்கள் பிள்ளையார்பக்கலிற்சூழ்ந்து கலந்தார்கள்—எ-று.

கலந்த வன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவ
ரலர்ந்த செங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ் சுழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொ ணீள்சுடர்க் கோபுர மிறைஞ்சியுட் புக்கார்.

(இ-ள்.) கலந்தவன்பர்க டொழுதெழக்கவுணியர் தலைவர்=தம்மை எதிர்கொண்டுவந்த அடியார்கள் வணங்கி எழுங்கால் ஆளுடையபிள்ளையார், அலர்ந்தசெங்கமலக் கரங்குவித்துடனணைவார்=மலர்ந்தசெந்தாமரை மலர்போலும் திருக்கரங்களைக்கூப்பி அவரோடு செல்வாராய், வலஞ்சுழிப்பெருமான்மகிழ் கோயில்வந்தெய்தி=திருவலஞ்சுழியில் கற்பகத்தீசர்மகிழ்ந்து எழுந்தருளியிருக்குந் திருக்கோயிலையடைந்து, பொலங்கொணீள்சுடர்க்கோபுரமிறைஞ்சி உட்புக்கார்=பொன்னாலாகிய உயர்ந்த ஒளியையுடைய திருக்கோபுரத்தைவணங்கி உள்ளே புகுந்தருளினார்—எ-று. (௩௮௰)

மருவ லார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டுருகு மன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகு மாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர்.

(இ-ள்) மருவலார் புரமுனிந்தவர் திருமுன்றில்வலங்கொண்டு=பகைவர்களாகிய அசுரர்களது முப்புரங்களையும் கோபித்தெரித்தருளிய கற்பகத்தீசரது திருமுற்றத்தைப் பிரதட்சணஞ்செய்து; உருகுமன்புடனுச்சிமே லஞ்சலியினராய்=நெக்குவிட்டுருகு மனபோடு உச்சிமேற் குவித்த அஞ்சலி அத்தராய், திருவலஞ்சுழியுடையவர் சேவடித்தலத்தில்=திருவலஞ்சுழியிலெழுந்தருளிய அக்கற்பகத்தீசரது சிவந்த திருவடியின்கீழ், பெருகுமாதரவுடன் பணிந்தெழுந்தனர்பெரியோர்=மிகவெழுந்த பத்தியோடு வணங்கி எழுந்தார் ஆளுடையபிள்ளையார்—எ-று. (௬௪௧)

ஞான போனகர் நம்பர்முன் றொழுதெழு விருப்பா
லான காதலி லங்கண ரவர்தமை வினவு
மூன மில்லிசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லாமணி கண்டரைப் பாடினார் பரவி.

(இ-ள்) ஞானபோனகர் நம்பர்முன் றொழுதெழுவிருப்பால்=சிவஞானத்தைத் திருவமுதுசெய்தவராகிய ஆளுடைய பிள்ளையார் கற்பகத்தீசர் திருமுன்னே வணங்கியெழும் விருப்பத்தால், ஆனகாதலிலங்கணரவர்தமைவினவும்=உண்டாகிய அன்பினால் அச்சிவபிரானை அவரது அருட்குணங்களை வினவும்பொருளையுடைய; ஊனமில்லிசையுடன் விளங்கியதிருப்பதிகம்="விண்டெலாமலரவிரைநாறும்" என்னுமுதலோடுகூடிய குற்றமில்லாத இசைபொருந்திய திருப்பதிகத்தினைக்கண், பானலாமணிகண்டரைப் பாடினார் பரவி=கருங்குவளைமலர்போலும் கரியகண்டத்தையுடைய அக்கற்பகத்தீசரைத் துதித்துப்பாடியருளினார்—எ-று. (௬௪௨)

திருவலஞ்சுழி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் டேன்விம்மி
வண்டெ லாநசை யாலிசை பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர் போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம்பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே.

வீடு ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானவல் லாரடி சேர்வது ஞானமே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-கற்பகத்தீசர். தேவியார்-மங்களநாயகியம்மை.

புலன்கொ ளின்றமிழ் போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருந்து
நலங்கொள் காதலி னாதரா னாடொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்றொண்டர் தம்முடன் மகிழ்ந்தார்.

(இ - ள்.) புலன்கொளின்றமிழ்போற்றினர் புறத்தினிலணைந்து=திருவருள் ஞானம்நிறைந்த இனியதிருப்பதிகத்தால் துதித்தவராய திருக்கோயிலின் பக்கத்தடைந்து, இலங்குநீர்ப்பொன்னிசூழ் திருப்பதியினில் இருந்து=விளங்கிய நீர்மயமாகிய காவிரிநதிசூழ்ந்த அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்து, நலங்கொள்காதலின் நாதராள்நாடொறும்பரவி=நன்மைபொருந்திய அன்போடு கற்பகத்தீசரது திருவடிகளைத் தினந்தோறுந் துதித்து, வலஞ்சுழிப்பெருமான் தொண்டர்தம்முடன் மகிழ்ந்தார்=அத்திருவலஞ்சுழியில் எழுந்தருளிய சிவபிரானது அடியாரோடு மகிழ்கூர்ந்தருளினார்—எ-று. (௩௮௩)

மகிழ்ந்த தன்றலை வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்த ஞாயிறு * துணைப்புண ரோரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்

(இ-ள்.) மகிழ்ந்து அதன்றலைவாழுமந்நாளிடை=மகிழ்ச்சியடைந்து அத்திருவலஞ்சுழியின்கண் வாழ்கின்ற அந்நாளில், வானிற்றிகழ்ந்தஞாயிறு=ஆகாயத்தின்கண் விளங்குகின்றசூரியன், துணைப்புணரோரையுட்சேர்ந்து நிகழ்ந்ததன்மையின்=மிதுனராசியோடுகூடி இருந்ததன்மையினால், நிலவுமேழ்கடனீர்மைகுன்ற=விளங்கும் ஏழ்கடலும் தம்மியல்புகெட, வெகுண்டு வெங்கதிர்பரப்பலின் முதிர்ந்ததுவேனில்=கோபித்து அச்சூரியன் தமதுகொடியகிரணங்களைப் பரப்புதலினால் முதுவேனிற்காலம் அதிகரித்தது—எ-று.

ஏழ்கடல் நீர்மைகுன்றலாவது, நீர்வாழ் உயிர்கள் பிறவாமையும் மணிமுதலியன தோற்றாமையும் என்க. மிதுனராசி இரட்டையாகலில் துணைப்புணரோரை என்றார், மிதுனராசியில் சூரியன் வருங்காலமாகிய ஆனி முதுவேனிலாதலில் வெகுண்டுவெங்கதிர்பரப்பலினென்றும், அதனால் முதிர்ந்ததுவேனிலென்றுங் கூறினார். உட்டிணகாலஞ் சீதகாலமென்னு மிருதுக்களின் வேறுபாட்டால் சூரியகிரணம் விரிதலும் சுருங்குதலுமாயத் தோன்றுதலேயன்றித் தனினியல்பால் ஒரியல்பிற்றுயின்றுங் காலவேறுபாட்டால் தோன்றும் வெப்பவிரிவை சூரியன்மேலேற்றி வெகுண்டு வெங்கதிர்ப்பரப்பலினென்றார், அவ்வாறு முன்னும் முன்பனிக்காலங்கூறுமிடத்து வெய்யவனுங்கர நிமிர்க்கமாட்டான்போல விசும்பினிடையைத் வெயில்விரிப்பதுவு மடங்குவதா மாருமால என்றார். (௩௮௪)

* துணைப்புணர் ஓரை=மிதுனராசி.

தண்புனற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்ப்பொதி பனிநீர்
நண்புடைத்துணை நகைமணி முத்தணி நாளு
முண்ப மாதுரி யச்சுவை யுலகுளோர் விரும்ப.

(இ-ள்.) தண்புனற் குளிர்கானறுஞ் சந்தனத்தேய்வை=குளிர்ந்தநீரோடு சீதம்பொருந்திய தென்றற்காற்றையும் நல்லசந்தனக்குழம்பையும், பண்பு நீடிய வாசமென்மலர் பொதிபனிநீர்=குணமிக்க வாசனைபொருந்திய மிருதுவான பூக்களோடுசேர்ந்த பனிநீரையும், நண்புடைத்துணை நகைமணிமுத்தணி=நண்பினையுடைய மனைவியையும் விளங்குங்கிரணத்தையுடைய முத்தாரத்தையும், நாளுமுண்பமாதுரியச்சுவை யுலகுளோர்விரும்ப=அக்காலத்து நாடோறு முண்ணும்பொருட்டு மதுர உணவுகளையும் உலகத்தார்விரும்பும்படி—எ-று.

இவை வேனிற்காலத்துவிரும்பும் பொருள்களாதலின் முற்கூறப்பட்டன, உண்ப என்பது பகர எழுத்துப் பேறுபெற்ற செயவெனெச்சம், உண்ப பவந்தானெனப்புழிப்போலக்கொள்க பரப்பலின் விரும்பவேனில் விரிதரு நாளிலெனக்கூட்டுக. மலர்பொதி பனிநீராவது மலர்களினும் மலர்மாலைகளினும் தோய்த்தபனிநீரெனக (௩௮௫)

வேறு.

அறன்மலியுங் கானயாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்றொடரு
முறையுணவு கொள்ளும்புட் டேம்பிவய லிரைதேரும்
பறவைசிறை விரித்தொடுங்கப் பணிப்புறத்து வதியுமால்.

(இ-ள்) அறன்மலியுங்கானயாற்றினீர்நசையாலணையுமான் = கருமணல்மிக்க காட்டாற்றின்கண்ணீர் வேட்கையாற்செல்லும் கருமான்கூட்டங்கள் (நீர்பெறாமையின்), பெறலரியபுனலென்று பேய்த்தேரின்பின்றொடரும்= நீர்வேட்கை தணித்தற்குத் தாம்பெறாத நீரிதுவென்று கானலின்பின்சென்று தொடரும், உறையுணவுகொள்ளும் புட்டேம்பி அயலிரைதேரும்=மழைத் துளிகளை உணவாகக்கொள்ளும் சாதகப்புட்கள் மழைத்துளிபெறாமையால் வருந்தி பக்கங்களில் வேறிரையைத்தேடும், பறவைசிறைவிரித்தொடுங்கப் பணிப்புறத்துவதியும்=பறவைகள் சிறைகளை விரித்துக்கொண்டு வெயில்பொறாமையால் தாம் ஒடுங்குதற்குக்குளிர்ந்த இடங்களைத்தேடி இருக்கும்—எ-று.

கதிரவரவால் சக்கரவாகமுந் திங்களின்வரவால் சகோரமுங்கொண்மூ வரவால் மஞ்ஞையும் களிக்குமாறுபோல சாதகப்புள்ளும் ஆவணிக்கண்வீழு மழைத்துளியுண்டுகளிக்கும் ஆகலின் அச்சாதகப்புள்ளை உறையுணவுகொள்ளும் புள்ளென்றார். சாதகப்புள்ளாவது வானம்பாடி. "வானம்பாடிசாதகப்புள்ளே" என்பதனாலுமறிக. சக்கரவாகம் இரவில்பெடையுஞ் சேவலும்பிரிந்து துழனிசெய்து இணைவிழைச்சு இன்றிவருந்தும் அதுகதிரவரவுகண்டுமகி

ழ்ந்து பெடையைமுயங்கி இருக்கும் ; அதனால் சக்கரவாகத்திற்குக் கதிரவரவு இன்பமாயிற்று. தேம்பவென்பபாடமாயின் தேம்பவெனவும் அயலிலிரைதேரும் புள் எனவும் கூறுக. (௬௮௬)

நீணிலைமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழன்ற சோலையினு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்துங்
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால்

(இ-ள்.) நீணிலைமாளிகை மேலுநிலாமுன்றின்மருங்கினிலும்=உயர்ந்த அடுக்குமாளிகைமேலும் நிலாமுற்றத்தின்பக்கத்திலும், வாணிழன்ற சோலையினும்=ஒளிதங்கிய நிழலையுடைய நல்லசோலைகளினும், மலர்வாவிக்கரைமாடும்=மலர்களுடைய தடாகக்கரையின் பக்கத்தும், பூணிலவுமுத்தணிந்தபூங்குழலார்முலைத்தடத்தும்=விளங்கிய முத்தாரத்தை யணிந்த பெண்களது முலையாகிய உயர்ந்த இடத்தும், காணுமகிழ்ச்சியின் மலர்ந்து மாந்தர் கலந்துறைவர்=தம்மிடத்து உதிக்கும் மகிழ்ச்சியோடு மனிதர்கள் கலந்து இருப்பார்கள்—எ-று.

நிலாமுற்றம் மேல்மாளிகையின் நிலவுவிழும்படிசெய்த முற்றம் (௬௮௭)

மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயில்சச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில்

(இ-ள்.) மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரிய=மயில்களொடுங்கவும் வண்டுகளாடவும் தாமரையினது அரும்பும் பருவத்தினையுடைய முகைமலர்கள்விரியவும், குயிலொடுங்காச்சோலையின் மென்றளிர்கோதிக்கூவியெழ=குயில்கள் வாயொடுங்காமற்சோலையிலுள்ள மெல்லியமாந்தளிர்களை மூக்காற்கோதிச்கூவி யெழவும், துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயில=பகலில் உறங்காவுயிர்களும் உறக்கம்வருதலால் நித்திரைசெய்யவும், சுடர்வானில் வெயிலொடுங்கா வெம்மைதருமவேனில் விரிதருநாளில்=சூரியன் ஆகாயத்தில் தனது கிரணம்குறையாமல் உட்டிணத்தைத்தருமமுதுவேனிற்காலம் எங்கும் விரிந்தகாலத்து—எ-று.

பகலில் உறங்குமுயிர் கூகைவெளவால்முதலியன பகலில் உறங்காவுயிர் காக்கை மாடப்புறாமுதலியன, இதனால் உறங்கா உயிரையும் உறங்கச்செயயும் அருங்கோடை என்னும் பதிகப்பொருள் போந்தவாறு அறிக. (௬௮௮)

சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சூழ்ந்தை
யெண்பெருகத் தொழுதேத்திப் பன்முறையா றையத்துறக்கு
நண்புடைய வடியார்க ளுடன்போந் நடந்தருளி
விண்பொருநீண் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார்.

(இ-ள்.) சண்பைவருமபிளளையாா சடாமகுடர்வலஞசுழியை=சீகாழி யில அவதரிதத ஆளுடையபிளளையாா சடாமகுடத்தையுடைய கற்பகத்தீச ரது திருவலஞ்சுழியை , எணபெருகதொழுதேததி = திருவுள்ளக்கருதது மேன்மேல வளரவணஙகிவாழ்ததி , பழையாறையெயதுதற்கு நண்புடைய அடியாாகளுடன போதநடநதருளி=திருபபழையாறை என்னுந திருப்பதி யை அடைதறகுதமமினின்றுமபிரியாத அடியாாகளதமமுடனவரசசென்றரு ளி , விணபொருநீணமதில ஆறைமேறறளிசெனறெயதிஞா=விணணுலகளவு யாநத திருமதிளசூழநத திருஆறைமேறறளிசென்றடைநதருளிஞா—எ-று

திருவாறை மேறறளியின வீறறிருநத செநதீயி
னுருவாள னடிவணஙகி யுருகியவன பொடுபோறறி
மருவாருங குழனமலையாள வழிபாடு செயயவரு
டருவாாதந திருசசததி முறறததின புறஞசாாநதாா

(இ-ள்) திருவாறைமேறறளியின வீறறிருநத=திருவாறைமேறறளியெ னறுநதிருபபதியில எழுநதருளியிருநத , செநதீயின உருவாளன அடிவண ஙகி=சிவநத தீவணணரான சோமேசரது திருவடிகளைவணஙகி , உருகிய அனபொடுபோறறி=நெகககுவிடடு உருகிய அனபோடுதுதிதது , மருவாருங குழனமலையாள வழிபாடுசெயய அருளதருவாாதம=வாசனை பொருநதிய குழலையுடைய உமாதேவியாா வழிபடுஙகாரணததால அவாககு அருளசெய யும சிவககொழுநதீசரது , திருசசததி முறறததின புறஞசாாநதாா=திருச சததிமுறறததின புறததையடைநதருளிஞா—எ-று (ருகூ0)

திருசசததி முறறததிற செனறெயதித திருமலையாள
அருசசிதத சேவடிக ளாாவமுறப பணிநதேததிக
கருசசுறறி லடையாமற கைதருவாா கழலபாடி
விருபபுறறுத திருபபடடீச சரமபணிய மேவுஙகால.

(இ-ள்) திருசசததிமுறறததிற செனறெயதி=திருசசததிமுறறம் என் றும திருபபதியை அடைநதருளி , திருமலையாள அருசசிதத சேவடிகளாாவ முறபபணிநதேததி=உமாதேவியாா அருசசனைசெயத சிவநத திருவடிகளை அனபுமிகவணஙகிவாழததி , கருசசுறறிலடையாமற கைதருவாாகழலபாடி= பிறவி எனனுஙகடறசுழியில அழுநதாமல திருககைதநதருளுஞ் சிவககொழுந தீசரது திருவடிகளைததுதிதது ; விருபபுறறுத திருபபடடீசசரமபணிய மே வுஙகால=விருபபஙகொணடு திருபபடடீசசரமெனனுந திருபபதியை வணங கசசெனறருளுஙகாலததில—எ-று. (ருகூக)

வெமமைதரு வேனிலிடை வெயிலவெபபந தணிபபதறகு
மும்மைநிலைத தமிழவிரகா முடிமீதே சிவபூதந
தமமையறி யாதபடி தணடாளப பநதரெடுதத
செமமைவிடுத தருளபுரிநதாா படடீச செனறியமப.

(இ-ள்.) வெம்மைதருவேனிலிடை வெயில்வெப்பந்தணிப்பதற்கு=உடம்பின் தன்மைத்தரும வேனிற்காலத்தில் வெயிலவெம்மையைத்தணிக்கும்பொருட்டு; மும்மைத்திறத்தமிழ் விரகர்முடிமீது=முத்தமிழ்விரகராகிய பிள்ளையார் திருமுடியின்மேல; சிவபூதம் தம்மையறியாதபடி தண்டரளப்பந்தர் எடுத்து=சிவபூதங்கள் தம்மைப்பிள்ளையார் அறியாத வண்ணங்குளிர்ந்த முத்துப்பந்தரை எடுத்து, எம்மைவிடுத்தருள்புரிந்தார் பட்டிசரென்றியம்ப=திருப்பட்டீசர் எங்களைவிடுத்தருளினாரென்றுகூற—எ-று. (௬௬௨)

அவ்வுரையு மணிமுத்தின் பந்தருமா காயமெழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
இவ்வினைதா னீசர்திரு வருளாகி லிசைவதெனை
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்.

(இ-ள்.) அவ்வுரையுமணிமுத்தின் பந்தருமாகாயமெழ=அந்தவார்த்தையும் முத்தாலாகிய திருப்பந்தரும் ஆகாயத்தில் எழாநிற்க, செவ்வியமெய்ஞ்ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்=செம்மையை உடைய உண்மைஞானத்தை உணர்ந்தருளிய சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார், இவ்வினைதானீசர் திருவருளாகி லிசைவதெனை=இச்செய்கைதான் சிவபெருமான் திருவருளாயின் அதற்குடன்படத்தக்கதென்று, மெய்விரவுபுளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார்=திருமேனிமுற்றும்பொடித்த புளகத்தோடு பூமியின்மேல் வணங்கியருளினார்—எ-று. (௬௬௩)

அதுபொழுதே யணிமுத்தின் பந்தரினை யருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரா லப்பந்தர் பூம்பந்த ருமபோலும்.

(இ-ள்.) அதுபொழுதே யணிமுத்தின்பந்தரினை யருள்சிறக்க=அப்பொழுது அழகியமுத்தாலாகியபந்தரைச் சிவபிரான் திருவருளையாவர்க்கும் புலப்பட, கதிரொளியமணிக்காம்புபரிசனங்கள்கைக்கொண்டார்=விளங்குங்கிரணத்தையுடைய அத்திருமுத்துப்பந்தரின் ஒளிபொருந்திய இரத்தினக்காம்பைப் பிள்ளையாரைச்சூழ்ந்த திருத்தொண்டர்கள் கையிற்றாங்கினார்கள், மதுரமொழிமறைத்தலைவர்மருங்கு=இனிய திருவாக்கினையுடைய பிள்ளையார்பக்கலில், இமையோர்பொழிவாசப்புதுமலரால்அப்பந்தர் பூம்பந்தருமபோலும்=தேவர்கள்பொழியும் வாசனைபொருந்திய புதியமலரால் அம்முத்துப்பந்தர் பூவாலாகிய பந்தரையும் ஒத்துவிளங்கும்—எ-று. (௬௬௪)

தொண்டர்குழா மார்ப்பெடுப்பச் சுருதிகளின் பெருந்துழனி
யெண்டிசையு நிறைந்தோங்க வெழுந்தருளும் பிள்ளையார்
வெண்டரளப் பந்தர்நிழன் மீதணையத் திருமன்றி
லண்டர்பிரா னெடுத்ததிரு வடிநீழ லெனவணைந்தார்.



திருஞானசமபநதாதிருபபடடீசசுரததில சிவபெருமானமுததுபபநதல பூதகணஙகளால கொடுககபபெறறது



(இ-ள்.) தொண்டர்குழா மார்ப்பெடுப்ப = அடியார் திருக்கூட்டங்கள் ரவென ஆரவாரிக்க, சுருதிகளின்பெருந்தொனி யெண்டிசையுநிறைந்தோங்க = மறையவர்கூறும் வேதங்களின் ஆரவாரம் எட்டுத்திக்குகளிலும் நிறைந்துபரவ; மீதுவெண்டரளப்பந்தர்நிழலிணைய எழுந்தருளும் பிள்ளையார் = திருமுடியின்மேல் வெள்ளியதிருமுத்துப்பந்தர் நிழல்செய்துவர அதன்கீழ் எழுந்தருளும் ஆளுடையபிள்ளையார், திருமன்றி லண்டர்பிரானெடுத்த திருவடிநீழலெனவமர்ந்தார் = பொன்னம்பலத்தில் தேவபிரானாகிய நடேசப்பெருமானெடுத்தருளிய திருவருள்வடிவான குஞ்சிதபாதத்தின் நிழலெனவீற்றிருந்தருளினார்—எ-று.

திருவருளாற்கொடுக்கப்பட்ட திருமுத்துப்பந்தர் பிள்ளையார் வீற்றிருக்க வெயில்வெப்பொழித்துத் தட்பஞ்செய்தலின் அஃதுதுயர் ஒழீஇப் பேரானந்தத்தில் எஞ்ஞான்றும் இன்புற்று, எடுத்ததிருவடிநிழற்கீழ் அவர் வீற்றிருந்தற்கொப்பாயிற்று (௫௬௫)

பாரின்மிசை யன்பருடன் வருகின்றார் பன்னகத்தி
னாரமணிந் தவர்தந்த வருட்கருணைத் திறம்போற்றி
யீரமனங் களிதழைப்ப வெதிர்கொள்ள முகமலர்ந்து
சேரவருந் தொண்டருடன் றிருப்பட்டீச் சரமணைந்தார்

(இ-ள்) பாரின்மிசை யன்பருடன்வருகின்றார் = நிலவுலகின்கண் அடியார்திருக்கூட்டத்தோடு எழுந்தருளும்பிள்ளையார், பன்னகத்தின் ஆரமணிந்தவர் தந்தவருட்கருணைத் திறம்போற்றி = சர்ப்பத்தாலாகிய ஆரத்தைப்பூண்ட சிவபெருமான் தந்தருளிய திருவருளின்திறத்தைத் துதித்து, ஈரமனங்களிதழைப்ப = அன்புநிறைந்த திருவுள்ளத்தின்கண் மகிழ்ச்சி மேன்மேலோங்க, எதிர்கொள்ளமுகமலர்ந்து சேரவருந்தொண்டருடன் றிருப்பட்டீச்சரமணைந்தார் = தம்மை எதிர்கொள்ளும்படி முகமலர்ச்சிகொண்டு கூடிவரும் அடியார் கூட்டத்தோடு திருப்பட்டீச்சரமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்—எ-று (௫௬௬)

சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி யுட்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெண்கோட்டுப்
பன்றிகிளைத் தறியாத பாதத்தா மரைகண்டு
முன்றொழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார்.

(இ-ள்) சென்றணைந்து திருவாயிற்புறத்திறைஞ்சியுட்புக்கு = அத்தலத்திற்சென்று அவ்வாலயசமீபத்தையடைந்தருளி, திருக்கோபுரத்தின்புறத்து வணங்கி யுள்ளேபுகுந்து, வென்றிவிடையவர் கோயில்வலங்கொண்டு = வெற்றிபொருந்திய இடபத்தைவாகனமாகவுடைய திருப்பட்டீசர் திருக்கோயிலைப்பிரதட்சணஞ்செய்து, வெண்கோட்டுப்பன்றி கிளைத்தறியாத பாதத்தாமரைகண்டு = வெள்ளிய ஓர்கொம்பினை உடைய திருமாலென்னும் பன்றி பூமி

யைகின்றுசென்றும காணுதற்கரிய திருவடித்தாமரைகளைத் தரிசித்து; முன்னெழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார்=திருமுன்னின்று வணங்கிப் பூமியில் சாஷ்டாங்கமாயத்தொழுதெழுந்து சொல்லாகிய திருப்பதிகமாலையைத் துதித்தருளினார்—எ-று.

திருமால் வராகவதாரத்துக்கு ஓர்கொம்பு என்றது, சிவபிரான்பறித்த ஓர்கொம்பு நீங்கமற்றைக்கொம்புடைமையாலெனக. (௩௬௭)

திருப்பட்டீச்சரம் - திருவிராகம் பண்-சாதாரி

திருச்சிற்றம்பலம்

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர் பாகமதின் மூன்றொர்
கணையாற், கூட வெரியூட்டியெழில் காட்டிநிழல் கூடுபொழில் சூழ்ப
ழசையுண், மாடமழ பாடியுறை பட்டீச்சரமேய்கொடி கட்டி யவிஞர்,
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே (க)

நீரின்மலி புன்சடையர் நீளரவு கச்சையது நச்சிலையர் நார்,
கூரின்மலி சூலமது வேந்தியுடை கோவணமு மானினுரிதோல், காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள் காதல்செய்து மேயநகர்தான், பாரின்மலி சீர்பழசை பட்டீச்சர மேத்தவினை பற்றழியுமே (உ)

காலமட வார்களபுன லாடுவது கவ்வைகடி யார்மறுகெலா, மாலைமண நாறுபழை யாறைமழ பாடியழ காயமலி சீர்ப், பாலையன நீறுபுனை மார்பனுறை பட்டீச்சர மேபரவுவார், மேலையொரு மால்கடல்க ள் போற்பெருகி விண்ணுலக மாளுமவரே. (ந)

கண்ணின்மிசை நண்ணியிழி விப்பமுக மேத்துகமழ் செஞ்சடையினு, பண்ணின்மிசை நின்றுபல பாணிபட வாடவல பான்மதியினன், மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி பட்டீச்சர மேமருவுவார், விண்ணின்மிசை வாழுமிமை யோரொடுட னாதலது மேவலெளிதே. (ச)

மருவமுழ வதிரமழ பாடிமலி மந்தவிழ வார்க்கவரையார், பருவமழை பண்கவர்செய் பட்டீச்சர மேயபடர் புன்சடையினன், வெருவமத யானையுரி போர்த்துமையை யஞ்சவரு வெள்விடையினு, னுருவமெரி கழல்கடொழ வுள்ளமுடை யாரைவினை யாவிலகளே (ரு)

மறையினொலி கீதமொடு பாடுவன பூதமடி மருவிவிரவார், பறையினொலி பெருகநிகழ நட்டமமர் பட்டீச்சர மேயபனிகூர், பிறையினொடு மருவியதோர் சடையினிடை யேற்றபுன றோற்றநிலையா, மிறைவனடி முறைமுறையினேத்துமவர் தீதுதொழில்களில்லாமிகவே. (சு)

பிறவிபிணி மூப்பினொடு நீங்கியிமை யோருலகு பேணலுறு வார், துறவியெனு முள்ளமுடை யார்கள்கொடி வீதியழ காயதொருசீ, ரிறைவனுறை பட்டீச்சர மேத்தியெழு வார்கள்வினை யேதுமில வாய், நறவவிரை யாலுமொழி யாலும்வழிபாடுமற வாதவவரே. (எ)

நேசமிகு தோள்வலவ னாகியிறை வன்மலையை நீக்கியிடலுந், நீசனவிறல் வாட்டிவரை யுற்றதுண ராதநிரம் பாமதியினா, னீசனுறை பட்டீச்சர மேத்தியெழு வார்கள்வினை யேதுமிலவாய், நாசமற வேண்டுதலி னண்ணலெளி நாமமரர் விண்ணுலகமே (அ)

தூயமல ரானுநெடி யானுமறி யாரவனை யூற்றநிலையின், னேயவனக யானதனை யாரநறி வாரணிகொண் மார்பினகலம், பாயநல நீறதணி வானுமைநன் னோடுமுறை பட்டீச்சரமே, மேயவன திரடியு மேத்தவெளி தாகுநல மேலுலகமே (கூ)

தடுக்கினை யிடுக்கிமட வார்களிடு பிண்டமது வுண்டுழறருங், கடுப்பொடி யுடற்கயவர் கட்டுமொழி காதல்செய திட்டதுகமழ்சோ, மடக்கயல் வயற்கொண்மழ பாடிநகர் நீடுபழையாறையதனுட், படைக்கொரு கரத்தனமிகு பட்டீச்சர மேத்தவினை பற்றறுதலே (க0)

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறை யதனிற், பந்தமுயர் வீடுநல பட்டீச்சர மேயபர புன் சடை யனை, யந்தண மறையோரினிது வாழ்புகலி ஞானசம் பந்தனணியார், செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர் வினை நிற்பதிலவே (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - பட்டீச்சரர் தேவியார்-பாலவளைநாயகியம்மை.

அருள்வெள்ளத் திறம்பரவி யளப்பரிய வானந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப் போந்துபெருங் காதற்
றிருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார்

(இ-ள்) செம்பொன்மலைவல்லியார்=சிவந்த பொன்மயமான இமையமலையரையன் புத்திரியாராகிய உமாதேவியார், திருவுள்ளப்பரிவுடனே தருவள்ளத்தமுதுண்ட சம்பந்தர்=திருவுள்ளக்கனிவோடுகொடுத்தருளியபொற்கிண்ணத்து திருமுலைப்பாலைத் திருவமுதுசெய்தருளிய ஆளுடையபிள்ளை

யார், அருள்வெள்ளத் திறம்பரவி = பட்டீச்சரத்து திருவருளின்பிரவாகத்திறத்தை வாழ்த்தி; அளப்பரிய வானந்தப்பெருவெள்ளத்திடை மூழ்கி = அளத்தற்கரிய பேரானந்தவெள்ளத்தில் முழுகி, பேராதபெருங்காதல் புறத்தணைந்தார் = தம்மில்நின்றும்நீங்காத ஆர்வத்தோடு திருக்கோயிலின்புறத்தணைந்தார்—எ-று.

அருள்வள்ளற் றிறமென்பப்பாட்டமாயின் திருவருளாற்செய்தவள்ளற்றன்மையைப் பாடியென்க. (௩௯௮)

அப்பதியி லமர்கின்ற வாளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியிற் சென்றிறைஞ்சி
யொப்பரிய தமிழ்பாடி யுடனமருந் தொண்டருட
னெப்பொருளு மாயினா ரிரும்பூளை யெய்தினார்

(இ-ள்) அப்பதியில் அமர்கின்ற ஆளுடையபிள்ளையார் = அத்திருப்பட்டீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஆளுடையபிள்ளையார், செப்பருஞ்சீர்த் திருவாறைவடதளியிற் சென்றிறைஞ்சி = சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய திருவாறைவடதளியை யடைந்துவணங்கி, ஒப்பரியதமிழ்பாடி = (அங்கு) ஒப்பில்லாத திருப்பதிகம்பாடியருளி, உடன் அமருந்தொண்டருடன் எப்பொருளுமாயினார் இரும்பூளையெய்தினார் = தம்முடன்வசிக்கும் திருக்கூட்டத்தோடு எல்லாப்பொருள்களும் தானாய்வியாபித்துநின்ற காசியாரண்ணியேசரது திருஇரும்பூளையென்னும் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (௩௯௯)

தேவர்பிரா னமர்ந்ததிரு விரும்பூளை சென்றெய்தக், காவணநீ
டோரணங்க ணாட்டியுடன் களிசிறப்பப், பூவணைமா லைகணாற்றிப் பூ
ரணபொற் குடநிறைத்தங், கியாவர்களும் போற்றிசைப்பத் திருத்
தொண்ட ரெதிர்கொண்டார்.

(இ-ள்) தேவர்பிரான் அமர்ந்ததிருவிரும்பூளைசென்றெய்த = தேவர்கட்குமுதல்வரான காசியாரண்ணியேசர் எழுந்தருளிய திருவிரும்பூளையென்னுந் திருப்பதியைப் பிள்ளையார் சென்றடையுங்கால், காவணம்நீள்தோரணங்கள் நாட்டியுடன்களிசிறப்ப = பந்தரையும் நீண்டதோரணங்களையும் (எங்கும்) நாட்டி உடனே (பிள்ளையார்வரவால்) தம்மனத்துமகிழ்ச்சிமேம்பட, பூவணைமாலைகள் நாற்றிப்பூரணபொற்குடம் அங்குநிறைத்து = பூவாலாகியமாலைகளைத்தொங்கவிட்டு, பொன்னாலாகியபூரணகும்பங்களையும் அவ்விடத்தில்வரிசையாய்வைத்து, யாவர்களும்போற்றிசைப்பத் திருத்தொண்டர் எதிர்கொண்டார் = (கண்டோர்) யாவரும்துதிசெய்ய அடியார்திருக்கூட்டங்கள் அவரை எதிர்கொண்டார்கள்—எ-று. (௪௱)

வண்டமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிரிழிந்தங் கவர்தொழத்தா மெதிர்தொழுதே
யண்டர்பிரான் கோயிலினை யணைந்திறைஞ்சி முன்னின்று
பண்ணாரு மின்னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார்

(இ-ள்.) வண்டமிழின்மொழிவிரகர்=வளம்பொருந்திய தமிழ்ப்பாடையின் வல்லவராகிய ஆளுடையபிள்ளையார், மணிமுத்தின்சிவிகையினை=அழகிய முத்துச்சிவிகையை, தொண்டர்குழாத்தெதிரிழிந்து=அடியார்திருக்கூட்டத்தெதிரே இழிந்தருளி, அங்கு அவர்தொழத் தாமுந்தொழுது=அவ்விடத்து அவ்வடியார்கள்வணங்கத் தாமும்வணங்கி, அண்டர்பிரான்கோயிலினை யணைந்திறைஞ்சி=தேவர்பிரானாகிய காசியாரணியேசர் திருக்கோயிலை யடைந்துவணங்கி, முன்னின்றுபண்டரும் இன்னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார்=அவர்திருமுன்னின்றருளிப்பண்ணமைந்த இனியஇசையோடுதிருப்பதிகத்தால் பரம்பொருளாகிய அவரைப்பாடுவாராயினார்—எ-று. (௩௭௧)

நிகரிலா மேருவரை யணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி நொய்யானைத்
தகவொன்ற வடியார்க ளுமைவினவத் தமிழ்விரகர்
பகர்கின்ற வருமறையின் பொருள்விரியப் பாடினார்

(இ-ள்) நிகரிலாமேருவரை யணுவாகநீண்டானை=ஒப்பில்லாதமேருமலைதன்னளவிற்கு அணுவாகமகத்திற்கு மகத்தானவரை, நுகர்கின்றதொண்டர்தமக்கமுதாகி நொய்யானை=(தம்மோடு ஒற்றித்து) உடனாய சிவானந்தாநுபூதியை உடைய அடியார்களுக்கு அமுதுபோலத்தித்தது அணுவுக்குஅணுவாய்நின்றவரை, தமிழ்விரகர் அடியார்தமைத்தகவு ஒன்றவினவி=முத்தமிழ்விரகராகிய பிள்ளையார் அடியார்களைநோக்கி அவர்பெருமையைச்சீரார்கழலே தெளிவீரிதுசெப்பீர் நஞ்சமுதுண்டகருத்து எனப்பொருந்தவினவி, பகர்கின்றவருமறையின் பொருள்விரியப் பாடினார்=பிரமாணமெனக்கூறுகின்ற அரியவேதத்தின்பொருள் விரியும்படி அத்திருப்பதிகம் பாடியருளினார்—எ-று.

மகத்தானமேருவரை அணுவாக என்றதனால், மகத்துக்கு மகத்தாக நிற்கும்வியாபக இயல்பும், நொய்யானை என்றதனால், அணுவுக்கணுவாய்நிற்கும் சூக்கும இயல்பும் சிவபிரானுடையனென்பது போந்தவாறு அறிக. (௩௭௨)

திரு இரும்பூளை - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சீரார்கழலே தொழுவீரிது செப்பீர்
வாரார்முலை மங்கையொடும் முடனாகி
ஏராரிரும்பூளை யிடங்கொண்டவீசன்
காரார்கட னஞ்சமுதுண்டகருத்தே.

எந்தையிரும்பூளை யிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பை யுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ் செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத் தோங்குவர் பான்மையினாலே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயா - காசியாரண்ணியேசா.
தேவியாா - ஏலவாாகுழலமமை.

பாடுமரா தைபபெரும பாழியே முதலாகச
சேடாபயி றிருசசேறை திருநாலூா குடவாயி
ஞடியசீா நறையூாதெனை றிருபபுததூா நயநதிறைஞசி
நீடுநமிழத தொடைபுனைநதந நெடுநகரி லினிநமாநதாா.

(இ-ள) பாடுமரதைப பெருமபாழியே முதலாக=பலருந துதிக்கும திரு அரதைப பெருமபாழி எனறுந திருபபதிமுதலாக, சேடாபயிறிருச சேறை திருநாலூா குடவாயில=அறிவுடையோாவசிககும திருசசேறையும திருநாலூரும திருககுடவாயிலும, ஙாடியசீா நறையூா=அறிவுடையோா நாடுதறகுரிய சிறபபுவாயநத திருநறையூரையும, தெனறிருபபுததூா நயந திறைஞசி=தெறகினகணணுளள திருபபுததூரெனறுந திருபபதியையும விருமபி வணஙகி, நீடுதமிழததொடைபுனைநது அநநெடுநகரி லினிதமாநதாா=நிலைபெறற திருபபதிகமாலைகளைச சாததி அததலஙகளில இனிதாகவசிததருளி ஞாா—எ று (௩௱௩)

திரு.அரதைபபெருமபாழி - பண - கொலலி

திருசசிறறமபலம

பைநதபாம போடளைக கோவணம பாயபுலி
யொயததபேய கணமுழகக முது காடினை
நிததமா கநந மாடிவெண ணீறணி
பிததாகோ யிலலர தைபபெரும பாழியே

நீரினாபுனசடை நிமலனுக கிடமெனப
பாரினாபரவர தைபபெரும பாழியைச
சீரினா காழியுண ஞானசம பநதனசெய
யேரினா தமிழவலாாக கிலையாம பாவமே

திருசசிறறமபலம

சுவாமிபெயா-பாதாளேசா. தேவியாா-அலஙகாரநாயகியமமை.

திருசசேறைதிருவிராகம - பண - சாநாாி

திருசசிறறமபலம

முறியுறு நீாமலகு முகிழமுலை மலைமகள வெருவமுன
வெறியுறு மதகரி யதளபட வுரிசெயத விறலினா
நறியுறு மிதழியின மலரொடு நதிபதி நகுதலை
செறியுறு சடைமுடி யடிகடம வளநகா சேறையே.

கறறவன் மறைபயி லடியவ ரடிதொழு கவினுறு
சிறறிடை யவளொடு மிடமென வுறைவதோர சேறைமேற
குறறமில புகலியு ளிகலறு ஞானசம பநதன
சொறறக வுறமொழி பவரழி விலாதுயர தீருமே.

திருசசிறறமபலம

சுவாமிபெயர - சநநிதியபபர தேவியார - ஞானவலலியமமை.

திருநாலூரமயானம - பண - சீகாமரம

திருசசிறறமபலம

பாலூரு மலைபபாமபும பனிமதியு மததமும
மேலூருஞ செஞசடை யான வெணணூலசேர மாரபின
னூர மயானதது நமபானற னடிநினைநது
மாலூருஞ சிநதையரபால வநதூரா மறுபிறபபே.

ஞாலம புகழகாழி ஞானசம பநதனறு
னாலு மறையோது நாலூர மயானததைச
சீலம புகழாற சிறநதேதத வலலாருக
கேலும புகழ வானத தினபரா யிருபபாரே

திருசசிறறமபலம

சுவாமிபெயர பலாசவனேசர தேவியார-பெரியாமபிகையமமை.

திருககுடவாயில பண இநதளம
திருசசிறறமபலம

திகழுந திருமாலொடுநான முகனும
புகழும பெருமானடியார புகலின
மகிழும பெருமான குடவாயில மனனி
நிகழும பெருங்கோயில நிலாயவனே

கடுவாய மலிநீர குடவாயிறனி
நெடுமா பெருங்கோயில நிலாயவனைத
தடமார புகலித தமிழார விரகன
வடமார தமிழவல லவாநல லவரே

திருசசிறறமபலம

சுவாமிபெயர - கோணேசர தேவியார - பெரியநாயகியமமை.

திருநறையூா - பண - பியநதைககாந்தாரம.

திருசசிறறமபலம.

நேரிய னுகுமலல னொருபாலுமேனி யரியானமு னயவொளியா
னீரியல காலுமாகி நிறைவானுமாகி யுறுதியு மாயவொருவ
னூரியல பிசசைபேணி யுலகஙகளேதத நலகணடு பணடுசுடலை
நாரியோா பாகமாக நடமாடவலல நறையூரி னமபனவனே

கானலு லாவியோத மெதிாமலகுகாழி மிருபநதன முநதியுணா
ஞானமு லாவுசிநதை யடிவைததுகநத நறையூரி னமபனவனை
யீனமி லாதவணண மிசையாலுரைதத தமிழமாலை பததுநினைவாா
வானமி லாவவலலா நிலமெஙகுமினறு வழிபாடு செயயுமிகவே

திருசசிறறமபலம.

சுவாமிபெயா - சிததாநாதேசா. தேவியாா - அழகாமபிகையமமை.

திருபபுததூா - பண - தககராகம.

திருசசிறறமபலம

வெஙகளவிமமு வெறியாா பொழிறசோலை
திஙகளொடு திளைககுந திருபபுததூாக
கஙகைதஙகு முடியா ரவாபோலு
மெஙகளுசசி யுறையும மிறையாரே

நலலகேளவி ஞானசம பநதன
செலவாசேட ருறையுந திருபபுததூாச
சொலலபாடல வலலாா தமககெனறும
அலலறீரும மவலம மடையாவே

திருசசிறறமபலம

சுவாமிபெயா - சொாணபுரீசா. தேவியாா-சிஙகேசுவரியமமை.

அஙகணினி தமருநா ளடலவெளளே னததுருவாயச
செஙகணெடு மாலபணியுஞ சிவபுரததுச செனறடைநது
கஙகைசடைக கரநதவாதங கழலவணஙகிக காதலினறு
பொஙகுமிசைத திருபபதிக முனனினறு போறறிசைததாா.

(இ-ள.) அஙகணினி தமருநாள=அததிருப்பதிகளில இனிதாக எழுந தருளி இருக்குமநாளில, செஙகணெடுமால அடலவெளளேனத துருவாயப பணியுஞ சிவபுரததுசசெனறடைநது=சிவநதகணகளையுடைய நெடுமால்வலி யையுடைய சுவேதவராகவடிவாய வழிபடுமசிவபுரமென்னும திருபபதி

யைச் சென்றடைந்தருளி; கங்கைசடைக்கரந்தவர் தங்கழல்வணங்கி—கங்காந்தியைத் திருச்சடையின்கண் தோன்றாது மறைத்த பிரமபுரீசரது திருவடிகளை வணங்கி, காதலினாற்பொங்குமிசைத் திருப்பதிகமுன்னின்று போற்றிசைத்தார்—விருப்பத்தோடு இசைநிறைந்த திருப்பதிகத்தைத் திருமுன்னின்று துதித்துப் பாடியருளினார்—எ-று (௪௱௪)

திருச்சிவபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

இன்குர லிசைகெழும் யாழ்முரலத்
தன்கர மருவிய சதுரன்நகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
றென்கரை மருவிய சிவபுரமே

சிவனுறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
றவமிகு தமிழிவை கற்றுவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-பிரமபுரீசர் தேவியார் பெரியநாயகியம்மை

போற்றிசைத்துப் புனிதரருள் பெற்றுப்போந் தெவ்வுயிருந்
தோற்றுவிக்க வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனா
ரேற்றுமிசை யேற்றுவந்த விறைவர்தமைப் போற்றுதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார்

(இ-ள்) போற்றிசைத்துப் புனிதரருள்பெற்றுப் போந்து—திருப்பதிகத்தாற்றுதித்துப் பிரமபுரீசரது திருவருளைப்பெற்று (அத்திருப்பதியினின்றும்) எழுந்தருளி, எவ்வுயிருந்தோற்றுவிக்க வயன்போற்றுந் தோணிபுரத்தந்தணனார்—எல்லா உயிர்களையும் படைத்த பிரமன்வணங்குஞ் சீகாழியிலவதரித்த பிள்ளையார் இடபத்தின்மேல் ஏறுதலை விரும்பிய கும்பேசரைத் துதிப்பதற்கு, நாற்றிசையோர்பரவு திருக்குடமூக்கு நண்ணினார்—நான்கு திசையின்கண் உள்ளோர்பலரும் வணங்கும் கும்பகோணமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்—எ-று.

தோணிபுரத்தந்தணனார் நண்ணினாரெனக்கூட்டுக. (௪௱௫)

நேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையி னொலிபெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியுட் கொடுபுக்கார்

(இ-ள்) தேமருவுமலர்ச்சோலைத் திருக்குடமூக்கினில் செல்வமாமறையோர்=தேன்பொருந்திய பூக்களையுடைய சோலைசூழ்ந்த திருக்குடந்தை என்னுந் திருப்பதியின்கண் உள்ள செல்வம்பொருந்திய பெரியவேதத்தை யுணர்ந்த பிராமணர்கள், பூந்தராய் வள்ளலார்வந்தருள=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் எழுந்தருள, தூமறையினொலிபெருகத் தூரியமங்கலமுழங்க=குற்றமற்ற வேதத்தின் ஓசை ஓங்கவும் மங்கலவாத்தியங்கள் ஒலிக்கவும், கோமுறைமையெதிர்கொண்டு தம்பதியுட்கொடுபுக்கார்=அரசர்க்குரிய முறைப்படி பிள்ளையாரை யெதிர்கொண்டு தமது திருப்பதியுட்கொண்டு சென்றார்கள்—எ-று. (சாகூ)

திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் றிருப்பதிக
முருகாநின் றுண்மகிழக் குடமூக்கை யுவந்திருந்த
பெருமானெம் மிறையென்று பெருகிசையாற் பரவினார்

(இ-ள்) திருஞானசம்பந்தர் திருக்குடமூக்கினைச் சேரவருவார்=ஆளுடையபிள்ளையார் திருக்குடந்தையென்னுந் திருப்பதியை யடையவருபவராய், தம்பெருமானைவண்டமிழின் திருப்பதிகம்=தமது பெருமானாகியகும்பேசரை வளம்பொருந்திய தமிழாலாய திருப்பதிகத்தை, உருகாநின்றுண்மகிழ=திருவுளமகிழ்ந்து உருகிமகிழ்ந்து, குடமூக்கையுவந்திருந்த பெருமானெம் மிறையென்று பெருகிசையாற்பரவினார்=திருக்குடமூக்கென்னுந் திருப்பதியைவிரும்பி எழுந்தருளி இருந்தபெருமானே அவனே எம்மிறைவனென்று இறுதியில்வைத்து "அரவிரிகோடனீடல்" என்னும் முதலையுடைய திருப்பதிகத்தை நிறைந்த இசையோடு பாடியருளினார்—எ-று. (சாஎ)

திருக்குடமூக்கு - பண் - பஞ்சமம்
திருச்சிற்றம்பலம்

அரவிரி கோடனீட லணிகாவிரி யாற்றயலே
விரிபோது மவ்வனமண மல்லிகை கள்ளவிழுங்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே.

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரா
னண்பொடு நின்றசீரான் றமிழ்ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கும்பேசர் தேவியார் - மங்கலநாயகியம்மை.

வந்தணைந்து திருக்கீழ்க்கோட் டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வா
ரந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார்.

(இ-ள்.) திருக்கீழ்க்கோட்டத்திருந்த வான்பொருளைவந்தணைந்து=அங்குநின்று அத்திருப்பதியில் திருக்கீழ்க்கோட்டத்தின்கண் எழுந்தருளியமேன்மைபொருந்திய மெய்ப்பொருளான மடந்தைபாகேசரை வந்தடைந்தருளி; சிந்தைமகிழ்வுறவணங்கித் திருத்தொண்டருடன் செல்வார்=திருவுள்ளக்களிப்படையவணங்கி அடியார்கூட்டத்துடன் அங்குநின்றெழுந்தருளும் ஆளுடையபிள்ளையார், அந்தணர்கள் புடைசூழ்ந்துபோற்றிசைப்ப அவரோடும்=அங்குள்ள குடந்தைமறையவர்கள் தம்பக்கலிற்சூழ்ந்து துதிக்க அம்மறையவரோடும், கந்தமலர்ப்பொழில்சூழ்ந்த காரோணஞ்சென்றடைந்தார்=வாசனைபொருந்திய பூக்களையுடைய சோலைசூழ்ந்த திருக்குடந்தைக்காரோணத்தைச் சென்றடைந்தருளினார்—எ-று. (௩௱௯)

பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்

(இ-ள்.) பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்=பூமியின்கண் உள்ள கங்கை யமுனை சரசுவதிமுதலான பரிசுத்தமானபெருமைபொருந்திய புண்ணிய தீர்த்தங்களெல்லாம், மாமகந்தானாடுதற்குவந்து வழிபடுங் கோயில்=மாசிக்கண்மாமகநாளில் அங்குள்ளவாவிக்கண் மூழ்குதற்குவந்து வழிபாடுசெய்யுங்கோயிலை, தூமருவுமலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து=பரிசுத்தமான மலர்போலும் திருக்கரங்களால் தொழுதுவணங்கிப் பிரதட்சணஞ் செய்துசென்று, காமர்கெடநுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார்=மன்மதனழியும்படி நெற்றிக்கண்ணைத்திறந்து நோக்கிய சிவபிரானது திருவடிகளைவணங்கிக் கண்களிகூர்ந்தார்—எ-று.

காமரென்பன்மைபாற்கூறியது அவனது இழிவுகுறித்து நின்றது. கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்கள் காலவிசேடங்களில் வேறுதீர்த்தங்களை அடையும் என்றல் காசிகாண்டமுதலியவற்றிற்காண்க, அவை எவ்வாறுசெல்லுமெனில் அவைகட்கு ஆதிபௌதிகரூபமேயன்றி சூட்சுமமான ஆத்தியான்மிகரூபம் உண்மையின் அவற்றோடுசெல்லுமெனல் இழுக்கா. (௩௱௰)

கண்ணாரு மருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்

பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியு
மெண்ணார்ந்த சீரடியா ருடன்பணிவுற் றெழுந்தருளி.

(இ-ள்) கண்ணாருமருமணியைக் காரோணத்தாரமுதை= கண்களுக்கு நிறைந்த அரியமாணிக்கத்தைத் திருக்குடந்தைக்காரோணத்தில் எழுந்தருளிய நிறைந்த அமுதத்தை, நண்ணாதாரபுரமெரித்த நான்மறையின்பொருளானை= பகைவராகிய அசுரர்களது திரிபுரங்களைக்கொளுத்தியருளிய நான்குவேதங்களின் பொருளாயுள்ளவரை, பண்ணார்ந்ததிருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியுமெண்ணார்ந்த சீரடியாருடன் பணிவுற்றெழுந்தருளி=பண்ணமைந்த திருப்பதிகத்தால்வணங்கித்துதித்து அதன்சமீபத்திலுள்ள பிறதிருப்பதிகளையும் பெருமைவாய்ந்த திருக்கூட்டத்தோடுவணங்கி அங்குநின்று எழுந்தருளி—எ-று (சாய)

குடந்தைக்காரோணம்- பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

வாரார்கொங்கை மாதோர்பாக மாக வார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார்மழுவொன் றேந்தியந்தண் குழகன் குடமூக்கிற்
காரார்கண்டத் தெண்டோளெந்தை காரோ ணத்தாரே.

கருவார்பொழில்சூழ் தமிழார்செல்வக் குடந்தைக்காரோ ணத்தானை
திருவார்செல்வ மலருஞ்சண்பை திகழுஞ் சம்பந்த [ந
னுருவார்செஞ்சொன் மாலையிவைபத் துரைப்பா ருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பறுத்துக் கவலை கழிவாரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சோமநாதேசர் தேவியார்-தேனார்மொழியம்மை

திருநாகேச ரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
யருஞானச் செந்தமிழின் றிருப்பதிக மருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார்.

(இ-ள்) திருநாகேச்சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றை=திருநாகேச்சரத்திலெழுந்தருளிய ஒப்பில்லாதசிவந்தபொன்மலைபோல்வாரை; கருநாகத்துரிபுனைந்த கண்ணுதலை=கரியயானையினது உரிவைபோர்த்த நெற்றிக்கண்ணையுடைய சண்பகாரணியேசரை, சென்றிறைஞ்சி=திருமுன்னே சென்றுவணங்கி; அருஞானச்செந்தமிழின் றிருப்பதிகமருள்செய்து=பெறு

தறகரிய திருவருளஞானம அமைநதசெநதமிழாகிய திருபபதிகததை அருளிசசெயது, பெருஞானசமபநதா பெருகாரவததினபுறமூர்=மிக்கஞானத்தையுடைய ஆளுடையபிளளையாா மிககாதலினால இனபமடைநதாா—எ-று.

திருநாகேசசரம - பண - இநதளம.

திருசசிறறமபலம

பொனனோ தருமே னியனே புரியும
மின்னோ சடையாய விளககா விரியி
னனனீா வயலு கேசசர நகரின
மனனே யெனவல் வினைமாயந தறுமே

கலமாா கடலசூழ தருகா ழியாகோன
றலமாா தருசெந தமிழின விரக
னலமாா தருநா கேசசரத தரனைச
சொலமா லைகளசொல லநிலலா வினையே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா - சணபகாரணியேசா.

தேவியாா - குனறமுலைநாயகியமமை

மாநாக மருசசிதத மலாககமலத தாளவணஙகி
நாளுளும பரவுவாா பிணிதீாககு நலமபோறறிப
பாளுறு மணிவாயா பரமாதிரு விடைமருதிற
பூநாறும புனறபொனனித தடஙகரைபோயப புகுகினறாா

(இ-ள) மாநாகமருசசிதத மலாககமலததாளவணஙகி=அடடமாநாகஙகளாிசசிதத தாமரைமலாபோனற திருவடிகளைவணஙகி, நாளுளுமபரவுவாா பிணிதீாககு நலமபோறறி=நாடோறுமவணஙகும அடியாரது தீவினைநோயை நீககியருளும அவரதுதிருவருளினநலததைததுதிதது, பாளுறுமணிவாயா பரமாதிருவிடைமருதில=சிவஞானபபாலகமழும அழகியதிருவாயையுடைய பிளளையாா மருதவாணா எழுநதருளியதிருவிடைமருதூரினகண்; பூநாறும புனறபொனனிததடஙகரைபோயப புகுகினறாா=பூககமழும நீாநிறைநத காவிரியின உயாநதகரைவழியேசெனறுபுகுகினறாா ஆயினாா—எ-று ()

ஓஙகுதிருப பதிகமோ டேகலனென றெடுததருளித
தாஙகரிய பெருமகிழசசி தலைசிறககுந தனமையினால
ஈஙகெனையா ளுடையபிரா னிடைமருதீ தோவென்று
பாஙகுடைய வினனிசையாற பாடியெழுந தருளினாா

(இ-ள்.) ஓங்குதிருப்பதிகமோடேகலனென்றெடுத்தருளி = ஓடேகலனென்னும் முதலையுடைய உயர்ந்த திருப்பதிகத்தை யெடுத்தருளி, தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால் = அடங்காத பேரானந்தப் பெருமகிழ்ச்சி தம்மில்மிசக்கு ஓங்குந்தன்மையினால், எங்கெனையாளுடைய பிரானிடைமருதீதோவென்று = இவ்விடத்து என்னை ஆளாகவுடைய மருதப்பர் எழுந்தருளிய திருவிடைமருதூரிதுவோவென்று இறுதியில் முடித்து, பாங்குடைய வின்னிசையாற் பாடியெழுந்தருளினார் = இனிய இசையோடு பதிகத்தைப் பாடியருளி அத்திருப்பதியில் சென்றருளினார்—எ-று (௩௧௫)

திரு இடைமருது - பண் - தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

ஓடேகல னுண்பது மூரிடு பிச்சை
காடேயிட மாவது கல்லால் நிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந்
தீடாவுறை கின்ற விடைமரு தீதோ.

கண்ணார்கமழ் காழியுண் ஞானசம் பந்த
னண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேற்
பண்ணோடிசை பாடிய பத்துமவல் லார்கள்
விண்ணோருல கத்தினில் வீற்றிருப் பாரே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - மருதப்பர். தேவியார் - நலமுலைநாயகியம்மை.

அடியவர்க ளெதிர்கொள்ள வெழுந்தருளி யணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயின் முன்னிறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய

(இ-ள்.) அடியவர்க ளெதிர்கொள்ள வெழுந்தருளியணைந்து = அத்திருப்பதியின்கண்ணுள்ள அடியார்கள் எதிர்கொண்டுவரத் தாம் அவரோடு எழுந்தருளி அவ்வாலயத்தையடைந்து, முடிவில் பரம்பொருளானார் முதற்கோயின் முன்னிறைஞ்சி = தமக்கொரு இறுதியில்லாத பரம்பொருளாயுள்ள முதல்வரது கோயில்வாயிலின்முன் வணங்கி, படியில் வலங்கொண்டு திருமுன்பெய்தி = அவ்வாலயபூமியில் பிரதட்சணஞ்செய்து திருமுன்னே சென்று, பார்மீது நெடிதுபணிந்தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய = பூமியின்மேல் திருமேனிதோயச் சாஷ்டாங்கமாக நெடுநேரம் வணங்கி எழுந்து அன்பால் நிறைந்த ஆனந்தக்கண்ணீர் திருமேனியில் பரவிப்பெருக—எ-று. (௩௧௬)

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடியமாந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி யார்வத்தா
லுரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி யுறையுநாள்.

(இ-ள்.) பரவுறுசெந்தமிழ்ப் பதிகம்பாடியமாந்தப்பதியில்விரவுவார்= யாவரும் துதிக்கும் செந்தமிழாகிய திருப்பதிகத்தைப் பாடியருளி அத்திருப் பதியில் எழுந்தருளி இருக்கும் ஆளுடையபிள்ளையார், திருப்பதிகம் பலபா டி=பின்னுந்திருப்பதிகம் பலவற்றை அங்குப்பாடியருளி, வெண்மதியோடர வுசடைக்கணிந்தவர் தந்தாள் போற்றி=வெள்ளிய சந்திரனோடு பாம்பினை சடாமகுடத்திலணிந்த சிவபெருமானது திருவடிகளைவணங்கி, ஆர்வத்தாலு ரவுதிருத்தொண்டருடன் பணிந்தேத்தியுறையுநாள்=அன்போடுகலந்த அடி யார் கூட்டத்தோடு வணங்கித் துதித்து அங்கு எழுந்தருளி இருக்கும்நா ளில்—எ-று. (௬௧௫)

திருவிடைமருது - பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
வெரிதரு சடையினர் ரிடைமரு தடைபுனல்
புரிதரு மன்னவர் புகழ்மிக வுளதே

பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினர் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயில வலரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே

திருச்சிற்றம்பலம்

நடைமரு திரிபுர மெரியுண நகைசெய்த
படைமரு தழலெழ மழுவல பகவன
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய
விடைமரு தடையநம் மிடர்கெட லெளிதே.

தடமலி புகலியர் தமிழ்கெழு விரக
னிடைமலி பொழிலிடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு கிளரொளி யினரே.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவிநோ டிறவுமானா
னருந்தவ முனிவரோ டானிழற்கீ
ழிருந்தவன் வளநக ரிடைமருதே.

இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லா
ருலகுறு புகழினோ டோங்குவரே.

திருச்சிற்றம்பலம்

மருங்குள்ளற பதிகள்பல பணிந்துமா நதிக்கரைபோய்க்
குரங்காடு துறையணைந்து குழகனார் குரைகழல்கள்
பெருங்காத லிற்பணிந்து பேணியவின் னிசைபெருக
வருங்கலைநூற் றிருப்பதிக மருள்செய்து பரவினார்.

(இ-ள்) மருங்குள்ளறபதிகள்பலபணிந்துமாநதிக்கரைபோய=அத்திருப்பதியின்பக்கத்திலுள்ள நல்லபலதிருப்பதிகளையும்வணங்கி பெரியகாவிரியின் கரையேசென்று, குரங்காடுதுறையணைந்து=திருக்குரங்காடுதுறையையடைந்தருளி, குழகனார் குரைகழல்கள் பெருங்காதலிற்பணிந்து=என்றும் இளையராகிய ஆபத்சகாயரது ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகளை மிக்க அன்பாலவணங்கி, பேணிய இன்னிசைபெருக அருங்கலைநூற்றிருப்பதிகமருள்செய்து பரவினார்=யாவரும் விரும்பும் இனிய இசை நிரம்பும்படி அரிய தமிழ்வேதமாகிய திருப்பதிகத்தைப் பாடித்துதித்தார்—என்று (௬௧௬)

குரங்காடுதுறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்

பரவக் கெடும்வல் வினைபா ரிடஞ்சூழ
விரவிப் புறங்காட் டிடைநின் றெரியாடி
யரவச் சடையந் தணன்மேய வழகார்
குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே.

நல்லார் பயில்காழி யுண்ஞான சம்பந்தன்
கொல்லே றுடையான் குரங்காடுதுறைமேற்
சொல்லார் தமிழ்மாலை பத்துந் தொழுதேத்த
வல்லா ரவர்வானவரோ டுறைவாரே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-ஆபத்சகாயர். தேவியார் - பவளக்கொடியம்மை.

வேறு.

அம்மலர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்மலர்க்களத் திறைவர்தங் கோயில்கள் வணங்கி
நம்மலத்துயர் நீங்கவந் தருளிய ஞானச்
செம்மலார்திரு வாவடு துறையினைச் சேர்ந்தார்.

(இ-ள்.) அம்மலர்த்தடம்பதி பணிந்தகன்றுபோந்து=அந்தப் பூக்களையுடைய தடாகஞ்சூழ்ந்த திருப்பதியைவணங்கி அங்கு நின்றுஞ் சென்றருளி; அருகுமைம்மலர்க்களத்திறைவர்தங் கோயில்கள்வணங்கி=அதன் பக்கத்திலுள்ள கருமைபொருந்திய நீலமலர்போலும் கண்டத்தையுடைய சிவபிரானெழுந்தருளிய திருக்கோயில்கள் பலவற்றையும்வணங்கி, நம்மலத்துயர் நீங்கவந்தருளிய ஞானச்செம்மலார்=நமது அஞ்ஞானத்தாலாகிய கிலேசம் கெடும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார், திருவாவடுதுறையினைச் சேர்ந்தார்=திருவாவடுதுறையென்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று.

மலத்துயர் அஞ்ஞானத்தாலாகிய துன்பம், அது சரீரமானென்றும் சுக விடயம் துக்கவிடயங்களை அறிந்து இது சுகம் இது துக்கமென்வும் உணர்ந்து அவ்வுணர்ச்சிவாயிலாய்ப் புத்தியிற்றோன்றும் சுகதுக்கங்களை நான்சுகி நான் துக்கியென விபரீதமாய் உணர்தல், இவ்விபரீத உணர்ச்சி இதமகிதங்களைவிளைத்துப் புண்ணியபாவங்கட்கு இடனாதலிற் றுக்கமெனப்படும். (௬௧௭)

மூவருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர்தந்திரு வாவடு துறைத்திருத் தொண்டர்
பூவலம்புதண் பொருபுனற் றடம்பணைப் புகலிக்
காவலர்க்கெதிர் கொள்ளுமா தரவுடன் கலந்தார்.

(இ-ள்) மூவருக்கறிவரும்பொருளாகிய=பிரமன் விண்டு காலாக்கினி ருத்திரர் என்னும் மும்மூர்த்திகட்கும் அறிதற்கரிய மெய்ப்பொருளாகிய; மூலத்தேவர்தம் திருவாவடுதுறைத்திருத்தொண்டர்=பிரமன் விண்டு உருத்திரரென்னும் மும்மூர்த்திகட்கும் முதன்மூர்த்தியாக எழுந்தருளிய மாசிலாமணியீசரது திருவாவடுதுறையின்கண் வாழும் திருவடியார்கள், பூவலம்புதண் பொருபுனற்றடம்பணைப்புகலிக்காவலர்க்கு=பூவுடன் ததும்பும் குளிர்ந்த கரையில் அலையீசுகின்ற நீர்நிறைந்த பெரிய வயல்களையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாருக்கு; எதிர்கொள்ளுமாதரவுடன் கலந்தார்=எதிர்கொள்ளும் விருப்புடன் சேர்ந்துவந்தார்—எ-று.

குணாதீதராய் மும்மூர்த்திகட்கும் முதற்பொருளாகிய சிவபிரான் உலகுக் கனுக்கிரகிக்கும்பொருட்டு மும்மூர்த்திகளுள் ஒருவராகிய உருத்திரமூர்த்தியில் பேதமாய்க்கலந்து காமதகனமுதலிய நிக்கிரகமும், சுவேதோபமன்னியர் அறு பத்துமூவர் முதலிய பத்தானுக்கிரகமுஞ்செய்து ஸ்ரீகயிலாசத்தில் எழுந்த ருளியிருப்பர்; அதனால் அவ்வுருத்திரமூர்த்தி அச்சிவபிரானோடு வேறுபாடின்

மையின் ஈண்டு மூவரென்றது பிரம விட்டுணு காலாக்கினி உருத்திரரென்னும் மூவருமெனறும். இவராலறியப்படாத மூலத்தேவரென்றதனால் உருத்திரமூர்த்தியோடுவேற்றச்சிவபிரானாகிறபரெனபதும்பெறப்படும். பிரமவிட்டுணு காலாக்கினி உருத்திரனென்னும் மூவராலறியப்படா ரென்றதென்னை? இம்மூவரும் சிவலோக கைலாயமேரு சிகரமென்னும் மூவிடத்திருந்து நிக்கிரக மனுக்கிரகம் புரிந்தருளும் அவ்வுருத்திரமூர்த்தியின் திருவருளால் சத்திய உலகிற்குக் கீழ்ப்பட்ட புவனங்களையும் தூல உடம்புகளையும் போக்கியப் பொருள்களையும் படைத்துக்காத்து அழிக்கும் முத்தொழில்களையும் முறையே செய்வர், அதனால், இவர்சாஞ்சனராய இரும்புசுடுகின்றது என்றாற்போலச்செயற்கையாய ஓரோர் தொழில்செய்வர் அதனாலிவர், சிவபிரானையறியாரென அறிஞர் கூறுவர்.

இவர்கட்குப் பிரேரியராய நிறரும உருத்திரமூர்த்தி சிவபிரானோடு அபேதரென்றல் சிவபிரான் மும்மூர்த்திகளைப்படைத்துத் தமோகுணத்தைக் கீழ்ப்படுத்தவல்லராதம்புத்திரரென அவர்களுஞ்சாபிசகப் பிரமவிட்டுணுக்கள் அதைக்கீழ்ப்படுத்தும் ஆற்றலிலராக உருத்திரமூர்த்தி அதைக்கீழ்ப்படுத்தி ஆனந்த நிருத்தம் செய்யுங்கால் அவரோடு சிவபிரான் வேற்றக்கலந்தார், என்னும் சூதசம்மிதையின் சரித்திரத்தானும் "இருவரோடொருவனாகிநின்றனை" என்னும் ஆளுடையபிள்ளையார் திருவெழுகூற்றிருக்கையானும் "சாவமுன்னாட்கள் வெளவித்தகாதினறு ரஞ்சமஞ்சி ஆவவெந்தாயென றவிதாவிடு நம்மவரவரோ மூவரெனறேயெம்பிராளொடுமெண்ணி" என்னுந்திருவாசகத்தானும் அறிக. திருவாசகத்து முந்து நடுவு முடியுமாகிய என்றுமிட்டதும மூவரும அறிகிலரென்றுமிட்டதும மேற்கூறிய மூவருமென்றே பொருள் கொள்ளவேண்டும்

மூவரினுமுதலாய நடுவாய மூர்த்தியையன்றி என்னுந்திருக்கடைகாப்பினும் மூவர்க்குமுதல்வனாய நின்றாயநீயே என்னுந்திருத்தாண்டகத்தனும் சிவபிரான் மும்மூர்த்திகட்கும் அதீதரென்பது போந்ததேயன்றி உருத்திரமூர்த்தியாலறியப்படாரென்பது போதராமையுமாகித்துணாக இனிச்சிவபெருமான் எல்லாப்பொருள்களையுஞ் சமமரிப்பார் அதனால் தாமதகுணமுடையவரெனின் நனகுசொன்னாய பிரமவிட்டுணுக்கள் சிருட்டி கிருத்தியம் திதி கிருத்தியம் ஆகிய ஓரோர் கருமமுடையார் சமமாரத்தொழில் செய்யும் வன்மையுடையரல்லர் அதனால் அவர்களோடு பிரபஞ்சத்தைத் தானே சமமரித்துப் பினபு ஆதி சிருட்டியில் அவர்களையும் பிரபஞ்சத்தையும் சிருட்டிப்பார், அச்சமமாரத்தொழிலாற் செயற்கையாயத் தமோகுணங் கூறப்பட்டதேயன்றி இயற்கையாயச் சத்துவகுணம் உடையரெனபதுணர்க. அவ்வாறு காந்தத்தில் சிவபிரான் உள்ளே சத்துவகுணமும் புறம்பே தமோகுணமும் உடையரென்றும் விட்டுணு உள்ளே தமோகுணமும் புறம்பே சத்துவகுணமும் பிரமன் உள்ளும் புறம்பும் இராசதகுணமுமுடையவரென்றுங் கூறப்படும். சிவபிரான் சாவசம்மாரத்தைச்செய்து சாந்தராய் அழியாதிருக்கின்றாரென ஸ்ரீமிருகேந்திர ஆகமத்து

ங்கூறப்பட்டது. அதனால் அவாந்தரப் பிரளயங்களில் இம்மூவரும் சங்கரிக்கப்படுகையால் உருத்திரமூர்த்தியின் ஏகதேசகாலத்தில் அநேக பிரமர்களும் அநேக விட்டுணுக்களும் அநேககாலாக்கினி உருத்திரர்களும் மாறிமாறி வருவர் என்றறிக.

இன்னும் ஸ்ரீ உருத்திரமூர்த்தியும் ஸ்ரீகாலாக்கினி உருத்திரரும் சம்மாரத் தொழிலுடையரேனும் ஞானசமானத்துவருணமுடையரென்பதுமுணர்க.

வந்தணைந்தவர் தொழுமுன் மலர்புகழ்ச் சண்பை
யந்தணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்
சந்தநித்திலச் சிவிகைநின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தையின்புற விறைவர்தங் கோயின்முன் சென்றார்.

(இ-ள்) வந்தணைந்தவர்தொழுமுன்=வந்தணைந்த அடியார்கள் வணங்குதற்குமுன், மலர்புகழ்ச்சண்பை அந்தணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்=பரந்த புகழையுடைய சீகாழியில் மறையவர்களுக்கெல்லாம் அரிய வேதத்தின் பொருளைப்போல அவதரித்த பிள்ளையார், சந்தநித்திலச்சிவிகைநின்று இழிந்து எதிர்தாழ்ந்து=அழகிய முத்தாலாகிய திருச்சிவிகையினின்று இறங்கி எதிரே வணங்கி, சிந்தையின்புற விறைவர்தங்கோயின் முன்சென்றார்=தமது திருவுள்ளம் மகிழ மாசிலாமணி யீசரது திருக்கோயிலின்முன் நடந்தருளினார்—எ-று.

பிள்ளையார் எதிர்கொண்டுவந்த அடியார்கள் வணங்குமுன் தாமும் சிவிகையினின்று இழிந்து எதிர்வணங்கிச் சென்றாரெனக்கூட்டுக. (௬௧௧)

நீடுகோபுர மிறைஞ்சியுட் புகுந்துநீ ணிலைமான்
மாடுசூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
யாடுமாதியை யாவடு துறையுளா ரமுதை
நாடுகாதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ் நவின்றார்.

(இ-ள்) நீடுகோபுர மிறைஞ்சியுட்புகுந்து=நீண்ட திருக்கோபுரத்தை வணங்கி உள்ளேசென்று, நீணிலையான் மாடுசூழ் திருமாளிகை வலங்கொண்டு வணங்கி=உயர்ந்த அடுக்குகளோடு பக்கத்திற் சூழ்ந்த திருமாளிகைப்பத்தியைப் பிரதக்ஷணஞ்செய்து வணங்கி, ஆடும் ஆதியை ஆவடுதுறையுளார் அமுதை=பொன்னம்பலத்தில் ஆனந்தநடனஞ்செய்யும் முதல்வரைத் திருவாவடுதுறையிலெழுந்தருளிய அரிய அமுதினை, நாடுகாதலிற் பணிந்தெழுந்து அருந்தமிழ் நவின்றார்=நாடிய மிக்க விருப்பத்தால் வணங்கியெழுந்து அரிய திருப்பதிகத்தைப்பாடியருளினார்—எ-று. (௬௧௨)

அன்புநீடிய வருவிகண் பொழியுமா வத்தான்
முன்புபோற்றியே புறம்பணை முத்தமிழ் விரகர்
துன்புபோமனத் திருத்தொண்டர் தம்முடன் றொழுதே
யின்பமேவியப் பதியினி லினிதமர்ந் திருந்தார்.

(இ-ள்.) அன்புநீடிய வருவிக்கண் பொழியுமாறவத்தால் = அன்பு காரணமாக உதிக்கும் ஆனந்தக்கண்ணீர்க்கண்ணினின்றும் சொரியத்தக்க விருப்புடன், முன்புபோற்றியே புறம்பணைமுத்தமிழ்விரகர் = மாசிலாமணியீசரது திருமுன்புவணங்கி ஆலயத்தின் புறம்பே எழுந்தருளும் ஆளுடையபிள்ளையார், துன்புபோமனத் திருத்தொண்டர் தம்முடன் தொழுது = துன்பலேசமும் தம்மிடத்தில்லாத மனத்தையுடைய அடியார் திருக்கூட்டத்துடன் கலந்து வணங்கி, இன்பமேவியப் பதியினிலினிதமர்ந்திருந்தார் = பேரின்பமடைந்து அத்திருப்பதியில் இனிதாக எழுந்தருளியிருந்தார்—எ-று.

அகமும் புறம்புமாய உடம்பு, பொருள், முதலியவற்றுலாய எப்பற்றும் அற்று இறைவனைப்பற்றுன்றையே சலைப்பட்டாராதலில் துன்புபோ மனத்திருத்தொண்டர் என்றார், எனவே துன்பக்கலக்கத்தினைக்கண் சுவானந்தப்பேறு உடையரென்பது போந்தவாறு காண்க. (௬௨௧)

மேவியங்குறை நாளினில் வேள்விசெய் வோர்க்கு
காவதாகிய காலமவந்தணைவுற வணைந்து
நாவலச்சணையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவதற்கரும் பொருள்பெற வேண்டினர் புகன்றார்

(இ-ள்.) மேவியங்குறை நாளினில் = அத்திருவாவடுதுறையென்னுந் திருப்பதியில் பொருந்தி எழுந்தருளியிருக்குங்காலத்தில், வேள்விசெய்வோர்க்குச் சாவதாகிய காலமவர்தணைவுற = யாகஞ்செய்தற்குச் சந்தியாகாலம்வர, நாவலச்சணையர் தலைவர்க்குத் தாதையார் தாமும் அணைந்து = குற்றமற்ற சீகாழியிலுள்ளார் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் தந்தையாராகிய சிவபாதவிருதயரும் அப்பிள்ளையாரை அணைந்து, போவதற்கரும் பொருள்பெற வேண்டினர் புகன்றார் = யாகநிமித்தம் சீகாழியை யடையும்படி அரியபொன்னைப் பெறுதற்குப் பிள்ளையார் திருமுன்னே நின்றுமொழிந்தார்—எ-று.

சிரௌதகன்மம் நித்தியமென்றும் நைமித்திகமென்றும் காமியமென்றும் மூவகைப்படும். சாயங்காலம் உதயகாலம் இவைகளில் நியமமாகச் செய்யத்தக்கதாக விதிக்கப்படும் அக்கினிகோத்திரம் முதலியன நித்தியங்கள், அக்கினிகோத்திரம் தெரிசபூரணமாசம் முதலியன வழுவுங்கால் அவை செய்யாமையால் வருந் தாழ்விற் குற்றம் போம்படி செய்யும் பதிகிருகிட்டி முதலியன நைமித்திகங்கள். இம்மையிற் பலிப்பனவும் மறுமையிற் பலிப்பனவுமாகிய பயன்களை விரும்பிச்செய்யும் இட்டிகள் காமியம் எனப்படும். இம்மையிற்பலிப்பன மழைமுதலியன விரும்பிச்செய்யுங் காரீரிமுதலிய யாகங்கள்; மறுமையிற்பலிப்பன சொர்க்கபலனை விரும்பிச்செய்யும் சோதிட்டோமம் முதலியன; இவைகளுள் நித்தியமாய தெரிசபூரணமாசம் மாசங்கடோறும் அமாவாசை பூரணைகளில் செய்யத்தக்கன, இவைசெய்பவர் நிருட பசுபந்தம் முதலியன வருடமுடிவில் கார்காலத்திற் செய்தற்குரியன வாதலின் ஆனி யாடியாகிய முதுவேனில்நீங்கி ஆவணிபுரட்டாசியாகிய கார்ப்பருவம் வருதலின்

வேள்விசெய்வதனுக்காவதாகிய காலம் வந்தணைவுற என்றார். காரகாலத்திற் பூரணையிலாவது அமாவாசியிலாவது பசுவேட்டலென ஆபஸ்தம்பத்தும் கூறப்படும். (சஉஉ)

தந்தையார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
முந்தைநாளிலே மொழிந்ததமை நினைந்தருண் முன்னி
யந்தமில்பொரு ளாவன வாவடு துறையு
ளெந்தையா ரடித் தலங்களன் றேயென வெழுந்தார்.

(இ-ள்.) தந்தையார் மொழிகேட்டலும் புகலியார்தலைவர் = தமது தந்தையாராகிய சிவபாத இருதயர் கூறிய சொல்லைக்கேட்டபொழுது சீகாழியின் உள்ளார்க்குத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார், முந்தைநாளிலே மொழிந்ததமை நினைந்தருண் முன்னி = தமிழநாடு முழுதும் யாத்திரைசெய்யக்கருதிப் புறப்படுங்காலத்தில் அவர் தம்முடன் யாகஞ் செய்யவேண்டுமென்று கூறியதையும் திருவுள்ளத்திற்கருதிச் சிவபெருமானது திருவருளைச் சிந்தித்து; அந்தமில்பொருளாவன = அழிவில்லாப்பொருளாய எமக்குள்ளன, ஆவடுதுறையுளெந்தை யாரடித்தலங்களன்றேயென வெழுந்தார் = திருவாவடுதுறையின்கண் எழுந்தருளிய எமதுபிரானாகிய மாசிலாமணியீசரது திருவடிகளன்றோ என்று அங்கு எழுந்தருளினார் — எ-று. (சஉங)

சென்றுதேவர்தம் பிரான்மகிழ் கோயின்முன் பெய்தி
நின்றுபோற்றுவார் நீணிதி வேண்டினார்க் கிவ
தொன்றுமற்றிலே னுன்னடி யல்லதொன் றறியே
னென்றுபேருணர் வினவிய செந்தமி ழெடுத்தார்.

(இ-ள்.) சென்றுதேவர்தம்பிரான்மகிழ்கோயின்முன்பெய்தி = அடியார் திருக்கூட்டத்தோடுசென்று மாசிலாமணியீசரெழுந்தருளிய திருக்கோயிலின் முன்அடைந்தருளி, நின்றுபோற்றுவார் = திருமுன்னின்று துதிக்கும் ஆளுடையபிள்ளையார்; நீணிதிவேண்டினார்க்கிவதொன்றுமற்றிலேன் = மிக்கபொருளை விரும்பி எம்மைவந்தடைந்தார்க்குக் கொடுக்கக்கூடிய செல்வப்பொருள் பிறிதொன்றுமில்லேன், உன்னடியல்லதொன்றறியேனென்று = உனது திருவடிகளை அல்லது பிறிதொன்றையு மறியேன் என்று, பேருணர் வினவிய செந்தமிழெடுத்தார் = அச்சிவபிரான் திருவருளினைப் (பொருள்கருதி) வினவிய "இடரினுந் தளரினு" மெனும்முதலையுடைய திருப்பதிகத்தை எடுத்தருளினார் — எ-று. ()

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை - நாலடிமேல்வைப்பு - பண் - காந்தாரபஞ்சமம்.

இடரினுந் தளரினு மெனதுறுநோய் தொடரினு முனகழல் றொழு
தெழுவேன், கடலினில் அமுதொடு கலந்தநஞ்சை மிடற்றினி லடக்கியவே
தியனே, யிதுவோவெமையாளுமா றீவ தொன்றெமக்கில் லையே, லது
வோவுன தின்னரு ளாவடுதுறையானே. (க)

வாழினுஞ்சாவினும்வருந்தினும்போய் வீழினுமுன்கழல்விடுவேனல்லேன், றாழிளந்தடம்புனறயங்குசென்னி போழிளமதிவைத்த புண்ணியனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௨)

நனவிலுங்கனவிலுநம்பாவுன்னை மனத்திலும்வழிபட மறவேனம்மான, புனல்விரிநறுங்கொன்றைப் போதணிந்த கனலெரியனல்புல குகையவனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே (௩)

தும்மலோடருந்துயர்தோன்றிடினு மம்மலரடியலா லரற்றாதென்னாக, கைம்மல்குவரிசிலைக்கணையொன்றினா மும்மதிலெரியெழமுனிந்தவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௪)

கையதுவீழினுங்கழிவுறினுஞ் செய்கழலடியலாற் சிந்தைசெய்யேன், கொய்யணிநறுமலர் குலாயசென்னிமையணி மிடறுடைமறையவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே (௫)

வெந்துயர்தோன்றியோர்வெருவுறினு மெந்தாயுன்னடியலாலேத்தாதென்னா, வைந்தலையரவுகொண்டரைக்கசைத்த சந்தவெண்பொடியணிசங்கரனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே (௬)

வெப்பொடுவிரவியோர்வினைவரினு மப்பாவுன்னடியலாலரற்றாதென்னா, வொப்புடையொருவனையுருவழிய வப்படியழலெழவிழித்தவனே, யிதுவோவெமையாளு மாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே (௭)

பேரிடர்பெருகியோர் பிணிவரினுஞ்சீருடை கழலலாற் சிந்தைசெய்யேன், னேருடைமணிமுடியிராவணனையாரிடர்பட வரையடர்த்தவனே, யிதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௮)

உண்ணினும்பசிப்பினுமுறங்கினுநின் னொண்மலரடியலாலுரையாதென்னாக, கண்ணனுங்கடிகமழ்தாமரைமே லண்ணலுமளப்பரிதாயவனே, யிதுவோவெமையாளுமாறீவ தொன்றெமக்கில்லையே, லதுவோவுனதின்னரு ளாவடுதுறையானே. (௯)



திருஞானசம்பந்தருக்குத் திருவாவடுதுறையிற் பிதா யாகத்துக்காகப்
பொற்கிழி பூதகணத்தாற் பலிபீடத்தில் வைத்தது

பித்தொடு மயங்கியோர் பிணிவரினு மத்தவனை யடியலால் மற்றதெனைப், புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப் பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே, இதுவோ வெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல், அதுவோவுன தின்னருள் ஆவடுதுறையானே. (௰)

அலைபுனலாவடுதுறை யமர்ந்த இலைநுனை வேற்படை யெம்மிறையை, நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார், வினையாயின நீங்கிப் போய்விண்ணவர் வியனுலகம் நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே (௧௧)

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - மாசிலாமணியீசர்.

தேவியார் - ஒப்பிலாமுலையம்மை

எடுத்தவண் டமிழ்ப் பதிகநா லடியின்மே லிருசீர்
தொடுத்தவைப் பொடுந் தொடர்ந்தவின் னிசையினுந் துதிப்பார்,
மடுத்தகா தலில் வள்ளலா ரடியிணை வழுத்தி
யடுத்தசிந்தையா லாதரித் தஞ்சலி யளித்தார்

(இ-ள்) எடுத்தவண்டமிழ்ப்பதிகம் = அவர் எடுத்தருளிய வண்மையையுடைய தமிழ்ப்பதிகத்தை, நாலடியின்மேலிருசீர் தொடுத்தவைப்பொடு = நாலடியின்மேல் இருசீர் தொடுத்த அடிவைப்போடு, தொடர்ந்தவின்னிசையினுந் துதிப்பார் = ஒன்றுபட்ட இனிய இசையுடன்பாடியருளும் பிள்ளையார், மடுத்தகாதலில் வள்ளலாரடியிணை வழுத்தி = சமத்துவத்து நிறைந்த விருப்பத்தால் மாசிலாமணியீசரது இரண்டு திருவடிகளையுந் துதித்து, அடுத்த சிந்தையா லாதரித்தஞ்சலியளித்தார் = அவரிடத்து நீங்காது தொடர்ந்த மனக்கருத்தால் விரும்பிக் கைகுவித்து வணங்கினார்—எ-று (௬௫)

நச்சியின்றமிழ் பாடிய ஞானசம்பந்தர்
இச்சையேபுரிந் தருளிய விறைவரின் னருளா
லச்சிறப்பருள் பூதமுன் விரைந்தங்கண் பீடத்
துச்சிவைத்தது பசும்பொ னாயிரக்கிழி யொன்று.

(இ-ள்) நச்சியின்றமிழ்பாடியஞானசம்பந்தர் = தந்தையாருக்குப் பொருள்தர விரும்பி இனியதிருப்பதிகம்பாடிய ஆளுடையபிள்ளையாரது, இச்சையேபுரிந்தருளிய விறைவரின்னருளால் = மனக்கருத்தின்படியே கொடுத்தருளிய மாசிலாமணியீசரது இனிய திருவருளினால், அச்சிறப்பருள்பூதம் = அவர்விரும்பிய அப்பொருட்டிறப்பை அருளும்படி ஓர் சிவபூதமானது; முன்

விரைந்து பசும்பொன்னாயிரக்கிழியொன்று அகன்பீடத்துச்சிவைத்தது=பிள்ளையார் முன்னேவிரைந்துவந்து பசிய ஆயிரம் பொன்முடிந்த முடிப்பொன்றை இடமகன்ற பலிபீடத்துச்சியின்மேல் வைத்தது—எ-று. (௪௨௬)

வைத்தபூதமங் கணைந்துமுன் னின்றுநல் வாக்கா
லுய்த்தவிக்கிழி பொன்னுல வாக்கிழி யுமக்கு
நித்தனாருள் செய்ததென் றுரைக்கநேர் தொழுதே
யத்தனார்திரு வருணினைந் தவனிமேற் பணிந்தார்

(இ-ள்) வைத்தபூதமங்கணைந்து முன்னின்று நல்வாக்கால்=பலிபீடத்தின்மேல் பொன்முடிப்பை வைத்தபூதமானது பிள்ளையார் திருமுன்னேகிட்டிநின்று இனிய சொல்லினால், உய்த்தவிக்கிழி பொன்னுலவாக்கிழி=நான் வைத்த இம்முடிப்பு பொன்னையெடுக்குந்தோறும் குறையாத உலவாக்கிழியாம்; உமக்கு நித்தனாருள்செய்ததென்றுரைக்க=உமக்கு மாசிலாமணியீசர் அருளிச்செய்ததென்றுகூற, நேர்தொழுது அத்தனார் திருவருணினைந்தவனிமேற்பணிந்தார்=பூதத்தின்நேரிலங்கைகூப்பிவணங்கிஅச்சிவபெருமானது திருவருளைநினைந்து நிலத்தின்மேல்திருமேனிதோயவணங்கினார்—எ-று ()

பணிந்தெழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப்பீடந்
தணைந்தவாட்டக் கிழிதலைக் கொண்டரு மறைகட்
டுணிந்தவான் பொருட்டரும்பொரு டூயவாய் மையினுற்
றணிந்தசிந்தையத் தந்தையார்க் களித்தனா செய்வார்.

(இ-ள்.) பணிந்தெழுந்து கைதொழுது=பூமியில் அட்டாங்கவிதிப்படி வணங்கி எழுந்துகைகூப்பி அஞ்சலிசெய்து, முன்பனிமலர்ப்பீடத் தணைந்த வாட்டக் கிழிதலைக்கொண்டு=தம் திருமுன்புகுளிர்ந்த தாமரைமலர்போலும் பத்திரபீடத்தின்கண் இருக்கின்றபொற்கிழியைச் சிரமேற்சூடிக்கொண்டு, அருமறைகட்டுணிந்த வான்பொருள் தரும்பொருள்=அரியவேதங்களால் நிச்சயிக்கப்பட்ட பெரிய மெய்ப்பொருளாகிய மாசிலாமணியீசர் அருளிய ஆயிரம் பொன்னையும், தூயவாய்மையினுற் றணிந்தசிந்தை யத்தந்தையார்க்களித்துனா செய்வார்=பரிசுத்தமான மெய்யுணர்ச்சியால் சாந்தமடைந்த உள்ளத்தையுடைய தமது தந்தையாராகிய சிவபாத இருதயருக்குக்கொடுத்து அவர்க்குத்திருவாய்மலர்ந்தருளுவாராயினார்—எ-று. (௪௨௮)

ஆதிமாமறை விதியினா லாறுசூழ் வேணி
நாதனாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீதுநீங்கநீர் செய்யவுந் திருக்கழுமலத்து
வேதவேதிய ரனைவருஞ் செய்யவு மிகுமால்.

(இ-ள்.) ஆதிமாமறை விதியினால்=முதன்மையான பெரியவேதங்கள் விதித்தமுறைமையினால், ஆறுசூழ் வேணிநாதனாரை முன்னாகவே புரியுநல் வேள்வி=கங்காநதிபாய்கின்ற சடையையுடைய சிவபெருமானை முதல்வ



திருவொவடுதுறை

ஞானசமபநதர பெலிபீடததில வைதத உலவாககிழியைசசிரமேறகொண
ஆநநதிததுததநதைகையில அளிததது.

ராகக்கொண்டு செய்கின்றநல்லயாகத்தை; தீதுநீங்க நீர்செய்யவும் = குற்றமற நீர்செய்யவும், திருக்கழுமலத்துவேதவேதியர்களெவருஞ் செய்யவும்மிகும் = சீகாழியின்கண் உள்ள வேதங்களையுணர்ந்த மறையவரெல்லோரும் செய்யவும் (இப்பொருள் நாடோறும் குறைவின்றி) மிகக்கிருக்கும் — எ-று.

யாகவுருவர் திருமாலும் யாகமுதல்வர் சிவபெருமானும் ஆகலின் நாதனை முன்னாகவேபுரியும் வேள்வி என்றும், யாகத்திற்குரிய நெய்முதலிய ஓமப்பொருள்களின் குறைவும் தக்கணை மறையவருண்டிமுதலிய பொருளானாய குறைவும் நீங்க என்பார் தீதுநீங்க என்றுங்கூறினர். (௬௨௯)

என்றுகூறியங் கவர்தம்மை விடுத்தபின்வரு
நன்றுமின்புறு மனத்தொடும் புகலிமே னண்ண
வென்றிஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்றலாவடு துறையினின் மகிழ்ந்தினி திருந்தார்.

(இ-ள்) என்றுகூறியங்கவர்தம்மைவிடுத்தபின் = இவ்வாறு கூறியருளி அச்சிவபாதவிருதயரை ஊர்க்குச்செல்ல அநுமதிகொடுத்து விடுத்தபின்பு, அவருநன்றுமின்புறுமனத்தொடும் புகலிமேனண்ண = அச்சிவபாதவிருதயரும் நன்மையும் இன்பமும் கூடிய மனத்துடன் சீகாழிக்கட்செல்ல, வென்றிஞானசம்பந்தரும் விருப்பொடுவணங்கி = வெற்றியையுடைய ஆளுடையபிள்ளையாரும் விருப்பத்தோடு மாசிலாமணியீசரைவணங்கி, மன்றலாவடுதுறையினின் மகிழ்ந்தினிதிருந்தார் = மலர்மணங்கமழும் திருவாவடுதுறை என்னும் திருப்பதியில் மகிழ்ச்சியடைந்து இனிதாக எழுந்தருளியிருந்தார் — எ-று.

அண்ணலார்திரு வாவடு துறையமர்ந் தாரை
யுண்ணிலாவிய காதலி னுறப்பணிந் துறைந்து
மண்ணெலாமுய வந்தவர் போந்தவர் சடைமேற்
றெண்ணிலாவணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார்.

(இ-ள்) அண்ணலார் திருவாவடுதுறையமர்ந்தாரை = பெருமையிற் சிறந்தோராகிய திருவாவடுதுறையின்கண் எழுந்தருளிய மாசிலாமணியீசரை, உண்ணிலாவிய காதலினுறப்பணிந்துறைந்து = தமதுள்ளத்தின்கண் நிறைந்த விருப்பத்தினால் வணங்கி வாசஞ்செய்து, மண்ணெலாமுய்யவந்தவர்போந்து = இவ்வுலகத்தாருய்ய அவதரித்த ஆளுடையபிள்ளையார் அங்குநின்றுமெழுந்தருளி, வார்சடைமேற் றெண்ணிலாவணிவார்திருக்கோழம்பஞ்சேர்ந்தார் = நீண்டசடையின்மேல் தெள்ளியகிரணத்தையுடைய சந்திரனை அணிந்த இறைவரது திருக்கோழம்பமென்னுந்திருப்பதியையடைந்தருளினார் — எ-று. ()

கொன்றைவார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி
யென்றுநீடிய வின்னிசைப் பதிகமுன் னியம்பி
மன்றுளார்மகிழ் வைகன்மா டக்கோயின் மருங்கு
சென்றுசார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்.

(இ-ள்.) கொன்றைவார சடைமுடியனைக கோழமபததிறைஞசி=கொன்றைப்பூமாலையையணிநத நீணட சடாமகுடததையுடைய கோகிலேசனாத திருககோழம்பததின்கண வணஙகி, என்று நீடிய வினனிசைபபதிகமுனனியமபி=எககாலமும நிலைபெறற இனிய இசையையுடைய திருபபதிகததைத திருமுன்னினறுபாடி, மனறுளாரமகிழவைகனமாடககோயினமருஙகுசென்று சார்நதனா=பொனனமபலததினகண நடிததருளியவைகளுதேசாமகிழநது வீறறிருககினற திருவைகல மாடககோயிலின பககலில சென்றடைநதருளினா, திருவளா சிரபுரசசெலவா=செலவமிகக சீகாழியிலவதரிதத ஆளுடையபிளளையாா—எ-று. (௩௬௨)

திருககோழமபம - பண- இநதளம

திருசசிறறமபலம

நீறறானை நீளசடை மேனிறை வுளளாதோ
ராறறானை யழகமா மெனமுலை யாளையோா
கூறறானைக குளிாபொழிற கோழமப மேவிய
வேறறானை யேததுமி னுமமிடா ரேகவே.

தணபுன லோஙகு நண ணநதராய மாநகா
நணபுடை ஞானசம பநதனம பானுறை
விணபொழிற கோழமப மேவிய பநதிவை
பணகொளப பாடவல லாாககிலலை பாவமே

திருசசிறறமபலம

சுவாமிபெயா-கோகிலேசா தேவியாா-சௌநதரநாயகியமமை

வைகனீடுமா டககோயின மன்னிய மருநதைக
கைகளஞசலி கொணடுதாழ நதெழுநதுகண் ணருவி
செயயவின்னிசைச செநதமிழ மாலைகண மொழிநது
நையுமுளளதத ராயததிரு நலலததி னணணி.

(இ-ள்) வைகல நீடுமாடககோயின மனனியமருநதை=வைகலினகணுளளமாடககோயிலில எழுநதருளிய மருநதுபோலவாரை, கைகளஞசலிகொணடு தாழநதெழுநது=திருககரஙகளை அஞசலியாகக குவிததுவணஙகி எழுநது, கணணருவிசெயய வினனிசைச செநதமிழ மாலைகணமொழிநது=கணகளினின்றும ஆனநத அருவி சொரியாநிறக இனிய இசையோடு கூடிய செநதமிழப் பதிகமாலையைபபாடியருளி, நையுமுளளத்தராயத் திருநலலததினணணி=கசிநதுருகும் திருவுளளமுடையராயத் திருநலலமென்னும திருபபதியை யணைநதருளி—எ-று. (௩௬௩)

திருவைகன்மாடக்கோயில் - பண் - காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமதி யுடைமறி தோன்று கையின
ரிளமதி யணிசடை யெந்தை யாரிட
முளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே.

மைந்தன திடம்வைகன் மாடக் கோயிலைச்
சந்தமார் பொழிலணி சண்பைஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - கொம்பிளங்கோதைநாதர்.
தேவியார் - கொம்பிளங்கோதைநாயகியம்மை.

நிலவுமாளிகைத் திருநல்லம் நீடுமா மணியை
யிலகுசேவடி யிறைஞ்சியின் றமிழ்கொடு துதித்துப்
பலவுமீசர்தந் திருப்பதி பணிந்துசெல் பவர்தா
மலைபுனற்றிரு வழுந்தூர்மா டக்கோயி லடைந்தார்

(இ-ள்.) நிலவுமாளிகைத் திருநல்லம் நீடுமாமணியை=விளங்குகின்ற மாளிகைகளையுடைய திருநல்லமென்னுந் திருப்பதியி லெழுந்தருளியிருக்கின்ற மாணிக்கத்தையொத்த உமாமகேசரை, இலகுசேவடி யிறைஞ்சியின் றமிழ்கொடு துதித்து=விளங்குகின்ற சிவந்த திருவடிகளை வணங்கி இனிய தமிழ்ப் பதிகத்தாற் றுதித்து, ஈசர்தந் திருப்பதிபலவும் பணிந்துசெல்பவர்=சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச்செல்லும் பிள்ளையார், அலைபுனற் றிருவழுந்தூர் மாடக்கோயிலடைந்தார்=அலைகின்ற நீர்சூழ்ந்த திருவழுந்தூரின்கண் உள்ள திருமாடக்கோயிலை அடைந்தருளினார்—எ-று. ()
தாம்=அசை.

திருநல்லம் - பண் - குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லா னிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லான் மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்லந் நகரானே.

நலமார் தருமறையோர் வாழ்நல்லூர் நகர்மேய
கொல்லேசர் மழுவானைக் கொச்சையர்மன் றோங்கு
நலமார் தமிழ்ஞான சம்பந்தன் சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-உமாமகேசர் தேவியார்-மங்களநாயகியம்மை

மன்னுமாமட மகிழ்ந்தவான் பொருளினை வணங்கிப்
பன்னுபாடலிற் பதிகவின் னிசைகொடுபரவிப்
பொன்னிமாநதிக் கரையினின் மீண்டுபோந் தணைந்து
சொன்னவாறறி வார்தமைத் துருத்தியிற் றொழுதார்

(இ-ள்) மன்னுமாமட மகிழ்ந்தவான் பொருளினை வணங்கி=நிலைபெற்ற மாடக்கோயிலின்கண் எழுந்தருளிய மெய்ப்பொருளாகிய வேதபுரீசரைப் பணிந்து, பன்னுபாடலிற் பதிகவின்னிசை கொடுபரவி=துதிக்கத்தக்க பாடலினாலாகிய திருப்பதிகத்தை இனிய இசையொடு துதித்து, பொன்னிமாநதிக் கரையினின் மீண்டுபோந்தணைந்து=பெரிய காவேரிநதியின் கரையிலே மீளவும் வந்தடைந்தருளி, சொன்னவாறறிவார்தமைத் துருத்தியிற் றொழுதார்=சொன்னவாறு அறியும் முத்தாவதேசரைத் திருத்துருத்தியில் வணங்கியருளினார்—எ-று.

முற்செய்யுளில் மாடக்கோயிலடைந்[illegible] மாமாடம் என்றது மாமடம் எனமருவிற்றெனக் கொள்க. சொன்னவாறறிவாரென்றது அடியார் கூறியவற்றை அறிவாரென்று பொருள். (சகரு)

திருஅழுந்தூர் - பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

தொழுமாறு வல்லார் துயர்தீர நினைந்
தெழுமாறு வல்லா ரிசைபாட விம்மி
யழுமாறு வல்லா ரழுந்தை மறையோர்
வழிபாடு செய்மா மடமன் னினையே

அருஞானம் வல்லா ரழுந்தைம் மறையோர்
பெருஞான முடைப் பெருமா னவனைத்
திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்
ஒருஞான முண்டா முணர்ந்தார் தமக்கே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வேதபுரீசர். தேவியார்-சௌந்தரநாயகியம்மை.

திரைத்தடம்புனற் பொன்னிசூழ் திருத்துருத் தியினில்
வரைத்தலைப்பசும் பொன்னெனு மவண்டமிழ்ப் பதிக
முரைத்து மெய்யுறப் பணிந்துபோந் துலவுமந் நதியின்
கரைக்கண் மூவலூராக் கணுத லார்கழல் பணிந்தார்.

(இ-ள்.) திரைத்தடம்புனற்பொன்னிசூழ் திருத்துருத்தியினில்= அலையையுடைய மிக்க நீர்மயமாகிய காவிரிசூழ்ந்த திருத்துருத்தியென்னுந் திருப்பதியில், வரைத்தலைப்பசும்பொன்னெனும் வண்டமிழ்ப் பதிகமுரைத்து= வரைத்தலைப்பசும்பொன்னென்னும் முதலையுடைய வளம்பொருந்திய தமிழாலாய திருப்பதிகத்தைப்பாடியருளி, மெய்யுறப்பணிந்துபோந்து= திருமேனி பூமியிற்பொருந்த வணங்கி அங்குநின்றெழுந்தருளி, உலவுமந்நதியின்கரைக்கண் மூவலூராக் கணுதலார் கழல் பணிந்தார்= பெருகுகின்ற அக்காவிரியினகரையிலுள்ள மூவலூரில் எழுந்தருளிய நெற்றிக்கண்ணையுடைய வழித்துணைநாதரது திருவடிகளை வணங்கியருளினார்—எ-று. (௩௯௬)

திருத்துருத்தி-திருவிராகம்-பண்-நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலன்க ளுந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினா
யுரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே.

கற்றுமுற்றி னார்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினா னவன்பகர்ந்த சொற்களாற்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றமுற்று மின்மையிற் குணங்கள்வந்து கூடுமே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-முத்தாவநேசர் தேவியார்-அமிர்தமுகிழாம்பிகை.

மூவலூருறை முதல்வரைப் பரவிய மொழியான்
மேவுகாதலி லேத்தியே விருப்பொடும் போந்து
பூவலம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவிசூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார்.

(இ-ள்.) மூவலூருறை முதல்வரைப்பரவிய மொழியால்= திருமூவலூரிலெழுந்தருளிய வழித்துணைநாதரைத் துதிக்கின்றதிருப்பதிகத்தினால்; மேவுகாதலினேத்தி= திருவுள்ளத்திணிறைந்த விருப்பத்தோடுதுதித்தருளி, விருப்பொடும்போந்து= அங்கு நின்று விருப்பத்தோடும் எழுந்தருளி; பூவலம்பு

தணபுனறபணைப புகலியாதலைவா=பூககளோடு ததுமபுகின்ற குளிாநத நீா கலையுடைய வயலசூழநத சீகாழியின்கண்ணுளளாா தலைவராகிய ஆளுடைய பிளளையாா, வாவிசூழதிருமயிலாடுதுறையினிலவநதாா=புனறறடஞசூழந்த திருமயிலாடுதுறையெனனுநதிருபபதியில எழுநதருளிவநதாா—எ-று. (சஙஎ)

மலகுதணடலை மயிலாடு துறையினின மருவுஞ
செல்வவேதியா தொணடரோ டெதிாகொளச சென்று
கொல்லைமானமறிக கையாைக கோயிலபுக கிறைஞசி
யெலலையிலலதோ ரினபமுன பெருகிடவெழுநதாா

(இ-ள்.) மலகுதணடலை மயிலாடுதுறையினின மருவும = நெருஙகிய சோலைசூழநததிருமயிலாடுதுறையிலவாழும, செலவவேதியா தொணடரோ டெதிாகொளசசென்று=செலவததையுடைய மறையவா அடியாா திருககூட டததோடு எதிாகொணடுவர அஙகடைநதருளி, கொலலைமானமறிககையாைக கோயில புககிறைஞசி=தினைககொலலையில வாழும மானகனறையேநதிய தி ருககரததையுடைய மாயூரநாதரைக கோயிலினகண சென்று வணஙகி, எலலை யிலலதோ ரினபமுனபெருகிடவெழுநதாா=அளவிலலாதபேரினபம முறபட டதிகரிகக எழுநதாா—எ-று

வணஙகி யெழுநதாரெனககூட்டுக. (சஙஅ)

உளளமின்புற வுணாவுறும பரிவுகொண் டுருகி
வெளளநதாஙகிய சடையரை விளஙகுசொற பதிகந
தெளளுமினனிசைந திளைபபொடும புறநதணைந தருளி
வளளலாருமற றுளபதி மருவுதல மகிழநதாா

(இ-ள்.) உளளமினபுறவுணா வுறுமபரிவு கொணடுருகி=தமது திருவு ளளததில இனபம மேமபடமா யூரநாதரைசசிநதிககும பேரனபாலகனிநது, வெளளந தாஙகியசடையரை=கஙகா நதியையணிநத சடையையுடைய அம மாயூரநாதரை, விளஙகுசொறபதிகநதெளளு மினனிசைநதிளைபபொடும புற நதணைநதருளி=விளஙகுகினற சொலலாலாய திருபபதிகததுத தெளளிய இ னிய இசையைபபாடுதலோடும ஆலயததின புறதது வநதருளி, வளளலா ருமறறுள பதிமருவுதல மகிழநதாா=ஆளுடைய பிளளையாரும (அதன் பக்க த்துளள) பிறதிருப்பதிகளையும் அடைதலைவிருமபியருளினாா—எ-று. (சஙகூ)

திருமயிலாடுதுறை-பண்-தககராகம

திருசசிற்றமபலம

காவினறிநன மாமலர்கொண
டிரவுமபக லுநதொழுவாாகள
சிரமொனறிய செஞசடையான்வாழ
வரமாமயி லாடுதுறையே.

நயாகாழியுண ஞானசமபந்தன்
மயநீரமயி லாடுதுறைமேற
செயவாலுரை செயதனபததது
முயாவாமிவை புறறுணாவாாகளே

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-மாயூரேசா தேவியாா-அஞசலநாயகியமமை.

அததிருபபதி யகனறுபோ யணிகிளா சூலக
கைததலைபபடை வீரசெம பொனபளளி கருதி
மெயததகாதலில விளஙகா விடையவா பாதம
பததாதமமுடன பணிநதிசைப பதிகமுன பகாநதாா.

(இ-ள) அததிருபபதி யகனறுபோய=அததிருபபதிகளை நீஙகிசசென் றருளி, அணிகிளா சூலககைததலைப படைவீரசெமபொன பளளிகருதி=அழகுவிளஙகும சூலமாகியகையிலேநதிய ஆயுததததையுடைய சொானபுரீசரது திருசசெமபொன பளளியை ககருதிச சென றருளி, மெயததகாதலில விளஙகா விடையவாபாதம=மெயமமைததனமையுடைய பெருவிருபபால திருவிள நகரிலெழுநதருளிய இடபவாகனததையுடைய பதருசலிமனோகாரது திருவடிகளை, பததாதம முடனபணிநதிசைப பதிகமுனபகாநதாா=அடியாா் திருககூட்டததோடு வணஙகி யிசை யுடைய திருபபதிகததைத திருமுன்னின று பாடியருளினாா—எ-று (௩௪௰)

திருசசெமபொனபளளி-பண-தககராகம.

திருசசிறறமபலம

மருவாா குழலி மாதோா பாகமாய
திருவாா செமபொன பளளி மேவிய
கருவாா கணடத தீசன கழலகளை
மருவா தவாமேன மனனும பாவமே.

நறவாா புகலி ஞான சமபநதன
செறுவாா செமபொன் பளளிமே யானைப
பெறுமா றிசையாற பாடலிவை பததும
முறுமாறு சொலல வோஙகி வாழவரே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-சொாணபுரியீசா. தேவியாா-சுகநதவனநாயகியம்மை.

திருவிளமர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தக மணிபெற மலர்வதோர் மதிபுரை நுதல்கர
மொத்தக நகமணி மிளிர்வதோ ரரவின ரொளிகிள
ரத்தக வடிதொழ வருள்பெறு கணனொடு முமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர் விளமரே.

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள் விகிர்தனைச்
சிந்தையு ளிடைபெற வுரைசெய்த தமிழிவை கெழுவிய
வந்தணர் புகலியு ளழகம ரருமறை ஞானசம்
பந்தன மொழியிவை யுரைசெயு மவர்வினை பறையுமே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - பதஞ்சலிமனோகரர்
தேவியார் - யாழினுமென்மொழியம்மை.

பாடும்பதி பணிந்துபோய்ப் பறியலூர் மேவுந்
தோடுலாமல ரிதழியுந் தும்பையு மடம்புங்
காடுகொண்டசெஞ் சடைமுடிக் கடவுளார் கருது
நீடுவீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர்

(இ-ள்) பாடும்பதி பணிந்துபோய்=தாம்பாடுகின்ற அத்திருவிளநகரென்னுந் திருப்பதியை வணங்கிச் சென்று, பறியலூர்மேவும்=திருப்பறியலூரின் கண்ணுள்ள, தோடுலா மலரிதழியுந் தும்பையும் அடம்பும்=இதழ்பொருந்திய மலர்ந்த கொன்றைப்பூவும் தும்பைப்பூவும் அடம்பம்பூவும், காடுகொண்ட செஞ்சடை முடிக்கடவுளார் கருதும்=நிறைந்திருக்கின்ற சிவந்த சடைமுடியையுடைய வீரட்டேசர் விரும்பி எழுந்தருளிய, நீடுவீரட்டம் நிறைமறைவேந்தர் பணிந்தனர்=நிறைந்த மறைஞானத்தையுடைய ஆளுடைய பிள்ளையார் பெருமைபொருந்திய திருவீரட்டத்தை வணங்கியருளினார்—எ-று.

திருப்பறியலூர்-பண் மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன் கடவுள் கனலேந்தி யாடு
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறிய லூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே.

நறுநீருங் காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவணைப்புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவலம் பிறப்புத் தானே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீரட்டேசர் தேவியார்- இளங்கொம்பம்மை.

பரமர்தந்திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவுகாதலின் வேலையின் கரையினை மேவி
யரவணிந்தவர் பதிபல வணைந்துமுன் வணங்கிச்
சிரபுரத்தவர் திருத்தொண்ட ரெதிர்கொளச் செல்வார்.

(இ-ள்) பரமர்தந்திருப்பறியலூர் வீரட்டம் பரவி=வீரட்டேசரெழுந்தருளிய திருப்பறியலூர் வீரட்டானமென்னுந் திருப்பதியை வணங்கி, விரவு காதலின் வேலையின்கரையினைமேவி=நிறைந்த விருப்பத்தோடு கிழக்குச்சமுத்திரக்கரையை யடைந்து, அரவணிந்தவர் பதிபல வணைந்து முன்வணங்கி=அங்குள்ள சர்ப்பாபரணத்தை யணிந்தசிவபெருமான் எழுந்தருளிய பலதிருப்பதிகளையுஞ் சென்றுவணங்கி, சிரபுரத்தவர் திருத்தொண்டரெதிர்கொளச் செல்வார்=ஆளுடைய பிள்ளையார் அடியார்கள் தம்மை எதிர்கொள்ளும்படி செல்வாராயினார்—எ-று (௪௪உ)

வேறு

அடியவர்கள்களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங்கலைவாயப் போகிக், கடிகமழு மலர்ப்பழனக் கழனிநாட்டகன்பதிகள் கலந்து நீங்கிக், கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினார் குண்டர்சாக்கியர்தங் கொள்கை, படியறியப் பழுதென்றே மொழிந்துய்யு நெறிகாட்டும் பவளவாயர்

(இ-ள்.) குண்டர்சாக்கியர்தங் கொள்கைபடியறியப்பழுதென்றே மொழிந் துய்யுநெறி காட்டும் பவளவாயர்=அருகரும் பௌத்தருமாகிய இவர்களது கொள்கையுலகிலுள்ள யாவரும் அறியக்குற்றமென்றுகூறி உய்யும் நெறியாகியவைதிகசைவ நெறிகளையே மெய்ந்நெறியென்றுணர்த்தி யருளிய பவளம் போலுந் திருவாயையுடைய ஆளுடைய பிள்ளையார், அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங்கலைவாயப்போகி=திருவேட்டக்குடியின்கண் எதிர்கொண்டுவந்த அவ்வடியவர்கள்மனமகிழ்ச்சியடையத் திருவேட்டக்குடியென்னுந் திருப்பதியை வணங்கி அங்குநின்று கடற்கரைவழியேசென்று; கடிகமழுமலர்ப்பழனக்கழனி நாட்டகன்பதிகள் கலந்துநீங்கி=வாசனைகமழும் மலர்களையுடைய வயல்சூழ்ந்த சோழநாட்டில், இடமகன்றதிருப்

பதிகங்களையடைந்து அதனினின்றும் நீங்கி; கொடிமதில்சூழ்தருமபுரங்குறுகினா ர்=கொடிகள் கட்டியமதில் சூழ்ந்த திருத்தருமபுரமென்னுந் திருப்பதியை அடைந்தருளினார்—எ-று. (சசங)

திருவேட்டக்குடி - பண் பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வண்டிரைக்கு மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவங், கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காவாலி கனகழற்க, டொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளந், தெண்டிரைகள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே

தெண்டிரைசேர் வயலுடுத்த திருவேட்டக் குடியானைத், தண்டலைசூழ் கலிக்காழித் தமிழ்ஞான சம்பந்தன், ஒண்டமிழ்நூ லிவைபத்து முணர்ந்தேத்த வல்லார்போ, யுண்டுபயில் வானவரோ டுயர்வானத் திருப்பாரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-திருமேனியழகர் தேவியார்-சுகந்தநாயகியம்மை

தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமா மதனாற்சா ர, வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக் கண்டு, பெருமையுடைப் பெரும்பாணர்க் குரைப்பார் பிள்ளையா ரருள்செய்த, வருமையுடைப் பதிகந்தா மியாழிற் பயிற்றும்பே றருள்செய்தார்

(இ-ள்.) தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்=தருமபுரமென்னுந்திருப்பதி திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருத்தாயாருக்கு ஜனனபூமியாம், அதனால் சாரவருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக்கண்டு=அக்காரணத்தால் பிள்ளையாரைச் சார்ந்துவருகின்ற அத் திருநீலகண்ட யாழ்ப்பாணரது தாய்வழிச்சுற்றத்தார் அங்குவந்து பிள்ளையாரை எதிர்கொண்டு திருவடிகளில்வணங்கிப் பெரும்பாணரையுந் துதிக்க, பிள்ளையார் தாம் அருள்செய்த அருமையுடைப்பதிகம் யாழிற்பயிற்றும் பேறருள்செய்தார்=ஆளுடையபிள்ளையார் தாம் அருள்செய்த அருமை பொருந்திய திருப்பதிகத்தை யாழிலேற்றிய பாடும் பேற்றினை அடியேனுக்கு அருள்செய்தாரென்று, பெருமையுடைய பெரும்பாணரவர்க்குரைப்பார்=பெருமையையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணர் அச்சுற்றத்தார்க்குக் கூறுவாராயினர்—எ-று.

பிள்ளையார் பெரும்பேற்றை அருள்செய்தாரென்று பெரும்பாணர் உரைப்பாராயினரென்கூட்டுக. (சசச)

இளைஞருமற் றதுகேட்டுக் கெழுவுதிருப் பதிகத்தி னிளந்த வோசை, யளவுபெறக் கருவியினி லமைத்தியற்று மதனாலே யகிலமெல்லாம், வளரிசை நிகழ்வதென விளம்புதலும் வளம்புகலி மன்னர் பாதம், முளநடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும்பாண ருணர்த்துகின்றார்.

(இ-ள்) இளைஞருமற்றது கேட்டு=சுற்றத்தாரும் அதனைக்கேட்டு; கெழுவுதிருப்பதிகத்தி னிளந்த வோசை=பெருமைபொருந்திய திருப்பதிகத்தில் விளங்கிய இனிய ஓசையை, அளவுபெறக்கருவியி னீரமைத்தியற்றுமதனாலே=எடுத்தல் முதலிய காலஅளவுகள் பொருந்தயாழில் நீர்அமைத்துப்பாடுங் காரணத்தால், அகிலமெல்லாம் இசைவளர் நிகழ்வதென விளம்புதலும்=எல்லாவுலகங்களிலும் புகழ்மிக ஓங்கியதென்று புகழ்ந்து கூறவும், வளம்புகலிமன்னர் பாதம்=வளம்பொருந்திய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது திருவடிகளை, உளநடுங்கிப் பணிந்து திருநீலகண்டப் பெரும்பாணருணர்த்துகின்றார்=மனநடுக்குற்று வணங்கித் திருநீலகண்டப் பெரும்பாணனார் அவருக்கு விண்ணப்பஞ் செய்கின்றார்—எ-று.

மற்று - அசைநிலை. (௪௪௫)

அலகில்திருப் பதிகவிசை யளவுபடா வகையிவர்க ளன்றியேயு, முலகிலுள்ளோருந்தெரிந்தங் குண்மையினை யறிந்துய்ய வுணர்ந்தும் பண்பாற், பலர்புகழுந் திருப்பதிகம் பாடியருள் பெற்றாற் பண்புநீடி, யிலகுமிசை யாழினகண் டடங்காமை யான்காட்டப் பெறுவனென்றார்.

(இ-ள்) அலகில் திருப்பதிக விசைஅளவுபடாவகை=அளவிடப்படாத திருப்பதிகத்தின் இசையானது யாழில் அடங்காத வண்ணத்தை, இவர்களன்றியேயு முலகிலுள்ளோருந் தெரிந்து அங்குண்மையினை யறிந்துய்ய=இச்சுற்றத்தாரையன்றி உலகத்தாரும் அறிந்து அதனகத்துள்ள உண்மையைக்கண்டு உய்யும்பொருட்டு, உணர்ந்தும் பண்பால்=தெரிவிக்கு நிமித்தம், பலர்புகழுந் திருப்பதிகம் பாடியருள் பெற்றால்=பலராலும் புகழத்தக்க ஓர்திருப்பதிகத்தைப்பாடியருள அடியேன் பெற்றுக்கொண்டால், பண்பு நீடியிலகுமிசை யாழினகண் அடங்காமையான் காட்டப்பெறுவனென்றார்=குணமிக்குவிளங்கும் இனிய இசையானது யாழினகண் அடங்காமையை யான் அவர்க்குக் காட்டப்பெறுவேன் என்றுகூறினார்—எ-று. (௪௪௬)

வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் றொழுதுதிருப் பதிகத்துண்மை, பூதலத்தோர் கண்டதுங் கலத்தினிலு நிலத்துநூல் புகன்றவேத, நாதவிசை முயற்சிகளா லடங்காத வகைகாட்ட நாட்டுகின்றார், மாதர்மடப் பிடிபாடி வணங்கினார் வானவரும் வணங்கியேத்த.

(இ-ள்.) வேதநெறி வளர்ப்பவரும் விடையவர் முன் தொழுது = வைதிக மார்க்கத்தை வளர்க்கும் ஆளுடையபிள்ளையாரும் இடபத்தை வாகனமாக வுடைய அச்சிவபிரானது திருமுன்னே நின்று வணங்கி, திருப்பதிகத் தன்மை = திருப்பதிகத்தினகத்துள்ள இசையின் தன்மை, பூதலத்தோர் கண்டத்துங் கலத்தினிலும் = இவ்வுலகத்தாரது மிடற்றிலும் யாழிலும், நிலத்து வேதநூல் புகன்ற நாதவிசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட நாட்டுகின்றார் = இவ்வுலகத்தின்கண் காந்தருவ வேதநூல் கூறிய நாதத்துக்குரிய இசையை வேறுபடுத்தும் யத்தனங்களினால் அடங்காத வண்ணத்தைக் காட்டும்படிச் செய்கின்றாராய், வானவரும் வணங்கியேத்த மாதர்மடப்பிடி பாடி வணங்கினார் = தேவர்களும் வணங்கித் துதிக்கும்படி மாதர்மடப்பிடி என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப் பாடிப் பணிந்தருளினார் — எ-று.

வேதநெறி வளர்ப்பவர், நாட்டுகின்றாராய்ப் பாடி வணங்கினார் எனக் கூட்டுக. (௪௪௭)

இதுகாறும் பாடலியல்பு கண்டு மகிழ்ந்தென்பார் வானவரும் வணங்கியேத்தவென்றார் வானவருமென்றவும்மை மண்ணுலகத்தாரையுந் தழுவலின் எதிரது தழீஇ நின்றது.

திருத்தருமபுரம் - பண்-யாழ்மூரி

திருச்சிற்றம்பலம்

மாதர்மடப்பிடியு மட வன்னமுமன்னதோர் நடையுடைமலை
மகடுணையெனமகிழ்வர், பூதவியற்படையினி தினிசை பாடவுமாடுவ
ரவர்படர்சடைநெடு முடியதோர்புனலர், வேதமொடேழிசைபாடுவ
ராழ்கடல்வெண்டிரை யிரைந்துநுரைகரைபொருது விம்மிநின்றயலே,
தாதவிழ்புன்னைதயங்கு மலர்ச்சிறைவண்டறை யெழில்பொழில்கு
யில்பயில் தருமபுரம்பதியே. (௧)

பொங்குநடைப்புகலில் விடை யாமவரூர்திவெண் பொடியணி
தடங்கொண்மார்பு பூணநூல்புரள, மங்குலிடைத்தவழு மதி சூடுவ
ராடுவர் வளங்கிளர்புனலரவம் வைகியசடையர், சங்குகடற்றிரையா
லுதை யுண்டுசரிந்திரிந் தொசிந்தசைந்திசைந்துசேரும் வெண்மண
ற்குவைமேற், றங்குகதிர்மணிநித்தில மெல்லிருளொல்கநின் றில
ங்கொளிந லங்கெழிற் றருமபுரம்பதியே (௨)

விண்ணுறுமால்வரைபோல் விடை யேறுவராறுசூ டுவர்விரிசுரி
யொளிகொள் தோடுநின்றிலங்கக், கண்ணுறுநெற்றியருங் கதிர் வெ
ண்மதிக்கண்ணியர் கழிந்தவரிழிந்திடு முடைதலைகலனாப், பெண்ணுறு

றன்னறவாதம் மூரு வம்மம்பனமாலதொழ வரிவையைப்பிணைத்திணைந் தணைந்ததும்பிரியார், தண்ணிதழ்முல்லையொடெண்ணிதழ் மவ்வன் மருங்கலர் கருங்கழிந் நெருங்குநற் றருமபுரம்பதியே. (௩)

வாருறுமென்முலைநன் னுதலேழையோடாடுவர் வளங்கிளர் விளங்குதிங்கள் வைகியசடையர், காருறங்கொன்றலரும மலர்க்கொன்றை யங்கணணியர் கடுவிடைகொடிவெடிகொள் காடுறைபதியர், பாருற விண்ணுலகம் பரவப்படுவோரவர் படுதலைப்பலிகொள்ல பரிபவநரினையார், தாருறுநல்லரவம் மலர்துன்னியதாதிர் தழைபொழின் மழைநுழை தருமபுரம்பதியே (௪)

நேருமவர்க்குணரப் புகில் இல்லைநெடுஞ்சடைக் கடும்புனல் படர்ந்திடப் படுவதோர்நிலையர், பேருமவர்க்கெனையா யிர முன்னைப்பிறப் பிறப்பிலாதவருடற் றடாத பெற்றியராரறிவர், ஆரமவர்க்கழலவர் யதோர் நாகமுழ்ஃகுற வெழுஃகொளு மலர்கொள்பொன் னிதழிநல் லலங்கல், தாரமவர்க்கிமவான் மகளாவதுபோர்விடை கடிபடுசெடிபொழிற் றருமபுரம்பதியே (௫)

கூழைபங்கோதைகுலா யவ டம்பிணைபுல்கமல் குமெனமுலைப் பொறிகொள்பொற் கொடியினை துவர்வாய, மழையொண்கண்மடவாளைபோர் பாகமகிழ்ந்தவர் வலம்மலிபடையினர் கொடிகொடும பழுவாள், யாழுமெழுமெனக்கிடவே றிசை வண்டுமுரன்றினந் துவன்றி மென்சிறஃகறை யுறநறவிரியுநற, குழையுஞாழலுநீ டிய கானலி லள்ளலிசைபுள்ளினந்துயில்பயி றருமபுரம்பதியே (௬)

தேமருவார்குழ லன்ன நடைப்பெடைமான்விழி திருந்திழை பொருந்துமேனி செய்கதிர்விரியத், தூமரு செஞ்சடையிற் றுதைவெண்மதிதுன்றுகொன்றை நொலபுனலசிரங்கரந் துரிந்ததோலுடையர், காமருதண்கழிநீ டிய கானலகண்டகங் கடலலடைகழியிழிய முண்டகத்தயலே, தாமரைசோகுவளைப் படு கிறகழுநீர்மலர் வெறிகமழ்செறிவயற் றருமபுரம்பதியே. (௭)

தூவணநீறகலம் பொலி யவிவைபுலகமல குமெனமலரவரைபுரை திரள்புயமமணிவர், கோவணமுமமுழையின் னதளுமுடையார் டையர் கொலைமலிபடையோர்சூல மேந்தியகுழகர், பாவணமாவலறந் தலை பத்துடையவ்வரக்க னவ்வலியோர்கவலைசெய் தருளபுரிதலைவர், தாவணவேறுடையெம் மடிகட் கிடமவ்வனநடங் கடலலிடுநதடங்கனர்த் தருமபுரம்பதியே. (௮)

வார்மலிமென்முலைமா தொரு பாகமதாகுவா வளங்கிளாமதியமும் வைகியசடையா, கூாமலிசூலமுமவெண் மழு வுமமவாவெலடைட குனிசிலைதனிமலைய தேந்தியகுழகா, ஆாமலி யாழிகொளசெலவனு மவலிகொடாமனாம மிசையவனடிமமுடி யளவுதாமறியாா, தாா்மலி கொனறையலங கலு கநதவாரங்கிடந தடங்கடலலிடுநதுறைத தருமபுரமபதியே. (கூ

புததாகடதுவாமொயத துறி புலகியகையாபொய மொழிந்தழிவிலபெறறியுறற நறறவாபுலவோா, பநதாகளதவமெயப பய ஞசவுகநதவா நிகழநதவாசவநதவா சுடலைபபொடியணிவா, முததனவெணணகையொண மலை மாதுமைபொனனணி புணாமுலையிணைதுணை யணைவதுமபிரியாா, ததநருவிததிரளுந திய மாலகடலோதமவநதடாநதிடுநதடமபொழிற றருமபுரமபதியே (க0)

பொன்னெடுநனமணிமா ளிகை சூழவிழவமலி பொருபுனலதிருவமா புகலியெனறுலகிற, றனனெடுநோபிறவில பதி ஞானசமபநதனஃ துசெநதமிழததடங்கடற றருமபுரமபதியைப, பினனெடுவாாசடையிற பிறை யுமமரவுமமுணை - யவனபிணைதுணைகழலகள பேணுதலுரியா, ரினனெடுநனனுலகெய துவ ரெயதியபோகமு முறுவாகளிடாபிணி துயரணைவிலரே (கக)

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-பாழமூரிநாதேசா தேவியாா-சதாமதுராமபிகை

வணபுகலி வேதியனா மாதாமடப பிடியெடுதது வனபபிறபாடிப, பணபயிலுந திருககடைககாபபுசசாதத வணைநதுபெரும பாணனாா, நணபுடையாழக கருவியினின முனபுபோற கைககொணடு நடததபபுககாாக, கெணபெருகுமபபதிகத திசைநரமபி விடவடஙகிறறிலலையனறே.

(இ-ள.) வணபுகலி வேதியனாமாதா மடபபிடி எடுததுவனபபிறபாடி=வளமபொருநதிய சீகாழிககண அவதரிதத மறையவராகியபிளளையாா மாதாமடபபிடியென முதலெடுததுச சிறபபோடுபாடி, பணபயிலுந திருககடைக் காபபுசசாதத=இசைபொருநதிய திருககடைக காபபைசசாததியருள ; அணைநதுபெரும் பாணனாாம=திருநீலகணட யாழபபாணருமபிளளையாரை அடைநது ; நணபுடையாழக கருவியினின முனபுபோறகைக் கொணடெடுததப் புக்கார்க்கு=நரம்பு இயைநதயாழககருவியின முன்போலக கையா



திருஞானசமபந்த திருததருமபுரததிலே ... யாழிலையைக் கைபபெரும
பாண திருநீலகணடபபெருமபாணர யாழ மூமோத பின்னேயார தடுததது

லமைததுப பாடபபுகுநத அவாககு, எனபெருகு மபபதிகததிசை நரமபி லிட வடஙகிறறிலலை=பெருமைமிகக அததிருபபதிகத்தின் பணயாழ்நரம்பி லமைத்துபபாட அடஙகாதாயிறறு—எ-று

தாம, அனறு, ஏ, அசைநிலைகள பிளளையாாககு அவவிராகமும தான மும அபபதிகததிறகமைதலின, வனபபிறபாடி எனறூா (சசஅ)

அபபொழுது திருநீல கணடவிசைப பெருமபாண ரதனைவிட்டு, மெயபபயமும பரிவுமுறப பிளளையாா கழலிணைவீழந தெழுநது நோககி, யிபபெரியோ ரருளசெயத திருபபதிகத திசையாழி லேற பேனெனனச, செபபியதிககருவியை நானமுறிடுதலினனறே வென றுதெளிநதுசெயவாா

(இ-ள) அபபொழுது திருநீலகணடவிசைபபெரும்பாணா அதனைவிட டு=அசசமயததில இசைநூலவலல திருநீலகணட யாழபபாணா அவவியாழி னைப பூமியிலவைதது, மெயபபயமும பரிவுமுறப பிளளையாா கழலிணைவீ ழநதெழுநது நோககி=தமது உடமபினகண அசசமும பிளளையாரிடதது நே யமும பொருநத அவரது உபயபாதஙகளில வணஙகி எழுநது அவரைபபாாத து, இபபெரியோ ரருளசெயத திருபபதிகததிசை யாழிலேறபேனெனனச செபபியது=இநதபபெரியவ ரருளிசசெயத திருபபதிகததின கணணுளள இ சையை யாழிலமைததுபபாடுவேனெனறு முனயானகூறியது, இககருவியை நானமுறிடுதலினனறேவெனறு தெளிநதுசெயவாா=இவவியாழக கோலைநா ண தொடுஙகாரணததால அனறே எனறுதமமுள ஆராயநது இவவாறுசெய வாராயினா—எ-று

சுறறததாருடன பதிகததையாழிலமைததுப பாடுகினறே னெனககூறி ய குறறததாறபயமும, ஆளுடையபிளளையாரது தெயவததனமை விளஙகுத லின மகிழவும தோனறவெனபாா, மெயபபயமுமபரிவுமுறவெனறூா. (சசக)

வீககுநரம புடையாழி னுலவிளைநத திதுவெனறஙகதனைபபோ க்க, வோககுதலுந தடுததருளி யையரே யுறறவிசை யளவினுனி, ராக கியவிக கருவியினைத தாருமென வாஙகிககொண டவனிசெயத, பா ககியத்தின மெயவடிவாய பாலறூ வாயாபணித தருளுகினறூா.

(இ-ள.) இது வீககுநரமபுடையாழினுல விளைநதது எனறு=இககுறறம் பிணித்த நரம்பினையுடையயாழைககைககொணடகாரணததால நேர்ந்ததென று, அங்கதனைபபோகக வோககுதலும=அவவியாழைக கெடுககக்கருதி ஓ ங்குதலும்; அவனிசெயத பாககியததின மெய்வடிவாம பாலறூவாயாதடுத்த ருளி=மணணுலகததாா செயததவமாகிய் செலவததின பயனதிரணடனன ஆளுடையபிள்ளையாா அதனைததவிாததருளி; ஐயரே உறறவிசை அளவினுல்

நீராக்கிய இக்கருவியினைத்தாருமென்வாங்கிக்கொண்டு=ஐயரே! பொருந்திய இசையினளவாக நீர்செய்த இந்தயாழ்க்கருவியைத்தாருமென்று தமது திருக்கரத்தில் வாங்கிக்கொண்டு; பணித்தருளுகின்றார்=அவரோடு கூறியருளுவாராயினார்—எ-று. (சருய)

ஐயர்நீ ரியாழிதனை முரிக்குமதெ னாளுடையா ருடனேகூட்டச்,
செய்யசடை யாரளித்த திருவருளின் பெருமையெலாந் தெரியநம்பா,
லெய்தியவிக் கருவியினி லளவுபடு மோநந்த மியல்புக்கேற்ப, வைய
கத்தோ ரறிவுறவிக் கருவியள வையினியற்றல் வழக்கே யென்றார்

(இ-ள்.) ஐயர்நீர் யாழிதனை முரிக்குமதென=ஐயரே! நீர் இந்தயாழை முரிப்பது யாதுகருதி, ஆளுடையாருடனே கூட்டச்செய்ய சடையாரளித்த திருவருளின் பெருமையெலாந்தெரிய=பெரியநாயகி பாலுடன்கூட எழுந்தருளிச் சிவந்தசடையையுடைய தோணியப்பர் அருளியதிருவருளின் பெருமைமுழுதும் உணர, நம்பாலெய்திய விக்கருவியினில் அளவுபடுமோ=நம்மிடத்து இருந்த இந்தயாழில் அளவுபடுத்த அமையுமோ (அமையாமையில்), நந்தமியல்புக்கேற்ப வையகத்தோரறிவுறவிக் கருவியளவையினியற்றல் வழக்கே யென்றார்=நமக்குத்தக்க பொருந்த உலகிலுள்ளோர் அறிய இவ்வி யாழ்க்கருவியின் அளவிற்குப்பாடுதல் முறைமைதான் என்று அருளிச்செய்தார்—எ-று.

இரண்டு உலகிலுள்ளோர்க்கு கடங்காது தாமருளிய திருப்பதிகமேயன்றி முன்னுலகிலுள்ளோர்க்கமையப்பாடிய திருப்பதிகங்கள் அமைதற்கருவியாதலின், நம்பாலெய்திய இக்கருவியென்றும், உலகியல் மெய்ச்சிறக்கப்பாடுதல்ற பெரும்பாணர் சிறந்தாரெனப்பது சோன்ற, அவரையும் அளப்பதித்தி நந்தம இயல்புக்கேற்ப என்றும் கூறினார் என்றார். (சருக)

சிந்தையா லளவுபடா விசைப்பெருமை செயலளவி லெய்து
மோநீ, ரிந்தயா ழினைக்கொண்டே யிறைவர்திருப் பதிகவிசை யித
னிலெய்த, வந்தவா றேபாடி வாசிப்பீ ரெனக்கொடுப்பப் புகலிமன
னார், தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர் தலைமே
ற்கொண்டார்.

(இ-ள்.) சிந்தையா லளவுபடாவிசைப் பெருமைசெய லளவிலெய்து மோ=மனத்தால் அளவுபடுத்தற்கரிய இசையின்பெருமை காயமும் கருவியுமாகிய இவற்றின்செயலால் அளவுபடுத்தற்கு அமையுமோ (அமையாமையின்); நீர் இந்த யாழினைக்கொண்டு=நீர் இந்தயாழைக் கைக்கொண்டு; இறைவர்திருப்பதிகவிசை இதனிலெய்தவந்தவாறே பாடிவாசிப்பீரெனக்கொடுப்ப=சிவபெருமான் திருவருளானாகிய திருப்பதிகத்தின் இசையை இந்தயாழிற் பொருந்தவந்தவண்ணமே பதிகத்திலமைத்துப்பாடிவாசிப்பீரென்று கொடுத்த



திருத்தருமபுரம.



திருஞானசம்பந்தர் ஓதியபதிகம யாழிலமையாமையால பாணர் யாழை மாதர பிள்ளையார் அதை யாழிலமைத்துவாசிக்க வணக்கி [illegible].

தருள; புகலிமன்னர் தந்தயாழினைப் பெரும்பாணர் தொழுதுகைக்கொண்டு தலைமேற்கொண்டார்=ஆளுடையபிள்ளையார் கொடுத்தருளிய யாழ்க்கோலைத் திருநீலகண்டயாழ்ப்பாணர் தொழுதுவாங்கிச் சிரசின்மேற் சூடினார்—எ-று

காட்சிக்குரியனவும் அல்லனவுமாய பொருள்கள்யாவையும், சிந்தையா லளத்தற்குரியன, இப்பதிகத்திசை அதனாலும் அளத்தல்கூடாமையின், காய முயற்சியும் கருவிமுயற்சியுமாகிய செயலாலடங்காதெனபார், செயலளவிலை யதுமோ வென்றார்.

காயமுயற்சி=எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பல முதலியன. கருவி முயற்சி=வார்தல், வடித்தல், உறழ்தல், முதலியன (௬௯௨)

அணைவுறுமக் கிளைஞருடன் பெரும்பாண ராளுடைய பிள்ளை யார்தந், துணைமலர்ச் சேவடிபணிந்து துதித்தருளத் தோணிபுரத் தோன்றலாரும், இணையில்பெருஞ் சிறப்பருளித் தொண்டருட னப் பதியி லினிதுமேவிப், பணைநெடுங்கை மத்தயானை யுரித்தவர்தம் பதி பிறவும் பணியச்செல்வார்.

அணைவுறு மக்கிளைஞருடன் பெரும்பாணர்=தம்மையடைந்த அந்தத்தா யவழிச் சுற்றத்தாரோடு பெரியதிருநீலகண்ட யாழ்ப்பாணர், ஆளுடைய பி ள்ளையார் தந்துணைமலர்ச் சேவடிபணிந்து துதித்தருள=ஆளுடைய பிள்ளை யாரது தாமரைமலர்போன்ற இரண்டு சிவந்ததிருவடிகளை வணங்கித்துதிக்க, தோணிபுரத் தோன்றலாரும் இணையில் பெருஞ்சிறப்பருளி=சீகாழி யிலவதரி த்த ஆளுடைய பிள்ளையாரும் ஒப்பில்லாத மிக்கதிருவருட்சிறப்பினை அவர்க குச்செய்து, தொண்டருட னப்பதியிலினிதுமேவி=அடியார் திருக்கூட்டத் தோடு அத்திருப்பதியில் இனிதாக எழுந்தருளி, பணைநெடுங்கை மத்தயானையு ரித்தவர் தம்பதிபிறவும் பணியச்செல்வார்=பருத்த நீண்ட துதிக்கையினையு டைய மத்தயானையையுரித்த சிவபெருமான் எழுந்தருளிய மற்றத்திருப்பதி களையும் வணங்கச்செல்வாராயினார்—எ-று (௬௯௩)

பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட் டகன்பதிகள் பலவு நண்ணி, மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயி லனைப்பலவும் வ ணங்கிப்போற்றித் தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர் தலைவனார் சென்றுசார்ந்தார், செங்கைமானமழுவேந்துஞ் சினவிடை யா ரமர்ந்தருளுந் திருநள்ளாறு.

(இ-ள்.) பாசடைப்பங்கயத் தடஞ்சூழ்பழன நாட்டகன்பதிகள் பலவு நண்ணி=பசியஇலைகளையுடைய தாமரைவாவிகள் சூழ்ந்தவயல்களையுடைய சோழநாட்டில் உள்ள இடமகன்றபலதிருப்பதிகளையும் அடைந்து; மங்கை யொருபாகத்தார் மகிழ்கோயிலனைப்பலவும் வணங்கிப்போற்றி=உமாதேவி பாகராகிய சிவபிரான் எழுந்தருளும் திருக்கோயில்கள் வேறுபலவற்றையும்

பணிந்துதுதித்து; தங்கிசையாழ்ப்பெரும்பாணருடன் மறையோர்தலைவனார் சென்று சார்ந்தார்=இசைபொருந்திய திருநீலகண்டப்பெரும்பாணருடன் மறையவர்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் சென்றடைந்தருளினார், செங்கைமான்மழுவேந்தருஞ் சினவிடையாரமர்ந்தருளுந் திருநள்ளாறு=சிவந்த திருக்கரத்தில் மானகன்றையும் மழுவையும் ஏந்தியருளிய கோபத்தையுடைய இடபத்தைவாகனமாகக்கொண்ட தேற்பாரண்ணியேசர் எழுந்தருளிய திருநள்ளாறென்னுந் திருப்பதியை—எ-று

மறையோர்தலைவனார் திருநள்ளாற்றைச்சென்றடைந்தாரெனக்கூட்டுக.

நள்ளாற்றி லெழுந்தருள நம்பர்திருத் தொண்டர்குழா நயந்து
சென்று, கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக்
குறுகிக்கங்கைத், தெள்ளாற்று வேணியார் திருவார்கோ புரமிறை
ஞ்சிச் செல்வக்கோயி, லுள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்
தெழுந்தா ருணர்வின் மிக்கார்.

(இ-ள்) நள்ளாற்றிலெழுந்தருள நம்பர் திருத்தொண்டர்குழா நயந்து சென்று= திருநள்ளாறென்னுந் திருப்பதியி லெழுந்தருளுங்கால் சிவபிரான டியார் திருக்கூட்டங்கள் விரும்பிச்சென்று, கொள்ளாற்றிலெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகி=எதிர்கொள்ளும் முறைமையால் அவரை எதிர்கொண்டு மகிழ்ச்சியடைந்து தம்முடன் சூழ்ந்துவர அங்கெழுந்தருளி, கங்கைத்தெள்ளாற்றுவேணியார் திருவார்கோபுரமிறைஞ்சி=கங்கையென் னுந் தெள்ளிய நதியையணிந்த சடாமுடியையுடைய தேற்பாரண்ணியேசர து செல்வமிக்க திருக்கோபுரத்தை வணங்கி, செல்வக்கோயில் உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்தெழுந்தார் உணர்வின் மிக்கார்=செல்வம்நி றைந்த திருக்கோயிலினுள் மிகவும் பிரதக்ஷணஞ்செய்து திருமுன்னின்று வ ணங்கி எழுந்தார் அறிவின்மிக்க ஆளுடையபிள்ளையார்—எ-று

உணர்வின்மிக்கார் அணையக்குறுகி இறைஞ்சி தாழ்ந்தெழுந்தாரெனக்கூ ட்டுக. முக்கால் வலஞ்செய்தமைதோன்ற ஆற்றவலங்கொண்டென்றார் ()

உருகியவன் புறுகாத லுள்ளுருகி நனையீரம் பெற்றாற்போல, ம
ருவு திருமேனியெலா முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம் வளர்க்குநீரா,
யருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளமிழிந் தலையநின்று, பொரு
விலபதி கம்போக மார்த்தபூண் முலையாளென் றெடுத்துப்போற்றி.

(இ-ள்) உருகியவன்புறு காதலுள்ளுருகி நனையீரம்பெற்றாற்போல= நெக்குருகுதற்குக் காரணமான அன்பாலாய பெருவிருப்பும் உள்ளத்தை உரு கச்செய்தலால் உடம்பை நனைக்கும் ஈரத்தைத் தாம்பெற்றாற்போல; திருமே னியெலாம்மருவு முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம் வளர்க்குநீராய=திருமேனி முழுதும்பொருந்தி முகுளித்தெழுந்த ரோமாஞ்சிதமென்னும்பைங்கூழை வள ர்க்கும் குணமுடைத்தாய; அருவிசொரி திருநயனத் தானந்தவெள்ளமிழிந்

தலையினின்று=அருவிபோலத் துளிக்கின்ற திருநயனங்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் வெள்ளமானது பெருகி அலையாநிற்க, பொருவில் பதிகம் போகமார்த்த பூண்முலையாள் என்றெடுத்துப் போற்றி=ஒப்பில்லாத திருப்பதிகத்தைப் போகமார்த்த பூண்முலையாளென்றடியெடுத்துத் துதித்து—எ-று.

உள்ளமுருகுதற்கு அன்புகாரணமாதலால் உருகிய அன்பென்றும், அதனால் பெருவிருப்புறுதல் இயல்பாதலின் உறுகாதலென்றும், அதனால் உள்ளுருகி நனைந்த ஈரம் வெளிப்பட்டாற்போறலின் பொழிவது போல என்றும், அவ்வன்புகாரணமாய மயிர்ப்புளகம் அங்குரித்தெழுதலில் அதனை வளர்க்கும் நீர்மை உடைத்தாயென்றும், அருவிபோலத் துளிக்கின்ற துளிகளின் மிகுதிதோன்ற அருவிபொழி திருநயனந் தானந்தவெள்ளமென்றுங் கூறினார் (௪௫௯)

திருநள்ளாறு - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையா ளன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
யாகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மே
னாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடையன்
னண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தனல்ல
பண்புநள்ளா றேத்தும் பாடல்பத்து மிவைவல்லா
ருண்புநீங்கி வானவரோ டுலகிலுறைவாரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - தேர்ப்பாரணணியேசர்

தேவியார் - போகமார்த்தபூண்முலைநாயகியம்மை

யாணரம்பி லாரவிய விசைகூட்டப் பாடியே யெண்ணில்கற்பச், சேணளவு பட்டோங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச் செங்கணாகப், பூணகலத் தவர்பாதம் போற்றிசைத்துப் புறத்தணைந்து புவனமேத்தும், பாணனார் யாழிலிட்ப் பாலறா வாயரருள் பணித்தபோது.

(இ-ள்) யாணரம்பிலாரவியவிசைகூட்டப்பாடி= (திருநீலகண்ட யாழ்ப்பாணரது) யாழினரம்பிற்பிசைய இயற்றமிழும் இசைத்தமிழும் பொருந்தப்பாடியருளி, யெண்ணில்கற்பச் சேணளவுபட் டோங்குந் திருக்கடைக்காப்புச்சாத்தி=அளவிறந்த கற்பவரையும் விண்ணுலகளவு அழியாது நிலைபெறவிளங்கும் திருக்கடைக்காப்பினைச் சாத்தியருளி, செங்கணாகப்பூண் அகலத்தவர் பாதம்போற்றிசைத்துப=சிவந்தகண்ணையுடைய சர்ப்பத்தை ஆபரணமாகவணிந்த திருமார்பையுடைய தேர்ப்பாரணணியேசர் திருவடிக

ளைத்துதித்து, புறத்தணைந்து=ஆலயத்தின்புறம்பே எழுந்தருளி; புவனமே த்துமபாணனார் யாழிலிட்ட பாலருவாய் ரருளபணித்தபோது=உலகத்தார் துதிக்கும் திருநீலகண்டயாழ்ப்பாணர் அத்திருப்பதிகத்தை யாழிலமைத்துப் பாட ஆளுடையபிள்ளையார் திருவருள்செய்த காலத்து—எ-று. (௬௫௭)

பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப் பின்புபெரும் பாணனார் தாந், தெள்ளமுத வின்னிசையின் றேம்பொழிந்த திரியாழைச் சிறக்க விசைக்க, கொள்ளவிடும் பொழிதினகட் குவலயத்தோர் களிகூரக் குலவுசண்பை, வள்ளலார் திருவுள்ள மகிழ்ந்துதிருத் தொண்டரு டன் மருவுங்காலை

(இ-ள்) பிள்ளையார் திருத்தாளங்கொடுபாடப் பின்புபெரும்பாணனார் தாந்=ஆளுடையபிள்ளையார் திருப்பொற்றாளத்தை திருக்கரத்திற்றாங்கி அத் திருப்பதிகத்தைப்பாடுங்கால் பின்பு திருநீலகண்டயாழ்ப்பாணர், தெள்ள முதவின்னிசையின் றேம்பொழிந்ததிரியாழைச்சிறக்கவிசைக்க கொள்ளவிடும் பொழுதினகண்=தெளிய அமுதம்போன்ற இனிய இசைத்தேன்பொழிகின் ற நரம்பினையுடையயாழைப்பண்ணிறக்கமையக்கட்டி அவ்வியாழில் அமைய அப்பதிகத்தை அமைத்துப்பாடுங்கால், குவலயத்தோர்களிகூர= உலகிலுள ளார் களிப்படைய, குலவுசண்பைவள்ளலார் திருவுளமகிழ்ந்து திருத்தொண டருடன் மருவுங்காலை=விளங்குகின்ற சீகாழியில்வதரித்த ஆளுடையபிள்ளை யார் திருவுள்ள மகிழ்ந்து அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளி இரு க்குங்காலத்து—எ-று (௬௫௮)

மன்னுதிருநள்ளாறு மருந்தைவணங் கிப்போந்து வாசநனீ ரப, பொன்னிவளந் தருநாட்டுப் புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவு ம் போற்றிச, செந்நெலவயற் செங்கமல முகமலருந் திருச்சாத்த ம ங்கைமூதூர், தன்னிலெழுந் தருளினார் சைவசிகா மணியார்மெய்த் தவத்தோர்சூழ.

(இ-ள்-) மன்னுதிருநள்ளாறு மருந்தை வணங்கிப்போந்து=நிலைபெ ற்ற திருநள்ளாற்றில் எழுந்தருளிய பிறவிநோய் நீக்கும் மருந்தாகிய அச் சிவபிரானைவணங்கி அத்திருப்பதியினின்றுஞ் சென்றருளி, வாசநன்னீரப் பொன்னிவளந் தருநாட்டுப்புறம்பணைசூழ்திருப்பதிகள் பலவும்போற்றிச= வாசனைபொருந்திய நலநீரையுடைய காவிரிநதியானது பலவளங்களையுங் கொடுக்கும் சோழநாட்டில் வயல்சூழ்ந்த பலதிருப்பதிகளையுந்துதித்து; செ ந்நெலவயற்செங்கமலமுகமலருந்திருச்சாத்தமங்கை மூதூர்தன்னில்=சிவந்த நெற்பயிர்களபொருந்தியவயல்களில்செந்தாமரைமலர்கள்மகளிர்முகம்போல மலர்கின்றபழமைபொருந்தியதிருச்சாத்தமங்கையென்னுந்திருப்பதியில்; சைவ சிகாமணியார் மெய்த்தவத்தோர்சூழ எழுந்தருளினார்=சைவசிகாமணியாகிய ஆளுடையபிள்ளையார் மெய்யடியார்கள் சூழும்படி எழுந்தருளினார்—எ-று.

நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினி னீலநக்கர் தாமுஞ்சை வ, மறையவரொ டெழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கியெ ங்குந், துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தூப தீபமாக்கி, முறைமையினல் வந்தெதிர்கொள் ளுடனணைந்து முதல்வனார் கோயி ல்சார்ந்தார்.

(இ-ள்) நிறைசெல்வத் திருச்சாத்தமங்கையினினீலநக்கரும்=நிறைந்த செல்வத்தையுடைய திருச்சாத்தமங்கை என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற திருநீலநக்க நாயனாரும், சைவமறையவரொழுந்தருளும்படி கேட்டுவாழ்ந்து=சைவவேதியராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளும் முறைமையைத் தாம்கேட்டு (அதனால் இன்புற்று,) வழிவிளக்கியெங்குந் துறைமலிதோரணங் கதலிகமுகு நிறைகுடந் தூபதீபமாக்கி=பிள்ளையார் எழுந்தருளும் வழியைச் செப்பஞ்செய்து எவ்விடங்களினும் இடை இடையே நெருங்கிய தோரணங்களையும் வாழைகளையும் கமுகுகளையும் அவ்விடங்களிற் பூரணகும்பங்களையும் தூபதீபங்களையும் வைத்து, முறைமையில் வந்தெதிர்கொள்ள உடனணைந்து முதல்வனார்கோயில்சார்ந்தார்=எதிர்கொள்ளும் முறைப்படி சென்று எதிர்கொள்ள அவரோடு எழுந்தருளி அயவந்தீச்சரத் திருக்கோயிலை அடைந்தருளினார்—எ-று. (சகூய)

அயவந்தி யமர்ந்தருளு மங்கணார் தங் கோயின்மருங்கணைந்து வானோ, ருயவந்தி தெழுமுன்றில் புடைவலங்கொண் டுட்புக்கா ரொழுகுஞ்செக்கர், மயவந்தி மதிச்சடையார் முன்றாழ்ந்து மாதவமிவ் வையமெல்லாம், செய்வந்த வந்தணனார் செங்கைமேற் குவித்தெழுந்து திருமுன்னின்றார்.

(இ-ள்) அயவந்தியமர்ந்தருளும் அங்கணார்தங்கோயின்மருங்கு அணைந்து=அயவந்தி என்னுந் திருப்பதியி லெழுந்தருளிய அயவந்தீச்சரத்து ஆலயத்தின்கண் அடைந்து, வானோருயவந்தித் தெழுமுன்றில் புடைவலங் கொண்டு உட்புக்கார்=தேவர்கள் வாழும்பொருட்டு எழாநின்ற திருமுற்றத்தின்கண் வலமாகவந்து உள்ளேபுகுந்தவராய், ஒழுகுஞ்செக்கர் மயவந்தி மதிச்சடையார் முன்றாழ்ந்து=ஒழுகுகின்ற செவ்வானம்போலும் அந்திப் பிறையணிந்த சடைமுடியையுடைய அச்சிவபிரானது திருமுன்புவணங்கி; இவ்வையமெல்லாம் மாதவஞ்செய்வந்த அந்தணனார்=இந்த நிலவுலகத்தார் அனைவரும் பெரியதவஞ்செய்த காரணத்தால் அவதரித்த ஆளுடையபிள்ளையார்=செங்கைமேற்குவித்து எழுந்து திருமுன்னின்றார்=சிவந்த திருக்கரங்களைச் சிரசின்மேற்குவித்து வணங்கி எழுந்துதிருமுன்புநின்றருளினார்—எ-று.

அந்தணனார் உட்புக்காராய்க் குவித்தெழுந்து நின்றாரெனக் கூட்டுக.

ஒழுகுஞ்செக்கர் மயச்சடை எனவியையும், ஓர் அவசரத்துச் சடைகள் பின்றாங்கும் ஆதலின் ஒழுகுஞ்செக்கர் மயச்சடையெனக் கூறினார். (சகூக)

போறறிசைககும பாடலின்றை பொஙகியெழு மாதரவு பொழிந துவிமமி, ஏறறின்மிசை யிருபபவாதம மெதிாஙினறு கிளைதது போந தெலலையிலலா, நீறறுநெறி மறையவாதா நீலநககா மனையிலெழுந தருளியனபா, லாறறுமவிருந தவரமைப்ப வனபருட னினபுறறங க முதுசெயதாா.

(இ-ள்.) போறறிசைககும பாடலினறைபொஙகி எழும ஆதரவுபொழிந துவிமமி=துதிககும திருபபதிகததால அதிகரிதது எழுகினற ஆனநதக கணணீாசொரிநது விமமுதலசெயது, ஏறறினமிசையிருபபவாதம எதிாநினறு=இடபததினமேல எழுநதருளுபவராகிய அச்சிவபிரானது சநநிதிககண நினறு, கிளைததுபபோநது=பேரானநததிலமூழகி அஙகுநினறுஞசெனறருளி, எலலையிலலாநீறறுநெறி மறையவாதாநீலநககா மனையிலெழுநதருளி=அளவுபடாத சைவமாாககததைவளாககும ஆளுடையபிளளையாா திருநீலநககநாயனாா திருமனையிலெழுநதருளி, அவா அனபால ஆறறுமவிருநது அமைபப அனபருடன இனபுறறு அஙகு அமுதுசெயவாா = அததிருநீலநககநாயனாா அனபாறசெயதவிருநதினை அமைபபிகக அடியாாதிருககூடடததோடுவிருமபி அவவிடததுத திருவமுதுசெயதாா—எ-று.

ஈஙகு விருநதெனறது உணடிமுதலியனவறறின மேறறு ஆதரவாலாய கணணீா ஆதரவெனறலுபசாரம (௪௯௨)

நீடுதிருநீலநககா நெடுமனையில விருநதமுது செயதுநீாமைப, பாடுமயாழப பெருமபாண ருநதஙகவஙகிரவு பளளிமேவி, யாடும வ ரயவநதி பணிவதனுக கனபருட னணைநது செனறு, நாடியநணபுடைநீல நககடிக ளுடனுதா கழலிறைஞ்சநது.

(இ-ள்.) நீடுதிரு நீலநககா நெடுமனையில விருநதமுதுசெயது=அனபுமிகக திருநீலநககரது பெருமைபொருநதிய திருமனையில விருநதினபொருடடு அமைதத திருவமுதை அமுதுசெயதருளி, நீாமைபாடும யாழபபெருமபாணருநதஙக அஙகு இரவுபளளிமேவி=பணணீாமையோடும பாடும திருநீலகணட யாழபபாணரும அததிருமனையிலவசிககத தாமும அவவிடதது இரவில துயிலகூாநதருளி, ஆடுமவாயவநதி பணிவதனுககு அனபருடன அணைநது செனறு=நிருததஞசெயதருளும அச்சிவபிரானது அயவநதியெனனுநதலததை வணஙக அடியாா திருககூடடததோடு எழுநதருளிசசெனறு, நாடியநணபுடைநீலநககடிகளுடன நாதாகழலிறைஞ்சநது=யாவராலும விருமபததகக நடபினையுடைய திருநீலநககநாயனாரோடு அயவநதிநாதா திருவடிகளைவணஙகி—எ-று.

பாடும் யாழபபாணருந் தஙகவெனறது, முன திருநீலநகக நாயனாாககு நீலகண்டப் பெரும்பாணா தஙகவுறையுள் கொடுததருளவெனப பிளளையாா கட்டளையிட அவா நடுமனையில ஔபாசனவேதியில இடஙகொடுததமை குறிததுநினறது. (௪௯௩)

கோதிலா வாரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி, யாதியா மறைப்பொருளா லருந்தமிழின் றிருப்பதிக மருளிச் செய்வார், நீதியாய் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ்வைத் துப், பூதிசா தனர்பரவும் புனிதவியல் விசைப்பதிகம் போற்றிசெய்தார்.

(இ-ள்) கோதிலா வாரமுதைக் கோமளக்கொம்புடன்கூடக் கும்பிட் டேத்தி=குற்றமில்லாத அரிய அமுதுபோலும் அயவந்தீசரை அழகிய பூங் கொம்புபோன்ற இருமலர்க் கண்ணம்மையோடுகூட வணங்கித்துதித்து, ஆதியாமறைப்பொருளா லருந்தமிழின் றிருப்பதிகம் அருளிச்செய்தார்=எல் லா நூற்கு முதனூலாகிய வேதப்பொருளோடு அரியதமிழ்த்திருப்பதிகத்தை அருளிச்செய்வாராய், நீதியாய் நிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ் வைத்து=சைவ நெறிவழி ஒழுகுகின்ற திருநீலநக்கநாயனாரது பெரிய கீர்த் தியை "நிறையினார்நீலநக்கனெடுமாநகரென்று தொண்டர்உறையுமூர் சாத்த மங்கை" யென்று திருக்கடைக்காப்பிற்சிறப்பித்து, பூதிசாதனர் பரவும் புனி தவியல்விசைப்பதிகம் போற்றிசெய்தார்=பூதிருத்திராக்கமென்னுஞ் சைவசா தனத்தை விளக்குகின்ற ஆளுடையபிள்ளையார் பரிசுத்தமான இயலிசைகள் மைந்த திருப்பதிகத்தைத் துதிசெய்தார்—எ-று.

பூதிசாதனர் மறைப்பொருளோடு திருப்பதிகம் அருளிச்செய்வாராய் நீலநக்கர் சீர்நிகழ்வைத்துப் போற்றிசெய்தாரெனக் கூட்டுக. (ககூஅ)

திருச்சாத்தமங்கை - பண்-பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும் மதி சென்னிவைத்தீ
ரிருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது மேற்பதென்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ்சும்பெருஞ் சாத்தமங்கை
யருமல ராதிமூர்த்தி யயவந்தி யமர்ந்தவனே.

மறையினார் மல்குகாழித் தமிழ்ஞானசம் பந்தன்மன்னு
நிறையினார் நீலநக்க னெடுமாநக ரென்றுதொண்ட
ருறையுமூர் சாத்தமங்கை யயவந்திமே லாயந்தபத்து
முறைமையா லேத்தவல்லா ரிமையோரிலு முந்துவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அயவந்தீசர். தேவியார்-இருமலர்க்கண்ணம்மை.

பரவியகா தலிற்பணிந்து பாலறா வாயர்புறத் தணைந்துபண்பு,
விரவியநண் புடையடிகள் விருப்புறுகா தலிற்றங்கி மேவுநாளில், அர
வணிந்தார் பதிபிறவும் பணியவெழு மாதரவா லணைந்துசெல்வா, ரு
ரவுமனக் கருத்தொன்று முள்ளமுடை யவர்க்குவிடை யுவந்துநல்கி.

(இ-ள்) பரவியகாதலிற்பணிந்து பாலறாவாயர் புறத்தணைந்து=ஆளு டைய பிள்ளையார் மிக்கவிருப்பாலவணங்கித்திருக்கோயிலின் புறத்துச்சென் றருளி; பண்புவிரவிய நண்புடையடிகள் விருப்புறு காதலிற்றங்கி மேவுநா ளில்=குணத்தொடு கலந்தநட்பினையுடைய திருநீலநக்கநாயனாரது விருப்பத் தக்க பேரன்பினிமித்தம் அவரது திருமடத்தில் எழுந்தருளி இருக்கும் நா ளில், அரவணிந்தார் பதிபிறவும் பணியவெழுமாதரவாலணைந்துசெல்வார்= சர்ப்பாபரணத்தையணிந்த சிவபிரான் எழுந்தருளிய பிறதிருப்பதிகளையும் வ ணங்கும்பொருட்டு எழுந்த அன்பினால் அங்குநின்று எழுந்தருளும் பிள்ளை யார், உரவுமனக்கருத்தொன்று முள்ளமுடையவர்க்கு விடையுவந்துநல்கி= உணர்வு அமைந்த மனக்கருத்து ஒருங்கிய உள்ளத்தையுடைய திருநீலநக்க நாயனாருக்கு மகிழ்ந்து விடைகொடுத்தருளி—எ-று (சகூரு)

வேறு.

மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்துகொண்டு மாலயனுக் க
ரியபிரான் மருவுதானம், பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப்பாடிப்
பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கினெய்தக், கற்றவர்வாழ் கடனா
கைக் காரோணத்துக் கண்ணுதலைக் கைதொழுது கலந்தவோசைச்,
சொற்றமிழ்மா லைகள்பாடிச் சிலநாள்வைகித் தொழுதகன்றார் தோ
ணிபுரத் தோன்றலார் தாம்.

(இ-ள்) மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்துகொண்டு=அத்திருநீல நக்கநாயனாரது பெரியநட்பை மகிழ்கூர்ந்தருளி, மாலயனுக்கரியபிரான் ம ருவு தானம்பற்பலவுஞ்சென்று பணிந்தேத்திப்பாடி=திருமால் பிரமன் கா ணுதற்கரிய சிவபிரான் எழுந்தருளிய திருப்பதிகள்பலவற்றையும் அடைந்து வணங்கி துதித்து திருப்பதிகம்பாடி, பரமர்திருத்தொண்டர்குழாம் பாங்கி னெய்த=சிவபிரானது திருவடியார்கூட்டம் தம்முமருங்கில் சூழ்ந்துவர, கற்றவர்வாழ்கடனாகைக் காரோணத்துக்கண்ணு தலைக்கைதொழுது=கல்வி யுடையார்வாழும் கடற்கரைச்சண் உள்ள திருநாகைக்காரோணமென்னுந் திரு ப்பதியிலெழுந்தருளிய திருக்காரோணரைக்கைகுவித்துவணங்கி, கலந்தவோ சைச் சொற்றமிழ்மாலைகள்பாடிச் சிலநாள்வைகி=இசைபொருந்திய சொல் லாலாகிய திருப்பதிகமாலையைப் பாடியருளி அங்குச்சிலநாள் எழுந்தருளி இருந்து; தோணிபுரத்தோன்றலார் தொழுதகன்றார்=ஆளுடையபிள்ளையார் வணங்கி அத்திருப்பதியினின்றும் நீங்கியருளினார்—எ-று.

தாம்=அசை. (சகூசு)

திருநாகைக்காரோணம-பண-செவவழி.

திருசசிறறமபலம

கூனறறிஙகட குறுஙகணணிகானற நெடுவெணணிலா
வேனறபூததம ராஙகோதையோடும் விரவுஞசடை
வானநாட னமராபெருமாற கிட மாவது
கானலவேலிக கடலசூழகடனாகைக காரோணமே.

மலகுதணபூம புனலவாயா ொழுகும வயறகாழியா
னலலகேளவித தமிழஞானசமபநத னலலாாகணமுன
வலலவாறேபுனை நேததுசாரோண நதுவணடமிழ
சொலலுவாாககும மிவைகேட பவாககுந துபரிலலையே

திருசசிறறமபலம

சுவாமிபெயா-காயாரோகணேசா தேவியாா-நீலாயதாடசியமமை.

கழிசகானன மருஙகணைபுங ச ஞைகைபதுநீஙகிக கஙகையாற றுச, சுழிககானல வேணியாாதம பதிபலவும பாவிபபோயத தோ ஙகமாாதம, விழிககாவி மலாபழன கிழவேளூா விமலாகழல வண ஙகியேததி, மொழிககாாற றமிழமாலை புனைநதருளி யஙககனறா மேதாாினறும

(இ-ள்) கழிசகானல மருஙகணையுங கடனாகையதுநீஙகி = உவாககழி யாறறின் மருஙகிலிருககினற திருககடலநாகைககாரோணததினகண ணினறு நீஙகி, கஙகைபாறறுசசழிகரு அலநலவேணியாாம பதிபலவும பாவிப போய=கஙகா நதியினசுழிககு இடமாய அகனற நலலசடாமகுடததையுடை ய சிவபெருமானது பலதிருபபதிகளையுந துதிததுசசென்று, சோலைமாா தம விழிககாவிமலா டழனகிழவேளூா விமலாகழலவணஙகியேததி=பெண களதுகணபோலும நீலோறபலஙகள மலாகினற வயலசூழநத திருககீழ வே ளூரில எழுநதருளிய அடசயலிஙகாது திருவடிகளை வணஙகித துதிதது, மொழிககாதறறமிழமாலை புனைநதருளியஙககனறா மேதாாினறும=சொல லாறப விருபபததைததரும திருபபதிகமாலையைச சாததியருளி அத திருப பதியினின்றும நீஙகியருளினாா—எ-று

கழிககானல உவாககழியாறறினபககவிடம, அதுகழிகானலபானலகம ழுகாழியென்று கருதபபடுபொருள எனபதனாலும கணடலகணமிணடியகான றகாழி என்பதனாலும கழிசூழகுளிாகானல என்பதனாலுமகாணக (௩௬௭).

திருக்கீழ்வேளூர் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்
பண்ணுலாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னுலாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூ
ருன்னுலாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே

குருண்டவார்குழற் சடையுடைக் குழகனை யழகமர் கீழ்வேளூர்
திரண்டமாமறை யவர்தொழும் பெருந்திருக் கோயிலெம் பெருமானை
யிருண்டமேதியி னினமிகுவயன்மலர்ப் புகலிமன் சம்பந்தன்
றெருண்டபாடல்வல் லாரவர்சிவகதி பெறுவது திடமாமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - அக்ஷயலிங்கேசர்

தேவியார்- வனமுலைநாயகியம்மை

அருகணையுந் திருப்பதிக ளானவெலா மங்கணைப் பணிந்து போற்றிப், பெருகியஞா னம்பெற்ற பிள்ளையா ரெழுந்தருளும் பெருமைகேட்டுத், திருமருவு செங்காட்டங் குடிநின்று சிறுத்தொண்டரோடிச்சென்றங், குருக்குமனங் களிசிறப்ப வெதிர்கொண்டு தம்பதியுட் கொண்டுபுக்கார்

(இ-ள்) அருகணையுந் திருப்பதிகளான வெலாமங்கணைப் பணிந்து போற்றி=பக்கத்திலுள்ள திருப்பதிகளெல்லாவற்றிலும் எழுந்தருளிய சிவபெருமானைவணங்கித்துதித்து, பெருகிய ஞானம்பெற்ற பிள்ளையார் எழுந்தருளும் பெருமைகேட்டு=மேம்பட்ட உண்மைஞானத்தைப்பெற்றுக்கொண்ட ஆளுடையபிள்ளையார் தமது திருப்பதிக்கு எழுந்தருளும் பெருமையைக்கேள்வியுற்று, திருமருவு செங்காட்டங்குடிநின்று சிறுத்தொண்டரோடிச் சென்று=செல்வமிக்க திருச்செங்காட்டங்குடியினின்றுஞ் சிறுத்தொண்டநாயனார் விரைந்துசென்று; உருக்குமனங்களிசிறப்ப அங்கு எதிர்கொண்டுதம்பதியுட்கொண்டுபுக்கார்=நெக்குருகும் மனதில்களிப்புமேலிட்ட பிள்ளையாரெழுந்தருளுமிடத்து அவரை எதிர்கொண்டு தமதுதிருப்பதியின்கண் அழைத்துக்கொண்டுசென்றார்—எ-று.

அடியார்சென்றுழிதரியாதுசென்று எதிர்கொண்டுவணங்கி உபசரித்துத் தக்கவாறு திருவமுதுசெய்விக்கும் அவரதுபத்திநிலைமைதோன்ற ஓடிச்சென்றனரென்றார். (௬௬௮)

சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங் குடியிலெழுந் தருளிச்சீர்த்தி, நிறுத்தெண்டிக் கிலுநிலவுந் தொண்டரவர் நண்பமர்ந்து நீலகண்டம், பொறுத்தண்ட ருய்யக்கொண் டார்கணபதீச்சரத்தின்க ட் போகமெல்லாம், வெறுத்துண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்ட ருடனிணைந்தார் வேதவாயர்

(இ-ள்) சிறுத்தொண்டருடன்கூடச் செங்காட்டங்குடியி லெழுந்தருளி=சிறுத்தொண்டநாயனாரோடுகூடத் திருச்செங்காட்டங்குடியென்னுந் திருப்பதியிலெழுந்தருளி, சீர்த்தி எண்டிக்கிலும் நிறைந்து நிலவுந்தொண்டரவர் நண்பமர்ந்து=கீர்த்தியை எட்டுத்திக்கிலும் நிறுத்துவிளங்கும் அச்சிறுத்தொண்ட நாயனாரது நட்பினைவிரும்பி, நீலகண்டம்பொறுத்து அண்டர் உய்யக்கொண்டார் கணபதீச்சரத்தின்கண்=திருநீலகண்டத்தைக்கொண்டருளித் தேவர்களை உய்யும்படி ஆட்கொண்ட கணபதீச்சரத்து ஆலயத்தின்கண், போகமெல்லாம்வெறுத்துண்டிப் பிச்சைநுகர்மெய்த்தொண்டருடன் வேதவாயர் இணைந்தார்=இம்மை இன்பமும் மறுமையின்பமும் ஆகிய எல்லாப்போகங்களையும் உவர்த்துப் பிச்சை உண்டியை உண்கின்றமெய்யடியாருடன் ஆளுடையபிள்ளையார் அடைந்தருளினார்—எ-று

மறுமையின்பமுமடங்கப் போகமெல்லாமென்றும், இம்மைமறுமையின்பங்களைத் துவரத்துறத்தலின் வெறுத்தென்றும், அவ்வாறுமுற்றத்துறந்தார்க்குப் பிச்சையுணவுசிறத்தலின் உண்டிப்பிச்சை நுகர்என்றும், துறவுகாரணமாக அவர்வறுத்தது மெய்யுணர்ந்தாராதலின் மெய்த்தொண்டரென்றுங் கூறினர். இம்மையின்பம்=மகளிர் மாலைசந்தனம் முதலியவற்றாலாய சுகம். மறுமையின்பம்=கற்பகநீழற்கண் புத்தமுதுண்டு அரம்பையர்குழாத்தோடு தழுவியடையுஞ்சுகம் (சுகூக)

அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி யரவணிந்தா ரடிக்கிழ்வீழ்ந்து, செங்கணருவிகள்பொழியத் திருமுன்பு பணிந்தெழுந்து செங்கை கூப்பித், தங்கள்பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர் தொழவிருந்த தன்மைபோற்றிப், பொங்கியெழு மிசைபாடிப் போற்றிசைத்தங் கொருபரிசு புறம்புபோந்தார்

(இ-ள்.) அங்கணைந்து கோயில்வலங்கொண்டருளி=அத்திருவாலயத்தை அடைந்து திருக்கோயிலைப் பிரதட்சணஞ்செய்தருளி; அரவணிந்தார் அடிக்கீழ் செங்கணருவிகள்பொழியத் திருமுன்புவீழ்ந்து=சர்ப்பாபரணத்தையணிந்த கணபதீசரது திருவடிக்கீழ் சிவந்ததிருக்கண்களினின்று மானந்தக்கண்ணீர் அருவிசோர அவரதுதிருமுன்புவீழ்ந்து அட்டாங்கமாகவணங்கி எழுந்து, செங்கைகூப்பி=சிவந்ததிருக்கரங்களைச் சிரசின்மேற்குவித்து, தங்கள் பெருந்தகையாரைச் சிறுத்தொண்டர் தொழ விருந்ததன்மைபோற்றி=தமது பெருந்தகையாராகிய கணபதீசரைச் சிறுத்தொண்டநாயனார் வணங்க

எழுந்தருளிய தன்மையை "செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணி செய்ய" எனத்திருப்பதிகத்தில் சிறப்பித்துத்துதித்து, பொங்கியெழுமிசை பாடிப் போற்றிசைத்தங்கொரு பரிசுபுறம்புபோந்தார்=ஓங்கியெழும் இனிய இசையையுடைய திருப்பதிகத்தைப்பாடி துதிசெய்து ஒருவாறு ஆலயத்தின் புறம்பே யடைந்தருளினார்—எ-று.

நீங்கற்கரிய ஆர்வம்தோன்ற ஒருபரிசென்றார் (௪௭௰)

திருச்செங்காட்டங்குடி - பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்ந்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே

செந்தணல்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
வந்தணபூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - கணபதீச்சரர். தேவியார் - திருக்குழல்நாயகியம்மை

போந்துமா யாத்திரத்தம் போரேற்றின் றிருமனையிற் புகுந்து சிந்தை, வாய்ந்தமா தவர்வார்தா மகிழ்ந்தருள வமர்ந்தருளி மதில்கண் மூன்றுங், காய்ந்தமால் விடையார்தங் கணபதீச்சரம்பரவு காதல்கூர வேந்துநூலணிமார்ப ரினபுற்றங் கன்பருட னிருந்தநாளில்

(இ-ள்) போந்துமாமாத்திரத்தம் போரேற்றின் றிருமனையிற்புகுந்து= ஆலயத்தினின்றும்புறம்பே எழுந்தருளி மாமாத்திரகுலத்தலைவராகிய சிறுத்தொண்டநாயனாரது திருமனையிற்சென்றருளி, சிந்தைவாய்ந்த மாதவரவர்தாமகிழ்ந்தருள வமர்ந்தருளி=திருவுள்ளக்கனிவு அமைந்தபெருந்தவத்தினராய சிறுத்தொண்டநாயனார் மகிழ்கூர்ந்தருள அங்குவசித்தருளி, மதில்கண் மூன்றுங்காய்ந்த மால்விடையார்தங் கணபதீச்சரம் பரவுகாதல்கூர=அசுரர்களது திரிபுரங்களையும் நகைத்தெரித்தருளிய திருமாலாகியவிடபத்தை வாகனமாகக்கொண்டருளும்பெருமானது கணபதீச்சரமெனுமாலயத்தை வணங்கும் விருப்பமேம்பட, வேந்துநூலணிமார்பரினபுற றங்கன்பருடனிருந்த நாளில்=உபவீதமணிந்த அழகியதிருமார்பினையுடைய ஆளுடையபிள்ளையார் மகிழ்ச்சியடைந்து அத்திருப்பதியில் அடியார் திருக்கூட்டத்தோடு எழுந்தருளி இருந்தகாலத்தில்—எ-று. (௪௭௧)

திருமருக னகரினக ணெழுந்தருளித் திஙகளுடன செங்கட்பாம்பு, மருவுநெடுஞ சடைமவுலி மாணிகக வணணாகழல வணஙகிப் போறறி, யுருகியவன புறுகாதலுளளலைபபத தெள்ளுமிசை யுடனே கூடப, பெருகுதமிழத தொடைசாததி யஙகிருநதாா பெரும்புகலிப பிளளையாாதாம

(இ-ள) திருமருகனகரினகணெழுநதருளி=திருமருகலெனனுந திருப பதியினகண அடைநதருளி, திஙகளுடன செஙகடபாமபுமருவுநெடுஞசடைமவுலி மாணிகசவணணாகழலவணஙகிபபோறறி=இளமபிறையோடு சிவநத கணணையுடைய பாமபுகளும பகையினறிவாழும நீணட சடாமகுடததையுடைய மாணிககவணணரது திருவடிகளை வணஙகிததுதிதது, உருகியவன புறு காதலுளளலைபப=உருகுதறகுக காரணமாகிய அனபாலாய பெருவிருபபானது தமதுதிருவுளளததை அலையசசெயய, தெளளுமிசை யுடனேகூடப பெருகுதமிழததொடைசாததி=தெளிநத இசையோடுகூடச சுவைமிகக திருபபதிகமாலையைசசாததி, பெருமபுகலிபபிளளையாா அஙகிருநதாா=பெருமைபொருநதிய ஆளுடையபிளளையாா அஙகுஎழுநதருளி இருநதாா—எ-று.

தாம=அசை. (௪௭௨)

வேறு

அநநாளி லொருவணிகன பதிகளுகி யணைவானோா கனனியையு முடனேகொணடு, பொனனாமே ருசசிலையாா கோயினமாடு புறத திலொரு மடநதிரவு துயிலுமபோத், மினனாவெள ளெயிறறரவு கவவுதலுங கிளாநத விட வேகங கடிதுதலை மீககொணடேறத, தன னுவிீஙகுமவன றனமைகணடு சாயலிளங கனனிநிலை தளாநது சோாவாள,

(இ-ள) அநநாளிலபதிகளுகி யணைவான ஒருவணிகன=அநநாளில் வழிசசெலவோனுய வரும ஓா வசியன, ஓா கனனியையுமுடனேகொணடு=தனனைவரனுககககுறிதத ஓா கனனிகையையும தனனுடனகொணடு, பொனனாமேருசசிலையாா கோயினமாடு=பொனமயமான மாமேருவை விலலாக உடைய மாணிககவணணரது திருககோயிலினபககலில, ஒருமடததுபபுறததில இரவுதுயிலுமபோது=ஒருதிருமடததின புறமபே அனறிரவு துயிலுங காலதது, மினனா வெளளெயிறறரவு கவவுதலும=ஒளிபொருநதிய வெளளிய பறகளையுடைய பாம்பொனறு கடிசசுஙகால, கிளாநதவிடவேகங கடிது தலைமீககொணடேற=மேறகொணடவிடததின் வேகமானது விரைவாயத் தலைககொணடுசெலல, தனனுவிீஙகுமவன் றன்மைகண்டு சாயலிளங்கனனி நிலைதளர்நது சோாவாள=தனது உயிாநீஙகுதம அததலைவனது நிலைமையைபபாாத்து மயிலின்சாயலையுடைய இளமைபொருநதிய அசகனனிகை நிலை தளாநது வருநதுவாளாயினுள—எ-று.

எயிறென்றது, காளி, காளாத்திரி, எமன், எமதூதன் என்னும் நான்குபற்களையும் உணர்த்தலிற்சாதி ஒருமை. விடவேகம் என்புழித்தொக்க ஐந்தாம் - உருபும் பொருளும் விரிக்க. அதனினின்றும் தோன்றியதென ஏதுப்பொருட்பட்டு விரியும். வேகமேழினுள் ஏழாம்வேகத்தில் பல்லும் நாவும் உடம்பும் கருகி விடந்தலைக்கொள்ளுங்கால் உயிர் அடங்குதலும் உண்டு. ஆதலின், அவ்வாறு அடங்காதுபோயிற்றென்பார் ஆவிநீங்குமவ்வென்றார். (௧௭௩)

வாளரவு தீண்டவுந்தான் றீண்டகில்லாண் மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி, யாளரியே றனையானை யணுகவீழ்ந்தே யசைந்தமலர்க் கொடிபோல்வா ளரற்றும்போது, கோளுருமும் புள்ளரசு மனையாரெல்லாக் கொள்கையினு லுந்தீர்க்கக் குறையாதாக, நீளிரவு புலர்காலை மாலைவாச நெறிகுழலா ணடித்தயர்ந்து புலம்புகின்றாள்.

(இ-ள்) வாளரவுதீண்டவுந்தான்றீண்டகில்லாள் = ஒளிபொருந்தியசர்ப்பந்தீண்டவும்தான் அவனைத்தீண்டாளாகி, மறுமாற்றமற்றொருவர் கொடுப்பாரின்றி = வேறுவார்த்தையைக் கூறுவார் மற்றொருவருமில்லாமல், ஆளரியேறனையானை யணுகவீழ்ந்தே = தன்னையாளத்தக்க ஆண்சிங்கம்போன்ற அத்தலைவனைச் சமீபிக்கப் பூமியில்வீழ்ந்து, அசைந்த மலர்க்கொடிபோல்வாளரற்றும்போது = அசைகின்ற பூங்கொடிபோலும் அக்கன்னிகை யழுங்காலத்து, கோளுருமும் புள்ளரசுமனையார் = தீங்கைவிளைக்கும் இடியையும் கருடனையும் ஒத்தமாந்திரிகர், எல்லாக்கொள்கையினாலுந் தீர்க்கக் குறையாதாக = தாம்செய்யும் பாவனையேயன்றி மருந்து மந்திரம் மணி முதலிய விடந்தீர்க்கும் உபாயங்களெல்லாவற்றாலுந் தீர்க்க விடம் நீங்காதிருக்க, நீளிரவு புலர் காலைமாலை வாசநெறிகுழலா ளடித்தயர்ந்து புலம்புகின்றாள் = நீண்ட இராக்காலம்போய் வைகறையாங்காலத்து மாலையையணிந்த வாசனைபொருந்திய நெறித்தகூந்தலையுடைய அக்கன்னிகை மிகச்சோர்ந்து புலம்புவாளாயினாள்—எ-று.

கோளுரும் = கோளைவிளைக்கும் உருமுவென இரண்டாம் உருபும் பொருளும் விரிக்க. விவாகச்சடங்கு முடியாது அரவுதீண்டியிறந்த அவ்வணிகமகனைத் தீண்டுதல் கூடாமையிற் றீண்டகில்லாளென்றும், இறந்துபோன அவ்வணிகமகனையேயன்றி அவட்கு மற்றோருறுதிகூறும் துணையின்மையின் மறுமாற்றம் மற்றொருவர் கொடுப்பாரின்றி யென்றும் ஆதிபௌதிகமாகிய உருமும் புள்ளரசுமன்றி ஆதிதெய்விகமாகிய உருமும் புள்ளரசுமாகத் தம்மைப்பாவிக்கும் ஆரோபிதபாவனையையுடைய மாந்திரிகரது பாவனைநிலைமைதோன்றக் கோளுருமும் புள்ளரசுமனையாரென்றும் அவர்செய்யும் பாவனையேயன்றி மருந்துமணிமந்திரங்களும்அடங்க எல்லாக்கொள்கையினாலுமென்றுங்கூறினார். (௧௭௪)

அன்னையையு மத்தனையும் பிரிந்துநின்னை யடைவாகவுடன்போ
ந்தே னரவாலவாடி, யென்னையுயிர்விட்டகன்று யானென்செய்கே
னிவ்விடுக்கண் டீர்க்கின்றா ரியாருமில்லை, மன்னியசீர் வணிகர்குல ம
ணியேயானும் வாழேனென் றென்றயர்வாள் மதியின்றலே, சென்னி
யிளம் பிறையணிவார் கோயில்வாயிற் றிசைநோக்கித் தொழுதழுதா
ள் செயலொன்றில்லாள்

(இ-ள்) அன்னையையு மத்தனையும் பிரிந்து நின்னை உடன்போந்தேன் = தாயையும் தந்தையையும் பிரிந்து உன்னைச்சார்தலையே பொருளாகக்கருதி உன்னுடன்வந்தேன், அரவாலவாடி என்னையுயிர்விட்டகன்றாய் யானென்செய்கேன் = அரவுகடித்தலால் வருந்தி இறந்து என்னை நீங்கினாய் இதற்குயான் என் செய்வேன், இவ்விடுக்கண் தீர்க்கின்றா ரியாருமில்லை = இத்துன்பத்தை நீக்குகின்றவர் ஒருவருமில்லை (அதனால்), மன்னியசீர் வணிகர்குல மணியேயானும் வாழேனென்றென்றயர்வாள் = நிலைபெற்ற சிறப்பினையுடைய வணிகர்குலத்துக்குத் தலைமையான ஓர்மாணிக்கம் போன்றவனே நானும் உயிர்வாழேனென்று பலவாறுகூறிவருந்தும் அக்கன்னிகை, மதியின்றலே சென்னியிளம் பிறையணிவார் கோயில்வாயிற் றிசைநோக்கிச் செயலொன்றில்லாள் தொழுது அழுதாள் = தனது புத்தியின்றலே சடாமகுடத்தில் இளம்பிறையையணிந்தமாணிக்கவண்ணரது திருவாலயத்தின் திசைநோக்கித் தனக்கோர் செயலற்றவளாய் வணங்கி அழுதாள்—எ-று.

என்றென்ற அடுக்கு, [illegible]பல்காலென்பதை உணர்த்திநின்றது. அயர்வாள் செயலொன்றில்லாளாய்க் கைதொழுதாளெனக்கூட்டுக. ஆண்டு உற்றுழி உதவிசெய்வோர் சிவபிரானென முன்செய்த புண்ணியவசத்தால் துணிந்தனளாதலின் மதியின்றலென்றார், மதி = ஐயமின்றித் தெளிந்தபுத்தி. (௪௭௫)

அடியாரா மிமையவர்தங் கூட்டமுய்ய வலைகடல்வாய் நஞ்சுண்ட
வமுதேசெங்க, ணெடியானு நான்முகனுங் காணாக்கோல நீலவிடவ
ரவணிந்த நிமலாவெந்த, பொடியான காமனுயி ரிரதிவேண்டப் புரி
ந்தளித்த புண்ணியனே பொங்காவாசக், கடியாரு மலர்ச்சோலை மரு
ங்குசூழுங் கவினமருகற் பெருமானே காவாயென்றும்.

(இ-ள்) அடியாராமிமையவர்தங் கூட்டமுய்ய அலைகடல் வாய்நஞ்சுண்ட அமுதே = உமதடியார்களாகிய பிரமாதிதேவர்கள் பிழைக்க அலைவீசுகின்ற பாற்கடலினிடத்து உதித்த நஞ்சினை உண்டருளிய அமுதவடிவரே, செங்கணெடியானுநான்முகனுங்காணாக்கோல = சிவந்தகண்களையுடைய திருமாலும் பிரமனுங்காணக்கூடாத திருமேனியை உடையவரே; நீலவிடவரவணிந்தநிமலா = கரியநிறம்பொருந்திய விடத்தையுடைய சர்ப்பத்தை ஆபரணமாகத்தரித்த அழுக்கற்றவரே; வெந்த பொடியான காமனுயிர் இரதிவேண்டப் புரிந்தளித்த

புண்ணியனே=நெற்றிக்கண் நெருப்பால் வெந்து சாம்பரான மன்மதன் உயிரை இரதிதேவிஇரப்ப அவள்பிரார்த்தனையை விரும்பிக் கொடுத்தருளிய புண்ணியமூர்த்தியே ; பொங்கர்வாசக்கடியாரு மலர்ச்சோலை மருங்குசூழுங் கவின்மருகற்பெருமானே காவாயென்றும்=மரகதகோடு நிறைந்தவாசனைகமழும பூஞ்சோலைகள பக்கலிற்சூழ்ந்த அழகுமிக்க திருமருகலில எழுந்தருளிய மாணிக்கவண்ணரே என்னைக்காத்தருளவீர என்றும்—எ-று. (சஎசு)

வந்தடைந்த சிறுமறையோ னுயிர்மேற்சீறி வருங்காலன பெருங்கால வலயம்போலுஞ், செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரியகோலஞ் சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்யதாளா, விந்தவிடக்கொடுவேக நீங்குமாறும் யானிடுக்கட்குழிநின்று மேறுமாறு, மந்திமதிக்குழிவளர் செய்யவேணி யணிமருகற்பெருமானே யருளாயென்றும்.

(இ-ள்.) வந்தடைந்த சிறுமறையோனுயிர் மேற்சீறிவருங்காலன்=தம்மைவந்தடைந்த மறையவர்சிறுவனாகிய மார்க்கண்டேயரது உயிரின்மேல் கவர்தற்பொருட்டுக் கோபித்துவந்த எமனது, பெருங்காலவலயம்போலுஞ் செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரியகோலம்=பெரிய காலசக்கரம்போலுஞ் சிவந்தகோபக்கண்களையும் வெள்ளிய வக்கிரதந்தங்களையு முடைய அவனது கரியஉருவம், சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்யதாளா=அழிந்துநிலத்திற்புரள உதைத்தருளிய சிவந்த திருவடியை யுடையவனே, இந்தவிடக்கொடுவேக நீங்குமாறும் யானிடுக்கட்குழிநின்றுமேறுமாறும் = இந்தவிடத்தினதுஉயிர் நீங்கச்செய்த கொடியவேகம் இவனை நீங்கும் வகையையும் அதனால் இத்துன்பசாகரத்தினின்றும் யான் கரையேறும்வகையையும், அந்திமதிக்குழவிவளர்செய்ய வேணியணிமருகற் பெருமானேயருளாயென்றும்= மாலைப்பொழுதிற்றோன்றும் இளம்பிறை வளர்கின்ற சிவந்த சடாமுடியையுடைய அழகியதிருமருகலிலெழுந்தருளிய மாணிக்கவண்ணரே அருள்செய்வீராக என்றும்—எ-று.

காலன்தண்ணிற கருவிழி=வட்டமாயக் கோபத்தாற்சுழலலில காலவலையம்போலுமென்றார். காலவலையம்=காலசக்கரம் சிவபிரானதுற்றுழி உதவிசெய்யும் அருட்குணங்களை யுணர்ந்து துதிக்கின்றவள் அவர்செய்த அவ்விதசரிதங்களாகிய நஞ்சமுது செய்தல், கருடன்பகைக்கு அஞ்சிவந்தடைந்த பாம்புகளைத் தரித்தல், இரதிதேவிவேண்ட மதனுக்குயிர் கொடுத்தல், மார்க்கண்டேயர்க்காக மறலியையுதைத்தல், ஆயசரிதங்களைக் கூறிக்காவாயென்றும் அருளாயென்றும் இவ்விரண்டு செய்யுளினுந் துதித்தனளென்று போந்தவாறுணர்க. (சஎஎ)

இத்தன்மை சிவனருளே சிந்தித்தேங்கு மிளங்கொடிபோ னுடங்குமிடை யேழையேத்து, மத்தன்மை யோசையெழுந் தெங்கள்சண்பை யாண்டகையார் கும்பிடவந் தணைகின்றாரதம், மெய்த்தன்மை

விளங்குதிருச் செவியிற்சார மேவுதலுந் திருவுள்ளக் கருணைமேன்மேல், வைத்தன்ன மென்னடையாள் மாடுநீடு மாதவத்தோர் சூழவெழுந்தருளிவந்தார்.

(இ-ள்) இத்தன்மை சிவனருளே சிந்தித்துச் சேருமே=இவ்வாறு சிவபிரானது திருவருளையே சிந்தித்து இரங்கிய, இளங்கொடிபோலுடங்கு மிடையேழை=இளமையான கொடிபோலத் துவள்கின்ற இடையையுடைய அக்கன்னிகை, ஏத்தும் அத்தன்மைத் தோத்திரமெழுந்து=துதிக்கும் அவ்வகையான துதிப்போசையெழுந்து, எங்கள் சண்பையாண்டகையார் கும்பிடவந்தணைகின்றார்=மாணிக்கவண்ணரைக் காணத் திருக்கோயிலையடைகின்றவராகிய சீகாழியிலவதரித்த எமது ஆளுடைய பிள்ளையாரது, மெய்த்தன்மைவிளங்கு திருச்செவியிற் சாரமேவுதலும்=உண்மைத்தன்மை விளங்கிய திருச்செவியிற் பொருந்தக் கேட்கவே, திருவுள்ளக் கருணைமேன்மேல் வைத்து அன்னமென்னடையாள் மாடு=திருவுள்ளக் கருணையை மிகவும் அவளிடத்து வைத்து, பெடை அன்னம்போல வருந் திருக்கோலமுடைய அவள்பக்கத்து, நீடு மாதவத்தோர் சூழ வெழுந்தருளி வந்தார்=மிக்க தவத்தினையுடைய அடியார்கள் புடைசூழ எழுந்தருளிவந்தருளினார்—எ-று. (சஎஅ)

சிரபுரத்து மறையவனார் சென்றுநின்று சிவபெருமானருள்போற்றிச் சிந்தைநைந்து, பரிவுறுவாள் றனைநோக்கிப் பயப்படேனீ பருவரலு நும்பரிசும் பகர்வாயென்ன, கரமலர்கள் சென்னியின்மேற் குவித்துக்கொண்டு கண்ணருவி சொரிந்திழியக் காழிவேந்தர், புரவலனார் சேவடிக்கீழ் விழுந்து தாங்கள் போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்றாள்.

(இ-ள்) சிரபுரத்து மறையவனார் சென்று நின்று=சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார் அவ்விடத்தடைந்து நின்றருளி, சிவபெருமானருள் போற்றிச் சிந்தைநைந்து=சிவபிரானது திருவருளைத் துதித்து மனமுருகி; பரிவுறுவாள் தனைநோக்கி=துதிக்கும் அக்கன்னிகையைப் பார்த்து, பயப்படேல் நீ பருவரலும் நும்பரிசும் பகர்வாயென்ன=நீ பயப்படாதே உனது துன்பத்தையும் உனது வரலாற்றையும் சொல்வாயாகவென்று அருளிச்செய்ய, கரமலர்கள் சென்னியின்மேற் குவித்துக்கொண்டு=கரகமலங்களைச் சிரசின்மேல் அஞ்சலியாகக் கூப்பிக்கொண்டு; கண்ணருவி சொரிந்திழிய=கண்களினின்றுந் துளிக்கின்ற கண்ணீரானது அருவிபோற் சொரிந்து மிகப்பெருக; காழிவேந்தர் புரவலனார் சேவடிக்கீழ்வீழ்ந்து தாங்கள்போந்ததுவும் புகுந்ததுவும் புகலலுற்றாள்=சீகாழியிலவதரித்த வேதத்தையுணர்ந்த மறையவர் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது சிவந்த திருவடியின்கீழ் வணங்கித் தாங்கள் வந்தசெய்தியையும் நிகழ்ந்தசெய்தியையுஞ் சொல்லத்தொடங்கினாள்—எ-று.

கரு

வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் றாமனெந்தை மருமகன்ம
ற்றிவனவற்கு மகளிர்நல்ல, விளம்பிடியா ரோரெழுவ ரவரின்மூத்தா
ளிவனுக்கென் றுரைசெய்தே யேதிலானுக், குளம்பெருகத் தனம்
பெற்றுக் கொடுத்தபின்னு மோரொருவராகவெனை யொழிய வீந்தா
ர், றளர்ந்தழியு மிவனுக்காத் தகவுசெய்தங் கவரைமறைந் திவனையே
சார்ந்துபோந்தேன்

(இ-ள்.) எந்தை வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன்றாமன்=என்னுடைய பிதா வளம்பொருந்திய சோலைசூழ்ந்த வைப்பூருக்கு அதிபனாகிய தாமனென்பவன், அவற்கு மற்றிவன் மருமகன்=விடந்தலைக்கொண்டு இறந்த இவன் அவனுக்கு மருகன், இளம்பிடியார் நல்லமகளிர் ஓரெழுவர்=இளமைபொருந்திய பெண்யானைபோலும் நல்லபுத்திரிகள் அவனுக்கு எழுபேர், அவரின் மூத்தாள் இவனுக்கென்றுரைசெய்து=அவருள் மூத்தபுத்திரியை இவனுக்கென்று மணஞ்செய்ய நிச்சயித்து, ஏதிலானுக்கு உளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்தபின்னும்=அயலானொருவன் மனமகிழ அவனிடத்திற் பொருள்வாங்கிக்கொண்டு அப்புத்திரியை மணஞ்செய்து கொடுத்த பின்னும், எனையொழியவோரொருவராக ஈந்தார்=என்னையொழிய ஒவ்வொருபுத்திரிகளாகப் பின்னும் பிறர்க்குப்பொருள் வாங்கிக்கொண்டு கொடுத்தான், தளர்ந்தழியுமிவனுக்காத் தகவுசெய்து=சால மனந்தளர்ந்து வருந்தும் இவன் பொருட்டு நடுவுநிலைமை கருதி, அங்கவரை மறைந்து இவனையே சார்ந்து போந்தேன்=அவ்விடத்து அயலாரை விடுத்து இவனையே துணையாக அடைந்து வந்தேன்—எ-று. (௪௮௦)

மற்றிவனும் வாளரவந் தீண்டமாண்டான் மறிகடலிற் கலங்கவி
ழ்த்தார் போலநின்றேன், சுற்றத்தா ரெனவந்து தோன்றியென்பாற்
றுயரெலா நீங்கவருள் செய்தீரென்னக் கற்றவர்க டொழுதேத்துங்
காழிவேந்தர் கருணையினாற் காரிகையாட் கருணல்கிப், பற்றிவா ளர
வுவிடந் தீருமாறு பணைமருகற் பெருமானைப் பாடலுற்றார்

(இ-ள்.) மற்றிவனும் வாளரவந் தீண்டமாண்டான்=எனக்கு மணமகனாகவந்த இவனும் ஒளிபொருந்திய பாம்பு கடிக்க இறந்தான், மறிகடலிற் கலங்கவிழ்த்தார்போல நின்றேன்=மறிந்துவரும் அலைகளையுடைய கடலில் மரக்கலங் கவிழப்பெற்ற வணிகர்போல இடருற்றுநின்றேன், சுற்றத்தாரெனவந்து தோன்றியென்பாற் றுயரெலாநீங்கவருள் செய்தீரென்ன = எனதுறவினர்போல எனக்குமுன்வந்து காட்சிகொடுத்து என்னிடத்துள்ள துன்பங்களெல்லாம் நீங்க அருள்செய்தீரென்று கூற, கற்றவர்கள் தொழுதேத்துங் காழிவேந்தர்=அறிவுநூலுணர்ந்த பெரியோர்கள் வணங்கித்துதிக்கும் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார்; கருணையினாற் காரிகையாட் கருணல்கி=தமது காருண்யத்தால் அக்கன்னிகைக்கு விடந்தீண்டி இறந்தவணி

வைப்பூரென்னும் பதியில்வசித்த தாமன்செட்டியார் உடன்பிறந்தாள் பிள்ளைப் ஷெட்டியார் எ-வந்து கன்னிகையாரும் மதுரைக்குச்செலவழி திருமருகலில் ஷெட்டியார் உடன்பிறந்தாள்பிள்ளை விஷந்தீண்டியிறக்கக் கன்னிகையார் துக்கித்தபோது திருஞானசம்பந்தர் கன்னிகைக்கு அபயந்தை கொடுத்தல்.

கன்மகனை விவாகஞ்செய்துகொடுக்க; பற்றியவாளரவு விடந்தீருமாறு பணை மருகற்பெருமானைப் பாடலுற்றார்=அவன் றலைக்கொண்ட ஒளியையுடைய சர்ப்பத்தின்விடம் அவனினின்றும் நீங்கும்வண்ணம் வயல்சூழ்ந்த திருமருகலி னகண் எழுந்தருளிய மாணிக்கவண்ணரைப் பாடத்தொடங்கினார்—எ-று.

சடையானை யெவ்வுயிர்க்குந் தாயானைச் சங்கரனைச் சசிகண்ட மவுலியானை, விடையானை வேதியனை வெண்ணீற்றனை விரவாதார் புரமூன்று மெரியச்செற்ற, படையானைப் *பங்கயத்து மேவினானும் பாம்பணையிற் றுயின்றானும் பரவுங்கோல, முடையானை யுடையானே தகுமோவிந்த வொள்ளிழையா ளுளமெலிவென் றெடுத்துப் பாட.

(இ-ள்) சடையானை யெவ்வுயிர்க்குந் தாயானை=சடாமகுடத்தையுள்ளவரை எவ்வுயிர்க்குந்தாயாயுள்ளவரை, சங்கரனைச் சசிகண்ட மவுலியானை=ஆன்மாக்களுக்குச் சுகத்தைச்செய்பவராகிய வரைச் சந்திரகண்டத்தைத்தரித்த திருமுடியையுடையவரை, விடையானை வேதியனை வெண்ணீற்றனை=இடபத்தை வாகனமாக உடையவரை வேதமுதல்வராயுள்ளவரை வெள்ளிய விபூதியை யணிந்தவரை, விரவாதார் புரமூன்று மெரியச்செற்ற படையானை=பகைவர்களாகிய அசுரர்களது முப்புரங்களையும் எரியச்செய்த திருமாலாகிய அஸ்திரத்தையுள்ளவரை, பங்கயத்து மேவினானும் பாம்பணையிற்றுயின்றவனும் பரவுங்கோலமுடையானை=தாமரைமலரின்கண்வாழும் பிரமனும் அனந்த சயனத்தில் துயின்ற திருமாலும் வணங்குந் திருக்கோலமுடையவரை, உடையானே யிந்தவொள்ளிழையா ளுளமெலிவு தகுமோ வென்றெடுத்துப்பாட=என்னையாளாக உடையவனே இந்த ஒளிபொருந்திய ஆபரணத்தையுடைய கன்னிகையானவள் உள்ளம் வருந்துதல் தகுமோவென்று இறுதியில் வைத்துப் பாடியருள—எ-று. (௪௮௨)

திருமருகல்-விடந்தீர்த்த திருப்பதிகம் - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
லுடையாய் தகுமோ விவளுண் மெலிவே. (௧)

சிந்தா யெனுமால் சிவனே யெனுமால்
முந்தா யெனுமான் முதல்வா வெனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
லெந்தாய் தகுமோ விவளே சறவே. (௨)

அறையார் கழலு மழல்வா யரவும்
பிறையார் சடையு முடையாய் பெரிய
மறையார் மருகன் மகிழ்வா யிவளை
யிறையார் வளைகொண் டெழில்வவ் வினையே (ங)

ஒலிநீர் சடையிற் கரந்தா யுலகம்
பலிநீ திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகன் மகிழ்வா யிவளை
மெலிநீர் மையளாக் கவும்வேண் டினையே (ச)

துணிநீ லவண்ண முகிறோன் றியன்ன
மணிநீ லகண்ட முடையாய் மருகல்
கணிநீ லவண்டார் குழலா ளிவடன்
னணிநீ லவொண்க ணயர்வாக் கினையே. (ரு)

பலரும் பரவப் படுவாய் சடைமேன்
மலரும் பிறையொன் றுடையாய் மருகற்
புலருந் தனையுந் துயிலா ளுடைபோர்த்
தலரும் படுமோ வடியா ளிவளே (சா)

வழுவாள் பெருமான் கழல்வாழ்க வெனா
வெழுவா ணினைவா ளிரவும் பகலு
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
றொழுவா ளிவளைத் துயராக் கினையே (எ)

இலங்கைக் கிறைவன் விலங்க லெடுப்பத்
துலங்கல் விரலூன் றலுந்தோன் றலறுய
வலங்கொண் மதில்சூழ் மருகற் பெருமா
னலங்கல் லிவளை யலராக் கினையே. (அ)

எரியார் சடையு மடியு மிருவர்
தெரியா ததோர்தீத் திரளா யவனே
மரியார் பிரியா மருகற் பெருமா
னரியா ளிவளை யயர்வாக் கினையே (கூ)

அறிவில் சமணு மலர்சாக் கியருந்
நெறியல் லனசெய் தனர்நின் றுழல்வார்
மறியேந் துகையாய் மருகற் பெருமா
னெறியார் குழலி நிறைநீக் கினையே (ய)



திருஞானசம்பந்தர் பதிகம் திருவாய்மலர்ந்தருளச் செட்டியை
செட்டி கன்னிகையாளுடன் கலியாணம் பண்ணுவித்தல்.



செட்டியாருக்கும் கன்னிகையாருக்கும் திருஞானசம்பந்தர் விவாகஞ் செய்வித்தல்.

வயஞ்ஞா னமவல்லலார் மருகற் பெருமா
னையாஞா னமுணர்ந் தடியுள் குத்தலா
வியனஞா னசம்பந் தன்பா டலவல்லார்
வியனஞா லமெல்லாம் விளங்கும் புகழே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மாணிக்கவண்ணேசர்.

தேவியார்- வண்டுவார்குழலிபம்மை.

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றானைச்சூழ்ந்த பொருவிறந்த தொண்டர்குழாம் பொலியவார்ப்ப, வங்கையினை யுச்சியின்மேற்குவித்துக்கொண் டங்கருட் காழிப் பிள்ளையா ரடியில்வீழ்ந்த, நங்கையவளைநயந்த நம்பியோடு நானிலத்தின்புறத்து வாழுமவண்ணம், மங்குறவழ் சோலைமலி புகலிவேந்தர் மணம்புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்.

(இ-ள்) பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றானை = தலைமேற்கொண்ட விடம் நீங்கி அவ்வணிகமகன் உயிர்பெற்று எழுந்து நின்றான், சூழ்ந்த பொருவில் திருத்தொண்டர்குழாம் பொலியவார்ப்ப=பிள்ளையாரது பக்கலிற் சூழ்ந்த ஒப்பில்லாத அடியார் திருக்கூட்டங்கள் ஒலிபெருக ஆரவென ஆரவாரிக்குங்கால், அங்கு அங்கையினை உச்சியின்மேற் குவித்துக்கொண்டு=அவ்விடத்து அழகிய கையைச்சிரசின்மேல் கூப்பித்கொண்டு, அருட் காழிப்பிள்ளையார் அடியில் விழுந்த அங்கை வளர் தளை=காருண்ணிய ரூபியான ஆளுடைய பிள்ளையாரது திருவடியில் வீழ்ந்து வணங்கிய அவ்வணிகர் குலப்பெண்ணை, நயந்த நம்பியோடு நானிலத்தின்புறத்து வாழுமவண்ணம்= (அவளால்) விரும்பப்பட்ட அவ்வணிகமகனோடு இம்மகன் நிலவுலகத்தின்கண் இன்பமடைந்து வாழும்படி, மங்குல்தவழ் சோலைமலி புகலிவேந்தர்=மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழிப்பதியினராகிய ஆளுடைய பிள்ளையார், மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்=கலியாணஞ்செய்து கூடி வாழும் பெரிய இல்லறநெறியை அவர்க்கு அருளிச்செய்து ஊர்க்குச்செலவிடுத்தார் —எ-று. (௪௮௪)

மற்றவர்க்கு விடைகொடுத்தங் கம்மருநாளின் மருகனக ரினிலவந்து வலியபாசனு, செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்டமீண்டுஞ் செங்காட்டங் குடியிலெழுந் தருளவேண்டிப, பற்றியெழுங் காதன் மிக மேன்மேற்சென்று பரமனார் திறத்துன்னிய பாங்கரெங்குஞ், சுற்றுமருந் தவரோடுங் கோயிலெய்திச் சுடர்மழுவாண் டவர்பாதந் தொழுவானபுக்கார்.

(இ-ள்.) மற்றவர்க்கு விடைகொடுத்தங்கமருநாளில் = (மணம்முடித்துக்கொள்ளும்படி தங்களூர்க்குச்செல்ல) அவ்விருவர்க்கும் அனுமதிகொடுத்துத் திருப்பதியின்கண் எழுந்தருளி யிருக்குங்காலத்தில்; மருகல் நகரினில்வந்து வலியபாசஞ்செற்ற புகழ்ச்சிறுத் தொண்டர்வேண்ட = திருமருகல் நகரின் கட்சென்று கொடிய அஞ்ஞானத்தைக்கெடுத்த புகழினையுடைய சிறுத்தொண்ட நாயனார் குறை இரப்ப, மீண்டுஞ்செங்காட்டங்குடியி லெழுந்தருளவேண்டி = பிள்ளையார் மீளவுந்திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளும்படி விரும்பிற்று, மேன்மேற் பற்றிப்பெருங் காதல்மிக்குச்சென்று = மேலும்மேலுந்தொடர்ந்தெழுகின்ற பெரு விருப்பானது அதிகரிக்கச் சென்றருளி, பரமனார் திறத்துன்னிய பாங்கரொங்குஞ்சுற்று மருந்தவரோடும் கோயிலெய்தி = மாணிக்கவண்ணரது திருவருளின் பகுதியை எண்ணி யெப்பக்கத்துஞ்சூழ்ந்த அடியார் திருக்கூட்டத்தோடுந் திருக்கோயிலை அடைந்து, சூடாமழுவாண்டவர் பாதந்தொழுவான் புக்கார் = ஒளிபொருந்திய மழுப்படையை ஏந்திய மாணிக்கவண்ணரது திருவடிகளை வணங்கும்படி ஆலயத்துட் புகுந்தருளினார்—எ-று.

புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்றுகின்றார் பொங்குதிரை நதிப்புனலும் பிறையுஞ்சேர்ந்த, செக்கர்முடிச் சடைமவுலி வெண்ணீற்றார்தந் திருமேனி யொருபாகம் பசுமையாக, மைக்குலவு கண்டத்தார் மருகற்கோயின் மன்னுநிலை மனங்கொண்டு வணங்குவார்முன், கைக்கனலார் கணபதீச் சரத்தின்மேவுங் காட்சிகொடுத் தருளுவான்காட்டக் கண்டார்

(இ-ள்.) புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்றுகின்றார் = புகுந்து வணங்கித் திருமுன்னின்று துதிக்கும் ஆளுடையபிள்ளையார், பொங்குதிரை நதிப்புனலும்பிறையுஞ்சேர்ந்த = பொங்குகின்ற அலைகளையுடைய கங்கையும் இளம்பிறையுந்தங்கிய, செக்கர்முடிச் சடைமவுலிவெண்ணீற்றார்தம் = செவ்வானம்போலும் சடாமுடியையும் வெள்ளிய விபூதியையும் உடைய மாணிக்கவண்ணரது திருமேனி யொருபாகம் பசுமையாக = திருமேனியிலொரு பாதி பசியவண்ணமாக, மைக்குலவு கண்டத்தார் மருகற்கோயில் மன்னுநிலை மனங்கொண்டு வணங்குவார்முன் = நீலகண்டத்தையுடைய அச்சிவபிரானார் திருமருகலின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் நிலைமையைத் திருவுள்ளத்தில் கருதிவணங்கும் பிள்ளையார்முன்; கைக்கனலார் கணபதீச்சரத்தின்மேவுங் காட்சிகொடுத்தருளுவான் காட்டக்கண்டார் = திருக்கரத்தில் அக்கினியை ஏந்திய அம்மாணிக்கவண்ணர் தாம்கணபதீச்சரத்தின்கண் எழுந்தருளிய திருக்கோலத்தைத் கொடுத்தருளும்படி தரிசிப்பிக்க இங்கு தரிசித்தார்—எ-று.

(௪௮௫)

வேறு.

மருகல்மாந்து நிறைந்தகோல மல்குசெங்காட்டங் குடியின்மன்னிய
பெருகுகணபதி யீச்சரத்தார் பீடுடைக்கோலமே யாகித்தோன்ற
வுருகியகாதலு மீதுபொங்க வுலகார்முன்கொளு முணர்வுநீட
வருவிகண்வாரவுறப் பாடலுற்றா ரங்கமும்வேதமு மென்றெடுத்து.

(இ-ள்.) மருகல்மாந்து நிறைந்தகோலம்=திருமருகலின்கண் விரும்பி எழுந்தருளிய திருக்கோலம், மல்குசெங்காட்டங்குடியின்மன்னி=செல்வமிக்க திருச்செங்காட்டங்குடியில் நிலைபெற்று, பெருகுகணபதீச்சரத்தார் பீடுடைக்கோலமே யாகித்தோன்ற=விளங்குங் கணபதீச்சரமென்னுந் திருவாலயத்தில் எழுந்தருளிய கணபதீச்சரத்து பெருமைபொருந்திய திருக்கோலமேயாய்ப் புலப்பட, உருகிய காதலுமீதுபொங்க=நெகிழ்ந்துருகுகின்ற அன்பும் உள்ளே நிறைந்து மேலேவழிய, உலகார்முன்கொளுமுணர்வுநீட=உலகின்கண்ணுள்ளாரிடத்துக்கொண்ட காருணியவுணர்வுமேம்பட, அருவிகண்வாரவுறப்பாடலுற்றார் அங்கமும் வேதமுமென்றெடுத்து = திருக்கண்களினின்றும் ஆனந்த அருவிசொரியும்படி பாடியருளினார் அங்கமும் வேதமுமென முதலி லடியெடுத்து—எ-று.

பதிகம் பாடுதற்கு உலகர்மேல் வைத்த கருணை காரணமாதலின், உலகார்முன் கொளுமுணர்வு நீட என்றார்.

உணர்வும் என்கிற எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. (சஅகூ)

திருச்செங்காட்டங்குடியும் - திருமருகலும் வினாவுரை

பண் - நட்டபாஷை

திருச்சிற்றம்பலம்

அங்கமும்வேதமு மோதுநாவ ரந்தணர்நாளு மடிபரவ
மங்குன்மதிதவழ் மாடவீதி மருகனிலாவிய மைந்தசொல்லாய்
செங்கயலார்புனற் செல்வமல்கு சீர்கொள்செங்காட்டங் குடியதனுட்
கங்குல்விளங்கெரி யேந்தியாடுங் கணபதியீச்சரங் காமுறவே.

நாலுங்குலைக்கமு கோங்குகாழி ஞானசம்பந்த னலந்திகழு
மாலின்மதிதவழ் மாடமோங்கு மருகலின்மற்றதன் மேன்மொழிந்த
சேலுங்கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங்காட்டங் குடியதனுட்
சூலம்வல்லான்கழ லேத்துபாடல் சொல்லவல்லார்வினை யில்லையாமே.

திருச்சிற்றம்பலம்.

கண்டடிபோற்றி வினவிப்பாடிக் கணபதியீச்சரங் காதலித்த, வண்டார்பிரானை வணங்கிவைகு மப்பதியிற்சில நாள்கள் போற்றித், தொண்டருடனருள் பெற்றுமற்றத் தொல்லைத்திருப்பதி யெல்லைநீங்கிப், புண்டரிகத்தடஞ் சூழ்ப்பழனப் பூம்புகலூர்தொழப் போதுகின்றார்.

(இ-ள்.) கண்டடிபோற்றி வினவிப்பாடி=அக்கணபதீச்சரத்து திருவடிகளைப் போற்றி அத்திருக்கோலத்தைத் தரிசித்து, (மங்குனமதி தவழு மாடமதி மருகனிலாவிய மைந்த கணபதீச்சரங் காமுறவுசொல்லாயென) வினவித் திருப்பதிகமோதி, கணபதியீச்சரங் காதலித்த வண்டார்பிரானை வணங்கி=அக்கணபதீச்சரமென்னுந் திருவாலயத்தை விரும்பிய [illegible]பிரானை வணங்கி, வைகும் அப்பதியிற் சில நாள்கள் போற்றி=தாம் எழுந்தருளியிருக்கும் அத்திருமருகற்பதியிற் சிலகாலம் அம்மாணிக்கவண்ணரைத் துதித்து, தொண்டருடனருள் பெற்று மற்றத் தொல்லைத்திருப்பதியெல்லை நீங்கி=அடியார் திருக்கூட்டத்துடனே அச்சிவபிரானது திருவருளைப்பெற்று அப்பழம் திருப்பதியின் எல்லையைவிட்டு நீங்கி, புண்டரிகத்தடஞ் சூழ் பழனப் பூம்புகலூர் தொழப்போதுகின்றார்=தாமரைப்பொய்கைகள் சூழ்ந்த வயல்களையுடைய பொலிவுபொருந்திய திருப்புகலூர் என்னுந் திருப்பதியை வணங்கச்செல்வாராயினார்—எ-று. (சஅஎ)

சீர்மலிந்த சிறப்பின்மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன் செல்லநல்ல, வேரிநறுந்தொங்கல் மற்றவரும் விடையருளப்பெற்று மீண்டபின்பு, நீர்மலிந்த சடையார்மேவி நிகழும் பதிகள் பலபணிந்து, பார்மலிந்து நிறைந்தசெல்வம் பயில்புகலூர்நகர்ப் பாங்கணைந்தார்.

(இ-ள்.) சீர்மலிந்த சிறப்பின்மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன்செல்ல=புகழ்மிக்க சிறப்பமைந்த சிறுத்தொண்டநாயனார் நீங்காத அன்போடு தம்முடன்வர, நல்லவேரி நறுந்தொங்கல் மற்றவரும்=நல்ல தேன் பொருந்திய மணங்கமழும் மாலையையுடைய அத்திருத்தொண்டநாயனாரும், விடையருளப்பெற்று மீண்டபின்பு=ஊர்க்குச்செல்லும்படி பிள்ளையார் விடைகொடுக்கப்பெற்றுத் தம்மூர்க்குச் சென்றபின்பு, நீர்மலிந்த சடையார் மேவி நிகழும்பதிகள் பலபணிந்து=கங்கைநீரால் விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரான் எழுந்தருளிய பலதிருப்பதிகளையும் வணங்கி, பார்மலிந்து நிறைந்த செல்வம்பயில் புகலூர் நகர்பாங்கணைந்தார்=நிலவுலகத்தில் மிகுநிறைந்த செல்வம்பொருந்திய திருப்புகலூரென்னுந் திருப்பதியின் மருங்கு அடைந்தருளினார்—எ-று. (சஅஅ)

திருப்புகலூர்த்திருத் தொண்டரோடுஞ்செம்மைமுருகனார் மெய்ம்மகிழ்ந்த, விருப்பொடு சென்றெதிர் கொள்ளவந்து வேதமுதல்வர்

தங்கோயிலெய்திப், பொருப்புறழ்கோபுரத் துட்புகுந்து பூமலிமுன்றில் புடைவலங்கொண், டொருப்பட்ட சிந்தையொ டுள்ளணைந்தா ரோதாதுஞானமெலாமுணர்ந்தார்.

(இ-ள்) திருப்புகலூர்த் திருத்தொண்டரோடு செம்மைமுருகனார்= திருப்புகலூரில்வசிக்குந் திரு அடியார்கூட்டங்களோடு ஞான ஒழுக்கத்தினை யுடைய திருமுருகநாயனார், மெய்மகிழ்ந்த விருப்பொடுசென்றெதிர்கொள்ள வந்து=மெய்ம்மை மிகுந்த விருப்பத்தோடுந் தம்மையடைந்து எதிர்கொள்ள அங்கெழுந்தருளி, வேதமுதல்வர்தங் கோயிலெய்தி = வேதமுதல்வராகிய அக்கினீசர் எழுந்தருளியிருக்குந் திருக்கோயிலை அடைந்தருளி, பொருப்புறழ் கோபுரத்துட்புகுந்து பூமலிமுன்றில் புடைவலங்கொண்டு=மலையையொத்த திருக்கோபுரத்தினுள்ளே புகுந்து பொலிவுமிக்க திருமுற்றத்தைப் பிரதட்சணஞ்செய்து, ஓதாதுஞானமெலாமுணர்ந்தார் ஒருப்பட்டசிந்தையோடு உள்ளணைந்தார்=ஓதாது எல்லா ஞானங்களையும் உணர்ந்த ஆளுடையபிள்ளையார் ஒன்றுபட்டமனத்தோடு திருக்கோயிலுள் அடைந்தருளினார்—எ-று.

ஞானமெலாமென்றது மேற்கூறிய பரஞானமுதல் நான்கு மென்பது போந்தவாறறிக. (௪௮௯)

புக்கெதிர்தாழ்ந்து விழுந்தெழுந்து பூம்புகலூர்மன்னு புண்ணியரை, நெக்குருகுஞ்சிந்தை யன்புபொங்க நிறைமலர்க்கண்ணீ ரருவிசெய்ய, மிக்கதமிழ்த்தொடை மாலைசாத்தி மேவியவேழிசை பாடிப்போந்து, திக்குநிறைசீர் முருகர்முன்பு செல்லவர்மடஞ் சென்றுபுக்கார்.

(இ-ள்) பூம்புகலூர்மன்னு புண்ணியரைப்புக்கெதிர்தாழ்ந்து விழுந்தெழுந்து=பொலிவுபொருந்திய திருப்புகலூரின்கண் ணெழுந்தருளிய புண்ணியவடிவரான அக்கினியீசரை ஆலயத்திற்புகுந்து திருமுன்வணங்கிப்பணிந்தெழுந்து, நெக்குருகுஞ்சிந்தை யன்புபொங்க நிறைமலர்க்கண்ணீரருவிசெய்ய= கசிந்துருகும் இதயத்து அன்புமேலெழ நிறைந்ததாமரைமலர்போலும் திருக்கண்கள் ஆனந்தபாஷ்பமாகிய அருவியைப்பெருக்க, மிக்கதமிழ்த்தொடைமாலைசாத்தி மேவியவேழிசைபாடிப்போந்து=இனிமை மிகுந்த திருப்பதிகமாலையைச்சாத்தி அதனிடத்துப்பொருந்திய ஏழிசையையும்பாடி அவ்வாலயத்தினின்றும் எழுந்தருளி, திக்குநிறை சீர்முருகர் முன்புசெல்ல அவர் மடஞ்சென்றுபுக்கார்=திக்குகளெட்டினும் நிறைந்த சீர்த்தியையுடைய திருமுருகநாயனார் தம்முன்னே அழைத்துக்கொண்டுசெல்ல அவரது திருமடத்தைச்சென்று புக்கருளினார்—எ-று. (௪௯௦)

திருப்புகலூர்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

வாழ்ந்தநாளும் மினிவாழ்நாளும் மிவையறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானையேத்தா விரகிலிகாள்
போழ்ந்ததிங்கட் புரிசடையினானைப் புகலூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்களுங்க ளுயர்திருமே.

புநதியாாநத பெரியோாகளேதரும புகலூாதனுள
வெநதசாம்பற பொடிபூசவலலவ விடையூாதியை
யநதமிலலா வனலாடலானை யணிஞானசம
பந்தன்சொனன தமிழபாடியாடக கெடுமபாவமே

திருசசிறறமபலம.

ஆஙகவா போறறுஞ சிறபபினமேவி யபபதிதனனி லமருநாளி ல, வாஙகுமலைசசிலை யாாமகிழநத வாததமானீசசரா தாளவணஙகி, யோஙகியவனபின முருகனாாதம முயாதிருத தொணடு சிறபபிததோ ஙகும, பாஙகுடை வணடமிழ பாடிநாளும பரமாதமபாதம பணிநதி ருநதாா.

(இ-ள.) ஆஙகவாபோறறுஞ சிறபபினமேவி=அததிருமடததில திருமு ருகநாயனாா வழிபடுஞசிறபபாலவாசஞசெயது, அபபதிதனனிலமருநாளில= அததிருபபுகலூரொனறுந திருபபதியிலெழுநதருளி யிருககுநாளில, வாஙகும லைசசிலையாா மகிழநத வாததமானீசசரா தாளவணஙகி=வளைநதமேருவிலலு டையராய விருமபிய வாததமானீசசரததையுடைய சிவபிரானது திருவடிக ளைவணஙகி, ஓஙகியவனபின முருகனாாதமமுயாதிருததொணடுசிறபபிததது= மிசக அனபினையுடைய திருமுருகநாயனாாது உயாநத திருததொணடினை (முருகன முபபோதுஞசெய முடிமேல வாசமாமலருடையாா) எனச, சிறப பிதது, ஓஙகும்பாஙகுடை வணடமிழபாடி நாளுமபரமாதமபாதம பணிந திருநதாா=உயாநத குணம அமைநத வினியதமிழபபதிகததைபபாடி நாடோ றும அநதவாததமானீசசரரது திருவடிகளைவணஙகி ஆஙகு எழுநதருளியிருந தாா—எ-று. (சகக)

திருபபுகலூா - பண பியநதைசகாநதாரம.

திருசசிறறமபலம.

ஈசனேறமாகடவு ளினனமுதெநதை யெம்பெருமானா
பூசுமாசில வெணணீறா பொலிவிடை பபூம புகலூரின
மூசுவணடறைகொனறை முருகனமுபபோது செயமுடிமேல
வாசமலருடையாா வாததமானீச சரததாரே.

பொஙகுதண் புனலசூழநது போதணிபொழிற புகலூரின
மஙகுனமா மதிதவழும வாததமானீச சரததாரைத
தஙகுசீாத தமிழஞான சமபநதனறண டமிழபததும
மெஙகுமேத்த வல்லாாக ளெய்துவாிமை யவருலகே

திருச்சிறறமபலம.

**மற்றத்திருப்பதி வைகுநாளில் வாக்கின்பெருவிறன் மன்னர்தா
ம், புற்றிடங்கொண்டாரை வந்திறைஞ்சிப் பொன்மதிலாரூர் புகழ்
ந்துபோற்றிச், சிற்றிடைப் பொற்றொடி பங்கர்தங்கு திருப்புகலூர்
தொழச் சிந்தைசெய்து, கொற்றவனாருள் பெற்றதொண்டர் குழாத்
துடனவலூர் குறுகவந்தார்.**

(இ-ள்) அத்திருப்பதிவைகுநாளில்=அத்திருப்புகலூரில் ஆளுடையபிள்ளையார் எழுந்தருளியிருக்கும் நாளில், பெருவிறல் வாக்கின்மன்னர்தாம்= மேம்பட்ட திருவாக்கின் வன்மையையுடைய வாகீசமுனிவரும், புற்றிடங்கொண்டாரைவந்திறைஞ்சி= திருவாரூரிலெழுந்தருளிய வன்மீகநாதரை அடைந்துவணங்கி, பொன்மதிலாரூர் புகழ்ந்துபோற்றி=பொன்னாலாகிய திருமதில்சூழ்ந்த திருவாரூரைப்புகழ்ந்து துதித்து, சிற்றிடைப்பொற்றொடி பங்கர் தங்கு திருப்புகலூர் தொழச்சிந்தைசெய்து=சிற்றிடையையும் பொன்னாலாகிய வளையலையும் உடைய உமாதேவிபாகரான அக்கினீசரெழுந்தருளிய திருப்புகலூரைவணங்கத் தமதிருவுள்ளத்து நினைத்து, கொற்றவனாருள்பெற்ற தொண்டர்குழாத்துடனவலூர்குறுகவந்தார்=தியாகேசரது திருவருளைப் பெற்ற அடியார் திருக்கூட்டத்தோடு அத்திருப்பதியை அணித்தாகவந்தருளினார்—எ-று. (சசஉ)

நாவுக்கரசரெழுந்தருளு நல்லதிருவார்த்தை கேட்டபோதே,
சேவிற்றிகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர் சிந்தையன்பு,
மேவுற்றகாதல் மிகப்பெருக விரைந்தெதிர்கொள்ளமெய் யன்பரோ
டும், பூவிற்பொலிபொய்கை சூழ்புகலூர்ப் புறம்பணையெல்லை கடந்து
போந்தார்.

(இ-ள்) நாவுக்கரசரெழுந்தருளு நல்லதிருவார்த்தை கேட்டபோதே= திருநாவுக்கரசர் எழுந்தருளியநல்லமங்கலமொழியைக் கேட்டமாத்திரத்தில், சேவிற்றிகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர்=இடபத்தி லெழுந்தருளுகின்ற சிவபெருமானது திருமகனாராகிய ஆளுடையபிள்ளையார், சிந்தை அன்புமேவுற்ற காதல்மிகப்பெருக=தமதுதிருவுள்ளத்தில் அன்பாலாய பெருவிருப்பு மிகவும்பெருக, மெய்யன்பரோடும் விரைந்தெதிர்கொள்ள=மெய்யடியார்திருக்கூட்டத்தோடு விரைவாயெதிர்கொள்ளும்பொருட்டு; பூவிற்பொலிபொய்கைசூழ் புகலூர்ப் புறம்பணையெல்லைகடந்து போந்தார்=மலர்களானிறைந்த பொய்கை சூழ்ந்த திருப்புகலூரின் புறம்பிலிருக்கின்ற திருவெல்லையைக்கடந்து சென்றருளினார்—எ-று. (சசங)

**அங்கணாரூர் வணங்கிப்போந்தவரசுமெதிர்வந் தணையுவாசப்,
பொங்குபுனற்றண் புகலிவந்த பூசுரசிங்கமும் பொற்பினெய்தித், த
ங்களிலன்பின் முறைமையாலே தாழ்ந்துவணங்கித் தனித்தனியே,
மங்கலமாகிய நல்வரவின் வாய்மைவிளம்பி மகிழும்போது.**

(இ-ள்.) அங்கணராரூர் வணங்கிப் போந்த அரசு மெதிர்வந்தணைய = சிறந்த காருணியத்தையுடைய புற்றிடங்கொண்டார் எழுந்தருளிய திருவாரூரைத் தொழுது எழுந்தருளிய ஆண்ட அரசும் எதிரே வந்து அடைந்தருள, வாசப்பொங்குபுனற் றண்புகலி வந்த பூசுரர் சிங்கமும் பொற்பினெய்தி = வாசனை பொருந்திய நீர்வளம் மிக்க குளிர்ந்த சீகாழியில் அவதரித்த மறையவர் தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் பொலிவால் எதிர்கொண்டு, தங்களில் அன்பின் முறைமையாலே தனித்தனியே தாழ்ந்து வணங்கி = ஒருவர்க்கொருவர் தம்முள்ளுதித்த அன்பின் வழித் தனித்தனியே நிலமுற வணங்கி, மங்கலமாகிய நல்வரவின் வாய்மை விளம்பி மகிழும்போது = சுபகரமாகிய நல்வரவினுண்மையை ஒருவரை ஒருவர் வினவி மகிழ்ந்தருளுங்காலத்து—எ-று. (௪௯௪)

மெய்த்திருஞானசம் பந்தர் வாக்கின் வேந்தரை நோக்கி விருப்பி னாலே, யப்பரை யிங்கணை யப்பெறும்பே றருளுடையோம் யாமு மந்த ணாரூ, ரெப்பரிசாற்றொழு துய்ந்ததென்று வினவிட வீறில் பெருந்தவத் தோர், செப்பியவண்டமிழ் மாலையாலே திருவாதிரைநிகழ் செல்வ ஞ்சொன்னார்

(இ-ள்.) மெய்த்திருஞானசம்பந்தர் = உண்மை நிறைந்த திருஞானசம்பந்தப்பிள்ளையார், வாக்கின்வேந்தரை விருப்பினால் நோக்கி = திருநாவுக்கரசரை விருப்பால் பார்த்து, அப்பரை யிங்கு அணையப்பெறும் பேரருளுடையோம் = அப்பராகிய உம்மை இவ்விடத்தில் அடையப்பெறும் பெரியதிருவருளை யாம் உடையோம், அந்தணாரூர் எப்பரிசால் தொழுதுய்ந்ததென்று வினவிட = அழகிய தட்பத்தையுடைய திருவாரூரை எத்தன்மையால் வணங்கி உய்ந்தருளியதென்று வினவ, ஈறில்பெருந்தவத்தோர் செப்பியவண்டமிழ்மாலையாலே திருவாதிரைநிகழ் செல்வஞ்சொன்னார் = அழிவில்லாதபெரியதவத்தினையுடைய ஆண்டஅரசும் தாமப்பொழுதருளிய "முத்துநற்றாமமென்னும்" திருப்பதிகத்தால் திருவாதிரையில் நிகழ்ந்த சிறப்பினைத் திருவாய்மலர்ந்தருளினார்—எ-று.

அப்பர் என்பது எம்பியை ஈங்குப்பெற்றேன் என்றாற்போல முன்னிலைப்படாக்கையால் கூறப்படுதலின் இடவழுவமைதி. (௪௯௫)

அரசருளிச்செய்த வாய்மைகேட்ட வப்பொழுதேயருண் ஞான முண்ட, சிரபுரவேந்தருஞ் சிந்தையின்கட் டென்றிருவாரூர் வணங் குதற்கு, விரவியகாதலிற் சென்றுபோற்றி மீண்டுமவந் தும்முடன் மேவுவனென்ன, னுரவுக்கடற்கன் மிதப்பின்வந்தா ருணர்த்துடம்பாடு கொண்டொல்லைப்போந்தார்.

(இ-ள்.) அரசு அருளிச்செய்த வாய்மைகேட்ட அப்பொழுதே = ஆண்ட அரசு அருளிச்செய்த திருப்பதிக உண்மையைக்கேட்ட அக்காலத்தே; அருள் ஞானமுண்ட சிரபுரவேந்தரும் = உமாதேவியார் ஊட்டிய திருஞானப்பாலை உண்டருளிய சீகாழித்தலைவராகிய பிள்ளையாரும், சிந்தையின்கண் தென்திரு

ஆரூரவணங்குதற்கு=தமது திருவுள்ளத்தில் தெற்கின்கண் உள்ள திருவாரூரைப்பணிதற்கு, விரவியகாதலிற் சென்றுபோற்றி=கலந்த அன்புகாரணமாக யாமும் அங்குச்சென்றுதுதித்து, மீண்டும்வந்து உம்முடன்மேவுவனென்று=திருப்புகலூருக்குமீண்டும்வந்து உம்முடனேவசிப்போமென்று, உரவுகடற்கண் மிதப்பில்வந்தார்க்கு=ஒலிபொருந்திய கடலின்கண் கற்புணைமேல் மிதந்துவந்த ஆண்டஅரசுடன், உரைத்து உடன்பாடு கொண்டொல்லைவந்தார்=திருவாய்மலர்ந்தருளி அவரது அநுமதிபெற்றுத் திருவாரூர்க்கு விரைந்துசென்றருளினார்—எ-று. (சுகசு)

சொற்பெருவேந்தரும் தோணிமூதூர்த் தோன்றலபின்காதலொடு டரத்தாமும், பொற்புகலூர்தொழச் சென்றணைந்தார் புகலிப்பிரானும் புரிந்தசிந்தை, விற்குடி வீரட்டஞ்சென்றுமேவி விடையவர்பாதம் பணிந்துபோற்றிப் பற்பலவாயிரந் தொண்டரோடும் பாடலஞானம் றை பாடிப்போந்தார்

(இ-ள்.) சொற்பெருவேந்தரும் தோணிமூதூர்த்தோன்றலபின்காதலொடு டர=திருநாவுக்கரசரும் சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரின் தமது விருப்பம் பின்றொடர்ந்துசெல்ல, தாமும்பொற்புகலூர்தொழச் சென்றணைந்தார்=தாமும் அழகியதிருப்புகலூரைவணங்கச் சென்றடைந்தருளினார், புகலிப்பிரானும் புரிந்த சிந்தை விற்குடிவீரட்டஞ்சென்றுமேவி=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் விரும்பிய திருவுள்ளத்தோடு திருவிற்குடி என்னுந் திருவீரட்டானத்தைச் சென்றடைந்து, விடையவர் பாதம்பணிந்து போற்றி=இடப ஊர்தியையுடைய வீரட்டேசரது திருவடிகளைவணங்கித் துதித்து, பற்பல ஆயிரந்தொண்டரோடும் பாடல்ஞானமறைபாடிப்போந்தார்=பலபல ஆயிரமடியார் திருக்கூட்டத்தோடு பாடல்ஞானமறையென்னும் முதலையுடைய திருப்பதிகத்தை ஓதித்திருவாரூர்க்குச் சென்றருளினார்—எ-று.

திருவிற்குடி சலந்தரனை வதைத்தது அட்டவீரட்டத்தில் ஒன்று. (சுகஎ)

திருவாரூர்-பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாடலனான் மறையன்படி பட்டகோலத் தன்றிங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்தி
கூடலர் மூவெயிலுமெரி யுண்ணக்கூரெரி கொண்டெல்லி
யாடல னாதிரைய னாரூரமர்ந்தானே

நல்லபுனற் புகலித்தமிழ் ஞானசம்பந்தனல்ல
வல்லிமலர்க்கழனி யாரூரமர்ந்தானை
வல்லதோ ரிசைகிளால் வழிபாடிவைபத்தும் வாயாரச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவிற்குடி வீரட்டம் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர் வானமாமதியினர் நதியார்ந்த [பா
கடிகொள்கொன்றையஞ் சடையினர்கொடியின ருடைபுலியதளார்ப
விடையதேறுமெம் மானமர்ந்தினிதுறை விற்குடிவீரட்டம்
மடியராகிநின் றேத்தவல்லார்தமை யருவினையடையாவே

விலங்கலேசிலை யிடமெனவுடையனை விற்குடிவீரட்டத்
திலங்குசோதியை யெம்பெருமான்றனை யெழில்திகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற் காழியுண்ஞானசம் பந்தன்றறமிழ்மாலை
வலங்கொடேயிசை மொழியுமின்மொழிந்தக்கால் மற்றதுவரமாமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-வீரட்டானேசர் தேவியார்-மைவார்குழலியம்மை

துணரிணர்ச்சோலையுஞ் சாலிவேலித் துறைநீர்ப்பழனமுஞ் சூழ்கரும்பின், மணமலிகானமு ஞானமுண்டார் மருங்குறநோக்கி மகிழ்ந்தருளி, யணைபவரள்ளலங் கழனியாரூ ரடைவோமென்மொழிந் தன்புபொங்கப், புணரிசைச் செந்தமிழ் கொண்டுபோற்றிப் பொன் மதி லாரூர்ப் புறத்தணைந்தார்

(இ-ள்.) துணரிணர்ச்சோலையும்=பூங்கொத்துகணிறைந்தசோலைகளும், சாலிவேலித்துறைநீர்ப் பழனமும்=நெல்வேலிசூழ்ந்த நீர்க்கரைகளையுடைய வயல்களும், சூழ்கரும்பின்மணமலிகானமும்=புடைசூழ்ந்தகரும்பின்று மணமிக்க காடுகளும், ஞானமுண்டார் மருங்குறநோக்கிமகிழ்ந்தருளி=திருஞானப்பாலை உண்டருளிய ஆளுடையபிள்ளையார் இரண்டுபக்கங்களிலும்பொருந்தநோக்கி மகிழ்கூர்ந்தருளி, அள்ளலங்கழனி ஆரூர்அடைவோமென மொழிந்து அன்புபொங்கஅணைபவர்=சேறுபொருந்திய அழகியவயல்சூழ்ந்த திருவாரூரை அடைவோமெனப்புகன்றருளி அதனை அடையும்பிள்ளையார், புணரிசைச்செந்தமிழ்கொண்டுபோற்றிப் பொன்மதிலாரூர்ப்புறத்தணைந்தார்=இசையோடுபுணர்ந்த செந்தமிழாகிய திருப்பதிகத்தைக்கொண்டுதுதித்துப் பொன்னாலாகியமதில்சூழ்ந்ததிருவாரூர் எல்லையின்புறத்தணைந்தருளினார்—எ-று ()

திருவாரூர்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித் தொழுமின்றொண்டர்மெய்யே
கள்ளமொழிந் திடுமின் கரவாதிருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட வெள்ளேற்றானமேய
அள்ளல் கொள் கழனி யாரூ ரடைவோமே.

நல்ல புனற புகலித தமிழ ஞானசம பந்தன்ல்ல
வலலி மலாககழனி யாரூ ரமாநதானை
வலலதோ ரிசசையினுல வழிபாடிவை பததும்வாய்ககச்
சொலலுதல கேடடலவலலா துன்பநதுடைப்பாரே.

திருசசிற்றமபலம.

வானுயாசெஙகதிா மணடிலநது மருஙகணையுங்கொடி மன்னுமா ரூா, தாஞெருபொனனுல கெனனததோனறுங தயஙகொளிமுன்கண் டு சன்பைவநத, பாணிறநீறறா பருககையானைப பதிகததமிழிசைபா டிபபாடிந, தேஞெடுமவணடு முரலுஞசோலைத திருபபதிமறறத னெலலைசோநதாா.

(இ-ள) வானுயாசெஙகதிாமணடிலதது மருஙகணையுங கொடிமன்னும ஆரூா=ஆகாயமளவுசகு உயாநத சூரியமணடலததினருகை அளாவும் கொடி யாடைகள நிலைபெறறதிருவாரூா, தாஞெருபொனனுலகென்னத்தோன்றும தயஙகொளிமுனகணடு=தானும ஒருதேவா உலகமபோலப புலபபடடுவிளங் கும ஒளியை முனனேதரிசிதது, பாணிறநீறறாபருஈகை யானைபபதிகத்தமி ழிசைபாடிபபாடி=பாலபோலும வெளளியவிபூதியையணிநத புறறிடஙகொ ணடாரைப் பருசகையானையெனனுங திருபபதிகததமிழால்இசையோடுபாடிய ருளி, தேஞெடுவணடுமுரலுஞசோலைததிருபபதிமறறதனெலலைசோநதாா= பெணவணடுகளோடு ஆணவணடுகளும பாடுமசோலைசூழநத அத்திருபபதி யின எலலையைசசோநதருளினா—எ-று. (௪௧௧)

திருவாரூா-திருவிராகம-பண-நடடராகம

திருசசிறறமபலம.

பருககையானை மததகத தரிகசுலத துகிாபபுகந
நெருககிவாய நிததிலஙகொகசுநீள பொருபபனூா
கருஙகொளசோலை சூழநீடு மாடமாளி கைககொடி
யருககனமண டலததளாவு மநதணாரூ ரென்பதே.

வலலிசோலை சூழநீடு மனனுவீதி பொனனுலா
வலலிமா தமாநதிருநத வநதணாரூ ராதிவை
நலலசொலலு ஞானசம பநதனாவி னின்னுரை
வலலதொணடா வானமாள வலலாவாயமை யாகவே.

திருசசிறறமபலம.

பொஙகியசிநதை விருபபினவெள்ளம் பொழிந்துபுவிமேறபொ லிவதென்ன, எஙகுமஙகுளிரொளி வீசுமுத்தி னிலஙகுசிவிகை யிழிந்த ருளிச், செங்கைநிறைமலா கொண்டுதூவித்திருவிருக்குககுறள பாடி யேத்தித,தஙகளபிரானரசாரூமாதூர்தனைப்பணிவுற்றாதமிழவிரகர்..

(இ-ள்.) சிந்தைபொங்கிய விருப்பின வெள்ளம்பொழிந்து புவிமேற் பொலிவதென்ன = இதயத்தினின்றும் நிறைந்துவழிந்த பெருங்காதலென்னும் வெள்ளம்சொரிந்து நில உலகின்மேல விளங்குவதுபோல, எங்குங்கு லிரொளி வீசுமுத்தின இலங்குசிவிகை இழிந்தருளி=எவ்விடத்தும தண்ணிய வெள்ளொளியை வீசும்முத்தினால விளங்கிய திருச்சிவிகையின்நின்றிழிந்தருளி; தமிழவிரகா=முத்தமிழினவிரகராகிய பிள்ளையாா; செங்கைநிறைமலா கொண்டுதூவி=சிவந்த திருககரங்களில் நிறைந்தமலாகளால அாசசித்து, திருவிருக்குக்குறள பாடியேத்தி= திருவிருக்குக்குறளாகிய திருப்பதிகத்தைப பாடித்துதித்து; தங்களபிரான அரசாரும ஆரூாதன்னைபபணிவுறறாா=தமது பெருமாளுா அரசாணடருளிய திருவாரூரைப பணிந்தாா—எ-று.

சோமஸகந்தராயக் கனகசிம்மாசனத்தில சிவபிரான எழுந்தருளி இருத்தலின், தங்களபிரான் அரசாரும ஆரூா என்றாா. (௫௰)

திருவாரூா-திருவிருக்குக்குறள- பண-குறிஞ்சி.

திருச்சிறறமபலம

சித்தந தெளிவீாகா
ளத்தனு ரூரைப
பத்தி மலாதூவ
முத்தி யாகுமே

சீரூா சமபந்த
னூரைச சொனன
பாரூா பாடலாா
பேரா ரினபமே

திருச்சிறறமபலம

வேறு.

படியின் ஞானமுண் டருளிய பிள்ளையாரைப பணிதற
கடியா சென்றெதிா கொளவெழுந தருளுமஞ்ஞானறு
வடிகொள் சூலத்தா மன்னிய பொனமதி லாரூாக்
கடிகொள பேரணிப பொலிவையாா முடிவுறக காணபாா.

(இ-ள்.) படியில ஞானமுணடருளிய பிள்ளையாரைப பணிதறகு=நில உலகின்கண திருஞானபபால உணடருளிய ஆளுடையபிள்ளையாரை வணங்குதறகு; அடியார்சென்று எதிாகொள வெழுந்தருளும அஞ்ஞான்று=அடியார் திருக்கூட்டங்கள்சென்று எழுந்தருளிய அககாலத்து; வடிகொளசூலத்தர்மன்னிய பொனமதில ஆரூா=வடித்தசூலத்தையேந்தியருளிய தியாகப்பெருமானெழுந்தருளும பொன்னாலாகிய மதிலசூழ்ந்த திருவாரூரின், கடிகொள்பேரணிப்பொலிவையார்முடிவுறக்காண்பார்=விளக்கங்கொண்ட பெரிய அலங்காரத்தின் பொலிவையார்தாம்முடிவுபெறககாணவல்லார்—எ-று. (௫௰௧)

நானமான் மதநளிர் பெருஞ் சேற்றிடை நறும்பொற்
றூநறுந் துகள் சொரிதலிற் சுடரொளிப் படலை
யான வீதிக ளடிவலித் தவைகளைந் தலைய
வான மாரியிற் பொழிந்தது மதுமலர் மாரி.

(இ-ள்.) நானமான்மதநளிர் பெருஞ்சேற்றிடை=நாவிமதமும் மிருகமதமும் ஆகிய இவற்றொடுசேர்ந்து குளிர்ந்த பெரியகலவைச்சேற்றினிடத்து, நறும்பொன் றூநறுந்துகள் சொரிதலில்=நல்லபொன்னிறமான தூய்மைமிக்க மகரந்தங்களை இறைத்தலினால், சுடரொளிப்படலையான வீதிகளடிவலித்து=ஒளிமிக்கநெருங்கிய வீதிகளானவை நடக்குங்கால்களை உறுத்துதலால், அவைகளைந்தலைய=அக்கலவைச்சேற்றின வன்மைகளைந்துகெடும்படி, மலர்மாரிமதுவான மாரியிற்பொழிந்தது=புட்பவருட்டத்தின் தேன்மழைபோல இடையறாது சொரிந்தது—எ-று. (௫௱௨)

ஆட னீடுவ துகிற்கொடி யணிகுழற் கொடிகள்
தோடு சூழ்வன சுரும்பொடு தமனியத் தசும்பு
காடு கொண்டன கதலிதோ ரணநிரைக் கமுகு
மாட மாளிகை மண்டபங் களின்மருங் கெல்லாம்

(இ-ள்.) மாடமாளிகை மண்டபங்களின் மருங்கெல்லாம்=மாடங்களும் மாளிகைகளும் மண்டபங்களும் ஆகிய இவற்றின்பக்கங்களெல்லாம், ஆடல்நீடுவ துகிற்கொடி அணிகுழற்கொடிகள்=சீலைக்கொடிகளும் அழகியகூந்தலையுடைய பெண்களாகிய பூங்கொடிகளும் ஆடல்செய்வனவாம், தோடுசூழ்வன சுரும்பொடு தமனியத்தசும்பு=வண்டுகளோடு பொற்குடங்கள் மலர்த்தழைகளைச் சூழாநின்றன, கதலிதோரண நிரைக்கமுகுகாடுகொண்டன=வாழைகளும் மகரதோரணங்களும் கமுகுகளும் காடாகச்சூழ்ந்தன—எ-று. (௫௱௩)

மாலை சூழ்புறங் கடைகளின் மணிநிரை விளக்கின்
கோல நீள்சுட ரொளியுடன் கோத்திடைத் தூக்கு
நீல மாமணி நிழல்பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவளவே திகைமலர்ப் பந்தர்

(இ-ள்.) பவளவேதிகைமலர்ப்பந்தர்=பவளத்தாலாயவேதிகைகளின் கண்ணுள்ள பூம்பந்தர்கள், மாலைசூழ்புறங்கடைகளில்=மாலைகள்சூழ்ந்த முதல்வாயில்களினும், மணிநிரைவிளக்கின்=மாணிக்கங்களால் நிரைபடச்செய்த தீபங்களினும், கோலநீள்சுடரொளியுடன் கோத்திடைத்தூக்கும்=அழகுமிக்க பேரொளியோடு இடையிடையே கோத்துத்தூக்கும், நீலமாமணிநிழல்பொர=பெரியநீலமணியின் ஒளிபட்டிப்பாய அதனால், நிறம்புகர்படுக்கும்பாலவாயின=தன்னிறத்தைப் புகர்நிறமாகச்செய்யும்பகுதியை யுடையவாயின—எ-று.

மலர்ப்பந்தர் புறங்கடைகளினும் மணிவிளக்கினும் ஒளியுடன் கோத்துத்தூக்கும் நீலமணிநிழல்பொருதலால் நிறம்புகர்படுக்கும் பாலவாயினவெனக்கூட்டுக.

தழைம லர்த்தடஞ் சாலைக டெற்றிகள் சதுக்கங்
குழைமு கத்தவ ராடரங் கிமையவர் குழாமும்
விழைசி றப்பின வியலிட மியாவையு மிடைந்து
மழைமு ழக்கென வியம்பின மங்கல வியங்கள்.

(இ-ள்) தழைமலர்த்தடம்=தழைந்தமலர்களையுடையவாவிகளும், சாலைகள் தெற்றிகள்சதுக்கம், அறச்சாலைகளும் திண்ணைகளும்நாற்சந்திகளும், குழைமுகத்தவர் ஆடரங்கு = குண்டலத்தையணிந்தமகளிர் நடனஞ்செய்யும் நாடகசாலைகளும் ஆகிய இவைகள், இமையவர்குழாமும் விழைசிறப்பின= தேவர்கூட்டமும் விரும்புஞ்சிறப்பினை உடையன, வியலிடம்யாவையும் மிடைந்து மங்கல இயங்கள்மழைமுழக்கென முழங்கின=பரந்த இடங்களெல்லாம் மங்கலவாத்தியங்கள்நெருங்கிமேகமுழங்குகின்றதுபோல ஒலிசெய்தன—எ-று.

விரவு பேரணி வேறுவே றின்னன விளங்கும்
பிரச மென்மலர்ச் சோலைசூழ் பெருந்திரு வாரூ
ரரச ளிப்பவ ரருளினா லடியவர் குழுவும்
புரிச னங்களும் புறத்தணைந் தெதிர்கொளும் பொழுது

(இ-ள்) இன்னனவிரவுபேரணிவேறு வேறுவிளங்கும்=இவ்வாறானமிக்க பெரிய அலங்காரங்கள் வெவ்வேறாயவிளங்காநிற்கும், பிரசமென்மலர்ச் சோலைசூழ் பெருந்திருவாரூர்=தேன்பொருந்திய மெல்லிய பூக்களையுடைய சோலைசூழ்ந்த பெரியதிருவாரூரில், அரசளிப்பவர்அருளினால்=அரசாட்சிசெய்யும் தியாகப்பெருமானது திருவருளினால், அடியவர்குழுவும் புரிசனங்களும் புறத்தணைந்து எதிர்கொளும்பொழுது=அடியார்திருக்கூட்டங்களும் அந்நகரிலுள்ள மகாசனங்களும் நகர்க்குப்புறத்தில்வந்து பிள்ளையாரை எதிர்கொள்ளுங்காலத்து—எ-று. (௫௱௬)

வந்தி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராஞ் சண்பையர் தலைவ
ரந்த மாயுல காதியாம் பதிகமங் கெடுத்தே
யெந்தை தானெனை யென்றுகொள் ளுங்கொலென் றிசைத்தார்.

(இ-ள்) சந்தமுத்தமிழ்விரகராஞ் சண்பையர்தலைவர் = பண்ணமைந்த முத்தமிழ்விரகராகிய ஆளுடையபிள்ளையார், வந்திறைஞ்சும்மெய்த்தொண்டர் தங்குழாத்து எதிர்வணங்கி=தம்மைவந்துவணங்கிய அடியார்திருக்கூட்டத் திற்கெதிரேதாமும்வணங்கி, அங்கு அந்தமாய உலகாதியாம்பதிகமெடுத்து= அவ்விடத்து அந்தமாய உலகாதியா என்னும் திருப்பதிகத்தை அடியெடுத்து, எந்தைதான் எனையென்று கொள்ளுங்கொலென்று இசைத்தார்=எந்தைதா னெனையென்று கொள்ளுங்கொலென்று பதிகவிறுதியில்வைத்துப்பாடியருளி னார்—எ-று. (௫௱௭)

திருவாரூா - பண - கௌசிகம

திருசசிறறமபலம.

அநத மாயுல காதியு மாயினனை
வெநத வெணபொடிப பூசிய வேதியன
சிநதை யேபுகுந தானறிரு வாரூரெம
எநதை தானெனை யேனறுகொ ளுஙகொலோ

வனனி கொனறை மதியொடு கூவிளஞ
சென்னி வைதத பிரானறிரு வாரூரை
மனனு காழியுள ஞானசம பநதனவாயப
பனனு பாடலவல லாாககிலலை பாவமே.

திருசசிறறமபலம

ஆன வநதிருப பதிகமும பாடிவந தணையு
ஞான வித்தகா மெயததவா சூழவந நகராா
தூநறுஞ சுணண மலாபொரி தூயதொழு தேதத
வான நாயகா கோயிலவா யிலினமருங கணைநதாா.

(இ-ள) ஆன அததிருபபதிகமும பாடிவநதணையுமஞானவிததகா=அவ வகைததான அநதத்திருபபதிகததையுமபாடி அஙகுவநதுசேரும உணமைஞா னததையுமுடைய ஆளுடையபிளளையாா, மெயததவாசூழ அநநகராாதூநறு ஞ சுணணமலா பொரிதூயததொழுதேதத=மெயமையாகியதவததையுடைய திருததொணடாகள பககலிறசூழநதுவர அநநகரிலுளளமகாசனஙகள பரிசுத தமாகிய நலலசுணணபபொடிகளையும மலாகளையுமநெறபொரிகளையும தூவிப பணிநது துதிகக, வானநாயகா கோயிலவாயிலின மருஙகணைநதாா=விணணு லகததாாதலைவராகிய தியாகபபெருமானாா திருககோயிலின திருவாயிலினபக கததணைநதாா—எ-று (ருாஅ)

மனனு தோரண வாயினமுன வணஙகியுள புகுவாா
தனனு ளெவவகைப பெருமையுந தாஙகிய தகைததாம
பனனெ டுஞசுடாப படலையின பரபபிணைப பாாததுச
சென்னி தாழநதுதே வாசிரி யனறொழு தெழுநதாா

(இ-ள.) மனனுதோரணவாயினமுனவணஙகியுளபுகுவாா=நிலைபெறற மகரதோரணஙகளையுடைய திருவாயிலினமுனவணஙகி உளளேபுகும் ஆளு டைய பிளளையாா, தன்னுள எவவகைபபெருமையும தாஙகிய தகைததா ம=தனனுளளே எவவகைபபடட பெருமையையும தாஙகுநதகைமையையு டையதாய, பனனெடுஞ சுடாபபடலையின பரபபிணைபபாாதது=பலவாயமி

கக ஒளிப்பிழம்பின் பரப்பைப்பார்த்தருளி, சென்னிதாழ்ந்து தேவாசிரியன் தொழுது எழுந்தார்=சிரமுறத்தாழ்ந்து தேவாசிரியன திருமண்டபத்தைப் பணிந்து எழுந்தார்—எ-று.

உட்புகுவார் தகைத்தாம் தேவாசிரியனைப் பன்னெடுஞ் சுடர்ப்படலையின் பரப்பினைப் பார்த்துத் தொழுதணைந்தார் எனக்கூட்டுக.

தேவர், முனிவர், திருவடியார், இவரொருங்கிவாழ்தலிற் எவ்வகைப்பெருமையுந் தாங்கிய தகைத்தென்றார். (ருாகூ)

மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கிக்
கூடு காதலிற் கோபுரம் பணிந்துகை குவித்துத்
தேடு மாலயற் கரியராய்ச் செழுமணிப் புற்றில்
நீடு வார்முன்பு நிலமுறப் பலமுறை பணிந்தார்.

(இ-ள்) மாடுசூழ் திருமாளிகை வலங்கொண்டுவணங்கி, பக்கத்திற் சூழ்ந்த திருமாளிகையைப் பிரதட்சணஞ்செய்துவணங்கி, கூடுகாதலிற்கோபுரம் பணிந்துகைகுவித்து=தலைப்பட்ட பெருவிருப்பால் திருக்கோபுரத்தைக் கைகுவித்துவணங்கி, தேடுமாலயற்கு அரியராய்=கைகளைச்சிரசின்மேற் குவித்து தேடுகின்ற திருமாலுக்கும்பிரமனுக்கும் காணப்படாதற்கு அரியராகி, செழுமணிப்புற்றின் நீடுவார் முன்பு நில முறப்பலமுறைபணிந்தார்=செழுமைபொருந்திய அழகியபுற்றை இடமாகக்கொண்ட பெருமானார் முன்பு நிலத்தின் மேல் திருமேனிபொருந்தப் பலமுறைவணங்கியருளினார்—எ-று. (ருாய)

பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர் பரப்பிய புளக
மணிந்த மேனியோ டாடினர் பாடின ரறிவிற்
றுணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையிற் றாழ்ந்தார்.

(இ-ள்) துணிந்த மெய்ப்பொருளானவர்தமை அறிவிற்கண்டு துதிப்பார்=தம்மால் நிச்சயித்த மெய்ப்பொருளாகிய வன்மீகநாதரைத் தம் உணர்விற்கண்டு துதிக்கும் ஆளுடையபிள்ளையார், பணிந்து வீழ்ந்தனர் பதைத்தனர்=நிலமுறப்பணிந்து வணங்குவாராய்ப் பதைபதைத்தார்; பரப்பிய புளகம் அணிந்தமேனியோடாடினர் பாடினர்=மெய்முழுதும் பரந்தரோமாஞ்சிதத்தால் அலங்காரமடைந்த திருமேனியோடு கூத்தாடினராய்ப் பாடினார்; தணிந்த சிந்தையின் விரைந்தெழுவேட்கையிற் றாழ்ந்தார்=தட்பமடைந்த தமது இதையத்தில் விரைந்தெழுங்காதலால் மீளவும்பணிந்தார்—எ-று.

துதிப்பார் என்னும் எழுவாய், பதைத்தனர் பாடினர்தாழ்ந்தார் என்னும் பயனிலைகளைத் தனித்தனிகொண்டது. (ருகக)

செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதி கத்திசை யெடுத்து
நஞ்சு போனக மாக்கிய நம்பர்முன் பாடி
மஞ்சு சூழ்திரு மாளிகை வாயிலின் புறம்போந்
தஞ்செ ழுத்தினமெய் யுணர்ந்தவர் திருமடத் தணைந்தார்.

(இ-ள்) அஞ்செழுத்தின் மெய் உணர்ந்தவர்=ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் உண்மையை அறிந்த பிள்ளையார், செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதிகத்து இசை எடுத்து=செஞ்சொல்லாற்புனைந்த வண்மையையுடைய திருப்பதிகத்தை இனிய இசையோடு எடுத்தருளி, நஞ்சு போனகம் ஆக்கிய நம்பர் முன் பாடி=நஞ்சை உணவாக அமைத்தருளிய வன்மீகநாதர் திருமுன்னின்று பாடி; மஞ்சு சூழ் திருமாளிகை வாயிலின் புறம்போந்து திருமடத்தணைந்தார்=மேகஞ்சூழ்ந்த திருமாளிகைத் திருவாயிலின் புறம்பே சென்று திருமடத்தை அடைந்தருளினார்—எ-று. (ருகஉ)

அங்க ணைந்தமர்ந் தருளுவா ரரனெறி யமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி வணங்கிமுன் றிளைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா லந்தொறும் பணிந்தார்.

(இ-ள்) அங்கணைந்தமர்ந்தருளுவார்=அத்திருமடத்திலடைந்து எழுந்தருளி இருக்குமருளுடைய பிள்ளையார், அரனெறி அமர்ந்த செங்கணேற்றவர் சேவடி வணங்கி முன்றிளைத்து=அரனெறி என்னுந் திருவாலயத்துள் எழுந்தருளிய சிவந்தகண்களையுடைய இடபத்தைவாகனமாகக்கொண்டருளிய அகிலேசரது சிவந்த திருவடிகளைவணங்கி திருமுன்னின்று ஆனந்தத்திலமிழ்ந்தி, பொங்குபேரொளிப் புற்றிடங்கொண்டவர்=விளங்கும் மிக்க ஒளியையுடைய புற்றிடங்கொண்ட பெருமானாரது, புனிதப் பங்கயப்பதந்தொழுது காலந்தொறும் பணிந்தார்=பரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற திருவடிகளைத் துதித்து மூன்றுகாலங்களினும் வழுவாமற் பணிந்தருளினார்—எ-று. (ருகங)

புற்றி டங்கொளும் புனிதரைப் போற்றிசை பெருகப்
பற்று மன்பொடு பணிந்திசைப் பதிகங்கள் பாடி
நற்ற வத்திருத் தொண்டர்க ளுடனலஞ் சிறக்க
மற்ற வண்பதி தன்னிடை வைகுமந் நாளில்.

(இ-ள்) புற்றிடங்கொண்ட புனிதரைப்போற்றிசைபெருக=புற்றிடங்கொண்ட சிவபிரானைத்துதிக்கும் இசை எவ்விடத்தும்பரம்ப; பற்றுமன்பொடு பணிந்திசைப் பதிகங்களபாடி=நீங்காதுதொடர்ந்த அன்போடுவணங்கி இனிய இசையையுடைய திருப்பதிகங்களையும்பாடியருளி, நற்றவத்திருத்தொண்டர்களுடனலஞ்சிறக்க=நல்லதவத்தினையுடைய அடியார் திருக்கூட்டங்களோடு நன்மைவிளங்க=மற்றவண்பதி தன்னிடைவைகுமந்நாளில்=அத்திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் அந்நாளில்—எ-று. (ருகச)

மல்லல் நீடிய வலிவலங் கோளிலி முதலாத
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே
யெல்லை யிற்றிருப் பதிகங்க ளாற்பணிந் தேத்தி
யல்லல் தீர்ப்பவர் மீண்டுமா ரூர்தொழ வணைந்தார்.

(இ-ள்.) மல்லல்நீடிய வலிவலங்கோளிலிமுதலா=வளமமிக்க திருவலிவலம் திருக்கோளிலிமுதலாகிய, தொல்லைநான்மறை முதல்வர்தம்பதிபல தொழுது=பழைய நான்குவேதங்களுக்கும் காரணராகிய சிவபெருமானது பலதிருப்பதிகளையும்வணங்கி, எல்லையில்திருப்பதிகங்களால் பணிந்தேத்தி=அளவிறந்த பெருமையையுடைய திருப்பதிகங்களால் வணங்கித் துதித்து, அல்லல்தீர்ப்பவர்மீண்டும் ஆரூர்தொழவணைந்தார்=(தம்மையடைந்தார்) துன்பத்தை நீக்கியருளும் ஆளுடையபிள்ளையார் மீளவும் திருவாரூரைவணங்க எழுந்தருளிவந்தார்—எ-று. (௫௧௫)

திருவலிவலம் - திருவிராகம் - பண் வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுத
லேவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவண்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
யின்னிய கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
யுன்னிய வொருபது முயர்பொரு டருமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - மனத்துணைநாதேசர்.
தேவியார்-வாளையங்கண்ணியம்மை.

திருக்கோளிலி - பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
யாளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

நமபனைநல லடியாாக ளுமுடைடமா டென்றிருக்குங
கொமபனையாள பாகனெழிற கோளிலியெம பெருமானை
வமபமருந தணகாழிச சமபநதன வணடமிழகொணடு
டின்பமர வலலாாக ளெயதுவாக ளீசனையே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா - கோளிலியபபா தேவியாா-வணடமாபூஙகுழலம்மை.

ஊறு காதலி லொளிவளா புறறிடங கொண்ட
வாறு லாவிய சடைமுடி யையரைப பணிநது
நீறு வாழவென நிகழதிருத தொண்டாக ளோடு
மீறி லாததிரு ஞானசம பநதாங கிருநதாா.

(இ-ள) ஊறுகாதலில ஒளிவளா புறறிடஙகொணட = இடையறாது எழுமபெருவிருபபால ஒளிமிகுநதபுறறையிடஙகொணடருளிய ; ஆறு உலாவிய சடைமுடி ஐயரைபபணிநது=கஙகைநதிபெருககெடுககும சடாமகுடத்தையுடைய பெருமானைவணஙகி , நீறுவாழவென நிகழதிருததொணடாகளோடும=விபூதியே பெருஞசெலவமெனக் கொணடுவிளஙகும அடியாாதிருககூடடஙகளோடும , ஈறு இலாததிருஞானசமபநதா அஙகு இருநதாா=அழியாத ஞானசசெலவததையுடைய திருஞானசமபநதபபிளளையாா அததிருபபதியில எழுநதருளி இருநதாா—எ-று (௫௬௬)

அஙகு நனமையில வைகுமந நாளசில வகல
நஙக டநதிரு நாவினுக கரைசரை நயநது
பொஙகு சீாபபுக லூாதொழ வருளினற போவாா
தஙகு மபபதிப புறமபணை சாாநதருள செயவாா.

(இ-ள) அஙகுநனமையில வைகும அநநாள சிலவகல=அததிருபபதியில சிவபபேறறோடு எழுநதருளி இருககும அநநாளகள சிலகழிய, நஙகள தநதிரு நாவினுககரைசரைநயநது=நமதுதிருநாவுககரசு நாயனாைவிருமபி , பொஙகுசீாபபுகலூாதொழ அருளினலபோவாா=விளஙகுஞ சிறபபினையுடைய திருபபுகலூாைவணஙகத திருவருளினால செலலும பிளளையாா , தஙகும் அபபதிப புறமபணைசாாநது அருளசெயவாா=பலசெலவஙகளுமபொருநதிய அததிருவாரூாத திருபபதியினபககலில உளள மருதநிலததை அடைநதருள செயவாராயினாா—எ-று.

புறமபணை=ஊாபபுறததிருககும் மருதநிலம. வேறறுமைக்கண் மகரங கெடாதியலபாதல, புலமபுககனன என்றறபோலககொளக. (௫௬௭)

வேறு

புவனவா ரூரினிற் புறம்புபோந் ததனையே நோககினனறே
யவமிலா நெஞ்சமே யஞ்சலே யுய்யுமா றறிதியனறே

சிவன்றா ரூர்தொழ னீமற வாதென்று செங்கைகூப்பிப்
பவனமாய்ச் சோடையா யெனுந்திருப் பதிகமுன் பாடினரே.

(இ-ள்.) புவனம் ஆரூரின் புறம்போந்து=நகரங்களிற்சிறந்த திருவாரூரின் புறத்தணைந்தருளி; அதனையே நோக்கி நின்று=அத்திருப்பதியைப் பார்த்துநின்றருளி, அவமிலா நெஞ்சமே=குற்றமில்லாத மனமே, நீ அஞ்சல் உய்யுமாறு அறிதி=நீ அஞ்சாதே நான் கூறும் உய்யுநெறியை அறிவாயாக, சிவனது ஆரூர் தொழல் நீ மறவாதென்று செங்கைகூப்பி=சிவபெருமானாரது திருவாரூரை நீ மறவாது வணங்கக்கடவையென்று சிவந்த திருக்கரங்களைக் கூப்பி, பவனமாய்ச்சோடையாயெனுந் திருப்பதிகமுன் பாடினர்=பவனமாய்ச் சோடையாய் எனனும் முதலையுடைய திருப்பதிகத்தை அவ்வெல்லையின் முன்னின்று பாடியருளினார்—எ-று.

புவனம், சிறப்புநோக்கி நகரமென்னுந் துணையாய்நின்றது. பவனம் நீர் - நீர்வளம்பொருந்திய ஆரூர் என்று உரைத்தலுமொன்று. அவ்விருதிகளிரண்டும் முறையே மறைப்பொருளினும் விதிப்பொருளினும் வந்தன. சிவன்றாரூர்தொழல் நீமறவாதெனப்பிரி, சிவபிரானது ஆரூரைத்தொழுதலை நீமறவாமல் உய்யுமாறு அறிதி என்று கூறினும் அமையும். (ருகஅ)

திருவாரூர் - பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்டவுண்டு
சிவன்றாள் சிந்திய்ப் பேதைமார் போல நீ வெள்கினாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய காளகண்ட
னவன்றா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே.

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ்செயுங் காழியூர
னல்லவே சொல்லிய ஞானசம் பந்தனன்
றெல்லியம் போதெரி யாடுமெம் மீசனை யேத்துபாடல்
சொல்லவே வல்லவர் தீதிலரோ தநீர் வையகத்தே

திருச்சிற்றம்பலம்

காழியார் வாழவந் தருள்செயுங் கவுணியப் பிள்ளையார்தா
மாழியா னறியொணா வண்ணலா ரூர்பணிந் தரிதுசெல்வார்
பாழிமா வியானையின் னுரிபுனைந் தார்பனை யூர்பணிந்து
வாழிமா மறையிசைப் பதிகமும் பாடியப் பதியில்வைகி.

(இ-ள்.) காழியர் வாழவந்தருள்செயும் கவுணியப்பிள்ளையார்தாம்=சீகாழியிலுள்ளார் வாழும்படி வந்தருளிய கவுணியகோத்திரத்தில் அவதரித்த ஆளுடையபிள்ளையார்; ஆழியானறியொணா அண்ணலாரூர்பணிந்தரிது

செல்வர்=சக்கரத்தைத்தாங்கியதிருமால் அறிதற்கரிய புறமிடங்கொண்டா ரது திருவாரூரைவணங்கி அதிலநின்று நீங்கற்கரிய ஆராமையோடு செல்வா ராய், பாழிமாலயானையின் உரிபுனைந்தார்பனையூர்பணிந்து=பெரிய மயக்கங் கொண்ட யானையினதுதோலைப் போர்வையாகப்போர்த்த சௌந்தரேசரது திருப்பனையூரைவணங்கி, மாமறை இசைப்பதிகமும்பாடியப்பதியில்வைகி= பெரியதமிழ்வேதமாகிய இனிய இசையையுடைய திருப்பதிகத்தையும்பாடி அத்திருப்பதியில் இருந்தருளி—எ-று.

பாழி - சிறியமலை எனினும் ஒக்கும் (௫௧௧)

திருப்பனையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடை மேன்மதிமத்தம்
விரவிப்பொலி கின்றவனூர்
நிரவிப்பல தொண்டர்கணாளும்
பரவிப்பொலி யும்பனையூரே

பாரார்விடை யான்பனையூர்மேற்
சீரார்தமிழ் ஞானசம்பந்த
ஞாரற்சொன்ன மாலைகள்பத்து
மூரார்நினை வாருயர்வாரே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் சௌந்தரேசர். தேவியார் - பெரியநாயகியம்மை.

அங்குநின் றரிதெழுந் தருளுவா ரகிலகா ரணமுமானார், தங்கு நற் பதிகளும் பிறபணிந் தருளிவண் டமிழ்புனைந்தே, யெங்குமெய்த் தவர்குழா மெதிர்கொளத் தொழுதெழுந் தருளிவந்தார், பொங்குதண் பாசடைப் பங்கயப் புனல்வயற் புகலூர்சார.

(இ-ள்) அங்குநின்று அரிதெழுந் தருளுவார்=அத்திருப்பதியில் நின் றும் அருமைப்பாடாக எழுந்தருளும் பிள்ளையார், அகிலகாரணமு மானார் தங்குநல் பிறபதிகளும் பணிந்தருளி வண்தமிழ்புனைந்து=எல்லாவற்றிற்குங் காரணராகிய சிவபெருமானார் எழுந்தருளிய பிறதிருப்பதிகளையும் வணங்கி வண்மையையுடைய திருப்பதிகங்களைச்சாத்தி, எங்கும் மெய்த்தவர்குழாம் எதிர்கொளத்தொழுது=எவ்விடத்தும் மெய்த்தவத்தையுடைய அடியார்திருக் கூட்டங்கள் எதிர்கொண்டுவணங்கத்தாமும்வணங்கி; பொங்குதண்பாசடைப் பங்கயப் புனல்வயற்புகலூர்சார எழுந்தருளிவந்தார்=விளங்கும் குளிர்ந்த பசிய இலையையுடைய தாமரைகள்மலர்ந்தநீர்வளம்பொருந்திய வயல்சூழ்ந்த திருப்புகலூரைச்சார எழுந்தருளிவந்தார்—எ-று. (௫௧௨)

நாவினுககரசரு நமபிசா முருகரு மறறுநாமச, சேவுகைக தவர் திருத் தொண்டரா னவாகண்முன் சென றுசீதப, பூவினிற பொலிபு னற் புகலியாா போதகத தெதிரபணிநதே, மேவமற றவருடன கூ டவே விமலாகோ யிலையடைநதாா.

(இ-ள) நாவினுககரசரும நமபிசாமுருகருமஉஆண்ட அரசும சிறநத சிறபபினையுடைய முருகநாயனாரும, மறறுநாமசசேவுகைததவா திருததொ ணடரானவாகண முனசென று=அவரலலாத இடபததைவாகனமாகநடதது ம சிவபெருமானாது அடியாாதிருககூட்டஙகளும எதிாசென று, சீதபபூவி னில பொலிபுனறபுகலியாாபோதகதது எதிாபணிநது=குளிாநததாமரைமலா களால விளஙகும நீாசூழநதசீகாழியிலவதரிதத யானைககனறையொதத பிள ளையாரை எதிரேவணஙகி, மேவமறறவருடன கூடவேவிமலாகோயிலை அ டைநதாா=தமமை எதிாகொளள அவவடியாா திருககூட்டஙகளொடுகூட அககினீசா திருககோயிலைப (பிளளையாா) அடைநதருளினாா—எ-று.

முனசென று எதிாபணிநதுமேவ அவருடன பிளளையாாகோயிலை அடை நதாாெனககூட்டுக முனசென று பணிநதெனனாது முனசென றெதிா பணிந தெனறதனால, அவரெதிாகொளளுஙகால பிளளையாருமபணியத தாமுமெதிா பணிநது என்பது போநதவாறுகாணக (ருஉக)

வேறு

தேவாதந தலைவனாா கோயிலபுக கனைவருஞ சீாஙிலத துறவண ஙகிப, பாவருந தமிழிசைப பதிகமுன பாடிமுன பரவுவாா புறமப ணைநதே, தாவிலசீா முருகனாா திருமனைக கெயதியத தனிமுதற றொ ணடாதாமே, யாவையுங குறைவறுத திடவமாந தருளுவா ரினிதினங குறையுநாளில.

(இ-ள) தேவாதமதலைவனாா கோயிலபுககு அனைவரும சீாஙிலததுஉற வணஙகி=தேவராஜ பெருமானுடைய அககினீசாகோயிலுடபுகுநது எலலாரோ டும அழகியபூமியில திருமேனிபடியவணஙகி, பாவரும தமிழிசைபபதிக முன்பாடி முனபரவுவாா=பாவிறகமைநத இனிய இசையையுடைய திருபபதி கததைபபாடித திருமுனனினறு வணஙகுமபிளளையாா, புறமபு அணைநது தாவிலசீாமுருகனாா திருமனைகெயதி=புறமபிலடைநதருளி கெடுதலிலலாத புகழையுடைய திருமுருகநாயனாா மனையையடைநது, அததனிமுதற றொ ணடாதாமேயாவையும குறைவறுததிட அமாநதருளுவாா இனிதினஙகுறை யுநாளில=அநத ஒபபிலலாத முதனமையையுடைய அமமுருகநாயனாா திரு வமுதுசெயதறகமைநத எவையுமமுட்டுபபாடினறி நடததவிரும்பியருளபவ ராய இனிதாக அத்திருபபதியில எழுநதருளி இருககுஙகால்ததில—எ-று.

நீலநக் கடிகளு நிகழசிறுத தொண்டரு முடனணைந தெய்துநீ மைச், சீலமெய்த தவர்களுங கூடவே குமபிடுஞசெயகைநோ் நின்று

வாய்மை, சாலமிக் குயர் திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளியநாடிக், காலமுய்ய வந்தவர்களோ டளவளா விக்கலந் தருளினார் காழிநாடர்.

(இ-ள்) நீலநக்கடிகளும் நிகழ்சிறுத்தொண்டரும்=தாம் திருப்புகலூரில் எழுந்தருளியிருந்ததலைக்கேள்வியுற்று வந்த திருநீலநக்கநாயனாரும் புகழ்விளங்கும் சிறுத்தொண்ட நாயனாரும், உடனணைந்தெய்து சீர்மைச்சீல மெய்த்தவர்களும்=அவருடன் வந்தடையும் நல்லொழுக்கத்தினையுடைய அடியார் கூட்டங்களும், கூடவேகும்பிடும் செய்கைநேர்நின்று=ஒருங்கு தம்மோடு சேர்ந்து அஞ்சலிசெய்து வணங்கும் செயலில் ஒருப்பட்டு நின்று, சாலவாய்மை மிக்குயர் திருத்தொண்டினுண்மைத் திறந்தன்னை தெளியநாடி=மிகவும் மெய்மை மிக்குயர்ந்த திருத்தொண்டின் மெய்ம்மைப்பகுதியைத் தெளிய ஆராய்ந்து, காழிநாடர் காலமுய்யவந்தவர்களோ டளவளாவிக்கலந்தருளினார்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் அந்நாயன்மார்களோடு தன்று காலம் போக்கிக் கலந்தருளி இருந்தார்—எ-று. (ருஉரு)

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசையெனும் பதிகமுன் னான பாடல், தம்பெருந் தலைமையா னிலைமைசால் பதியதன் பெருமைசால் புறவிளம்பி, உம்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையா ருள்ளமெய்க் காதல்கூர, நம்பர்தம் பதிகளா யினவெனைப் பலவுமுன் னண்ணியே தொழநயந்தார்.

(இ-ள்) கும்பிடுங்கொள்கையிற் குறிகலந்திசையெனும் பதிகமுன்னான பாடல்= (நாடோறும் அவர் தம்முடன் வரச்சென்று) வணங்கும் மேம்பாட்டால் குறிகலந்திசையெனும் பதிகமுதலையுடையபாடல்களின், தம்பெருந்தலைமையால் நிலைமைசாலபதியதன் பெருமை சாலபுறவிளம்பி=தம் முதன்மைக்குணத்தால் அழியாதநிலைபெற்ற அத்திருப்பதியின் பெருமையைச் தகுதிபொருந்தச் செய்யுளிறுதிகளில் சிறப்பித்தருளி, உம்பரும் பரவுதற்குரியசொற்பிள்ளையாருள்ள மெய்க்காதல்கூர = தேவர்களும் வணங்குதற்குரிய புகழையுடைய பிள்ளையார் தமது திருவுள்ளத்தில் மெய்ம்மையான பெருவிருப்பு மேம்பட, நம்பர்தம்பதிகளாயின வெனைப்பலவும்முன் நண்ணியேதொழநயந்தார்=சிவபெருமான் எழுந்தருளிய மற்றத் திருப்பதிகள் பலவற்றையும் முன்னடைந்து வணங்க விரும்பியருளினார்—எ-று. (ருஉசு)

திருப்புகலூர் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

குறிகலந்தவிசை பாடலினானசை யாலிவ் வுலகெல்லா, நெறிகலந்ததொரு நீர்மையனாயெருதேறும் பலிபேணி, முறிகலந்ததொரு தோலரைமேலுடை யானிடம் மொய்ம்மலரின், பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய லாரும் புகலூரே

புற்றில்வா ழும்மர வம்மரையார்த்தவன் மேவும் புகலூரணைக், கற்ற நல்லவர் காழியுண் ஞானசம் பந்தன்றமிழ்மாலை, பற்றியென் னும்மிசை பாடியமர்ந்தார் பரமன் னடிசேர்ந்து, குற்றமின் றிக்குறை பாடொழியாப்புக ழோங்கிய பொலிவார்.

திருச்சிற்றம்பலம்

வேறு.

புள்ளலம்புதண் புனற்புகலூருறை புனிதனாருள்பெற்றுப், பிள்ளையாருட னாவினுக்கரசரும் பிறபதிதொழச்செல்வார், வள்ளலார் சிறுத்தொண்டரு நீலநக்கரும் வளம்பதிக்கேகக், வுள்ளமன்புறு முருகரங் கொழியவுமுடன் படவிசைந்தார்கள்

(இ-ள்) புள்ளலம்புதண்புனற் புகலூருறை புனிதனருள்பெற்று=புட்குலங்கள் ஒலிக்கும் குளிர்ந்த நீர்சூழ்ந்த திருப்புகலூரில் எழுந்தருளிய அக்கினீசுரரது திருவருளைப்பெற்று, பிள்ளையாருட னாவினுக்கரசரும் பிறபதிதொழச்செல்வார்=ஆளுடையபிள்ளையாருடன் ஆண்ட அரசும் மற்றத்திருப்பதிகளை வணங்கச்செல்லும் கருத்துடையராய், வள்ளலார் சிறுத்தொண்டரும் நீலநக்கரும் வளம்பதிக்கேக=வள்ளற்றன்மையையுடைய சிறுத்தொண்டநாயனாரும் திருநீலநக்கநாயனாரும் வளம்பொருந்திய தத்தமதிருப்பதிக்குச் செல்லவும், உள்ளம் அன்புறு முருகர் அங்கொழியவும் உடன்பட இசைந்தார்கள்=திருவுள்ளத்தின்கண் அன்புமிக்க திருமுருகநாயனார் அவ்விடத்து நீங்கவும் அவர்களுடன்பட்டபடி தாமுமிசைந்தார்கள்—எ-று (௫௨௫)

கண்ணகன் புகலூரினைத் தொழுதுபோம் பொழுதினிற் கடற்காழி, யண்ணலார் திருநாவினுக்கரசர் தம்மருங்கு விட்டகலாதே, வண்ணநித்திலச் சிவிகையும் பின்வர வழிக்கொள்வுறுங்காலை, யெண்ணில்சீர்த் திருநாவினுக்கரசரு மற்றவர்க் கிசைக்கின்றார்.

(இ-ள்) கண்ணகன்புகலூரினைத் தொழுதுபோம்பொழுதினில்=இடமகன்ற திருப்புகலூரைவணங்கிச் செல்லுங்காலத்தில், கடற்காழி அண்ணலார் திருநாவினுக்கரசர் தம்மருங்குவிட்டகலாது=கடற்கரையிலிருக்கின்ற சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் தம்பக்கலில் ஆண்ட அரசுவிட்டு நீங்காமற்செல்ல, வண்ணநித்திலச்சிவிகையும் பின்வரவழிக்கொள வுறுங்காலை=அழகிய முத்துச்சிவிகையும் தம்பின்னேவரவழிக்கொண்டு செல்லுங்காலத்து; எண்ணில் சீர்த்திருநாவினுக்கரசரும் மற்றவர்க்கிசைக்கின்றார்=அளவில்லாத புகழையுடைய ஆண்ட அரசும் அப்பிள்ளையாரைநோக்கி அருளிச்செய்கின்றார்—எ-று.

ஆளுடையபிள்ளையார் நாவுக்கரசர் தம்மருங்குவிட்டகலாமல் சிவிகையும்பின்வர வழிக்கொள்ளுங்கால் எனக்கூட்டுக. (௫௨௬)

நாயனுருமக் களித்தருள்செய்தவிந் நலங்கிளரொளி முத்தின,
றூயயானத்தின் மிசையெழுந்தருளுவீ ரென்றலுஞ் சுடாத்திங்கண்,
மேயவேணியா ரருளுமிவ்வாறெனில் விரும்புதொண் டாகளோடு,
போயதெங்குநீ ரங்கியானபின்வரப் போவதென்றருள் செய்தார்.

(இ-ள்) நாயனுருமக்களித்தருள்செய்த இந்நலங்கிளா ஒளிமுத்தின்று யயானத்தின்மிசை எழுந்தருளுவீரென்றலும்=சிவபிரான் உமக்குக் கொடுத்தருளிய இந்த அழகால்விளங்கும் ஒளியையுடைய முத்தாலாகிய பரிசுத்தமான திருச்சிவிகையின்மேல் எழுந்தருளுவீரென்று ஆண்ட அரசுகூறியருளுங்கால், சுடாத்திங்கள்மேய வேணியாரருளு மிவ்வாறெனில்=ஒளிபொருந்திய சந்திரனையணிந்த சிவபிரானது திருவருளும் இவ்வாறெனில், நீாவிரும்புதொண்டாகளோடுபோயது எங்கு=நீர் விரும்பிய திரு அடியாாகளுடன் எழுந்தருளுவது எத்திருப்பதியோ, அங்கு யானபின்வரப்போவதென றருளசெய்தார்=அத்திருப்பதிக்கு அடியேனும் பின்வரக்கடவனென அருளிச்செய்தார்—எ-று (௫௨௭)

என்றுபிள்ளையார் மொழிந்தருள்செய்திட விருந்தவத்திறையோ ரு, மென்றுநீரருள் செய்ததேசெய்வனென றருள்செய்து நயப்புறற, அன்றைநாண்முத லுடன்செலுநாளெலா மவ்வியல்பினிற் செல்வார், சென்றுமுன்னுற்ற திருவம்பரணைந்தனர் செய்தவக்குழாந் தோடும்.

(இ-ள்) என்றுபிள்ளையார் மொழிந்தருள்செய்திட=என்று ஆளுடைய பிள்ளையார் ஆண்டஅரசுடன் கூறியருள், இருந்தவத்திறையோரும்=பெரிய தவத்தினையுடைய ஆண்ட அரசும், நன்று நீரருள்செய்ததேசெய்வனென்ற ருள்செய்து=இந்நன்கு நீரருளிச்செய்தவாறே செய்வேனென்று அப்பிள்ளையாருடன் கூறியருளி, நயப்புற்ற அன்றைநாண்முதலுடன் செலுநாளெலாம் அவ்வியல்பினிற் செல்வார்=விரும்பிய அற்றைநாள்முதல் அந்தத்துவரும் நாள்தோறும் அவ்வாறுசெல்வாராய, சென்றுமுன்னுற்ற திருவம்பரணைந்தனர் செய்தவக்குழாந்தோடும்=முற்பட்டசென்று திருவம்பாமாகாளத்தை அடைந்தருளினா செய்யுந்தவத்தையுடைய அடியாா திருக்கூட்டத்தோடும்—எ-று

இருந்தவத்திறையோா செய்வனென்றருள்செய்து நயப்புற்றநாள்முதல் நாளெல்லாம் அவ்வியல்பினிற் செல்வாராய்த் திருவம்பா அணைந்தாரெனக் கூட்டுக. (௫௨௮)

சண்பைமன்னருந் தம்பிரானருள்வழி நிற்பதுதலைச் செல்வார், பண்புமேம்படு பனிக்கதிர்த்திலச் சிவிகையிற்பணிந்தேறி, வண்பெருமபுக லூரினைக்கடந்துபோய் வரும்பரிசனத்தோடுந், திண்பெருந் தவ ரணைந்ததெங்கென்றுபோய்த் திருவம்பா நகாபுக்கார்

(இ-ள்) சண்பைமன்னருந்தம்பிரானருள்வழிநிற்பதுதலைச்செல்வார்= சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரும் சிவபிரான்திருவருளின் வழி

நிறறலையே மேற்கொள்வாராய; பண்புமேம்படு பணிக்கதிரளித்திலச்சிவிகை யிறபணிநதேறி=தண்மைககுணததிலமிகக குளிரநதகிரணஙகளையுடைய முததுச்சிவிகையின்மேல வணஙகியேறி அருளி, வணபெரும்புகலூரினைககடநதுபோய=வளபபம்மிகக பெரியதிருபபுகலூரைககடநதுசெனறருளி, வருமபரிசனததோடுந திணபெருநதவா அணைநததெஙகெனறுபோய=தம்முடன வரும் அடியாாதிருககூட்டததோடு நீஙகலஙகாத பெரியதவததினை யுடைய ஆணட அரசு எஙகுறறதெனறு வினவிசசெனறருளி, திருவமபாநகாபுககாா=திரு அமபா எனனுந திருபபதியை அடைநதருளினாா—எ-று (௫௨௧)

அமபாமாநக ரணைநதுமாகாளத்தி லணணலாரமாகினற, செம பொனமாமதிற கோயிலைவலஙகொணடு திருமுனபுபணிநதேததி, வ மபுலாமலா தூவிமுனபாவிய வணடமிழிசைமாலை, யுமபாவாழநஞ சுணடவாதமைபபணிந துருகுமன பொடுதாழநதாா.

(இ-ள்.) அமபாமாநகரணைநது மாகாளததில அணணலாாஅமாகினற= திரு அமபா எனனும பெரிய திருபபதியை அடைநது திருமாகாளம எனனும ஆலயததில காளகணடேசா எழுநதருளிய, செமபொனமாமதிற கோயிலைவலஙகொணடு திருமுனபு பணிநதேததி=சிவநத பொனனாலாகிய பெரிய மதிலசூழநத திருககோயிலைப பிரதடசணஞசெயது அவரது திருமுனனினறுவணஙகிததுதிதது, வமபுலாமலாதூவிமுனபரவியவணடமிழ இசைமாலை=வாசனைநிறைநத மலாகளைததூவி முனபு பாடியருளிய)அடையாாபுரமெனனும முதலையுடைய) வளமபொருநதிய திருபபதிகமாலையால, உமபாவாழ நஞசுணடவாதமைபபணிநது உருகும அனபொடு தாழநதாா=தேவாகள உயயும பொருடடு நஞசமுதுசெயதருளிய காளகணடேசனை வணஙகி மனம உருகுதறகுக காரணமான அனபுடன வணஙகியருளினாா—எ-று (௫௩௰)

திருஅமபாமாகாளம-பண-குறிஞசி.

திருசசிறறமபலம.

அடையாா புரமூனறு மனலவாய விழவெயது
மடையாா புனலமபா மாகா ளமமேய
விடையாா கொடியெநதை வெளளைப பிறைசூடுஞ
சடையான கழலேததச சாராவினை தானே.

வெருநீா கொளவோஙகு வேணுபுரந தனனுட
டிருமா மறைஞான சமபநதன் சேணா
பெருமான மலியமபா மாகாளம பேணி
யுருகா வுரைசெயவா ருயாவா னடைவாரே.

திருசசிறறமபலம.

தாழ்ந்துநாவினுக் கரசுடன்றம்பிரான் கோயின்முன்புறமெய்
திச, சூழ்ந்ததொண்டரோ டப்பதியமர்பவர் சுரந்திமுடிமீது, வீழ்ந்த
வேணியார் தமைப்பெறுங் காலங்கள் விருப்பினிறைகும்பிட்டு, வாழ்ந்
திருந்தனர் காழியார்வாழ்வந் தருளியமறைவேந்தர்.

(இ-ள்.) தாழ்ந்து நாவினுக் கரசுடன் றம்பிரான் கோயின் முன்புறமெ
யதி=பணிந்தருளி ஆண்ட அரசுடன் தேவர்பிரானாகிய காளகண்டேசரது
திருக்கோயிலினின்று புறம்பேவந்து, சூழ்ந்ததொண்டரோ டப்பதியமர்ப
வர்=தம் அருகிற்சூழ்ந்த அடியார் திருக்கூட்டத்தோடு அத்திருப்பதியை விரு
ம்பி அருள்பவராய்; காழியார் வாழ்வந்தருளிய மறைவேந்தர்=சீகாழியி
லுள்ளார் வாழவந்தருளிய மறைமுதல்வராகிய ஆளுடையபிள்ளையார்; சுரந்
திமுடிமீது வீழ்ந்த வேணியார்தமைப்பெறுங் காலங்கள் விருப்பினிற் கும்பிட்
டுவாழ்ந்திருந்தனர்=கங்காநதியானது விழுதற்கு இடமான சடைமுடியையு
டைய காளகண்டேசரை வணங்குதற்குரிய காலங்கடோறும் பெருவிருப்
பால் வணங்கி வாழ்வடைந்து எழுந்தருளியிருந்தார்—எ-று

கங்கை, தன்வேகத்தைத் தாங்குவார் இலரென்னுஞ் செருக்கால் சிவபி
ரான் சிரசில் வீழ்ந்து வேகமடங்கிக்கிடந்தமைதோன்ற, சுரந்திமுடிமீது வீழ்
ந்த வேணியார் என்றார் (௫௧௧)

பொருவிலாதசொற் புலக்குபொன்னிறமுதற் பதிகங்களாற்போ
ற்றித், திருவினார்ந்தகோச் செங்கணனங்கர் செய்தகோயிலைச்சேர்ந்
து, மருவுவாய்மைவண் டமிழ்மலர்மாலையவ் வளவனைச்சிறப்பித்துப்,
பெருகுகாதலிற் பணிந்துமுன்பரவினர் பேணியவுணர்வோடும்.

(இ-ள்) பொருவிலாதசொற் புலக்குபொன்னிறமுதற் பதிகங்களாற்போ
ற்றி=ஒப்பில்லாத சொல்வளம்நிறைந்த புலக்குபொன்னிறம் முதலான திருப்
பதிகங்களால் துதித்து, திருவினார்ந்த கோச்செங்கணன் அங்கர்செய்தகோ
யிலைச்சேர்ந்து=செல்வங்கள்நிறைந்தசெங்கோலையுடைய கோச்செங்கட்சோ
ழநாயனார் அத்திருப்பதியிற்செய்த அம்பர்ப்பெருந்திருக்கோயிலை அடைந்து;
வாய்மை மருவுவண்டமிழ் மலர்மாலை அவ்வளவனைச்சிறப்பித்து=மெய்ம்மை
பொருந்தியவளத்தையுடைய திருப்பதிகமாலையில் அக்கோச்செங்கட் சோழ
நாயனாரைச்சிறப்பித்தருளி, பெருகுகாதலிற்பணிந்து முன்பரவினர் பேணிய
வுணர்வோடும்=மேம்பட்ட விருப்போடும்வணங்கித் திருமுன்னின்று துதித்
தார் பொருந்தி மெய்யுணர்ச்சியோடும்—எ-று. (௫௧௨)

திரு அம்பர்மாகாளம் - பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம் புரிசடைநெடுமுடிப் போழிளமதிசூழப்
பில்குதேனுடை நறுமலர்க்கொன்றையும் பிணையல்செய்தவர்மேய

மலகுதண்டுறை யரிசிலின்வருபுனல் வடகரைமாகாள
மலலுஙணபக லுஙதொழுமடியவாக கருவினையடையாவே

மாறுதனனொடு மண்மிசையிலலது வருபுனனமாகாளத
திறுமாதியு மாகியசோதியை யேறமாபெருமானை
நாறுபூமபொழிற காழியுண்ஞானசம பநதனதமிழமாலை
கூறுவாரையுங கேடகவலலாரையுங குறறஙகளகுறுகாவே

திருசசிறறமபலம

திரு அமபாமாகாளம - பண் - சாதாரி

திருசசிறறமபலம.

படையுளார விடையினா பாயபுலிந தோலினா பாவநாசா
பொடிகொண்மா மேனியா பூதமாா படையினா பூணநூல
ரடிகொணமா மலரிடு மடியினா பிடிநடை மஙகையொடு
மடிகளா ரருளபுரிந திருபபிட மமபாமா காளநதானே

செமபொனமா மணிகொழித தெழுதிரை வருபுன லரிசிலசூழநத
வமபாமா காளமே கோயிலா வணஙகினெ டிருநதகோனைக
கமபினா நெடுமதிட காழியுண ஞானசம பநதனசொனன
நமபிநாண மொழிபவாக கிலலையாம வினைநலம பெறுவாதாமே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-காளகணடேசா. தேவியாா-மகாதேவியமமை.

திருஅமபாபபெருநதிருககோயில-பண்-காநதாரபஞசமம.

திருசசிறறமபலம.

எரிதரவனல கையேநதி யெலவியி
னரிதிரி கானிடை நட்டமாடுவ
ரரிசிலம பொருபுன லமபா மாநகாக
குரிசில செஙகணணவன கோயில சோவாரே.

அழகரை யடிகளை யமபா மேவிய
நிழறிகழ சடைமுடி நீலகணடரை
யுமிழதிரை யுலகினி லோது வீாகொண்மின
றமிழகெழு விரகினன றமிழசெய மாலையே.

திருசசிறறம்பலம

சுவாமிபெயா-பிரமபுரநாதா தேவியாா-பவளவனனபபூங்குழலம்மை.

இன்னவாறுசொன் மாலைகளாற்றுதித் திறைஞ்சியங்கமர்நாளிற்
கன்னிமாமதிற் றிருக்கடவூர்தொழக் காதல்செய்தருளிப்போய்
மன்னுகோயில்கள் பிறபதிவணங்கியே வாக்கின்மன்னவரோடு
மந்நெடும்பதி யணைவுறக்கலயரோ டடியவரெதிர்கொண்டார்.

(இ-ள்) இன்னவாறு சொன்மாலைகளாற் றுதித்து இறைஞ்சி அங்கமர் நாளில்=இவ்விதமாகச்சொல்லாலாய திருப்பதிகமாலைகளாலதுதித்து வாழ்த்தி அவ் அம்பாத்திருப்பதியில் இருந்தருளுநாளில், கன்னிமாமதிற் றிருக்கடவூர்தொழக்காதல்செய்தருளிப்போய்=அழியாத பெரிய மதில்சூழ்ந்த திருக்கடவூரைவணங்கவிரும்பிச்சென்றருளி, பிறபதிமன்னுகோயில்கள்வணங்கி=மற்றத்திருப்பதிகளில் நிலைபெற்றதிருக்கோயில்களை வணங்கி, வாக்கின்மன்னவரோடும் அந்நெடும்பதியணைவுற=ஆண்டவரசுடன் அந்தப்பெரிய திருப்பதியை அடையுங்கால், கலயரோடடியவரெதிர்கொண்டார்=குங்கிலியக்கலயநாயனாரோடு அடியார்திருக்கூட்டங்களும் எதிர்கொண்டருளினார்—எ-று ()

மற்றவண்பதி யணைந்துவீரட்டத்து மழவிடையார்கோயிற்
சுற்றமாளிகை வலங்கொண்டுகாலனை யுதைத்துருட்டியசெய்ய
பொற்சிலம்பணி தாமரைவணங்கிமுன் போற்றியுய்ந்தெதிர் நின்று
பற்றறுப்பவர் சடையுடையானெனும் பதிகவின்னிசைபாடி.

(இ-ள்) மற்றவண்பதியணைந்து=அந்த வண்மையையுடைய திருப்பதியையடைந்து, வீரட்டத்து மழவிடையார்கோயில் சுற்றுமாளிகை வலங்கொண்டு=திருக்கடவூர்த்திருவீரட்டமென்னும் ஆலயத்தில் எழுந்தருளிய இளமைதங்கிய இடபவாகனத்தையுடைய அமிர்தகடேசரது திருக்கோயிலைச்சூழ்ந்த திருமாளிகையைப்பிரதட்சணஞ்செய்து, காலனை உதைத்து உருட்டிய செய்யபொற் சிலம்பணிதாமரைவணங்கி=எமனைஉதைத்து நிலத்தில் உருளச்செய்த சிவந்தபொன்னாலாகிய சிலம்பையணிந்த தாமரைபோன்ற திருவடிகளைவணங்கி, முன்போற்றி உய்ந்து எதிர்நின்று=திருமுன்னின்று துதித்து அதனாலவாழ்ந்து எதிரேநின்று, பற்றறுப்பவர் சடையுடையானெனும் பதிகவின்னிசைபாடி=பாசபந்தத்தையறுத்தருளும் பிள்ளையார் சடையுடையானெனும் முதலையுடைய திருப்பதிகத்தை இனிய இசையோடுபாடியருளி—எ-று.()

திருக்கடவூர்-திருவீரட்டானம் - பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

சடையுடை யானுநெய் யாடலானுஞ்சரி கோவண
வுடையுடை யானுமை யார்ந்தவொண் கண்ணுமை கேள்வனுங்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனில்
விடையுடை யண்ணலும் வீரட்டானத் தானல்லனே.

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை
வேந்தனை யந்தணர்தங் கடவூருளானை யணிகாழியான்
சந்தமெல்லா மடிச் சாத்தவல்ல மறை ஞானசம்
பந்தன்செந்தமிழ் பாடியாடக் கெடும்பாவமே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர் - அமிர்தகடேசர் தேவியார்-அபிராமித்தாய்.

பரவியேத்தியங் கரிதினிற்போந்துபார் பரவுசீரரசோடு
விரவுநண்புடைக் குங்கிலியப்பெருங் கலயர்தம்மனைமேவிக்
களையில்காதன்மற் றவரமைத்தருளிய விருந்தினி தமர்ந்தங்குச்
சிரபுரத்தவர் திருமயானமும்பணிந் திருந்தனர்சிறப்பெய்தி

(இ-ள்) பரவியேத்தி அங்கு அரிதினிற்போந்து=துதித்து வாழ்த்தி அங்குநின்று அரிதாகப்பிரிந்துபோய், பார்பரவு சீரரசோடும்=உலகத்தில் பரவிய புகழையுடைய ஆண்ட அரசுடன், விரவுநண்புடைக் குங்கிலியப்பெருங்கலயர்தம் மனைமேவி=கலந்த நட்பினையுடைய பெருமைபொருந்திய குங்கிலியக்கலயநாயனார் திருமனையை அடைந்தருளி, களையில் காதல் மற்றவர் அமைத்தருளிய விருந்தினிதமர்ந்து=அளவில்லாத விருப்பத்தையுடைய அந்நாயனார் அமைத்தருளிய விருந்தை இனிதாகவிரும்பி, அங்குச்சிரபுரத்தவர் திருமயானமும் பணிந்திருந்தனர் சிறப்பெய்தி=சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் திருக்கடவூர் திருமயானத்தையும் வணங்கி மகிழ்கூர்ந்திருந்தனர் —எ-று. (௫௯௫)

திருக்கடவூர்மயானம் - பண்-காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

வரியமறையார் பிறையார்மலையோர் சிலையாவணங்கி
யெரியமதில்க ளெய்தாரெறியு முசலமுடையார்
கரியமிடறு முடையார் கடவூர் மயானமமர்ந்தார்
பெரியவிடைமேல் வருவா ரவரெம் பெருமானடிகளே

மரவம்பொழில்சூழ் கடவூர்மன்னு மயானமமர்ந்த
வரவமசைத்த பெருமானகல மறியலாகா
பரவுமுறையே பயிலும்பந்தன் செஞ்சொன்மாலை
யிரவும்பகலும் பரவிநினைவார் வினைகளிலரே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-பிரமபுரீசர். தேவியார்-தயாளமலர்க்குழல்நாயகி.

சிறப்புடைத்திருப் பதியதனிடைச்சில நாளமர்ந் தருளோடும்,
விறற்பெருங்கரி யுரித்தவர்கோயில்கள் விருப்பொடுந்தொழச்செல்வா
ர், மறைப்பெருந்திருக் கலயருமுடன்பட வணங்கியமகிழ்வோடு, மற
ப்பெரும்பய னனையவத்தொண்டரோ டணைந்தனர்திருவாக்கூர்.

(இ-ள்.) சிறப்புடைத்திருப்பதியதனிடைச் சிலநாளமர்ந்து=சிறப்பினை யுடைய அத்திருப்பதியின்கண் சிலநாள் இருந்தருளி, அருளோடும் விறற் பெருங் கரியுரித்தவர்கோயில்கள் விருப்பொடுந் தொழச்செல்வார்=திருவரு ளால் வலிமைபொருந்திய பெரியயானையையுரித்துப்போர்த்தசிவபிரான் எழு ந்தருளிய திருக்கோயில்களைக் காதலோடும் வணங்கச்செல்லும்பிள்ளையார், ம றைப்பெருந் திருக்கலயருமுடன்பட=மறையவர் குலத்திற்றோன்றிய பெரு மையை உடைய குங்கிலியக்கலயநாயனாரும் தமது அத்திருப்பதிக்கண் நிற் றற் குடன்பட, மகிழ்வோடும் அறப்பெரும்பயனனைய அத்தொண்டரோடு திருவாக்கூர்வணங்கிய அணைந்தனர்=மகிழ்ச்சியோடும் சிவபுண்ணியத்தின் பெரும்பயனையொத்த அவ்வடியவரோடு திருவாக்கூர் என்னுந் திருப்பதியை வணங்கும்படி அடைந்தருளினார்—எ-று. (௫௱௬)

தக்கவந்தணர் மேவுமப்பதிதனிற் றான்றோன்றிமாடத்துச், செ
க்கர்வார்சடை யண்ணலைப்பணிந்திசைச் செந்தமிழ்த்தொடைபாடி,
மிக்ககோயில்கள் பிறவுடன்றொழுதுபோய் மீயச்சூர்பணிந்தேத்தி,
பக்கம்பாரிடம் பரவநின்றாடுவார் பாம்புரநகர்சேர்ந்தார்.

(இ-ள்.) தக்க அந்தணர்மேவும் அப்பதிதனில்=ஒழுக்கநெறியில் வழுவு தலில்லாத மறையவர்கள் வசிக்கும் அத்திருப்பதியின்கண், தான்றோன்றி மாடத்துச் செக்கர்வார்சடை அண்ணலைப் பணிந்திசைச்செந்தமிழ்த்தொடை பாடி=தான்றோன்றிமாடத்தில் எழுந்தருளிய சிவந்த நீண்ட சடைமுடியை யுடைய சிவபிரானைவணங்கி இசையோடுகூடிய செந்தமிழ்த்திருப்பதிகத் தைப்பாடி, மிக்ககோயில்கள்பிறவுடன்றொழுதுபோய்=மேம்பட்ட மற்றத் திருக்கோயில்களையும் ஆங்காங்கு வணங்கிச்சென்று, மீயச்சூர்பணிந்தேத்தி= மீயச்சூர் என்னுந்திருப்பதியையும் வணங்கித்துதித்து, பக்கம் பாரிடம்பரவ நின்றாடுவார் பாம்புரநகர்சேர்ந்தார்=தமது இருமருங்கினும் பூதகணங்கள் போற்ற நின்றாடியருளும் பாம்புரநாதரது திருப்பாம்புரமென்னுந் திருப்பதி யை யடைந்தருளினார்—எ-று. (௫௱௭)

திருஆக்கூர்-தான்றோன்றிமாடம் - பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையுந்
தொக்கிருந்த மார்பினான் றோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே.

ஆட லமாந்தானை யாககூறிற ருன்றேனறி
மாட மமாந்தானை மாடருசோ தணகாழி
நாடற் கரியசீா ஞானசம பநதன சொற
பாட லிவைவலலாாக கிலலையாம பாவமே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-சுயமபுநாதா தேவியாா-கடகநேததிரதேவி.

திருமீயசசூா - பண-காநதாரம.

திருசசிறறமபலம.

காயசசெவவிக காமாககாயநது கஙகையைப
பாயபபடாபுன சடையிறபரிதத பாமேடடி
மாயசசூரன றறுதசனமைநதன ருதைநன
மீயசசூரே தொழுதுவினையை விடடுமே.

வேடமுடைய பெருமானுறையு மீயசசூா
நாடுமபுகழாா புகலிஞான சமபநதன
பாடலாய தமிழீரைநது மொழிநதுளகி
யாடுமடியா ரகலவானுலக மடைவாரே.

திருசசிறறமபலம

சுவாமிபெயா-முயறசிநாயகா தேவியாா-சுநதரநாயகியமமை.

பாமபுரததுறை பரமனைபபணிநதுநற பதிகவினனிசைபாடி
வாமபுனறசடை முடியினாமகிழவிட மறறுமுளளனபோறறிக
காமபினிறறிகழ கருமபொடுசெநநெலின கழனியுமபணைநீஙகித
தேமபொழிறறிரு வீழிமாமிழலையின மருஙகுறசசெலகினறாா.

(இ-ள) பாமபுரததுறை பரமனைபபணிநது நறபதிக இனனிசைபாடி= திருபபாமபுரததில எழுநதருளிய பெருமானை வணஙகி நலல திருபபதிக ததை இனிய இசையோடுபாடியருளி, வாமபுனறசடைமுடியினா மகிழ வி டம மறறும உளளனபோறறி=கஙகாநதி பெருககெடுககும சடைமுடியை யுடைய சிவபெருமானா மகிழநதருளும மறறுமுளளதிருபபதிகளையுந து தி[த]து, காமபினிறறிகழகருமபொடு செநநெலினகழனியமபணை நீஙகி=மூங கிலபோல விளஙகும கருமபுகளோடும செநநெறபயிாகளநிறைநத வயலகளை யுடைய மருதநிலததைக கடநதருளி; தேமபொழிறறிருவீழி மாமிழலையின மருஙகுறசசெலகினறாா=தேனநிறைநதசோலைகளசூழநதபெருமையையுடைய திருவீழிமிழலையினபககததில பொருநதச்செலகினறவராயினாா—எ-று. ()

திருபபாமபுரம - பண - தக்காகம்.

திருசசிறறமபலம.

சீரணி திகழதிரு மாாபிலவெண ணூலா திரிபுரமெரிசெயதசெலவா, வாரணி வனமுலை மஙகையோா பஙகா மானமறி யேந்திய மைநதா, காரணிமணிதிகழ மிடறுடை யணணல கணணுதல விண்ணவோ்நதும, பாரணி திகழதரு நானமறை யாளா பாமபுர நனனகாாரே.

பாாமலிந தோஙகிப பருமதிள சூழநத பாமபுர நனனக ராளைக, காாமலிந தழகாா கழனிசூழ மாடக கழுமல மூதுபதிக கவுணி, நாாமலிந தோஙகு நானமறை ஞான சமபநதன செநதமிழ வலலாா, சீாமலிந தழகாா செலவம தோஙகிச சிவனடி நணணுவா தாமே

திருசசிறறமபலம.

சுவாமிபெயா - பாமபுரேசா.

தேவியாா - வணடமாாபூஙகுழலநாயகியமமை.

வேறு

அபபொழுதி லாணட வரசை யெதிாகொணட
மெயபபெருமை யநதணாகள வெஙகுருவாழ வேநதனா
பிறபடவந தெயதும பெருமபேறு கேட்டுவபபா
மெபபாிசி னலவந தணைநதங கெதிாகொணடாா.

(இ-ள) அபபொழுதிலாணட அரசை எதிாகொண்ட மெயபபெருமையநதணாகள=அககாலத்தில ஆணட அரசை எதிாகொணட உணமையையும பெருமையையும உடையதிருவீழிமிழலை மறையவாகள, வெஙகுருவாழ வேநதனா பிறபடவநது எயதும பெருமபேறுகேட்டு உவபபாா=சீகாழியில வாழும மறையவாதலைவராகிய ஆளுடையபிளளையாா பினனாலவநது அடையும பெருமபயனைக கேட்டு மகிழபவராய, எபபாிசினால வநதணைநதஙகு எதிாகொணடாா=எசசிறபபோடுவநது அடைநது அவவிடததில எதிாகொணடாாஎனில—எ-று. (௫௧௧)

நிறைகுடந தூபதீப நீட நிரைததேநதி
நறைமலாப பொறசுணண நறுமபொாி யுநதூவி
மறையொலி போயவா னளபபமா முரசமாாபப
விறைவாதிரு மைநதாதமை யெதிர்கொளவர வேறறாா.

(இ-ள) நிறைகுடம் தீபதூபம் நீடநிரைததேநதி=பூரணகும்பஙகளும தூபதீபஙகளும எஙகும நெருஙக வாிசைபபட ஏநதி, நறைமலாபபொற

சுண்ணம் நறும்பொரியுந் தூவி=தேன் நிறைந்தமலர்களோடு பொன்னிற முடைய சுண்ணத்தையும் நல்ல நெற்பொரியையும் எங்கும் தூவி, மறையொலிபோய்வான் அளப்ப மாமுரசமார்ப்ப=வேதவொலிபோய் விண்ணுலகத்தை அளக்கவும் பெரிய முரசங்கள் ஒலிக்கவும், இறைவர் திருமைந்தர் தமை எதிர்கொள்ள வர வேறார்=சிவபிரானது திருமகனாராகிய ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு அவரதுவரவை அவ்வாறு ஏற்றுக்கொண்டார்—எ-று.

வந்து திருவீழி மிழலை மறைவல்ல
வந்தணர்கள் போற்றிசைப்பத் தாழ்ந்த மணி முத்தின்
சந்த மணிச் சிவிகை நின் றிழிந்து தாழ்ந் தருளி
யுய்ந்த மறை யோர்தம் முட னணைந்தங் குள் புகுவார்

(இ-ள்) வந்து திருவீழிமிழலை மறைவல்ல அந்தணர்கள் போற்றிசைப்ப=எதிர்கொண்டுவந்து திருவீழிமிழலையில் வசிக்கும் வேதங்களில்வல்ல மறையவர்கள் துதிக்க, தாழ்ந்த அணிமுத்தின் சந்தமணிச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தருளி=ஆளுடையபிள்ளையாரும் முத்தாலாகிய அழகிய திருச்சிவிகையினின்றும் இறங்கிப்பணிந்தருளி, உய்ந்த மறையோர் தம்முடன் அணைந்து அங்கு உள்புகுவார்="பிள்ளையார் வரவால்" பெரும்பேறடைந்த அவ்வந்தணரோடு அடைந்து அத்திருப்பதியுட் செல்வாராயினார்—எ-று. (௫௪௪)

அப்போ தணையார் விரிகோ வணவாடை
யொப்போ தரும்பதிகத் தோங்கு மிசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயின் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார்.

(இ-ள்) கவுணியனார் அப்போது அரையார் விரிகோவண ஆடை=ஆளுடையபிள்ளையார் அக்காலையில் "அரையார்விரிகோவணவாடை" என்னும் முதலையுடைய, ஒப்போதரும் பதிகத்து ஓங்கும் இசைபாடி=ஒப்பிகந்த திருப்பதிகத்தில் மிக்க இசையைப்பாடி, கைப்போதுசென்னியின் மேற்கொண்டு=கரகமலங்களை உச்சியின்மேற் குவித்துக்கொண்டு, மெய்ப்போதப்போதமர்ந்தார்தங்கோயில் மேவினார்=உண்மை ஞானத்தையுடைய அடியாரது இதயதாமரையில் எழுந்தருளியவீழியழகரது திருக்கோயிலை யடைந்தருளினார்—எ-று. (௫௪௫)

திருவீழிமிழலை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார் விரி கோவண வாடை
நரையார் விடை யூர்தி நயந்தான்
விரையார் பொழில் வீழி மிழலை
யுரையா லுணர்வா ருயர்வாரே.

களிகாழியுண ஞானசம பநதன
குளிராாசடை யானடி கூற
மிளிராாபொழில வீழிம மிழலை
கிளாபாடலவல லாககிலலை கேடே.

திருசசிறறமபலம.

நாவின றனிமனனா தாமுமுட னணண
மேவிய விணணிழிநத கோயில வலஙகொளவாா
பூவியலு முநதியான போறறப புவிககிழிநத
தேவியலு மெயகணடு சிநதை வியப பெயதினாா

(இ-ள) நாவினதனிமனனா தாமும உடன நணண=ஒபபறற ஆணடவரசும தமமோடு எழுநதருள, மேவிய விணணிழிநதகோயில வலஙகொளவாா=அஙகுளள விணணுலகினினறும இழிநத திருககோயிலைப பிரதடசணம செயதருளிய பிளளையாா, பூவியலும உநதியானபோறறப புவிககிழிநத=தாமரைமலாவிளஙகும உநதியையுடைய திருமால வணஙக நில உலகில இறஙகிய, தேவியலு மெயகணடு சிநதைவியபபெயதினாா=தெயவததனமை பொருநதிய (அநதிருவிமானததின) திரு உருவததைககணடு தமது இதையததில அதிசயமடைநதருளினாா—எ-று (௫௪௫)

வலஙகொணடு புககெதிரே வான நதியின
சலஙகொணட வேணித தனிமுதலைத தாழநது
நிலஙகொணட மேனியராய நீடுபெருங காதல
புலஙகொணட சிநதையினற பொஙகியிசை மீபபொழிநதாா.

(இ-ள) வலஙகொணடு புககு எதிரேவானநதியின சலஙகொணட வேணிததனிமுதலைத தாழநது=பிரதடசணஞசெயது திருககோயிலுடபுகுநது திருமுனனினறு கஙகைநீா நிறைநத சடாமகுடததையுடைய ஒபபறற பெருமானைப பணிநது, நிலஙகொணடமேனியராய நீடுபெருஙகாதல புலஙகொணட சிநதையினறபொஙகி இசைமீபபொழிநதாா=பூமியிறறோயநத திருமேனியராயத தலைககொணட பெருவிருபபு இடமாககொணட திருவுளளததோடு இசைமேமபடப பாடியருளினாா—எ-று

பொஙகவெனனும செயவெனெசசம பொஙகி எனததிரிநதுநினறது. ()

போறறிச சடையாா புனலுடையா னென்றெடுத்துச
சாறறிய பதிகத தமிழமாலை சநதவிசை
யாறற மிகபபாடி யாளநத வெள்ளததி
னீறறழகா சேவடிககிழ நினறலைநது நீடினாா.

(இ-ள்.) போற்றிச்சடையார் புனலுடையான் என்றெடுத்து=துதித்துச் சடையார் புனலுடையானென முதலெடுத்து; பதிகத்தமிழ்மாலை சாற்றி= தமிழாகிய திருப்பதிகமாலையைப் பாடியருளி, சந்த இசை ஆற்றமிகப்பாடி=அப்பதிகத்திற்கமைந்தபண்ணை இசைபெருகமிகவும்பாடி, நீற்றழகர் சேவடிக்கீழ் நின்று ஆனந்தவெள்ளத்தில் அலைந்து நீடினார்=திருநீற்றின்கோலத்தையுடைய வீழி அழகரது திருவடியின் கீழ்நிலைபெற்று ஆனந்தவெள்ளத்தில் அலைந்துமேம்பட்டார்—எ-று. (௫௪௫)

திருவீழிமிழலை - பண்-நட்டபாடை

திருச்சிற்றம்பலம்.

சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான
மடமானவிழி யுமைமாதிட முடையானெனை யுடையான
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே

வீழிம்மிழ லைமேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டா ரவரெல்லா
ருழின்வலி வினைபோயிட வுயர்வானடை வாரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-வீழியழகர் தேவியார் - சுந்தரகுசாம்பிகை.

நீடியபே ரன்புருகி யுள்ளலைப்ப நேர்நின்று
பாடி யெதிராடிப் பரவிப் பணிந்தெழுந்தே
யாடிய சேவடிக ளாரவுற்ற வுட்கொண்டு
மாடுயர் கோயிற் புறத்தரிது வந்தணைந்தார்

(இ-ள்) நீடியபேரன்புருகியுள்ளலைப்ப=மேம்பட்டபேரன்பானது தமது உள்ளத்தை உருகச்செய்து அலையச்செய்ய, நேர்நின்றுபாடி யெதிராடிப் பரவிப்பணிந்தெழுந்து=திருமுன் நின்றுபாடி எதிரே ஆனந்தக்கூத்தாடித் துதித்து வணங்கி எழுந்து, ஆடிய சேவடிகளாரவுற்ற உட்கொண்டு=கனகசபையின்கண் ஆடியருளுஞ்சிவந்ததிருவடிகளை அன்புகூரத்திருவுள்ளத்திலபதித்து, உயர்கோயில்மாடுபுறத்து அரிதுவந்தணைந்தார்=உயர்ந்ததிருக்கோயிலின் பக்கத்துள்ள திருவாயிலின்புறம்பே அரிதாகவந்தணைந்தருளினார்—எ-று.

வந்தணைந்து வாழ்ந்து மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ் செய்தவருஞ் சேர்ந்தருள்ச்
சந்தமணிக் கோபுரத்துச் சார்ந்துவட பாற்சண்பை
யந்தணர்க்கு ளாமணியா ரங்கோர் மடத்தமர்ந்தார்.

(இ-ள்.) வந்தணைந்து வாழ்ந்து=திருக்கோயிலின் புறம்புவந்தடைந் தருளி மகிழ்கூர்ந்து; மதிற்புறத்தோர் மாமடத்துச்செந்தமிழ்ச்சொல் வேந்த ருஞ்செய்தவருஞ் சேர்ந்தருள=திருமதிலின்பக்கத்திலுள்ள ஒரு பெரியதிரு மடத்தில் திருநாவுக்கரசு நாயனாரும் அவருடன்சேர்ந்த திருக்கூட்டங்களும் அடைந்தருள, சண்பை அந்தணர் சூளாமணியார் வடபாற் சந்தமணிக்கோ புரத்துட் சார்ந்து ஆங்கோர் மடத்தமர்ந்தார்=சீகாழியினகணுள்ள மறையவ ர் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் வடக்கினகணுள்ள அழகியமணியழுத்தமா ன கோபுரத்துட் புகுந்து அங்குள்ள ஓர்திருமடத்தில் எழுந்தருளி இருந் தார்—எ-று. (௫௪௭)

அங்க ணமர்வா ரரனா ரடியிணைக்கீழ்த்
தங்கிய காதலின்ற காலங்க டப்பாமே
பொங்கு புகழ்வாகீ சருங்கூடப் போற்றிசைத்தே
யெங்கு மிடர்தீர்ப்பா ரின்புற் றமர்கின்றார்.

(இ-ள்) அங்கணமர்வாரரனா ரடியிணைக்கீழ்=அவ்விடத்து எழுந்தருளி இருக்கும் ஆளுடைய பிள்ளையார்வீழி யழகரது திருவடி இணைக்கீழ், தங்கி ய காதலின்ற காலங்கள் தப்பாமே=பொருந்திய பெருவிருப்போடு மூன்று காலங்களும் வழுவாமல், பொங்குபுகழ் வாகீசரும் கூடப்போற்றிசைத்து= மிக்க புகழையுடைய வாகீசமுனிவரும் உடன்வரப்பதிகம்பாடி, எங்குமிட ர் தீர்ப்பார் இன்புற்றமர்கின்றார்=எவ்விடத்தும் உள்ள துன்பத்தை நீக்கியரு ள்பவராய், மகிழ்கூர்ந்து இருந்தருளுவாராயினார்—எ-று (௫௪௮)

ஓங்கு புனற்பேணு பெருந்துறையு முள்ளிட்ட
பாங்கார் திலதைப் பதிமுற்று மும்பணிந்து
வீங்கொலி நீர்வீழி மிழலையினின் மீண்டுமணைந்
தாங்கினிது கும்பிட் டமர்ந்தொழுகு மந்நாளில்.

(இ-ள்.) ஓங்கு புனற்பேணுபெருந்துறையும்=மிக்கபுனல்சூழ்ந்த திருப் பேணு பெருந்துறையும், உள்ளிட்ட பாங்கார்திலதைப் பதிமுற்றும்பணிந் து=அதனுள் அடங்கிய திலதைப்பதியின் திருமுற்றத்தையும் வணங்கி, வீங் கொலிநீர்வீழிமிழலையினில்மீண்டும் அணைந்து=மிக்க ஒலியையுடைய நீர் சூ ழ்ந்த திருவீழிமிழலையில் மீளவும் அடைந்து, ஆங்கு இனிது கும்பிட்டமர்ந் தொழுகும் அந்நாளில்—அத்திருப்பதியில் சிவபிரானை மகிழ்கூர்ந்து வணங்கி விரும்பி வழிபட்டு ஒழுகும் அக்காலையில்—எ-று. (௫௪௯)

வேறு.

சேணுயர்மாடப் புகலியுள்ளார் திருஞானசம்பந்தப் பிள்ளையா ரைக், காணுமவிருப்பிற் பெருகுமாசை கைமிகுகாதல் கரையிகப்பப், பூணுமனத்தொடு தோணிமேவும் பொருவிடையார்மலர்ப்பாதம்போ ற்றி, வேணுபுரத்தை யகன்றுபோந்து வீழிமிழலையுள் வந்தணைந்தார்.

(இ-ள்.) சேணுயர்மாடப்புகலியுள்ளார்=விண்ணுலகளவு முயர்ந்த மாடங்களையுடைய நிறைந்த சீகாழியிலுள்ள அந்தணர்கள்; திருஞானசம்பந்தப்பிள்ளையாரைக் காணும் விருப்பில் பெருகுமாசை கைமிகு காதல்கரை இகப்ப=திருஞானசம்பந்தப்பிள்ளையாரைக்காணும் அன்பாலபெருகும் ஆசையாகிய பெருவிருப்பு கரைகடந்துவளர, பூணுமன்பதொடு தோணிமேவும் பொருவிடையார் மலர்ப்பாதம் போற்றி=அவ்விருப்புமேற்கொண்ட மனதோடு திருத்தோணியிலெழுந்தருளிய போர்செய்யும் இடபவாகனத்தை யுடையாருடைய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி, வேணுபுரத்தை யகன்று போந்துவீழிமிழலையுள் வந்து அணைந்தார்=சீகாழியின் நின்று நீங்கிவந்து திருவீழிமிழலையுள்வந்து அடைந்தார்கள்—எ-று.

கைமிகல் ஒரு சொன்னீர்மைத்து. (௫௫௰)

ஊழிமுடிவி லுயர்ந்தவெள்ளந் தோங்கியகாழி யுயர்பதியில், வாழிமறையோர் தாங்களெல்லாம் வந்துமருங்கணைந் தார்களென்ன, வீழிமிழலையுள் வேதியர்கள் கேட்டுமெய்ஞ்ஞானமுண்டாரைமுன்னு, வேழிசை சூழ்மறையோரையெய்தி யெதிர்கொண் முறைமையிற் கொண்டுபுக்கார்.

(இ-ள்) ஊழிமுடிவி லுயர்ந்த வெள்ளத்தோங்கிய காழியுயர்பதியில்=உகமுடிவில் பொங்கி யெழுந்த சலப்பிரளயத்தில் அழியாது நிலைபெற்ற சீகாழி என்னும் உயர்ந்த திருப்பதியில், வாழிமறையவர்கள் தாங்கள் எல்லாமமெய்ஞ்ஞானமுண்டாரை முன்னுறுவந்து மருங்கு அணைந்தார்கள் என்ன=வாழ்வையுடைய வேதியர்களெல்லாம் மெய்ஞ்ஞானப்பாலை யுண்டருளிய பிள்ளையாரைக் கருதிவந்து திருவீழிமிழலையின் பக்கத்தடைந்தார்கள் என்று, வீழிமிழலையுள் வேதியர்கள்கேட்டு=திருவீழிமிழலையில்வாழும் அந்தணர்கள் கேள்விப்பட்டு, ஏழிசைசூழ் மறையோரை எய்தி எதிர்கொள் முறைமையிற் கொண்டுபுக்கார்=குரல்முதலிய ஏழிசைகளும் நிறைந்த அவ்வந்தணரை யடைந்து எதிர்கொள்ளுமுறைமையால் எதிர்கொண்டு திருப்பதியுட்கொண்டு சென்றார்கள்—எ-று.

ஊழி-ஆயிரஞ்சதுர்யுகங்கொண்ட பிரமனது ஓர்நாள். (௫௫௧)

சண்பைத்திருமறை யோர்களெல்லாந் தம்பிரானாரைப் பணிந்துபோந்து, நண்பிற்பெருகிய காதல்கூர்ந்து ஞானசம்பந்தர் மடத்தினெய்திப், பண்பிற்பெருகுங் கழுமலத்தார் பிள்ளையார்பாதம் பணிந்துபூண்டே, யெண்பெற்றதோணி புரத்திலெம்மோ டெழுந்தருளப் பெற வேண்டுமென்றார்.

(இ-ள்.) சண்பைத்திரு மறையோர்களெல்லாம்=சீகாழியில் வாழும் அந்தணர்கள் எல்லோரும், தம்பிரானாரைப் பணிந்துபோந்து=திருவீழிமிழலையின் எழுந்தருளிய வீழியழகரைவணங்கிச்சென்று; நண்பிற்பெருகிய காதல்

கூர்ந்து ஞானசம்பந்தர் மடத்தினை யதி=நண்பின் மிக்க விருப்பமிகுந்து திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமடத்தை யடைந்து ; பண்பிற்பெருகும் கழுமலத்தார்=குணத்தில் மேம்பட்ட சீகாழியிலுள்ள அந்தணர்கள், பிள்ளையார் பாதம்பணிந்துபூண்டு=ஆளுடையபிள்ளையார் திருவடிகளை வணங்கி அவ்வழியப்பாட்டில் ஒருப்பட்டுநின்று, எண்பெற்றதோணிபுரத்தில் எம்மோடு எழுந்தருளப்பெறவேண்டுமென்றார்=மேன்மைபொருந்திய சீகாழியில் எம்மோடு பிள்ளையார் எழுந்தருளும் பேற்றை யாம் பெறவேண்டுமென்று பிரார்த்தித்தனர்—எ-று. (௫௫௨)

என்றவர் விண்ணப்பஞ் செய்தபோதி லீறில்சிவஞானப் பிள்ளை
யாரு, நன்றிது சாலவுந் தோணிமேவு நாதர்கழலிணை நாமிறைஞ்ச, வி
ன்றுகழித்து மிழலைமேவு மிறைவரருள்பெற்றுப் போவதென்றே, ய
ன்றுபுகலி யருமறையோர்க் கருள்செய்தவர்க்கு முகமளித்தார்.

(இ-ள்.) என்று அவர் விண்ணப்பஞ்செய்தபோதில்=என்று அம்மறையவர்கள் விண்ணப்பஞ்செய்தகாலத்தில், ஈறில் சிவஞானப்பிள்ளையாரும்=முடிவில்லாத சிவஞானத்தையுடைய ஆளுடைய பிள்ளையாரும், இது சாலநன்று=இது மிகவும் நன்காம், தோணிமேவும் நாதர்கழலிணை நாம் இறைஞ்ச=திருத்தோணியி லெழுந்தருளிய பெருமானார் திருவடிகளை நாம் வணங்க, மிழலைமேவும் இறைவர் அருள்பெற்று இன்றுகழித்துப்போவதென்று=திருவீழிமிழலையில் எழுந்தருளிய பெருமானார் திருவருள்பெற்று நாளைச்செல்வதென்று, அன்றுபுகலி யருமறையோர்க்கு அருள்செய்து அவர்க்கு முகமளித்தார்=அற்றைநாளில் சீகாழியிலிருந்துவந்த அரிய அந்தணர்களுக்கு அருள்செய்து அவர்களுக்கு முகமன்கூறியருளினார்—எ-று. (௫௫௩)

மேற்பட்டவந்தணர் சண்பைமேவும் வேதியர்க்காய விருந்தளிப
பப், பாற்பட்டசிந்தைய ராய்மகிழ்ந்து பரமபொருளானார் தமைப்பர
வுஞ், சீர்ப்பட்டவெல்லை யினிதுசெல்லத் திருத்தோணிமேவிய செல
வர்தாமே, கார்ப்பட்டவண்கைக் கவுணியர்க்குக் கனவிடை முன்னின்
றருள்செய்கின்றார்.

(இ-ள்.) மேற்பட்ட அந்தணர்=மேன்மைபொருந்திய திருவீழிமிழலையிலிருக்கின்ற மறையவர்கள், சண்பைமேவு வேதியர்க்கு ஆயவிருந்து அளிப்ப=அந்தச்சீகாழி மறையவர்கட்கு தக்கவிருந்துசெய்ய, பாற்பட்டசிந்தையராய் மகிழ்ந்து=பிள்ளையார் அருள்வழிப்பட்ட சிந்தையை யுடையராய் அவ்வந்தணர் மகிழ்கூர்ந்து, பரமபொருளானார் தமைப்பரவுஞ் சீர்ப்பட்டவெல்லை யினிதுசெல்ல=பரமபொருளாகிய வீழிநாதனைப்பிள்ளையார் துதிக்கும் சிறந்தகால அளவைக் கருதி அங்கு தாம் இருக்குமிடத்திற்கு இனிதாகச்செல்ல, திருத்தோணிமேவிய செல்வர்தாமே=திருத்தோணியிலெழுந்தருளிய பெருமானே ; கார்ப்பட்ட வண்கைக்கவுணியர்க்குக்கனவிடைமுன்னின்று அருள

செய்கின்றார்=மேகத்தையொத்த வண்மைபொருந்திய திருக்கரத்தையுடைய ஆளுடையபிள்ளையாருக்குக் கனவின்கண் முன்னின்று அருள்செய்கின்றாராயினார்—எ-று. (௫௫௪)

தோணியினாமங் கிருந்தவண்ணந் தூமறைவீழி மிழலைதன்னுட், சேணுயர்விண்ணின் றிழிந்தவிந்தச் சீர்கொள்விமானத்துக் காட்டுகின்றோம், பேணும்படியா லறிதியென்று பெயர்ந்தருள்செய்யப் பெருந்தவங்கள், வேணுபுரத்தவர் செய்யவந்தார் விரவும்புளகத் தொடுமுணர்ந்தார்.

(இ-ள்) தோணியில்நாம் அங்கிருந்தவண்ணம்=திருத்தோணியில் நாம் அங்கெழுந்தருளியிருந்தவண்ணத்தை, தூமறைவீழிமிழலைதன்னுள்=பரிசுத்தமாகிய வேதங்கள்வாழும் திருவீழி மிழலையின்கண், சேணுயர் விண்ணினிழிந்த இந்தச்சீர்கொள் விமானத்துக்காட்டுகின்றோம்=மிகவும் உயர்ந்த விண்ணினின்றும் இழிந்த இந்த சிறப்பமைந்த விமானத்துள் தரிசனங்கொடுத்தருளுகின்றோம், பெயர்ந்து பேணும்படியால் அறிதியென்று அருள்செய்ய=அங்குச்சென்று வழிபடும் முறைமையால் அறிவாயாகவென்று அருளிச்செய்ய, பெருந்தவங்கள் வேணுபுரத்தவர்செய்யவந்தார் விரவும் புளகத்தொடு முணர்ந்தார்=பெரிய தவங்களைச் சீகாழியிலுள்ள மறையவர்கள் செய்ய அவதரித்த பிள்ளையார் திருமேனியில் எங்கும் பொடித்த ரோமாஞ்சிதத்தோடு அக்கனவுணர்வை நனவுணர்வில் அறிந்தருளினார்—எ-று. (௫௫௫)

அறிவுற்றசிந்தைய ராயெழுந்தே யதிசயித்துச்சிமே லங்கைகூப்பி, வெறியுற்றகொன்றையி னார்மகிழ்ந்த விண்ணிழிகோயிலிற் சென்றுபுக்கு, மறியுற்றகையரைத் தோணிமேன்முன் வணங்கும்படியங்குக் கண்டுவாழ்ந்து, குறியிற்பெருகுந் திருப்பதிகங் குலவியகொள்கையிற் பாடுகின்றார்.

(இ-ள்.) அறிவுற்றசிந்தையராய் எழுந்து=சாக்கிராவத்தையி லுணர்ந்தருளிய திருவுள்ளத்தை யுடையவராய்த் துயிலுணர்ந்து, அதிசயித்துச்சிமேலங் கைகூப்பி=அதிசயமடைந்து உச்சியின்மேல் அழகிய திருக்கரங்களைக்குவித்து, வெறியுற்றகொன்றையினார் மகிழ்ந்த விண்ணிழிகோயிலிற் சென்றுபுக்கு=வாசனைபொருந்திய கொன்றைமாலையை யணிந்த வீழியழகர் மகிழ்ந்தருளிய விண்ணிழிந்த கோயிலின்கண் சென்று புகுந்து, மறியுற்றகையரைத் தோணிமேல் முன்வணங்கும்படி யங்குக்கண்டு வாழ்ந்து = மான்கன்றை ஏந்திய திருக்கரத்தையுடைய பெருமானாரைத் திருத்தோணிமேல் முன்வணங்குமாறுபோல அத்திருக்கோயிலிற்கண்டு வணங்கிவாழ்ந்து, குறியிற்பெருகும் திருப்பதிகம் குலவிய கொள்கையிற் பாடுகின்றார் = இங்குத்தரிசித்த குறிப்பால் சுவைமிக்க திருப்பதிகத்தை இசையோடுபொருந்திய கொள்கையில் பாடுகின்றாராயினார்—எ-று. (௫௫௬)

மைமருபூங்குழ லென்றெடுத்து மாறில்பெருந்திருத் தோணி தனமேற, கொம்மைமுலையினாள் கூடநீடு கோலங்குலவு மிழலைதனி னிற, செம்மைதருவிண் ணிழிந்தகோயிற் றிகழ்ந்தபடியிது வென் கொலென்று, மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் பாடிமகிழ்ந்தனா வேதவாயர்.

(இ-ள்.) மைம்மருபூங்குழல் என்று எடுத்து = "மைம்மருபூங்குழல் என்று முதல் எடுத்து, மாறில்பெருந்திருத்தோணி தனமேற கொம்மை முலையினாள் கூட நீடுகோலம்=அழிவு இல்லாத திருத்தோணியின்கண் திரண்டத்த னங்களையுடைய பெரிய நாயகியாரோடுகூட வெழுந்தருளிய திருக்கோலம், குலவுமிழலை தனனில் செம்மை தருவிண்ணிழிந்த கோயிற்றிகழ்ந்தபடி யிது என்கொல் என்று=விளங்குந் திருவீழிமிழலையில் சிறப்புமிக்க விண்ணிழிந்த திருக்கோயிலின்கண் காட்டியபடியாது காரணம் என்று, மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம் வேதவாயர்பாடி மகிழ்ந்தனர்=மெய்ப்பொருள் விளங்கும் திருப்பதிகத்தை வேதமலர்ந்த திருவாயையுடைய ஆளுடையபிள்ளையார் பாடியருளி மகிழ் கூர்ந்தார்—எ-று. (௫௫௩)

ஸ்ரீபுகலியுந்-திருவீழிமிழலையும்-வினாவுரை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

மைம்மருபூங்குழற் கற்றைதுற்றவாணுதன்மானவிழிமங்கையோ டும், பொய்ம்மொழியாமறை யோர்களேத்தப் புகலிநிலாவிய புண்ணி யனே, யெம்மிறையேயிமை யாதமுக்க ணீசவனேசவி தென்கொல் சொல்லாய், மெய்ம்மொழிநான்மறை யோர்மிழலை விண்ணிழிகோ யில் விரும்பியதே.

விண்ணிழிகோயில் விரும்பிமேவும் வித்தகமென்கொலி தென்று சொல்லிப், புண்ணியனைப்புக லிந்நிலாவு பூங்கொடியோடிருந் தானைப் போற்றி, நண்ணியகீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறைஞானசம் பந்தன்சொன்ன, பண்ணியல்பாடல்வல் லார்களிந்தப் பாரொடுவிண் பரி பாலகரே.

திருச்சிற்றம்பலம்.

செஞ்சொன்மலர்ந்த திருப்பதிகம் பாடித்திருக்கடைக் காப்புச் சாத்தி, யஞ்சலிகூப்பி விழுந்தெழுவா ரானந்தவெள்ள மலைப்போர்ந் து, மஞ்சிவர்சோலைப் புகலிமேவு மாமறையோர்தமை நோக்கி வாய் மை, நெஞ்சுநிறைந்த குறிப்பிலவந்த நீர்மைத்திறத்தைய ருள்செய் கின்றார்.

(இ-ள்) செஞ்சொன் மலர்ந்த திருப்பதிகம்பாடி=செம்பமான சொற்கள் விளங்கித் தோன்றுகின்ற திருப்பதிகத்தைப்பாடி, திருக்கடைக்காப்புச் சாத்தி=திருக்கடைக்காப்பையுஞ்சாத்தியருளி, அஞ்சலிகூப்பிவிழுந்தெழுவார்=அஞ்சலியாகக்கையைக்குவித்துப் பணிந்து எழும் ஆளுடையபிள்ளையார், ஆனந்தவெள்ளம் அலையப்போந்து=பேரின்பவெள்ளம் எழுந்து அலைவீசச் சந்நிதியினின்றுஞ் சென்றருளி, மஞ்சிவர் சோலைப்புகலிமேவும் மாமறையோர் தமைநோக்கி=மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழியில் வசிக்கும் பெருமையையுடைய வேதியர்களைப் பார்த்தருளி, வாய்மை நெஞ்சினிறைந்தகுறிப்பில்வந்தசீர்மைத்திறத்தையருள்செய்கின்றார்= உண்மைநிறைந்த திருவுள்ளக்குறிப்பில் புலப்பட்ட அருளின்வரலாற்றை அருள் செய்வாராயினார்.—எ-று. (௫௫௮)

பிரமபுரத்தி லமர்ந்தமுக்கட் பெரியபிரானபெருமாட்டி யோடும், விரவியதானங்க ளெங்குஞ்சென்று விரும்பியகோலம் பணிந்துபோற்றி, வருவதுமேற்கொண்ட காதல்கண்டங் கமர்ந்தவண்கையிங் களித்ததென்று, தெரியவுரைத்தருள் செய்துநீங்கள் சிரபுரமாநகர் செல்லுமென்றார்.

(இ-ள்.) பிரமபுரத்திலமர்ந்த முக்கட்பெரியபிரான் பெருமாட்டியோடும்=சீகாழியிலெழுந்தருளிய மூன்றுகண்களையுடைய பெரிய பெருமானாகிய, தோணியப்பர் பெரிய நாயகியாரோடும், விரவிய தானங்கள் எங்குஞ்சென்று விரும்பியகோலம் பணிந்துபோற்றி=எழுந்தருளிய பல திருப்பதிகளெவ்விடத்துஞ்சென்று அங்கங்கு அவர்விரும்பிய திருக்கோலங்களையும் வணங்கித்துதித்து, வருவதுமேற்கொண்ட காதல்கண்டு = வருதலைமேற்கொண்ட எனது விருப்பத்தைப் பார்த்தருளி, அங்கு அமர்ந்தவண்கை இங்கு அளித்ததென்று=அத்திருத்தோணியிலெழுந்தருளிய திருக்கோலத்தை இங்குக்காட்டியருளியதென்று, தெரியவுரைத்தருள்செய்து நீங்கள் சிரபுரமாநகர் செல்லுமென்றார்=அவ்வந்தணர்க்கு அறியும்படிக்கூறி நீங்கள் சீகாழி என்னும் பெரியநகரை அடையுமென்று கூறியருளினார்.—எ-று. (௫௫௯)

என்றுகவுணியப் பிள்ளையார்தா மியம்பப்பணிந் தருளேற்றுக்கொண்டே, யொன்றியகாதலி னுள்ளமங்க ணொழியவொருவா றகன்றுபோந்து, மன்றுண்டம்புரிந் தார்மகிழ்ந்த தானம்பலவும் வணங்கிச்சென்று, நின்றபுகழ்த்தோணி நீடுவாரைப்பணியு நியதியராயுறைந்தார்.

(இ-ள்.) என்று கவுணியப் பிள்ளையார் தாம் இயம்ப=என்று ஆளுடையபிள்ளையார் திருவாய் மலர்ந்தருள; பணிந்து அருள் ஏற்றுக்கொண்டு = சீகாழிமறையவர் வணங்கி அத்திருவருளை மேற்கொண்டு; ஒன்றியகாதலின் உள்ளம் அங்கண் ஒழிய ஒருவாறகன்றுபோந்து=பிள்ளையாரினின்று நீங்காத

கார்த்திகையுடைய தமது உள்ளம் அப்பிள்ளையாரிடத்துத் தங்கத்தாம் ஒருவாறு பிரிந்து சென்று, மன்றுள்நடம்புரிவார் மகிழ்ந்ததானம் பலவும் வணங்கிச்சென்று=கனகசபையில் ஆனந்த நடம்புரிந்தருளும் பெருமானார் மகிழ்ந்தருளிய திருப்பதிகள் பலவற்றையும் வணங்கிச்சீகாழியை யடைந்து; நின்றபுகழ்த் தோணிவீற்றிருந்தாரைப்பணியும் நியதியராய் உறைந்தார்=கீர்த்தி நிலைபெற்ற தோணியப்பரை வணங்கும் நியமம் உடையவர்களாய் அம்மறையவர்கள் வசித்தார்கள்—எ-று (௫௯௰)

சிரபுரத்தந்தணர் சென்றபின்னைத் திருவீழிமேவிய செல்வர்பாதம், பரவுதல்செய்து பணிந்துநாளும் பணிபினவழாத்திருத் தொண்டர்சூழ, வுரவுத்தமிழ்த்தொடைமாலைசாத்தி யோங்கியநாவுக்கரசரோடும், விரவிப்பெருகிய நண்புகூர மேவியினிதங் குறையுநாளில்.

(இ-ள்) சிரபுரத்து அந்தணர் சென்றபின்னை=சீகாழிமறையவர்போனபின்பு, திருவீழிமேவிய செல்வர் பாதம்பரவுதல் செய்து நாளும்பணிந்து=திருவீழியில் எழுந்தருளிய பெருமானார் திருவடிகளை வாழ்த்தி நாடோறும் வழுவாது வணங்கி, பணிபினவழாத்திருத்தொண்டர்சூழ உரவுத் தமிழ்த் தொடைமாலை சாத்தி=பத்திநெறியில்நின்று வழுவாத அடியார் திருக்கூட்டம் சூழ்ந்துவர உணர்வுமிக்க திருப்பதிகமாலையைச்சாத்தி, ஓங்கிய நாவுக்கரசரோடும்=மேன்மை மிக்க திருநாவுக்கரசரோடும், விரவிப்பெருகிய நண்புகூரமேவி யினிதங்குறையுநாளில் = கலந்துபெருகிய நண்புமிகும்படி பொருந்தி இனிதாக அத்திருப்பதியில் எழுந்தருளி இருக்கும் நாளில்—எ-று.

வேறு

மண்ணினமிசை வான்பொய்த்து நதிகட்பப் மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவுமாறி, விண்ணவர்கட்குஞ் சிறப்பில்வரும் பூசையாற்று மிக்கபெரும் பசியுலகில் விரவக்கண்டு, பண்ணமரு மொழியுமையாண் முலையின்ஞானப் பாலறா வாயருட னரசும்பார்மேற், கண்ணுதலான் றிருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலைவருமோவென்று கருத்திற்கொண்டார்

(இ-ள்.) மண்ணினமிசைவான் பொய்த்து நதிகள் தப்பி=நிலவுலகின்கண் மழைபெய்யாது வறந்து காவிரி முதலிய நதிகள் பெருகுங்காலத்தில் பெருகாது தவறி, மன்னுயிர்கள் கண்சாம்பி=நிலைபெற்ற உயிர்களபசியால் கண்சோர்ந்து, உணவுமாறி=உண்ணும் உணவு ஒழிந்து, விண்ணவர்கட்குச் சிறப்பில் வரும்பூசையாற்று மிக்கபெரும்பசியுலகில் விரவக்கண்டு=தேவர்களுக்குஞ் சிறப்பாலாய திருவிழா முதலிய பூசைகள் செய்யாமல் அதிகரித்த பெரும்பசியானது உலகில் எங்கும் பரவப்பார்த்தருளி; பண்ணமருமொழியுமையாள் முலையில் ஞானப்பாலறாவாயருட னரசும் = இசைபொருந்திய

சொல்லையுடைய பெரியநாயகியாரது திருமுலையிற்சுரந்த திருஞானப்பால் நீங்காத ஆளுடைய பிள்ளையாருடன் ஆண்ட அரசும்; பார்மேல் கண்ணுதலான திருநீற்றுச்சார்பினோர்க்கும் கவலைவருமோவென்று கருத்திற்கொண்டார் -- நிலவுலகின்மேல் நெற்றிக்கண்ணையுடைய சிவபிரானது திருநீற்றின் நெறிநிற்கும் அடியார்களும் இப்பஞ்சத்தால் துன்பம் வருமோவென்று திருவுளத்திற் கருதினார்கள்--எ-று.

விண்ணவர்க்குஞ் சிறப்பில் வரும் பூசை நடவாமை "சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" என்னுந் தேவர்குறளானுமுணர்க. (௫௬௨)

வானாகி நிலனாகி யனலுமாகி மாருதமா யிருசுடரா யநீருமாகி,
யூனாகி யுயிராகி யுணர்வுமாகி யுலகங்களனைத்துமா யுலகுக்கப்பா,
லானாத வடிவாகி நின்றார்செய்ய வடிபரவி யன்றிரவு துயிலும்போது,
கானாடுகங்காளர் மிழலைமூதூர் காதலித்தார் கனவிலணைந்தருளிச் செய்வார்.

(இ-ள்.) வானாகி நிலனாகி அனலுமாகி = ஆகாயமாகியும் மண்ணாகியும் நெருப்பாகியும், மாருதமாயிருசுடராய நீருமாகி=வாயுவாயும் சந்திர சூரியராயும் நீராயும், ஊனாகி உயிராகி உணர்வுமாகி=உடலாகியும் உயிராகியும் உணர்வாகியும், உலகங்களனைத்துமாய = (இவ்வாறு நிற்கு முறைமையில் தத்துவமும் தாத்துவிகமும் ஆகிய) உலகனைத்தும் வியாபித்துக் கலந்துமேல், உலகுக்கப்பால் ஆனாத வடிவாகி நின்றார்=தத்துவ தாத்துவிதங்களான உலகுக்கு அப்பாற்பட்ட வியாபகசிதரூபமாய் நின்ற சிவபெருமானாரது, செய்ய அடிபரவி அன்றிரவு துயிலும்போது=சிவந்த திருவடிகளை வணங்கி அன்றிராத் துயிலுறுங்காலத்தில், கானாடுகங்காளர் மிழலைமூதூர் காதலித்தார் கனவிலணைந்தருளிச்செய்வார்=மாமசானத்தில் நிருத்தஞ்செய்தருளும் கங்காளத்தைத் தரித்த பழைய திருவீழிமிழலையை விரும்பிய பெருமானார் அவர்களது சொப்பனத்தில் எழுந்தருளி அருளிச்செய்வாராயினார்--எ-று.

நிலன் நீர் நெருப்பு வாயு ஆகாயம் சந்திரன் சூரியன் உயிர் எட்டினுங் கலந்து அவ்வப்பெயரான எட்டுமூர்த்தியாய் நிற்குமியல்பு கூறுவார், உயிர்க்கிடனாய உடம்பும் அதனோடுடனாய உணர்வும் இயைபுபற்றி உடன்கூறினார். அட்டமூர்த்தமாய் நிற்கும் வடிவுகள் ஒன்றினொன்று வியாப்பியமாயும் வியாபகமாயும் நிற்கும் அதனால் அவைகளின்மிக்க வியாபக உண்மைதோன்ற அவற்றிற்கப்பா லானாதவடிவாகி என்றார். (௫௬௩)

உலகியல்பு நிகழ்ச்சியா லணைந்ததீயவுறுபசிநோயுமை யடையாதெனினும்பா, லிலவுசிவநெறிசார்ந்தோர் தமமைவாட்ட நீக்குதற்கு நித்தமொரோர்காசுநீடு, மிலகுமணிப் பீடத்துக்குணக்குமேற்கும் யாமளித்தோ முமக்கிந்தக் காலந்தீர்ந்தால், அலகில்புகழ் நீர்தவிரவ தாகுமென்றே யருள்புரிந்தார் திருவீழிமிழலையையர்.



திருவீழிமிழலை.

திருஞானசம்பந்தசுவாமிகளும் திருநாவுக்கரசுசுவாமிகளும் திரு
வீழிமிழலை ஆலயத்துநம்மைத் தரிசிக்க வீழியழகர் பஞ்சம் நீங்குமளவும்
அடியார் திருவமுதுக்கு படிக்காசு தந்தருளுவோமென அசரீரியாகச்
சொல்லினர்.


திருவீழி மிழலை.

(இ-ள்) உலகு இயல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய உறுப்பசிநோய் உமையடையாது எனினும் = உலகினியல்பின் நிகழ்ச்சியாகிய காலபேதத்தால் வந்த கொடியமிக்க பசிநோயானது உங்களையடையாதாயினும், உம்பால் நிலவு சிவநெறி சார்ந்தோர் தம்மை வாட்டம் நீக்குதற்கு = உம்மிடத்தில் விளங்கிய சைவநெறியையடைந்த அடியார் அந்தப் பசிநோயின் துயரத்தினை நீக்கும்பொருட்டு, நித்தம் ஓர் காசு = நித்தம் ஒவ்வொரு பொற்காசு, குணக்குமேற்கும் பீடம் இலகும் அளித்தோம் = கிழக்கிலும் மேற்கிலும் இல்லபெருவிசாலமான மணிகளையுடைய பலிபீடத்தில் உங்களுக்கு யாம் கொடுத்தருளுகிறோம், இந்தக்காலம் தீர்ந்தால் அளிக்கில்புகழீர் தவிர்வது ஆகுமென்று = இப்பஞ்சகாலம் நீங்கினால் மிக்கபுகழையுடையவர்களே அக்காசு வையாது ஒழியுமென்று, திருவீழிமிழலையார் அருள்புரிந்தார் = திருவீழிமிழலையில் எழுந்தருளிய பெருமானார் அருள்செய்தார் என்றவாறு. (ருகூச)

தம்பிரா னருள்புரிந்து கனவினீங்கச் சண்பையா ரிளவேறு தா முணர்ந்து, நம்பிரா னருளிருந்த வண்ணமென்றே நாவினுக்கு அரசரொடுங் கூடநண்ணி, வம்புலா மலர்த்தழை வீழிநாதர் மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்தவேலை, யம்பிகா பதியருளாற் பிள்ளையார்தா மப்பிமுகத்துப் பீடிகைமேற் காசுகண்டார்

(இ-ள்) தம்பிரான் கனவில் அருள்புரிந்து நீங்க = வீழியழகர் கனவில் எழுந்தருளி அவ்விருவர்க்கும் இவ்வாறு திருவருள்செய்து எழுந்தருளுங்கால், சண்பையார் இளவேறு தாம் உணர்ந்து = சீகாழியின்கண் உதித்த இளஞ்சிங்கம்போலும் பிள்ளையார் அக்கனவை உணர்ந்து, நம்பிரான் அருளிருந்த வண்ணமென்று நாவினுக்கு அரசரொடுங் கூட நண்ணி = நமது பெருமானார் திருவருள் இருந்தவாறு இவ்வாறென்று திருநாவுக்கரசரொடுங் கூட ஆலயத்திற்கெழுந்தருளி, வம்புலாம் மலர்த்தழை வீழிநாதர் மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்தவேலை = வாசனைபொருந்திய கொன்றைமாலையையணிந்த வீழி அழகரது அழகிய திருக்கோயிலைப் பிரதக்ஷிணஞ்செய்யப் புகுங்காலத்தில், அம்பிகாபதி யருளால் பிள்ளையார் தாம் அப்பிமுகத்துப் பீடிகைமேல் காசுகண்டார் = உமாதேவிநாயகரான அவ்வீழியழகரது திருவருளினாலே ஆளுடையபிள்ளையார் கிழக்குப்பலிபீடத்தின்மேல் பொற்காசுகண்டருளினார் என்றவாறு.

ஆண்டவரசு மேற்குப்பீடத்திற் படிக்காசு கண்டெடுத்தாரென்பது அவர் புராணத்தாற் பெறுதலின் ஈண்டுக்காட்டாதொழிந்தார். (ருகூரு)

காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டுநின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்துபொங்க, நாதர்விரும் படியாக ஞானநாளு நலவிருந்தா யுண்பதற்கு வருகவென்று, தீதில்பறை நிகழ்வித்துச் செ

ன்றதொண்டர் திருவமுது கறிநெய்பா றயிரென்றின்ன, வேதமுறு தினிதுண்ணவூட்டியங்க ணிருந்திறத்துப் பெருந்தவரு மிருந்தநாளில்

(இ-ள்.) காதலொடுந்தொழுது எடுத்துக்கொண்டு=விருப்புடன் அப்பொற்காசைவணங்கி எடுத்துக்கொண்டு, நின்று கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க=திருமுன்னின்று உச்சியின்மேல் திருக்கரங்களைக்குவித்து மிக்க மகிழ்ச்சி திருவுள்ளத்திற்கலந்து மேம்பட, நாதர்விரும்படியார்கள் நாளும் நாளும் நல்விருந்தாய் உண்பதற்குவருகவென்று நீதிப்பறை நிகழ்வித்து=சிவபெருமானார் விரும்பிய திருவடியார்கள் நாடோறும் நல்ல விருந்தினராய் உண்ணும்பொருட்டு வரக்கடவீரென்று குற்றமற்ற பறையை எங்கும் சாற்றி, சென்றதொண்டர் திருவமுது கறி நெய் பால் தயிர் என்று இன்ன=அதுகேட்டுவந்த அடியார் திருக்கூட்டங்கள் திருவமுது கறிநெய் பால் தயிர் என்று சொல்லப்பட்ட இவைபோலும் உணவுகளை, ஏதம் உறுதினிதுண்ண ஊட்டி=குறைவுபடாமல் இனிதா உண்ணும்படி உண்பித்தருளி, அங்கணிருந்திறத்துப் பெருந்தவரும் இருந்தநாளில்=அத்திருப்பதியில் ஆளுடைய பிள்ளையாரும் ஆண்டவரசும் ஆகிய இருவகைப்பெரிய தவத்தினர்களும் எழுந்தருளி இருந்தகாலத்தில் எ-று.

இன்ன என்றதனால் உண்ணப்படுவனவும் தின்னப்படுவனவுமேயன்றி ஒழிந்த நக்கப்படுவனவும் பருகப்படுவனவும் கொள்க. (௫௯௬)

வாயுமுத்தமிழ் விரகருமணையவந் தருளி

(இ-ள்.) ஏயமாந்தரும் இந்தனம் குறைத்து உடன் அடுக்கித்தீ அமைத்தலும்=ஏவிய ஏவலாளரும் கட்டைகளைவெட்டி உடனேயடுக்கி நெ ருப்பைவளர்க்கவும், சிகைவிடுபுகை ஒழிந்து எழுந்து = கொழுந்துவிடுத லோடு புகைநீங்கி சுவாலித்து, காயும்வெவ் அழற்கடவுளும் படர் ஒளிகா ட்ட=சுடும் கொடிய அக்கினிதேவனும் பரப்பிய ஒளியை (யாவருக்கும்) வெ ளிப்படுத்த, ஆயும் முத்தமிழ் விரகரும் அணையவந்தருளி=ஆராய்கின்ற முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரும் அதன் சமீபத்தையடைந்தருளி—எ-று.



திருஞானசம்பந்தஸ்வாமிகள் திருமறையிற் கயிறுசாத்தி அக்கினியில் இட்டது

செங்கண்ணேற்றவ ரேபொருளென்றுதாந் தெரிந்த
பொங்கிசைத்திருப் பதிகங்கண்முறையினைப் போற்றி
யெங்கணாதனே பரம்பொருளெனத்தொழு தெடுத்தே
யங்கையான்முடி மிசைக்கொண்டு காப்புநா ணவிழ்த்தார்

(இ-ள்) செங்கண் ஏற்றவரேபொருளென்று = சிவந்த கண்களை யுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட சிவபெருமானே உலககாரண ரான பரம்பொருளென்று, தாம் தெரிந்த பொங்கு இசைத்திருப்பதிகங்கண் முறையினைப்போற்றி = தாமுணர்ந்த பொலிவு பொருந்திய இசையினையுடைய திருப்பதிகங்களை எழுதிய திருமுறையைத் துதித்து, எங்கள் நாதனே பரம பொருளெனத்தொழுது எடுத்தே = எமது தலைவரான சிவபெருமானே முதற் பொருளென வணங்கி எடுத்தருளி, அங்கையால் முடிமிசைக்கொண்டு காப்பு நாண் அவிழ்த்தார் = அழகிய திருக்கரத்தால் அத்திருமுறையைத் தமது திருமுடியின் மேற்கொண்டருளித் திருக்காப்பிட்ட கயிற்றை அவிழ்த்தருளி னார் — எ-று.

செங்கண்ணேற்றவரே என்புழி ஏகாரம் - பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலியோர் இயற்றுற்ற கர்த்தாக்களாதலில் சிவபெருமானே ஏவுதற் கர்த் தாவாகிய முதற்கடவுளென்பப் பிரித்தலிற் பிரிநிலை. தெரிந்த என்னும் பெய ரெச்சம், அடையடுத்த திருப்பதிகமென்னும் செயப்படுபொருட்பெயர்கொ ண்டது. திருப்பதிகம் தெரிதலால்வந்த காரியமாதலின். (எஅக)

சாற்றுமெய்ப்பொரு ட்டருந்திருமுறையினைத் தாமே
நீற்றுவண்கையான் மறித்தலும்வந்துநேர்ந் துளதா
னாற்றடம்புயத் தண்ணலார்மருவுநள் ளாறு
போற்றுமப்பதி கம்போகமார்த்தபூண் முலையாள்.

(இ-ள்) சாற்றும்மெய்ப்பொருள்தரும் திருமுறையினைத்தாமே = மேற் கூறும்மெய்ப்பொருளைத் தெரிவிக்குந்திருமுறையைத்தாமே, நீற்றுவண்கை யால்மறித்தலும் = விபூதியணிந்த வள்ளற்றன்மையையுடைய திருக்கரத்தினா லேமறிக்கவும், நாற்றடம்புயத்து அண்ணலார் மருவும் நள்ளாறு போற்றும் போகமார்த்த பூண்முலையாள் அப்பதிகம் = நான்கு பெரிய திருப்புயங்களையு டைய சிவபெருமானெழுந்தருளிய திருநள்ளாற்றைத் துதிக்கும் "போக மார்த்தபூண்முலையாள்" என்னுமுதலையுடைய அத்திருப்பதிகம், வந்து நே ர்ந்துளது = வந்துதித்தது — எ-று. (எஅஉ)

திருநள்ளாறு-பண்-பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னோடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்றோலுடையனதொலையாப
பீடுடையபோரவிடையனபெணணுமோரபாலுடைய
னேடுடையமேலுலகோடேழகடலுஞசூழநத
நாடுடையநமபெருமானமேயதுநளளாறே. (௨)

ஆனமுறையாலாறறவெணணீறாடியணியிழையோர
பானமுறையாலவைததபாதமபததாபணிநதேதத
மான்மறியுமவெணமழுவுஞசூலமுமபறறியகை
நானமறையானமபெருமானமேயதுநளளாறே (௩)

புல்கவல்லவாரசடைமேறபூமபுனலபெயதயலே
மலகவலலகொன்றைமாலைமதியோடுடனசூடிப
பலகவலலதொணடாதமபொறபாதநிழறசேர
நலகவலலநமபெருமானமேயதுநளளாறே (௪)

ஏறுதாஙகியூரதிபேணியோகொளிளமதிய
மாறுதாஙகுஞசெனனிமேலோராடரவுஞசூடி
நீறுதாஙகிநூலகிடநதமாரபினினரகொனறை
நாறுதாஙகுநமபெருமானமேயதுநளளாறே (௫)

திஙகளுசசிமேலவிளஙகுநதேவனிமையோரக
ளெஙகளுசசியெமமிறைவனெனறடியேயிறைஞசத்
தஙகளுசசியாலவணஙகுநதனனடியாரகடகெலலா
நஙகளுசசிநமபெருமானமேயதுநளளாறே. (௬)

வெஞசுடரததீயஙகையேநதிவிணகொளமுழவதிர
வஞசிடததோராடலபாடலபேணுவ்தனறியுமபோயச
செஞசடைககோரதிஙகளசூடிததிகழதருகண்டததுளளே
நஞசடைநதநமபெருமானமேயதுநளளாறே. (௭)

சிடடமாரநதமுமமதிளுஞசிலைவாரதீயமபிஞறை
சுடடுமாடடிசசுணணவெணணீறுடுவதனறியுமபோயப
படடமாரநதசெனனிமேலோரபானமதியஞசூடி
நடடமாடுநமபெருமானமேயதுநளளாறே. (௮)

உணணலாகாநஞசுகணடததுணடுடனேயொடுககி
யணணலாகாவண்ணனீழலாரழலபோலுருவ
மெணணலாகாவுளவினையெனறெளகவலிததிருவா
கணணலாகாநமபெருமானமேயதுநளளாறே. (௯)

மாசுமெயயாமணடைததோாகுணடாகுணமிலிகள
பேசுமபேசசைமெயயெனறெணணியஙகெறிசெலலனமின்
மூசுவணடாாகொனறைசூடிமுமமதிருமமுடனே
நாசஞசெயதநமபெருமானமேயதுநளளாறே. (௧௦)

தணபுனலுமவெணபிறையுநதாஙகியதாழசடையன
நணபுநலலாாமலகுகாழிஞானசமபநதனலல
பணபுநளளாறேததுபாடலபததுமிவைவலலா
ருணபுகீஙகிவானவரோடுலகிலுறைவாரே. (௧௧)

திருசசிறறமபலம

அததிருபபதி கததினையமாநதுகொண டருளி
மைததவெஙகடு மிடறறுநளளாறரை வணஙகி
மெயததநறறிரு வேடடினைககழறறிமெயம மகிழநது
கைததலததிடைக கொணடனாகவுணியா தலைவா

(இ-ள்) அததிருபபதிகததினை அமாநதுசொணடருளி = அததிருப பதிகததை விருமபி (திருககரததிற) கொணடருளி, மைதத வெம கடுமிட றறு நளளாறரைவணஙகி=கரிய வெமமைபொருநதிய காளகணடததையு டைய தேறபாரணீசுரரைவணஙகி, மெயதத நறறிரு ஏடடினைககழறறி= மெயமமைபொருநதிய அததிருபபதிகமெழுதிய திருவேடடைசசுழறறி; மெயமமகிழநதுகைததலததிடைககொணடனா கவுணியாதலைவா=திருமேனி (மகிழசசிககுறிகாடட) மகிழகூாநது திருககரததிற கொணடருளினூா கவு ணியகோததிரததலைவராகிய ஆளுடையபிளளையாா —எ-று (எ௮௩)

நனமையுயககுமெயப பதிகததினுதனென றெடுதது
மெனனையாளுடையீசனறனுமமே மெனறு
மனனுமெயபபொரு ளாமெனககாடடிட வனனி
தனனிலாகெனத தளிரிளவளரொளி பாடி.

(இ-ள்) நனமை உயககும மெயபபதிகததில நாதனெனறு எடுத துமம=யாவருஙகாண நெருபபினினறு உலகாககெலலாம நனமையைசசெய யும "போகமாாதத பூணமுலையாள" எனனும திருபபதிகமுதறபொருளாயுள ளமுதலவரெனறெடுததும, எனனை ஆளுடை ாசனறன நாமமே எனறும்= இது எனனையாளுந தனமையையுடைய நளளாறறடிகளது திருநாமமே எனறுகூறியும், மனனுமமெயபபொருளாம எனககாடடிட = அநநாதனே அழிவிலலாத மெயபபொருளாயுளளானெனறுகாடடுமபடி, வனனிதனனில ஆகெனததளிரிள வளரொளிபாடி=நெருபபில அழியாது இது நிலைபெறுக எனறு " தளிரிளவளரொளி " எனனும முதலையுடைய திருபபதிகமபாடி

நெருப்பினின்று வெற்றியைக் கொடுத்தலால், நன்மையுய்க்கு மென்றும், சிவபெருமானே பரம்பொருளென விளக்குதலில், மெய்ப்பதிகமென்றும், அப்பதிகத்திறுதனென்றதனால், போகமார்த்த பூண்முலையாளோடு கூடி இன்பத்தை ஆன்மாக்களுக்கு விளைவிக்குமுதல்வனென்றுங் கூறினாரென்றுயிற்று

நன்மையுய்க்கு மெய்ப்பதிகமெனப்புழி, பிள்ளையார் திருமுறையில் கயிறுசாத்துங்கால், அவர்க்குச் சுபசூசனமாய "போகமார்த்த பூண்முலை யாள் தன்னோ" டென்வந்த திருப்பதிக மெனினுமொக்கும்.

அவ்வாறு கூறுங்காலும், போகியாயிருந்து உயிர்க்குப்போகத்தைக் கொடுக்கும் நாதனென்பதைக் குறிப்பிக்குமெனக்கொள்க. தமக்கு மங்களகரமாகப் போகியாயிருந்து போகத்தைக்கொடுக்கும் நாதனென்வந்தமையைத் "தளிரிளவளரொளி" என்னும் பதிகத்துத் திருக்கடைக்காப்பிறுவாய் விதந்து கூறியருளினமைகாண்க. அவ்வாறாதலில், வன்னிதன்னிலாகென வென்றது பிள்ளையார் ஆணைகுறித்தமை குறிப்பித்தது (௭௮௪)

திருநள்ளாறு-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தந்நாமமே
மிளிரிளவளரெரியிடி லிவைபழுதிலைமெய்ம்மையே (௧)

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலி
ஞாதமெழிலுருவனையநள்ளாறர்தந்நாமமே
மீதமெரியினிலிடி லிவைபழுதிலைமெய்ம்மையே (௨)

இட்டுறுமணியணியிணர்புணர்வளரொளியெழில்வடங்
கட்டுறுகதிரிளவனமுலையிணையொடுகலவலி
னட்டுறுசெறிவயன்மருவுநள்ளாறர்தந்நாமமே
யிட்டுறுமெரியினிலிடி லிவைபழுதிலைமெய்ம்மையே (௩)

மைச்சணிவரியரிநயனிதொன்மலைமகள்பயனுறு
கச்சணிகதிரிளவனமுலையவையொடுகலவலி
னச்சணிமிடறுடையடிகணள்ளாறர்தந்நாமமே
மெச்சணியெரியினிலிடி லிவைபழுதிலைமெய்ம்மையே. (௪)

பணணியனமலைமகளகதிாவிடுபருமணியணிநிறக
கணணியலகலசமதனமுலையிணையொடுகலவலி
னணணியகுளிாபுனலபுகுதுநளளாறாதநநாமமே
விணணியலெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௫)

போதுறுபுரிகுழனமலைமகளிளவளாபொனனணி
சூதுறுதளிாநிறவனமுலையவையொடுதுதைதலிற
றாதுறுநிறமுடையடிகணளளாறாதநநாமமே
மீதுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௬)

காமலிநெறிபுரிசுரிகுழனமலைமகளகவினுறு
சேமலிதருமணியணிமுலைதிகழவொடுசெறிதலிற
றாமலிநகுதலையுடையநளளாறாதநநாமமே
யோமலியெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௭)

மனனியவளரொளிமலைமகடளிாநிறமதமிகு
பொனனியனமணியணிகலசமதனமுலைபுணாதலிற
றனனியறசமுகனெறியநளளாறாதநநாமமே
மினனியலெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௮)

கானமுகமயிலியனமலைமகளகதிாவிடுகனமிகு
பானமுகமியலபணையிணைமுலைதுணையொடுபயிறலி
ஞானமுகனறிபறிவரியநளளாறாதநநாமமே
மேனமுகவெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௯)

அநதிரநயனிதொனமலைமகளபயனுறுமதிசயச
சிநதிரமணியணிதிகழமுலையிணையொடுசெறிதலிற
புநதரனொடுமணாபொயயபெயருநளளாறாதநநாமமே
மெயநதிரளெரியினிலிடிலிவைபழுதிலைமெயமமையே (௧௦)

சிறறிடையரிவைதனவனமுலையிணையொடுசெறிதரு
நறறிறமுறுகழுமலநகாஞானசமபநதன
கொறறவனெதிரிடையெரியினிலிடவிவைகூறிய
சொறறெரியொருபதுமறிபவாதுயரிலாதூயரே. (௧௧)

திருசசிறறமபலம

செயயதாமரை யகவிதழினுமிகச சிவநத
கையிலேடடினைக கைதவனபோவைக காண

வெயயதீயினில வெறறரை யவாசிநதை வேவ
வையமுயநதிட வநதவாமகிழநதுமுன னிடடாா.

(இ-ள்.) செயயதாமரை அக இதழினும மிகசசிவநத கையில ஏடடினை=சிவநததாமரை மலரினது அகவிதழினும மிகவுஞசிவநத திருககரததில (தாஙகிய) திருவேடடை, கைதவனபோ அவைகாண=பாணடியனது பெரியசபையிலுளளாாகாணவும, வெறறரையவாசிநதைவேவ = உடையிலலாத அரையையுடைய சமணாமனம புழுஙகவும, வெயயதீயினில வையம உயநதிட வநதவா மகிழநது முன இடடாா=கொடிய நெருபபினிடதது நில உலகததாா ஈடேற அவதரிதத ஆளுடைய பிளளையாா மகிழசசியடைநது (அசசவை) முனபு இடடருளினாா—எ-று (௭௮௫)

இடடவேடடினி லெழுதியசெநதமிழப பதிக
மடடலாஙகுழல வனமுலைமலைமகள பாகந
தடடமூாததியைப பொருளெனவுடைமையா லமாநது
படடதீயிடைப பசசையாயவிளஙகிய தனறே

(இ-ள்) இடட ஏடடினில எழுதிய செநதமிழபபதிகம=பிளளையாாிடடருளிய திருவேடடிலெழுதபபடட "போகமாாததபூணமுலையாள" எனனும செநதமிழபபதிகமானது, மடடு உலாயகுழலவனமுலைமலைமகள பாகதது அடடமூாததியைபபொருளென உடைமையால=வாசனைநிறைநத கூநதலையும அழகிய திருமுலைகளையுமுடைய உமாதேவியை இடபபாகததுளள அடடமூாததியாகிய சிவபெருமானையே மெயபபொருளாக உடைமையால, அமாநது படடதீயிடைப பசசையாய விளஙகியது அனறே=நிலைபெறறுச சொலிகினற நெருபபினிடதது அவவேடுபசசையாய விளஙகியது—எ-று

மையனெஞசுடை யமணருநதமபொருள வரைநத
கையிலேடடினைக கதுவுசெநதீயினி லிடுவா
ருயயுமோவிது வெனவுறுஙகவலையா முணாவா
னையுநெஞசின ராகியேநடுஙகினின றிடடாா

(இ-ள்) மையல நெஞசுடை அமணரும=மயககமபொருநதிய மனதை யுடைய சமணாகளும, தமபொருளவரைநத கையில ஏடடினை=(ஒருபொருடகு ஓரியலபு கூறாது பலபட அனேகாநதமாககக கூறும) தமது பொருளை யெழுதியகையிலிருககும ஏடடை, கதுவு செநதீயினில இடுவாா=(சோநதபொருளை) எரிககும சிவநததீயினிடதது இடுவாராய, இது உயயுமோ என உறும கவலையாம உணாவால=இவவேடு இநநெருபபில எரியாது நிலைபெறுமோவெனனுஙகவலை நிறைநத வுணாசசியால, நையும நெஞசின ராகியே நடுஙகினினறு இடடாா=வருநதிய மனதுடையராய நடுககுறறு நினறு அததீயிலிடடாாகள.—எ-று (௭௮௭)

அஞசுமுளளதத ராகியுமறிவிலா வமணா
வெஞசுடாபபெருந தீயினிலவிழுததிய வேடு
பஞசுதீயினிற படடதுபடககணடு பயததால
நெஞசுசோரவும பீலிகைசோாநதிலா நினறாா

(இ-ள்) அஞசும உளளததாராகியும அறிவு இலா அமணா = அசச முறறமனமுடையவராயுந தமககறிவிலலாத சமணாகள், வெம சுடாபபெரும தீயினில விழுததிய ஏடு=கொடிய சுவாலையோடு கூடிய பெருநதீயிலிடட ஏடானது, தீயினில பஞசுபடடது=அததீயிற பஞசுபோலாயது, படக கணடு பயததால நெஞசு சோரவும பீலிகை சோாநதிலாநினறாா=அவவாறுக ககணடும பயததினுல தமமனஞசோரவும பிடிததபீலிகைசோாநது விழா மல (உறுதியாய) நினறாாகள் —எ-று. (௭௮௮)

மானமனனவ னவையினமுனவளாததசெந தீயின
ஞானமுணடவ ரிடடவேடிசைததநா ழிகையி
லீனமினமைகண டியாவருமவியபபுற வெடுததாா
பானமைமுனனையிற பசுமையுமபுதுமையும பயபப

(இ-ள்) மான மனனவன அவையின முனவளாதத செநதீயில = பெருமைபொருநதிய பாணடியனது சவையின முனனே ஆககிய சிவநத நெருபபில, ஞானம உணடவா இடட ஏடு=சிவஞானததைத திருவமுது செயத ஆளுடையபிளளையாா இடடதிருவேடானது, இசைததநாழிகையில= நியமிதத நாழிகையளவில, ஈனம இனமை கணடுயாவரும வியபபுற=தன ககொருகேடுமினறி யிருததலைககணடு யாவரும அதிசயிகக, பானமை முன னையிறபசுமையும புதுமையும பயபப எடுததாா=முனனையிற றனமையினும பசுமையும புதுமையும உணடாயிருககுமபடி எடுததருளினாா.—எ-று. (௭௮௯)

எடுததவேடடினை யவையினமுனகாடடியம முறையி
லடுததவணணமே கோததலுமதிசயிதத தரசன
றொடுததபீலிமுன றூககியகையரை நோககிக
கடுததுநீரிடட வேடடினைக காடடுமி னெனறான.

(இ-ள்) எடுதத ஏடடினை அவையினமுனகாடடி=பிளளையாா திருக கரததால தீயினினறும) எடுததருளிய திருவேடடைப (பாணடியன்) சவை யினமுனனே (யாவருஙகாணக) காடடியருளி, அமமுறையில அடுதத வணணமே கோததலும=அததிருமுறையில முனபுளளபடியே கோததருள வும, அரசன அதிசயிததது=பாணடியராசன அதிசயிததது, தொடுதத பீலி முனதூககிய கையரைநோககி=சோததுக கறறையாககடடிய மயிறபீலி யை முனனே பிடிததுநினற சமணாகளைபபாாதது, கடுதது நீா இடட ஏட டினைககாடடுமின எனறான்=கோபிதது நீஙகளிடட ஏடடைககாடடுவீாகளா க வெனககூறினான —எ-று (௭௯௦)

வேறு.

அருகர்தாமிட்டவேடுவாங்கச்சென்றணையும்போதிற்
பெருகுதீக்கதுவவெந்துபோந்தமைகண்டமன்னன்
றருபுனல்கொண்டுசெந்தீத்தணிப்பித்தானசமணரங்குக்
கருகியசாம்பலோடுங்கரியலானமற்றெனக்காண்பார்.

(இ-ள்) அருகர்தாம் இட்ட ஏடுவாங்கச்சென்று அணையும்போதில் = சமணர்கள் தாங்களிட்ட ஏட்டை எடுக்கப்போயடைந்தகாலத்தில், பெருகு தீக்கதுவவெந்து போந்தமைகண்ட மன்னன் = மிக்க தீச்சுட (அதனால்) உடல்வெதும்பி அவர் நீங்கியமையைப்பார்த்த பாண்டியன், தருபுனல்கொண்டு செந்தீத்தணிப்பித்தான் = (தண்மையைத் தரும்) நீரால் சுவாலித்தெழுந்த நெருப்பைப்பவிப்பித்தான், சமணர் அங்கு கருகிய சாம்பலோடும் கரியலால்மற்று எனக்காண்பார் = சமணர்கள் அவ்விடத்துக் கருகிய சாம்பலுங் கரியுமன்றிப் பிறபொருள் யாதைக்காண்பார்கள் —எ-று

பிறபொருளின்மையிலகரி,சாம்பலேகாண்பாராயினரென்றும் (எகக)

செய்வதொன்றறிகிலாதார்திகைப்பினாற்றிரண்டசாம்பல்
கையினாற்பிசைந்துதூற்றிப்பார்ப்பதுகண்டமன்ன
னெய்தியநகையினோடுமேடினமரித்துக்காணும்
பொய்யினான்மெய்ம்மையாக்கப்புகுந்தநீர்போமினென்றான்

(இ-ள்) செய்வது ஒன்று அறிகிலாதார் திகைப்பினால் திரண்ட சாம்பல் = செய்யுஞ்செயல் ஒரு சிறிதும் அறிந்திலாத சமணர்கள் தடுமாற்றத்தால்திரட்டியசாம்பலை, கையினால் பிசைந்து தூற்றிப்பார்ப்பது கண்டமன்னன் = கையினாலே பிசைந்து தூற்றிப்பார்ப்பதைக்கண்ட அரசன், எய்திய நகையினோடும் ஏடு இன்னம் அரித்துக்காணும் = பொருந்திய புன்னகையோடு (நீங்களிட்ட) ஏட்டை இன்னுமரித்துப்பாருங்கள், பொய்யினால் மெய்ம்மையாக்கப் புகுந்த நீர்போமின் என்றான் = பொய்ந்நெறிகாரணமாக மெய்ம்மையைவிளக்கமுயன்ற நீவிர் போங்களென்றுசொன்னான் —எ-று (எகஉ)

வெப்பெனுந்தீயில்யானமுன்வீடுபெற்றுய்யநீங்க
ளப்பொழுதழிந்துதோற்றீராதலாலதுவாறுக
விப்பொழுதெரியிலிட்டவேடுய்ந்ததில்லையென்றற்
றுப்புரவுடையீர்நீங்களதோற்றிலீர்போலுமென்றான்

(இ-ள்.) வெப்பெனும் தீயில் யானமுன் வீடுபெற்று உய்ய = சுரநோயென்னுந் தீயினின்றும் நானமுன்பு (பிள்ளையாரால்) விடுதலைபெற்றுய்யுங்கால், நீங்கள் அப்பொழுது அழிந்துதோற்றீர் = நீவிர் அக்காலத்துச் (செயல்) அழிந்து தோற்றீர்கள், ஆதலால் அது ஆறுக இப்பொழுது எரியில் இட்ட ஏடு உய்ந்ததில்லை என்றால் = ஆதலினால் அது வழியாக இப்போது

(நீங்கள்) நெருப்பிலிட்ட ஏடு பிழைத்ததில்லையென்றால்; தப்புரவு உடையீர் நீங்கள் தோற்றீர்போலும் என்றான்=வன்மையுடைய நீவிர் தோற்காதொழிந்தீர்போலு மென்றுங் கூறினான் — எ-று (எகங)

தென்னவ னகையுட் கொண்டு செப்பிய மாற்றந் தேரார்
சொன்னது பயனுட்கொண்டு சொல்லுவார் தொடர்ந்த வாது
முன்னுற விருகாற்செய்தோ முக்காலி லொருக்கால்வெற்றி
யென்னினு முடையோமெய்ம்மை யினியொன்று காண்பதென்றார்

(இ-ள்) தென்னவன் நகை உட்கொண்டு செப்பியமாற்றம் தேரார்=பாண்டியன் புன்னகையையுட்கொண்டு சொல்லிய வார்த்தையையறியாராய், சொன்னது பயனுட்கொண்டுசொல்லுவார் = சொன்னசொல்லைப் பயனுள்ளசொல்லாகக் கருதிச்சொல்லுகின்றார், தொடர்ந்தவாது முன்னுற இருகால் செய்தோம் = முன்னே தொடர்ந்த வாதினை இரண்டுதரஞ் செய்தோம், முக்காலில் ஒருக்கால் வெற்றியெனினும் = மூன்றுதரத்திலொருதரமாயினும் வெற்றியடைவோமாயினும், உடையோம் மெய்ம்மை= மெய்ம்மையையாமுடையோம், இனி ஒன்றுகாண்பதென்றார்=இனியொரு வாதுசெய்து காணத்தக்கதென்றார்கள் — எ-று (எகச)

தோற்கவு மாசைநீங்காத் துணிவிலார் சொல்லக்கேட்டு
மாற்றமென் னாவதென்று மன்னவன் மறுத்தபின்னு
நீற்றணி விளங்குமேனி நிறைபுகழ்ச் சண்பைமன்னர்
வேற்றுவா தினியென்செய்வ தென்றலு மேற்கோளேற்பார்

(இ-ள்) தோற்கவும் ஆசைநீங்காத் துணிவு இலார்சொல்லக்கேட்டு=நாம் தோல்வியடையவும் மீட்டும் வெல்லுமாசை நீங்காத மெய்யுணர்விலாத அமணர்களிவ்வாறு சொல்லக்கேட்டு, இம்மாற்றம் என் ஆவதென்று மன்னவன் மறுத்தபின்னும்=(நீவிர் கூறும்) இவ்வார்த்தையென்பெறுமென்று பாண்டியன் மறுத்தபின்னும், நீற்றணிவிளங்கும் மேனி நிறைபுகழ்ச் சண்பைமன்னர்=விபூதியாகிய ஆபரணம் விளங்கும் திருமேனியையும் நிறைந்த புகழையுமுடைய சீகாழிப்பதிவராகிய பிள்ளையார், வேற்றுவாது இனி என்செய்வது என்றலும்=வேற்றுவாதம் இனி இவர் யாதுசெய்வதென்றலும், மேற்கோள் ஏற்பார்=(அவர் கூறியவார்த்தையை) மேற்கொள்வாராயினார் — எ-று. விபூதி, பாவத்தைப்போக்கி ஐசுவரியத்தைக்கொடுப்பதன்றி ஆரமாபரணமாயுமிருந்து அழகுசெய்யுமென்பதைக் கருதிக்கூறுதலில், நீற்றணி யென்றார் (எகரு)

நீடுமெய்ப் பொருளினுண்மை நிலைபெறுந் தன்மையெல்லா
மேடுற வெழுதிமற்ற வேட்டினை யாற்றுநீரு
மோடுநீ ராற்றிலிட்டா லொழுகுதல் செய்யாதங்கே
நாடிமுன் றங்குமேடு நற்பொருள் பரிப்பதென்றார்

ருள

(இ-ள்.) நீடும் மெய்ப்பொருளின் உண்மை நிலைபெறுமதனன்றே எல்லாம் = மேம்பட்ட மெய்ப்பொருள்களினது உண்மை நிலைபெற்ற இயல்புகளையெல்லாம், ஏடுற எழுதி மற்று அவ்வேட்டினை யாமும் நீரும் = ஏட்டினிற் பொருந்த வெழுதி அவ்வேட்டை யாங்களும் நீரும், ஓடும் நீர் ஆற்றில் இட்டால் = ஓடுகின்ற நீரையுடைய (வைகை) ஆற்றிலிட்டால், ஒழுகுதல் செய்யாது அங்கே நாடி முன் தங்கும் ஏடு நற்பொருள் பரிப்பது என்றார் = (ஆற்று நீரோடு) உடன் செல்லாது (அந்நீரில் எதிர்ந்து) முன்செல்லப்பெறும் ஏடு நல்லபொருளுடையதென்று சொன்னார்கள் — எ-று. (௭௧௬)

என்றமண் கையர் கூற வேறுசீர்ப் புகலிவேந்தர்
நன்றது செய்வோமென்றங் கருள்செய நணுகவந்து
வென்றிவே லமைச்சனார்தாம் வேறினிச் செய்யுமிவ்வா
தொன்றினுந் தோற்றார்செய்வ தொட்டியே செய்வதென்றார்

(இ-ள்.) என்று அமண் கையர் கூற ஏறு சீர்ப்புகலிவேந்தர் = இவ்வாறு சமணர்களாகிய கீழ்மக்கள் சொல்ல மிக்க புகழையுடைய சீகாழித் தலைவராகிய ஆளுடையபிள்ளையார், நன்று அது செய்வோமென்று அங்கு அருள்செய = (நீவிர் கூறியது) நன்று அதனைச் செய்வோமென்று அங்கருளிச் செய்ய, வென்றிவேல் அமைச்சனார் தாம் நணுகவந்து = வெற்றியையுடைய வேலேந்திய குலச்சிறைநாயனார் (அரசன்) சமீபிக்கவந்து, வேறு இனிச் செய்யும் இவ்வாது ஒன்றினும் தோற்றார் செய்வது = வேறாக இனிச் செய்யப்படும் இவ்வாதொன்றினுந் தோற்றவர்செய்வது (யாது), ஒட்டியே செய்வதென்றார் = (அதனையிதுவென்று) உடன்பட்டு இனி வாதுசெய்யவேண்டுமென்று கூறினார் — எ-று. ஒட்டல் = உடன்படல்.

சமணர் முன்செய்த வாதில் தோற்றும் பின்னும் வாதுசெய்ய உடன்பட்டாராதலில், மேல் வாது பெருகாது இதனோடொழிக்கவேண்டுமென்னுங் கருத்தால், தோற்றார் இவ்வாறு செய்கவென ஒட்டிச்செய்வதென்றா ரென்றும். (௭௧௭)

அங்கது கேட்டுநின்ற வமணரு மவர்மேற்சென்ற
பொங்கிய வெகுளிகூரப் பொறாமைகாரணமேயாகத்
தங்கள்வாய் சோர்ந்துதாமே தனிவாதி லழிந்தோமாகில்
வெங்கழு வேற்றுவானிவ் வேந்தனே யென்றுசொன்னார்

(இ-ள்.) அங்கு அதுகேட்டு நின்ற அமணரும் = அவ்விடத்தில் அதனைக்கேட்டு நின்ற சமணரும், அவர் மேற்சென்ற பொங்கிய வெகுளி கூர = அக்குலச்சிறைநாயனார்மேல் உண்டாய மிக்க கோபமானது அதிகரிக்க, பொறாமைகாரணமே ஆக = பொறாமையே காரணமாக, தங்கள் வாய்சோர்

ந்து தாமே தனிவாதில் அழிந்தோமாகில்=தமது வாய்ச்சொற்கது தாங்களே ஒப்பற இவ்வாதில் தோற்றோமாகில், வெம் கழுவேற்றுவான் இவ்வேந்தனே என்றுசொன்னார்=கொடிய கழுமுனையில் ஏற்றுகிறவன் இப்பாண்டியனேயென்று கூறினார்கள்—எ-று

இச்குலச்சிறையாரே இவ்வாறு தம்மதத்தைக் கெடுப்பச்செய்தவரென்றுங் காரணத்தாலென்பார். அவர் மேற்பொங்கிய வெகுளிகூரவென்றும், சைவமதத்திறந்த மேன்மைவிளங்கியதேயென்னும் அசூயை அவரிடத்துண்மையில், பொறுமைகாரணமேயென்றும், வாதில்நிந்தார்க்கு அரசன் விதிக்குமுன் அவன் விதிக்கும் விதியைத் தாமேயுடன்பட்டு மானத்தால் இவ்வாறு செய்யென மேற்கொண்டு கூறினரென்பார், வெங்கழுவேற்றுவானிவ்வேந்தனேயென்றுங் கூறினார். (எகூகூ)

மற்றவர் சொன்னவார்த்தை கேட்டலு மலையமன்னன்
செற்றத்தா லுரைத்தீருங்கள் செய்கையு மறந்தீரென்று
பற்றிய பொருளினேடு பட்டபுனல் வைகையாற்றிற்
பொற்புற விடுவதற்குப் போதுவ தென்றுகூற

(இ-ள்) மற்றவர் சொன்னவார்த்தைகேட்டலும் மலையமன்னன்= அச்சமணர்கள் சொன்ன பிரதிக்கினையைக்கேட்டவுடன் பொதியமலைக்கதிபனாகிய பாண்டியன், செற்றத்தால் உரைத்தீர் உங்கள் செய்கையும் மறந்தீரென்று=கோபத்தால் (இவ்வாறு) கூறினீர்கள் உங்களுடைய செய்கையையும் (நீவிர்) மறந்தீர்களென்று, பற்றியபொருளின் ஏடு=சமய உண்மையையெழுதிய ஏட்டினை, பட்டபுனல் வைகை ஆற்றில் பொற்புற இடுவதற்குப் போதுவதென்று கூற=பரந்துசெல்லும் நீருடைய வைகையாற்றினகண் வெற்றியடையும்படி விடுதற்கு (நாமெல்லாம்) போகலாமென்றுகூற—எ-று

பிள்ளையார் முன்னமைம்பொற் பீடத்தை யிழிந்துபோந்து
தெள்ளுநீர்த் தரளப்பந்திச் சிவிகைமே லேறிச்சென்றார்
வள்ளலார்அவர்தம்பின்பு மன்னனுமா வேறிச்சென்றா
னுள்ளவா றறிகிலாதா ருணர்வுமா லேறிச்சென்றார்

(இ-ள்) பிள்ளையார் முன்னம் பைம்பொன் பீடத்தை இழிந்து போந்து=ஆளுடைய பிள்ளையார் முன்பு பசியபொன்னாலாகிய பீடத்தினின்றும் இறங்கிச் சென்றருளி, தெள்ளும் நீர்த்தரளப் பந்திச்சிவிகைமேல் ஏறிச்சென்றார்=தெளிந்த நீரோட்டத்தையுடைய முத்தினவரிசைகளாலாய திருச்சிவிகைமேல் எழுந்தருளிச்சென்றார், வள்ளலார் அவர் தம் பின்பு மன்னனுமா ஏறிச்சென்றான்=வள்ளன்மையையுடைய ஆளுடைய பிள்ளையார் பின்னே பாண்டியன் குதிரையிலேறிப்போயினன், உள்ளவாறு அறிகிலாதார் உணர்வுமால் ஏறிச்சென்றார்=மெய்ந்நெறியை யறியாச் சமணர்கள் உணர்வு மயங்கிச் சென்றார்கள்—எ-று (அ00)

தென்னவன் வெப்புத்தீர்ந்து செழுமணிக் கோயினீங்கிப்
பின்னுற வணைந்தபோது பிள்ளையார் பெருகுஞ்செல்வ
மன்னிய மதுரைமூதூர் மறுகிலவ் வருளக்கண்டு
துன்னிய மாதர்மைந்தர் தொழுதுவே றிணைபசொன்னார்

(இ-ள்) தென்னவன் வெப்புத்தீர்ந்து செழுமணிக்கோயில் நீங்கி= பாண்டியன் சுரநோய் நீங்கிச் செழுமைபொருந்திய மணிமயமான கோயிலினின்றும் நீங்கி, பின்னுற அணைந்தபோது=பின்னே பொருந்தச்சென்ற காலத்தில், பிள்ளையார் பெருகும் செல்வம்மன்னிய மதுரை மூதூர் மறுகில் வந்தருளக்கண்டு= ஆளுடைய பிள்ளையார் மிக்கசெல்வம் நிலைபெற்ற பழமைபொருந்திய மதுராபுரியின் வீதியிலெழுந்தருளப்பார்த்து, துன்னிய மாதர் மைந்தர் தொழுது வேறு இணையசொன்னார்=அந்நகரத்தில் நெருங்கிய பெண்களும் ஆடவர்களும் வணங்கித் தனித்தனி யிவ்வாறுசொல்வாராயினார்—எ-று.

மீனவன் கொண்டவெப்பை நீக்கிநம் விழுமந்தீர்த்த
ஞானசம் பந்தரிந்த நாயனார் காணுமென்பார்
பானறுங் குதலைச்செய்ய பவளவாய்ப் பிள்ளையார்நா
மானசீர்த் தென்னனாடு வாழவந் தணைந்தாரென்பார்.

(இ-ள்) மீனவன் கொண்ட வெப்பை நீக்கி நம் விழுமம் தீர்த்த = பாண்டியன் கொண்ட சுரநோயை நீக்கி நமது துன்பத்தைப் போக்கியருளிய, ஞான சம்பந்தர் இந்த நாயனார் காணும் என்பார்=ஞானசம்பந்தரென்னுந் திருநாமமுடையார் இந்தநாயனாரே காணுமென்று கூறுவார், பானறுங் குதலைச்செய்ய பவளவாய்ப் பிள்ளையார் தாம்=திருமுலைப்பாலினது நறுமணங் கமழுங்குதலைச்சொல்லையுஞ் சிவந்தபவளம்போலுந் திருவாயையுமுடைய ஆளுடைய பிள்ளையார், மானசீர்த்தென்னன் நாடுவாழ வந்தணைந்தார் என்பார்=வெற்றிமிக்க சிறப்பினையுடைய பாண்டிநாடுவாழும்படி எழுந்தருளினாரென்று கூறுவார்—எ-று. (௮௦௨)

எரியிடை வாதிற்றோற்ற திவாகருநம் மருகரென்பார்
புரிசடை யண்ணனீறே பொருளெனக் கண்டோமென்பார்
பெருகொளி முத்தின்பைம்பொற் சிவிகைமேற் பிள்ளையார்தாம்
வருமழ கென்னேயென்பார் வாழ்ந்தன கண்களென்பார்

(இ-ள்) எரியிடைவாதில்தோற்றது இவர்க்கு நம் அருகர் என்பார்= நெருப்பினிட்டது (ஏடிட்டுச்செய்த) வாதில் தோற்றது இப்பிள்ளையாருக்கு நம்மடிகளாராகிய அருகர்கள் என்று கூறுவார், புரிசடை அண்ணல் நீறே பொருள் எனக் கண்டோம் என்பார் = முறுக்குப்பொருந்திய சடையையுடைய சிவபெருமானது திருநீறே மெய்ப்பொருளென்று கண்டோமென்று சொல்லுவார்கள், பெருகு ஒளிமுத்தின்பைம் பொன்சிவிகைமேல்=பெரு

இயமிகக வொளிநிறைநதமுததின வரிசைகளையுடைய பசியபொன்னாலாகிய சிவிகையினமேல, பிளளையாா தாம வருமஅழகு எனனே எனபாா = இவ வாறுடையபிளளையாா வருமபொலிவு எனன வியபபெனறு சொலலுவாா கள, வாழநதன சணகள எனபாா=(இபபொலிவைககாணுதலால நமது) கணகள வாழவடைநதன வெனறு சொலலுவாாகள —எ-று (அ0ங)

ஏதமே வநததிநத வடிகணமா ரியலபாலெனபாா
நாதனு மாலவாயி னமபனே காணுமெனபாா
போதமா வதுவுமுககட புராணனை யறிவதெனபாா
வேதமு நீறுமாகி விடுமவிடு மெஙகுமெனபாா

(இ-ள) இநத அடிகளமாா இயலபால ஏதமே வநதது எனபாா= இநத அடிகளமாரது செயகையினாலே (எமககெலலாம) குறறம வநததென று சொலலுவாாகள, ஈசனும ஆலவாயில நமபனே காணும எனபாா= இறைவனுககிருவாலவாயி லெழுநதருளிய சுநதரேசனேயெனறு சொலலுவா ாகள, போதம ஆவதுவும முககணபுராணனை அறிவது எனபாா=மெஞஞா னமாவதும மூனறுகணகளையுடைய சிவபெருமானை உணருமஉணாசசி யென றுஞசொலலுவாாகள, வேதமும நீறுமாகி விடும விடும எஙகும எனபாா= மேலவேதமும விபூதியுமாய எஙகும்பரவி விடுமெனறுஞ சொலலுவாாகள.

விடும. விடுமெனறது துணிவுபபொருளிலவநத அடுககு (அ0ச)

அடிகணமாா முகஙகளெலலா மழிநதன பாரீரொன்பாா
கொடியவஞ சனைகளெலலாங குலைநதன போலுமெனபாா
வடிகொளவேன மாறனகாதன மாறின வணணமெனபாா
விடிவதாய முடிநததிநத வெஞசம ணிருளுமெனபாா

(இ-ள) அடிகளமாாமுகஙகள எலலாம அழிநதன பாரீா எனபாா= (நமமுடைய) சமணமுனிவாகளது முகஙகளெலலாம வாடியிருநதனபாருஙக ளெனறு சொலலுவாாகள, கொடியவஞசனைகள எலலாம குலைநதன போ லும எனபாா=(நமது அடிகள மாா செயயும) கொடியமாயா சாலஙகளெல லாம நிலைகெட்டழிநதனபோலு மெனறு சொலலுவாாகள, வடிகொள வேலமாறன காதலமாறின வணணம எனபாா= வடிததவேலை யேநதிய பாணடியனது (அடிகள மாாமேல வைதத) பறறுமாறினமை (இவவாறே) எனறு சொலலுவாாகள, இநத வெம சமண இருளும விடிவதாய முடிநதது எனபாா=இககொடிய சமணராகிய அநதகாரமுமினறு புலாநததாய முடிநத தெனறு சொலலுவாாகள.—எ-று (அ0ரு)

வெருபபினிற ரேறறாாதாஙக ணீரிலவெல வாகளோவெனபா
ரிருபபுநெஞ சுடையரேனும பிளளையாாக கெதிரோவெனபாா
பருபபொரு ளுணாநதாாதாஙகள படுவன பாரீரெனபாா
மருபபுடைக கழுககோல செயதாா மநதிரி யாாதாமெனபாா.

(இ-ள.) நெருபபினில தோறருா தாஙகள நீரில வெலவாகளோ எனபாா=(நெருபபில ஏடு இடடு வாதுசெயது) தோறற சமணாகள நீரில (ஏடு இடடு) வெலலுவாாகளோ எனறு சொலலுவாாகள, இருமபு நெஞசு டையரேனும பிளளையாாககு எதிரோ எனபாா = (நம அடிகளமாா) இருமபு போல கடின மனமுடையாாாயினும பிளளையாரோடு வாதுசெயதறகு எதிா நிறபாரோ எனறு சொலலுவாாகள, பருபபொருள உணாநதாா தாஙகள படுவனபாரீா எனபாா=நுணபொருளலலாதபொருளை யுணாநத இசசமணா கள தாமபடும பாடுகளைப பினபு பாரீரெனறு சிலா சொலலுவாாகள, மநதி ரியாாதாம மருபபுடைசகழுசகோல செயதாா எனபாா = குலசசிறையாா (மானமுதலியவறறின) கொமபுகளை நுனியினகணவைதத கழுமரஙகளைச செயதாரெனறு சொலலுவாாகள —எ-று. (௮௦௬)

ஏடுகள வைகைதனனி லிடுவதற கிணைநதாரெனபா
ரோடுநீ ருடன்செலாது நிறகுமோ வோலையெனபாா
நீடிய ஞானமபெறறாா நிறுததவும வலலரெனபாா
நாடெலாங காணவிஙகு நணணுவா காணீரெனபாா

(இ-ள) ஏடுகளவைகைதனனில இடுவதறகு அணைநதாா எனபாா= (இவவிருவருந தததஞ சமயககொளகையை வரைநத) ஏடுகளைவைகையாற றி லிடவநதாாகளெனறு சொலலுவாாகள, ஓடும நீருடன செலாது நிற குமோ ஓலையெனபாா=(ஓடடெடுககும) நீாபபெருககோடு செலலாது ஏடு கள நிறகுமோ எனறுசொலலுவாாகள, நீடிய ஞானம பெறறாா நிறுததவும வலலா எனபாா=மிககசிவஞானததைப பெறற பிளளையாா தாமிடட ஏடடை நீாவழிசசெலலாது நிறுததவும வலலவா எனறு சொலலுவாாகள, நாடு எலாம காண இஙகு நணணுவாா காணீா எனபாா=நாடடிலுளளா ரெலலாரும (இவவதிசயததைக) காணுமபடி இநநகரததில வருகினறாாகள (இதனைக) காணபீராகவெனறு சொலலுவாாகள —எ-று (௮௦௭)

தோறறவா கழுவிலேறறத துணிவதே யருகரெனபா
ராறறிய வருளினமேனமை பிளளையாாக கழகிதெனபாா
நீறறினாற றெனனனறீஙகு நீஙகிய வணணஙகணடாா
போறறுவா ரெலலாஞசைவ நெறியினைப போறறுமெனபாா

(இ-ள) தோறறவாகழுவில ஏறறத துணிவதே அருகா எனபாா=தோ றறவாகள கழுமுனையிலேறுமபடி அருகாகள துணிநதது நிசசயம எனறு சொலலுவாாகள, ஆறறிய அருளினமேனமை இது பிளளையாாககு அழகு எனபாா=(பலமானமியஙகளைசசெயயததகக) திருவருளின மேனமையான இது இபபிளளையாருககழகாக இருநததெனறு சொலலுவாாகள, நீறறினால தெனனன தீஙகு நீஙகியவணணமகணடாா=விபூதியினால பாணடியன தன து சுரநோயினினறும நீஙகியவகையை யாவருஙகணடாாகள (அதனால),

போற்றுவார் எல்லாம் சைவநெறியினைப்போற்றும் என்பார்=(உண்மைநெறியைப்) போற்றுதற்குரிய எல்லீருஞ் சைவமார்க்கத்தைப்போற்றுங்களென்று சிலர் சொல்லுவார்கள்.—எ-று. (௮௦௮)

இன்னன விரண்டுபாலு மீண்டின ரெடுத்துச்சொல்ல
மின்னொளி மணிப்பொற்கொம்பின் வெண்குடை மீதுபோதப்
பன்மணிச் சிவிகைதன்மேற் பஞ்சவ னாட்டுளோர்க்கு
நன்னெறி காட்டவந்தார் நான்மறைவாழவந்தார்

(இ-ள்) இன்னன இரண்டுபாலும் ஈண்டினர் எடுத்துச்சொல்ல=இவ்விதவார்த்தைகளைப் பிள்ளையாரெழுந்தருளும் வீதியின் இருபக்கத்தும் நெருங்கியமைந்தருமாதரும் எடுத்துச்சொல்ல, மின் ஒளி மணிப்பொன் கொம்பின் வெண்குடைமீதுபோத=மின்போலு மொளிவிளங்கும் மணிகளழுத்திய பொன்காம்பினையுடைய திருமுத்துக்குடைமேலே பிரகாசிக்க, பன்மணிச்சிவிகைதன்மேல் பஞ்சவன் நாட்டுளோர்க்கு நன்னெறிகாட்டவந்தார்=அளவில்லாத முத்தாலமைந்த திருச்சிவிகையின்மேல் பாண்டிநாட்டுள்ள பலரும் உய்யும் நெறியையுணர்த்தவந்த ஆளுடையபிள்ளையார், நான்மறை வாழவந்தார்=நான்குவேதங்களும் நிலைபெற வீதியிலெழுந்தருளினார்.—எ-று.

சுருதிக்குப் புறம்பாய அருகம்-பவுத்தமுதலிய மதங்களை நிராகரித்து நான்குவேதங்களின் சாரமான சிரவுதத்தை நிலைப்படுத்தலில், நான்மறை வாழவந்தாரென்றார். (௮௦௯)

தென்றமிழ் விளங்கவந்த திருக்கழு மலக்கோன் வந்தான்
மன்றுளா ரளித்தஞான வட்டில்வணை கையன்வந்தான்
வென்றுல குய்யமீள வைகையில் வெல்வான்வந்தா
னென்றுபன் மணிச்சின்னங்க ளெண்டிசை நெருங்கியேங்க

(இ-ள்) தென்றமிழ்விளங்கவந்த திருக்கழுமலக்கோன் வந்தான்=தெற்கிலுள்ள தமிழ்நாடுவிளங்கும்படி அவதரித்த சீகாழித்தலைவரெழுந்தருளினார், மன்றுளார் அளித்த ஞானவட்டில் வணைகையன் வந்தான்=கனகசபையில் நிருத்தஞ்செய்தருளும் பெருமானருளிய ஞானப்பால் நிறைந்த பொற்கிண்ணத்தையேந்திய அழகிய திருக்கரத்தையுடையவரெழுந்தருளினார், வென்று உலகு உய்ய மீள் வைகையில் வெல்வான் வந்தான்=(சமணர்களை நெருப்பில்) வென்று உலகுய்யும்படிக்குமீண்டு வைகையில் வெல்லுகின்றவர் வந்தார், என்று பன்மணிச்சின்னங்கள் எண்டிசைநெருங்கி ஏங்க=என்று பலமுத்துக்களாலமைந்த திருச்சின்னங்கள் எட்டுத்திக்குகளிலும் நெருங்கியொலிக்கவும்.—எ-று.

சின்னங்களென்றதனால் காளம், சின்னம், தாரைமூன்றும் கொள்ளப்படும்.

இம்மூன்றும் ஞானசம்பந்தன், பாலறுவாயன், முத்தமிழ்விரகன் என்னுந் திருநாமங்கள் மூன்றையுமுறையேயொலிக்குமென முன்னர்க்கூறி, ஈண்டு கழுமலத்தோன், ஞானவடிவவண்கையன், வைகையில் வெல்வான் என்னும் நாமங்களைப் பொதுவாய் ஒலிக்குமென்றுணர்த்தியதென்னை? அம்மூன்று நாமமும் பிள்ளையார்க்கு இயற்பெயராய் வழங்கப்படுதலில், அந்நாமங்களை ஓர் திருப்பதி புகுங்கால் காளம், சின்னம், தாரைமூன்றும் முறையேயொலிக்குமெனவும், ஏனையகவுணியர் தலைவன், சண்பையர்தலைவன், புகலிக்காவலன்முதலிய பலகாரணப்பெயர்களை யிடையிடையே முறைபிறழ்ந்து பொதுமையாய் ஒலிக்குமெனவுங்கொள்க.

அவ்வாறு கொள்ளவேண்டுமென்பது, 'சீரணி தெருவினூடு திருமணஞ்செல்லல் முத்தி. னேரணிகாளஞ் சின்னமிலங்கொளித் தாரையெல்லாம், பேரொலிபெருக முன்னே பிடித்தன மறைகளோடு, தாரணியுய்ய ஞானசம்பந்தன் வந்தானென்று'' எனக்கூறி "மண்ணிறுக்கிடுக்கண்டீரவந்தவர் திருநாமங்க, ளெண்ணில பலவுமேத்திச் சின்னங்களெழுந்தபோது'' எனக்கூறுங்கால், அம்மூன்று நாமங்களையேயன்றி யேனைய பல அவாந்தர நாமங்களையுமிடையே ஒலிக்குமென்பது பெறப்படுதலினென்க (௬௧௦)

பன்மணி முரசஞ்சூழ்ந்த பல்லிய மியம்பப்பின்னே
தென்னனுந் தேவியாரு முடன்செல்லத் திரண்டுசெல்லும்
புன்னெறி யமணர்வேறோர் புடைவரப் புகலிவேந்தர்
மன்னிய வைகையாற்றின் கரைமிசை மருவவந்தார்

(இ-ள்.) பன்மணி முரசம் சூழ்ந்த பல்லியம் இயம்ப=பல அழகிய முரசமுதலியவாகச்சூழ்ந்த பலவாத்தியங்களொலிக்கவும், பின்னே தென்னனும் தேவியாரும் உடன்செல=தம்பின்னே பாண்டியனும் பாண்டிமாதேவியாருங் கூடவரவும், திரண்டுசெல்லும் புன்னெறி அமணர் வேறோர் புடைவர=திரண்டு தொகுதியாகவரும் புன் சமயவழியிற் செல்லு மமணர்கள் வேறோர் பக்கலிற் செல்லவும், புகலிவேந்தர் மன்னிய வைகை ஆற்றின் கரை மிசை மருவவந்தார்=சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் நிலைபெற்ற வைகையாற்றின்கரையிலே பொருந்தவந்தருளினார்.—எ-று (௬௧௧)

கார்கெழு பருவம்வாய்ப்பக் காமுறு மகளிருள்ளஞ்
சீர்கெழு கணவன்றன்பால் விரவுறச் செல்லுமாபோ
னீர்கெழு பௌவநோக்கி நிரைதிரை யிரைத்துச்செல்லும்
பார்கெழு புகழின்மிக்க பண்புடைவைகையாறு.

(இ-ள்.) கார்கெழுபருவம்வாய்ப்ப பார்கெழுபுகழின்மிக்க பண்புடை வைகை ஆறு=நிறைந்த கார்ப்பருவம் வர உலகில் நிறைந்த புகழால் மேம்பட்ட வைகையாறானது; காமுறும் மகளிர் உள்ளம் சீர்கெழு கணவன்

தன்பால்விரவுறச்செல்லுமாபோல்=கணவனைவிரும்பிய பெண்களது மனமானது சிறப்பு மிக்க தமது நாயகனிடத்துப் பொருந்தச்செல்லுமவ்வகைபோல, நீர்கெழுபௌவம் நோக்கி நிரை நிரை இரைத்துச்செல்லும்=நீர் நிறைந்த கடலைநோக்கி வரிசையாக அலைகளை வீசியொலித்துப்பாயும்.—எ-று

மகளிருள்ளம் கணவரிடத்துச் செல்லுதற்குக் கார்கெழுபருவம் நிமித்தமாதல்போல, வையையாறு பௌவம் நோக்கி விரைந்துசெல்லுதற்குங் கார்ப்பருவம் நிமித்தமாதலின், அதுபொருளினும் பிரித்துக்கூட்டப்பட்டது.

ஆற்றினீர் கடுகவோடு மருங்குற வரசனோக்கி
நீற்றணி திகழ்ந்தமேனி நிறைமதிப் பிள்ளையாரும்
வேற்றுரு வருகர்நீரும் விதித்தவே டிடுகவென்றன்
றோற்றவர் தோலாரென்று முன்னுறத் துணிந்திட்டார்கள்

(இ-ள்) ஆற்றில் நீர் கடுகவோடும் மருங்குற அரசனோக்கி=வையையாற்று நீர்விரைந்து செல்லுங் கரையினருகுவருங்கால் பாண்டியராசன் பார்த்து, நீற்றணிதிகழ்ந்தமேனி நிறைமதிப்பிள்ளையாரும்=விபூதியாகிய ஆபரணம் விளங்குகின்ற திருமேனியையுடைய பூரண சந்திரன்போலும் பிள்ளையாரும், வேற்றுரு அருகர் நீரும் விதித்த ஏடு இடுக என்றன்=(வேதநெறியல்லாத) வேற்றுச்சின்னங்களைப்பூண்ட அருகரே நீவிரும் நியமிக்கப்பட்ட ஏட்டினையிடக்கடவீரென்றன், தோற்றவர் தோலாரென்று முன்னுறத்துணிந்து இட்டார்கள்=(அதைக்கேட்ட அமணர்கள்) முன்தோற்றவர்கள் பின்னுந் தோல்விப்படையாரென்று துணிந்து முற்படுத்த (தம்கையிலிருக்குஞ்சமயநூல்களை) யிட்டார்கள்—எ-று (அகரு)

படுபொரு ளின்றிநெல்லிற் பதடிபோ லுள்ளிலார்மெய்
யடுபவர் பொருளை யத்தி நாத்தியென் றெழுதியாற்றிற்
கடுகிய புனலைக்கண்டு மவாவினாற் கையிலேடு
விடுதலும் விரைந்துகொண்டு வேலைமேற் படர்ந்ததன்றே.

(இ-ள்) படுபொருள் இன்றி நெல்லில் பதடிபோல உள் இலார்=தம்முட்டோன்றும் பொருளின்மையால் நெல்லினுட்பதர்போல அறிவென்னு முள்ளீடில்லாதவர்களாய், மெய் அடுபவர்=மெய்ப்பொருளைப்பொய்ப்பொருளென்று கருதுஞ் சமணர்கள், பொருளை அத்திநாத்தி என்று எழுதி=தமது (அருகநூலிற்கூறும்) பொருள்களைப் பலபட (அனேகாந்தமாய்) உண்டென்றும் இல்லையென்றும் வரைந்து, ஆற்றில் கடுகிய புனலைக்கண்டும் அவாவினால் கையில் ஏடுவிடுதலும்=ஆற்றில் வேகமாய்ச்செல்கின்ற நீரைப்பார்த்தும் (தாம் வெல்லுவோமென்னும்) ஆசையால் கையிலிருக்கும் ஏடுகளைவிடவும், விரைந்து சென்று வேலை மேல் படர்ந்தது அன்றே=அவ்வேட்டை வையையாறு விரைவாக அடித்துக்கொண்டு கடல்மேற்சென்றது.—எ-று

சமணர் சத்தபங்கியென்னும் நியாயத்தால் ஒவ்வொருபொருளினிடத்தும் வெவ்வேறு இயல்பை உபவாதனைசெய்கின்றார்கள் அதனால் அவர் மதத்தில் அனேகாந்தவாதமாய் உள்ளதுமாம் இல்லதுமாம் என்பபொருள்களினியல்புகூறப்படுதலில், அஸ்தி நாஸ்தி என்றா முன்சொன்னபொருள் பங்கப்படுதலிற் பங்கியென்பர் பங்கம்=மறுத்தல்.

அவர்கள் சீவபதார்த்தமொன்றும், அசீவபதார்த்தமொன்றும், ஆச்சிரவசு ஒன்றும், சமவரமொன்றும், நிர்சரமொன்றும், பந்தமொன்றும், மோக்கமொன்றுமென்ப பதார்த்தம் ஏழென்பர்.

அவற்றுள் சீவன் - அனுகிசித்தசீவனென்றும், முத்தசீவனென்றும், பத்தசீவனென்றும் மூவகைப்படும் அச்சீவன் அறிவுடையவனும், சித்தாயும், உடம்பினளவு எவ்வளவோ அவ்வளவு பரிமாணமுள்ளவனும், அவயவ விசிட்டனும், சீவாத்திகாயமென்ப பெயர்பெற்றுநிற்கும் அதனால் அனுகிசித்தசிவனென்றது, அருகபரமேட்டியின் சீவாத்திகாயமென்றும், முத்தசீவனென்றது, மோகாதியினால் விடப்பட்ட முத்தசீவாத்திகாயமென்றும், பந்தசீவனென்றது, மோகாதிபந்தத்தோடுகூடிய சீவாத்திகாயமென்றுங் கூறுவர்

அசீவபதார்த்தம்-புட்கலாத்திகாயம், ஆகாசாத்திகாயம், தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயமென நான்குவகைப்படுமென்றும், அவற்றுள் புட்கலாத்திகாயம்-பிருதிவியாதி நான்குமாகா பூதங்களும், புல், செடி, கொடி, மரம், முதலிய தாவரங்களும், சராயுசம், அண்டசம், சுவேதசம் என்னுஞ் சங்கமங்களுமென அறுவகையாயிருக்கும்.

ஆகாசாத்திகாயம் - உலோகாகாசாத்திகாயம், அலோகாகாசாத்திகாயம் என இருவகையாம் அவற்றுள் உலோகாகாசாத்திகாயம், சரீரத்துளிருக்கும் ஆகாயம் அலோகாகாசாத்திகாயம், வெளியிலிருக்கும் ஆகாயம் தன்மாத்திகாயம், புட்கலாத்திகாயத்தினின்றும் மேற்செல்லுங்கதிக்கு ஏதுவாயிருக்கும் அதன்மாத்திகாயம், கீழ்ச்செல்வதற் கேதுவாவும் சரீரபந்தத்திற்கேதுவாயும் இருக்கும்

ஆச்சிரவசு, கண்முதலிய இந்திரியங்களெந்தும் தங்கள் தங்கள் விருத்திகளிற்செல்வது. அவ்விந்திரியங்கள், கண்ணுதுக்குக்கண்ணம் தங்கள் தங்கட்குரிய விஷயங்களிற் பெருகியோடுதலால் ஆச்சிரவசு எனப்பெயர்பெறும்

சமவரம், இந்திரியங்களைச் சமயமமாக நிறுத்தும் தியானம் அவை சுடுபாறையிற் கிடத்தல், தலைமயிர் பறித்தல் முதலிய தவங்கள்

நிர்சரம், இந்திரியங்களைச் சயிக்குமபடியான கன்மம்

பந்தமாவது, சுதந்தரங்களைக்கெடுக்கும் மோகமுதலிய குற்றம் மோகாதி அறுகுணங்களினாலும் சீவன் பந்திக்கப்படுதலால் பந்தமென்பபெயர்

பெறும். எவ்வாறெனில், சலத்திலழுந்தாதுமிதக்குமியல்புடைய சுரைக்குடுக்கையை இரும்புக்கூட்டிற்சேர்த்துச் சலத்திலவிட்டால் அது அழுந்திவிடுவதுபோல்வது.

மோக்கமாவது, இரும்புக்கூட்டையுடைத்துவிட்டால் சுரைக்குடுக்கையெவ்வாறு மேற்செல்லுமோ அதுபோல மோகாதிகள் கெட்டகாலத்துச் சீவன்மேலே முத்தியிற் செல்வது. இப்பதார்த்தம், உண்டென்றும் இல்லையென்றும் எழுபகுப்பாய் விவகரிக்கப்படுதலில், அது சத்தபங்கி நியாயமென வழங்கப்படும்.

சத்தபங்கி நியாயமாவது, இப்பொருள் உள்ளதா என்னுங்கால் உள்ளதுமாம், இல்லதுமாம், உள்ளது மில்லதுமாம் எனச்சத்திற்கு மூன்று பகுப்பாயும், இப்பொருள் அவாச்சியமாவென்று வினவுங்கால் அவாச்சியமென்றுஞ் சொல்லலாம் அவாச்சியமாயுண்டென்றுஞ் சொல்லலாம், அவாச்சியமாயில்லையென்றுஞ் சொல்லலாம், அவாச்சியமாயில்லையென்றும் உண்டென்றுஞ் சொல்லலாம் என அவாச்சியத்துவத்திற்கு நான்குபகுப்பாயும் எழுபகுப்பாய்க் கூறப்படுவதாம்.

ஒருவஸ்துவில் நித்தியத்துவமும், அநித்தியத்துவமும், நித்தியாநித்தியத்துவமும், அவாச்சியத்துவமும், வாச்சியத்துவமும் ஓர்காலத்தொருங்கு நிற்றல் பொருந்தாமையில் அசம்பவதோடமாம். எவ்வாறெனில் மண், உண்டையாயிருக்குங்காலத்தில் கபாலமும், கபாலமாயிருக்குங்காலத்தில் கடமும் இல்லாமையால் என்க. இம்மூன்றிற்கும் விவகார அவத்தைவேறு வேறேயன்றி யொன்றன்று.

முன் பத்துப்பதார்த்தமென்றது சமணருளொருசாரார் மதம்; எண்டு எழென்றதொரு சாரார்மதம். (௮௧௪)

ஆறுகொண் டோடுமேட்டைத் தொடர்ந்தெதி ரணைப்பார்போலத்
தேறுமெய் யுணர்விலாதார் கரைமிசை யோடிச்சென்றார்
பாறுமப் பொருண்மேற்கொண்ட படிக்கை யெட்டாதங்கு
நூறுவிற் கிடக்கைமுன்னே போனது நோக்கிச்சென்றார்.

(இ-ள்) ஆறுகொண்டு ஓடும் ஏட்டைத்தொடர்ந்து எதிர் அணைப்பார் போல=வையையாறு தன்மேற்கொண்டு கடலின்மேற்செல்லு மேட்டினைப் பின்றொடர்ந்து அதன்முன்னணைப்பவர்போல, தேறும் மெய்யுணர்வு இலாதார் கரைமிசை ஓடிச்சென்றார்=தெளிந்த மெய்யுணர்ச்சியில்லாத சமணர்கள் கரைமேலோடிச்சென்றார்கள், பாறும் அப்பொருள்மேற்கொண்ட படிக்கை எட்டாது=(வாதிக்குங் காலநிலைபெறா தழியும்) பொய்ப்பொருளை மேற்கொண்ட அவ்வேடுகள் அவர் கைக்கு எட்டாமல், அங்கு நூறுவிற்கிடக்கை முன்னே போனது நோக்கிச்சென்றார்=அவ்வெள்ளத்தில் நூறுவிற்

கிடைக்குமேல் முற்பட்டுச் சென்றமையைப் பார்த்துக் கரைமேல் மீண்டு வந்தார்கள்.—எ-று.

பாறும் அப்பொருளென்றது - மேற்கூறிய சீவன், அசீவன் என்னும் பகுப்பாய், எழுவகைத்தாய், அஸ்தி, நாஸ்தியென்று விகற்பிக்கப்படும் பொருளையுடைய ஏடெனக. அப்பொருள்கள் அவர் கூறும் அவ்வியல்பினில்லாது மறுக்கப்படுதலில், பாறும் அப்பொருள்களென்றார்.

அவையாவன, அருகபரமேட்டியைச் சீவனாய்க்கூறி நித்தியமான இயற்கை ஞானமுடையனென்றலும், சீவனைச் சங்கோச விகாசதன்மியாயிருப்பனென்றலும், ஓர்பொருளை அஸ்தியென்றுகூறி, அஸ்திநாஸ்தியென்று பலபடக்கூறுதலும், உலகு ஒருவரால் படைக்கப்பட்டதல்லவென்று கூறுதலும் முதலியன.

இவை மறுக்கப்படுமாறு ஒருவாறு காட்டுதும்.

அருகனுக்கு அனந்தஞான முடைமையை மறுத்தல்.

சந்திரனிடத்துச் சீதகுணம்போல அருகபரமேட்டியிடத்து அனந்த ஞான முதலியன இயற்கையாயுள்ளனவெனில், குற்றமாம் பாவம் வாராது அறத்தினானென்று அவர் கூறுதலில், பந்தமுதலிய குற்றங்களினின்றும் விடப்பட்டு வேறு முத்தர்போலச் சேர்க்கை ஞானமுடையனென்பது சித்தித்தலில், கன்மநாசம் வந்து முத்தனானவனென்றும் அதனாலது பொருந்தாது.

சீவன், சங்கோசவிகாச தன்மியென்றதை மறுத்தல்.

சீவன், எறும்பின் சரீர அளவில் சுருங்கியும், யானையின் சரீர அளவில் விரிந்துமிருத்தலால், சங்கோசவிகாச தன்மியாமெனில் ஒருடலில் ஓரவயவங்குறைக்க அவ்வளவில் அச்சீவன் குறையவேண்டும். இன்னும் பரகாய யோகியினது சீவன், பிராகாமிய சித்தியினாலே வேறு வேறு சரீரங்களிற் புகுங்கால் யானையின் சரீர அளவிற்கும், எறும்பின் சரீர அளவிற்கும் விரிந்துஞ் சுருங்கியும் விகாரப்படவேண்டும். யானையின் சரீரம் பெரிதும், எறும்பின் சரீரஞ் சிறிதுமாதலின் அற்றன்று.

தீபம் ஓரிடத்திருந்தும் அதன் பிரபை வீடுமுழுதும் பரவினாற்போலச் சிறிய உருவமே பேருடலிற் பெருகியிருக்குமெனில் அவ்வாறு விரிதல் சுருங்குதல் விகாரமாதலில், அச்சீவன் சடமாய் அநித்தியமாம். அதனாலது பொருந்தாது.

ஒருபொருள் அஸ்தியுமாம், நாஸ்தியுமாமென்பதை மறுத்தல்.

குடம், சலமெடுக்கும் இச்சையுடையானுக்கு அக்கிரியைக்குரிய பொருளாய், உள்ளதாய், மேல்சலம் வைத்து ஆண்டுவர அதனை இல்லையென்றல் எவ்வாறு

ஒன்றற்கொன்று விருத்தமாயுள்ள உண்மையும் இன்மையும், இருளும் ஒளியும்போல ஒருபொருளிடத்திருக்குமா? இருக்குமெனின் குடத்தை நோக்குங்கால் குடமுண்டென்றும், அதனுண்மையும் இல்லென்று அதனின்மையும் யார்க்காவது பிரத்தியக்ஷமாவதுண்டா? இன்னும் சூரியனுள்ள காலத்து இல்லையென்றுபொருள் தோன்றுமையும், பாம்புள்ளகாலத்துப் பாம்பில்லையென்று பட்டினமையும் வேண்டும் அன்றேல் இல்லையென்றலும், உண்டில்லையென்றலும் பொருந்தாது. குடம் இல்லையெனினுங்காலுங் குடத்தைக் கிரிக்கவேண்டுதலில், இல்லையுண்டென்றலும் பொருந்தாது மேல் பிரத்தியக்ஷமாயிருக்குங்குடத்தைப் பெயரிட்டு வாச்சியமாகக் கூறுதல் பொருந்தும் அவாச்சியமென்றலும், அதுவன்றி வாச்சியமென்றலும் வாச்சியாவாச்சிய மென்றலும் விருத்ததன்மமாதலில், ஓர் பொருளிடத்தோர் காலத்தின்கும் அதனால்வாச்சிய மென்றுசொல்லல் வேண்டுமேயன்றி அநிர்வசனீயமென்னும் அவாச்சியமெனக் கூறுதல் முதலியனவும் பொருந்தாது. அனேகாந்தவாதயு கூறும் அவ்வருக்கும் ஏழுபொருள் உளதெனவாச்சியப்பட்டக் கூறுதலில், அநேகாந்தவாத இயல்பு அசம்பவமாமெனக.

உலகு ஒருகாத்தாவையுடைய தென்றலைமறுத்தல

உலகு ஒரு முதல் வன்றால் பண்டைக்கப் படடகாரியமன்று சுபாவத்தாலெனில் அசேதன மனேகமாய், மூர்த்தவஸ்துக்களாய அவயவத்தோடு கூடினதாகக் காணப்படுதலில் காரியமாதல் சித்தம் யாதுகாரியம், அது காத்தாவையுடைத்து. குடம்போல என்னும் நியாயத்தால் காத்தாவுடைமை பெறப்படுதலிலதுவும் பொருந்தாது (அகரு)

காணவு மெய்தாவண்ணங் கடலின்மேற் செலலுமேடு
நாணிலா வமணாதமமை நட்டாற்றில் விட்டுப்போகச்
சேணிடைச் சென்றுநின்றார் சிதறினார் திகைத்தாரமனன
னாணையில் வழுவமாட்டா ரஞ்சுவா ரணையமிணார்

(இ-ள்) காணவும் எய்தாவண்ணம் கடலின்மேல் செல்லும் ஏடு = கண்ணுறக்காணவும் விடயமாகாவண்ணங் கடலின்மேல் விரைந்து செல்லு மேடானது, நாண் இலா அமணாதமமை நட்டாற்றில்விட்டுப்போக = தம நிலையினிற்றிபுணாந்தும் அதனால் நாணமில்லாத சமணரைகளை நட்டாற்றில்விட்டுச் செலல, சேணிடைச்சென்று நின்றார் சிதறினார் திகைத்தார் = அதி தூரஞ் சென்று நின்றவராய (ஒருவரோடொருவர்சேராது) சிதறி (மனம்) திகைத்தார்கள், மன்னன் ஆணையில் வழுவமாட்டாது அஞ்சுவார் ஆணையமிணார் = பாண்டியனது ஆணையினின்று வழுவுதற்கு அஞ்சுமச்சமணர்கள் ஒருங்குசேரத் திரும்பினார்கள்.—எ-று.

தமநிலையினிற்றிபுணாந்தும் நாணமின்மையினால் நாணிலா அமணரென்றும், நமபின அமணர்க்கு உறுதிபயவாது அவரை அந்நூல்களநட்டாற்றி

ல விட்டுச்சேறலில் நட்டாற்றிலெள்ளருங்கூறினர் அது "நம்பிஞானநட்டாற்றில் விட்டான்" என்னு முலகவழக்கைக்குறிப்பித்தது. (௮௧௬)

வேறொரு செயலிலாதார் வெருவுற்று நடுங்கித் தம்பால்
வீறுவந் தெய்திற் றென்றே மன்னவ னெதிர்வந் தெய்தி
யூறுடை நெஞ்சி லச்சம் வெளிப்பட வொளிப்பார் போன்று
மாறுகொண் டிருமிட்டால் வந்தது காணுமென்றார்.

(இ-ள்) வேறு ஒரு செயல் இலாதார் வெருவுற்று நடுங்கி=தாம்செய்யுஞ்செயல்வேறொன்றுமில்லாத அமணர்கள் அஞ்சி நடுக்கமுற்று, தம்பால் ஏறுவந்து எய்திற்றென்றே மன்னவன் எதிர் வந்தெய்தி=தம்மிடத்து நாசம் வந்தடைந்ததென்று பாண்டியனது எதிரேவந்து நின்று, ஊறுடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட ஒளிப்பார்போன்று=துன்பமடைந்த தமது மனத்தில் அச்சமானது வெளிப்படுங்காலத்தை மறைப்பவரையொத்து, மாறுகொண்டு இரும் இட்டால் வந்தது காணும் என்றார்=எமக்குப்பிரதிவாதிகளாக இருக்கும் நீவிரும் உம்முடைய ஏட்டையிட்டால் நேரிடுவதைப் பார்ப்போமென்றார்கள்—எ-று. (௮௧௭)

மாசுசே ரமணரெல்லா மதியினின் மயங்கிக்கூற
வாசிலா நெறியிற்சேர்ந்த வரசனு மவரைவிட்டுத்
தேசுடைப் பிள்ளையார் தந் திருக்குறிப் பதனைநோக்கப்
பாசுரம் பாடலுற்றார் பரசமயங்கள்பாற

(இ-ள்) மாசுசேர் அமணரெல்லாம் மதியினில் மயங்கிக்கூற = குற்றம் பொருந்திய சமணர்களெல்லாரும் தம்மதியின்கண் மயக்கமுற்று இவ்வாறு சொல்ல, ஆசுஇலாநெறியில் சேர்ந்த அரசனும் அவரைவிட்டு=குற்றமில்லாத சைவநெறியிற் சேர்ந்த அப்பாண்டியனும் அச்சமணரைவிட்டு, தேசுடைப் பிள்ளையார்தம் திருக்குறிப்பதனை நோக்க=(சிவஞானமாகிய)ஒளியையுடைய ஆளுடைய பிள்ளையாரது திருக்குறிப்பைப்பார்க்க, பரசமயங்கள் பாற = புறச்சமயங்கள் நிலைகெட்டோட, பாசுரம்பாடலுற்றார் = திருப்பாசுரத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்—எ-று.

பரசமயங்களென்றதனால்-வேதமூலமல்லாத சைன, பவுத்தங்களும், வேதமூலமான பாஞ்சராத்திர சாங்கிய முதலியனவுங்கொள்க

வேதமூல மல்லாதன பாறவென்ற தொக்கும் வேதமூலமாயுள்ளனவும் பாறஎன்றதென்னை? அவைகள் வேதமூலமாயினும் சைவம்போல வேதசாரமாய நிருட்பாசுபதமென்னும் பேரடைதலின்மையாலென்க.

பரசமயங்கள் பாற என்றதனால், வேதத்தின்புறப்புறமாயுள்ள சைன, பவுத்தங்களும், அதின் புறமாயுள்ள மீமாம்சை, சாங்கியம், பாஞ்சராத்திர முதலியனவும், அகப்புறமாயுள்ள சைவம், பாசுபதமுதலியனவுங்கொள்க

புறப்புறமாயுள்ளன - வேதமூலமன்மையின் அவைமறுத்தற்குரியன வாம். புறமாயுள்ள மீமாமசைமுதலியன வேதமூலமாதலின் மறுக்கப்படா வெனின் நன்குசொன்னுய. அவை வேதமூலமாய வேதத்தின் ஒருபுடை யொத்த பொருளுடையனவேனும் அவைமுறையே கன்மம், கர்த்தா, பிரகிரு திகர்த்தா, பிரகிருதிபுருஷருள் வாசுதேவன் கர்த்தா எனக்கூறி யவ்வாறு மறுதலைப்பொருள்களைப் போதித்தலின் மறுக்கப்படுமெனக

சைவம், பாசுபதம், காளாமுகம், வாமம், வைரவமுதலிய அகப்புறங் களாதலில், அவை மறுக்கப்பட்டவாறென்னெனின் ? அவை சிவபெருமானை யே முதற்கடவுளெனக்கூறும் நிலைமையால் மறுக்கப்படாவாயினும், சுருதி விருத்தமான ' கொள்கைவகையானும் அனுட்டானவகையானும் மறுக்கப் படுமெனக. பின்தாபிக்கப்படுவது வைதிக சைவமோவெனில், வைதிக சைவத்தோடு மாறுபடாது அதனிலுஞ் சிறந்த சுருதிசாரமெனனுஞ் சித்தா ந்தசைவமேயாம்

புறப்புறம், புறம், அகப்புறம் என்னும் மூவகை மதங்களும் ஆப்த வாக்கியமாக, வேதமும் சிவாகமமுமே முக்கியப்பிரமாணமென்பதென்னை ? அவை உத்தமா மத்திமா அதமரென்னும் மூவகை அதிகாரிகளுள், மத்திமா அதமரென்னும் அதிகாரிகளின்பொருட்டுத் தேவாகள் முனிவாகளால் கூறப் பட்டதென்றும் , அவ்வாறுன அதிகாரிகளின்பொருட்டு வாமாதிசாஸ்திரங்க ளும் மச்சகேந்திரரென்று மானுடசித்தா முதலியோரால் கூறப்பட்டதெ ன்று புராண இதிகாசங்களிற் கூறப்படுமாகையாலும், அவ்வாறன்றி அப்பு ராண இதிகாசங்களில் உத்தமாதிகாரிகளின்பொருட்டுச் சுருதியும், சுருதி சாரமாகிய ஸ்ரீ,காமிகாதி ஆகமங்களும் சிவபிரானுலருளிச்செய்யப்பட்டதெ னக் கூறப்படுதலால் அவ்விரண்டும் முக்கியப்பிரமாணமேயாம்

அவ்வாறு வேதம் பிரமாணமென ஸ்ரீ, நீலகண்ட சிவாசாரியராலகூறி, மேல் வேதசிவாகமங்களுக்குப் பேதமின்மை, சிவாகமம் சுருதி சாரமென னுங் கருத்தாலங்கீகரிக்கப்பட்டது

அவ்வாறு ஸ்ரீ,காமிகத்தும், சைவாகமம் சிரௌதமென்றும் சிரௌத மல்லாததென்று மிருவகையெனக்கூறி, வாமாதி ஆகமங்களைச் சுருதிசார மல்லவென்றும், ஸ்ரீ,காமிகாதி ஆகமங்கள் சுருதிசாரமான சிரௌதமென் றுங் கொள்ளப்படும் (௮௧௮)

தென்னவன் மாறனுந்தானுஞ் சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றையார்தந் திருநீறு பூசப்பெற்று
முன்னைவல் வினையுநீங்க முதல்வனை யறியுந்தன்மை
துன்னினன் வினைகளொத்துத் துலையென நிற்றலாலே.

(இ-ள்.) தென்னவன் மாறன்தானும் சிரபுரத்தலைவர்தீண்டி=பாண் டியராசனும் சீகாழித்தலைவராகியஆளுடைய பிள்ளையார் தமது திருக்கரத்தா

லதீண்டி, பொன் னவில்கொன்றையார் தம் திருநீறு பூசப்பெற்று=பொன் னென்று கூறுங்கொன்றைப்பூமாலையை யணிந்த சிவபெருமானது விபூதியைப் பூசப்பெறுதலால், முன்னைவல்வினையும் நீங்கி=முன்றான் சமணசமயத்தில் வரத்தக்க கொடியதீவினையினின்றும் நீங்கி, வினைகள் ஒத்துத்துலையென நிற்றலால்=இருவினைகளும் மலபரிபாகத்தோடு வருங்கன்மசாமியத்தினால் துலையிலிட்ட பொருள்போல ஒத்து நிற்றலால், முதல்வனை அறியும் தன்மை துன்னினான்=சிவபெருமானை யறியுஞ் சத்திநி பாதத்தன்மையை யடைந்தான் —எ-று.

முதல்வனையறியுந் தன்மையாவது- இருவினை யொப்பு, மலபரிபாகங் காரணமாக வருந்தீவிரம், தீவிரதரம், மந்தம், மந்ததரம் என்னுஞ் சத்திநி பாதம். சத்திநிபாதமாவது - திரோதான சத்தியினது நீக்கமும், அனுக்கிரக சத்தியினது பதிதலுமாம். சத்திபதியுங்கால் சமுசாரபயமும், மோட்சத்தி லிச்சையும் பிறத்தலால், அச்சத்திநி பாதத்தை முதல்வனை யறியுந்தன்மை யென்றும், அதற்கிருவினை யொப்புங்காரணமாதலின் வினைகளொத்துத் துலையென நிற்றலாலென்றுங் கூறினார்.

சத்தியாவது-சடமாய், நித்தியமாய், வியாபகமாய், விபுவாயிருக்கும் பரிக்கிரகசத்தியென்னும் மாயைக்குவேறாய், சித்தாய், நித்தியமாய், வியாபகமாய், விபுவாய், பரிணாம ரூபமின்றி யெப்பொழுது முயிர்க்குயிராய்க் கலந்து நிற்குஞ் சிவசமவேதையாகிய சிவசத்தியேயாம்.

அச்சத்தி - என்றும் உயிருடன்கலந்திருக்கப் பந்தம் நீங்காதிருப்பானேனெனில்? நன்றுசொன்னாய். மலபரிபாககாலமெய்தாமையால் பந்தம் நீங்காதிருந்ததெனக. அற்றேல், பந்தநீக்கத்திற்குப்பரிபாககாலங்காரணமாயின் சிவனால் பயனின்றெனில், அற்றன்று.

சூரியன் நாடோறும் பக்குவம் வருவித்துப் பக்குவமாய தாமரை அரும்புகளை அப்பக்குவகாலங் காரணமாய் மலர்விப்பன். அதுபோலச் சிவபிரானுங் காலந்தோறும் பரிபாக நிமித்தமான தொழிலைச்செய்து பரிபாகம் வந்துழித்தன் வழித்தாய அப்பரிபாக காலநிமித்தமாய்ச் சத்திபதிவித்து அநுக்கிரகஞ்செய்வன். காலம் சடமாதலால் சககாரியல்லது வினைமுதலாகாமையின்.

அச்சத்தி நீங்குதலும் பதிதலு மெவ்வாறெனில்? அச்சத்தி திரோதான சத்தியாய், மலகன்மமாயைகளை யதிட்டித்து நியதி தத்துவத்தின் வழியாய்ப் பிறர் சம்பந்தமான போகத்தையொருவன் புசியாமலும், தன் சம்பந்தமான போகத்தைப் பிறன்புசியாமலும் போகங்களை வரையறுத்து அப்போகம் மிகவும் நிந்திதமாயினுமதனை நன்கென்று புசிக்கச்செய்து நிற்கும். மேலவ்வாறு பக்குவப்பட்ட புண்ணியபாவங்களை ஆக்கம்பற்றி அனுபவிக்குங்கால் காலவிசேடத்தில் இருவினையொப்பும் மலபரிபாகமும்

வருவித்து, உபகார, அபகார சமபுத்திபிறப்பிக்குங்கால் கன்மம் புசிப்பித்தல் கூடாமையில், தான் சிறிது நீங்கிச் சமுசாரபயமும், மோட்ச இச்சையும் பிறப்பித்துக் குருவைத்தேடியடையும்படி செய்யும்.

மேல் அக்குருவடிவாயிருக்கும் சிவபிரான், ஆறத்துவாக்களையுஞ் சோதித்து மலசத்தியினாவாரகத்தை நீக்கியனுக்கிரக சத்தியைப் பதிப்பிப்பர். இதுவேசத்தி நீங்குதலும் பதிதலுமாம். ஆயின், அச்சத்திகுடத்தில் நெல்லிக்காய்போல் தாம் வீழ்ந்தவிடத்தாங்கிழியும் அடங்கியுமிருக்கும் மூர்த்தப்பொருள்போலாதலில், வியாபகவிபுவாதலிழுக்குடைத்தாமெனில் ? நன்குசொன்னாய். அது நித்தியனாய் விபுவாயிருக்கின்ற ஆன்மா, சரீரோபாதிவசத்தால்போகின்றது, வருகின்றது, நசிக்கின்றது, பிறக்கின்றதென்னும் உபசாரவழக்குப்போல, ஆணவமல உபாதிவசத்தால் நீங்கியதென்றும், பதிந்ததென்றுங்கூறப்படும்.

அச்சத்திரோதான சத்தியே அனுக்கிரகசத்தியாய் மீண்டு பதிதலின் இரண்டென்றது அவசரபேதம். இது சத்திநிபாத இயல்பு.

கன்மசாமியமாவது-ஒன்றற்கொன்று விருத்தமான பாவபுண்ணியங்கள் தமது எண்ணிக்கையின் சமமன்று அவற்றுள் அதிகப்பட்ட பக்குவகன்மம் முன்னும் குறைந்த பக்குவகன்மம் பின்னும் அனுபவிக்கப்படும் ஆதலில், சாமியம் வாராது. அதுவன்றி எல்லார்க்கும் கன்மசாமியம் ஒருங்கு கூறவேண்டும்.

யாண்டு அதிகமும் ஊனமும் இல்லாமல் அசுவமேதபலமும், பிரமகத்திபலமுஞ் சமமாய் இரண்டுகாமுகரால் போகத்தின்பொருட்டு ஓர்காலத்து இச்சிக்கப்படும் ஓர் காமினிபோல் ஓர்காலத்தொரு புருடனால் அனுபவிக்கவருங்கால் இரண்டுஞ் சமபலமாதலால் ஒன்றையொன்று தகையுங்கால் இரண்டும் நசிக்கும். இவ்வாறு விருத்தமான இரண்டுகன்மங்கள், சாமியமாவதே கன்மசாமியமெனப்படும்.

இக்கன்மசாமியமாத்திரமொருவனுக்குப் பிறந்தால் மலபரிபாகம் வாராமையால் ஒருமலத்தனுரும் விஞ்ஞானகைவல்யமுண்டாம். மலபரிபாகம் வந்தால், சத்திநிபாதம்வரும். இருவினையொப்பும் மலபரிபாகமும், சத்திநிபாத நிமித்தமாதலில், எல்லா ஆசிரியராலும் இவ்விரண்டுங் கொள்ளப்படும். அற்றேல், ஒருவன்செய்த புண்ணியபாவங்கள் கோடிகற்பஞ்செல்லினும் அனுபவியாமலொழியாதென்றதனோடு மாறுபடுமெனில் ? அற்று ஒருவனுக்குத் தேகமுள்ளளவுமனுபவிக்கும் பிராரத்தகன்மமும் புண்ணியபாவங்களுள் அதிகமாய்ப் பக்குவப்பட்டுள்ளனவுமாய நியதகாலபோக்கிய கன்மங்களேயன்றி, இவ்வாறு விருத்தகன்மமாயச் சாமியமடைந்து நின்றவற்றையன்று. அதனால், மாறுபடுதலின்று. இஃது கன்மசாமியவியல்பு (௮௧௧)

வேறு

உலகியல் வேதநூ லொழுக்க மென்பது
நிலவுமெய்ந் நெறிசிவ நெறியே யென்பதுங்
கலதிவா யமணர்காண் கிலர்க ளாயினும்
பலர்புகழ் தென்னவ னறியும் பான்மையால்

(இ-ள்.) உலகு இயல் வேதநூல் ஒழுக்கம் என்பதும்=உலகாசாரம் வேதநூலின் ஒழுக்கமென்பதையும், நிலவும் மெய்ந்நெறி சிவநெறியே என்பதும்=விளங்கும் வீடுகூடும் நெறி சைவநெறியே என்பதும், கலதிவாய் அமணர் காண்கிலர்களாயினும் = கலகஞ்செய்யும் வாயையுடைய சமணர்கள் காணாதவராயினும், பலர் புகழ் தென்னவன் அறியும் பான்மையால்= பலராலும் புகழப்படும் பாண்டியராசன் அவற்றையறியுந்தன்மையால்-எ-று.

அந்தணர் முதலிய வருணத்தார், தத்தமக்கு விதித்த அறங்களின் வழுவாதொழுகுதலும், அதனால் பொருளீட்டலும், இன்பமடைதலுமாகிய அறம் பொருளின்பங்களை உலகியலென்றார். அம்மூன்றும் வேதத்திற் கனம்பாகையிற்கூறும் அது மிருதி, புராணங்களால் விளங்கும். இம்மூன்றுமல்லாத வீடுகூடும் நன்னெறி, சற்சாரமான சைவநெறியேயென்றிட பிறிதொன்றி னுணர்த்தவென்பார் நிலவு மெய்ந்நெறி சிவநெறியேயென்றும், இவ்வாறுணர்தல் - இருவினையொப்பு, மலபரிபாக நிமித்தமாய வருஞ் சத்திநிபாதத்தன்றியேலாமையின் ஆயிரம் விரித்துரைப்பினும் அந்தசனோராமைபோல அமணருணரார் என்பார். கலதிவாயமணர்காண்கிலர்களென்றும், பாண்டியன் மேற்கூறிய இருவினையொப்பு, மலபரிபாகமான சத்திநிபாதமுடைமையின், அவனறியும் பான்மையாலென்றுங் கூறினார்.

உலகியலென்றதனால், அறம்பொருளின்பங்களையும், மெய்ந்நெறியென்றதனால், பரமப்பிரயோசனமான வீட்டுநெறியென்பதும் போந்தவாறு அறிக. (௮௨0)

அலரும் விரைசூழ்பொழிற் காழியு ளாதிஞான
மலருந் திருவாக்குடை வள்ளலா ருள்ளவண்ணம்
பலரு முணர்ந்துய்யப் பகர்ந்து வரைந்தியாற்றி
னிலவுந் திருவேடு திருக்கையா னிட்டிட்டார்

(இ-ள்.) அலரும் விரை சூழ்பொழிற்காழியுள்=பூக்கள் மலரும் வாசனை சூழ்ந்த சோலையையுடைய சீகாழியிலவதரித்த, ஆதிஞானம் மலரும் திருவாக்குடைவள்ளலார்=சிவஞானம் மலருந் திருவாக்கினையுடைய ஆளுடையபிள்ளையார், உள்ளவண்ணம்=வேதத்தின் கருத்தான அறநெறியையும் வீட்டுநெறியையும், பகர்ந்து வரைந்து=திருப்பாசுரமாக அருளிச்செய்து அதனையெழுதி, ஆற்றில் நிலவும் திருவேடு பலரும் உணர்ந்து உய்யத்

திருஞானசம்பந்தசுவாமிகள்-இட்டஏடு-எதிர்நோக்கி, சமணரிட்டஏடுகள்-சமுத்திரத்திலும்சென்றது.

திருக்கையால் நீட்டி இட்டார் = வைகையாற்றில் விளங்கும் பாசுரத்திருவேட்டை (இது மெய்ப்பொருளென்பதை) யாவரும் உணர்ந்தேற்றத் (தமது) திருக்கரத்தால் நீட்டியிட்டருளினார் — எ-று.

தென்னவன் அறியும் பான்மையால் வள்ளலார் உள்ளவண்ணம் பகர்ந்து வரைந்து ஆற்றில் திருவேடு பலரும் உணர்ந்துய்ய நீட்டியிட்டாரெனக் கூட்டுக. (௮௨௧)

திருப்பாசுரம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே (௧)

அரிய காட்சியராய்த் தமதங்கைசேர்
எரியர் ஏறுகந்தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையராயினும்
பெரியர் ஆரறிவார் அவர் பெற்றியே (௨)

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தையாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார்கொலோ. (௩)

ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கத் தக்கார். (௪)

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கல் உறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. (௫)

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீராகில்
நாடுந் திறத்தார்க்கருளல்லது நாட்டலாமே. (௬)

கடிசேர்ந்தபோது மலரானவைக்க கொண்டுநல்ல
படிசேர்ந்தபால்கொண் டங்காட்டிட்ட தாதைபண்டு
முடிசேர்ந்தகாலை யறவெட்டி முக்கண்மூர்த்தி
யடிசேர்ந்தவண்ண மறிந்தார்சொலக்கேட்டுமன்றே (௭)

வேதமுந்நல்வர் முதலாக விளங்கிவையம்
மேதப்பட்டாமே யுலகத்தவ ரேத்தல்செய்யப்
பூதமுதல்வன் முதலேமுதலாப்பொலிந்த
சூதன்னொலிமாலையென் றேகளிக் கோவைசொல்லேல் (௮)

பாராழிவட்டம் பகையாலனிந் தார்ட்டவாடிப்
பேராழியான திடர்கண்டருள் செய்தல்பேணி
நீராழிவிட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழியீந்த புகழும்புக ழுற்றதன்றே (௯)

மாலாயவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாயதேவர் பகரில்லமு தூட்டல்பேணிக்
காலாயமுந்நீர் கடைந்தார்க்கரி தாயெழுந்த
வாலாலமுண்டங் கமரர்க்கருள் செய்ததாமே (௧0)

அற்றன்றியந்தண் மதுரைத்தொகை யாக்கினானுந்
தெற்றென்றுதெய்வந் தெளியார்க்கரைக் கோலைத்தெண்ணீர்ப்
பற்றின்றிப்பாங் கெதிர்வின்வவும் பண்புநோக்கிற்
பெற்றென்றுயர்ந்த பெருமான்பெரு மானுமன்றே (௧௧)

நல்லார்கள்சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
வெல்லார்களுமப்பரவு மீசனை யேத்துபாடல்
பல்லார்களுமதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்
வல்லார்கள்வானோ ருலகாளவும் வல்லரன்றே (௧௨)

திருச்சிற்றம்பலம்

வேறு

அந்தணர்தேவ ரானினங்கள்வாழ்கவென
றிந்தமெய்ம்மொழிப்பய னுலகமின்புறச்
சந்தவேள்விகள்முதற் சங்கரர்க்குமுன்
வந்தவர்சனைவழி பாடுமன்னவாம்.

மன்னியிள மேதிகள படிந்துமனை சேருதவி மாணிகுழியே.

உந்திவரு தணகெடில மோடுபுனல சூழுதவி மாணிகுழிமே
லந்திமதி சூடியவெ மானையடி சேரு மணி காழிநகரான
சந்தநிறை தணடமிழ தெரிந்துணரு ஞானசம பந்தனதுசொன
முந்தியிசை செய்துமொழி வாாகளுடை யாாகணெடு வானநிலனே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயா - மாணிக்கவரதேசுவரா

தேவியாா மாணிக்கவல்லியம்மை

கன்னிமாவனங் காப்பெனவிருந்தவா கழலிணை பணிந்தங்கு
முன்னமாமுடக கானமுயறகருளசெய்த வண்ணமுமொழிந்தேத்தி
மன்னுவாாபொழிற றிருவடுகூரினை வந்தெய்தி வணங்கிப்போயப
பின்னுவாாசடை யாாதிருவககரை பிள்ளையாரணைவுற்றார்

(இ-ள) கன்னிமாவனம காப்பென இருந்தவா கழல இணைபணிந்து=கன்னிவனமேதமக்குக் காப்பாக இருந்தருளிய தோன்றுதத்துணைாதாது இரண்டு திருவடிகளைவணங்கி, அங்கு முன்னம மாமுடக்கால முயறகு அருளசெய்தவண்ணமும மொழிந்து ஏத்தி=அவவிடத்து முனபு பெருமைபொருந்தியமுடக்காலையுடைய முயலுக்கருளசெய்தவண்ணத்தையும பதிகமுதலிலருளிசசெய்து துதித்து, மன்னுவாா பொழிற்றிருவடுகூரினைவந்து எய்தி வணங்கிப்போய=நிலைபெற்ற நீணடசோலைசூழந்த திருவடுகூரென்னுந் திருப்பதியைவந்தடைந்து அங்கு வணங்கிசசென்றருளி, பின்னுவாாசடையாா திருவககரைபிள்ளையாா அணைவுற்றாா=பின்னிய நீணடசடையையுடைய திருவககரையென்னுந் திருப்பதியைபபிள்ளையாரடைந்தருளினார்.—எ-று ()

திருப்பாதிரிப்புலியூா-பண-செவவழி

திருச்சிற்றம்பலம.

முன்னநின்றமமுடக காலமுயறகருள செய்துநீள
புன்னைநின்றுகமழ பாதிரிப்புலி யூருளான

றனனேரினறுவணங குநதனேததவ மிலலிசள
பினனேரினறபிணி யாககையைப பெறுவாாகளே.

அநதணலலாாகள காழியுண ஞானசம
பநதனலலாாபயில பாதிரிபபுலி யூாதனுட
சநதமாலேததமிழ பததிவைதரித தாாகளமேல
வநதுதியவவடை யாமையாலவினே மாயுமே.

திருசசிறறமபலம

சுவாமிபெயா-தோனறுததுணையீசா தேவியாா-தோகையமபிகை.

திருவடுகூா - பணகுறிஞசி

திருசசிறறமபலம

சுடுகூரொிமாலே யணிவாசுடாவேலா
கொடுகூாமழுவாளொன றுடையாாவிடையூாவா
கடுகூாபசிகாமங கவலேபிணியிலலாா
வடுகூாபுனலசூழநத வடுகூரடிகளே.

படிநோனபவையாவா பழியிலபுகழான
கடிநாணிகழசோலே கமழுமவடுகூரைப
படியானசிநதை மொழியாாசமபநத
னடிஞானமவலலா ரடிசோவாாகளே.

திருசசிறறமபலம

சுவாமி-பெயா-வடுகேசுவாா தேவியாா-வடுவகிாககண்ணமமை.

வககரைபபெரு மானறனேவணஙகியங கமருநாளருளாலே
செககாவேணியா ாிருமபைமாகாளமுஞ செனறுதாழநதுடனமீணடு
மிககசீாவள ரதிகைவீரடடான மேவுவாா தமமுனபு [வுறறாா.
தொககமெயததிருததொணடாவநதெதிாகொளததொழுதெழுநதணே

(இ-ள) வககரைபபெருமானறனேவணஙகி=திருவககரையில எழுந தருளிய சநதிரசேகரரைவணங்கி; அஙகு அமருமநாள = அஙகெழுநதருளி யிருககுமநாளில, அருளாலே செககா வேணியாா இருமபை மாகாளமும செனறு தாழநது உடன்மீணடு=திருவருளினறு சிவநத சடையையுடைய மாகாளேசரது திருவிருமபை மாகாளததையுமடைநது வணஙகி யுடனே திரும்பி, மிககசீாவளா அதிகைவீரடடானம மேவுவாா தமமுனபு=நிறை நத செலவததையுடைய திருவதிகை வீரடடானததையடையும் பிளளேயாா

முன்பு; தொக்கமெய்த் திருத்தொண்டர்வந்து எதிர்கொள்ளத்தொழுது எழுந்து அணைவுற்றார்=தொகுதியான மெய்ம்மைபொருந்திய திருத்தொண்டர்கள் வந்தெதிர்கொள்ளும்படி தாமு மெதிரேவணங்கி யெழுந்தங்கடைந்தருளினார்.—எ-று. (௯௯௪)

திருவக்கரை-பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்.

கறையணிமாமிடற்றான் கரிகாடரங்காவுடையான்
பிறையணிகொன்றையினா னொருபாகமும் பெண்ணமர்ந்தான்
மறையவ னற்றலையிற்பலிகொள்பவன் வக்கரையி
லுறைபவனெங்கள் பிரானொலியார் கழலுள்குதுமே

தண்புனலும் மரவுஞ்சடைமேலுடையான் பிறைதோய்
வண்பொழில்சூழ்ந் தழகாரிறைவ னுறைவக்கரையைச்
சண்பையர் தந்தலைவன் றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
பண்புனைபாடல் வல்லாரவர் தம்வினைபற்றறுமே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-சந்திரசேகரேசுவரர் தேவியார் வடிவாம்பிகையம்மை.

திரு-இரும்பைமாகாளம்-பண்-செவ்வழி.

திருச்சிற்றம்பலம்

மண்டுகங்கை சடையிற் கரந்துமதி சூடிமான்
கொண்டகையாற் புரமூன் றெரித்தகுழ கனிடம்
மெண்டிசையும் புகழ்போய் விளங்கு மிரும்பைதனுள்
வண்டுகீதம் முரல்பொழில் சுலாநின்றமாகாளமே
எந்தையெம்மா னிடமெழில்கொள் சோலையிரும் பையதனுள்
மந்தமாரும் பொழில்சூழ்ந் தழகாரு மாகாளத்தி
லந்தமில்லா வனலாடு வானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாட வல்லார் பழிபோகுமே

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாகாளேசுவரர் தேவியார்
குயின்மொழியம்மை.

ஆதிதேவரங் கமர்ந்தவீரட்டானஞ் சென்றணைபவர்முன்னே
பூதம்பாடநின் றாடுவார்திருநட்டம் புலப்படும்படிகாட்ட

வேதபாரகர் பணிந்துமெய்யுணர்வுட னுருகியவிருப்போடுங்
கோதிலாவிசை குலவுகுண்டைக்குறட் பூதமென்றெடுத்தேத்தி.

(இ-ள்) ஆதிதேவர் அங்கு அமர்ந்த வீரட்டானம் சென்று அணைபவர் முன்னே = தேவர்கட்கெல்லாம் முதற்றேவராகிய வீரட்டேசரெழுந்தருளிய திருவீரட்டானத்தைச் சென்றடையும் பிள்ளையார்முன்னே; பூதம்பாடநின்று ஆடுவார் திருநட்டம் புலப்படும்படி காட்ட = பூதகணங்கள் பாடும்படி நின்றாடும் வீரட்டேசர் தமது திருநடனத்தைப் பிள்ளையாரது திருக்கண்களுக்குப் புலனாகும்படி காட்டியருள, வேதபாரகர் பணிந்து மெய்யுணர்வுடன் உருகிய விருப்போடும் = வேதமாகிய கடலினைக் கரையடைந்த ஆளுடையபிள்ளையார் வணங்கி மெய்யன்போடு திருவுள்ளமுருகச்செய்யும் விருப்பினால், கோதிலா இசைகுலவு குண்டைக்குறட்பூதமென்று எடுத்து ஏத்தி = குற்றமில்லாத இசைபொருந்திய "குண்டைக்குறட்பூதம்" என முதலெடுத்துத் துதித்து—எ-று. (௧௧௫)

திரு அதிகைவீரட்டானம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக் குறட் பூதங் குழுமவன லேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர் கெடிலவடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னாடும்வீரட் டானத்தே.

நாழல் கமழ்காழி ஞானசம் பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீ ரட்டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

பரவியேத்திய திருப்பதிகத்திசை பாடினார் பணிந்தங்கு
விரவுமன்பொடு மகிழ்ந்தினிதுறைபவர் விமலரைவணங்கிப்போ
யரவநீர்ச்சடை யங்கணர்தாமகிழ்ந் துறைதிருவாமாத்தூர்
சிரபுரத்துவந் தருளியசிறுமறைச் சிறுவர்சென்றணைவுற்றார்.

(இ-ள்.) பரவி ஏத்திய திருப்பதிகத்து இசைபாடினார் = வணங்கித் துதித்த அத்திருப்பதிகத்தை இசையோடுபாடினவரும், பணிந்து அங்கு = வணங்கி அத்திருப்பதியில், விரவும் அன்பொடுமகிழ்ந்து இனிது உறைபவர் = கலந்த அன்பினோடு மகிழ்கூர்ந்து இனிதாகவெழுந்தருளுபவரும் ஆகிய; சிரபுரத்துவந்தருளிய சிறுமறைச்சிறுவர் = சீகாழியில் அவதாரஞ் செய்தரு

ளிய மறையவர் சிறுவராகிய ஆளுடையபிள்ளையார்; விமலரைவணங்கிப் போய=திருவதிகை வீரட்டானரைவணங்கியங் கினிதுமெழுந்தருளி, அரவ நீர்ச்சடை அங்கணர் தாம்மகிழ்ந்து உறைதிரு ஆமாத்தூர் சென்று உணைவுற ருர்=ஒலிபொருந்திய கங்கையையணிந்த சடாமுடியையுடைய சோமாது நாயகரெழுந்தருளிய திருவாமாத்தூரைச்சென்றடைந்தருளினார் —எ-று. ()

சென்றணைந்துசிந்தையின் மகிழ்விருப்பொடுஞ்செழு திருவாமாத்தூரப்
பொன்றயங்குபூங் கொன்றையுமவனியும் புனைந்தவரடிபோற்றிக்
குன்றவார்சிலை யெனுந்திருப்பதிகமெய்க் குலவியவிசைபாடி
நின்றுமின்புறப் பணிந்துசெல்வார்திருக் கோவலூர்நகர்சேர்ந்தார்

(இ-ள்) சென்று அணைந்து சிந்தையின் மகிழ்விருப்பொடு செழுந்திரு ஆமாத்தூர்=சென்றடைந்தருளி மனதில் நிறைந்த விருப்பத்தோடு வளம் பொருந்திய திருவாமாத்தூரில், பொன்தயங்குபூங் கொன்றையும் வன்னியும் புனைந்தவர் அடிபோற்றி = பொன்னைப்போலவிளங்குங் கொன்றைப் பூமாலையையும் வன்னியையுஞ்சூடிய பெருமானார் திருவடிகளைவணங்கி, குன்றவார்சிலை எனும் திருப்பதிகம் மெய்க்குலவிய இசைபாடி =‘ குன்றவார்சிலை ” என்று முதலையுடைய திருப்பதிகத்தை விளங்க இசையோடுபாடி, நின்று இன் புறப்பணிந்து செல்வார் திருக்கோவலூர் நகர்சேர்ந்தார் = இன்பமடையும் படி வணங்கிச்செல்லும் பிள்ளையார் திருக்கோவலூரென்னுந் திருப்பதியை யடைந்தார்.—எ-று. (௩௭)

திருஆமாத்தூர்-பண்-சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

குன்றவார்சிலை நாணராவரி வாளிகூரெரி காற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனே விடையேறும்வேதியனே [மே
தென்றலார்மணி மாடமாளிகை சூளிகைக்கெதிர் நீடபெண்ணைமே
லன்றில்வந்தணையு மாமாத்தூரம்மானே.

வாடல்வெண்டலை மாலையார்த்து மயங்கிருளெரி யேந்திமாநட
மாடன்மேயதென்னென்று மாத்தூரம்மானைக்
கோடனாக மரும்புபைம்பொழிற் கொச்சையாரிறை ஞானசம்ப
பாடல்பத்தும்வல்லார் பரலோகஞ்சேர்வாரே. [ந்தன

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-சோமநாதநாயகர். தேவியார்-அழகியநாயகியம்மை.

கோவனீடிய வீரட்டமமர்ந்தவர் குரைகழல்பணிந்தேத்தி
யாவிலைந்துகந் தாடுவாரறையணி நல்லூரையணைந்தேத்திப்
பாவலர்ந்த செந்தமிழ்கொடுபரவுவார் பரவுசீரடியார்கண்
மேவுமன்புறு மேன்மையாந்தன்மையை விளங்கிடவருள்செய்தார்.

(இ-ள்) கோவல் நீடிய வீரட்டம் அமர்ந்தவர் குரைகழல்பணிந்து ஏத்தி = திருக்கோவல் வீரட்டத்தில் எழுந்தருளிய வீரட்டேசுரரது ஒலிக்கும் வீரக்கழலையணிந்த திருவடிகளை வணங்கி, ஆவில் ஐந்து உகந்து ஆடுவார் அறையணி நல்லூரை அணைந்து ஏத்தி = பசுவினிடத்துள்ள கௌவியங்களைந்தையும் விரும்பியாடும் பெருமான் எழுந்தருளிய அறையணிநல்லூரையடைந்து துதித்து, பா அலர்ந்த செந்தமிழ் கொடு பரவுவார் பரவுசீர் அடியார்கள் மேவும் அன்புறு மேன்மையாம் தன்மையை விளங்கிட அருள்செய்தார் = பாக்கள் நிறைந்த செந்தமிழினால் வணங்குஞ் சிறப்பினையுடைய அடியார்கள் தாம்பொருந்திய அன்பால் வரும் மேம்பாட்டின் தன்மையை அத்திருப்பதிகத்தில் விளங்கவைத்துப் பாடியருளினார் — எ-று. (௯௮)

திருக்கோவல்வீரட்டம்-திருவிராகம்-பண்-நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம் வந்துமெய்ப் பாசம்விட்ட போதின்க
ணிடைகொள்வா ரெமக்கிலை யெழுகபோது நெஞ்சமே
குடைகொள்வேந்தன் மூதாதை குழகன்கோவ லூர்தனுள்
விடையதேறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே.

கழியோடுலவு கானல்சூழ் காழிஞான சம்பந்தன
பழிநமர்ச் சொன்னசொற் பாவநாச மாதலா
லழிவிலீர்கொண் டேத்துமி னந்தண்கோவ லூர்தனில
விழிகொள்பூதப் படையினான் வீரட்டானஞ்சேர்துமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வீரட்டேசுவரர் தேவியார் - சிவானந்தவல்லியம்மை.

திரு அறையணிநல்லூர்-பண்-காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பீடினாற் பெரியோர்களும் பேதைமைகெடத் தீதிலா
வீடினாலுயர்ந்தார்களும் வீடினாரிள வெண்மதி
சூடினார்மறை பாடினார் சுடலைநீறணிந் தாரழ
லாடினாரறை யணிநல்லூ ரங்கையாற்றொழுவார்களே.

கழியுலாங்கடற் கானல்சூழ் கழுமலமமர் தொல்பதிப்
பழியிலாமறை ஞானசம் பந்தனல்லதோர் பண்பினார்
மொழியினாலறை யணிநல்லூர் முக்கணமூர்த்திதன ருடொழுக்
கெழுவினாரவர் தம்மொடுங் கேடிலவாழ்பதி பெறுவரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-அறையணிநாதர் தேவியார்-அருளாநாயகியம்மை.

சீரின்மன்னிய பதிகமுன்பாடியத் திருவறையணிநல்லூர்
வாரின்மலகிய கொங்கையாள்பங்கர்தம் மலைமிசைவலங்கொள்வார்
பாரின்மலகிய தொண்டர்களிமையவர் நாடொறும்பணிந்தேத்துங்
காரின்மலகிய சோலையண்ணாமலை யன்பர்காட்டிடக்கண்டார்.

(இ-ள்) சீரின் மன்னியபதிக முன்பாடி = சிறப்பால் நிறைந்த திருப்பதிகத்தைத் திருமுன்னேபாடி, அத்திரு அறையணி நல்லூர்வாரின் மலகியகொங்கையாள் பங்கர்தம்மலை மிசைவலங்கொள்வார் = அத்திருவறையணிநல்லூரென்னுந் திருப்பதியிற் கச்சால் நிறைந்த தனங்களையுடைய உமாதேவிபாகரான அறையணிநாதரது திருமலையின்மேல் வலங்கொள்ளும் பிள்ளையார், பாரின்மலகிய தொண்டர்கள் இமையவர் நாடொறும்பணிந்து ஏத்தும் = உலகின் கணிறைந்த அடியார்களுந் தேவர்களும் நாடோறும் வணங்கித்துதிக்கும், காரின்மலகியசோலை அண்ணாமலை அன்பர்காட்டிடக்கண்டார் = மேகங்கள் நிறைந்தசோலை சூழ்ந்த திருவண்ணாமலையை யடியார்கள்காட்டும்படி தரிசித்தருளினார்,—எ-று. (௯௬௧)

வேறு.

அண்ணாமலையங் கமரர்பிரான் வடிவுபோன்று தோன்றுதலுங்
கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்துபோற்றுங் காதலினால்
உண்ணாமுலையா ளெனும்பதிகம் பாடித்தொண்ட ருடன்போந்து
தெண்ணீர்முடியார் திருவண்ணா மலையைச்சென்று சேர்வுற்றார்

(இ-ள்) அண்ணாமலை அங்கு அமரர்பிரான் வடிவுபோன்று தோன்றுதலும் = திருவண்ணாமலை சிவபிரானது திருவுருவைப்போலப் புலப்படவும், கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்துபோற்றும் காதலினால் = தமது கண்களாற் பருகிக் கைகூப்பி மனமொருங்கித் துதிக்கும் பெருவிருப்பினால், உண்ணாமுலையாள் எனும் பதிகம்பாடித் தொண்டருடன் போந்து = "உண்ணாமுலை யுமையாளொடு" என்னு முதலையுடையதிருப்பதிகத்தைப்பாடி அடியார் திருக்கூட்டத்தோடு சென்றருளி; தெண்ணீர்முடியார் திருவண்ணாமலையைச்சென்று சேர்வுற்றார்=தெளிவியகங்கையையணிந்த சடாமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருவண்ணாமலையைச் சென்றடைந்தருளினார்.

அண்ணாமலை அரிபிரமர் அடிமுடிதேடி யறியாமல் நின்ற திவ்வியலி ங்க வுருவமாதலின் அமரர்பிரான் வடிவுபோன்றென்றார். (௧௭௦).

திருவண்ணாமலை-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

உண்ணாமுலையுமையா ளொடுமுட னாகியவொருவன்
பெண்ணாகியபெருமான் மலைதிருமா மணிதிகழ
மண்ணார்ந் தனவருவித் திரள்மழலைம் முழவதிரு
மண்ணா மலைதொழுவார் வினைவழுவா வண்ணமறுமே.

வெம்புந் தியகதிரோ னொளிவிலகும் விரிசார
லம்புந்தி மூவெயிலெய் தவ னண்ணா மலையதனைக்
கொம்புந் துவக்குயிலாலுவக் குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல் லவரடிபே ணுதற்றவமே.

திருச்சிற்றம்பலம்.

அங்கணணைவார் பணிந்தெழுந்து போற்றிசெய்தம் மலைமீது
தங்குவிருப்பில் வீற்றிருந்தார் தாட்டாமரைகள் தம்முடிமேற்
பொங்குமார்வத் தொடும்புனைந்து புளகமலர்ந்த திருமேனி
யெங்குமாகிக் கண்பொழியு மின்பவருவி பெருக்கினார்.

(இ-ள்) அங்கண் அணைவார் பணிந்து எழுந்து போற்றிசெய்து = அத் திருப்பதியை யடைந்தருளும் பிள்ளையார் வணங்கி யெழுந்து துதிசெய்து; அம்மலைமீது தங்கு விருப்பில் வீற்றிருந்தார் = அத்திருமலைமேல் வசிக்கும்விரு ப்பால் எழுந்தருளிய அண்ணாமலையாரது, தாள் தாமரைகள் தம்முடிமேல் = திருவடித்தாமரைகளைத் தமது திருமுடியின்மேல், பொங்கும் ஆர்வத்தொ டும் புனைந்து = மிக்க பெருவிருப்போடுஞ் சூடி, புளகமலர்ந்த திருமேனி எங்குமாகிக் கண்பொழியும் இன்பஅருவிபெருக்கினார் = உரோமாஞ்சிதங்கொ ண்ட தம்திருமேனிமுழுதுந் திருக்கண்களினின்றும் பொழியுமானந்த வருவி யைப் பெருக்கியருளினார் —எ-று. (௧௭௧)

ஆதிமூர்த்தி கழல்வணங்கி யங்கணினிதி னமருநாட்
பூதநாத ரவர்தம்மைப் பூவார்மலரால் போற்றிசைத்துக்
காதலாலத் திருமலையிற் சிலநாள்வைகிக் கமழ்கொன்றை
வேதகீதர் திருப்பதிகள் பிறவும்பணியும் விருப்புறுவார்.

(இ-ள்.) ஆதிமூர்த்திகழல்வணங்கி அங்கண் இனிதின் அமருநாள் = அண்ணாமலையாரது திருவடிகளை வணங்கி யவ்விடத்து இனிதாக வெழுந் தருளும் நாளில்; பூதநாதர் அவர்தம்மைப் பூவார்மலரால் போற்றிசைத்து =

பூதகணங்கட்குத் தலைவராகிய அச்சிவபெருமானைப் "பூவார்மலர்" என்று அடியெடுத்துத் திருப்பதிகம்பாடி, காதலால் அத்திருமலையிற் சிலநாள் வைகி = திருப்பதிகத்தோடு அத்திருவண்ணாமலையிற் சிலநாள்வசித்து, கமழ் கொன்றை வேதியர் திருப்பதிகளாகிய பிறவும் பணியும் விருப்புறுவார் = வாசனைபொருந்திய கொன்றைப் பூமாலையைப் பணிந்த சாமகானத்தைப் பாடுஞ் சிவபெருமானெழுந்தருளிய மற்றத்திருப்பதிகளையும் வணங்கும் விருப்புடையவரானார்—எ-று. (௯௭௨)

திருவண்ணாமலை-பண்-தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பூவார்மலர்கொண் டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந் தணையுஞ்சார லண்ணாமலையாரே.

அல்லாடரவ மியங்குஞ்சார லண்ணாமலையாரை
நல்லார்பரவப் படுவார்காழி ஞானசம்பந்தன்
சொல்லானியன்ற பாடல் பத்தும் மிவைகற்று
வல்லார்நல்லார் வானோர்வணங்க மன்னிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

மங்கைபாகர் திருவருளால் வணங்கிப்போந்து வடதிசையிற்
செங்கணவிடையார் பதிபலவும் பணிந்துபுகலிச் செம்மலார்
துங்கவரைகள் தாம்பலவுங் கடந்துதொண்டைத் திருநாட்டிற்
றிங்கண்முடியா ரினிதமருந் திருவோத்தூரைச் சேர்வுற்றார்

(இ-ள்.) மங்கைபாகர் திருவருளால் வணங்கிப்போந்து = உமாதேவிபாகராகிய அண்ணாமலையாரது திருவருளினால் அத்திருவண்ணாமலையைப் பணிந்து அங்குநின்று மெழுந்தருளி, வடதிசையிற் செங்கணவிடையார்பதி பலவும் பணிந்து = அதனையடுத்துள்ள சிவந்தகண்ணையுடைய இடபத்தைப் பூர்தியாகக்கொண்ட பெருமானாரது பலதிருப்பதிகளையும் வணங்கி, புகலிச் செம்மலார் = சீகாழியிலவதரித்த ஆளுடையபிள்ளையார், துங்கவரைகள் தாம்பலவும்பணிந்து = உயர்ந்தமலைகள் பலவற்றையும் வணங்கி; தொண்டைத்திருநாட்டில் திங்கண்முடியார் இனிது அமரும் திருவோத்தூரைச் சேர்வுற்றார் = வளம்பொருந்திய தொண்டைநாட்டிற் பிறையையணிந்த திருமுடியையுடைய வேதநாதேசரினிதாக வெழுந்தருளிய திருவோத்தூரென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்.—எ-று. (௯௭௩)

தேவர்முனிவர்க் கோதந்தளித்த திருவேட்களத்திற் றிருத்தொண்டர்
காவில்சண்பைத் தமிழ்விரகர் தாமங்கணையக் களிசிறந்து
மேவுங்கதலி தோரணங்கள் விளக்குநிறைந்த நிறைகுடமும்
பூவும்பொரியுஞ் சுண்ணமுமுன் கொண்டுபோற்றியெதிர்கொண்டார்.

(இ-ள்) தேவர் முனிவர்க்கு ஓதந்தளித்த திருவேட்களத்தில் திருத்தொண்டர் = தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேதத்தைத் தந்தருளிய திருவேட்களத்திலுள்ள அடியார்கள், காவில் சண்பைத் தமிழ்விரகர் தாம் அங்கு அணையக் களிசிறந்து = ஒப்பில்லாத சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரங்கெழுந்தருளுதலால் மகிழ்ச்சியடைந்து, மேவும் கதலி தோரணங்கள் விளக்குநிறைந்து = பொருந்திய வாழைகளையுந் தோரணங்களோடுந் திருவிளக்குகளையும் வரிசையாகவைத்து, நிறைகுடமும் பூவும் பொரியும் சுண்ணமுமுன் கொண்டு = பூரணகும்பங்களையும் பூவையும் பொரியையும் பொற்சுண்ணங்களையும் பிள்ளையார் திருமுன்னே தாங்கிக்கொண்டு, போற்றி எதிர்கொண்டார் = துதித்தெதிர்கொண்டுவந்தார்கள் —எ-று. (கஎச)

சண்பைவேந்தர் தாமங்குச் சிவிகையினின்று மிழிந்தருளி
நண்பின்மிக்க சீரடியார் சூழநம்பர் கோபுரஞ்சூழ்
விண்ணிற்றோய முன்னோங்கும் விமானப்பொற்புரிசை வலங்கொண்டு
பண்புநீடிய பணிந்தெழுந்து பரமர்கோயி லுள்ளடைந்தார்.

(இ-ள்) சண்பைவேந்தர் தாமங்குச் சிவிகையினின்றுமிழிந்தருளி = சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் அவ்விடத்து முத்துச்சிவிகையினின்றுமிறங்கியருளி, நண்பின்மிக்க சீரடியார் சூழ = தம்மிடத்து நேயமிக்க மேம்பட்ட அடியார்கள் அருகிற்சூழ்ந்துவர, நம்பர் கோபுரஞ்சூழ் = வேதநாதேசரது திருக்கோபுரத்தைச் சூழ்ந்து, விண்ணிற்றோய முன்னோங்கும் விமானப்பொற்புரிசை வலங்கொண்டு = மேகமண்டலமுமளாவ முற்பட்டோங்கிய பெரியவிசாலமாகிய அழகிய திருமதில் வலங்கொண்டு; பண்புநீடிய பணிந்தெழுந்து பரமர்கோயிலுள்ளடைந்தார் = அன்பு மிகுதலால் வணங்கியெழுந்து அப்பெருமானார் திருக்கோயிலுள்ளடைந்தருளினார். -எ-று.

வாரணத்தி னுரிபோர்த்த மைந்தருமையாள் மணவாள
ராரணத்தி னுட்பொருளாய் நின்றார்தம்மு னணைந்திறைஞ்சி
நாரணற்கும் பிரமற்கு நண்ணற்கரிய சீர்போற்றுங்
காரணத்தின் வருமின்பக் கண்ணீர்பொழியக் கைதொழுதார்.

(இ-ள்) வாரணத்தின் உரிபோர்த்த மைந்தர் உமையாள் மணவாளர் = (கயாசுரனெனனும்) யானையினது உரியைப்போர்த்தருளியவரும் உமாதேவியாருக்கு நாயகருமாய, ஆரணத்தின் உட்பொருளாய் நின்றார்தம் முன்

அணைந்து இறைஞ்சி = வேதத்தின்பொருளாய் நின்ற இறைவரது திருமுன்னேயடைந்து வணங்கி, நாரணற்கும் பிரமற்கும் நண்ணற்கரிய கழல் போற்றும் = திருமாலுக்கும் பிரமனுக்கு மடைதற்கரிய திருவடிகளை வணங்கும்; காரணத்தின் வரும் இன்பக்கண்ணீர்பொழியக் கைதொழுதார் = காரணத்தால்வரும் ஆனந்தக்கண்ணீர் சொரியும்படிக் கைகூப்பிவணங்கினார் —எ-று. ()

தொழுதுவிழுந்து பணிந்தெழுந்து சொன்மாலைகளாற் றுதிசெய்து
முழுதுமானா ரருள்பெற்றுப் போந்துவைகி முதல்வர்தமைப்
பொழுதுதோறும் புக்கிறைஞ்சிப் போற்றிசெய்தங் கமர்வார்முன்
னழுதுவணங்கி யொருதொண்ட ரமணர்திறத்தொன் றறிவிப்பார்

(இ-ள்.) தொழுது விழுந்து பணிந்து எழுந்துசொல் மாலைகளாற் றுதிசெய்து = கைகூப்பி நிலத்தின்மேல்விழுந்து வணங்கியெழுந்து திருப்பதிகங்களாற்றுதித்து, முழுதுமானார் அருள்பெற்றுப்போந்து வைகி = எப்பொருள்களுமாய் நிறைந்த வேதநாதேசரது திருவருளைப்பெற்றுப் புறம்பே சென்று அங்குள்ள திருமடத்திலெழுந்தருளி, முதல்வர் தமைப்பொழுதுதோறும் புக்கு இறைஞ்சிப்போற்றிசெய்து அங்கு அமர்வார்முன் = அச்சிவபெருமானைக் காலந்தோறுஞ்சென்று வணங்கித்துதிசெய்து அங்கெழுந்தருளியிருக்கும் பிள்ளையார்முன்னே, அழுது வணங்கி ஒருதொண்டர் அமணர் திறத்து ஒன்று அறிவிப்பார் = தாமழுது அவர் திருவடிகளில் வணங்கி யோர் சிவனடியார் சமணர்களது தொகுதியிற் றமக்கு விளைந்த வொருசெயலை யறிவிப்பாராயினார்—எ-று. (௧௭௭)

அங்கைப்புனல்சேர் ஞ்சற்றவர்க்கடியே னாக்கும்பணிக ளானவெலா
மங்குலுற நீண் டாண்பனையாய்க் காய்தாக்க கண்டமண
ரிங்கு நீரிட் டாக்குவன காய்த்தற்கடைவுண்டோவென்று
பொங்குநகைசெய் திழித்துரைத்தா ரருள்வேண்டு மெனப்புகல.

(இ-ள்) அங்கை அனல் ஏற்றவற்கு அடியேன் ஆக்கும்பணிகள் ஆனஎலாம் = அழகிய திருக்கரத்தி லனலையேந்திய சிவபெருமானுக்கு அடியேன் வைத்துவளர்த்த பனைகளெல்லாம்; மங்குலுற நீண்டு ஆண்பனையாய்க் காயாதாக்கக் கண்டு அமணர் = மேகமண்டலமளவுமுயர்ந்து ஆண்பனைகளாய்க் காயாதிருக்க அதனைக்கண்டு சமணர்கள், இங்கு நீர் இட்டு ஆக்குவன காய்த்தற்கு அடைவுண்டோ என்று = இவ்விடத்து நீர் இடுவளர்த்த ஆண்பனைகள் காய்த்தற்கோருபாயமுளதோவென்று, பொங்கு நகைசெய்து = மிக அவமதிச்சிரிப்புச்செய்து, இழித்து உரைத்தார் அருள்வேண்டும் எனப்புகல = இழிவுசெய்து பேசினார்கள் அவ்விழிவுதீர அருள்செய்யவேண்டுமென்று இரந்துகூற,—எ-று. (௧௭௮



பரமனாதந திருததொணடா பணபுநோககிப பரிவெயதி
விரவுகாத லொடுமவிரைநது விமலாகோயில புககருளி
யரவுமதியும பகைதீர வணிநதாா தமமை யடிவணஙகி
யிரவுபோறறித திருபபதிக மிசையிறபெருக வெடுததருளி

(இ-ள.) பரமனாதம திருததொணடா பணபுநோககிப பரிவு எய தி=சிவபெருமான திருவடியாரது ஆராமைககுணததைபபாாதது அவா மேற கிருபைகூாநது, விரவுகாதலொடும விரைநது விமலா கோயிலபுகக ருளி = மிககபெருவிருபபோடு விரைவாய வேதநாதேசா திருககோயிலுட செனறருளி, அரவும மதியும பகைதீர அணிநதாா தமமை அடிவணஙகி= பாமபையுஞ சநதிரனையுந தமமுட பகை நீஙகததரிததருளிய சிவபெருமா னது திருவடிகளை வணஙகி, இரவுபோறறித திருபபதிகம இசையிற பெருக எடுததருளி = இரவினகணதுதிததுப "பூததோநதாயன" எனனுந திருபபதி கததை யிசையினறபெருகுமபடி யெடுததுப பாடியருளி —எ-று (கஎக)

விருமபுமேன்மைத திருககடைககாப பதனிலவிமல ரருளாலே
குருமபையாண பனையீனு மெனனுமவாயமை குலவுதலா
னெருஙகும ஏறறுப பனையெலலா நிறைநதகுலைக ளாயககுருமபை
யருமபுபெணணைபாகியிடக கணடோரெலலா மதிசயிததாா.

(இ-ள) விருமபும மேனமைத திருககடைக காபபதனில=யாவரும விருமபு மேனமையையுடைய திருககடைககாபபில, விமலா அருளாலே= சிவபெருமான திருவருளால, குருமபை யாணபனையீனும எனனும வாயமை குலவுதலால="குருமபையாணபனையீன குலையோததூா" எனனும வாயமை விளஙகுதலால, நெருஙகும ஏறறுபபனையெலலாம நிறைநத குலைகளாய= நெருஙகிய ஆணபனைகளெலலாம நிறைநதகுலைகளையுடையனவாய, குரும பை அருமபு பெணணையாகியிடககணடோரெலலாம அதிசயிததாா=குரும பைகளை யீனுகினற பெணபனையாக அதனைககணட யாவரு மதிசயமடைந தாாகள —எ-று (கஅ0)

திருவோததூா - ஆணபனை - பெண்பனையான

திருபபதிகம - பழநதககராகம.

திருசசிறறமபலம

பூததோநதாயன கொணடுநின பொனனடி
யேததாதாரிலலை யெணணுஙகா
லோததூாமேய வொளிமழு வாளஙகைக
கூததீருமம குணஙகளே. (க)

இடையீர் போகாவிள முலையாளையோ
புடையீரோ புள்ளிமானுரி
யுடையீரோ யுமமையேதது மோததூாச
சடையீரோ யுமதாளே. (௨)

உள்வோ போல நொடிமையினுற
கொளவிரலகுலோர் கோவண
மொளவாழைக கனிதேன சொரியோததூாக
களவீரோயுமகாதலே. (௩)

தோடடிரோ துததிளைாநதலை நாகத்தை
யாடடிரோ யடியாாவினை
யோடடிரோ யுமமை யேததூது மோததூா
நாடடிரோ யருணலகுமே. (௪)

குழையாா காதீா கொழுமமுழுவாட்படை
யுழையாள வீாதிருவோ ததூா
பிழையாவணணஙகள பாடிநினறுடுவா
ரழையாமே யருணலகுமே. (௫)

மிக்காாவநது விருமபிபபலியிடத
தககாாதமமடியீா களென
றுட்காதாருளரோ திருவோததூா
நககீரோயருணலகுமே. (௬)

தாதாாகொனறை தயஙகுமுடியுடை
நாதாவெனறு நலமபுகழந
தோதாதாருளரோ திருவோததூ
ராதிரோ யருணல குமே. (௭)

எனறுனிமமலை யெனறவரககனே
வெனறாா போலும விரலினு
லொனறாாமும மதிளெயதவ ஞேதது
ரொனறாா மேலவினை யேகுமே. (௮)

நனறுநானமறை யானொடு மாலுமாயச
சென்றாா போலுநதிசை யெலா
மொன றுயொளளெரி யாய்மிகவோததூா
நினறீரோயுமை நேடியே. (௯)



காரமண கஙிஙகத துவராடையா
தேரா சொலலவை தேறன்மி
ஞேரமபா லெயிலெயதவ ஞேததூாச
சீரவன கழல சோமினே (ய)

குருமபையாண பனையினகுலே யோததூ
ரருமபு கொனறை யடிகளேப
பெருமபுகலியுள ஞானசமபநதன சொல
விருமபுவாா வினைவீடே (யக)

திருசசிறறமபலம

சுவாமிபெயா - வேதநாதேசா தேவியாா - இளமுலேயமமை.

சீரினமனனுஞ திருககடைககாப பேறறிசசிவனு ரருளபெறறுப
பாரினீடு மபபனைமுன காயததுபபழுககும பணபினு
னேருமனபா தஙகருததது நேரேமுடிததுக கொடுததருளி
யாருமுவகைத திருதொணடா போறறவஙகணினிதமாநதாா.

(இ-ள) சீரின மனனும திருககடைககாபபு ஏறறிச் சிவனுா அருள் பெறறு = சிறபபுமிகக திருககடைககாபபில வைககபபெறறு அதனுற சிவ பெருமானது திருவருளேயடைநது, பாரில நீடும அபபனைமுன காயததுப பழுககும பணபினுல = நிலவுலகததில வளாநத அபபனைகள முனனே பெ ணபனைகளாயக காயததுபபழுககும தனமையினுல, நேரும அனபா தம கருதது நேரோமுடிததுககொடுததருளி = தமமைக குறையிரநத அவவடியா ரது மனககருததைத தடையினறி யபபொழுதே முடிததுககொடுதது, ஆரு ம உவகைததிருததொணடாபோறற அஙகண இனிது அமாநதாா = நிறைநத மகிழசசியையுடைய திருவடியாாகள துதிககுமபடி யததிருபபதியி லினிதாக வெழுநதருளியிருநதாா -எ-று.

அபபனே காயததுபபழுககும பணபினுல சிவனுாருளபெறறுநேரு மனபா தஙகருததுமுடிததுககொடுததெனககூடடுக. (கூஅக)

தெனனுடடமணு சறுததாாதஞ செயகைககணடு திகைததமண
ரநநாடடதனே விடடகலவாா சிலாதஙகைபிறகுணடிகைக
ளெனனுவனமற றிவையெனறு தகாபபாாிறைவ னேறுயாதத
பொனனுாமேனிப புரிசடையா னனறேயெனறு போறறினுா.

(இ-ள.) தெனனுடடு அமணா ஆசு அறுததாா தம செயகைககணடு திகைதது அமணா=பாணடிநாடடினுளள சமணரொன்னுங் குறறததையறுத தருளியபிளளேயாரது செயகையைககணடு மயஙகிச சமணாகள, அநநாடட

தனைவிட்டு அகலவா = அததிருவோததனைவிடடு நீஙகுவாராயினா ; சிலர் தமகையிற குணடிகைகள என ஆவன மறறிவை எனறு தகாபபா = சிலா தமதுகையிலுளள கமணடலஙகளை இவை யாதுபயனகொடுபபனவெனறு டைபபாராய , இறைவன் ஏறு உயாதத பொனனாமேனிப புரிசடையான அனறே எனறுபோறறினா=முதறகடவுள இடபககொடியையுயாதத பொன போலுந திருமேனியையும முறுசகுபபொருநதிய சடையையுமுடையவ னேயெனறு துதிததாாகள —எ-று (௯௮௨)

பிளளையாா தநதிருவாககிற பிறததலாலே தாலமுமுன
புளளபாசம விடடகல வொழியாபபிறவிதனை யொழிததுக
கொளளுநீாமைக காலஙகள கழிததுசசிவமே கூடினவாம
வளளலாா மறறவரருளின வாயமைகூறின வாமபெனறும

(இ-ள) பிளளையாா தம திருவாககிற பிறததலாலே = ஆளுடைய பிளளையாரது திருவாககில வைககபபடடதனால , தாலமும முனபு உளள பாசமவிடடு அகல = அபபனைகளும முனபுளள (ஆணவாதி) பாசஙகள தம மைவிடடு நீஙக , ஒழியாபபிறவிதனை ஒழிதது=தமமை நீஙகாதிருநத பிறவி யை நீககி , கொளளும நீாமைககாலஙகளகழிதது = தாமுலகிறபொருநதிய பிராரததம புசிககுஙகாலததை நீககிப பினபு , சிவமே கூடினவாம = சிவத தையடைநதனவாம (அதனால), வளளலாா மறறவா அருளின வாயமை கூறின வரமபு எனறும = வளளறறனமையையுடைய ஆளுடையபிளளையா ரது திருவருளினபெருமையையெடுததுச சொலலபபுகின அதறகளவு எவ வாறும.—எ-று.

பிளளையாரது வாககினபெருமைதோனறத திருவாககிறபிறததலா லெனறும , தாலம நிலையியறபொருளாதலில, தாலமுமென இழிவுசிறப புமமையாற சிறபபிததும , ஆணவாதிபாசஙகளின அனாதிதோனற முனபு ளள பாசமெனறும , அககாரணம நீஙகக காரியமாகிய பிறவியொழியுமென னும நியமந்தோனற விடடகல வொழியாபபிறவிதனையொழிததெனறும, பா சஙகள நீஙகினும பிராரததம புசிததனறி முததிசிததிககாவெனனு முறை மைதோன்றககொளளுநீாமைக காலஙகள கழிததுச சிவமேகூடினவாம எனறும ; அருளினவாயமை அளவுபடாமையின வரமபெனறுமென்றுங கூறினா. (௯௮௩)

அஙகணமாா பெருமானைப பணிநது போநதாடா விலுடன்
பொஙகுகஙகை முடிககணிநதாா மகிழுமபதிகள பலபோறறி
மஙகைபாகரயாந தருளும வயனமாகரலை வழுததிப போயக
கொஙகுமலா நீககுாஙகணின முடடததைச சென றுகுறுகினா.

(இ-ள்.) அங்கணை அமரர் பெருமானைப் பணிந்து போந்து = அத்திருப்பதியிலெழுந்தருளிய வேதநாதேசரை வணங்கிச்சென்று; ஆடு அரவினுடன் பொங்குகங்கைமுடிக்கு அணிந்தார் மகிழும் பதிகள் பலபோற்றி = ஆடுகின்ற பாம்புடன் விளங்குங் கங்காநதியைத் திருமுடியிலணிந்த பெருமானார் மனமகிழ்ந்து வாழும் பலதிருப்பதிகளையுந் துதித்து, மங்கைபாகர் அமர்ந்தருளும் வயல்மாகறலை வழுத்திப்போய் = உமாதேவிபாகராகிய கலங்காத்த வரதேசரெழுந்தருளிய வயல்சூழ்ந்த திருமாகறலென்னுந் திருப்பதியைத் துதித்துச்சென்று, கொங்குமலர் நீர்க்குரங்கணின் முட்டத்தைச்சென்று குறுகினார் = வாசனைபொருந்திய பூக்கள் நிறைந்த நீர்சூழ்ந்த குரங்கணின் முட்டமென்னுந் திருப்பதியைச்சென்றடைந்தருளினார் — எ-று. (கூஅச)

திருமாகறல் - திருவிராகம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனி மிகுகடைசியர்கள் பாடல்விளை யாடலரவ, மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி நீடுபொழில் மாகறலுளான் கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர் திங்களணி செஞ்சடையினான், செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீருமுடனே.

கடைகொணெடு மாடமிகவோங்கு கமழ் வீதிமலிகாழி யவர்கோ, னடையும் வகையாற் பரவியரனையடி கூடுசம்பந்த னுரையான், மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில் மாகறலுளா, னடியையே யுடைய தமிழ்பத்து முணர்வாரவர்கள் தொல்வினைக ளொல்குமுடனே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - கலங்காத்தவரதேசர்.

தேவியார் - புவனநாயகியம்மை

ஆதிமுதல்வர் குரங்கணின்முட் டத்தையணைந்து பணிந்தேத்தி
நீதிவாழுந் திருத்தொண்டர் போற்றநிகரில் சண்பையினில்
வேதமோடு சைவநெறி விளங்கவந்த கவுணியனார்
மாதொர்பாகர் தாமன்னு மதில்சூழ்காஞ்சி மருங்கணைந்தார்.

(இ-ள்.) ஆதிமுதல்வர் குரங்கணில் முட்டத்தை அணைந்து பணிந்து ஏத்தி = ஆதிகர்த்தராகிய வாலீசரெழுந்தருளிய குரங்கணின் முட்டமென்னுந் திருப்பதியையடைந்து பணிந்து துதித்து, நீதிவாழும் திருத்தொண்டர் போற்ற = முறைமையோடு வாழுகின்ற திரு அடியார்கள் துதிக்க, நிகரில்

சண்பையினில் வேதமொடு சைவநெறி விளங்கவல்ல கவுணியனார் = ஒப்பற்ற சீகாழியில் வேதங்களுடன் சைவமாகமம் விளங்கும்படி அவதரித்த ஆளுடையபிள்ளையார், மாதொர்பாகர் தாம் மன்னும் மதில்சூழ் காஞ்சிமருங்கு அணைந்தார் = உமாதேவிபாகராகிய ஏகாம்பரேச ரெழுந்தருளிய மதில்சூழ்ந்த காஞ்சிபுரத்தின் பக்கலி லடைந்தருளினார்.—எ-று முட்டம்—ஊர். குரங்கு மணிலும் பூசித்தலூர் ஆதலில் குரங்கணின் முட்டம் எனவாயிற்று. (௩௮௫)

குரங்கணின்முட்டம்-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர் மழுவாட் படையண்ணல் விளங்குங்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயுங்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கணின் முட்டந்
தொழுநீர் மையர்தீதுறு துன்ப மிலரே.

கல்லார் மதிற்காழியுள் ஞான சம்பந்தன்
கொல்லார் மழுவேந்தி குரங்கணின் முட்டஞ்
சொல்லார் தமிழ்மாலை செவிக்கினி தாகப்
வல்லார்க் கெளிதாம் பிறவா வகைவீடே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - வாலீசர் தேவிபெயர் - இறையார்வளையம்மை

வேறு.

நீடுகாஞ்சி வாணரு நிலவுமெய்ம்மை யன்பரு
மாடுசண்பை வள்ளலார் வந்தணைந்த வோகையாற்
கூடுகின்ற வின்பநேர் குலாவுவீதி கோலினார்
காடுகொண்ட பூகம்வாழை காமர்தோரணங்களால்.

(இ-ள்.) நீடுகாஞ்சி வாணரும் நிலவும் மெய்ம்மை அன்பரும் = பெருமைபொருந்திய காஞ்சிநகரத்தில் வசிக்கின்றவர்களும் விளங்குகின்ற மெய்ம்மைபொருந்திய சிவனடியார்களும், மாடு சண்பைவள்ளலார் வந்து அணைந்த ஓகையால் = தந்திருப்பதியின் மருங்கு சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரெழுந்தருளிவந்த மகிழ்ச்சியினால்; கூடுகின்ற இன்பம் நேர் குலாவு வீதி கோலினார் = தம்முட்கூடுகின்ற வின்பமுடையராய் விளங்குகின்ற வீதியை யலங்கரித்தார்கள், காடுகொண்ட பூகம்வாழை காமர் தோரணங்களால் = காடாக நிறைந்த கமுகுகளினாலும் வாழைகளினாலும் விரும்பத்தக்க தோரணங்களினாலும் —எ-று இவைகளால்வீதியைக்கோலினாரெனக்கூட்டுக.

கொடிநிரைத்த வீதியிற் கோலவேதி கைப்புறங்
கடிகொண்மாலை மொய்த்தபந்தர் கந்தநீர்த் தசும்புடன்

மடிவிலபொன விளககெடுகது மாதாமைநதா மலகுவாா
படிவிளஙகு மனபரும பரநதபண்பி லீண்டுவார்.

(இ-ள) கொடி நிரைதத வீதியில கோலவேதிகைபபுறம் = கொடிகளை வரிசையாக நிறுததிய வீதியினகணுளள அழகிய வேதிகையின் புறததே; கடிகொளமாலை மொயததபநதா = மணமபொருந்திய பூமாலைகளதூககிய பநதலினிடதது, கநத நீாததசும்புடன = வாசனைபொருநதிய நீா நிறைந்த பூரணகுமபஙகளுடன, மடிவில|பொனவிளககு எடுதது = கெடுதலிலலாத பொனனாலாகிய திருவிளககுகளை யெநதிசகொணடு, மாதாமைநதா மலகுவாா = பெணகளும ஆடவாகளும நிறைநதிருபபாாகள, படிவிளஙகும அன்பரும பரநதபணபில ஈணடுவாா = பூமியினகண விளஙகிய அடியாாகளும நிறைநத பேரனபோடு நெருஙகுவாாகள,—எ-று. (கூஅஎ)

கோதைமாத ராடலுங குலாவுதொணடா பாடலும
வேதகீத நாதமு மிக்கெழுநது விமமவே
காதனீடு காஞசிவாணா கமபலைத தெழுநதுபோய
மூதெயிற புறமபுசென றணைநதுமுன வணஙகினா.

(இ-ள) கோதைமாதா ஆடலும குலாவுதொணடாபாடலும = மாலையயணிநத மகளிரது நடனமும விளஙகுகினற தொணடாகளது பாடலும், வேதகீத நாதமும மிககெழுநது விமமவே = வேதஙகளையோதுதலாகிய ஒலியும அதிகரிதத தெழுநதெஙகும பரவ, காதல நீடுகாஞசி வாணா கமபலைதது எழுநதுபோய = விருபபுமிகக காஞசிபுரததில வாழுகினறவாகள ஆரவெனஆரவாரிதது எழுநது சென்று, மூது எயிறபுறமபு சென்று அணைநது முன வணஙகினா = பழமைபொருநதிய திருமதிலினபுறமபே வநதடைநது பிளளையாா திருமுனனே வணஙகினாாகள.—எ-று (கூஅஅ)

சணபையாரு மனபாமுனபு தொணடாவநது சாாதலும
பணபுநீடி யானமுன பிழிநதிறைஞசு பானமைகண
டெணபெருககு மிககதொணட ரஞசலித தெழுநதசொன்
மண்பரகக வீழநதெழுநது வானமுடட வாாநதனா.

(இ-ள.) சணபையாரும் அனபா முனபு தொணடாவநது சாாதலும் = சீகாழிததலைவராகிய ஆளுடையபிளளையாா திருமுனபு அடியாாகள வந்து சேரவும்; பணபு நீடு யானமுனபு இழிநது இறைஞசு பான்மைகணடு = குணமிகக திருமுததுச சிவிகையினின்றும பிளளையாா இறஙகியருளித தமமை வணஙகுதலைககண்டு; எணபெருககு மிகக தொணடா அஞசலிதது எழுநதசொல = அளவிலலாத மேனமைபொருநதிய அடியார்கள அஞசலிகூபபித தொழுது அரவென வொலித்த ஓசையானது, மணபரககவீழநது

எழுந்து வாரமுட்ட ஆர்த்தனர் = நிலவுலகத்திறபரவி விழுந்து தொழுது ஆகாயத்தைமுட்டும்படி ஆரவாரித்தார்கள்.—எ-று. (கஅக)

சேணுயர்ந்த வானீடு சீர்கொள்சண்பை மன்னனார்
வாணிலாவு நீற்றணி விளங்கிட மனத்தினுற
பூணுமன்பர் தம்முடன் புகுந்திடப் புறத்துளோர்
காணுமாசை யிற்குவித்த கைந்நிரை யெடுத்தனர்.

(இ-ள்.) சேண் உயர்ந்த வான நீடு சீர்கொள்சண்பைமன்னனார் = நெடுந்தூரமுயர்ந்த விண்ணுலகையடையுமிகுந்த புகழையுடைய சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; வாள நிலாவு நீற்றணி விளங்கிட = ஒளிவிளங்கும் விபூதியின் அழகு பிரகாசிக்க, மனத்தினுற பூணும அன்பர் தம்முடன் புகுந்திட = மனங் காரணமாகப் பொருந்து மெய்யன்பினையுடைய அடியார்களோடு (அக்காஞ்சி நகரினுள்ளே) எழுந்தருளுங்கால், புறத்துளோர் காணும ஆசையிற்குவித்த கைநிரை எடுத்தனர் = அந்நகர்ப்புறத்துவந்து கூடிய சனங்கள் பிள்ளையாரைத்தரிசிக்கும் விருப்பால் கூப்பியகரங்களை வரிசையாகச் சிரசின்மேலேற்சசெய்தார்கள் —எ-று (கஅ௦)

வியனெடுந் தெருவினூடு மிக்கதொண்ட ராரபெழக்
கயனெடுங்கண் மாதருங் காதனீடு மைந்தரும்
புயல்பொழிந்த தாமெனப் பூவினோடு பொற்சுண
மியலுமாறு வாழ்த்தெடுத் திருமருங்கும் வீசினார்

(இ-ள்) வியனெடும் தெருவினூடுமிக்கதொண்டர் ஆரபு எழ = இடமகன்று நீண்ட வீதியினிடத்து மேன்மை மிக்க அடியார்கள் அரவென ஆரவாரிக்க, கயலநெடுங்கண்மாதரும் காதல நீடுமைந்தரும் = கயல்போலும் நீண்ட கண்ணையுடைய மகளிரும் விருப்பமிக்க ஆடவர்களும், புயல் பொழிந்த தாமெனப்பூவினோடு பொற்சுணம் = மழைபொழிந்தாற்போலப் பூவோடுகலந்த பொற்சுண்ணத்தை, இயலுமாறு வாழ்த்து எடுத்து இருமருங்கும் வீசினார் = பிள்ளையார்க்கேற்றவகையால் வாழ்த்தொலிகூறி யிருபக்கமுஞ் சொரிந்தார்கள் —எ-று (கஅக)

இன்னவண்ண மியாவரு மின்பமெய்த வெய்துவார்
பின்னுவார்சடைமுடிப் பிரானமகிழ்ந்த கோயில்கண்
முன்னுறப் பணிந்துபோய மொய்யவார்த திருமகண்
மன்னுபூசனைமகிழ்ந்த மன்னர்கோயின் முன்னினார்.

(இ-ள்.) இன்னவண்ணம் யாவரும் இன்பம் எய்த எய்துவார்=இவ்வாறு அக்நகரிலுள்ள யாவரு மகிழும்படி யெழுந்தருளு மாளுடையபிள்ளையார்; பின்னுவார் சடைமுடிப்பிரான மகிழ்ந்தகோயில்கள் = பின்னலபொ

ருநதிய நீணட சடைமுடியையுடைய சிவபெருமான மகிழ்ந்தெழுந்தருளும் (அவவீதிமருஙகுள்ள) ஆலயங்களின ; முன்னுறபபணிநதுபோய் = முனபு நிலமுறச சாடடாஙகமாய் வணஙகிசசென்று, மொயவரைததிருமகள் மன்னுபூசனை மகிழநதமனனாகோயின முனனினா = நெருங்கிய சிகரங்களையுடைய மலையரயன புததிரியாகிய காமாடசிதேவியாா பாகம்பெறுமபடி செயத நிலைபெறற பூசையை மகிழகூாநத ஏகாமபரநாதரது திருககோயிலை யடைநதருளினா.—எ-று. (கசுஉ)

கமபவாணா கோயிலவாயில கணடுகை குவிததெடுத
துமபரோஙகு கோபுரததின முனனிறைஞ்சி யுளளணைந
தமபொனமாளி கைபபுறததி லன்பரோடு சூழவந
திமபாஞால முயயவநத பிளளையா ரிறைஞசுவாா.

(இ-ள) கமபவாணா கோயிலவாயில கணடு கைகுவிதது எடுத்து= திருவேகமபரது திருககோயிலின திருவாயிலைககணடு திருககரஙகளைச சிரசினமேறகூபபி யெடுதது, உமபா ஓஙகு கோபுரததினமுன இறைஞ்சி உள அணைநது = மேகமணடலமளவுமுயாநத திருககோபுரததின்முன் வணங்கி யுளளே சென்று, அமபொன மாளிகைபபுறததில அன்பரோடு சூழவநது= அழகிய பொனனாலாகிய திருமாளிகையின்பககததி லடியாரோடு வலமாய வநது, இமபாஞாலம உயயவநத பிளளையாா இறைஞசுவார்=இந்நிலவுலக முயயுமபடி எழுநதருளிய ஆளுடையபிளளையாா வணஙகுவாராயினா-எ-று. கமபவாணரொனபது, திருவேகமபததுள வாழுநா எனறபடி. (கசுங)

வேறு

செமபொனமலைக கொடிதழுவக குழைநதருளுந திருமேனிக்
கமபரைவந தெதிாவணஙகுங கவுணியாதங காவலனா
பமபுதுளிக கணணருவி பாயந்துமயிாப புளகமவரத
தமபெருகு மனக்காத றளளநிலமிசைத தாழநதாா.

(இ-ள) செமபொன் மலைககொடி தழுவககுழைந்தருளும் திருமேனி=சிவநதபொனமலையரசனாகிய இமவான புதகிரியாகிய காமாட்சிதேவி தழுவுஙகாரணததாற குழைநத திருமேனியையுடைய ; கமபரைவந்து எதிர் வணஙகும் கவுணியா தம காவலனா=திருவேகமபரையடைநது திருமுன வணங்கும ஆளுடையபிளளையாா ; பமபுதுளிககண் அருவிபாயந்து மயிாப் புளகமவர=மிகததுளிககு மானநதககணணீரருவி திருமேனியிற பாயதலால் உரோமமுகிளிபப, தம்பெருதமன ஈகாதல தளள நிலமிசைத்தாழநதார்= தமது மிகக திருவுளளததினகணுளள பெருவிருப்பானது அவசமாக்கப பூமியில விழுநதார்.—எ-று. (கசுச)

பலமுறையும் பணிந்தெழுந்து பங்கயச்செங் கைமுகிழ்ப்ப
மலருமுக மளித்ததிரு மணிவாயால் மறையானென்
றுலகுய்ய வெடுத்தருளி யுருகியவன் பென்புருக்க
நிலவுமிசை முதற்றுள நிரம்பியநீர் மையினிகழ.

(இ-ள்.) பலமுறையும்பணிந்து எழுந்து பங்கயச்செங்கை முகிழ்ப்ப=பலதரமுஞ்சாட்டாங்கமாகவணங்கி யெழுந்து தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கரங்கள் சிரமேற்குவிய, மலரும்முகம் அளித்த திருமணிவாயால்=மலர்ந்த திருமுகத்திற்றோன்றிய அழகிய திருவாக்கினால், மறையான் என்று உலகு உய்ய எடுத்தருளி="மறையானை" என்று உலகத்தாருய்ய முதலெடுத்தருளி, உருகிய அன்பு என்பு உருக்க=மனமுருகுதற்குக்காரணமான பேரன்பானது என்பினையுருக்கச்செய்ய, நிலவு மிசைமுதற்றுளம் நிரம்பிய நீர்மையின் நிகழ=விளங்கிய வேழிசை முதலியவற்றோடு தாளமுங் குறையாத வியல்பாற் பொருந்தும்படி.—எ-று. ஈண்டு, வாயென்றது வாக்கினை மேனின்றது. (௧௬௫)

திருவேகம்பம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணொடா ணாகிய பெம்மானை
யிறையானை யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதென துள்ளமே

அந்தண்பூங் கச்சியேகம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூரன்கலிக் கோவையாற்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொற்பாடி யாடக் கெடும்பாவமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஏகாம்பரநாதர். தேவியார்-காமாட்சியம்மை.

பாடினார் பணிவுற்றார் பரிவுறுமா னந்தக்கூத்
தாடினா ரகங்குழைந்தா ரஞ்சலிதஞ் சென்னியின்மேற்
சூடினார் மெய்ம்முகிழ்த்தார் சூகரமு மனனமுமாய்த்
தேடினா ரிருவர்க்குந் தெரிவரியார் திருமகனார்.

(இ-ள்.) பாடினார் பணிவுற்றார் = திருப்பதிகம்பாடியருளினார் வணங்கியருளினார்; பரிவுறும் ஆனந்தக்கூத்து ஆடினார் = அன்புமிக்க ஆனந்தக

கூதனை யாடியருளினா ; மனமகுழைநதாா = மனங்குழை வடைந்தார் ; அஞசலி தம சென்னியின்மேற சூடினா = கூப்பிய திருக்கரங்களைத்தமது திருமுடியின்மேற சோததருளினா, மெய முகிழததாா = புளகாங்கித முடையாராஞா ; சூகரமும அனனமுமாயத தேடினா இருவாகரும் தெரி வரியாா திருமகனா = பனறியு மனனமுமா யடியையு முடியையுந தேடிய திருமாலபிரமனெனனு மிருவருககு மறிதறகரிய சிவபெருமானாாது புதல்வ ராகிய ஆளுடையபிளளையாா —எ-று அஞசலி, இருகரங்களையுங் குவியச் சோததல (ககசு)

மருவியவே ழிசைபொழிய மனமபொழியும பேரன்பாற
பெருகியகண மழைபொழியப பெருமபுகலிப் பெருநதகையா
ருருகியவன புள்ளலைப்ப வுமைதழுவக குழைநதவரைப
பருகியமெய யுணாவினொடும பரவியே புறததணைநதாா

(இ-ள்.) மருவிய ஏழிசை பொழிய மனமபொழியும பேரன்பால = பொருந்திய ஏழிசைகளு மிகஙோஙக மனதிலுதித்த பேரன்பினால; பெருகிய கணமழைபொழிய=பெருககெடுதத ஆனநதககணணீரானது சொரியும்படி ; பெரும்புகலிப பெருநதகையாா = பெரிய சீகாழியிலவதரிதத ஆளுடைய பிளளையாா, உருகிய அனபு உள அலைபப = மனமுருகுதறகுக் காரணமான பேரன்பு தமமுளளததை யலையசெயய, உமைதழுவக குழைந்தவரை = காமாடசி தேவியாா தழுவுஙகால திருமேனிகுழைததருளிய திருவேகமப ரை, பருகிய மெயயுணாவினொடுமபரவியே புறதது அணைநதாா = தமது திருககணகளாறபருகிய மெயயுணாசசியுடன துதிததுப புறமபேவநதருளி னா —எ-று. (ககஎ)

புறததணைநத தொண்டருடன் போநதமைநத திருமடததிற
பெறறகருமபே றுலகுயயப பெற்றருளும பிளளையாா
மறபபரிய காதலுடன வநதெயதி மகிழநதுறைவா
ரறபெருஞசெலவக காமக கோடடமணைந திறைஞசினா்.

(இ-ள்) புறதது அணைநத தொணடருடன போந்து அமைநததிரு மடததில = ஆலயததின புறமபேவநது அடியாாதிருககூடடததுட னெழுந தருளி அஙகுளள திருமடததில, பெறறகரும பேறு உலகு உயயப்பெற றருளும் பிளளையாா = யாவராலும பெறுதறகரிய சிவஞானததை யுலகததா ருயயும்பொருடடுத தாமபெறற ஆளுடையபிளளையாா, மறபபரிய காதலு டன் வநது எய்தி மகிழநது உறைவாா = மறததறகரிய பெருவிருப்போடு அஙகெழுநதருளிவந்து மகிழநது இருந்தருளுவாராய ; அறபெருஞசெல வக காமககோட்டம் அணைநது இறைஞசினா் = பினபு அறங்களை வளா்

க்குமிக்க செல்வத்தையுடைய திருக்காமக் கோட்டத்தையடைந்து வணங்கியருளினார்.—எ-று. பிள்ளையார் திருமடத்தி லுறைவாராயக் காமக் கோட்டமடைந் திறைஞ்சினாரெனக் கூட்டுக. (௧௧௰)

திருவேகாம பரத்தமர்ந்த செழுஞ்சுடரைச் சேவடியி
லொருபொழுதுந் தப்பாதே யுள்ளுருகிப் பணிகின்றார்
மருவுதிரு வியமகமும்வளரிருக்குக் குறண்மற்றும்
பெருகுமிசைத் திருப்பதிகத்தொடைபுனைந்தார் பிள்ளையார்.

(இ-ள்.) திரு ஏகாம்பரத்து அமர்ந்த செழும் சுடரை = திருவேகாம்பரமென்னு மாலயத்திலெழுந்தருளிய செழுமைபொருந்திய சோதிவடிவரான ஏகாம்பர நாதரை, சேவடியில் ஒருபொழுதும் தப்பாதேயுள் உருகிப் பணிகின்றார்=சிவந்ததிருவடிகளி லொருகாலமுந் தவறாமல் மனமுருகி வணங்குகின்றவராய், மருவு திரு இயமகமும் வளர் இருக்குக்குறள் மற்றும்=மேன்மைபொருந்திய திரு இயமகமும் திருவிருக்குக் குறளும் இவையல்லாத பிறவுமாகிய; பெருகும் இசைத்திருப்பதிகத்தொடை புனைந்தார் பிள்ளையார்= மிக்க இசைபொருந்திய திருப்பதிகமாலையையும் ஆளுடையபிள்ளையார் பாடியருளினார்.—எ-று. பணிகின்றாராயப்பிள்ளையார் பாடினாரெனக் கூட்டுக. அவ்வாலயம் ஒருமாமரமுடைமையால் திரு ஏகாம்பரமென்றும், திருவேகம்பமென்றும் பெயர் பெறும். சிவபெருமானும் திருவேகாம்பரர், திருவேகம்பர் என வழமுரிமையாற் பெயர்பெறுவர். (௧௧௧)

திருவேகம்பம்-திரு இயமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனே பாவைதன்னுரு மேலொரு பாகனே, தூயவானவர் வேதத்துவனியே சோதிமாலெரி வேதத்துவனியே, யாயுநன்பொரு ளுண்பொருளாதியே யாலநீழ லருமபொருளாதியே, காயவின்மதன் பட்டுகம்பமே கண்ணுதற்பரமற் கிடங் கம்பமே.

கந்தமார்பொழில் சூழ்தருகம்பமே காதல்செய்பவர் தீர்த்திடு கம்பமே, புந்திசெய்து விரும்பிப்புகலியே பூசுரன்றன விரும்பிப்புகலியே, யந்தமில்பொரு ளாயினகொண்டுமே யண்ணலின்பொரு ளாயினகொண்டுமே, பந்தனின்னியல் பாடியபந்துமே பாடவல்லவராயின்பத்துமே.

திருச்சிற்றம்பலம்.

திருவிருக்குக்குறள் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார் கச்சித், திருவே கம்பத்
தொருவா வென்ன, மருவா வினையே.
கொச்சை வேந்தன், கச்சிக் கம்ப
மெச்சுஞ் சொல்லை, நச்சும் புகழே.

திருச்சிற்றம்பலம்.

நீடுதிருப் பொழிற்காஞ்சி நெறிக்காரைக் காடிறைஞ்சிச்
சூடுமதிக் கண்ணியார் துணைமலர்ச்சே வடிபாடி
யாடுமவ ரினிதமரு மனேகதங்கா வதம்பரவி
மாடுதிருத் தானங்கள் பணிந்தேத்தி வைகுநாள்

(இ-ள்.) நீடுதிருப்பொழிற் காஞ்சி நெறிக்காரைக்காடு இறைஞ்சி = மிக்க திருவினையுடைய சோலைசூழ்ந்த திருக்காஞ்சியிலுள்ள திருநெறிக்காரைக் காட்டைவணங்கி, சூடுமதிக்கண்ணியார் துணைமலர்ச்சேவடிபாடி = சூடுகின்ற மூன்றாம் பிறையாகிய கொண்டைமாலையையுடைய காரைத்திருநாதரது இரண்டுமலர்போலுந் திருவடிகளைத் துதித்து, ஆடுமவர் இனிது அமரும் அனேகதங்காவதம் பரவி = திருநடஞ்செய்தருளுஞ் சிவபெருமானெழுந்தருளிய அனேகதங்காவதமென்னுந் திருப்பதியைத் துதித்து, மாடுதிருத்தானங்கள் பணிந்து ஏத்தி வைகும் நாள் = அத்திருக்கச்சித் திருப்பதியினருகிலுள்ள பிற திருப்பதிகளையும் வணங்கித் துதித்து அங்கெழுந்தருளியிருக்கும் நாளில் — எ-று. (௪௦௦௦)

எண்டிசையும் போற்றிசைக்குந் திருப்பதிமற் றதன்புறத்துத்
தொண்டருட னினிதேத்தித் தொல்லைவிட முண்டிருண்ட
கண்டர்மகிழ் மேற்றளியு முதலான கலந்தேத்தி
மண்டுபெருங் காதலினால் வணங்கிமீண் டணைந்திருந்தார்.

(இ-ள்.) எண்டிசையும் போற்றிசைக்கும் திருப்பதி மற்று அதன்புறத்து = எட்டுத்திக்கிலுள்ளாருந் துதிசெய்யுந் திருப்பதியாகிய அத்திருக்காஞ்சியின் பக்கத்திலுள்ள தலங்களில், தொண்டருடன் இனிது ஏத்தி = அடியார் திருக்கூட்டங்களுட னினிதாகத் துதித்து, தொல்லைவிடம் உண்டு இருண்ட கண்டர் மகிழ்மேற்றளியுமுதலான கலந்து ஏத்தி = முன்னாளில் ஆலாலத்தையுண்டு அதனாற் கருகிய திருமிடற்றையுடைய சிவபெருமான் மகிழ்ந்து வீற்றிருக்குந் திருக்கச்சி மேற்றளியும் திருவோணகாந்தன்றளியுமுதலிய பலதிருப்பதிகளையுமடைந்து துதித்து; மண்டு பெருங்காதலினால் வணங்கி மீண்டு அணைந்து இருந்தார் = மிக்க பெருவிருப்பால் வணங்கி மீண்டு முன்போந்த திருமடத்தையடைந்தெழுந்தருளியிருந்தார். — எ-று. (௪௦௦௧)

அப்பதியில் விருப்பினொடு மங்கணரைப் பணிந்தமர்வார்
செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் றென்கரைபோய்
மைப்பொலியுங் கண்டர்திரு மாற்பேறு மகிழ்ந்திறைஞ்சி
முப்புரஞ்செற் றவர்தம்மை மொழிமாலை சாத்தினார்.

(இ-ள்) அப்பதியில் விருப்பினொடும் அங்கணரைப்பணிந்து அமர்வார் = அத்திருக்காஞ்சித் திருப்பதியிற் பெருவிருப்புடன் ஏகாம்பரநாதரை வணங்கி யெழுந்தருளியிருக்கும் பிள்ளையார், செப்பரிய புகழ்ப்பாலித் திருநதியின் றென்கரைபோய் = சொல்லுதற்கரிய புகழையுடைய திருப்பாலி நதியின் றென்கரையே சென்றருளி, மைப்பொலியுங்கண்டர் திருமாற்பேறு மகிழ்ந்து இறைஞ்சி = கருமைவிளங்குந் திருமிடற்றையுடைய மாலவணங்கீச ரெழுந்தருளிய திருமாற்பேற்றை மகிழ்கூர்ந்து வணங்கி, முப்புரஞ் செற்றவர் தம்மை மொழிமாலை சாத்தினார் = முப்புரங்களையு மெரித்த அம்முதல்வரைத் திருப்பதிகமாலை சாத்தியருளினார்.—எ-று. (௧௦௦௨)

திருமாற்பேறு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறுசேர்திரு மேனியர்
சேறுசேர்வயற் றென்றிரு மாற்பேற்றின்
மாறிலாமணி கண்டரே.

மன்னிமாலொடு சோமன் பணிசெயு
மன்னுமாற்பேற் றடிகளை
மன்னுகாழியுண் ஞானசம்பந்தன் சொற்
பன்னவேவினை பாறுமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-மாலவணங்குமீசர். தேவியார்-கருணைநாயகி.

திருமாற்பே றுடையவர்தந் திருவருள்பெற் றெழுந்தருளிக்
கருமாலுங் கருமாவாய்க் காண்பரிய கழறாங்கி
வருமாற்றன் மழவிடையார் திருவல்லம் வணங்கித்தம்
பெருமாற்குத் திருப்பதிகப் பெரும்பிணைய லணிவித்தார்.

(இ-ள்.) திருமாற் பேறுடையவர் தம் திருவருள்பெற்று எழுந்தருளி = திருமாற்பேற்றிலெழுந்தருளிய மாலவணங்கீசரது திருவருளைப்பெற் றங்குநின்று மெழுந்தருளி, கருமாலும் கருமாவாய்க் காண்பரிய கழல்தா

ஙகி = கருநிறததையுடைய திருமாலும பன்றிவடிவெடுத்துக் காணுதறகரிய திருவடிகளைசசுமநது வருகினற வலிய இளமைபொருந்திய தருமவிடையை யுடைய வல்லநாத ரொழுநதருளிய திருவலலமென்னும் திருபபதியை வண ஙகி, தமபெருமாறகுத திருபபதிகப பெருமபிணையல அணிவித்தார்=தமது முதலவராகிய அவவலலநாதருககுத திருபபதிகமாகிய பெருமைபொருந்திய மாலையை யணிவிததலைசசெயதாா.—எ-று (௩00௯)

திருவலலம - பண் - வியாழககுறிஞ்சி.

திருசசிறறமபலம.

எரிததவன முபபுர மெரியின மூழகத
தரிததவன கஙகையைத தாழசடைமேல
விரிததவன வேதஙகள வேறுவேறு
தெரிததவ னுறைவிடந திருவலலமே

கறறவா திருவலலங கண்டுசெனறு
நறறமிழ ஞானசம பநதனசொனன
குறறமில செநதமிழ கூறவலலாா
பறறுவ ரீசன்பொற பாதஙகளே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-வலலநாதா. தேவியாா - வல்லாமபிகை.

அஙகுளள பிறபதியி லரிககரியாா கழலவணஙகிப
பொஙகுபுனற பாலயாறறின் புடையிலவட பாலிறைவ
ரெஙகுமுறை பதிபணிவா ரிலமபயஙகோட் டூரிறைஞசிச
செஙகணவிடை யுகைததவரைத திருபபதிகம பாடினாா.

(இ-ள.) அஙகு உளள பிறபதியில அரிககு அரியாாகழலவணங்கி = அததிருபபாலிததிருநதியின தெனகரையிலுளள பிற திருபபதிகளில திருமா லுககுக காணடறகரிய சிவபெருமானது திருவடிகளைவணஙகி; பொஙகுபு னற பாலயாறறின புடையில வடபால=மிகக நீர்நிறைந்த பாலயாறறின கரையினவடபககததில, இறைவா உறைபதி எஙகும பணிவாா = சிவபெரு மானெழுநதருளிய திருபபதியெஙகும வணஙகுஙகருததுடைய பிள்ளையாா; இலமபயஙகோடடூா இறைஞசி=இலமபயஙகோடடூரைவணஙகி; செங்கண விடைஉகைததவரைத திருப்பதிகம்பாடினர் = சிவந்தகண்ணையுடைய இட பததைவாகனமாகக கொணட சந்திரசேகரரைத் திருபபதிகததாற பாடியரு ளினார்.—எ-று. (௩00௪)

திருஇலம்பையங்கோட்டூர்-பண்-குறிஞ்சி
திருச்சிற்றம்பலம்.

மலையினார் பருப்பதந் துருத்திமாற் பேறு மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம், நிலையினா னெனதுரை தனதுரை யாக நீறணிந் தேறுகந் தேறிய நிமலன், கலையினார் மடப்பிணை துணையொடுந் துயி லக் கானலம் பெடைபுல்கிக் கணமயிலாலு, மிலையினார் பைம்பொழி லிலம்பையங் கோட்டூ ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வ தியல்பே

கந்தனை மலிகனை கடலொலி யோதங் கானலங் கழிவளர் கழும லமென்னு, நந்தியாருறைபதி நான்மறை நாவனற்றமிழ்க் கின்றுணை ஞான சம்பந்த, னெந்தையார் வளநக ரிலம்பையங் கோட்டூரிசையொடு கூடிய பத்தும்வல் லார்போய், வெந்துயர் கெடுகிட விண்ணவ ரோடும் வீடுபேறின்மையில் வீடெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - சந்திரசேகரேசுவரர்.

தேவியார் - கோடேந்துமுலையம்மை

திருத்தொண்டர் பலர்சூழ்ந்து திருவிற் கோலமும்பணிந்து
பொருட்பதிகத் தொடைமாலை புரமெரித்த படிபாடி
யருட்புகலி யாண்டகையார் தக்கோல மணைந்தருளி
விருப்பினொடுந் திருவூறன் மேவினார் தமைப்பணிந்தார்.

(இ-ள்.) திருத்தொண்டர் பலர் சூழ்ந்து திருவிற்கோலமும் பணிந்து = திருவடியார்கள் பலர்சூழ்ம்படித் திருவிற்கோலமென்னுந் திருப்பதியையும் வணங்கி; பொருட்பதிகத்தொடை மாலை புரம் எரித்தபடி பாடி = பொருணிறைந்த திருப்பதிகமாகிய தொடைபொருந்திய மாலையில் திரிபுரமெரித்த திருக்கோலச் சிறப்பைப் பாடியருளி, அருட்புகலி ஆண்டகையார் தக்கோலம் அணைந்தருளி = கருணைபொருந்திய ஆளுடையபிள்ளையார் தக்கோலத்தை யடைந்தருளி, விருப்பினொடும் திருவூறல் மேவினார் தமைப்பணிந்தார் = விருப்பத்தோடு திருவூறலில் எழுந்தருளிய உமாபதீசரை வணங்கியருளினார்.—எ-று. (௧௦௦௫)

திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.
திருச்சிற்றம்பலம்.

உருவினா ளுமையொடு மொன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்

வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினா னுறைவிடந் திருவிற் கோலமே.

கோடல்வெண் பிறையனைக் கூக மேவிய
சேடனைச் செழுமதிற் றிருவிற் கோலத்தை
நாடவல் லஃதமிழ் ஞானசம் பந்தன
பாடல்வல்லார்களுக் கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-புராந்தகேசுவரர் தேவியார்-புராந்தரியம்மை.

தொழுதுபல் முறைபோற்றிச் சுரர்குருவுக் கிளையமுனி
வழுவிற்றவம் புரிந்தேத்த மன்னினார் தமைமலர்ந்த
பழுதில்செழுந் தமிழ்மாலைப் பதிகவிசை புனைந்தருளி
முழுதுமளித் தவரருளாற் போந்தனர்முத் தமிழ்விரகர்.

(இ-ள்) தொழுது பலமுறைபோற்றி=நிலமுறச் சாட்டாங்கமாய்ப் பலமுறைவணங்கித் துதித்து, சுரர்குருவுக்கு இளையமுனி=தேவகுருவாகிய வியாழமுனிக்குத் தம்பியாகிய சம்வர்த்தமுனி, வழுவில் தவம்புரிந்து ஏத்த மன்னினார்தமை = குற்றமற்ற தவஞ்செய்து துதிக்கும்படி யெழுந்தருளிய உமாபதீசரை, மலர்ந்த பழுதில் செழும் தமிழ்மாலைப்பதிக இசைபுனைந்தருளி = விளங்கிய குற்றமற்ற செந்தமிழ்ச்சொல்லானாய திருப்பதிகமாலையை இசையோடு சாத்தியருளி, முழுதும் அளித்தவர் அருளாற்போந்தனர் முத்தமிழ்விரகர்=இயங்கியற்பொருளும் நிலையியற்பொருளுமாகிய எல்லாப்பொருள்களையு முண்டாக்கிய அச்சிவபெருமானது திருவருளினால் அங்குநின்று ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளினார்.—எ-று. தேவகுருவாகிய வியாழனுக்குத் தம்பி புலத்தியமுனி கச்முனிமுதலியோருமாகச் சம்வர்த்தன சிவபத்தியுடைய முனிச்சிரோட்டருதலில் ஈண்டுக் கூறப்பட்டனர். (௧௦௦௬)

திரு ஊறல்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்

மாறிலவுண ரரணமவை மாயவோர் வெங்கணையாலன்று
நீறெழ வெய்த வெங்கணி மலனிடம் வினவிற்
றேற விரும்பொழி லுந்திகழ் செங்கயல் பாயவயலுஞ் சூழ்ந்த
ஊற லமர்ந்த பிரானொலி யார்கழ லுள்குதுமே.

கோட விரும்புறவிற் கொடிமாடக் கொச்சையர் மன்மெச்ச
வோடுபுனல்சடைமேற் கரந்தான் றிருவூறல்

நாட லரும்புகழான் மிகுஞான சமபநதன சொனன நலல
பாடலகள பததுமவலலாா பரலோகத திருபபாரே.

திருச்சிறறமபலம
சுவாமிபெயா-உமாபதீசா தேவியாா - உமையமமை.

குன்றநெடுஞ் சிலையாளா குலவியபல பதிபிறவும
நின்றவிருப புடனிறைஞ்சி நீடுதிருத தொணடருடன
பொனறயஙகு மணிமாடப பூநதராயப புரவலனாா
சென்றணைநதாா பழையனூாாத திருவாலங காட்டருகு

(இ-ள) குனறநெடும சிலையாளா குலவியபலபதிபிறவும=மாமேரு வாகிய நீணடவிலலையுடைய சிவபெருமானெழுநதருளிய பல திருபபதிகள பிறவறறையும, நினற விருபபுடன இறைஞ்சி=நிலைபெறற விருபபுடன வணஙகி; நீடு திருததொணடருடன=மிகக திருவடியாாகூடடததுடன, பொனதயஙகுமணிமாடப பூநதராயப புரவலனாா = பொனபோல விளஙகுகினற அழகிய மாடஙகளையுடைய சீகாழிததலைவராகிய ஆளுடையபிளளையாா, செனறு அணைநதாா பழையனூாாத திருஆலஙகாடடருகு = செனறடைநதருளினாா பழையனூாினகணுளள திருவாலஙகாடெனனுந திருபபதியின மருஙகு.—எ-று. திருவாலஙகாடடினகண செனறடைநதாரெனககூடடுக (௧௦௦௭)

இமமையிலே புவியுளளோா யாருங்காண வேழுலகும போற றிசைபப வெமமையாளு, மமமைதிருத தலையாலே நடநதுபோறறு மமமையபபா திருவாலங காடாமெனறு, தமமையுடை யவாமூதூா மிதிககவஞ்சிச சண்பைவருஞ் சிகாமணியாா சாரசசெனறு செம மைநெறி வழுவாத பதியின்மாடோா செழுமபதியி லனறிரவு பளளி சோநதாா.

(இ-ள்.) இம்மையிலே புவியுளளோா யாரும காண=இபபிறபபிலே பூமியிலுளள யாவருங கணடுற காணவும், ஏழு உலகும போறறிசைபப= ஏழுலகினகணுளளாருந துதிசெயயவும; எமமையாளும அமமை திருததலையாலே நடநதுபோறறும=எமமையாளுந தனமையையுடைய காரைககாலமமையாா திருததலையால நடநது துதிககும; அமமை அபபா திருவாலஙகாடாமென்று = அமமையபபராகிய தேவசிஙகரது திருவாலஙகாடிதுவாமென்று; தமமை உடையவா மூதூா் மிதிகக அஞ்சி = தமமையாளாகவுடைய வரானததாணடவேசரது பழையதிருபபதியை மிதிததறகசசமுறறு; சண பைவருஞ்சிகாமணியாா் சாரச்செனறு=சீகாழியிலவதரிதத ஆளுடையபிளளை யாா் அததிருபபதியின் சமீபததைபபொருந்தச்சென்று; செமமை நெறி வழுவாத பதியின்மாடு=நன்மாா்ககம் வழுவாத மரபினா்கள் வாழு மததிரு

பதியின்பக்கத்து, ஓர் செழும்பதியில் அன்று] இரவுபள்ளிசேர்ந்தார் = ஒரு செழுமைபொருந்திய ஊரில் அன்றிரவுபள்ளிகொண்டருளினார்.—எ-று. அம்மை, இம்மையில் யாருங்காண வேழுலகும் போற்றிசைப்பத்தலையால் நடந்துபோற்றுமாலங்காடெனக் கூட்டுக. அம்மையும் அப்பருமாய ஆன்ம கோடிகளைப்பெற்றமையால் அம்மையப்பரொன்றும்; காரைக்காலம்மையார் வழிபட்டமையால் அம்மையப்பரொன்றும் பொருள்போதரும். (௧௦௦௮)

மாலையிடை யாமத்துப் பள்ளிகொள்ளு மறையவர்தம்முன் புகனவிலேவந், தாலவனத் தமர்ந்தருளு மப்பர்நம்மை யயர்த்தனையோ பாடுதற்கென் றருளிச்செய்ய, ஞாலமிரு ணீங்கவரும் புகலிவேந்தர் நள்ளிருள்யா மத்தினிடைத் தொழுதுணர்ந்து, வேலைவிடமுண் டவர்தங் கருணைபோற்றி மெய்யுருகித் திருப்பதிகம் விளம்பலுற்றார்.

(இ-ள்) மாலை இடை யாமத்துப்பள்ளிகொள்ளும் மறையவர் தம் முன்பு = மாலைக்காலத்தோடுகூடிய நடுயாமத்திற் பள்ளிகொண்டருளும் ஆளுடையபிள்ளையார் முன்னே, கனவிலேவந்து ஆலவனத்து அமர்ந்தருளும் அப்பர் = கனவிலேயெழுந்தருளித் திருவாலங்காட்டில் வாழ்கின்ற கூத்தத் தாண்டவேசர் நம்மை அயர்த்தனையோ பாடுதற்கென்று அருளிச்செய்ய = நம்மைப்பாடுதற்கு மறந்தாயோவென்று அருளிச்செய்ய, ஞாலம் இருள் நீங்க வரும்புகலிவேந்தர் = நிலவுலகத்தார் அஞ்ஞான இருளினின்றும் நீங்கும் வண்ணம் அவதரித்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார், நள் இருள் யாமத்தினிடைத்தொழுது உணர்ந்து = செறிவான இருள்பொருந்திய நடுயாமத்திற் றுயிலுணர்ந்து வணங்கி, வேலைவிடம் உண்டவர் தம்கருணை போற்றி = சமுத்திரத்திலுதித்த ஆலாகலத்தையுண்ட அச்சிவபெருமானது திருவருளைத்துதித்து, மெய் உருகித் திருப்பதிகம் விளம்பலுற்றார் = அன்பால் திருமேனியுருகித் திருப்பதிகம்பாடியருளினார்—எ-று. கருணைபோற்றியென்றது, அம்மைதலையால் நடந்த திருப்பதியென்று தாம்பதியிற் செலற்கஞ்சி நிற்கவுஞ் சொற்பனத்திற்றாமே சென்று தரிசனங்கொடுத்துப் பாடச்செய்த பெருங்கருணையைத் துதித்தென்றபடி. (௧௦௦௯)

துஞ்சவரு வாரொன்றே யெடுத்தவோசைச் சுருதிமுறை வழுவா மற்றொடுத்தபாட, லெஞ்சலிலா வகைமுறையே பழையனூரா ரியம்புமொழிகாத்தகதை சிறப்பித்தேத்தி, யஞ்சனமா கரியுரித்தா ரருளாமென்றே யருளுமவகை திருக்கடைக்காப் பமையச்சாத்திப், பஞ்சுரமாம் பழம்பதிறங் கிழமைகொள்ளப் பாடினார் பாரொல்லார் முய்ய வந்தார்.

(இ-ள்) துஞ்சவருவாரொன்றே எடுத்த ஓசைச்சுருதி முறைவழுவா மற்றொடுத்தபாடல் = "துஞ்சவருவார்" என்று முதலெடுத்தவோசையோடு

சுருதியும் நிலைதவறுமற் றெடுத்த திருப்பதிகப்பாடலில ; எஞ்சலிலாவகை முறையே பழையனூரார் இயம்புமொழிகாத்தகதை சிறப்பித்து ஏத்தி=குறையாதவண்ணம் பழையனூர் வேளாளர் தாம வணிகனுக்குக் கூறிய உறுதிமொழியைத் தவறுமற காத்தகதையையுஞ் சிறப்பித்துத் துதித்து, அஞ்சனமாகரியுரித்தார் அருளாம எனறே அருளும் வகை திருக்கடைக்காப்பு அமையச்சாத்தி = கருமை நிறத்தையுடைய பெரியயானையையுரித்த ஊர்த்த தாண்டவேசரது திருவருளாமென்று அவர் தமக்குச் சொற்பனம நிகழ்த்திப் பாடச்செய்த வகைமையும் திருக்கடைக்காப்பிற பொருந்தப்பாடி, பஞ்சுரமாமபழையதிறம=பலலுயிருந்துயர் நீங்கப்பாடியருளிய பண்ணமைந்த திருப்பதிக விசையாலாய பழமைபொருந்திய பயனை, கிழமை கொள்ளப் பாடினார் பாரெல்லாம உய்யவந்தார்=(சமண்பாட்டில புத்தர் சமணர்கட்கு) முரிமைபொருந்துமபடி பாடியருளினார் உலகெல்லாமுய்யவந்த ஆளுடையபிள்ளையார்.—எ-று. "வஞ்சப்படுத்தொருத்தி வாணாள் கொள்ளுமவகைகேட்டஞ்சும் பழையனூர்" என்றதனால், வேளாளர் வணிகனுக்குக்கூறிய உறுதிமொழிகாத்திறந்தமையும, "வேந்தனருளாலே" என்னுந் திருக்கடைக்காப்பால சொற்பனம் நிகழ்த்திய பொருண்மையும, "போழமபலபேசிப்போது சாற்றித் திரிவாரும, வேழம வருமளவும வெயிலே துற்றித் திரிவாருங், கேழல வினைபோகக்கேட்பிப்பாரும்" என்னுஞ் சமணபாட்டால அச்சமண புத்தர்கட்குந் திருப்பதிகவிசை தீவினையைப் போக்குமெனப்தும போதருதலில, ஈண்டுநூலாசிரியர் அத்திருப்பதிகப்பொருளை விரித்துக்கூறியருளினார்.—எ-று

திரு ஆலங்காடு-பண-தக்கராகம.

திருச்சிற்றமபலம.

புக்கருளிக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
கொக்கிறகு மதிக்கொழுந்துங் குளிர்புனலு மொளிர்கின்ற
செக்கர்நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார்

(இ-ள்) மிக்கு உயர்ந்த கோபுரத்தை வணங்கி = மேற்கொண்டுயர்ந்த திருக்கோபுரத்தைவணங்கி, வியன் திருமுன்றில் புக்கருளி = இடமகன்ற திருமுற்றத்தையடைந்தருளி, கோயிலினைப் புடைவலங்கொண்டு உள் அணைந்து = திருக்கோயிலினை மருங்கில் வலமாகவந்துள்ளேபுகுந்து, கொக்கு இறகும் மதிக்கொழுந்தும் குளிர் புனலும் ஒளிர்கின்ற = கொக்கிறகுஞ் சந்திரகலையுங்குளிர்ந்த கங்காநதியும் விளங்குகின்ற, செக்கர் நிகர் சடைமுடியார் சேவடியின் கீழ்த்தாழ்ந்தார் = செக்கர்போலுஞ் சடைமுடியையுடைய அச்சிவபெருமானது திருவடியின் கீழ்ப்பணிந்தருளினார் —எ-று. (௧௧௨௨)

தாழ்ந்துபல முறைபணிந்து தம்பிரான் முன்னின்று
வாழ்ந்துகளி வரப்பிறவி மருந்தான பெருந்தகையைச்
சூழ்ந்தவிசைத் திருப்பதிகச் சொன்மாலை விளைவுணர்வால்
வீழ்ந்தபெருங் காதலுடன் சாத்திமிக வின்புற்றார்.

(இ-ள்) பலமுறை தாழ்ந்து பணிந்து = பலகால் நிலமுற வீழ்ந்து வணங்கி, தம்பிரான் முன்னின்று = வான்மீசர் திருமுன்னின்று, வாழ்ந்து களிவர = ஆனந்த வாழ்வடைந்து களிப்புண்டாக, பிறவி மருந்தான பெருந்தகையை = பிறவிக்கு மருந்தாயுள்ள பெருமையிற் சிறந்தோரை; சூழ்ந்த இசைத்திருப்பதிகச்சொல்மாலை விளைவுணர்வால் = இசையோடு பொருந்திய திருப்பதிகமென்னும் பாமாலையை விளைவுணர்வினால், வீழ்ந்த பெருங்காத

லுடன் சாத்தி மிக இன்புற்றார் = சிவபெருமானையடைந்த பெருவிருப்புடன் அணிந்து மிகவு மின்பமடைந்தார் —எ-று. (௧௧௨௩)

திருவான்மியூர்-பண்-இந்தளம்

திருச்சிற்றம்பலம்

கரையுலாங்கட லிற்பொலிசங்கம் வெள்ளிப்பிவன்
திரையுலாங்கழி மீனுகளுந்திரு வான்மியூ
ருறையலாம்பொரு ளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமட மாதுட னாகிய மாண்பதே

மாதோர்கூறுடை நற்றவனைத்திரு வான்மியூ
ராதியெம்பெரு மானருள்செய்ய வினவுரை
போதியென்றெழு காழியுள்ஞானசம் பந்தன்சொல்
நீதியானினை வார்நெடுவானுல காள்வரே

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-மருந்தீசர் தேவியார் திரிபுரசுந்தரி.

பரவிவரு மானந்த நிறைந்த துளி கண்பனிப்ப
விரவுமயிர்ப் புளகங்கண் மிசைவிளங்கப் புறத்தணைவுற்
றரவநெடுந் திரைவேலை யணிவான்மி யூரதனுட்
சிரபுரத்துப் புரவலனார் சிலநாளங் கினிதமர்ந்தார்.

(இ-ள்) பரவிவரும் ஆனந்தம் நிறைந்த துளிகண்பனிப்ப = பரந்துவருகின்ற நிறைவான ஆனந்தக்கண்ணீர் கண்களினின்றுந் துளிப்ப, விரவுமயிர்ப்புளகங்கள் மிசைவிளங்க = நெருங்கிய உரோமாஞ்சிதங்கள் திருமேனியிற் பிரகாசிக்க, புறத்து அணைவுற்று = புறம்பேசென்றருளி, அரவநெடுந்திரை வேலை அணிவான்மியூர் அதனுள் = ஒலிக்கும் நீண்ட அலைகளையுடைய கடற்கரையினணித்தான திருவான்மியூரினிடத்து, சிரபுரத்துப் புரவலனார் சில நாள் அங்கு இனிது அமர்ந்தார் = சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் சிலநாளவ்விடத்தினிதாக எழுந்தருளியிருந்தார் —எ-று. (௧௧௨௪)

அங்கணமர் வாருலகா ளுடையாரை யருந்தமிழின்
பொங்குமிசைப் பதிகங்கள் பலபோற்றிப் போந்தருளிக்
கங்கைபணி மணிமுடியார் பதிபலவுங் கலந்திறைஞ்சிச்
செங்கணவிடைக் கொடியார்தம் மிடைச்சுரத்தைச் சேர்வுற்றார்.

(இ-ள்) அங்கண் அமர்வார் உலகாளுடையாரை = அவ்விடத்தமர்ந் தருளு மாளுடையபிள்ளையார் உலகங்களை யாளுந் தன்மையையுடைய வான்

மீசனா , அருநதமிழின் பொஙகும இசைபபதிகஙகள் பலபோறறிபபோந தருளி = அரியதமிழாலாய மிகக விசையையுடைய திருபபதிகஙகள பலவற றைத துதிததஙகு நின்று மெழுநதருளி ; கஙகையணிமணிமுடியாா பதிபல வும கலநது இறைஞசி = கஙகாநதியையணிநத அழகிய திருமுடியையுடைய சிவபெருமானெழுந்தருளிய திருபபதிகள பலவறறையுமடைநது வணஙகி , செஙகணவிடைசகொடியாா தம இடைசசுரததைச சோவுறறாா=சிவநதகண ணையுடைய இடபககொடியையுயாததருளிய இடைசசுரநாதரது திருவிடைச சுரமெனனுந திருபபதியையடைந்தருளினாா.—எ-று. (ககஉ௫)

சென்னியிள மதியணிநதாா மருவுதிரு விடைசசுரதது
மனனுதிருத தொணடாகுழா மெதிாகொளள வநதருளி
நனனெடுஙகோ புரமிறைஞசி யுடபுகுநது நறகோயி
றன்னைவலங கொணடணைநதாா தமபிரான றிருமுனபு

(இ-ள) செனனி இளமதி அணிந்தாா மருவு திரு இடைசசுரதது= திருமுடியினக ணிளமபிறையையணிநத சிவபெருமானெழுநதருளிய திருவி டைசசுரமெனனுந திருபபதியில , மனனுதிருததொணடாகுழாம எதிாகொ ளளவநதருளி = வாழுந திருவடியாரது கூட்டமெதிாகொளளுமபடி யஙகு சென்றருளி , நனனெடுங கோபுரம இறைஞசி உளபுகுநது = நலல நீணட திருககோபுரததைவணஙகி யுளளேபுகுநது , நறகோயில தனனை வலஙகொ ணடு அணைநதாா தமபிரான திருமுனபு = நலல திருககோயிலை வலமாக வநது அடைநதாா சிவபெருமானது திருமுனபு—எ-று. (ககஉசா)

கண்டபொழு தேகலநத காதலாற கைதலைமேற
கொணடுதல முறவிழுநது குலவுபெரு மகிழ்சசியுடன
மணடியபே ரனபுருகி மயிாமுகிழபப வணஙகியெழுந
தணடாபிரான் றிருமேனி வணணஙகண டதிசயிததாா.

(இ-ள.) கணடபொழுதே கலநதகாதலாற கைதலைமேறகொணடு= இடைசசுரநாதரைத தரிசிததபொழுதே தமமிடத்துப பொருநதிய பெரு விருபபாற திருககரஙகளைச சிரமேறகூபபி , தலமுறவிழுநது = நிலமுறச சாட்டாஙகமாய வணஙகி , குலவுபெரு மகிழசசியுடன=விளஙகு மிகக மகி ழசசியுடன , மணடியபேரன்பு உருகி மயிாமுகிழபபவணஙகி எழுநது=நெ ருஙகிய பேரனபோடு மனமுருகி உரோமமுகிழபபததொழுதெழுநது , அண டா பிரான திருமேனிவணணம் கணடு அதிசயிததாா = தேவாபிராளுகிய இடைசசுரநாதரது திருமேனி நிறததைககணடதிசயமடைநதாா.—எ-று. ()

இருநதவிடைச சுரமேவு மிவாவண்ண மெனனே யென்
றருநதமிழின றிருபபதிகத தலாமாலை கொடுபரவித
திருநதுமனங கனாநதுருகத திருக்கடைககாப புசசாததிப
பெருநதனிவாழ வினைபபெறறாா பேருலகின பேறுனாா.

(இ-ள்.) இடைசசுரம இருநத இவாமேவும் வண்ணம் என்னே என்று = இடைசசுரததினகணெழுநதருளியிருநத இவரடைநத வணண மெனனவெனறு, அருநதமிழின திருபபதிகதது அலாமாலை கொடுபரவி = அரியதமிழாகிய திருபபதிக மலாமாலையாற றுதிதது; திருநது மஙகைாநது உருகத திருககடைககாபபுச சாததி = திருததமான மனங்கரைநதுருகுமவணணந திருககடைககாபபைச சாததியருளி, பெருநதனிவாழ வினை பபெறறுா பேருலகினபேறுஞா = பெரிய ஒபபறறவாழவை யடைநதாா பெரியவுலகஙகளுககும பெருமபேறுக அவதரிதத பிளளையாா.—எ-று. ()

திருவிடைசசுரம-பண-குறிஞசி.

திருசசிறறமபலம.

வரிவள ரவிரொளி யரவரை தாழ வாாசடை முடிமிசை வளா மதிசூடிக, கரிவளா தருகழற காலவல னேநதிக கனலெரி யாடுவா காடரஙகாக, வரிவளா தருபொழி லிளமயிலால வெணணிறத தருவிக டிணணெனவீழு, மெரிவள ரினமணி புனமணிச சாரலிடைச சுரமேவிய விவாவணமெனனே

மடைசசுரமறிவன வாழையுங கயலு மருவிய வயறனில வருமபுனற காழிச, சடைசசுரத துறைவதோா பிறையுடை யணணல சரிதைகள பாவினி றுருகுசமபநதன, புடைசசுரத தருவரைப பூககமழ சாரற புணாமட நடையவா புடையிடை யாாநத, விடைசசுர மேததியவிசையொடு பாட லிவைசொலவலலவா பிணியிலா தாமே.

திருசசிறறமபலம.

சுவாமிபெயா-இடைசசுரநாதா. தேவியாா-இமயமடககொடியமமை.

நிறைநதாரா வேடகையினு னினறிறைஞசிப புறமபோநதங
குறைநதருளிப பணிகினறுா ருமைபாக ரருளபெறறுச
சிறநததிருத தொணடருட னெழுநதருளிச செநதுருதி
யறைநதளிகள பயிலசாரற றிருககழுககுன றிறைஞசுநதாா.

(இ-ள) நிறைநது ஆராவேடகையினால நினறு இறைஞசிப புறம போநது அஙகு உறைநதருளி = நிறைவடைநது அடஙகாககாதலாற றிருமுனனினறு வணஙகிப புறமபே யெழுநதருளி யததிருபபதியில வசிதது, பணிகின்றுா உமைபாகா அருளபெறறு=(நாடொறும) வணஙகுகினற ஆளுடையபிளளையாா இடைசசுர நாதரது திருவருளைப பெறறு; சிறநததிருத தொணடருடன எழுநதருளி=சிறபபடைநத திருவடியாருட னங்கு நினறு மெழுந்தருளி, செந்துருதி அறைநது அளிகள பயிலசாரற திருக்கழுககுன்

றினை அணைந்தார் = செந்துருத்தி யென்னும் பண்ணைவண்டுகள் பாடிச் சஞ்சரிக்கின்ற சாரலையுடைய திருக்கழுக்குன்றமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்.—எ-று. செந்துருத்தி, காலத்தாற் பொதுப்பண்ணாயினும் நிலத்தாற் குறிஞ்சிக் குரித்தாதலிற் செந்துருத்தியறைந்தளிகளென்றார் (௧௧௨௯)

சென்றணையும் பொழுதின்கண் டிருத்தொண்ட ரெதிர்கொள்ளப்
பொன்றிகழு மணிச்சிவிகை யிழிந்தருளி யுடன்போந்து
மன்றலவிழ் நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்றயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார்.

(இ-ள்) சென்றணையும்பொழுதின்கண் திருத்தொண்டர் எதிர்கொள்ள = அத்திருப்பதியை யடைந்தருளுங்காலத்தி லங்குள்ள திருத்தொண்டர்கள் எதிர்கொண்டுவர, பொன்றிகழும் மணிச்சிவிகை இழிந்தருளி உடன்போந்து=அழகு விளங்குகின்ற திருமுத்துச்சிவிகையினின்று மிறங்கியருளி யுடனேசென்று, மன்றல் விரைநறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு = வாசனைகமழுகின்ற நல்லசோலைசூழ்ந்த அக்கழுக்குன்றத்தை வலமாகவந்து; மின்றயங்கும் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார் = மின்போலவிளங்குஞ் சடையையுடைய வேதகிரீசரை விருப்பினுடன் வணங்குகின்றா ராயினார்—எ-று. (௧௧௩0)

திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினாற் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக் குன்றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றார்.

(இ-ள்) திருக்கழுக்குன்றத்து அமர்ந்த தனிச்செங்கனகக் குன்றை = திருக்கழுக்குன்றின்கணெழுந்தருளிய ஒப்பற்ற சிவந்தபொன்னிறமான மலையை, பெருக்கவளர் காதலினாற் பணிந்து எழுந்து = மிகவும் வளர்கின்ற காதலோடு வணங்கியெழுந்து, பேராத கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக்குன்று என்று = நீங்காத திருவுள்ளக்கருத்தோடு "காதல்செய்யுங் கோயில் கழுக்குன்று" என்று இறுதியில் முடித்து, திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றார் = திருப்பதிகத்தைப் பாடியருளித் திருவுள்ளத்தில் நிறைந்த மகிழ்ச்சியடைந்தார்—எ-று. (௧௧௩௧)

திருக்கழுக்குன்றம்-பண்-குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

தோடுடையா னொருகாதிற் றூய குழைதாழ
வேடுடையான் றலைகல னாக விரந்துண்ணு
நாடுடையா னள்ளிரு ளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய் கோயில் கழுக்குன்றே.

கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை
நண்ணிய சீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடிய பத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே.

திருச்சிற்றம்பலம்

சுவாமிபெயர்-வேதகிரீசர் தேவியார்-பெண்ணினல்லாளம்மை.

இன்புற்றங் கமர்ந்தருளி யீறில்பெருந் தொண்டருடன்
மின்பெற்ற வேணியினா ரருள்பெற்றுப் போந்தருளி
யென்புற்ற வணிமார்ப ரெல்லையிலா வாட்சிபுரிந்
தன்புற்று மகிழ்ந்ததிரு வச்சிறுபாக் கத்தணைந்தார்

(இ-ள்) இன்புற்று அங்கு அமர்ந்தருளி = இன்பமடைந்து அத்திருப்பதியிலெழுந்தருளி, ஈறில் பெருந்தொண்டருடன் = எண்ணிறந்த பெருமைபொருந்திய திருவடியாருடன், மின்பெற்ற வேணியினார் அருள்பெற்றுப் போந்தருளி = மின்போல விளங்குகின்ற சடைமுடியையுடைய வேதகிரீசரது திருவருளைப்பெற்று அங்குநின்று மெழுந்தருளி, என்பு அணிவுற்றமார்பர் எல்லையிலா ஆட்சிபுரிந்து = என்பு மாலையாகிய ஆபரணத்தை யணிந்த பாக்கபுரேசர் ஆட்கொண்டு கருணைசெய்த திருப்பதியிலமைத்து, அன்பு உற்று மகிழ்ந்த திரு அச்சிறுபாக்கத்து அணைந்தார் = விருப்பமடைந்து மகிழ்ந்து வீற்றிருக்கின்ற திரு அச்சிறுபாக்கமென்னுந் திருப்பதியை யடைந்தருளினார்.

ஆதிமுதல் வரைவணங்கி யாட்சிகொண்டா ரென்மொழியுங்
கோதில்திருப் பதிகவிசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கி மகிழ்ந்தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினார் சிலநாளங் கமர்ந்தருளி

(இ-ள்) ஆதிமுதல்வரை வணங்கி = எப்பொருளுக்குங் காரணரான அப்பாக்கபுரீசரை வணங்கி, ஆட்சிகொண்டாரென் மொழியும் = "ஆட்சி கொண்டார்" எனச்செய்யுளிறுதியில் மொழிந்தருளும், கோதில்திருப்பதிக இசைகுலாவிய பாடலிற்போற்றி = குற்றமற்ற திருப்பதிகத்தி லிசைபொருந்திய செய்யுட்களாற் றுதித்து, மாதவத்து முனிவருடன் வணங்கி மகிழ்ந்து இன்புற்று = பெரியதவத்தையுடைய திருவடியார்களோடு (அத்திருப்பதியை நாடோறுந்தொழுது) மகிழ்ந்தின்பமடைந்து, தீது அகற்றுஞ்செய்கையினார் சிலநாள் அங்கு அமர்ந்தருளி = குற்றநீங்குஞ் செய்கையையுடைய ஆளுடையபிள்ளையார் சிலநாளவ்விடத்தெழுந்தருளி —எ-று. (௧௧௩௩)

திருஅச்சிறுபாக்கம்-பண்-குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப பொருகடற்பவளமொ டழனிறம்புரையக, குன்றிரண்டன்ன தோளுடையகலங குலாயவெ ண்ணூலொடு கொழும்பொடியணிவா, மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை மெல்லியலாளையோர் பாகமாப்பேணி, யன்றிரண்டுருவ மாயவெம்மடிகளச் சிறுபாக்கம் தாட்சிகொண்டாரே.

மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய மதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழிய, பச்சுறவெறிவயல் வெறிகமழ்காழிப் பதியவரதிப திகவுணியர்பெருமான், கைச்சிறுமறியவன் கழலலாற்பேணுக் கருத்துடைஞானசம் பந்தன்றமிழ்கொண், டச்சிறுபாக்கத் தடிகளையேத் துமன் புடையடியவ ரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர் - பாக்கபுரேசர் தேவியார்-அதிசுந்தரமின்னாளம்மை.

ஏறணிந்த வெல்கொடியா ரினிதமர்ந்த பதிபிறவு
நீறணிந்த தொண்டருட னெதிர்கொள்ள நேர்ந்திறைஞ்சி
வேறுபல நதிகானங் கடந்தருளி விரிசடையி
லாறணிந்தார் மகிழ்ந்ததிரு வரசிலியை வந்தடைந்தார்.

(இ-ள்) ஏறு அணிந்த வெல்கொடியார் இனிது அமர்ந்த பதிபிறவும் = இடபத்தை யெழுதிய வெற்றிக்கொடியையுடைய சிவபெருமா னினிதாக வெழுந்தருளிய பிறதிருப்பதிகளையும், நீறு அணிந்த தொண்டருடன் எதிர்கொள்ள நேர்ந்து இறைஞ்சி=விபூதியையணிந்த திருவடியார்கள் எதிர்கொண்டுவர அத்திருப்பதிகளை நேரே வணங்கி, வேறு பல நதிகானங்கடந்தருளி=பல வேறு நதிகளையுங் காட்டையுங்கடந்தருளி, விரிசடையில் ஆறு அணிந்தார் மகிழ்ந்த திரு அரசிலியை வந்தடைந்தார்=விரிந்த சடையின்கண் கங்காநதியையணிந்த அரசிலிநாதரெழுந்தருளிய அரசிலியென்னுந் திருப்பதியை வந்தடைந்தருளினார்.—எ-று. (௧௧௩௪)

அரசிலியை யமர்ந்தருளு மங்கணர சைப்பணிந்து
பரசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய
விரைசெய்மலர்க் கொன்றையினார் மேவுபல பதிவணங்கித்
திரைசெய்நெடுங் கடலுடுத்த திருத்தில்லை நகரணைந்தார்.

(இ-ள்) அரசிலியை அமர்ந்தருளும் அங்கண் அரசைப்பணிந்து= அரசிலியென்னுந் திருப்பதியை விரும்பி வீற்றிருந்தருளு மழகிய காருண

ணியதனையுடைய சிவபெருமானை வணங்கி, பாசியெழு திருப்புறவார் பனங்காட்டூர் முதலாய=அடியார்கள் துதித்தெழாநின்ற திருப்புறவார்பனங் காட்டூர் முதலிய, விரைசெய்மலர்க்கொன்றையினார் மேவுபல பதிவணங்கி= வாசனை கமழுமலர்ந்த கொன்றைப்பூமாலையையுடைய சிவபெருமானெழுந் தருளிய பலதிருப்பதிகளையுந்தொழுது, திரைசெய்நெடுங்கடல் உடுத்த திருத் தில்லை நகர் அணைந்தார் = அலையெறிகின்ற நீண்ட கடல் சூழ்ந்த சிதம்பர மென்னுந் திருப்பதியையடைந்தருளினார்.—எ-று. (௧௧௩௫)

எல்லையிஞா னத்தலைவ ரெழுந்தருள வெதிர்கொள்வார்
தில்லையில்வா ழந்தணர்மெய்த் திருத்தொண்டர் சிறப்பினொடு
மல்கியெதிர் பணிந்திறைஞ்ச மணிமுத்தின் சிவிகையிழிந்
தல்குபெருங் காதலுட னஞ்சலிசெய் தணைகின்றார்

(இ-ள்) எல்லையில்ஞானத்தலைவர் எழுந்தருள எதிர்கொள்வார்=அள விறந்த சிவஞானச்செல்வராகிய ஆளுடையபிள்ளையார் எழுந்தருளுங்காலவ ரை யெதிர்கொண்டுவருவாராய, தில்லையில் வாழ் அந்தணர் மெய்த்திருத் தொண்டர்=தில்லைவாழந்தணரும் மெய்ம்மைபொருந்திய திருவடியார்களும், சிறப்பினொடு மல்கி எதிர்பணிந்து இறைஞ்ச=சிறப்புடனெருங்கித் திருமுன் நிலமுறத்தாழ்ந்து வணங்க, மணிமுத்தின் சிவிகை இழிந்து=அழகிய திரு முத்தின் சிவிகையினின்று மிறங்கியருளி, அல்குபெருங்காதலுடன் அஞ்சலி செய்து அணைகின்றார்=பொருந்திய பெருவிருப்போடு அஞ்சலிசெய்தவரு டன் செல்வாராயினார்—எ-று. (௧௧௩௬)

திருவெல்லை யினைப்பணிந்து சென்றணைவார் சேண்விசும்பை
மருவிவிளங் கொளித்தழைக்கும் வடதிசைவா யிலைவணங்கி
யுருகுபெருங் காதலுட னுட்புகுந்து மறையினொலி
பெருகிவளர் மணிமாடப் பெருந்திருவீ தியையணைந்தார்.

(இ-ள்.) திருவெல்லை யினைப்பணிந்து சென்று அணைவார்=திருத்தில லையின் திருவெல்லையைவணங்கி வந்தணையும் ஆளுடையபிள்ளையார், சேண் விசும்பைமருவி விளங்கு ஒளிதழைக்கும் வடதிசைவாயிலைவணங்கி=உயர்ந் தவிண்ணுலகையடைந்து விளங்குகின்ற காந்தியை வளர்க்கும் வடக்கின் கணுள்ள திருக்கோபுரவாயிலைத்தொழுது, உருகுபெருங்காதலுடன் உட் புகுந்து=மனமுருகுதற்குக் காரணமான பெருவிருப்புட னுள்ளேபுகுந்து, மறையின் ஒலி பெருகிவளர் மணிமாடப்பெருந்திருவீதியை அணைந்தார்= வேதங்களினோசை மிகுகுவளாகின்ற அழகிய பெரியதிருமாடவீதியை யடை ந்தருளினார்—எ-று. (௧௧௩௭)

நலமலியுந் திருவீதி பணிந்தெழுந்து நற்றவாத்தங்
குலநிறைந்த திருவாயில் குவித்தமலர்ச் செங்கையொடு

தலமுறமுன் றாழ்ந்தெய்தித் தமனியமா ளிகைமருங்கு
வலமுறவந் தோங்கியபே ரம்பலத்தை வணங்கினார்

(இ-ள்) நலமலியும் திருவீதி பணிந்து எழுந்து=நன்மைமிக்க திருவீதியை வணங்கியெழுந்து, நற்றவர்தங்குலம் நிறைந்ததிருவாயில் குவித்த மலர்ச்செங்கையொடு=நல்ல அடியார்குழாங்கள் நிறைந்திருக்குந் திருவாயிலிற் சிரசிற்கூப்பிய தாமரைமலர்போலுஞ் சிவந்த திருக்கரங்களுடன், தலமுறமுன் தாழ்ந்து எய்தி=நிலமுறத்திருமுன்னே வணங்கிச்சென்று, தமனியமாளிகை மருங்குவலமுறவந்து=கனகசபையின் பக்கலில் வலமாகவந்து, ஓங்கியபேரம்பலத்தைவணங்கினார்=உயர்ந்தபேரம்பலத்தை வணங்கியருளினார்.—எ-று. (௧௧௩௮)

வணங்கிமிக மனமகிழ்ந்து மாலயனுந் தொழும்பூதக்
கணங்கண்மிடை திருவாயில் பணிந்தெழுந்து கண்களிப்ப
வணங்குதனிக் கண்டருள வம்பலத்தே யாடுகின்ற
குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார்.

(இ-ள்.) வணங்கி மிகமனமகிழ்ந்து=உயர்ந்த பேரம்பலத்தைவணங்கியருளினார், மால் அயனும் தொழும் பூதகணங்கள் மிடை திருவாயில் பணிந்து எழுந்து=திருமால் பிரமனுந் தொழத்தக்க பூதகணநாதர்கள் நெருங்கிய திருவணுக்கன் திருவாயிலைவணங்கி யெழுந்து, கண்களிப்ப அணங்குதனிக்கண்டருள=கண்கள்களிக்கும்படிச் சிவகாமியார் தானே யனவரதமுந் தரிசிக்கும்படி, அம்பலத்தே ஆடுகின்ற=கனகசபையின்கண் ஆனந்த நிருத்தஞ்செய்கின்ற, குணங்கடந்த தனிக்கூத்தர் பெருங்கூத்துக் கும்பிடுவார்=குணாதீதமான ஒப்பற்ற நடேசப்பிரானது பெரிய திருநடனத்தைத் தரிசிப்பாராய்—எ-று. பணிந்தெழுந்து அணங்குகண்டருள ஆடுகின்ற கூத்தர் கூத்தைக்கண்களிக்கக் கும்பிடுவாராயெனக்கூட்டுக. குணங்கடந்த வென்னும் பெயரெச்சம் இடைநிலை. (௧௧௩௯)

தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுதிறைஞ்சி
மண்டுபெருங் காதலினா னோக்கிமுக மலர்ந்தெழுவா
ரண்டமெலா நிறைந்தெழுந்த வானந்தத் துள்ளலைந்து
கண்டபே ரின்பத்தின் கரையில்லா நிலையணைந்தார்

(இ-ள்) தொண்டர்மனம் பிரியாத திருப்படியைத் தொழுது இறைஞ்சி=திருவடியார்களது திருவுள்ளத்தை நீங்காதிருக்கின்ற பஞ்சாக்கரத்திருப்படியை நிலமுறவணங்கித் தொழுது, மண்டுபெருங்காதலினால் நோக்கி முகம் மலர்ந்து எழுவார்=நெருங்கிய பெருவிருப்போடு நடேசப்பிரானைப் பார்த்துத் திருமுகமலர்ந்து எழுகின்ற பிள்ளையார், அண்டமெலாம் நிறைந்து

எழுந்த ஆனந்தத்துள் அலைந்து=அண்டங்களெல்லாம் வியாபித்துத் தன்னுள்ளே யெழுந்த சிவானந்த வெள்ளத்து அலைவடைந்து, கண்டபேரின்பத்தின் கரையில்லா நிலை அணைந்தார்=தரிசித்த பேரின்பத்தினது அளவு கடந்த நிலைமையை யடைந்தருளினார்—எ-று. கும்பிடுவாராய மூகமலாந்தெழும் பிள்ளையார் அணைந்தாரெனக் கூட்டுக. (௧௧௪௰)

அந்நிலைமை யடைந்துதிளைத் தாங்கெய்தாக் காலத்தின்
மன்னுதிரு வம்பலத்தை வலங்கொண்டு போந்தருளிப்
பொன்னணிமா ளிகைவீதிப் புறத்தமர்ந்து போதுதொறு
மின்னிசைவண் டமிழ்பாடிக் கும்பிட்டங் கினிதிருந்தார்

(இ-ள்) அந்நிலைமை அடைந்து திளைத்து ஆங்கு எய்தாக்காலத்தில்=அவ்வாறு எல்லையில்லா ஆனந்தத்து நிலைபெறுதலை யடைந்து அதில் முழுகி அங்குநின்று நீங்குங்காலத்து, மன்னுதிரு அம்பலத்தை வலங்கொண்டு போந்தருளி=நிலைபெற்ற கனகசபையை வலமாகவந்து அங்கு நின்றெழுந்தருளி, பொன் அணி மாளிகை வீதிப்புறத்து அமர்ந்து=பொன்னாலலங்கரித்த திருமாளிகைவீதியின் புறத்தெழுந்தருளியிருந்து, போதுதொறும் இன்னிசைவண் தமிழ்பாடிக் கும்பிட்டு அங்கு இனிது இருந்தார்=காலங்கடோறு மினிய இசையோடுகூடிய வளமபொருந்திய தமிழ்ப்பதிகங்களைப்பாடியருளி நடேசப்பிரானைவணங்கி யங்கினிதாகவெழுந்தருளி யிருந்தார் -எ-று. எய்தாதகாலமென்னும் எதிர்மறைப்பெயரெச்சம், ஈறுகெட்டு வல்லெழுத்து மிகுந்து எய்தாக்காலமென நின்றது. எய்துங்காலத்திற்கு எய்தாக்காலம் எதிர்மறையாதலில், நீங்குங்காலமெனப் பொருள்கூறப்பட்டது. வாராக்காலமென்றாற்போற் கொள்க. (௧௧௪௧)

திருந்தியசீர்த் தாதையார் சிவபாத விருதயரும்
பொருந்து திருவளர் புகலிப்பூசுரரு மாதவரும்
பெருந்திரு மாலயன் போற்றும்பெரும் பற்றப்புலியூரி
லிருந்தமிழா கர ரணைந்தாரெனக் கேட்டுவந் தணைந்தார்

(இ-ள்) திருந்திய சீர்த்தாதையார் சிவபாத இருதயரும்=திருத்தமான சிறப்பினையுடைய தந்தையாராகிய சிவபாத இருதயரும், பொருந்து திருவளர்புகலிப் பூசுரரும் மாதவரும்=மிக்க செல்வமோங்கிய சீகாழியின் கணவாழும் மறையவரும் பெரியதவத்தினரும், பெருந்திருமால் அயன்போற்றும் பெரும்பற்றப்புலியூரில்=பெருமைபொருந்திய திருமாலோடு பிரமனுந்துதிக்கும் பெரும்பற்றயுடைய சிதம்பரத்தில், இருந்தமிழாகரர் அணைந்தாரெனக்கேட்டுவந்து அணைந்தார்=பெருமைபொருந்திய தமிழ்பிறத்தற்கிடமாகிய ஆளுடையபிள்ளையார் அடைந்தாரென்று கேள்வியுற்று அங்கு வந்தடைந்தார்—எ-று. புறப்பற்றும் அகப்பற்றுமாய எவ்வகைப்பற்றும் பற்றற்குரிய பற்றுதலிற் பெரும்பற்றப் புலியூரென்றார். (௧௧௪௨)

ஆங்கவரைக் கண்டுசிறப் பளித்தருளி யவரோடுந்
தாங்கரிய காதலினாற் றம்பெருமான் கழல்வணங்க
வோங்குதிருத் தில்லைவா ழந்தணரு முடனாகத்
தேங்கமழுங் கொன்றைச்சடையார் திருச்சிற்றம் பலம்பணிந்தார்.

(இ-ள்.) ஆங்கு அவரைக்கண்டு சிறப்பளித்தருளி அவரோடும் = அங்கு அவர்களைப் பார்த்து (அவர்க்கேற்ற சிறப்பான) முகமன்வார்த்தையை யெடுத்தியம்பி அவருடன், தாங்கரிய காதலினால் தம்பெருமான் கழல்வணங்க = தரித்தற்கரிய பெருவிருப்போடு தமதுபிரானாகிய நடேசரது திருவடியை வணங்கும்படி, ஓங்குதிருத்தில்லைவாழந்தணரும் உடனாக = உயர்ந்த திருத்தில்லையில் வாழுமறையவர்களுந் தம்முடன்செல்ல, தேங்கமழ்கொன்றைச் சடையார் திருச்சிற்றம்பலம்பணிந்தார் = தேங்கமழுகின்ற கொன்றைப்பூமாலையை முடித்த சடாமுடியையுடைய நடேசப்பிரானது திருச்சிற்றம்பலத்தை வணங்கியருளினார் —எ-று. (௧௧௪௫)

தென்புகலி யந்தணருந் தில்லைவா ழந்தணரு
மன்புநெறி பெருகுவித்த வாண்டகையா ரடிபோற்றிப்
பொன்புரிசெஞ் சடைக்கூத்த ரருள்பெற்றுப் போந்தருளி
யின்புறுதோ ணியினமர்ந்தார் தமைவணங்க வெழுந்தருள

(இ-ள்.) தென்புகலி அந்தணரும் தில்லைவாழ் அந்தணரும் = சீகாழியின்கண் வாழுமந்தணருடனும் தில்லையின்கண் வாழுமந்தணருடனும், அன்புநெறி பெருகுவித்த ஆண்டகையார் அடிபோற்றி = அன்பின்வழியைப் பெருகச்செய்தபிரானாரது திருவடியைத் துதித்து, பொன்புரி செஞ்சடைக் கூத்தர் அருள் பெற்றுப் போந்தருளி = பொன்போலும் புரிபொருந்திய சிவந்த சடையையுடைய அந்த நடேசப்பெருமானது திருவருளைப்பெற்றுப் புறம்பேபோந்தருளி, இன்புறுதோணியில் அமர்ந்தார்தமை வணங்க எழுந்தருள = இன்பத்தை விளைக்குந் தோணியப்பரை வணங்கும்படி யெழுந்தருளுங்காரணமாக.

நற்றவத்தார் குழாத்தோடு நம்பர்திரு நடஞ்செய்யும்
பொற்பதியின் றிருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து
பெற்றமுயர்த் தவரமர்ந்த பிறப்பதியும் புக்கிறைஞ்சிக்
கற்றவர்கள் பரவுதிருக் கழுமலமே சென்றடைவார்

(இ-ள்.) நற்றவத்தார் குழாத்தோடு = நல்லதவத்தையுடைய அடியார் திருக்கூட்டங்களுடன், நம்பர் திருநடம் செய்யும் பொற்பதியின் திருவெல்லை பணிந்தருளிப் புறம்போந்து = சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தருளு மழகிய திருத்தில்லையின் திருவெல்லையை வணங்கியருளியதன்புறம்பேசென்று, பெற்றம் உயர்த்தவர் அமர்ந்த பிறப்பதியும் புக்கு இறை

௬௪.



ஞ்சி=இடபக்கொடியையுயர்த்த சிவபிரானெழுந்தருளிய பிற திருப்பதிகளையுமடைந்து துதித்து, கற்றவர்கள் பரவு திருக்கழுமலமேசென்று அடைவார் = மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்தவர்கள் துதிக்குந் திருக்கழுமலமென்னுந்திருப்பதியைச் சென்றடையுங் கருத்துடைய பிள்ளையார் —எ-று. எழுந்தருளுங் காரணமாயப் பணிந்தருளிப் புறம்போந்து புக்கிறைஞ்சிச் சென்றடையும் பிள்ளையாரெனக் கூட்டுக. அடுக்கிய எச்சங்கள் சென்றடைவாரென்னும் வினையாலணையும் பெயர்கொண்டு முடிந்தன. வினையெச்சம் இருவகைமுற்றெனறி, உழுது வருதல், உழுதுவாதவனென வினைப்பெயரோடு முடிதல். "வினையெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பு, நினையத்தோன்றிய முடிபாகுமமே" என்னுஞ் சூத்திரத்தில் "நினையத்தோன்றிய" என்றதனாற்கொள்க.

பல்பதிகள் கடந்தருளிப் பன்னிரண்டு பேர்படைத்த
தொல்லைவளம் பூந்தராய் தூரத்தே தோன்றுதலு
மல்குதிரு மணிமுத்தின் சிவிகையிழிந் தெதிர்வணங்கிச்
செல்வமிகு பதியதன்மேற் றிருப்பதிக மருள்செய்வார்

(இ-ள்) பல்பதிகள் கடந்தருளிப்பன்னிரண்டு பேர்படைத்ததொல்லைவளம் பூந்தராய் தூரத்தேதோன்றுதலும்=பலதிருப்பதிகளை நீங்கியருளிப் பன்னிரண்டு திருநாமங்களையுடைய பழமைபொருந்திய வளம் நிறைந்த சீகாழியென்னுந் திருப்பதிகட்புலமாந்தூரத்துத்தோன்றலும்; மல்குதிரு மணிமுத்தின் சிவிகை இழிந்து எதிர்வணங்கி=அழகு நிறைந்த திருமுத்தின் சிவிகையினின்று மிறங்கியருளி யத்திருப்பதியி னெதிரேவணங்கி; செல்வம் மிகுபதியதன்மேற்றிருப்பதிகம் அருள்செய்வார்=செல்வமிக்க அச்சீகாழியின்மேல் திருப்பதிகத்தையருளிச்செய்வாராய் —எ-று (௧௧௬௭)

மன்னுமிசை மொழிவண்டார் குழலரிவை யென்றெடுத்து
மின்னுசுடர் மாளிகைவிண் டாங்குவபோல் வேணுபுர
மென்னுமிசைச் சொன்மாலை யெடுத்தியம்பி யெழுந்தருளிப்
புன்னைமணங் கமழ்புறவப் புறம்பணையில் வந்தணைந்தார்.

(இ-ள்) மன்னும் இசைமொழி=நிலைபெற்ற இசையோடுகூடிய மொழியையுடைய, வண்டார்குழல் அரிவை என்று எடுத்து="வண்டார்குழலரிவை" என முதலெடுத்து, மின்னுசுடர் மாளிகைவிண் தாங்குவபோல் வேணுபுரம் என்னும்=விளங்குகின்ற ஒளியினையுடைய திருமாளிகைகள் "விண்டாங்குவபோல் வேணுபுரம்" என்னுமிறுதியையுடைய, இசைச்சொல் மாலை எடுத்து இயம்பி எழுந்தருளி=இசையோடுகூடிய திருப்பதிகத்தையெடுத்துப் பாடிச்சென்றருளி, புன்னைமணங்கமழ் புறவப்புறம்பணையில்வந்து அணைந்தார்=புன்னைமலர்கள் நறுமணங்கமழுகின்ற முல்லைநிலத்தினருகுவந்தடைந்தருளினார்.—எ-று. தென்புகலியந்தணரென்பது முதலிருகாறு ஈனகு செய்

யுளுங் குளகம். சென்றடைவாராகிய பிள்ளையாரருள செய்வாராய வந்த
ணைநதாரெனககூட்டுக (௧௧௪௭)

திருவேணுபுரம-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம.

வண்டார குழலரிவை யொடுமபிரியா வகைபாகம
பெண்டான மிகவானை பிறைசசென்னிப பெருமானூர
தண்டா மரைமலரா ளுறைதவளந நெடுமமாடம
விண்டாங குவபோலும மிகுவேணு புரமதுவே.
வேதததொலி யானுமமிகு வேணுபுரந தனைமேப
பாதததி னினமனமவைத தெழுபநதன றனபாட
லேதத நினையிலலா விவைபததும மிசைவலலார
கேதத நினையிலலா சிவகெதியைப பெறுவாரே

திருச்சிற்றம்பலம

வாழிவளர புறமபணையின மருஙகணைநது வரிவணடு
சூழுமலா நறுநதீப தூபஙக ளுடனெருழுது
காழிநகா சோமினெனக கடைமுடிநத திருபபதிக
மேழிசையி னுடனபாடி யெயினமூதூ ருடபுகுநதார.

(இ-ள்) வாழிவளர புறமபணையின் மருஙகு அணைநது=சீகாழியின புறமபுள்ள முலலைநிலததின பககததிலடைநது, வரிவணடு சூழும மலா நறுநதீபதூபஙகளுடனதொழுது=வரிபொருநதிய வணடுகள சுறறும பூககளாலும நலல தீபஙகளோடுந தூபஙகளோடும வணஙகி, காழிநகா சோமின எனககடைமுடிநத திருபபதிகம = சீகாழியையடையுஙகளெனறிறுதியில முடிதததிருபபதிகததை, ஏழிசையினுடனபாடி எயினமூதூருடபுகுநதார=ஏழிசையும பொருநதபபாடியருளி மதில சூழநத பழையநகருடபுகுந தருளினார —எ-று. (௧௧௪௮)

ஸ்ரீகாழி - திருவிராகம - பண - நட்டராகம.

திருச்சிற்றம்பலம

நமபொருண மககளெனறு நசசியிசசை செயதுநீ
ரமபர மடைநதுசால வலலலுயப பதனமுன
முமபாநாத னுததம னொளிமமிகுதத செஞசடை
நமபனமேவு நனனகா நலஙகொளகாழி சோமினே.

தக்கனார் தலையரிந்த சங்கரன் றனதனை
யக்கினோ டரவசைத்த வந்திவண்ணர் காழியை
யொக்கஞான சம்பந்த னுரைத்தபாடல் வல்லவார்
மிக்கவின்ப மெய்திவீற் றிருந்துவாழ்தன் மெய்ம்மையே

திருச்சிற்றம்பலம்.

சேணுயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான்
றாணினைந்த வாதரவின் றலைப்பாடு தனையுன்னி
நீணிலைக்கோ புரமணைந்து நேரிறைஞ்சிப் புக்கருளி
வாணிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார்

(இ-ள்) சேண் உயர்ந்த திருத்தோணி வீற்றிருந்த சிவபெருமான் = விண்ணுலகளவுயர்ந்த திருத்தோணியென்னு மாலயத்திலெழுந்தருளியிருந்த சிவபிரானது, தாள் நினைந்த ஆதரவின் தலைப்பாடுதனை உன்னி = திருவடிகளை நினைந்த பெருவிருப்பின் மேம்பாட்டைக்கருதி, நீள் நிலைக்கோபுரம் அணைந்து நேர் இறைஞ்சிப்புக்கருளி = நீண்ட நிலைகளையுடைய திருக்கோபுரத்தையடைந்து நேரேவணங்கி யுள்ளேபுகுந்தருளி, வாள் நிலவு பெருங்கோயில் வலங்கொண்டு முன்பணிந்தார் = ஒளிவிளங்குகின்ற பெரியகோயிலை வலமாகவந்து திருமுன்னே வணங்கினார் —எ-று. (௧௧௩௧)

முன்னிறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்றேறிப்
பொன்னிமயப் பாவையுடன் புணர்ந்திருந்த புராதனரைச்
சென்னிமிசைக் குவித்தகரங் கொடுவிழுந்து திளைத்தெழுந்து
மன்னுபெரு வாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார்.

(இ-ள்) முன் இறைஞ்சித் திருவருளின் முழுநோக்கம் பெற்று ஏறி = திருமுன்னேவணங்கிச் சிவபிரான் திருவருளின் முழுப்பார்வையை யடைந்து அதனாலாய ஆனந்தவாழ்வின் மேம்பட்டு; பொன் இமயப்பாவையுடன் புணர்ந்து இருந்த புராதனரை = பொன்னையடைந்த இமயத்தின் புத்திரியான பெரிய நாயகியாரோடு தோணியில் வீற்றிருந்த பழையவரை, சென்னிமிசைக்குவித்த கரங்கொடு விழுந்து திளைத்து எழுந்து = சிரசின்மேற் கூப்பிய திருக்கரங்களைக்கொண்டு நிலமுறவிழுந்து வணங்கி யானந்தவாழ்வி லழுந்தியெழுந்து, மன்னுபெருவாழ்வெய்தி மனங்களிப்ப வணங்குவார் = நிலைபெற்ற பெருவாழ்வடைந்து மனங்களிக்கும்படி வணங்கும்பிள்ளையார்.

பரவுதிருப் பதிகங்கள் பலவுமிசை யினிற்பாடி
விரவியகண் ணருவிநீர் வெள்ளத்திற் குளித்தருளி
யரவணிந்தா ரருள்பெருகப் புறம்பெய்தி யன்பருடன்
சிரபுரத்துப் பெருந்தகையார் தந்திருமாளிகை சேர்ந்தார்.

(இ-ள்.) பரவு திருப்பதிகங்கள் பலவும் இசையினிற் பாடி = துதிக்கின்ற திருப்பதிகங்கள் பலவற்றையும் இசையோடு பாடியருளி, விரவிய கண்ணருவி நீர் வெள்ளத்திற் குளித்தருளி = நெருங்கிய ஆனந்த பாஷ்ப வெள்ளத்தில் முழுகியருளி; அரவு அணிந்தார் அருள் பெருகப் புறம்பு எய்தி = சர்ப்பாபரணத்தையணிந்த தோணியப்பரது திருவருள் பெருகும்படி புறம்பே வந்து, அன்பருடன் சிரபுரத்துப் பெருந்தகையார் தம் திருமாளிகை சேர்ந்தார் = அடியார்களோடு சீகாழியிலவதரித்த ஆளுடைய பிள்ளையார் தமது திருமாளிகையை யடைந்தருளினார்.—எ-று. வணங்கும் பிள்ளையார் திருமாளிகை சேர்ந்தாரெனக் கூட்டுக. (௧௧௫௧)

மாளிகையி னுள்ளணைந்து மறையவர்கட் கருள்புரிந்து
தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினாற் றலையளிசெய்
தாளுடைய தம்பெருமா னடியவர்க ளுடனமர்ந்து
நீள்வரும் பேரின்பம் மிகப்பெருக நிகழுநாள்.

(இ-ள்.) மாளிகையின் உள் அணைந்து மறையவர்கட்கு அருள்புரிந்து = திருமாளிகையினுள்ளே புகுந்தருளித் (தம்மையழைக்கவந்த) சீகாழி மறையவர்க்கு (அவரவர் மனைபுகும்படி) அருள்செய்தருளி, தாள்பணியும் பெருங்கிளைக்குத் தகுதியினாற் றலையளிசெய்து = தமது திருவடிகளை வணங்கு மிக்க சுற்றத்தார்க்கு அவரவர்க்கேற்ற வரிசையாலுபசாரஞ்செய்து, ஆளுடைய தம்பெருமான் அடியவர்களுடன் அமர்ந்து = தம்மை யாளாகவுடைய சிவபெருமானடியார்களுட னினிதாக வமர்ந்தருளி, நீள்வரும் பேரின்பம் மிகப்பெருக நிகழுநாள் = நீங்காது வருகின்ற பேரின்பமானது மிக மேம்படும்படி யெழுந்தருளியிருக்கும் நாளில்.—எ-று. (௧௧௫௨)

காழிநா டுடையபிரான் கழல்வணங்கி மகிழ்வெய்த
வாழியினு மிகப்பெருகு மாசையுடன் றிருமுருகர்
வாழிதிரு நீலநக்கர் முதற்றொண்டர் மற்றனையோர்
சூழுநெடுஞ் சுற்றமுடன் றோணிபுரந் தொழுதணைந்தார்.

(இ-ள்.) காழிநாடு உடையபிரான் கழல்வணங்கி மகிழ்வு எய்த = சீகாழியைத் தமக்குத் திருநாடாகவுடைய ஆளுடையபிள்ளையாரது திருவடிகளை வணங்கி மகிழ்கூர, ஆழியினும் மிகப்பெருகும் ஆசையுடன் திருமுருகர் = கடலினு மிகப்பெருகு மாசையோடு திருமுருகநாயனாரும், வாழிதிரு நீலநக்கர் முதற்றொண்டர் மற்று அனையோர் = திருநீலநக்கர் முதலான அடியார்கள் அவரல்லாத ஏனைய அடியார்கள், சூழும் நெடுஞ்சுற்றமுடன் தோணிபுரம் தொழுது அணைந்தார் = தம்மைச்சூழ்ந்த பெருஞ்சுற்றத்தாரோடு திருத்தோணிபுரத்தை வணங்கிடைந்தருளினார்.—எ-று. (௧௧௫௩)

வந்தவரை யெதிர்கொண்டு மனமகிழ்ந்து சண்பையர்கோ
னந்தமில்சீ ரடியார்க ளவரோடு மினிதமர்ந்து
சுந்தரவா ரணங்கினுடன் றோணியில்வீற் றிருந்தாரைச்
செந்தமிழின் பந்தத்தாற் றிருப்பதிகம் பலபாடி.

(இ-ள்) வந்தவரை எதிர்கொண்டு மனம் மகிழ்ந்து சண்பையர்கோன் = தம்மைத் தரிசிக்க வந்த அத்திருவடியார்களை யெதிர்கொண்டு சென்று மனமகிழ்ச்சியடைந்து சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையார்; அந்தமில் சீர் அடியார்கள் அவரோடும் இனிது அமர்ந்து = எல்லையிறந்த சிறப்பினையுடைய தமது திருக்கூட்டத்தாரோடு மினிதாக இருந்தருளி, சுந்தர ஆரணங்கினுடன் தோணியில் வீற்றிருந்தாரை = அழகிய பெரியநாயகியாருடன் திருத்தோணியிலெழுந்தருளியிருந்த முதல்வரை, செந்தமிழின் பந்தத்தால் திருப்பதிகம் பலபாடி = செப்பமான தமிழ்த்தொடையாற் பலதிருப்பதிகங்களை பாடி —எ-று. (கக௫௪)

பெருமகிழ்ச்சி யுடன்செல்லப் பெருந்தவத்தாற் பெற்றவரு
மருவுபெருங் கிளையான மறையவரு முடன்கூடித்
திருவளர் ஞானத்தலைவர் திருமணஞ்செய் தருளுதற்குப்
பருவமிது வென்றெண்ணி யறிவிக்கும் பாங்கணைந்தார்.

(இ-ள்) பெருமகிழ்ச்சியுடன் செல்லப் பெருந்தவத்தால் பெற்றவரும் = (இவ்வாறு) மிக்க மகிழ்ச்சியோடு சிலகாலஞ்செல்லப் பெரியதவத்தாற் பிள்ளையாரைப்பெற்ற சிவபாத இருதயரும்; மருவுபெருங்கிளையான மறையவரும் உடன் கூடி = பொருந்திய மிக்க கிளைஞருமாகிய மறையவர்களுமுடன் சேர்ந்து, திருவளர் ஞானத்தலைவர் திருமணஞ்செய்தருளுதற்கு = அழகு வளருகின்ற சிவஞானத்தலைவராகிய ஆளுடையபிள்ளையார் திருக்கலியாணஞ் செய்தருளுதற்கு, பருவம் இதுவென்று எண்ணி அறிவிக்கும் பாங்கு அணைந்தார் = பருவகாலமிதுவென்று தெரிவிக்குங்குணமுடையராய் அடைந்தார்கள்.

நாட்டுமறை முறையொழுக்க ஞானபோ னகருக்குங்
கூட்டுவது மனங்கொள்வார் கோதின்மறை நெறிச்சடங்கு
காட்டவரும் வேள்விபல புரிவதற்கோர் கன்னிதனை
வேட்டருள வேண்டுமென விண்ணப்பஞ் செய்தார்கள்.

(இ-ள்) நாட்டு மறை முறை ஒழுக்கம் = நியமிக்கும் வேதவிதியாகிய ஒழுக்கத்தை, ஞானபோனகருக்கும் கூட்டுவது மனம் கொள்வார் = ஞானபோனகராகிய ஆளுடையபிள்ளையாருக்கும் புணர்ப்பதைத் தம்மனத்திற் கொண்ட அம்மறையவர்கள், கோதில் மறைநெறிச்சடங்கு காட்டவரும் வேள்விபல புரிவதற்கு = குற்றமற்ற வேதநெறியிற் கிரியைகளாய விதிக்க

வருகின்ற யாகம் பலவற்றையுஞ் செய்வதற்கு; ஓர் கன்னிதனை வேட்டருள வேண்டுமென விண்ணப்பஞ் செய்தார்கள் = ஒரு கன்னிகையை விவாகஞ்செய்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தருளினார்கள்.—எ-று. அந்தணர் முதலியோர், பிரமசரியத்தின் பின் இல்லொழுக்கத்திலொழுகவென நியமித்தலில், நாட்டுமறை முறையொழுக்கமென்றும், அவ்வுலகியலாய ஒழுக்கம் உலகியலைக்கடந்த பிள்ளையார்க்குக் கூட்டுதல் பயன்படாமையின், ஞானபோனகருக்குக் கூட்டுவது மனங்கொள்வாரொன்றும், பிரமசாரிக்குச் சமிதாதானமேயன்றி, ஔபாசனத்தி லதிகாரமின்மையில் இல்லொழுக்கம்பூண்டு அதுகாரணமாய ஔபாசனமுதலிய நித்தியங்களும், கிருதுமுதலிய நைமித்தியங்களுஞ்செய்யவேண்டுதலில், கோதின்மறை நெறிச்சடங்கு காட்ட வரும் வேள்விபல புரிவதற்கென்றும், அதன்பொருட்டுக்கன்னிகையை வேட்டருளவேண்டுமென்றும் விண்ணப்பஞ்செய்தனரென்றார். (௧௧௫௬)

மற்றவர்தம் மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார்
சுற்றமுறு பெரும்பாசத் தொடர்ச்சிவிடு நிலைமையராய்ப்
பெற்றமுயர்த் தவரருண்முன் பெற்றதினா லிசையாது
முற்றியதா யினுங்கூடா தென்றவர்முன் மொழிந்தருள.

(இ-ள்.) மற்றவர்தம் மொழிகேட்டு மாதவத்தின் கொழுந்தனையார் = அம்மறையவரது சொல்லைக்கேட்டுப் பெரியதவக்கொழுந்தையொத்த பிள்ளையார், சுற்றமுறுபெரும்பாசத் தொடர்ச்சிவிடும் நிலைமையராய = சுற்றத்தாரால் வரும் பெரிய பற்றாகிய பிணிப்புவிட்ட நிலைமையையுடையராய், பெற்றம் உயர்த்தவர் அருள்முன்பெற்றதினால் = இடபக்கொடியையுடைய தோணியப்பரது திருவருளை முன்னே பெற்றுக்கொண்டதனால் (நீர் கூறியது) பொருந்தாது, முற்றியதாயினும் கூடாதென்று அவர்முன் மொழிந்தருள = முடிந்ததாயினு மெமக்கு அது பொருந்தாதென்று அம்மறையவர் முன் மொழிந்தருளுங்கால்.—எ-று. (௧௧௫௭)

அருமறையோ ரவர்பின்னுங் கைதொழுதங் கறிவிப்பா
ரிருநிலத்து மறைவழக்க மெடுத்தீர்நீ ராதலினால்
வருமுறையா லறுதொழிலின் வைதிகமா நெறியொழுகுந்
திருமணஞ்செய் தருளுதற்குத் திருவுள்ளஞ் செய்யுமென

(இ-ள்.) அருமறையோர் அவர் பின்னும் கைதொழுது அங்கு அறிவிப்பார் = அரிய வேதங்களையுணர்ந்த அந்தணராகிய அவர்கள் பின்பும் பிள்ளையாரை வணங்கி விண்ணப்பஞ்செய்வார், இருநிலத்து மறை வழக்கம் எடுத்தீர் நீர் ஆதலினால் = பெரிய நிலவுலகத்தில் வேதவொழுக்கத்தைச் சிறந்ததென நிலைப்படுத்தினீர் அதனால்; வரும் முறையால் அறுதொழிலின் வைதிகமாம் நெறி ஒழுகும் = அவ்வேதங்கூறு முறையாலாறுதொழில்களோடு வேதமார்க்கநெறியில் நடத்தற்கு (நிமித்தமான), திருமணம் செய்தருளு

தற்குத் திருவுளம் செய்யுமென=திருக்கலியாணத்தைச் செய்தற்குத் திருவுளஞ்செய்தருளுமென்று கூற.—எ-று. இவ்வுலகியல் உமக்குப் பொருந்தாதேனும் மறைவழக்கை யுலகில் நிலைப்படுத்தினீராதலில், அம்மறைகூறு முறையா லறுதொழிலோடு கூடிய வைதிகமாகத்தி லொழுகுதற்குத் திருமணஞ்செய்தருளவேண்டுமென்று ரென்றவாறு அறுதொழில்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலென்பன (௧௨௬௭)

மறைவாழ வந்தணர்தம் வாய்மையொழுக்கம் பெருகுந்
துறைவாழச் சுற்றத்தார் தமக்கருளி யுடன்பட்டும்
பிறைவாழுந்திருமுடியிற் பெரும்புனலோ டரவணிந்த
கறைவாழுங் கண்டத்தார் தமைத்தொழுது மனங்களித்தார்.

(இ-ள்) மறைவாழ அந்தணர்தம் வாய்மை ஒழுக்கம் பெருகும் துறைவாழ=வேதங்கள் வாழவும் மறையவர்களது மெய்ம்மையான வொழுக்கம் மிக்க அநந்நிலைகள் வாழ்வடையவும், சுற்றத்தார் தமக்கருளி உடன்பட்டும்=(ஆளுடையபிள்ளையார்) சுற்றத்தாராகிய மறையவர்களுக்கு அவ்வாறுகவென அருளிச்செய்து உடன்படவும், பிறைவாழும் திருமுடியிற் பெரும்புனலோடு அரவு அணிந்த=இளம்பிறைவாழுகின்ற திருமுடியின்கண் பெருமைபொருந்திய கங்காநதியோடு பாம்பினையணிந்த, கறைவாழும் கண்டத்தார் தமைத் தொழுது மனம் களித்தார்=நஞ்சுபொருந்திய திருமிடற்றையுடைய சிவபிரானை யம்மறையவர்கள் வணங்கி மனங்களிப்படைந்தார்—எ-று மற்றவர் என்னுஞ் செய்யுள் முதலிம்மூன்றுங் குளகம். (௧௨௬௮)

திருஞான சம்பந்தர் திருவுள்ளஞ் செய்ததற்குத்
தருவாய்மை மறையவருந் தாதையருந் தாங்கரிய
பெருவாழ்வு பெற்றாராய்ப் பிஞ்ஞகன் றருளென்றே
யுருகாநின் றின்பமுறு முளமகிழ்ச்சி யெய்துவார்.

(இ-ள்) திருஞானசம்பந்தர் திருவுள்ளம் செய்ததற்கு=ஆளுடைய பிள்ளையார் திருமணஞ்செய்யத் திருவுள்ளமிசைந்ததற்கு, தருவாய்மை மறையவரும் தாதையரும்=மெய்ம்மைபொருந்திய அசீகாழிமறையவரும் தந்தையாராகிய சிவபாத இருதயரும், தாங்கரிய பெருவாழ்வு பெற்றாராய்=தாங்குதற்கரிய மிக்கவாழ்வினைப்பெற்றவராய், பிஞ்ஞகன் அருளென்றே=சிவபெருமானார் திருவருளென்று, உருகாநின்று இன்பமுறும் உளமகிழ்ச்சியெய்துவார்=மனமுருகி நின்றின்பமடைந்த தமதுமனதில மகிழ்ச்சியடைவாராய்.

ஏதமிலசீர் மறையவரி லேற்றகுலத் தோடிசைவால்
நாதர்திருப் பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறுங்
காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்கப்
போதுமவர் பெருந்தன்மை யெனப்பொருந்த வெண்ணினார்.

(இ-ள்.) ஏதமில் சீர்மறையவரில் ஏற்ற குலத்தோடு இசைவால்= குற்றமற்ற சிறப்பினையுடைய மறையவர்களில் விவாகஞ்செய்தற்குரிய கோத்திரத்தோடு பொருத்தமுடைமையால்; நாதர் திருப்பெருமணத்து நம்பாண்டார் நம்பிபெறும்=சிவலோகத்தியாகரெழுந்தருளிய திருப்பெருமணத்தில் நம்பாண்டார் நம்பியென்னு மறையவர் பெற்ற, காதலியைக் காழிநாடு உடையபிரான் கைப்பிடிக்க=புத்திரியைச் சீகாழிநாட்டிற்குத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார் பாணிக்கிரகணஞ்செய்ய, போதுமவர் பெருந்தன்மையெனப் பொருந்த எண்ணினார்=அவரது பெருந்தன்மையானது அமையுமென்று பொருந்தும்படி யோசித்தார்கள்—எ-று. மறையவருந் தாதையரு மகிழ்ச்சியெய்து வாராயப் பொருந்தவெண்ணினரென்கூட்டுக. (ககசூக)

திருஞான சம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்
பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கண் மிகப்பேணி
வருவாரும் பெருஞ்சுற்ற மகிழ்சிறப்ப மகட்பேசத்
தருவார்தண் பணைநல்லூர் சார்கின்றார் தாதையார்

(இ-ள்) திருஞானசம்பந்தர் சீர்பெருக மணம்புணரும்=ஆளுடைய பிள்ளையார் சிறப்புமிகும்படித் திருக்கலியாணஞ்செய்யும், பெருவாழ்வு திருத்தொண்டர் மறையவர்கள்=மிக்கவாழ்வினைத் திருவடியார்களு மறையவர்களும், மிகப்பேணிவருவாரும்=கேள்வியுற்று மிகவும் பேணிவருகின்றவர்களும், பெரும் சுற்றம்=பெரிய சுற்றத்தாரும், மகிழ்சிறப்ப மகட்பேசத்தருவார்=மகிழ்ச்சிமிகும்படி மணமகளைப் பேசும்படி செல்வாராய், தாதையார் தண்பணை நல்லூர் சார்கின்றார்=சிவபாத இருதயருளிருந்த வயல்சூழ்ந்த திருநல்லூரையடைகின்றாராயினார்—எ-று. வாழ்வினைத் திருத்தொண்டரு மறையவரு மிகப்பேணி வருவாரும் பெருஞ்சுற்றமு மகிழ்சிறக்கத் தாதையார் தருவாராய நல்லூரைச் சார்கின்றாராயினரென்கூட்டுக. தருவார் என் புழி தருக்கள் நிறைந்தவென்றுரைப்பினு மமையும். (ககசூஉ)

மிக்கதிருத்தொண்டர்களும் வேதியரு முடனேகத்
திக்குநிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச் சென்றெய்தத்
தக்கபுகழ் நம்பாண்டார் நம்பிதா மதுகேட்டுச்
செக்கர்முடிச் சடையார்தந் திருப்பாதந் தொழுதெழுவார்

(இ-ள்) மிக்க திருத்தொண்டர்களும் வேதியரும் உடன் ஏக=மேன்மைபொருந்திய திருவடியார்களு மறையவர்களுந் தம்முடன்செல்ல; திக்கு நிகழ் திருநல்லூர்ப் பெருமணத்தைச்சென்று எய்த=திசைகடோறும் விளங்குகின்ற சிறப்பினையுடைய திருநல்லூர்ப் பெருமணமென்னுந் திருப்பதியைச் சென்றடையுங்கால், தக்க புகழ் நம்பாண்டார் நம்பிதாம் அதுகேட்டு=ஏற்ற புகழையுடைய நம்பாண்டார் நம்பியென்னு மறையவ ரதனைக்கேள்வியுற்று;

செககா முடிசசடையார் தம திருபபாதம தொழுது எழுவாா=செககாபோ லுஞ சடைமுடியையுடைய சிவலோகததியாகா திருவடிகளைவணஙகியவரை யெதிரகொளளுமபடி யெழுவாராய —எ-று (ககசுக)

ஒபபரிய பேருவகை யோஙகியெழு முளளததா
லபபுநிறை குடமவிளககு மறுகெலலா மணிபெருககிச
செபபரிய வாாவமிகு பெருஞசுறறத தொடுஞசெனறே
யெபபொருளு மெயதினே னெனததொழுதங கெதிரகொணடாா.

ஒபபரிப பேர உவகை ஒஙகி எழும உளளததால=நிகாறற பெருமகி ழசசியானது மிகசெழுகினறவுளளததோடு, அபபுநிறைகுடம விளககு மறுகெலலாம அணிபெருககி=நீா பூரிதத குடஙகளையும திருவிளககுகளையும வீதிகளெலலாம வைதது அழகுசெயது, செபபரிய வாாவம மிகுபெருஞ சுற றததொடும செனறே=தாமுஞசொலலுதறகடஙகாத விருபபு மிககபெரிய சுற றததாரோடு போய, எபபொருளும எயதினேன எனததொழுது அஙகு எதிா கொணடாா=(இமமைபபயனும மறுமைபபயனுமாகிய) எலலாப பொருளையு மடைநதேனெனறுகூறி வணஙகி பலவிடததவரையெதிரகொணடாா —எ-று நமபாணடாா நமபி தொழுதெழுவாரா யெதிரகொணடாரெனககூட்டுக ()

எதிாகொணடு மணிமாடத தினினெயதி யினபமுறு
மதுரமொழி பலமொழிநது வரனமுறையாற சிறபபளிபபச
சதுாமுகனின மேலாய சணபைவரு மறையவரு
முதிருணாவின மாதவரு மணைநதிற மொழிகினறாா.

(இ-ள) எதிாகொணடு மணிமாடததினின எயதி=அவா வரவைத தா மெதிாகொணடு அவருட னழகிய திருமாளிகையினகணடைநது, இனப முறும மதுரமொழி பலமொழிநது=இனபததை விளைககு மதுரமான பல மொழிகளைசகூறி, வரன முறையாற சிறபபு அளிபப=வரலாறறு முறையால அவாககு வரிசைகளைசசெயய, சதுாமுகனின மேலாய சணபைவரும மறைய வரும=பிரமனினுமேமபடடவராகிய சீகாழியினினறும வநத சிவபாதஇரு தயா முதலிய மறையவாகளும, முதிா உணாவின மாதவரும=மிகக அறி வினையுடைய திருவடியாாகளும, அணைநதிறம மொழிகினறாா=தாம வநத திறததைக கூறுவாராயினாா —எ-று (ககசுரு)

ஞானபோ னகருககு நறறவததி னொழுககததா
லூனமிலசீ லததுமபான மகடபேச வநதெனன
வானபே றநதணாபா லருளுடைமை யாமெனறு
வானளவு நினறபெரு மனமகிழசசி யொடுமொழிவாா.

(இ-ள) ஞானபோனகருககு நறறவததின் ஒழுக்கத்தால=ஞானபோனகராகிய ஆளுடையபிளளையாருககு நலல தவததோடு கூடிய ஒழுககததால, ஊனமில சீலதது உமபால=குறையிலலாத ஒழுககததையுடைய உம்மிடததி, மகடபேசவாததது என=புததிரியை நாம மணமபேசவநததென று கூற, ஆனபேறு அநதணாபால அருளுடைமையாம் என று=நீவிரவவாறு வநத பேறுனது இமமறையவாகளிடதது வைதத கருணையாமெனறு, வான அளவும் நிறை பெருமன மகிழசசியொடு மொழிவா=விணணுலகளவுயாந்த மிகக் மனமகிழசசியுடன கூறுவாராயினா—எ-று (௧௧௬௬)

உமமுடைய பெருநதவததா லுலகனைததுமீனறளிதத
வமமைதிரு முலைபபாலிற குழைததவா ரமுதுணடாக
கெமமுடைய குலககொழுநதை யாமுயயத தருகினறோம
வம்மினென வுரைசெயது மனமகிழநது செலவிடுததா.

(இ-ள) உமமுடைய பெருநதவததால உலகனைததும ஈனறளிதத=உஙகள பெரியதவததினு லுலகமுழுவதையும பெறறுககாததருளிய, அமமைதிருமுலைபபாலிற குழைதத ஆாமுது உணடாககு=பெரிய நாயகியாா திருமுலைபபாலோடு குழைதத நிறைவான சிவஞான அமுதையுணட ஆளுடைய பிளளையாருககு, எமமுடைய குலககொழுநதை யாம உயயததருகினறோம=எமது குலததிறகுக கொழுநதாயவதரிதத புததிரியை யாமெலலா முயயும் பொருடடு விவாகஞசெயதுகொடுககினறோம, வமமினெனவுரைசெயது மனமமகிழநது செலவிடுததா=வாருஙகளெனறு உடனபாடுகூறி மனமகிழசசியடைநது அவரைச சீகாழிககுச செலலுமபடியனுபபினா—எ-று (௧௧௬௭)

பேருவகை யாலிசைவு பெறறவாதா மீணடணைநது
காருலவு மலாசசோலைக கழுமலததை வநதெயதிச
சீருடைய பிளளையாாக கவாநோநத படிசெபபிப
பாாகுலவுந திருமணததின் பானமையினைத தொடஙகுவாா.

(இ-ள) பேர் உவகையால இசைவுபெறறவா தாம மீணடு அணைநது=மிகக மகிழசசியால நமபாணடாா நமபியது உடனபாடடைபபெறற சிவபாத இருதயா மீணடு சென று, காா உலவு மலாசசோலைக கழுமலததை வநதெயதி=மேகஙகள தவழுகினற சோலைசூழநத திருககழுமலததைவநதடைநது, சீருடையபிளளையாாககு அவா நோநதபடிசெபபி=சிறபபினையுடைய ஆளுடையபிளளையாாககு நமபாணடாா நமபிமகடகொடுகக உடனபடடமையைககூறி, பாாகுலவும திருமணததின பானமையினைததொடஙகுவாா=நிலவுலகினகண விளஙகுந திருககலயாணததின முறைமையைத தொடங்குவாராய.—எ-று (௧௧௬௮)

திருமணஞ்செய கலியாணத திருநாளுந திகழசிறபபின்
மருவியவோ ரையுங்கணித மஙகலநூ லவர்வகுப்பப

பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி
யருள்புரிந்த நன்ஞானி லணிமுளைப்பா லிகைவிதைத்தார்.

(இ-ள்) திருமணஞ் செய்கல்யாணத் திருநாளும்=திருக்கல்யாணஞ் செய்தற்குரிய திருநாளும், நிகழ்சிறப்பின் மருவிய ஓரையும்=விளங்குகின்ற சிறப்போடுகூடிய இலக்கினமும்; கணித மங்கல நூலவர் வகுப்ப=மங்கலமான கணிதநூலில் வல்லவர்கள் நியமிக்க; பெருகும் மணநாள் ஓலைபெருஞ்சிறப்பினுடன் போக்கி=மிக்க திருமணத்திற்குரிய முகூர்த்த ஓலையைப் பெரிய சிறப்புடனனுப்பி, அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப்பாலிகைவிதைத்தார்=நியமித்த நல்ல முகூர்த்தத்தில் அழகிய முளைப்பாலிகைகளை விதைத்தார்—எ-று. பெற்றவர் தொடங்குவாராய் விதைத்தாரெனக்கூட்டுக ()

செல்வமலி திருப்புகலிச் செழுந்திருவீ திகளெல்லா
மலகுநிறை குடம்விளக்கு மகரதோ ரணநிரைத்தே
யெல்லையிலா வொளிமுத்து மாலைகளெங் கணுநாற்றி
மலகுபெருந் திருவோங்க வணிசிறக்க வலங்கரித்தார்.

(இ-ள்) செல்வம் மலி திருப்புகலிச் செழும் திருவீதிகள் எல்லாம்=செல்வமிக்க சீகாழியின் செழுமைபொருந்திய திருவீதிகளெல்லாம், மலகு நிறைகுடம் விளக்கு மகரதோரணம் நிரைத்தே=நெருங்கிய பூரணகும்பங்களையுந் திருவிளக்குகளையு மகரதோரணங்களையும் வரிசையாகச்செய்து; எல்லையிலா ஒளிமுத்துமாலைகள் எங்கணும் நாற்றி = அளவில்லாத ஒளிபொருந்திய முத்துமாலைகளை யெவ்விடத்துந் தூக்கி; அலகுபெரும் திரு ஓங்க அணி சிறக்க அலங்கரித்தார்=நிறைந்த பேரழகானது மிகும்படி யலங்காரத்துடன் சிறக்க அச்சிவபாத இருதயர் அலங்கரித்தார்—எ-று (௧௧௭௰)

அருந்தவத்தோ ரந்தணாக ளயலுள்ளோர் தாமுய்யப்
பொருந்துதிரு நாளோலை பொருவிறந்தார் கொண்டணைய்ந்
திருந்துபுகழ் நம்பாண்டார் நம்பிசிறப் பெதிர்கொண்டு
வருந்தவத்தான் மகட்கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார்.

(இ-ள்) அருந்தவத்தோர் அந்தணர்கள் அயலுள்ளோர்தாம் உய்ய=அரியதவத்தையுடைய அடியார்களும் மறையவர்களும் ஏனையோர்களு முய்யும்படி, பொருந்து திருநாள் ஓலை பொருவிறந்தார்கொண்டு அணைய=பொருத்தமான முகூர்த்தவோலையை யெண்ணிறந்த மறையவர்கள் கொண்டுவர, திருந்து புகழ்நம்பாண்டார் நம்பி சிறப்பு எதிர்கொண்டு=திருந்தியபுகழையுடைய நம்பாண்டார் நம்பியென்பவர் சிறப்பொடு அத்திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு, வருந்தவத்தால்மகட் கொடுப்பார் வதுவைவினை தொடங்குவார்=முன் செய்யவந்த தவங்காரணமாகப் புத்திரியைப் பிள்ளையார்க்கு விவாகஞ்செய்து கொடுப்பாராய மணவினைத்தொழிலைத் தொடங்குவாராயினார்—எ-று. (௧௧௭௧)

மன்னுபெருஞ் சுற்றத்தா ரெல்லாரும் வந்தீண்டி
நன்னிலைமைத் திருநாளுக் கெழுநாளா நன்னாளிற்
பன்மணிமங் கலமுரசம் பலவியங்க ணிறைந்தார்ப்பப்
பொன்மணிப்பா லிகைமீது புனிதமுளை பூரித்தார்

(இ-ள்.) மன்னுபெருஞ் சுற்றத்தார் எல்லாரும்வந்து ஈண்டி=நிலைபெற்ற மிக்க சுற்றத்தாரெல்லாரும் வந்துகூடி, நன்னிலைமைத் திருநாளுக்கு எழுநாளாம் நன்னாளில்=நல்ல நிலைமையோடுகூடிய திருக்கல்யாணதினத்திற்கு ஏழுதினத்திற்குமுன்பு நல்லநாளில், பன்மணிமங்கலமுரசம் பலவியங்கள் நிறைந்து ஆர்ப்ப=பலமணிகளழுத்திய மங்கலகரமான முரசப்பறையும் பலவாத்தியங்களும் நிறைந்தாரவாரிக்க, பொன்மணிப்பாலிகைமீது புனிதமுளைபூரித்தார்=அழகிய மணிகளழுத்திய பாலிகைகளினிடத்துச் சுத்தமான முளைகளை நிறைத்தார் —எ-று. அங்குராப்பணஞ்செய்தாரென்றபடி. பாலிகையென்றது-முளை. ஈண்டுப்பாலிகையென்றது, ஆகுபெயராய்ப் பாலிகை முளை தெளிக்குங் கிண்ணத்திற்காயிற்று. (௧௭௨)

சேணுயரு மாடங்க டிருப்பெருகு மண்டபங்க
ணீணிலைய மாளிகைக ணிகரிலணி பெறவிளக்கிக்
காணவருங் கைவினைவண் ணங்கவினோங் கும்படியெழுதி
வாணிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோ லம்புனைந்து

(இ-ள்) சேண் உயரும் மாடங்கள் திருப்பெருகு மண்டபங்கள்=மிகவுமுயர்ந்த மாளிகைகளும் அழகுமிக்க மண்டபங்களும், நீள் நிலையமாளிகைகள் நிகரில் அணிபெறவிளக்கி=நீண்டநிலை மாளிகைகளையும் மிக்க அழகுபெறும்படி விளங்கச்செய்து; காணவருங்கைவினைவண்ணம் கவின் ஓங்கும்படி எழுதி=காணத்தக்க கைத்தொழிலாகிய உருவங்களை யழகுவிளங்கும்படி யெழுதி, வாள்நிலவு மணிக்கடைக்கண் மங்கலக்கோலம்புனைந்து=ஒளிவிளங்குகின்ற மணிகளழுத்திய முதல்வாயிலில் மங்கலகரமான அலங்காரத்தைச் செய்து —எ-று. (௧௭௩)

நீடுநிலைத் தோரணங்க ணீண்மறுகு தொறுநிரைத்து
மாடுயருங் கொடிமாலை மணிமாலை யிடைபோக்கிச்
சேடுயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவிப்
பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார்.

(இ-ள்) நீடும் நிலைத்தோரணங்கள் நீள்மறுகுதொறும் நிரைத்து=நீண்ட நிலைத்தோரணங்களைப் பெரியவீதிகள்தோறும் வரிசையாக நிறுத்தி, மாடு உயரும் கொடிமாலை மணிமாலை இடைபோக்கி=பக்கங்களில் உயர்ந்த கொடிவரிசைகளையு மிரத்தினமாலைகளையுமிடையிடையே கட்டி, சேடு உயரும் வேதிகைகள் செழும் சாந்து கொடுநீவி=திரண்டுயர்ந்த திண்ணைகளைச் செழு

மைபொருந்திய கலவைச்சாந்தாற் பூசி ; மீமிசைக்கெழும் மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார்=அதன்மீது பெருமைமிக்க அழகிய முத்தாலாகிய பெரிய பந்தல் பலவற்றை அலங்கரித்தார்.—எ-று (௧௧௭௪)

மன்றல்வினைத் திருமுளைநா டொடங்கிவரு நாளெல்லா
முன்றிறொறும் வீதிதொறு முகநெடுவா யில்கடோறு
நின்றொளிரு மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்க
ளொன்றுசுடர்த் தாமங்கள் தூபங்க டுதைவித்தார்.

(இ-ள்) மன்றல்வினைத் திருமுளைநாள் தொடங்கி வரும் நாள் எல்லாம்=திருக்கலியாணத்திற்கு அங்குரமிட்ட நாள்முதல் வருகின்றநாளெல்லாம், முன்றில்தொறும் வீதிதொறும் முகநெடுவாயில்கடோறும்=முற்றங்கடோறும் வீதிகடோறும் நீண்ட தலைக்கடைவாயில்கடோறும், நின்று ஒளிரும் மணி விளக்கு நிறைவாசப் பொற்குடங்கள்=நின்று விளங்குகின்ற அழகிய தூண்டாவிளக்குகளையும் நீர் நிறைந்த வாசனைபொருந்தியபொற்குடங்களையும், துன்று சுடர்த்தாமங்கள்=நெருங்கிய ஒளியைவீசும் பொன்னணிமாலைகளையும், தூபங்கள் துதைவித்தார்=தூபங்களையும் நெருங்கவைத்தார். ()

எங்கணுமெய்த் திருத்தொண்டர் மறையவர்க ளேனையோர்
மங்கலநீண் மணவினைநாள் கேட்டுமிக மகிழ்வெய்திப்
பொங்குதிருப் புகலிதனி னாடோறும் புகுந்தீண்டி
யங்கணைந்த வர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிகவளித்தார்.

(இ-ள்) எங்கணும் மெய்த்திருத்தொண்டர் மறையவர்கள் ஏனையோர்=எவ்விடத்தும் மெய்ம்மைபொருந்திய திருவடியார்களும் வேதியர்களும் இவரல்லாத மற்றையரும், மங்கலநீள் மணவினைநாள்கேட்டு மிகமகிழ்வெய்தி=மங்கலமிக்க திருக்கலியாணத் திருநாளைக் கேள்வியுற்று மிகவுமகிழ்வடைந்து, பொங்குதிருப்புகலிதனில் நாள்தோறும் புகுந்து ஈண்டி=பொலிவுபொருந்திய சீகாழித் திருப்பதியில் நாடோறும் வந்துகூடி, அங்கு அணைந்தவர்க்கெல்லாம் பெருஞ்சிறப்பு மிக அளித்தார்=அத்திருநகருக்கு வந்தவர்களுக்கெல்லாம் பெரியசிறப்பினை மிகவுஞ் செய்தார்.—எ-று (௧௧௭௬)

மங்கலதூ ரியநாத மறுகுதொறு நின்றியம்பப்
பொங்கியநான் மறையோசை கடலோசை மிகப்பொலியத்
தங்குநறுங் குறையகிலி னழைத்தசெழும் புகையினுடன்
செங்கனலா குதிப்புகையுந் தெய்வவிண்ணா மணம்பெருக.

(இ-ள்) மங்கலதூரியநாதம் மறுகுதொறும் நின்று இயம்ப=மங்கலவாத்தியங்களினது ஒலியானது வீதிகடோறும் நிலைபெற்று ஒலிக்கவும் ; பொங்கிய நானமறை ஓசை கடலோசை மிகப்பொலிய=மேற்பட்டநான்குவே

தங்களின் ஒலியானது கடலொலிபோல மிகவும் விளங்க, நறுங்குறை யகிலின் றழைத்த செழும் புகையினுடன்=நறுமணம்பொருந்திய அகிலந்துண்டுகளினின்று கிளைத்த செழுமைபொருந்திய புகையொடு, செங்கனல் ஆகுதிப் புகையும் தெய்வவிரை மணங்கமழ=சிவந்த தீயிற்செய்யுமாகுதியினாலாய புகையுந் தெய்வத்தன்மையான வாசனையைச் செய்யவும்—எ-று (௧௭௭)

எண்டிசையி லுள்ளோருமீண்டுவளத் தொடுநெருங்கப்
பண்டநிறை சாலைகளும் பலவேறு விதம்பயில
மண்டுபெரு நிதிக்குவைகண் மலைப்பிறங்க லெனமலிய
வுண்டிவினைப் பெருந்துழனி யோவாத வொலியோங்க

(இ-ள்) எண்டிசையில் உள்ளோரும் ஈண்டு வளத்தொடும் நெருங்க=எட்டுத்திசைகளிலுள்ளோரும் நெருங்கிய பலவளத்தோடுந் தொகுதலால், பண்டம் நிறை சாலைகளும் பலவேறு விதம்பயில=பலபண்டங்களும் நிறைந்த மாளிகைகளும் பற்பல வேறுவிதங்களாகப் பொருந்த, மண்டு பெருநிதிக் குவைகள் மலைப்பிறங்கலென மலிய=நெருங்கிய பெரிய பொன் மணி முதலிய நிதிக்குவியல்கள் சிறுமலைகளைப்போலப் பொருந்த, உண்டிவினைப்பெருந்துழனி ஓவாத ஒலிஓங்க=உணவுசெய்யுங்கால் படைபடையென்னக் கூறும் பெரிய ஓசையானது நீங்காத ஒலியாய் மிகவும்—எ-று. உண்டிவினைத்துழனி, உண்டிவினைசெய்வார் உரையாடாதும் ஒலியெழாதும் புசிப்பராதலின், அவர்க்கு அட்டிற்றொழிலாளரைப் படைபடையென ஏவுமொலியாமெனக்

மாமறைநூல் விதிச்சடங்கில் வகுத்தமுறை நெறிமரபின்
றூமணநல் லுபகரணஞ் சமைப்பவர்தந் தொழிறுவன்றத்
தாமரையோ னனையபெருந் தவமறையோர் தாமெடுத்த
பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த

(இ-ள்) மாமறைநூல் விதிச்சடங்கில்=பெருமைபொருந்திய வேதநூலில் விதித்த கலியாணச்சடங்கில், வகுத்தமுறைநெறிமரபின்=வகுத்த விதிவழி முறையே, தூமணநல்லுபகரணம் சமைப்பவர் தந்தொழில் துவன்ற=நல்லமணத்தோடுகூடிய ஓமப்பொருள்களை யமைப்பவர்களது தொழில்நெருங்கவும், தாமரையோன் அனைய பெருந்தவமறையோர் தாமெடுத்த=பிரமனையொத்த பெருமைபொருந்திய தவத்தையுடைய மறையவர்கள் (நம்பாண்டார் நம்பியைக்காணும்படி) கையிற்றாங்கிய, பூமருவு பொற்கலசப் புண்ணியநீர் பொலிவெய்த=மலர்களோடுசேர்ந்த பொற்கலசங்களில் நிறைந்த புண்ணியத்தையுடைய நீரானது பொலிவையடையவும்—எ-று (௧௭௯)

குங்குமத்தின் செழுஞ்சேற்றின் கூட்டமைப்போ ரினங்குழுமப்
பொங்குவிரைப் புதுக்கலவைப் புகையெடுப்போர் தொகைவிரவத்
துங்கநறுங் கற்பூரச் சுண்ணமிடிப் போர்நெருங்க
வெங்குமலர்ப் பிணைப்புனைவோ ரீட்டங்கண் மிகப்பெருக.

(இ-ள்) குங்குமத்தின் செழுஞ் சேற்றின் கூட்டு அமைப்போர் இனம் குழும = குங்குமப்பூவின் செழுமைபொருந்திய குழம்பின் கூட்டை யமைக்கின்றவர்களது இனம்நெருங்கவும், பொங்குவிரைப்புதுக்கலவைப் புனைஎடுப்போர் தொகைவிரவ = பொலிவினையுடைய வாசனைபொருந்திய கலவைப்பொருள்களாலாகிய புனைசையையெடுக்கின்றவர்களது தொகுதிநெருங்கவும்; துங்கநறுங் கற்பூரச் சுண்ணம் இடிப்போர் நெருங்க=உயர்ந்த நறுமணங்கமழுங் கற்பூரசுண்ணத்தை யிடிக்கின்றவர்கள் கூடவும், எங்கும் மலர்ப்பிணைபுனைவோர் ஈட்டங்கள் மிகப்பெருக=எவ்விடத்தும் மலராலாய பிணையல் மாலைகளைத்தொடுப்போரது தொகுதிகள் மிகவும்பெருகவும்.—எ-று. ()

இனையபல வேறுதொழி லெம்மருங்கு நிரைத்தியற்று
மனைவளரு மறுகெல்லா மணவணிசெய்மறைமூதூர்
நினைவரிய பெருவளங்க ணெருங்குதலா னிதிக்கோமான்
றனையிறைவர் தாமேவச் சமைத்ததுபோ லமைந்துளதால்.

(இ-ள்) இனையபல வேறுதொழில் எம்மருங்கும் நிரைத்து இயற்றும் = இத்தன்மையான பலவேறுவகைத் தொழில்கள் எவ்விடத்தும் வரிசையாய்ச் செய்யும், மனைவளரும் மறுகு எல்லாம் மண அணி செய் மறைமூதூர்=மாளிகைகளோங்கிய வீதிகளெல்லாம் மணவணியைக்காட்டுமறையவர்கள் வாழுமவூர், நினைவரிய பெருவளங்கள் நெருங்குதலால்=நினைத்தற்கரிய மிக்கவளங்கள்நெருங்கியிருத்தலால், நிதிக்கோமான் தனை இறைவர் தாம் ஏவச் சமைத்ததுபோல அமைந்துளதால்=நிதிக்கிழவனாகிய குபேரனைச் சிவபெருமான் அனுப்ப அவ்வளங்களை யவனமைத்ததுபோல இருந்தது -எ-று.
மங்கலதூரியமெனப்பது முதலிதுகாறைந்து செய்யுளுங்குளகம் (௧௧௮௧)

வேறு

மாறிலாநிறை வளந்தருபுகலியின் மணமீக்
கூறுநாளினமுன் னாளினில்வேதியர் குழாமு
நீறுசேர்திருத் தொண்டருநிகரிலா தவருக்
காறுசூடின ரருட்டிருக்காப்புநா ணணிவார்

(இ-ள்) மாறிலா நிறைவளம் தரு புகலியின் மணமீக்கூறும்நாளின் முன்னாளினில்=நிகரற்ற நிறைந்த வளம்பொருந்திய சீகாழியின்கண் மணத்தை மேற்கொள்ளும் திருநாளின் முதனாளில், வேதியர்குழாமும் நீறுசேர் திருத்தொண்டரும்=மறையவர் தொகுதியும் விபூதியணிந்த திருவடியார்களும், நிகர் இலாதவருக்கு ஆறுசூடினார் அருட்டிருக்காப்புநாண் அணிவார்= ஒப்பற்ற ஆளுடையபிள்ளையாருக்குக் கங்காநதியைத் திருமுடியிற் சூடிய சிவபிரானது திருவருள் வடிவான திருக்காப்பு நாணைத் (திருமணத்தின்பொருட்டு) அணிவாராயினர்.—எ-று. காப்பு நாண்=கௌதுகபந்தனம். (௧௧௮௨)

வேதவாய்மையின் விதியுளிவினையினால் விளங்க
வோதநீருலகி யன்முறையொழுக்கமும் பெருக்க
காதலினிடிருந்த தொண்டர்களுமறையவர் கவினார்
மாதரார்மைந்தர்பொற் காப்புநாணநகர்வலஞ் செய்தார்

(இ-ள்) வேதவாய்மையின் விதியுளி வினையினால் விளங்க=வேதவாக்கியத்திற் கூறும் விதிகள் இச்செயலால் விளங்கவும், ஓதநீர் உலகியன் முறை ஒழுக்கமும் பெருக=பிரவாகிக்குங் கடல்சூழ்ந்த உலகநடையின் முறையான வொழுக்கங்களும் விருத்தியடைய, காதலின் திருத்தொண்டர்கள் மறையவர்=அன்பு மிக்க திருவடியார்களும் வேதியர்களும், கவினார் மாதரார்மைந்தர்கள்=சிறந்த மகளிரும் ஆடவரும் ஆகிய அவர்கள், பொன்காப்பு நாணநகர் வலஞ் செய்தார்=பொன்னாலாய கௌதுகபந்தனஞ் செய்தற் பொருட்டு நகரத்தை வலஞ்செய்வித்தார்கள் —எ-று. வலஞ்செய்தாரென் புழி, விவ்விகுதி தொக்கது "குடிபொன்றிக்குற்றமுமாங்கேதரும்" என்றாற் போலக்கொள்க. (௧௧௮௫)

நகர்வலஞ்செய்து புகுந்தபின்னவமணி யணிந்த
புகரில்சித்திர விதானமண்டபத்தினிற் பொலியப்
பகரும்வைதிக விதிச்சமாவர்த்தனப் பான்மை
திகழமுற்றிய செம்மலார்திருமுன்பு சேர்ந்தார்.

(இ-ள்) நகர்வலஞ்செய்து புகுந்தபின் = நகரத்தை வலமாகவந்து திருமாளிகை புகுந்தபின்பு, நவமணி அணிந்த புகரில் சித்திரவிதானமண்டபத்தினிற்பொலிய=நவரத்தினங்களினாலலங்கரித்த குற்றமற்ற சித்திரத்தையுடைய மேற்கட்டி கட்டிய மண்டபத்திற் பொலிவெய்த, பகரும் வைதிக விதிச்சமாவர்த்தனப் பான்மை=வேதநூல் கூறும் வைதிக விதியாகிய சமாவர்த்தனக்கிரியையை, திகழமுற்றிய செம்மலார் திருமுன்பு சேர்ந்தார்=குறையற விதிப்படி முடித்த ஆளுடையபிள்ளையார் திருமுன்பு மறையவர்கள் யாவரும் ஒருங்குகூடினார் —எ-று. (௧௧௮௬)

செம்பொனின்பரிகலத்தினிற்செந்நெல்வெண் பரப்பின்
வம்பணிந்தநீண் மாலைசூழ்மருங்குற வமைத்த
வம்பொன்வாசநீர்ப் பொற்குடமரசிலை தருப்பை
பம்புநீள்சுடர் மணிவிளக்கொளிர்தரும் பரப்பில்.

(இ-ள்) செம்பொனின் பரிகலத்தினில்=சிவந்தபொன்னாலாய பாத்திரத்தில், செந்நெல்வெண்பரப்பின்=வெள்ளிய சம்பாநெல்லின் பரப்பின் மேல், வம்பு அணிந்த நீள் மாலைசூழ் மருங்குற அமைத்த=வாசனைபொருந்திய நீண்ட மலர்மாலைகள் சூழ்ந்த மண்டபத்தின் மருங்குபொருந்தும்படி வைத்த, அம்பொன் வாசநீர்ப்பொற்குடம்=அழகிய பொன்னாற்செய்த வாசனைபொருந்திய நீர் நிறைத்த பூரணகும்பங்களும்; அரசிலை தருப்பை

பமபு நீள்சுடா மணிவிளககு=அரசிலையுந தருப்பையும பொதிநத நீண்ட ஒளி பொருந்திய இரததின தீபங்கள, ஒளிதரும பரபபில=விளஙகுகினற இடததில —எ-று. (கசுஅடு)

நாதமஙகல முழககொடு நறறவ முனிவா
வேதகீதமும விமமிடவிரைகமழ வாசப
போதுசாநதணி பூநதுகிலபுனைநதபுண் ணியமபோல
மீதுபூஞசய னததிருநதவாமுனபு மேவி.

(இ-ள்) நாதமஙகல முழககொடு=மஙகலவாததியஙகளி னொலியோ டு, நறறவமுனிவா வேதகீதமும விமமிட=நலல தவததையுடைய மறையவா களது வேதஙகளினிசையுமதிகரிகக, விரைகமழ வாசபபோது சாநது அணி பூநதுகில புனைநத புணணியமபோல=மணஙகமழுகினற வாசனைபொருநதிய புடபஙகளுஞ சநதனமுமாபரணமும பொலிவுபொருநதிய படடாடையுமணி நத புணணியவடிவமபோல, மீதுபூஞசயனததிருநதவா முனபுமேவி=மல ரணையினமேல எழுநதருளியிருநத ஆளுடையபிளளையாா திருமுனபு அமம றையவாகள அடைநது.—எ-று (கசுஅசு)

ஆாவமிககெழு மனபினொமலரய னனைய
சீாமறைததொழிற சடஙகுசெயதிருநதுநூன முனிவா
பாாவழிபபட வருமிருவினைகளின பநதச
சாாபொழிபபவா திருககையிறகாபபுநாண சாதத.

(இ-ள்) ஆாவம மிகககு எழும அனபினொல=விருபபு மிககெழுகினற அனபோடு, மலா அயன அனைய சீா மறைததொழிற சடஙகுசெயதிருநது நூலமுனிவா=பிரமனையொதத சிறநத வேதவொழுககமான சடஙகுகளைச செயகினற திருததமான நூலையணிநத அம்மறையவாகள; பாாவழிபபட வரும இருவினைகளின பநதசசாாபு ஒழிபபவா=நிலவுலகிலுதிககவருகினற நலவினை தீவினைகளின பநதமாகிய சாாபை நீககியருளும ஆளுடையபிளளை யாரது, திருககையிற காபபு நாணசாதத=திருககரததில (விவாகததின பொருடடு) காபபு நாணையணிய —எ-று (கசுஅஎ)

கண்டமாநதாகள கடிமணஙகாணவந தணைவாா
கொணடவலவினைப பாபபவிழகொளகைய வான
தொணடாசிநதையும வதனமுமலாநதன சுருதி
மண்டுமாமறைக குலமெழுநதாாததன மகிழநதே.

(இ-ள்) கணடமாந்தாகள சிநதையும வதனமும் மலா்நதன=தரிசித்த மனிதாகளது இதயமு முகமுமலாநதன; கடிமணம காணவநது அணைவாா் சிநதையும வதனமும மலாநதன, புதிதான திருமணததைத்தரிசிககவநதணைந

தவர்களது இதயமும் முகமும் மலர்ந்தன, கொண்ட வல்வினைப்பரப்பு அவிழ் கொள்கைய ரானதொண்டர் சிந்தையும் வதனமும் மலர்ந்தன=தம்மைப்பற்றிய தீவினைப்பகுதிகள் நீங்கும் கொள்கையையுடைய அடியார்களது இதயமும்முகமும் மலர்ந்தன, சுருதி மண்டு மாமறைக்குலம் எழுந்து ஆர்த்தன மகிழ்ந்தே=வேதமும் நெருங்கிய மறையவர் தொகுதியு மகிழ்ச்சியடைந்தெழுந்தாரவாரித்தன —எ-று. கண்டமாந்தர்கள் சிந்தையும் வதனமு மலர்ந்தனவென்றும்; கடிமணங்காண வந்தணைவார் சிந்தையும் வதனமுமலர்ந்தனவென்றும் பிரித்துக்கூட்டப்பட்டன. ஐயுங் கண்ணுமாகிய உருபுகள் ஏற்றிற்றொகுதலேயன்றி, ஆறுமுருபு ஏற்றிற்றொகாதெனின் ஈண்டு தழாத்தொடராய்க் கூடியுழைப்புழி வேற்றுமைச்சந்தியாய்த் தொக்கதன்றியல்பாற்றொக்கதன்றெனக். (கக௮௫)

நிரந்தகங்குலி னிதிமழை விதிமுறை யெவர்க்கும்
புரந்தஞானசம் பந்தர்தாம் புன்னெறிச் சமய
வரந்தைவல்லிரு ளகலவந் தவதரித் தாற்போற்
பரந்தபேரிரு டுரந்துவந் தெழுந்தனன் பகலோன்.

(இ-ள்) நிரந்த கங்குலில் நிதிமழை விதிமுறை எவர்க்கும்=(நிலவுகிற) பரந்த சமணிருளினிடத்து நிதிமழைபோலும் வேதவிதியின் முறைமையை யாவர்க்கும் (சுரந்து), புரந்த ஞானசம்பந்தர் தாம்=பெய்து காத்தருளிய ஆளுடையபிள்ளையார், புன்னெறிச்சமய அரந்தை வல் இருள் அகல=அற்பவழியாகிய அந்தப் புறச்சமயங்களொன்றனுந் துன்பத்தை விளைக்குங்கொடிய இருள் நீங்க, வந்து அவதரித்தாற்போல=நிலவுலகின்கண் ணெழுந்தருளியவதாரஞ்செய்தாற்போல, பரந்த பேரிருள் துரந்துவந்து எழுந்தனன் பகலோன்=பரம்பிய பெரிய இருளை நீக்கிச் சூரியன்வந்துதித்தான் —எ-று. ()

அஞ்சிறைச்சுரும் பறைபொழிற்சண்பையாண் டகையார்
தஞ்சிவத்திரு மணஞ்செய்தவஞ்செய்நா ளென்று
மஞ்சனத்தொழில் புரிந்தெனமாசிருள் கழுவிச்
செஞ்சுடர்க்கதிர்ப் பேரணியணிந்தன திசைகள்.

(இ-ள்) அஞ்சிறைச் சுரும்பு அறைபொழிற்சண்பை ஆண்டகையார் தம்=அழகிய சிறகினையுடைய ஆண்வண்டுகளொலிக்குஞ் சோலைசூழ்ந்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரது, சிவத்திருமணம் செய்த தவம்செய் நாள் என்று=மங்கலமான திருமணஞ்செய்தற்குத் தவத்தைச்செய்த நாளிதுவென்று, மஞ்சனத்தொழில் புரிந்தென=தானும் திருமஞ்சனமாடுந் தொழிலைச்செய்தாற்போல; மாசிருள்கழுவி=குற்றம்பொருந்திய இருளைக்கழுவி; செம் சுடர்க்கதிர் பேரணி அணிந்தன திசைகள்=சிவந்த ஒளிபொருந்திய சூரியகிரணமென்னும்பெரிய அலங்காரத்தைத்திக்குகளணிந்தனவாயின-எ-று. பிள்ளையார் திருமணஞ்செய்தற்குரிய நாளாதலிலவர் தெய்வத்தன்மை விளக்க

கிய திக்குகள் மேகத்தாலும் புழுதியாலுமாய மலினமின்றி விளங்கின என்பார், மாசிருள் கழுவிக் கதிரப்பேரணி யணிந்தனவென உருவகித்துக்கூறினர்

பரம்பு தம்வயி னெங்களு முள்ளபல் வளங்க
ணிரம்ப முன்கொணர்ந் தெண்டிசை யவர்நெருங் குதலாற்
றரங்கடந்தவர் தந்திருக் கல்லியா ணத்தின்
வரம்பி றன்பயன் காட்டுவ தொத்தது வையம்.

(இ-ள்) பரம்பு தம் வயின் எங்கணும் உள்ள பல்வளங்கள்=பரம்பித் தம்மிடத்தெங்கணு முள்ள பலவளங்களை, நிரம்ப முன் கொணர்ந்து எண் திசையவர் நெருங்குதலால்=நிரம்பும்படி முன்னே கொண்டுவந்து எட்டுத் திக்கிலுள்ளவர்களும் நெருங்குதலினால், தரம் கடந்தவர் தம் திருக்கல்லியாணத்தின்=தமக்கு ஒப்பாரில்லாத ஆளுடைய பிள்ளையாரது திருமணத்தில், வரம்பு இல் தன் பயன் காட்டுவது ஒத்தது வையம்=எண்ணிறந்த தனது வளங்களை நிலவுலகமானது காட்டுவதையொத்திருந்தது —எ-று. வையம், தம்வயினுள்ள பலவளங்களையெண்டிசையவர் கொண்டுவந்து நெருங்குதலால், தன் பயன் காட்டுவதொத்ததெனக் கூட்டுக. (௧௧௯௧)

நங்கள் வாழ்வென வருந்திருஞானசம் பந்தர்
மங்கலத்திரு மணவெழுச் சியின்முழக் கென்னத்
துங்கவெண்டிரைச் சுரிவளை யார்ப்பொடு சூழ்ந்து
பொங்குபேரொலி முழக்குட னெழுந்தது புணரி.

(இ-ள்) நங்கள் வாழ்வென வரும் திருஞானசம்பந்தர்=நமது வாழ்வென்றுகூற எழுந்தருளும் ஆளுடைய பிள்ளையாரது, மங்கலத் திருமண எழுச்சியின் முழக்கென்ன=மங்கலகரமான திருமணவெழுச்சியிலுதிக்கும் வாத்தியத்தின் ஒலிபோல, துங்க வெண் திரைச் சுரிவளை ஆர்ப்பொடு சூழ்ந்து=உயர்ந்த வெள்ளியதிரையினிடத்துள்ள சுரிந்த சங்குகளின் ஆரவாரத்தோடு கரையிலலைகளை வீசி, பொங்கு பேரொலி முழக்குடன் எழுந்தது புணரி=பொங்குகின்ற பேரொலியாகிய முழக்குடன் சமுத்திரமெழுந்தது -எ-று. இதுவுஞ் சுபசகுனம். புணரி, முழக்குடன் சூழ்ந்தெழுந்ததெனக் கூட்டுக. ()

அளக்க ரேழுமொன் றாமெனும் பெருமையெவ் வுலகும்
விளக்கு மாமணி விழாவுடன் விரைந்துசெல் வனபோற்
றுளக்கில் வேதிய ராகுதி தொடங்கிடா முன்னம்
வளர்க்கும் வேதியில் வலஞ்சுழித் தெழுந்தது வன்னி.

(இ-ள்) அளக்கர் ஏழும் ஒன்றாமெனும் பெருமை=எழுகடலுமொருங்கு சென்றுற்றபோலும் பெருமை, எவ்வுலகும் விளக்கும் மாமணி விழாவுடன் விரைந்து செல்வனபோல்=எவ்வுலகத்திலும் விளங்கச்செய்யும் பெருமைபொருந்திய திருக்கலியாண விழவுடன் தாமும் விரைந்துசெல்லக் கருதி

ளபோல; துளக்கில் வேதியா ஆகுதி தொடஙகிடாமுன்னம் = சலிபபறற மறையவாகள (நெயமுதலிய) ஆகுதிகளைத தொடஙகுமுன, வளாககும வே தியில வலஞசுழிநதெழுநதது வன்னி=தமமைவளாககும யாககுணடததில வலமாகச் சுழிததுச சொலிததது ஓமாககினி —எ-று தககணாககினி, காருக பததியம், ஆகவனீயமென நிததியாககினி மூனறுதலில, செலவன போலெ னறும, அவை மநதிர சமஸகாரமுடைமையில அதன சானிததியததால ஆச சிபவாகுதிசெயயுமுன வலஞசுழிநதெழுதலில, ஆகுதி தொடஙகிடாமுனனம வலஞசுழிநதெழுநததெனறுங கூறினா வலஞசுழிநதெழுதல, திவவியகநத முடைததாதல முதலியன, சுபசூசனமாதலிலவவாறு கூறபபடடது ()

சநதமென்மலாத தாதணிநீறுமெய தரிததுக
கநதமேவுவண் டொழுஙகெனுஙகணடிகை பூணடு
சிநதைதூயவனபாகளுடனதிரு மணமபோத
மநதசாரியின் மணஙகொணாநதெழுநதது மருதது.

(இ-ள) சநதம மெனமலாத தாதணிநீறுமெய தரிதது=அழகியமி ருதுவான பூநதாதென்னு மணியததகக விபூதியை யுடமபினகணணேபூசி, கநதம மேவு வணடு ஒழுஙகெனும கணடிகை பூணடு=கூடடமாகவருகினற வணடின வரிசையெனனு முருததிராககததைபபூணடு, சிநதைதூய அன பாகளுடன திருமணமபோத = மனததூயமைபொருநதிய திருவடியாாகளு டன திருமணஞசெலல, மநதசாரியின மணம கொணாநது எழுநதது மருத து=மநதகதியோடு வாசனையை வகிததுககொணடு காறறுவீசியது—எ-று இது புழுதியோடு வாயுவருதல மஙகலமினமையில இவவாறு வநததென அதனாலாயசுபததைச சூசிததது (௧௧௯௪)

எணடிசைததிறத தியாவருய புகலிவந தெயதி
மணடுமததிரு மணவெழுசசியினணி வாயபபக
கொணடவெண்ணிறக குரூஉசசுடாககொணடலக ளெனனும
வெணடுகிறகொடி நிரைததுபோனறது விசுமபு

(இ-ள.) எணதிசைததிறதது யாவரும புகலிவநது எயதி=எடடுததிக கின் பகுதிகளிலவாழும யாவருஞ சீகாழியினகண வநதடைநது, மணடும அததிருமண எழுசசியின அணிவாயபப=நெருஙகிய அததிருமணததின தெ ழுசசியின கணழகு பொருநத, கொணடவெணணிறககுரூஉசசுடாககொண டலகள எனனும=பிடிதத வெணமையான நிறமபொருநதிய ஒளியினையுடை ய மேகஙகளென்கினற, வெணதுகிறகொடி நிரைததுபோனறது விசுமபு= வெளளியகொடியாடைகளை நிரைததாறபோனறது ஆகாயம—எ-று குரூஉச சுடாககொணடலகளெனனும வாயபபககொணட கொடியெனககூடடுக இதனால ஆகாயம மலினமினமை சூசிததது. (௧௧௯௫)

ஏலவிந்நலம் யாவையுமெழுச்சியின் முன்காட்டுங்
காலைசெய்வினை முற்றிய கவுணியர் பெருமான்
மூலமாகிய தோணிமேன்முதல்வரை வணங்கிச்
சீலமார்திரு வருளினால் மணத்தின்மேற் செல்வார்.

(இ-ள்) ஏல இந்நலம் யாவையும் எழுச்சியின் முன்காட்டும் காலை=பொருந்தும்படி இவ்வாறான சுபசூசனங்கள் எல்லாவற்றையும் திருமணவெழுச்சியின் முன்புகாட்டுகின்ற அவ்வுதயகாலத்தில், செய்வினைமுற்றிய கவுணியர்பெருமான்=தாஞ்செய்யுஞ் சந்தியாவந்தனமுதலிய கன்மங்களைச் செய்து முடித்தகவுணிய கோத்திரத்துத் தலைவராகிய ஆளுடையபிள்ளையார், மூலமாகிய தோணிமேல் முதல்வரை வணங்கி=எப்பொருட்குங் காரணராகிய தோணியப்பரைவணங்கி, சீலம் ஆர் திரு அருளினால் மணத்தின்மேற் செல்வார்=சிறப்பமைந்த திருவருளின் வழித்தாயத் திருமணத்திற் கெழுந்தருளுவாராயினார்—எ-று. (ககஙசு)

காழிமாநகர் வேதியர் குழாத்தொடுங் கலந்து
சூழுமன்பர்க ளேனையோர் துதைந்துமுன் செல்ல
வாழிமாமறைமுழங்கிட வளம்பதி வணங்கி
நீள்வெண்சுடர்நித்திலச் சிவிகைமேற் கொண்டார்.

(இ-ள்) காழி மாநகர் வேதியர் குழாத்தொடும் கலந்து=சீகாழியின்கண் வாழுமறையவர் தொகுதியோடு நெருங்கி, சூழும் அன்பர்கள் ஏனையோர் துதைந்து முன்செல்ல=சுற்றுகின்ற அடியார்களும் மற்றையோரும் நெருங்கி முன்னேசெல்ல, வாழிமாமறை முழங்கிட வளம்பதி வணங்கி=பெருமைபொருந்திய வேதங்களொலிக்க வளம்பொருந்திய சீகாழிப்பதியை வணங்கி, நீள்வெண்சுடர் நித்திலச்சிவிகைமேற் கொண்டார்=மிக்கவெள்ளிய ஒளிபொருந்திய திருமுத்துச்சிவிகைமே லெழுந்தருளினார்.—எ-று. ( )

ஆனவாகன மேறுவாரியாருமேற் கொள்க
கானமாகிய தொங்கல் பிச்சங்குடை கவரி
மேனெருங்கிட விசும்பினுநிலத்தினு மெழுந்த
வானதுந்துபி முழக்குடன்மங்கல வியங்கள்

(இ-ள்) ஆனவாகனம் ஏறுவார் யாரும் மேற்கொள்ள=அவரவற்கேற்ற வாகனங்களிலேறுகின்றவர்கள் யாவரும் அவ்வாகனங்களை யிவர்ந்துவர, கானமாகிய தொங்கல் பிச்சம் குடை கவரி=திரளாகிய மயிற்பீலியும் வெண்குடையுமேனைய நிறம்பொருந்திய குடைகளுஞ் சாமரமும்; மேல் நெருங்கிட=மேலேநெருங்கவும், வானதுந்துபி முழக்குடன் மங்கல இயங்கள் விசும்பினும் நிலத்தினும் எழுந்த=தேவதுந்துபி முழக்கோடு மங்கலவாத்தியங்கள் ஆகாயத்தினும் நிலவுலகத்தினு முறையேயொலித்தன—எ-று. (ககஙஅ)

வேறு.

சங்கொடு தாரை சின்னந் தனிப்பெருங் காளந் தாளம்
வங்கிய மேனை மற்று மலர்துளைக் கருவி யெல்லாம்
பொங்கிய வொலியி னோங்கப் பூசுரர் வேதகீத
மெங்கணு மெழுந்து மல்கத் திருமண மெழுந்த தன்றே.

(இ-ள்) சங்கொடு தாரை சின்னம் தனிப்பெருங்காளம் தாளம்=சங்குடன் தாரையுஞ் சின்னமும் ஒப்பற்ற பெரியகாளமுந் தாளமுமாகிய இவைகளோடு, வங்கியம் ஏனை மற்றும் மலர்துளைக்கருவி எல்லாம்=இசைக்குழலும் இவையல்லாத வேறுதுளைக்கருவிகளுமாகிய எல்லாவாத்தியங்களும், பொங்கிய ஒலியின் ஓங்க=பரம்பிய ஒலியோடு மேம்பட, பூசுரர்வேதகீதம் எங்கணும் எழுந்து மல்க=மறையவர்களது வேதகீதமெவ்விடத்து மெழுந்து நிறைய, திருமணம் எழுந்ததன்றே=திருக்கல்யாண விழவு எழுந்தது —எ-று.

கோதையர் குழல்சூழ் வண்டின் குழாத்தொலி யொருபாற் கோல
வேதியர் வேதவாய்மை மிகுமொலி யொருபான் மிக்க
வேதமில் விபஞ்சி வீணை யாழொலி யொருபா லேத்து
நாதமங் கலங்கள் கீத நயப்பொலி யொருபா லாக.

(இ-ள்) கோதையர் குழல்சூழ்வண்டின் குழாத்தொலி ஒருபால்=மகளிரது கேசபாரத்திற் சூழ்ந்தவண்டின் கூட்டங்களினோசை யொருபுடையும், கோலவேதியர் வேதவாய்மை மிகும் ஒலி ஒருபால்=அழகிய மறையவர்களது வேதத்தின் உண்மைமிக்க ஒலியானது ஒருபுடையும், மிக்க ஏதமில் விபஞ்சி வீணையாழ் ஒலி ஒருபால்=மேலான குற்றமற்ற இசையை வளர்க்கும் வீணையும் யாழுமாகிய இவைகளினோசை யொருபுடையும், ஏத்துநாத மங்கலங்கள் கீதநயப்பொலி ஒருபாலாக=துதிக்கின்ற இசையோடு கூடியமங்கலவாழ்த்துக்களுங் கானஞ்செய்கின்ற நயப்பான ஓசையு மொருபுடையுமாக —எ-று. (௧௨00)

விண்ணினை விழுங்க மிக்க வெண்டுகிற் பதாகைவெள்ளங்
கண்வெறி படைப்ப மிக்க கதிர்விரி கவரிக்கானம்
மண்ணிய மணிப்பூணீடு மரிசன மலிந்தபொற்பி
னெண்ணிலா வண்ணத் தூசின் பொதிப்பரப் பெங்கு நண்ண

(இ-ள்.) மிக்கவெண்டுகிற்பதாகை வெள்ளம் விண்ணினை விழுங்க=மிக்கவெள்ளிய துகிற்கொடிகளின் கூட்டம் ஆகாயத்தை மூடவும், மிக்க கதிர்விரி கவரிக்கானம் கண்வெறிபடைப்ப=மிகுதியான ஒளிவீசுகின்ற சாமரத்தொகுதிகள் கண்களை வெறிவிதாகச்செய்யவும், மண்ணிய மணிப்பூணீடும் அரிசனம் மலிந்தபொற்பில்=அலங்கரிக்கத்தக்க இரத்தினாபரணங்களினோடுமிக்க மஞ்சட்பூசிய அழகினையுடைய, எண்ணிலாவண்ணத்தூசின் பொதிப்பரப்பு எங்கும் நண்ண=அளவில்லாத நிறம்பொருந்தியபட்டாடைகளின் பொதியின் றொகுதி யெவ்விடத்தும் பொருந்தவும்.—எ-று. (௧௨0௧)

சிகையொடு மான்றோ றாங்கு மிடையுமா சாறுஞ்செல்வார்
புகைவிடும் வேள்விச்செந்தீ யில்லுடன் கொண்டுபோவார்
தகையிலா விருப்பின்மிக்க பதிகங்கள் விளம்பிச்சார்வார்
வகையறு பகையுஞ்செற்ற மாதவ ரியல்பின்மல்க.

(இ-ள்.) சிகையொடு மான்றோல் தாங்கும் இடையும் ஆசாறும் செல்வார்=சிகையுடன் கருமான்றோலைப் பூணூலுடன் தரித்த ஓதுஞ்சிறுவரு முபாத்தியாயருமொருபாற் செல்லவும், புகைவிடும் வேள்விச்செந்தீ இல்லுடன் கொண்டுபோவார்=புகைவிடுகின்ற ஔபாசனாக்கினிகளை மனையாளுடனெடுத்துக்கொண்டுடன்போகவும், தகையிலா விருப்பின் மிக்க பதிகங்கள் விளம்பிச்சார்வார்=அடங்காத விருப்போடு மேன்மைபொருந்திய திருப்பதிகங்களையோதி யொருபாற் செல்லவும், வகையறு பகையும் செற்ற மாதவர் இயல்பின்மல்க=கூறுபாடான அறுவகைப்பகையையுங்கடிந்த மிக்கதவத்தையுடையோர் இயல்பால் நெருங்கவும்—எ-று. செல்வார், போவார், சார்வார், என்பன முற்றெச்சம். (௧௨௦௨)

அறுவகைவிளங்குஞ்சைவத்தளவிலாவிரதஞ்சாரு
நெறிவழிநின்ற வேடநீடிய தவத்தினுள்ளோர்
மறுவறு மனத்தி லன்பின் வழியினால் வந்தயோகக்
குறிநிலைபெற்றதொண்டர் குழாங்குழாமாகியேக.

(இ-ள்) அறுவகை விளங்கும் சைவத்து அளவு இலா விரதம் சாரும்=அறுவகையுடைச் சமயமாய் விளங்குகின்ற சைவத்திலெண்ணிறந்த விரதத்தைச் சார்ந்த, நெறிவழிநின்றவேடம் நீடியதவத்தினுள்ளோர்=ஒழுக்கவழியில் நின்றவேடமிக்க தவத்தினையுள்ளோரும், மறு அறு மனத்தில் அன்பின் வழியினால்வந்த=குற்றமற்ற மனதிலன்பு காரணமாய்வந்த, யோகக்குறிநிலைபெற்றதொண்டர் குழாம் குழாமாகி ஏக=யோகக்குறிநிலைபெற்ற அடியார்கள் தொகுதிதொகுதியாய்ச் செல்லவும்—எ-று. அறுவகைச்சைவாகமும் நியமமும் விரதமும்பலவாதலில், அளவிலா விரதஞ்சாரு நெறிவழிநின்றவேடநீடியதவத்தினுள்ளோரென்றும், ஒருவழிப்படுதல் சத்துவகுணத்தாலன்றியாகாமையின், மறுவறுமனமென்றும், பிராகிருதயோகிகள் சத்துவகுணமுடையரேனுஞ் சிவபிரானிடத்தன்பின் வழிவந்த யோகரன்மையின், அன்பின்வழியினால்வந்த யோகமென்றும், இடைபிங்கலைகளினியக்கமறுத்துக்கும்பகத்தாலுணருமுபதேசக்குறியாதலில், குறியென்றும், அதன்சாத்திய இயல்புதோன்ற நிலைபெற்ற தொண்டரென்றுங்கூறினார் (௧௨௦௩)

விஞ்சையரியக்க காசித்தா கின்னரா மிடைந்ததேவ
ரஞ்சனநாட்ட வீட்டத் தரம்பைய ருடனுயுள்ளோர்
தஞ்சுடாவிமானமேறித் தழைத்தவா தரவினோடு
மஞ்சுறை விசும்பின்மீது மணவணி காணச்சென்றார்.

(இ-ள்) விஞ்சையர் இயக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்=வித்தியாதரரு மியக்கருஞ் சித்தருங் கின்னரரும் நெருங்கிய தேவர்களும், அஞ்சன நாட்ட மாட்டத்து அரம்பையர் உடனுய உள்ளோர்=கரியகண்களையுடைய கூட்டமான தேவப்பெண்களுடன் கூடினவர்களாய், தம்சுடர் விமானம் ஏறித்தழைத்த ஆதரவினோடு=தமது ஒளிபொருந்திய விமானத்தினகணேறிக் கொண்டு மிக்கவிருப்போடு; மஞ்சுறைவிசும்பின்மீது மண அணிகாணச்சென்றர்=மேகங்கள் தவழ்கின்ற ஆகாயத்தின்கண் திருக்கல்யாணத்தின்து பொலிவைக்காணும்படிவந்தார்கள் —எ-று. (௧௨௦௪)

மற்றவர் மிடைந்துசெல்லு மங்கலவனப்பின் காட்சி
முற்றவித்தலத்தினுள்ளோர் மொய்த்துடன்படரும்போதி
லற்புதநிகழ்ச்சியெய்த வணைதலானமண மேற்செல்லும
பொற்பமை மணத்தின்சாயைபோன்றுமுன்பொலியச்செல்ல.

(இ-ள்) மற்று அவர் மிடைந்து செல்லும் மங்கல வனப்பின்காட்சி=அத்தேவசசாதியார்கள் மணங்காணும்பொருட்டுக் கூடி மணத்துடன் செல்லுகின்ற மங்கலகரமான அழகினதோற்றம், முற்ற இத்தலத்தின் உள்ளோர் மொய்த்து உடன்படரும்போதில்=முழுதுமிந்நிலவுலகத்தினுள்ளோர் திரண்டு திருமணத்துடன் செல்லுங்கால், அற்புதநிகழ்ச்சி எய்த அணைதலால்=ஆச்சரியம் நிகழும்படியிருத்தலால், மணமேற்செல்லும்பொற்பு அமை மணத்தின் சாயைபோன்று முன்பொலியச்செல்ல=மணத்தில் நின்று மேற்சென்ற அழகிய அம்மணத்தினது சாயையையொத்து முன்னே பொலிவடையச்செல்லவும் —எ-று சாயை=பிரதிவிம்பம் (௧௨௦௫)

தவவரசாளவுயக்கும் தனிக்குடை நிழற்றச்சாரும
பவமறுத்தாளவல்லார் பாதமுள்ளத்துக்கொண்டு
புவனங்களவாழவந்த பூந்தராய் வேந்தர்போந்து
சிவனமாந்துறையுமநல்லூர்த்திருப்பெருமணத்தைச்சேர்ந்தார்.

(இ-ள்) தவ அரசாள உய்க்கும் தனிக்குடை நிழற்ற=தவமாகிய அரசுரிமையையாளும்படி பிடிக்குமொப்பற்ற திருமுத்தின்குடை நிழலைச்செய்யவும், சாரும் பவம் அறுத்து ஆளவல்லார் பாதம் உள்ளத்துக்கொண்டு=தம்மைச்சார்ந்த சனன மரணங்களை நீக்கி அடிமைகொள்ளவல்ல சிவபிரானது திருவடிகளைத் தமது திருவுள்ளத்தின்கண் சிந்தித்துக்கொண்டு, புவனங்கள் வாழவந்த பூந்தராய் வேந்தர்போந்து=நிலஉலகங்கள் வாழும்படி அவதரித்த சீகாழித்தலைவராகிய ஆளுடையபிள்ளையாரெழுந்தருளி, சிவன் அமர்ந்து உறையும் நல்லூர்த் திருப்பெருமணத்தைச் சேர்ந்தார்=சிவலோகத்தியாகரெழுந்தருளிய திருநல்லூர்ப் பெருமணத்தை யடைந்தருளினார் —எ-று. கோதையொன்பது முதலித் காறேழுசெய்யுளுங் குளகம் (௧௨௦௬)

பெருமணக்கோயிலுள்ளார் மங்கலம் பெருகுமாற்றால
வருமணத் திறத்தின்முன்னர் வழியெதிர் கொள்ளச்சென்று

திருமணமபுணரவெயதுஞ் சிரபுரசசெமமலாாதா
மிருணமறைததிலஙகு கண்டததிறைவர்தஙகோயிலபுக்கார.

(இ-ள) பெருமணககோயில உளளார் மஙகலம பெருகும ஆறறுல= திருநலலூாப பெருமணத திருககோயிலினுளள அடியார்கள மஙகல மானது மிகுமவழியால, வருமணததிறததின முனனா=வருகின்றமண எழுசசியின முனபு, வழி எதிாமகொளளச செனறு=வழியிலெதிர் கொளளுமபடி சென றருளி, திருமணமபுணர எயதும சிரபுரசசெமமலாாதாம=திருககலயாணத் தைசசெயய வெழுநதருளுஞ சீகாழிததலைவராகிய ஆளுடையபிளளையார், இருள மறைதது இலஙகு கணடதது இறைவாதம கோயில புககா=ஆலா கலததாலாகிய கருமையைத திருமிடறறின கணமறைதது விளஙகுகினற கணடததையுடைய சிவலோகததியாகரது திருககோயிலை யடைந்தாா —எ-று

நாதரைப பணிநதுபோறறி நறபொருட பதிகமபாடிக
காதனமெயயருண முனபெறறுக கவுணியா தலைவாபோநது
வேதியா வதுவைககோலம புனைநதிட வேணடுமெனனப
பூதநாயகாதங கோயிற புறததொரு மடததிறபுககா

(இ-ள) நாதரைபபணிநது போறறி நறபொருட பதிகமபாடி=சிவ பிரானை வணஙகித துதிதது நலலபொருள நிறைநத திருபபதிகததைபபாடி, காதல மெயயருள முனபெறறு=விருபபோடு கூடிய மெயமமை பொருநதிய திருவருளை முனபுபெறறு, கவுணியா தலைவா போநது=ஆளுடைய பிளளை யாா ஆலயததினினறும புறமபே யெழுநதருளி, வேதியா வதுவைககோலம புனைநதிட வேணடும எனன=அசசீகாழி மறையவா திருமணககோலததை யணிய வேணடு மெனறுகூற, பூதநாயகாதம கோயிறபுறதது ஒருமடததிற புககா=பூதஙகடகு நாயகரான சிவலோகததியாகரது திருககோயிலின புற ததுளள ஒருதிருமடததிற புகுநதருளினா —எ-று (௧௨௦௮)

பொறகுடநிறைநத வாசப புனிதமஞசன நீராடடி
விறபொலி வெணபடடாடை மேதகவிளஙகச சாததி
நறறிரு வுததரீய நறுநதுகில சாததிநானப
பறபல கலவைசசாநதம பானமையி னணிநதபினனா.

(இ-ள) பொறகுடம நிறைநத வாசபபுனித மஞசனநீா ஆடடி=பொ றகுடஙகளில நிறைதத வாசனைபொருநதிய பரிசுததமானதிருமஞசன நீரால முழுககாடடி, விறபொலிவெண படடாடை மேதகவிளஙகசசாததி= ஒளி பொருநதிய வெளளிய படடாடையை மேனமைபொருநத அழகாகத்திரு அரையிறசாததி, நறறிரு உததரீய நறுநதுகில சாததி=நலலதிருவுததரீய மெனனும வாசனை பொருந்திய படடாடையைத தோளினமேறசாததி; நானப பறபல கலவைசசாநதம பானமையில அணிநதபினனர்=கஸதூரிசேர் தத பலபல கலவைசசாநதுகளை முறைமையோடு பூசியபின்பு.—எ-று. ()

திருவடி மலர்மேற் பூத்த செழுநகைச் சோதியென்ன
மருவிய தாளக் கோவை மணிச்சரி யணையச் சாத்தி
விரிசுடர்ப் பரட்டின்மீது விளங்குபொற் சரட்டிற் கோத்த
பெருகொளி முத்தின் றாமம் பிறங்கியதொங்கல் சாத்தி

(இ-ள்) திருவடி மலர்மேல் பூத்த செழும் நகைச்சோதி என்ன = திருவடித் தாமரைகளி லலர்ந்த செழுமைபொருந்திய விளக்கமானசோதியைப்போல, மருவிய தாளக்கோவை மணிச்சரி அணையச்சாத்தி=பொருந்திய முத்துக்கோவைகளையுடைய இரத்தினத்தாலாய காற்சரியை பொருந்த அணிந்து, விரிசுடர்ப் பரட்டின்மீது விளங்கு பொன் சரட்டிற்கோத்த= விரிந்த ஒளிபொருந்திய திருவடிப்பரட்டின்மேல் விளக்கமான பொன்ஞாணிற்கோத்த'; பெருகு ஒளி முத்தின்தாமம் பிறங்கிய தொங்கல் சாத்தி= மிக்க ஒளிபொருந்திய முத்துவடத்தில் விளங்குகின்ற குச்சங்களை யணிந்து -எ-று தொங்கல், குஞ்சமாய்ப்பரடைச்சூழ்ந்துநிற்குமணி (௧௨௧0)

தண்சுடர்ப்பரியமுத்துத்தமனியநாணிற்கோத்த
கண்கவர்கோவைப்பத்திக் கதிர்க்கடிசூத்திரத்தை
வெண்சுடர்த்தரள மாலைவிரிசுடர்க் கொடுக்கின்மீது
வண்டிருவரையி னீடுவனப்பொளிவளரச்சாத்தி.

(இ-ள்) தண்சுடர்ப் பரியமுத்துத் தமனிய நாணிற்கோத்த=ஒளி பொருந்திய பருத்த முத்துக்களைப் பொன்ஞாணிற்கோத்த, கண்கவர் கோவைப்பத்திக் கதிர்க்கடி சூத்திரத்தை=கண்டார் கண்ணைக் கவரத்தக்க கோவை வரிசைகளையுடைய ஒளிபொருந்திய அரைஞாணை, வெண்சுடர்த்தரள மாலை விரிசுடர்க் கொடுக்கின்மீது=வெள்ளிய ஒளிபொருந்திய முத்தின் வரிசைகள் விரிந்த ஒளியைக் காலும் பின் கச்சத்தின்மேல், வண்திரு அரையின் நீடு வனப்பு ஒளி வளரச் சாத்தி=அழகியதிருவரையின்கண் மிக்க அழகோடு ஒளிவிளங்க அணிந்து —எ-று. கடி சூத்திரத்தைக் கொடுக்கின்மீது சாத்தி யெனக்கூட்டுக. கொடுக்கென்பது=பின்கச்சம் அப்பின்கச்ச வஸ்திரவுடையின் கரையில் முத்தின்பந்திகள் இழைக்கப்படுதலில், தரளமாலை விரிசுடர்க் கொடுக்கென்றார். (௧௨௧௧)

ஒளிக்கதிர்த் தரளக்கோவை யுதரபந் தனத்தின்மீது
தளிரொளி துளும்புமுத்தின் சன்னவீரத்தைச் சாத்திக்
குளிர்நில வெறிக்குமுத்தின் பூணநூற் கோவைசாத்தி
நளிர்கதிர் முத்துமாலை நற்சுட ராரஞ்சாத்தி.

(இ-ள்) ஒளிக்கதிர் தரளக்கோவை உதரபந்தனத்தின்மீது=விளங்குகின்ற கிரணங்களையுடைய முத்துவடங்களாலாகிய உதரபந்தனத்தின்மீது, தளிர் ஒளி துளும்பும் முத்தின் சன்னவீரத்தைச் சாத்தி=தளிர்த்த ஒளிததும்

புகின்ற முத்தாலாகிய சன்னவீரமென்னு மாபரணத்தைக் (கழுத்தினின்று திருவுந்தியளவுந் தாழும்படியணிந்து), குளிர்நிலவு எறிக்கும் முத்தின்பூணு நூற்கோவைசாத்தி = குளிர்ந்த நிலவைவீசு முத்தாலாகிய பூணூல் வடங்களைத்திருமார்பிலணிந்து, நளிர்கதிர் முத்துமாலை நற்சுடர் ஆரம் சாத்தி = குளிர்ந்த ஒளிவீசுகின்ற முத்துமாலையாகிய நல்ல பிரகாசம்பொருந்திய ஆரத்தையணிந்து —எ-று. சன்னவீரம், திரண்டவடிவாய்க் கழுத்தினின்று நாபியளவும்பொருந்த அணியுமோரணி (௧௨௧௨)

வாளவிடுவயிரக்கட்டு மணிவிரலாழிசாத்தித்
தாளுறுதடக்கை முத்தின்றண்டையுஞ்சரியுஞ்சாத்தி
நீளொளிமுழங்கைப் பொட்டுநிரைசுடர்வடமுஞ்சாத்தித்
தோள்வளைத்தரளப்பைம்பூண்சுந்தரத்தோண்மேற்சாத்தி.

(இ-ள்) வாளவிடு வயிரக்கட்டு மணிவிரல் ஆழிசாத்தி = ஒளிவீசுகின்ற வயிரமணியாற்கட்டிய அழகிய மோதிரங்களை யணிந்து, தாளுறு தடக்கைமுத்தின் றண்டையும் சரியுஞ்சாத்தி = முழந்தாளையடைந்த நீண்ட திருக்கரத்தில் முத்தாலாய தண்டையையுங் கைச்சரியையு மணிந்து, நீளொளிமுழங்கைப் பொட்டு நிரைசுடர்வடமும் சாத்தி = மிக்க ஒளிபொருந்திய முழங்கைப் பொட்டோடு வரிசையான மணிவடங்களையு மணிந்து, தோள்வளை தரளப் பைம்பூண் சுந்தரத்தோள் மேற்சாத்தி = தோள்வளையையு முத்தாலாகிய தோட்பூணையு மழகிய தோளின்மேலணிந்து —எ-று. (௧௨௧௩)

திருக்கழுத்தாரந் தெய்வக் கண்டிகைமாலை சேரப்
பருத்தமுத் தொழுங்கு கோத்த படரொளிவடமுஞ் சாத்திப்
பெருக்கிய வனப்பின் செவ்விபிறங்கிய திருவார்காதில்
வருக்கவெண் டரளத்தொத்தின் வடிக்குழை விளங்கச் சாத்தி.

(இ-ள்) திருக்கழுத்து ஆரம் தெய்வக்கண்டிகைமாலைசேர = திருக்கழுத்தின்கண் பதக்கத்தையுந் தெய்வத்தன்மைபொருந்திய இரத்தினக்கண்டிகைமாலையோடு பொருந்தும்படி, பருத்தமுத்து ஒழுங்கு கோத்த படரொளி வடமுஞ்சாத்தி = பரியமுத்துக்களை வரிசையாகக் கோத்தமைந்த ஒளிபொருந்திய முத்துவடத்தையு மணிந்து, பெருக்கிய வனப்பின் செவ்வி பிறங்கிய திரு ஆர் காதில் = மிக்க அழகோடு இலக்கணமமைந்த அழகிய நீண்டகாதில்; வருக்கவெண் தரளத்தொத்தின் வடிக்குழை விளங்கச்சாத்தி = ஒருசாதியான வெள்ளியமுத்துக் கொத்தினாலாய வடித்துச்செய்த மகர குண்டலத்தை விளங்கும்படி யணிந்து —எ-று (௧௨௧௪)

நீற்றொளி தழைத்துப்பொங்கி நிறைதிருநெற்றிமீது
மேற்பட விரிந்தசோதி வெண்சுட ரெழுந்ததென்னப்
பாற்படுமுத்தின் பாரப்பனிச் சுடர்த்திரளை சாத்தி
யேற்பவைத் தணிந்தமுத்தி னெழில்வளர் மகுடஞ் சேர்த்தார்.

(இ-ள) நீறறொளி தழைததுப பொஙகி நிறை திருநெறறிமீது=விபூ தியினொளி மிககுப பொலிவடைநது நிறைநத திருநெறறியினமீது ; மேறப டவிரிநத சோதிவெணசுடா எழுநதது எனன=மேலாகவிரிநத ஒளிபொருந திய வெளளிய சுடரொழுநதாறபோல , பாறபடு முததின பாரபபனிசசுடா ததிரணை சாதத்=அநதிருநெறறியினிடததுச சோநதமுததாலாய பரிய குளிா ந்த ஒளிபொருநதிய திரணையை யணிநது , ஏறப வைதது அணிநத முததின எழிலவளா மகுடம் சோததாா = பொருநதுமபடியாக நிறைததணி பெறச செயத முததாலாய அழகு விளஙகுங கிரீடததை யணாநதாாகள -எ-று ()

இவவகை நமமையாளு மோவளா தெயவககோலங
கைவினை மறையோா செயயககடிகொளசெங கயலததாதின
செவவிநீ டாமமாாபா திருவடை- யாளமாலை
யெவவுல கோரு மேததத தொழுதுதா மெடுததுபபூணடாா.

(இ-ள) இவவகை நமமை ஆளும் ஏாவளா தெயவககோலம=இவ வாறு நமமை யடிமைகொளளு மழகு வளருகினற தெயவததனமை பொருந திய திருமணககோலததை , கைவினை மறையோாசெயய = அலஙகரிககுந தொழிலில வலல வேதியாகள செயயுஙகால , கடிகொள செஙகமலததாதின செவவிநீளதாம மாாபா=வாசனைபொருநதிய செநதாமரைப பூவாலாகிய தாதுடன அழகுமிகக மாலையையணிநத திருமாாபையுடையபிளளையாா , திரு அடையாளமாலை எவவுலகோரும ஏததததொழுது தாம எடுததுப பூண டாா=உருததிராசக கணடிகைமாலையை யெவவுலகததாருந துதிகக வண ஙகிததாமே திருசகரததாலெடுத தணிநதருளினா.—எ-று சிவசாதனதது ளொனறுதலில, உருததிராசகமாலையைத திரு அடையாள மாலையெனறும , அதைப பிறா அலஙகரிததல மரியாதையனமையின, தொழுது தாமெடுததுப பூணடாரெனறுங கூறினா (கஉகக)

அழகினுக்கணியாம வெணணீ றஞ்செழுததோதிச சாததிப
பழகிய வனபாசூழ பபடரொளி மறுகிலெயதி
மழவிடை மேலோா தமமை மனஙகொள வணஙகிவநது
முழவொலி யெடுபபமுததின சிவிகைமேற கொணடபோது

(இ-ள) அழகினுககு அணியாம வெண்ணீறு அஞசெழுததோதிச சாததி=அழகுககு அழகாய விளஙகுந திருவெணணீறறைத திருவைநதெழு த்தை யோதித தரிதது , பழகிய அனபாசூழப படாஒளி மறுகில எயதி= தமமுடனபழகிய திருககூடடததாா சூழுமபடி பரமபிய ஒளிபொருநதிய திருவீதியிலெழுந்தருளி , மழவிடைமேலோாதமமை மனஙகொளவணஙகிவ ந்து=இளமைபொருநதிய இடபததை யூாநதருளுஞ சிவலோகததியாகரைத திருவுளளமபொருந்த வணஙகி மீணடெழுநதருளி , முழவு ஒலி எடுபப முத

தின் சிவிகைமேற் கொண்டபோது=மங்கலமுழவமொலிக்கத் திருமுத்தின் சிவிகையின்மே லெழுந்தருளுங் காலத்தில்.—எ - று. எவ்வகைப் பேரணியுடையாராகும் பூதியணியின்றேல், அவ்வணிகளாலாய அழகுபயன்படாமையின், அழகினுக்கணியாம் வெண்ணீறென்றும்; அது தரிக்குங்கால் ஐந்தெழுத்தோதித் தரிக்கவேண்டுமெனும் மரபுதோன்ற, அஞ்செழுத்தோதிச்சாத்தியென்றுங் கூறினார் ([illegible])

எழுந்தன சங்கநாத மியம்பின வியங்களெங்கும்
பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பகப்புதுப்பூமாரி
தொழுந்தகை முனிவர்தொண்டர் சுருதியின்வாழ்த்துப் பொங்கி
வழிந்தன திசைகண்மீது மலர்ந்தன வுலகமெல்லாம்.

(இ-ள்) எழுந்தன சங்கநாதம் இயம்பின இயங்கள் எங்கும்=சங்கத்தின் ஒலியானது உண்டாயின மங்கலவாத்தியங்க ளெவ்விடத்து மொலித்தன, பொழிந்தன விசும்பில் விண்ணோர் கற்பக புதுப்பூமாரி=ஆகாயத்திற் றேவர்கள் தூவுங் கற்பகவிருட்சத்தினது புதிய பூமழை சொரிந்தன, தொழுந்தகை முனிவர் தொண்டர் சுருதியின் வாழ்த்துப்பொங்கி வழிந்தன திசைகள்மீது=பிறரால் வணங்கும் பெருமையையுடைய முனிவர்களுந் தொண்டர்களுமோதும் வேதங்களின் வாழ்த்தானது திக்குகளிற் பொங்கிவழிந்தன; மலர்ந்தன உலகம் எல்லாம்=எல்லாவுலகங்களு மகிழ்ச்சியடைந்தன

படர்பெருந் தொங்கல் பிச்சம் பைங்கதிர் பீலிப்பந்
தர்புனை செம்பொற் பாண்டிலணிதுகிற் சதுக்கமல்கக்
கடலின் மீதெழுந்து நிற்குங் கதிர்நிறை மதியம் போல
வடமணி யணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்றவந்தார்.

(இ-ள்) படர் பெருந்தொங்கல் பிச்சம் பைங்கதிர் பீலிப்பந்தர்=நெருங்கிய பெரிய புடைவைக்குச்சங்களும் வெண்குடையும் பசிய ஒளிவீசுகின்ற மயிற்றோகைகளின் கூட்டங்களும், அடர்புனை செம்பொற்பாண்டில் அணிதுகிற் சதுக்கம் மல்க=நெருங்க அலங்கரித்த சிவந்த பொற்றகட்டாலாய வட்டங்களையுடைய அழகிய வஸ்திரமேற்கட்டிகளும் நெருங்க, கடலின் மீது எழுந்து நிற்கும் கதிர்நிறை மதியம்போல=கடலினிடத் துதித்து நிற்கின்ற கலைநிறைந்த சந்திரன்போல, வடமணி அணிந்தமுத்தின் மணிக்குடை நிழற்றவந்தார்=முத்துவடங்களினிரைகளா லலங்கரித்த திருமுத்துக்குடை நிழல்செய்ய வெழுந்தருளினார்—எ-று. துகிற்சதுக்கமென்றது, நடைவிதானம் நடைப்பந்தலெனினு மமையும். அதனுள் விருத்தவடிவாயப் பொற்றகடுகளால் நெருங்கப்புனைதல்லி, அடர்புனை செம்பொற்பாண்டி லணிதுகிற் சதுக்கமென்றார் ([illegible])

சீரணிதெருவினூடு திருமணஞ்செல்லமுத்தி
னேரணிகாளஞ்சின்னமிலங்கொளித்தாரையெல்லாம்

[illegible]

பேரொலிபெருகமுன்னேபிடித்தனமறைகளோடு
தாரணியுய்யஞானசம்பந்தன்வந்தானென்று.

(இ-ள்) சீர் அணிதெருவினூடு திருமணம்செல்ல = சிறப்புப்பொருந்திய வீதியினகண் திருமணமெழுந்தருளுங்கால; முத்தின் ஏர்அணிகாளம் சின்னம் இலங்கு ஒளித்தாரை எல்லாம்=முத்தினாலழகு விளங்குகின்ற காளமுஞ் சின்னமும் விளங்கிய ஒளியையுடைய தாரையுமாகிய சின்னங்கள் மூன்றும், பேர் ஒலிபெருக முன்னே பிடித்தன=மிக்க ஒலிவளரப் பிள்ளையார் திருமுன்னே ஊதப்பட்டன, மறைகளோடு தாரணி உய்ய ஞானசம்பந்தன் வந்தானென்று=வேதங்களுடனிவ்வுலகத்தாரு முய்யும்பொருட்டு ஆளுடையபிள்ளையா ரெழுந்தருளினாரென்று —எ-று. (௧௨௨௦)

மண்ணினுக் கிடுக்கணீங்க வந்தவர் திருநாமங்க
ளெண்ணில பலவுமேத்திச் சின்னங்க ளெழுந்தபோதவ்
வண்ணலார் வதுவைசெய்ய வலங்கரித் தணையப்பெற்ற
புண்ணிய மறையோர் மாடமங்கலம் பொலிந்துபொங்க

(இ-ள்.) மண்ணினுக்கு இடுக்கணீங்க வந்தவர் திருநாமங்கள் = நிலவுலகத்தார்க்குத் துன்பநீங்க அவதரித்த ஆளுடையபிள்ளையாரது திருநாமங்கள், எண்ணில பலவும் ஏத்திச் சின்னங்கள் எழுந்தபோது = பாலறாவாயன் முதலளவில்லாத பலதிருநாமங்களையுந் துதித்து முத்துச்சின்னங்களொலிக்கும்பொழுது; அவ்வண்ணலார் வதுவைசெய்ய அலங்கரித்து அணையப்பெற்ற=அவ்வாளுடைய பிள்ளையார் திருமணஞ்செய்யும்பொருட்டு மணக்கோலமா யலங்காரஞ்செய்து எழுந்தருளப்பெற்ற, புண்ணியமறையோர் மாடமங்கலம் பொலிந்து பொங்க=புண்ணியத்தையுடைய நம்பாண்டாரநம்பி திருமாளிகையானது மங்கலகரமடைந்து மேம்படவும் —எ-று. அணையப்பெற்ற மறையோரென இயையும். ஆளுடையபிள்ளையார் திருமணஞ்செய்தற்கெழுந்தருளுதல் பெரும்பேறாதலின், புண்ணியமறையோரென்றார். (௧௨௨௧)

முற்றுமெய்ஞ் ஞானம்பெற்ற மூர்த்தியார் செங்கைபற்ற
நற்பெருந் தவத்தின்சீர்மை நலம்படைத் தெழுந்ததெய்வக்
கற்பகப் பூங்கொம்பன்னார் தம்மையுங் காப்புச் சேர்த்துப்
பொற்புறு சடங்குமுன்னாப் புரிவுடன் செய்தவேலை

(இ-ள்.) முற்றும் மெய்ஞ்ஞானம்பெற்ற மூர்த்தியார் செங்கைபற்ற= நிறைந்த சிவஞானத்தைப் பெற்ற ஆளுடையபிள்ளையார் திருக்கலியாணஞ்செய்ய; நற்பெருந்தவத்தின்சீர்மை நலம்படைத்து எழுந்த=நல்ல பெரிய தவத்தின் பெருமையாகிய நலத்தைப் பொருந்தியவதரித்த; தெய்வக்கற்பகப்பூங்கொம்பு அன்னார்தம்மையும் காப்புச்சேர்த்து = தெய்வத்தன்மைபொருந்திய கற்பகதருவின் பூங்கொம்பையொத்த அப்புத்திரியாரையுங் காப்பு

கட்டி; பொற்புறு சடங்குமுன்னாப் புரிவுடன் செய்த வேலை = அழ கியசங்கற்ப முதலிய கலியாணச் சடங்குகளை முன்பு விருப்பொடுசெய்த பொழுது — எ-று (௧௨௨௨)

செம்பொன்செய்வாசிச் சூட்டுத்திருமணிப் புனைபூண்செல்வப்
பைம்பொனின் மாலைவேய்ந்த பவளமென் கொடியொப்பாளை
நம்பனற் றருளேவாழ்த்தி நலமெழில் விளங்கச்சூட்டி
யம்பொன்செய்தீபமென்ன வழகலங் கரித்துவைத்தார்.

(இ-ள்.) செம்பொன் செய்வாசிச் சூட்டுத் திருமணிப்புனை பூண் = சிவந்த பொன்னாலாய நுதலணிமாலையையு மழகிய இரத்தினங்க ளழுத்திய ஆபரணங்களையும், செல்வப் பைம்பொனின்மாலைவேய்ந்த பவளமென் கொடி ஒப்பாளை = செல்வ மிக்க பசியபொன்னரிமாலையையுஞ் சூடிய மிருதுவான பவளக்கொடிபோன்ற புத்திரியை, நம்பன் தன் அருளே வாழ்த்தி நலமெழில் விளங்கச்சூட்டி = சிவபிரானது திருவருளையே வாழ்த்தி நல்ல அழகு விளங்க ஆபரணங்களைச்சூட்டி, அம்பொன்செய் தீபம் என்ன அழகு அலங்கரித்து வைத்தார் = அழகிய பொன்னாற்செய்த தீபத்தைப்போல அழகுக் கலங்காரஞ் செய்து வைத்தார்கள் — எ-று அக்கன்னிகையாற்குச் செய்த அலங்காரம் அழகுக்கலங்காரஞ்செய்ததுபோலாதலில், அழகலங்கரித்து வைத்தாரென் றூர் வாசிச்சூட்டு-வாசியாகிய சூட்டு நுதலணிமாலையென்றுபொருள் ()

மாமறை மைந்தரெல்லா மணத்தெதிர் சென்றுமன்னுந்
தூமலர்ச் செம்பொற் சுண்ணந் தொகுநவமணியும்வீசித்
தாமரை மலரோன்போல வாரரசிலை தருப்பைதோய்ந்த
காமர்பொற் கலசநன்னீ ரிருக்குடன் கலந்துவீச.

(இ-ள்) மாமறை மைந்தரெல்லாம் மணத்து எதிர்சென்று = பெருமைபொருந்திய மறையவர்கள் சிறுவரெல்லாந் திருமணத்தை யெதிர்கொண்டு சென்று, மன்னும் தூமலர்ச் செம்பொற்சுண்ணம் தொகு நவமணியும் வீசி = நிலைபெற்ற தூயமலரோடுகூடிய பொற்சுண்ணத்தையுங் கூட்டமான நவமணிகளையுந் தூவ, தாமரைமலரோன் போல்வார் = தாமரையின்கண் வாழும் பிரமனையொத்த மறையவர்கள், அரசிலை தருப்பை தோய்ந்த = அரசிலையுந் தருப்பையுஞ்சேர்ந்த, காமர் பொற்கலச நன்னீர் இருக்குடன் கலந்துவீச = அழகிய பொற்கலசங்களில் நிறைந்த நன்னீரை வேதமந்திரத்துடன் கலந்துவீசவும் — எ-று. கலந்துவீச என்றதனும், வேதமந்திரங் கூறி வீசவென்றது கருத்து (௧௨௨௪)

விண்ணவர் மலரின்மாரி விசும்பொளி தழைப்பவீச
மண்ணக நிறைந்தகந்த மந்தமாருத முமவீசக

கண்ணொளி விளக்கமிக்கா காமாதோ ரணங்களூடு
புண்ணியவிளைவு போலவா பூம்பந்தா முன்புசார்ந்தார்.

(இ-ள்.) விண்ணவா மலரினமாரி விசும்பு ஒளிதழைப்ப வீச=தேவா கள் கற்பகதருவின் மலாமழைகளை ஆகாயமொளி தழைக்கும்படி சொரிய வும், மண்ணகம் நிறைந்த கந்த மந்தமாருதமும் வீச=நிலவுலகத்தினிறை ந்த வாசனைபொருந்திய சிறுதென்றற்காற்று வீசவும், கண் ஒளி விளக் கம் மிக்கு ஆா காமாதோரணங்களூடு=கண்ணுக்கொளியானது விளக்கமாக மிக்கு நிறைந்த அழகிய தோரணங்களினடுவே, புண்ணியவிளைவுபோலவா= புண்ணியந்திரண்ட பயன்போலும் ஆளுடையபிள்ளையா, பூம்பந்தாமுன்பு சார்ந்தார்=பூம்பந்தரின் முன்படைந்தருளினா—எ-று. தோரணங்களினடு வேயுள்ள பூம்பந்தரெனக் கூட்டுக (௧௨௨௫)

பொன்னணி சங்கின்வெள்ளம் பொலிவுடன் முழங்கியார்ப்ப
மன்னிய தரளப்பந்தி வளாமணிச் சிவிகைநின்றும்
பன்மலாநறும் பொற்சுண்ணம் பரந்தபா வாடைமீது
முன்னிழிந் தருளிவந்தா மூவுலகுய்ய வந்தா

(இ-ள்) பொன் அணி சங்கின் வெள்ளம் பொலிவுடன் முழங்கி ஆா ப்ப=பொன்னாலலங்கரித்த சங்குகளின் கூட்டங்கள் மங்கலத்தோடு முழங்கி யாரவாரிக்க; மன்னிய தரளப்பந்தி வளாமணிச் சிவிகைநின்றும்=முத்தின் வரிசைகணிறைந்தமிக்க அழகினையுடைய திருமுத்துச்சிவிகையினின்றும், பன்மலா நறும்பொற்சுண்ணம் பரந்தபாவாடைமீது = பலமலர்களும் நறு மணம்பொருந்திய பொற்சுண்ணமும் பரப்பிய பாவாடையின்மேல்; முன் இழிந்தருளிவந்தா மூவுலகு உய்யவந்தா = முன்னே இறங்கியருளிவந் தா மூவுலகத்தாரும் உய்ய அவதரித்த ஆளுடைய பிள்ளையா (௧௨௨௬)

மறைக்குல மனையின்வாழ்க்கை மங்கலமகளி ரெல்லா
நிறைத்தநீாப் பொற்குடங்க ணிரைமணி விளக்குத்தூப
நறைக்குலமலாசூழ் மாலைநறுஞ்சுடா முளைப்பொற் பாண்டி
லுறைப்பொலிகலவை யேந்தியுட னெதிரேற்றுநின்றா.

(இ-ள்) மறைக்குலமனையின் வாழ்க்கை மங்கலமகளிா எல்லாம்= மறையவர்குலத்தி லில்வாழ்க்கை நிலையினகண் வாழ்தலையுடைய மங்கலத் தன்மைபொருந்திய பாாப்பனிகளெல்லாம், நிறைத்தநீாப் பொற்குடங்கள் நிரைமணிவிளக்கு=நீா நிறைத்த பொன்னாலாகிய பூரணகும்பங்களையும் வரிசையாக அழகிய விளக்குகளையும், தூபம் நறைக்குலமலர்சூழ்மாலை= தூபத்தோடு தேன்பொருந்திய உயர்ந்தமலர்களாற் றொடுத்த மாலைகளை யும்; நறும்சுடா முளைப்பொன் பாண்டில்=நலல ஒளிபொருந்தியமுளைகளை வைத்த பொற்றட்டுகளையும்; உறைப்பொலி கலவை ஏந்தி உடன் எதிா

ஏற்றினரர் = குழம்பாயப பொலிவடைந்த கலவைச்சாந்தையுமேந்திக் கொணடு எலலாருமொருஙகு பிளளையாரை வரவெதிர்கொண்டு நின்றார்கள்.

ஆஙகுமுன்னிட்ட செமபொ னணிமணிப பீடந்தன்னி
லோஙகிய ஞானவெள்ள முண்ணிறைந தெழுந்தெனனத
தாஙகிய முத்தினபைமபூண டணணிலா வெறிபபவெறிப
பாஙகொளிபரபபிநின்றா பரசமயஙகளவீழ்ந்தா.

(இ-ள்.) ஆஙகுமுன இட்டசெமபொன அணிமணிப்பீடந்தனனில = அவவிடத்தில பிளளையார திருமுனனேயிடப்பட்ட சிவந்தபொனனாறசெய்த அழகிய பீடத்தினிடத்து, ஓங்கிய ஞானவெள்ளம உளநிறைந்து எழுந்த தெனன = உயாந்த சிவஞானமெனனும வெளளமானது உள்ளத்து நிறைந்து புறத்துவழிந்தாறபோல, தாஙகிய முத்தின பைம்பூண் தணநிலா எறிப்ப = திருமேனியிறறரித்த பசிய முத்தாபரணஙகள குளிர்ந்த நிலவைவீச; எறிப பாஙகு ஒளிபரபபி நினறா பரசமயஙகளவீழ்ந்தா = அபபீடத்திலிவாந்தரு ளிப பக்கஙகளி லொளியைவீசி நின்றருளினா புறசசமயஙகளையழித்த ஆளு டையபிளளையார —எ-று பரசமயஙகள வீழ்ந்தா தணணிலா வெறிபப ஏறி ஒளிபரபபி நினறானெனககூட்டுக, (௧௨௨௮)

எதிாவர வேறறசாய லிளமயி லனையமாதா
மதுரமஙகல முன்னான வாழ்ததொலி யெடுபபவந்து
கதிாமணிக காகவாசக கமழ்புன லொழுககிககாதல
விதிமுறை வலஙகொணடெய்தி மேவுநலவினைகள செய்தாா.

(இ-ள்) எதிாவரவு ஏறறசாயல இளமயில் அனையமாதா = பிள்ளையாரை எதிர்கொணடுநின்ற இளமயிலபோலுஞ சாயலையுடைய அபபார்ப்பன மகளிா, மதுரமஙகலமுன ஆனவாழ்ததொலி எடுபபவந்து = மதுரமபொருந் திய மஙகலத்தை முன்னிட்ட வாழ்ததொலிகள மேம்படவந்து; கதிாமணிக் காகவாசக கமழ்புனல ஒழுககி = ஒளிபொருந்திய அழகிய கமணடலத்தினு ளள வாசனைபொருந்திய நறுமபுனலைத திருமுன்னேபெய்து; காதலவிதி முறை வலஙகொணடு எய்தி மேவுநலவினைகள செய்தாா = விருபபோடு விதிப படி வலமாகவந்து பொருந்திய நீராஞ்சனமுதலிய மஙகலவினைகளைசசெய தாாகள.—எ-று நீராஞ்சனம, திருட்டிதோட பரிகாரத்தின்பொருட்டுச் செயயும ஆலத்தி. (௧௨௨௯)

மஙகலம பொலியவேந்தி மாதாா முன்புசெல்லக
கஙகையின கொழுந்துசெமபொ னிமவரை கலந்ததென்ன
வஙகவா செம்பொன்மாடத தாதிபூமியி னுட்புக்கா
ரொஙகளை வாழமுனனு ளேடுவைகையினி லிட்டாா.

(இ-ள்.) மங்கலம் பொலிய ஏந்தி மாதரார் முன்புசெல்ல=அட்டமங்கலங்களைப் பொலியும்படி தாங்கிக்கொண்டு பார்ப்பனிகள் முன்னே செல்ல, கங்கையின் கொழுந்து செம்பொன் இமவரை கலந்தது என்ன=கங்கையினுடைய பிரவாகத் தாரை சிவந்த பொன்மலையான இமயத்திற் சேர்ந்தாற்போல, அங்கவர் செம்பொன் மாடத்து ஆதிபூமியினுள் புக்கார்=அவ்விடத்து நம்பாண்டார் நம்பியது சிவந்த பொன்னாலாகிய திருமாளிகையில் விவாகபூமியுட் புகுந்தருளினார், எங்களை வாழ முன்னாள் ஏடு வைகையினில் இட்டார்=அடியேங்களை வாழச்செய்யும்பொருட்டு முன்னாளில் திருமுகப்பாசுரத்தை வைகையாற்றிலிட்டருளிய ஆளுடைய பிள்ளையார்—எ-று. பிள்ளையாரது தெய்வத்தன்மையுந் தூய்மையும் விளக்கிய அவரைக் கங்கையின் கொழுந்தெனவும், அக்கொழுந்து தேவர்களையு மிரத்தினங்களையுந் திவ்வியௌடதங்களையுமுடைய மலையரசனென்னு மிமயத்தனிற் செல்லாமைபோல மணஞ்செய்யப் பிள்ளையாரெழுந்தருளிய நம்பாண்டார் நம்பியினது திருமாளிகையை அவர் உயர்வும் பெருமையுந் தோன்ற இமயமாகவும் உவமைகூறினார். (கஉகூ0)

அகினறுந் தூபம் விம்ம வணிகிளர் மணியால் வேய்ந்த
துகிற்புனை விதானம் நீழற் றூமலர்த் தவிசின் மீது
நகிலணி முத்து மாலை நகைமுக மடவார் வாழ்த்த
இகலில் சீர்மறையோர் சூழ இனிதினங் கிருந்த வேலை.

(இ-ள்.) அகில் நறுந்தூபம் விம்ம = அகிற்றுண்டுகளினது நறுமணம் பொருந்திய தூபமானது மேம்பட, அணிகிளர் மணியால் வேய்ந்த=அழகுவிளங்கு மிரத்தினங்களாலலங்கரித்த, துகிற்புனை விதானம் நீழல் = வஸ்திர மேற்கட்டியின் கீழ், தூமலர்த் தவிசின் மீது = தூய்மை பொருந்திய பூந்தவிசின்மேல், நகில் அணி முத்துமாலை நகைமுக மடவார் வாழ்த்த = தனங்களின்மேலணிந்த முத்துமாலைகளையு மொளிபொருந்திய முகத்தையுமுடைய மகளிர் வாழ்த்தெடுத்துக்கூற, இகலில் சீர்மறையோர் சூழ இனிதின் அங்கு இருந்த வேலை=மாறுபாடில்லாத சிறப்பினையுடைய மறையவர்கள் சூழும்படி யினிதாக அங்கு எழுந்தருளியிருந்தபொழுது—எ-று. (கஉகூக)

திருமகட் கொடுக்கப்பெற்ற செழுமறை முனிவர் தாமும்
அருமையால் முன்செய் மெய்ம்மை யருந்தவ மனைவி யாரும்
பெருமகிழ்ச்சி யின்றிப் பாதம் விளக்குவார் பிள்ளையார்முன்
னுரிமையால் வெண்பாற் றூநீ ருடனெடுத் தேந்தி வந்தார்.

(இ-ள்) திருமகட் கொடுக்கப்பெற்ற செழுமறைமுனிவர் தாமும்=அழகமைந்த புதல்வியைக் கொடுக்கும்படி பெற்ற செழுமைபொருந்திய வேதங்களையுணர்ந்த நம்பாண்டார் நம்பியும், அருமையால் முன்செய் மெய்ம்மை அருந்தவ மனைவியாரும்=அப்புதல்வியைப் பெறுதற்கு அருமையோடு முன்செய்த மெய்ம்மையான பெரியதவத்தையுடைய அவர் மனைவியாரும்,

பெருமகிழ்ச்சியினுற் பாதம்விளக்குவார் பிள்ளையார்முன் = மிக்கமகிழ்ச்சியோடு பிள்ளையார் திருவடிகளை விளக்குங் கருத்துடையாராய் ஆளுடையபிள்ளையார் திருமுன்பு, உரிமையால் வெண்பால் தூநீர் உடன் எடுத்து ஏந்தி வந்தார் = உரிமையுடன் வெள்ளியபாலைத்தூய நீருடனெடுத்துக்கையிலேந்திவந்தார்கள்—எ-று. கொடுக்கு முதன்மை நம்பாண்டார் நம்பியதாதலின், அவர் தவந்தோன்றக் கொடுக்கப்பெற்ற மறைமுனிவரென்றும்; அவர் கொடுக்க அப்புதிரியைப்பெறுதல் அம்மனைவியார் தவமாதலின், முன்செய்மெய்ம்மையருந்தவமனைவியாரென்றுங் கூறினார். (கஉ கஉ)

வந்துமுன் னெய்தித் தாமுன் செய்தமா தவத்தி னன்மை
நந்துநம் பாண்டார் நம்பி ஞானபோனகர் பொற்பாதங்
கந்தவார் குழலினாள்பொற் கரகநீ ரெடுத்து வார்ப்பப்
புந்தியா னினை தியானம்புரி சடையா னென்றுன்னி.

(இ-ள்.) வந்துமுன் எய்தி = மனைவியாரோடுமவந்து பிள்ளையார் திருமுன்னடைந்து, தாம் முன்செய்த மாதவத்தின் நன்மை = தாமுற்பவத்திற் செய்த பெருந்தவத்தினது நன்மையானது, நந்து நம்பாண்டார் நம்பி = உயர்வடையும் நம்பாண்டார் நம்பியென்னுமறையவர், ஞானபோனகர்பொற்பாதம் = ஆளுடையபிள்ளையாரது அழகிய திருவடிகளை, கந்தவார்குழலினாள்பொற்கரகநீர் எடுத்துவார்ப்ப = வாசனைபொருந்திய நீண்ட அளகத்தையுடைய மனைவியார் பொன்னாலாகிய கரகத்திலிருக்கும் நீரையெடுத்துப்பெய்ய, புந்தியால் நினைதியானம் புரிசடையான் என்று உன்னி = மனத்தினாற்குறிக்குந் தியானமுறைக்குப்பொருந்திய சடையையுடைய சிவபெருமானென்று கருதி.—எ-று.

மகட்கொடுப்பான் பிள்ளையார் திருவடிகளை விளக்குகின்றாராதலின், அவர்செய்த நன்மை யப்போது மேன்மேலுயர்ந்ததென்பார், நன்மை நந்து நம்பாண்டார் நம்பியென்றும், மணமகனைச் சிவபிரானாகப் பாவனைசெய்யு முறைமை அறமாமென்பார், புந்தியானினைதியானம் புரிசடையானென் றுன்னியென்றுங் கூறினார். (கஉ கக)

விருப்பினால் விளக்கிமிக்க புனிதநீர் தலைமேற்கொண்டு
பொருப்புறு மாடத்துள்ளும் புறத்துள்ளுந் தெளித்தபின்ன
ருருப்பொலி யுதரத்துள்ளும் பூரித்தாருவகை பொங்கி
யருப்புறு கிளைஞர்மேலுந் தெளித்தன ராவத்தோடும்

(இ-ள்.) விருப்பினால் விளக்கிமிக்க புனிதநீர்தலைமேற்கொண்டு = விருப்போடு பிள்ளையார் திருவடிகளை விளக்கி மேலாய தூய்மைபொருந்திய பாததீர்த்தத்தைச் சிரமேற் றெளித்துக்கொண்டு; பொருப்புறு மாடத்துள்ளும் புறத்துள்ளும் தெளித்தபின்னர் = மலைபோலுமுயர்ந்த திருமாளிகையினுள்ளும் புறத்திலுந்தெளித்தபின்பு; உருப்பொலி உதரத்துள்ளும் பூரித்தார் = அழகமைந்தவயிற்றினுள்ளும் நிறைத்தார், உவகைபொங்கி அருப்புறு

னிலைஞர்மேலும் தெளித்தனர் ஆர்வத்தோடும்=விருப்புமிக்கு உரோமமுகிழ்த்த தம்ப பெறுஞ் சுற்றத்தார்மேலும் பிரியத்தோடு தெளித்தார்—எ-று பாத தீர்த்தம் மிகத்தூயதாதலிற் புனிதநீரென்றார். அதை யுத்தரத்திற் பூரித்தல் அகத்தூய்மையாதற்பொருட்டு மேனைய இடங்களிற்றெளித்தல் புறத்தூய்மையாதற்பொருட்டென்றுங்கொள்க. அரும்பெனலுந் தலைவிருத் தெட்டமுத னிலைத்தொழிற்பெயர், அரும்பெனவிகாரமாய சண்டு உரோமமுகிழ்த்தலை யுணர்த்திற்று.மகிழ்ச்சியானு முரோமமுகிழ்த்தலில (௧௨௬௪)

பெருகொளி ஞானமுண்ட பிள்ளையார் மலர்க்கைதன்னின்
மருவுமங்கல நீர்வார்க்கக் கரகமுன்னேந்தி வார்ப்பார்
தருமறைக் கோத்திரத்தின் றங்குலஞ்செப்பி யென்றன்
னருநிதிப் பாவையாரைப் பிள்ளையார்க்களித்தே னென்றார்

(இ-ள்) பெருகு ஒளிஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கைதன்னின்=மிக்க ஒளிபொருந்திய சிவஞான அமுதையுண்டருளிய ஆளுடைய பிள்ளையாரது மலர்போலுந் திருக்கரத்தில், மருவும் மங்கல நீர்வார்க்கக் கரகம் முன் ஏந்தி வார்ப்பார்=மங்கலம்பொருந்திய நீரைவார்க்கின்ற கமண்டலத்தைக் கையிலேந்தி முன்னே தாங்கிக்கொண்டு வார்க்கும் நம்பாண்டார்நம்பி, தருமறைக்கோத்திரத்தின் தங்குலம் செப்பி=வேதத்திற்கூறுங் கோத்திரங்களுள் தமது கோத்திரத்தைச்செப்பி, என்றன் அரும் நிதிப்பாவையாரைப் பிள்ளையார்க்கு அளித்தேன் என்றார்=எனது அரிய நிதிபோலு மிக்கன்னிகையை கவுணியகோத்திரத்திலவராகிய ஆளுடையபிள்ளையார்க்குக் கொடுத்தே னென்றுகூறினார்.—எ-று இன்னகோத்திரத்தனாகிய இன்னானென்புத்திரியை இன்னகோத்திரத்தனாகிய இன்னானுக்குக் கொடுக்கின்றேனென்றுவருக்கங் கூறிக்கொடுக்கும் வழக்குப்பற்றி இவ்வாறுகூறினார் (௧௨௬௫)

நற்றவக் கன்னியார்கை ஞானசம்பந்தர் செங்கை
பற்றுதற் குரியபண்பிற் பழுதினற்பொழுது நண்ணப்
பெற்றவருடன் பிறந்தார் பெருமணப் பிணையனாரைச்
சுற்றமுன் சூழ்ந்துபோற்றக் கொண்டுமுன் றுன்னினார்கள்.

(இ-ள்) நற்றவக் கன்னியார்கை ஞானசம்பந்தர்செங்கை=நல்ல தவத்தையுடைய அக்கன்னிகையாரது திருக்கரத்தை ஆளுடையபிள்ளையார் தமது திருக்கரத்தால், பற்றுதற்குரிய பண்பிற் பழுதில் நற்பொழுது நண்ண=பிடித்தற்குரிய குணத்தோடு கூடிய குற்றமற்ற நல்லமுகூர்த்தம்வர, பெற்றவர் உடன்பிறந்தார் பெருமணப்பிணை அனாரை=பெற்ற தாய்தந்தையரும்சகோதரரும் பெருமைபொருந்திய மணக்கோலங்கொண்ட மான்பிணை போல்வாரை, சுற்றம் முன் சூழ்ந்து போற்றக் கொண்டுமுன் துன்னினார்கள்=சுற்றத்தார் முன்னே சூழ்ந்துவாழ்த்த அழைத்துக்கொண்டு மணச்சாலை முன் வந்தார்கள்.—எ-று. (௧௨௬௬)

ஏகமாஞ் சிவமெய்ஞ்ஞான மிசைந்தவா வலப்பாலெய்தி
நாகமார் பணம்போலகு னற்றவக் கொழுந்தன்னாரை
மாகமார் சோதிமல்க மன்னிவீற்றிருந்த வெள்ளை
மேகமோடிசையு மின்னுக்கொடி யெனவிளங்க வைத்தார்.

(இ-ள்) ஏகமாம் சிவமெய்ஞ்ஞானம் இசைந்தவர் வலப்பாலெய்தி= ஒன்றாகிய மெய்ம்மைபொருந்திய சிவஞானத்தைப்பெற்ற ஆளுடையபிள்ளையாரது வலப்பக்கத்து அடைந்து, நாகமார்பணம்போல் அல்குல் நற்றவக் கொழுந்தன்னாரை = பாம்பின்படம்போலும் பரந்த கடிதடத்தையுடைய நல்ல தவக்கொழுந்து போலு மபிராட்டியாரை, மாகமார் சோதிமல்க மன்னிவீற்றிருந்த=விண்ணுலகத்து நிறைந்த ஒளிவிளங்கும்படி பொருந்தியிருந்த; வெள்ளை மேகமோடு இசையும் மின்னுக்கொடியென விளங்கவைத்தார்=வெள்ளை நிறம்பொருந்திய மேகத்தோடு கூடியமின் கொடிபோல விளங்கும்படி வைத்தார்கள்.—எ-று (கஉகஎ)

புனிதமெய்க் கோல நீடு புகலியர் வேந்தர்தம்மைக்
குனிசிலைப் புருவமென் பூங்கொம்பனா ருடனேகூட
நனிமிகக் கண்டபோதி னல்லமங் கலங்கள்கூறி
மனிதருந் தேவரானா கண்ணிமை யாதுவாழ்த்தி.

(இ-ள்) புனிதமெய்க்கோலம் நீடுபுகலியர் வேந்தர்தம்மை=பரிசுத்தமான திருமேனிப்பொலிவு மிகக்குவிளங்குஞ் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரை, குனிசிலைப்புருவமென் பூங்கொம்பனார் உடனேகூட=வளைந்த விலைபோலும் புருவத்தையுடைய மிருதுவான பூங்கொம்புபோலும் பிராட்டியாருடனே சேர, நனிமிகக்கண்டபோதில் நல்லமங்கலங்கள் கூறி=மிகவியப்போடு தரிசித்தபொழுது நன்மைபொருந்திய மங்கல வாழ்த்துக்களைக்கூறி; மனிதரும் தேவரானார்கண் இமையாதுவாழ்த்தி=மனிதர்களும் வானவர்களானார்கள் கண்ணிமையாது வாழ்த்துதல் செய்து —எ-று மனிதரும் மங்கலங்கள்கூறிக் கண்ணிமையாது வாழ்த்தித் தேவரானார்எனக்கூட்டுக திருமணக்கோலத்தை மிகக மகிழ்ச்சியால் கண்ணிமையாது நோக்கலில், கண்ணிமைப்போர் இயல்பால் கண்ணிமையாத தேவர்போலாயினரென்றது. (கஉகஅ)

பத்தியிற் குயிற்றும் பைம்பொற் பவளக்கால் பந்தர்நாப்பண்
சித்திரவிதானத்தின்கீழ்ச் செழுந்திருநீலநக்கர்
முத்தமிழ் விரகர்முன்பு முதன்மறை முறையினோடு
மெய்த்தநம் பெருமான்பாத மேவுமுள்ளத்தாற்செய்ய.

(இ-ள்.) பத்தியிற்குயிற்றும் பைம்பொற் பவளக்கால் பந்தர்நாப்பண்=வரிசையாலிழைத்த பசியபொன்னையுடைய பவளக்காற்பந்தரினடுவே; சித்திரவிதானத்தின்கீழ்ச் செழுந்திருநீலநக்கர்=பலநிறங்களோடு கூடியமேற்கட்டியின்கீழ் பெருமைபொருந்திய திருநீலநக்க நாயனார்; முத்தமிழ்விரகர்முன்பு=முத்தமிழின் கூறுபாட்டையுணர்ந்த ஆளுடையபிள்ளையார் திரு

முன்பு ; முதன்மறை முறையினோடு = முதன்மைபொருந்திய மறையிற்கூறுஞ் சடங்குகளை முறைமையால், மெய்த்தரும பெருமான பாதமேவும் உள்ளத்தாற் செய்ய = மெய்ம்மைபொருந்திய நமது பெருமானாகிய முத்தித் தியாகரது திருவடிகளில் கலந்த உள்ளத்தோடு செய்யவும் —எ-று. (௧௨௩௯)

மறையொலிபொங்கி யோங்க மங்கலவாழ்த்துமல்க
நிறைவளைச் செங்கைபற்ற நேரிழையவர்முன்னந்தப்
பொறையணி முந்நூன்மார்பர் புகரில்வெண் பொரிகையட்டி
யிறைவரை யேத்துமவேலை யெரிவலங் கொள்ளவேண்டி.

(இ-ள்.) மறைஒலி பொங்கிஓங்க மங்கலவாழ்த்துமல்க=வேதங்களின் ஒசை மேற்பட்டோங்கவும் மங்கலவாழ்த்துக்கள் நிரம்பவும் நிறையவும், நிறைவளைச் செங்கைபற்ற=நிறைந்த வளையலையணிந்த அபிராட்டியாரது திருக்கரத்தைப் பிடிக்குங்கால், நேரிழையவர்முன்=நேர்ந்த ஆபரணங்களை யணிந்த அபிராட்டியார் முன்பு, அந்தப் பொறையணி முந்நூல்மார்பர்= முந்நூலின் பொறையையணிந்த மார்பயுடைய அந்த திருநீலநக்கநாயனார் ; புகரில்வெண் பொரி கை அட்டி=குற்றமற்ற வெள்ளிய பொரியைக் கையால் ஓமத்தீயிற்பெய்து, இறைவரை ஏத்துமவேலை=சிவபிரானைத் துதிக்கும் சமயத்து ; எரிவலங் கொள்ளவேண்டி = ஓமாக்கினியை வலமாகவர விரும்பி —எ-று. (௧௨௪௦)

அருப்புமென் முலையினார்த மணிமலர்க் கைபிடித்தங்
கொருப்படு முடையபிள்ளை யார்திரு வுள்ளந்தன்னில்
விருப்புறு மங்கியார்வா விடையுயர்த் தவரேயென்று
திருப்பெரு மணத்தைமேவுஞ் சிந்தையிற் றெளிந்துசெல்வார்

(இ-ள்.) அருப்புமென் முலையினார்தம் அணிமலர்க்கை பிடித்து= அரும்புபோலு மிருதுவான முலையையுடைய அபிராட்டியாரது அழகிய மலர்போலுங் கையைத் திருக்கரத்தாற்பற்றி, ஒருப்படும் உடையபிள்ளையார் திருவுள்ளம் தன்னில்=வலமவருதற் கொருப்பட்ட ஆளுடையபிள்ளையார் தமது திருவுள்ளத்தினகண், விருப்புறும் அங்கியார் விடை உயர்த்தவரே என்று=விரும்பத்தக்க வன்னிமூர்த்தியாயு மிருப்பவர் இடபக்கொடியையுயர்த்த சிவபெருமானேயென்று, திருப்பெரு மணத்தைமேவும் சிந்தையிற்றெளிந்து செல்வார் = திருநல்லூரப் பெருமணமென்னு மாலயத்தை யடைகின்ற திருவுள்ளத்தோடு தெளிந்து செல்வாராய.—எ-று. (௧௨௪௧)

மந்திரமுறையாலுய்த்த வெரிவலமாகமாதர்
தந்திருக்கையைப்பற்றுந் தாமரைச்செங்கையாள
சிந்தையி லொழுக்கமவந்து சூழ்ந்ததே யிவடன்னோடு
மந்தமில் சிவன்றாள் சேர்வனென்னு மாதரவுபொங்க.

(இ-ள்) மந்திரமுறையால் உய்த்த எரிவலமாக = மந்திரவிதியால் வளர்த்த அவ்வக்கினியை வலமாகும்பொழுது ; மாதர் தந்திருக்கையைப் பற்றும் தாமரைச் செங்கையாளர் = அப்பிராட்டியாரது திருக்கரத்தைப் பிடிக்குந் தாமரைமலர்போலுந் திருக்கரத்தையுடைய ஆளுடையபிள்ளையார் ; இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே = இந்த இல்வாழ்க்கை நிலையானது எம்மை வந்தடைந்ததே , இவள் தன்னோடும் அந்தமில் சிவன்றாள் சேர்வன் என்னும் ஆதரவு பொங்க = இப்பத்தினியோடு மழிவில்லாத சிவபெருமானது திருவடிகளை யடைவேனென்னும் விருப்பானது மேம்பட — எ-று. சூழ்ந்ததே என்றது சூழ்தல் பழுதென்பது குறித்து நின்றது (௧௨௪௨)

மலர்பெருங் கிளையுந் தொண்டர் கூட்டமு மல்கிச்சூழ
உலகின்மெய்ஞ் ஞானத்தெல்லை யடைவுறுங் குறிப்பாலங்
ஞுலகினெம் மருங்குநீங்க வுடனணைந் தருள வேண்டிக்
குலமணம் புரிவித்தார்தங் கோயிலை நோக்கிவந்தார்.

(இ-ள்) மலர்பெருங்கிளையும் தொண்டர்கூட்டமும் மல்கிச்சூழ = மிக்கபெரிய உறவினரும் அடியார் கூட்டமும் நெருங்கிச்சூழும்படி ; உலகில் மெய்ஞ்ஞானத்து எல்லை அடைவுறும் குறியால் = அளவுபடாத சிவஞானத்தினது வரம்பை யடையுங் குறிப்பினால் , அங்கண் உலகின் எம்மருங்கும் நீங்க = அவ்விடத்து உலகங்களில் எவ்வுலகமுந் தன்னை நீங்க, உடன் அணைந்து அருள்வேண்டி = சிவபிரானுடன் றாமடைந் தருளுதலைக்கருதி ; குலமணம் புரிவித்தார்தங் கோயிலைநோக்கிவந்தார் = குலத்திற்கிசைந்த திருமணத்தைச் செய்வித்த முத்தித்தியாகரெழுந்தருளும் திருக்கோயிலைக் குறித்து வந்தருளினார் — எ-று. பத்தியிற்குயிற்றும் என்பதுமுதல் இதுகாறைந்துசெய்யுளுங் குளகம். சாலோகமாதிப்பத முத்திகளும் நீங்கவென்பார், உலகினெம்மருங்கு நீங்கவென்றும், சாயுச்சியமென்னும் பரமுத்தியையடைய வென்பார், உடனணைந்தருளவென்றுங் கூறினார் (௧௨௪௩)

சிவனமர்ந் தருளுஞ் செல்வத் திருப்பெரு மணத்துளெய்தித்
தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்வுநோக்கிப்
பவமற வென்னை முன்னா ளாண்ட வப்பண்புகூட
நவமலர்ப் பாதங்கூட்டு மென்னு நல்லுணர்வுநல்க.

